
ஆலயமணிகள்



சுடர்மணி கவிஞர்

வேம்பத்தூர் கிருஷ்ணன்

ஆலயங்கள் பற்றி அருளாளர்கள்...!

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி மாமுனிவர்
ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சுவாமிகள்
(20-5-1894 — 8-1-1994)

'ஆலயங்களின் உட்புறமும், சூழ்நிலையும் சுத்தமாக இல்லாத வரையில் ஆஸ்திக காரியம் எத்தனைதான் நடந்தாலும் நாம் திருப்திப்படுவதற்கு இல்லை.

ஆபீஸ் கட்டிடங்கள், 'காட்டேஜ்'கள் எல்லாம் இப்போது பல க்ஷேத்திரங்களில் ஏராளமாக முளைத்துவிட்டன. அங்கெல்லாம் தெய்வ சம்பந்தமற்ற காரியங்கள் நிறைய நடக்கின்றன.

பெரும்பாலான க்ஷேத்திரங்களின் கோயிலைச் சுற்றிலும், ஏகப்பட்ட கடைகள் வந்துவிட்டன. டீக்கடை, சிகரெட் கடை எதுவுமே பாக்கியில்லை. கோயில் அதிகாரிகளே, கோயிலுக்கு வருமானம் கிடைக்கிறது என்பதால் இந்த இடங்களை வாடகைக்குக் கொடுக்கிறார்கள்-அதாவது அநேகமாகக் கோயிலையே வாடகைக்குக் கொடுப்பதாகச் சொல்லலாம்.

காட்டேஜ், எக்ஸ்கர்ஷன் எல்லாமே அநேக க்ஷேத்திரங்களில் பக்தியைவிட, உல்லாச கேளிக்கைகளைத்தான் அதிகப்படுத்தியிருக்கின்றன. மொத்தத்தில், நம் வீட்டில் நம்மால் சகிக்க முடியாத அபசாரங்களை, சாக்ஷாத் வேங்கடரமண ஸ்வாமி சந்நிதிகளிலும், மற்றும் பல ஸ்வாமி சந்நிதிகளிலும் இழைக்கிறோம்.''

அருள் மொழி அரசு
திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்
(25-8-1906 — 7-11-1993)

"ஆலயம் ஐந்து பிரகாரங்களோடு கூடியது. இந்த உடம்பே இறைவன் இருக்கின்ற திருக்கோயில் ஆகும். இந்த உடம்பும் அன்னமயகோசம் பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்த மய கோசம் என்ற பஞ்ச கோசங்களையுடையது.

உடம்பில் 32 கட்டுகளோடு கூடிய முதுகுத்தண்டே திருக்கோயிலில் கொடி மரமாகக் காட்சியளிக்கிறது. கொடிமரத்தில் கொடி ஏறியவுடன் இறைவன் வெளியே வந்து காட்சி யளிக்கிறான். அதுபோல், முதுகெலும்பாகிய வீணாதண்டத்தில் வளைந்து செல்லுகின்ற சுழுமுனை என்ற வெள்ளை நரம்பின் வழியாகப் பிராணவாயு ஆறு தாரங்களையும் கடந்து, பிரமந்திரத்தைத் தாண்டி, சகஸ்ரார வெளியிலே சென்றவுடன் சிவஜோதி காணப்படும்

நமது சரீரத்தில் உள்ள மூலாதாரமும், சுவாதிஷ்டானம், மணி பூரகம், அநாதகம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களையும் கோயிலில் உள்ள யாக மண்டபம், அலங்கார மண்டபம், மகாமண்டபம், அர்த்தமண்டபம் என்ற மண்டபங்கள் தெரிவிக்கின்றன. எனவே திருக்கோயிலில் சென்று இறைவனை வழிபட்டு, அங்கே கண்ட, பரம் பொருளை நம் உடம்புக்குள்ளேயும் கண்டு மனோலயம் பெற வேண்டும்."

ஆலயமணிகள்



சுடர்மணி கவிஞர்

வேம்பத்தூர் கிருஷ்ணன்

சுடர்மணிப் பதிப்பகம்
9, பஜனைக் கோயில் தெரு,
சூளைமேடு, சென்னை-600 094

இரண்டரை ஆண்டுகள் ஞானக்குழந்தை
இருபத்து ஐந்தாண்டு சுடர்மணிமாலை
திருத்தலம் பதிமூன்றின் ஆலயமணிகள்
– என்
திருமகள் காந்தியின் பரிபூர்ண மாகும்.

-வேம்பத்தூர் கிருஷ்ணன்



★ SUDARMANIMALAI SILVER JUBILEE ISSUE 1996 ★

AALAYAMANIGAL

Art Work & Designs:- **S. Ganesan,** Title **Jayaraman**
Wrapper Blocks:- **Sri Krishna Graphics,** Madras - 24.
Wrapper Printed at:- **Sri B.L.S. Press,** Madras - 34.
Laser Typeset by:- **Sri Ganesh Computers,** Madras - 4.
Offset Printing at:- **Amirtha Ram Graphics** Madras - 2.



ஆலயமணிகள்



✷ விலை ரூ. 50/ ✷

பொருளடக்கப் பக்கங்கள்

அறுபத்நாலு தீர்த்தக் காசி...	3	சாஸ்தா ஐயப்ப சபரிமலை...	9
ஸ்ரீராம சிவமய இராமேஸ்வரம்...	17	இமயத்தில் வைகுந்த பத்ரிநாத்...	46
மருத்துவத் திருத்தலம் பழநி...	61	திருமலை திருப்பதி...	73
பெரிய கோயில் தஞ்சை...	97	திருமால் முருகன் சோலைமலை...	119
கைலாய வைகுந்த காஞ்சி...	130	தெ.தி. திருவண்ணாமலை...	162
பெரிய கோயில் ஸ்ரீரங்கம்...	181	கோயில் சிதம்பரம்...	195

கோ - இல் : மதுரை... 215

Vembattur Krishnan

SUDARMANI PATHIPPAGAM

9, Bajanai Koil Street, Choolaimedu,
Madras - 600 094. Tamil Nadu.

25.8.1996-ல் மதுரை "ஓம் மிஷன்" வழங்கிய

"ஆன்மிகரத்னா" எனும் வாரியார் விருது பெற்ற

சுடர்மணிக் கவிஞர் வேம்பத்தூர் கிருஷ்ணனின்



ஆலயமணிகள்



நூல் வெளியீட்டு விழா


சென்னை, மயிலாப்பூர், பாரதிய வித்யாபவன், 25.10.1996.

இறைவணக்கம் பாடி, விழாவைத் தொடங்கி வைத்தவர் :

"இசைமணி" வாரிசு, **டாக்டர் சீர்காழி G. சிவசிதம்பரம்**

தலைமையேற்று நடத்திக் கொடுத்தவர் :

"தண்டமிழ்க் கொண்டல்" **புலவர் சிதம்பரம் சுவாமிநாதன் M.A.**



நூலை வெளியிட்டு, **வாரியார்** *விருது பெற்ற நூலாசிரியரைப் பாராட்டி,*

முன்னுரை தந்தவர் : உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி

ஸ்ரீ N. கிருஷ்ணசாமி ரெட்டியார்.

முதற் பிரதியைப் பெற்று, கோயில்கள் பற்றிய அற்புத ஆய்வுரை வழங்கியவர் :

தஞ்சை தமிழ் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர்

டாக்டர் ஸ்ரீ ஔவை நடராஜன்.

வாழ்த்துரை, நூல் நயத்துடன், ஒளிந்து கிடக்கும் ஆலய உண்மைகளை, உடனே திருத்தியமைத்து நாம் பெற வேண்டிய நன்மைகளை விமர்சித்த நால்வர்...

மக்கள் சக்தி இயக்க மாபெரும் தலைவர் டாக்டர். **ஸ்ரீ M.S. உதயமூர்த்தி**

சொல்லின் செல்வர் **ஸ்ரீ சுகிசிவம் B.A.B.L.**

திரைப்பட எழுத்தாளர்சங்கப் பொருளாளர் **ஸ்ரீ K. தேவ நாராயணன்**

A.V.M. கலைக்கூடம் தந்த புகழ்மிகு டைரக்டர், **ஸ்ரீ S.P. முத்துராமன்.**

நூல் வெளியீட்டு விழா என்பதைவிட, "நவீன" நிர்வாகங்களால் பாழ்பட்டு வரும்...

... நமது பேராலயங்களைச் சீரமைக்க முடிவெடுத்த ஓர் ''மினி'' ஆலய மாநாடு என்பதே பொருந்தும். சீரழிந்து வரும் வேதாகம பூஜை மற்றும் கோயில் விழாக்கள், செல்வங்களை... பக்தி வேடங்களிடம் பறிகொடுத்து விட்டு, குட்டிச் சுவர்களாகி வரும் பாடல் பெற்ற ஆலயப் பரிதாபங்கள் ! ''தாம் தூம்'' விளம்பரத் தகாத செலவுகள்! தகிடு தித்த வியாபாரத் தரகு வேட்டை ! இப்படிப் பற்பல அப்பட்டமான இறை ஆலய அவலங்களின் உண்மைக் கர்ஜனைகள்!

அனைத்திற்கும் மகுடமாக அமைந்தது சொல்லின் செல்வர், சுகிசிவம் தந்த தீர்ப்புரை !

''வெறும் பேச்சால் இனிப் பயனில்லை ! ஓய்வு பெற்ற நீதியாளர் குழு ஒன்றை அமைத்து, நமது பேராலயங்களின் ''வரவு செலவு''களை வடிகட்டிப் பார்க்க வேண்டும் ! இந்த விழாவிலே அந்த ஒரு நல்ல முடிவினைச் செயல்படுத்துவதோடு, மதுரை, பாண்டிச்சேரி முதலான பல்கலைக் கழகங்களிலே... ***டாக்டர். M.S. உதயமூர்த்தியவர்கள்*** *குறிப்பிட்டது போல, ஆலய சம்பந்த கௌரவ ஆலோசகர் பதவியும், வேம்பத்தூர் கிருஷ்ணன் அவர்களுக்கு கிடைப்பதற்கு நாம் ஆவன செய்வோமாக...''* என்றதும், அனைவரும் கரவொலி தந்து ஆமோதித்தனர்...

தொடர்ந்த சொல்லின் செல்வர், ''45–ஆண்டுகளாகப் தனது சக்திகளைச் செலவழித்து, இந்தச் சமுதாயத் திற்காகப் பாடுபடும் அவருக்கு... சமுதாயம் அதாவது நாம் ஏதாவது பிரதி உபகாரம் புரிய வேண்டாமா?'' என இதயம் நெகிழக்கூறிய உடனேயே ''ஆலயமணிகள்'' நூலுக்கு ஆரம்ப முத(லி)லாயிரம் கொடுத்த ஷெனாய் நகரில் வசிக்கும் ''லயன்'' ஸ்ரீ **N. ஹரிஹர சுப்ரமணியம்** எழுந்து, எங்களது **''மை இந்தியா பௌண்டேஷன்''** அறக்கட்டளை சார்பிலே, மாதந்தோறும் கவிஞர் **வேம்பத்தூர் கிருஷ்ணனுக்கு ''ரூபாய் ஐநூறு ஓய்வூதியம்** வழங்கப்படும்'' என்றார்கள். அரங்கத்துள் இருந்த அனைவரது கரவொலிகளும் பாரதிய வித்யாபவன் மாடியிலே எதிரொலித்த இனிய அதிர்ச்சியோடு ''ஆலயமணிகள்'' விழா நிறைவு பெற்றது.

1954 – முதல் படஉலகிலும், 1960 – முதல் பக்தி உலகிலும் பகலிரவு பாராமல் எழுதிப் பாடுபட்டுவரும் அடியேனை, சினிமா துறையோ, அறநிலைய மடாலயங்களோ ஏனென்று கேட்காதிருக்கும் மௌடீக நிலையிலே... ''மை இந்தியா பௌண்டேஷன்'' மூலமாக... என்னை மகிழ்வித்த திருவாளர் ஸ்ரீ **N. ஹரிஹர சுப்ரமணியம்** அவர்கட்கு, எனது மனம் கனிந்த வாழ்த்தும் வணக்கமும் உரித்தாகுக.

— வேம்பத்தூர் கிருஷ்ணன்



ஆலயமணியின் ஓசையை நான் கேட்டேன்





மக்கள் சக்தி இயக்கத் தலைவர்
டாக்டர்.M.S. உதயமூர்த்தி
FULLBRIGHT SCHOLAR - USA
DOCTORATE - VISCONSIN UNIVERSITY - USA

கவிஞர் வேம்பத்தூர் கிருஷ்ணன் அவர்களை, நான் பார்த்ததே எனது பாக்யம்தான். பத்திரிகை நடத்தி ஓய்வு பெற்ற ஒரு முதுநிலை எழுத்தாளரைச் சந்திக்கப்போகிறோம் என்று எதிர்ப்பார்த்திருந்தேன்; அங்கே ஞானப்பழமாய், சைவ ஆசாரியராய், எல்லா விஷயங்களையும் பற்றித் தெளிவுடனும் தீர்க்கத்துடனும் பேசுகின்ற ஒரு பெரியவரைக் கண்டேன்.

போட்டிகளிலே பரிசு பெற்ற அவரது கவிதைகளை (''கர்ஜனை'') படிக்கும் போது, எளிமையும், ஆழமும், உண்மையும் நம்மை எங்கோ தொடுகிறது ! அவர் ஆசிரியராக இருந்த ''தர்மபீட''த்தை படிக்கும்போது, மக்களின் ''ருசி'' யையும், தேவையையும் புரிந்து கொண்ட ஒரு சிறந்த, பத்திரிகையாசிரியரை, ஒரு சிவநேசச் செல்வரைப் பார்க்க முடிகிறது.

நாற்பது ஆண்டுகள் துணை இயக்குநராகச் சினிமாத் துறையில் இருந்திருக்கிறார்; அந்த நாற்பது ஆண்டுகளையும் தலயாத்திரையாகக் கருதி சரித்திரங்களையும், தெய்விகங்களையும் மனதிலே பதிவு செய்து கொண்டிருக்கிறார் என்பது, ''ஆலயமணி''களின் பக்கங்களிலே கேட்க முடிகிறது.

''சுடர்மணிமாலை'' என்ற ஆண்டுமலர், இருபத்தைந்து ஆண்டுகளைக் கடந்து, இன்று வெள்ளிவிழாக் கொண்டாடுகிறது. அந்த வெள்ளிவிழா, தங்கப்பதக்கமாக, வைரக் கிரீடமாக **''ஆலயமணிகள்''** என்ற பெயரிலே ஒரு பதின்மூன்று திருத்தலங்களை – தமிழ்நாட்டின் புனித கோயில்களை – பற்றிய விபரமான செய்திகளுடன் வெளி வந்திருக்கிறது; ''ஓம்சக்தி'' பத்திரிகையிலிருந்தும், லண்டன் பத்திரிகையிலிருந்தும் ஆலயச் செய்திகளை அவர் தொகுத்திருக்கும் உழைப்புக்கும், ஈடுபாட்டுக்கும் நாம் நன்றி சொல்லி முடியாது !

நமது சமுதாயம், ஆன்மிக அடிப்படையை மீண்டும் உணர்ந்து, ''கோயிலைச் சுற்றிய குடிமக்கள்'' என்ற அடிப்படையில் அமைய வேண்டும்.

பாண்டிச்சேரி பல்கலைக்கழகம், அசாதாரணமாக படிப்பையும், பட்டத்தையும் தாண்டி, க.நா. சுப்பிரமணியம், கி. ராஜநாராயணன் போன்றவர்களை ஆராய்ச்சிப் பேராசிரியர்களாக நியமித்தது. அதனால் தமிழ் இலக்கியமும், நாடும் பயன்பெற்றது. அதுபோல, இந்தத் தேடக் கிடைக்காத மனிதரை, பல்கலைக்கழகங்கள் பயன்படுத்திக் கொண்டால், நமது எதிர்கால சந்ததிகள், நம்மை வாழ்த்துவார்கள்.

வேம்பத்தூர் கிருஷ்ணனின் பணி, வணக்கத்திற்கும் போற்றுதற்கும் உரிய பணி.

''ஆலயமணி''யின் ஓசையை நான் கேட்டேன் ! நீங்களும் கேளுங்கள். ஆன்மிக தரிசனம் உள்ளே நடக்கிறது, உள்ளே போவோம் வாருங்கள்.

24.10.96
திருவான்மியூர், சென்னை

ஆலயக்கணக்கு, யாரிடம் இருக்கு?


தமிழ்நாடு இந்து சமய அறநிலைய நிர்வாகத் துறைக்காக 1962-ல் "ஆலயங்களும் திருவிழாவும்" என்ற படம் எடுக்கப் பட்டது. அதற்கு விளக்க உரை (வசனம்) நான் எழுதினேன்; அப்போதே கேட்டேன், "மாவட்ட வாரியாகத் தமிழகத்திலே எத்தனை ஆலயங்கள்?" என்று. "கணக்கு எடுக்கப்படுகிறது" என்றார்கள். இன்று வரை. முடிந்ததாக எனக்குத் தெரியவில்லை.

1962 – இளையாத்தங்குடி சதஸ் தென்னிந்திய அர்ச்சகர் சங்கம் – 9532 கோயில் என்றது. • 1974 – தமிழக மேலவையில் குன்றக்குடி அடிகளார் MLC – 10,000 கோயில் என்றார் • 1978 – பாலமுருகன் கோயிலிலே அமைச்சர் R.M. வீரப்பன் – 22,000 • 1980 – சட்டப் பேரவையில் அறநிலைய மந்திரி R.M. வீரப்பன் – 23,491 • 1981 – தஞ்சை மாவட்ட ஹிந்து மாநாடு மலர்க் குறிப்பிலே – 31,840 • 1984 – "மக்கள் குரல்" ஆலய மேம்பாட்டு சிறப்பிதழ் செய்தி – 32,659 • 1985 – அ.வெ.ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார் (எழுத்தாளன்) – 32,199 • 1987 – ப. நெடுமாறன் M.A. எழுதிய புத்தகக் குறிப்பிலே – 32,130 • 1989 – அற நிலைய அமைச்சர் K.P. கந்தசாமி – 35,150 • 1990 – இராம கோபாலன் விடுத்த பத்திரிக்கை அறிவிப்பிலே – 32,199 • 1992 – அசெம்பிளியில் முதலமைச்சர் ஜெயலலிதா – 40,000 • 1992 – முண்டகக்கண்ணி ஆலயமலர், M.K. பாலசுப்ரமணியம் – 1,00,000 • 1993 – "தமிழ்நாட்டு கோயில்" (இந்தியா டுடே) – 60,000 • 1995 – அறநிலைய அமைச்சர் அம்மமுத்துப்பிள்ளை, 'தமிழ் நாட்டிலே 33,700 கோயில்கள்' என்றார். இதில் எது உண்மை? "ஆலயங்களிலே அறங்காவலர்களாக பெண்களும் நியமிக்கப்படுவார்கள்" என்று 3.8.1996 சட்டசபையிலே முதல்வர் கலைஞர் கருணாநிதி அறிவித்துள்ளார். தாய்க்குலமாவது, தமிழ்க் குல ஆலயங்களின் சீரமைப்புக்கு உதவும் என நம்புவோமாக. எங்கு பார்த்தாலும் உண்டியல்! எதை எடுத்தாலும் டிக்கெட் ! லட்சக்கணக்கிலே பணம் குவிகிறது. கோயில்களிலே ஆகமப்படி செலவு ஆயிரக்கணக்கிலேதான். மீதி அனைத்தையும் விழுங்கும் "**நிர்வாகபூதம்**", எத்தனை ஆலயங்கள் என்பதை மட்டுமாவது சரியாக அறிவிக்கக் கூடாதா? தலபுராண வெளியீடு இல்லாத தேவஸ்தானம் இருக்கவே கூடாது என்பது என் கட்சி. வரவு, செலவுகளோடு, தல மகத்துவத்துடன் கூடிய ஓர் பிரசுரம், அந்தந்தக் கோயிலின் பிரதான விழாவிலே ஆண்டு தோறும் குறைந்த விலையிலே.... தவறாமல் வெளியிடப் படவேண்டும்.

கட்டாயம் லட்டு வேண்டும் !

"திருப்பதியின் திருமலை அடிவாரம், புவியியல் பாதிப்பால் நெகிழுகிறது ! "மலை மேல் பெரிய சிமெண்ட் பில்டிங் கூடாது" நிபுணர்கள் எச்சரிக்கை, "இனிமேல் அடுக்கு மாடிகள் கட்டுவதில் லை" T.T.D தேவஸ்தானம் முடிவு - 7.7.1996 பேப்பர் நியூஸ். ஏழுமலையானின் திருமலைக்கு 1956-முதல் ஆண்டுதோறும் தவறாமல் சென்று தரிசனம் பெறுபவன் நான். அந்நாட்களிலே..., மேலே "குளு குளு" வென்று, தெய்விக மணம் கமழும், தரும தங்குமிடங்களோடு, ரூ.5 தனி காட்டேஜ்கள் இருந்தது... ஆனால் இப்போதோ, "தரும" எங்கே உள்ளதென்றே புரியவில்லை ! நாள் வாடகை ரூ.100, ரூ.200, ரூ.400, ரூ1,000, ரூ.2,000 என்று 3 – ஸ்டார், 5 – ஸ்டார் ஒட்டல் பாணி சொகுசு.."சுற்றுலா" தங்குமிட காட்டேஜ்கள் ! புவியியல் பாதிப்பு மட்டும் ஏற்படா திருந்தால்...ஏழெட்டு மாடிகள், ஏஸி லிப்டுடன் அடுத்த ஆண்டு கோயில் முன்னாலேயே தோன்றிவிடும் !! ஹெலிகாப்டர் முதலாக லாரி, பஸ், கார், ஜீப், வேன், ஆட்டோ, ஸ்கூட்டர் இன்னும் "A" கிளாஸ் நகரத்தெருக்களின் "டர் புர்" எல்லாமே திருமலையிலே தூள் கிளப்புகின்றன. "**சிறப்பு தரிசனம்**" எனப்படும் அவசர தரிசன டிக்கெட் ரூ.25-லிருந்து ரூ.30 ஆனது. இப்போது ரூ.50. **திருமலைப் பிரசாதமான லட்டு, உற்பத்திச் செலவே ரூ.10 ஆகிறது. எனவே 4 ரூ. லட்டு விற்பனை நிறுத்தப்படும்.** திருப்பதி திருமலை தேவஸ்தான தீர்மானம்." - 29.7.1996 பேப்பர் நியூஸ். The TTD comes up with statements every now and then saying that it is incurring a heavy loss in the sale of "laddus". May be this is true, may be it is not. One point which should not be lost sight of is that most devotees purchase the laddu as a prasadam to be taken back home and distributed among close relatives and friends. Over the years the quality of the laddu has deteriorated.- The Hindu. Dt. 25.07.96

1956-ல் ரூ. 5 லட்சம், 1962-ல் ரூ.50 லட்சம், 1978-ல் ரூ.30 கோடி; 1996-இன்று திருமலையின் ஆண்டு வருமானம் ரூ. 200 கோடி. கேவலம், லட்டிலே பத்து கோடி ரூபாய் நட்டம் என்று, திருப்பதியின் உயிர் மூச்சாக விளங்கும் லட்டை நிறுத்துவதாவது? T.T.D. தேவஸ்தானம் என்ன லிமிடெட் கன்சர்னா? போட்ட முதலீட்டைப் பங்குதாரர்கள் திரும்பக் கேட்கிறார்களா? கோயில் பிராகாரமெங்கும் மலைபோல குவியும் ரூ.200 கோடிக்கும், தங்குமிடம் அனைத் திற்கும், உரிமையாளர்கள் பொதுமக்கள் அல்லவா ! **T.T.D. தேவஸ் தானத்திற்கு எதிராக 19.08.1996 -ல் மக்கள் கிளர்ச்சி ! திருமலை (திருப்பதி) யில் முழு "பந்த்" ! லட்டுவுக்கு "ரேஷன்" ரத்து. "தரமான லட்டுகள் தாராள விநியோகம்" T.T.D. நிர்வாக இயக்குநர் M.K.R. விநாயக் அறிவிப்பு (15.10.1996).**



— நாற்பது ஆண்டு க்ஷேத்ராடான சர்வீசன், வேம்பத்தூர் கிருஷ்ணன்.

33/2

அறுபத்நாலு தீர்த்தக்காசி

காசியை நினைக்க முக்தி காசிஎன் றுரைக்க முக்தி
காசியைக் காண முக்தி காசியைச் சூழ முக்தி
காசியில் வசித்தோர் தம்மைக் கண்டு தாழ்ந்திடுதல் முக்தி.

-காசிரகஸ்யம்.

பாரதத்திலுள்ள முக்திச்க்ஷேத்திரங்கள் ஏழில், முதன்மையாகத் திகழ்வதும், ஆதிபராசக்தியின் அறுபத்துநான்கு **சக்தி பீடங்களிலே** "மணிகர்ணிகா" பீடமாக விளங்குவதும் காசிப்பதியாகும்.

சிவபெருமானின் திரிசூலத்திலிருந்து தோன்றியதால், பிரளய காலத்திலும் அழிவில்லாததாம் காசி.

கா-ஒளி; சி-திருமகள்; ஒளியாகிய திருமகளின் பரிபூரண செல்வச் சிறப்பு கள் யாவும் நிறைந்து விளங்குவது காசிமா நகரம்.

வேதாந்த, சித்தாந்த தத்துவங்கள் பல தோன்றியதாலும், பிரம்மஸூத்ரம் முதலான பல அரிய நூல்களுக்குப் பாஷ்யம் இயற்றப்பட்டதாலும், காசியிலே மலை மகள், அலைமகளோடு, கலைமகளின் பேரருளும் பொங்கித் ததும்புகிறது.

சமஸ்கிருதப் பல்கலைக்கழகம், காசி வித்யா பீடம், காசி இந்து பல்கலைக் கழகம், பிரம்மஞான சபை முதலான பழம்பெரும் அமைப்புகள், இன்றும் சீரோடு காசிமா நகரி லே இயங்கிக் கொண்டிருக்கின்றன.

சக்தியும் சிவமும் இணைபிரியாதிருந்து, ஒவ்வொரு ஜீவனுக்கும் அந்திம காலத்தில் மந்திரோபதேசம் செய்வதால், "**அவிமுக்தக்ஷேத்திர**"மாகவும், "**ஆனந்த கான**"**மாகவும், மகாஸ்மசான**மாகவும் விளங்குகிறது காசி.

பிடிசாம்பலாகும் மனித உடல்களை "மணிகர்ணிகா காட்"டிலும், "அரிச்சந் திராகாட்"டிலும் இடைவிடாது சாம்பலாக்குவதைக் காணலாம். "சாவுத்தீட்டு, பிரேத தோஷம்" என்பதெல்லாம் காசியிலே கிடையாது.

இலிங்கபுராணம், கந்தபுராணம், மச்சபுராணம், பாகவதம், நாரதபுராணம், பத்மபுராணம், அக்னிபுராணம் முதலானவற்றிலும் காசிக்காண்டம், காசிரகஸ்யம், இராமாயணம், மகாபாரதம் மற்றும் பௌத்த, ஜைன பக்தி இலக்கியங்களிலும், காசியின் பெருமைகள் விரிவாகப் பேசப்படுகின்றன.

வாரணா-அஸி என இரு நதிகள் இங்கே கங்கையுடன் கலப்பதால் "வாரணாசி" எனப் பெயர்கொண்டு, **பாரணாசி** யாகி **காசி, பெனராஸ்** என விளங்கும் காசிப்பதியானது, "போலோநாத்காசி" (விஸ்வேஸ்வரரின் ஒரு பெயர், போலோநாத்), "காபாலி காசி", "அகோரிக் காசி" என மூன்று பிரிவுகளைக் கொண்ட மஹாக்ஷேத்திரமாக முன்பு அமைந்திருந்தது.

மார்க்கண்டேயமகரிஷி, திருமங்கையாழ்வார், ஆதிசங்கரர், ராமாநுஜர், மத்வர், சைதன்யர், வேதாந்த தேசிகர், கபீர்தாஸர், துளசிதாஸர், ராமானந்தர், சூர் தாஸ் முதலான புற்பல சமய ஆச்சார்ய அருளறப் பெருமக்களைக் கண்டு, அவர் களால் பாடல் பெற்ற திருநகரம் காசி.

காசியைத் தழுவி ஓடும் கங்கைக்கரையில் பாரதநாட்டிலுள்ள அனைத்து மாநில ஜனங்களின் சங்கமமும், கண்கொள்ளாக் காட்சியாகும்.

காசிக்கு வந்த ஸ்ரீ ஆதிசங்கரருக்கு ஊரெல்லாம் லிங்கங்களாகவே தெரிந்திருக்கிறது; கணக்கற்ற காசி லிங்கங்களில் 36 லிங்கங்கள் விஷேடமாகக் கருதப்படுகிறது; முப்பத்து ஆறு சிவலிங்கங்களிலே... முதன்மைஸ்தானம் பெறுவது, "அவிமுக்தேஸ்வரர்" எனக் கொண்டாடப்படும் **ஸ்ரீ காசி விஸ்வநாதர்** ஆகும்.

காசி விஸ்வநாதரிடம், 1008-அண்டங்கள், முப்பத்து முக்கோடி தேவர்கள், 48-ஆயிரம் ரிஷிகள், சப்த சாகரங்கள், ஈரேழு பதினான்கு லோகங்கள் முதலான அனைத்தும் அடங்கியுள்ளன; அதனால்தான் அவர் **விஸ்வேஸ்வரர்.**

இன்றிருக்கும் காசி விஸ்வநாதர் ஆலயம், மூன்றாவதோ, நான்காவதோ, கட்டப்பட்டதாகும்: "ஒன்பதாவது" என்றுகூட ஓர் செவிவழிச் செய்தி உண்டு!

1193-ல் பாரதத்துக்கு வந்த சீனதேசத்து யாத்தீரிகர் **யுவான்சுவாங்** அவர்கள் "கலையழகுமிக்க அற்புத ஆலயம்" எனப் புகழ்ந்த காசிவிஸ்வநாதர் கோயிலை, **முகம்மதுகோரியின்** தளபதி **குத்புதின்** தரைமட்டமாக்கினான்; மீண்டும் எழுந்த ஆலயத்தை, **சிக்கந்தர்லோடி, அலாவுதீன்**கள் அழித்தார்கள்; **அக்பரின்** அமைச்சர் **தோடர்மால்** கட்டுவித்த அடுத்த ஆலயத்தை, **ஔரங்கசீப்** தூள் தூளாக்கி, மூலவரை கங்கை நதியில் வீசியெறிந்ததையும், **நாராயணபட்டர்** என்ற மகான் செய்த மாதவத்தால், காசிநகர் மூலவர் மீட்கப் பட்டதும், முடிவாக 1770-ல் **ராணிஅகல்யாபாய்** என்கிற புனிதவதியால் தற்போதுள்ள ஆலயம் அமைந்தது என்பன போன்ற அந்தநாளிலே நடந்து முடிந்துபோன, வரலாறுகளை-மறக்கப் படவேண்டிய-மறக்கவே முடியாத-அழிவுகளையும், ஆக்ரமிப்புகளையும் கண்ட பின்பும், இன்றும் காசி எழிலோடு இருக்கிறதென்றால் அது ஸ்ரீவிஸ்வநாத விசாலாட்சியரின் திருவருளே.

"கைலாயத்துக்கு அடுத்தபடியாக ஈஸ்வரனின் விருப்பமான "ருத்ரபூமி" காசியாகும்; "நள்ளிரவு நேரத்திலே சிவபெருமான் இங்கே நர்த்தனம் புரிகிறார்; தேவர்கள் வந்து கங்கையில் குளிக்கிறார்கள்" என்பது சத்தியர் வாக்கு.

தேவர்களின் பாவங்களையே தீர்க்கும் ஜீவாம்ருதப் புனிதநதியான கங்கை யில்லையேல், காசிக்குப் பெருமை ஏது? "காசியைத் தரிசிக்க வேண்டும்" என்பதற்காகவே வடக்குமுகமாகத் திரும்பி-**உத்தரவாஹினி**யாக-ஓடும் கங்கா நதிக்கு காசியில்லாவிடில் புனிதத்திலே முழுநிறைவு ஏது?

திருமாலின் வடிவமாகப் போற்றப்படும் கங்காநதி, **பகீரதனால்** பூமிக்குக் கொண்டுவரப்பட்டதால் **பாகீரதி** என்றும், **ஜானு** என்கிற முனிவரின் உடலினின்று வெளிப்பட்டதால், **'ஜான்னவி'** என்றும் அழைக்கப்பெறுகிறது.



வானத்தை முட்டி நிற்கும் இமயத்துச் சிகரத்திலே ஊனக் கண்களுக்குப் புலப்படாவண்ணம், கடல்மட்டத்திலிருந்து 13,000 அடி உயரத்திலுள்ள **கௌமுகி** யிலே தோன்றித் தவழ்ந்தபடி, 10,500 அடி உயரத்திலுள்ள **காங்கோத்ரி**யில் வந்து உருவம் பெறுகின்ற அன்னை "**கங்கை**"க்கு அங்கேயே ஒரு கோயிலும் உள்ளது.

படாதபாடுபட்டு, பக்தியின் சக்தியால் கங்கோத்ரிக்கு நடந்தே வந்து சேரும் மானுடரின் முதல் பூஜையை ஏற்றபடி இமயத்தின் முடியிலிருந்து கீழிறங்கும் கங்கா தேவி, ரிஷிகேசம், ஹரித்துவாரிலே சமதரையில் பிரவஹித்து, காசியை அடையும் போது, புனிதமான அகண்ட நதியாகத் திகழுகிறாள்.

"நதிகளிலே நான் கங்கை" என்று கீதையிலே பகவான் **ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா** கூறுகிறார்.

"கங்கை கங்கை" என்று எங்கிருந்து உச்சரித்தாலும் சர்வபாவங்களும் நீங்கி அவன், வைகுந்தப் பதவியை அடைகிறான்." என்கிறது **தேவி பாகவதம்.**

"பிணி, மூப்பு அனைத்திற்கும் ஒரே மருந்து கங்கைத் தீர்த்தமே" என்கிறார் சித்தமருத்துவத்தின் ஆதிமூலவரான மகான் **தன்வந்தரி.**

"கங்கா தீர்த்தத்திலே சில துளிகளைப் பருகியோர்க்கு யம பயம் இல்லை" என்று உறுதிபடக் கூறுகிறார் **ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள்.**

"கங்கேச யமுனே சைவ-, கோதாவரி சரஸ்வதி, நர்மதே ஸிந்து
காவேரி, ஜலே அஸ்மின் ஸன்னிதிம் குரு"

என்று, ஸ்பரிஸிக்கும் தண்ணீர் அனைத்துமே கங்கைத் தீர்த்தமாகி எங்களைக் காக்கவேண்டும் என்ற பிரார்த்தனையை ஒவ்வொரு ஹிந்துவும் குளிக்கும்போது கடைப்பிடித்து உய்யவேண்டும்.

கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, நர்மதை, சிந்து, காவேரி முதலான ஏழு நதிகளை ஆவாஹனம் செய்வதோடு, வாய்ப்பு உள்ளவர்கள் பத்தாகச் செய்யட்டுமே என்று ஸ்ரீ ஆதிசங்கரர் தமது "காசிப்பஞ்சக"த்தில் நமக்குக் கருணை செய்கிறார்...

"இமம்மே கங்கே யமுனே சரஸ்வதி,
சதுத்ரிஸ் தோம (கும்)ம், ஸதா பரூஷ்ணியா,
அஸிக்னியா மருத்வ்ருதே விதஸ்ய,
யார்ஜீ கீயே ச்ருணு, ஹ்யாஸ௰ ஹோமயா"

("விஸ்வநாதராணியான பாகீரதியே! ஆதித்யனின் மகளான யமுனையே! பிரம்ம பத்தினியான சரஸ்வதியே! நீங்கள் மூவரும் சதுத்ரி, பருஷ்ணி, அஸிக்னி, மருத்வ்ருதா, விதஸ்தா, ஆர்ஜிகியா, ஸ௰ஹோமா ஆகிய ஏழு நதிகளையும் உடனழைத்து வந்து எங்களைக் காப்பாற்றுங்கள்" என்று கங்கையைத் தலைமைப்படுத்திப் பாடித்துதிக்கிறார் ஸ்ரீஆதிசங்கரர்).

கோடைக்காலத்திலே 50-அடி ஆழத்தில் கங்கை காசியிலே ஓடுகிறதென் றால், மழைக்காலத்தில் 100 அடிக்குமேல் உயர்ந்து, காசி நகர் தெருக்களில்கூட ஐந்தடி ஜலம் ஓடியதை நானே நேரில் கண்டு பிரமித்திருக்கிறேன். (13-9-1978 துணைடைரக்டராகப் பணிபுரிந்த "சுப்ரபாதம்" படப்பிடிப்பின்போது).

கங்கை நீரிலே காலரா கிருமிகளும் மாண்டுவிடுவதை, கனடா நாட்டு டாக்டர் **F.C. ஹாரிஸன்**, பிரெஞ்சு நாட்டு விஞ்ஞானி **டி. ஹெரல்**, பிரிட்டிஷ் நாட்டு ஆராய்ச்சியாளர் **C.E. நெல்சன்** முதலானவர்கள் ஆய்ந்து வியந்து "அற்புத தீர்த்தம் கங்கை" என்பதை ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

காசியும், கங்கையும் நமது தேசீய ஆன்மிக வாழ்க்கையின் தெய்விகச் சின்னங்கள்; மாசில்லா மனத்தினராய் காசியை நினைத்தால், கங்கையை ஜெபித்தால் பாபமெல்லாம் தீரும்; விஸ்வேஸ்வரப் பரமனருள் சேரும்.

மூவுலகத் தீர்த்தங்களும் காசியில் இருப்பதால், காசி யாத்திரையை முறைப்படி மேற்கொள்ளுவோர், மூன்று உலகங்களிலுமுள்ள சர்வ தீர்த்தப் பலன்களையும் ஏக காலத்திலே அடைந்தவராகிறார்கள்.

ஒரு காலத்தில் "காசியாத்திரை" என்றால், சிலருக்கு அது "திரும்பாவூர்"ப் பயணமாகவும் இருந்ததுண்டு! அந்த நாளிலேயே, இரண்டாயிர மைல்கள் இடைவெளியுள்ள காசி, ராமேஸ்வரத்தை ஆன்மிக ஒருமைப்பாடெனும் "பக்திப்பால"த்தால் இணைத்து வைத்துள்ளார்கள் நமது முன்னோர்கள்.

காசியிலுள்ள சிவபெருமான் அடியவர்களுக்கு ஸ்ரீராம மந்திரத்தை (அந்திம காலத்தில்) உபதேசிக்கிறார்.

ராமேஸ்வரத்திலே ஸ்ரீ ராமபிரான், சிவபெருமானை லிங்கமாய் ஸ்தாபித்து, ஆத்மார்த் தமாகப் பூஜித்து வழிபடுகிறார்.

இத்தனை சுத்தமாக நமது ஏகபாரத பக்திவழி ஒருமைப்பாட்டுத் தத்துவம் அமைந்திருக்கும்போது, இடைக்கால சைவ வைணவ, வடகலை, தென்கலைப் பேதாபேத மோதல்கள் எத்தனை அறிவீனம்!

சைவ, வைணவ, சக்திச் க்ஷேத்திரமான காசிமாநகர் சுமார் நான்கு மைல்கள் சுற்றளவுடைய பழமையும் புதுமையும் ஒருங்கிணைந்த, மிகப்பெரிய புனிதப்பதியாகும்.

புராணம், சரித்திரம், விஞ்ஞானம், மேலைநாட்டு நாகரீகம் முதலான சகல அம்சங்களும் கலந்து விளங்கும் காசி, நவ நாகரீகத்தால் இன்று, எத்தனைதான் அலங்கோலமானாலும், இரண்டறக்கலந்து விட்ட புனிதத்தால் மனித மனதிற்கு அமைதியைத்தரும் ஓர் அபூர்வத் திருத்தலமாகவே தொடர்ந்து விளங்கி வருகிறது.

பத்துமாதம் காசியில் தங்கியிருந்து, 24 வகையான யாத்திரைகளை மேற்கொள்ள வேண்டுமென்பது நியதி; 24-வகை யாத்திரைகள் ஒவ்வொன்றுக்கும் உள்ள வெவ்வேறு பலன்களும் இதிகாச, புராணங்களிலே கூறப்பட்டுள்ளன.

அந்த நாட்களில் நடந்தும், வண்டிகளிலும் காசி, ராமேஸ்வர யாத்திரையை மேற்கொண்ட மக்கள், ராமேஸ்வரம், மதுரை, ஸ்ரீரங்கம், சிதம்பரம், காஞ்சீபுரம், திருப்பதி, கடப்பை, கர்நூல், ஹைதராபாத், மேதக், வரோரா, நாகபுரி, காம்ப்டி, ஸெய்மி, ஜப்பல்பூர், கட்நி,மெய்ஹார், கர்வி, சித்திரக்கூடம், ராஜ்பூர், பிரயாகை, மீர்ஜாபூர், என்று காசிக்கு மாதக் கணக்கிலே பயணம் சென்றிருக்கிறார்கள்.

யந்திரயுக இந்த நாளிலே, இன்றுபோய் நாளை திரும்பும் விமான வசதிகளும், ஒரு வாரத்துள் யாத்திரை முடிந்து வீடுசேரும் சுகமான "பர்த்" ரயில் வசதியும், தங்குவதற்கு நவீன ஒட்டல் வசதியும் நிறைந்துவிட்டன.

"கடிகார், காலண்டர்" காலத்தை அனுசரித்து 10 மாதங்கள் 45 நாட்களாகி. 9,5 என்று தேய்ந்து மூன்று நாட்கள் காசிவாசம் என்றநிலை பக்தர்களிடையே பெரும்பாலும் இப்போது ஏற்பட்டிருக்கிறது.

வடதேசமான காசி யாத்திரையை மேற்கொள்ள, ஐப்பசி முதல் தைமாதம் வரை இதமான சீதோஷ்ண மாதங்களாகும்.

காசி யாத்திரீகர்கள் முதலில் அலஹாபாத் அருகிலுள்ள "தீர்த்த ராஜா" எனக் கொண்டாடப்படும் **திரிவேணி சங்கமப்** பிரயாகையில் நீராடவேண்டும்; **கங்கையும் யமுனையும்** சங்கமிக்கும் பிரயாகையில், "அந்தர்வாஹினி"யாக **சரஸ்வதி** நதியும் இணைகிறது. பிறகு காசிக்குப் போய், கங்காஸ்நானம் முடித்து, தெய்வ தரிசனத்திற்குப் பிறகு, **கயையில்** பிண்டம் போட்டபின், மீண்டும் திரிவேணி சங்கமம் வந்து நீராடியபிறகுதான், கங்கா தீர்த்தத்தை எடுத்துப் புறப்பட வேண்டும்.

வசதியுள்ளவர்கள் ராமேஸ்வரத்திலிருந்து "அக்னி தீர்த்தம்" கொண்டுபோய் காசி விஸ்வநாதருக்கு அபிஷேகித்து, அங்கிருந்து கங்கா தீர்த்தத்தை எடுத்து மீண்டும் ராமேஸ்வரம் வந்து, ராமநாத ஸ்வாமிக்கு அபிஷேகம் செய்வதுண்டு.

பிரயாகையில் **வேணி மாதவர்**, காசியில் **பிந்து மாதவர்**, ராமேஸ்வரத்தில் **சேதுமாதவர்** ஆகிய மும்மூர்த்திகளின் தரிசனமும், மாநுடவாழ்வுச் க்ஷேத்ராடானத் திலே ஓர் சிறப்பு அம்சமாகும்.

"ஆயிரத்தெட்டுக் கோயில்களைக் கொண்ட க்ஷேத்திரம்" எனப் போற்றப்படும் காசியிலே பாயும், ஆயிரத்தெட்டுப் புனித நதிகளின் தாயெனப் போற்றப்படும் கங்கா நதிக்கரையில், 64-ஸ்நான கட்டங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் வெவ்வேறு தத்துவ மகத்துவங்களைக் கொண்டதாகும். 10 கி.மீ. அளவிற்குள் அமைந்துள்ள அறுபத்திநாலு ஸ்நான கட்டங் (காட்) களின் பெயர்களாவன...

காசியில் (கங்கை) தீர்த்த கட்டங்கள்

1. அஸிசங்கமகாட், 2. லோலார், 3. துளசிதாஸ, 4. ஜானகி, 5. பார்சுவநாத,6. சிவலய, 7. நிரஞ்சன, 8. பிரமேந்திர, 9. ஹநுமந்த, 10. ஹரிச்சந்திர, 11. லல்லி, 12. சிந்தாமணி, 13. ராணி, 14. கேதார, 15. சௌகி, 16. ருக்மாங்கத, 17. க்ஷேமேசுவர, 18. மான ஸரோவர, 19. நாரத, 20. அன்னபூரணா, 21. பாண்டேய, 22. சதுர்சஷ்டி, 23. தண்டி, 24. ராணாமஹால், 25. முன்ஷி, 26. அஹல்யாபாய், 27. சீதளா, 28. பிரயாக, 29. தசாசுவமேத, 30. அசுவ, 31. கிடிகீ, 32. மான்மந்திர, 33. திரிபுரசுந்தரி, 34. விசாலாட்சி, 35. ஜராசந்தேசுவர, 36. லலிதக, 37. கங்காகேசவ, 38. பிரம்மநாள்,

39. மஹாமாயன, 40. சித்திவிநாயக, 41. மணிகர்ணிகா, 42. தத்தாத்ரேய, 43. சேந்திய, 44. சங்கடாதேவி, 45. யமேசுவர, 46. கங்காமஹால், 47. அக்னீஸ்வர, 48. ராமா, 49. லட்சுமணபாலா, 50. மங்களாகௌரி, 51. பஞ்சகங்கா, 52. பிந்துமாதவ, 53. துர்க்கா, 54. பிரம்ம, 55. சத்திர, 56. ராஜமந்திர, 57. லால், 58. கௌ, 59. நாராயண, 60. திரிலோசனேசுர, 61. பிரஹலாத, 62. ராஜ, 63. கட்கவிநாயக, 64. வருணாசங்கம தீர்த்த கட்டங்கள் ஆகும்.

காசியிலுள்ள 64 தீர்த்தக் கட்டங்களிலும் நீராடுவது தற்காலத்தில் முடியாது. ஆகையால், கீழே குறிப்பிட்டுள்ள 5 தீர்த்தக் கட்டங்களில் முழுகுவது "பஞ்ச தீர்த்த"ப் புனித யாத்திரையாகப் போற்றப்படுவதாகும்.

1. அஸிசங்கம கட்டம், 2. தசாசுவமேத கட்டம், 3. வருணசங்கம கட்டம், 4. பஞ்சகங்கா கட்டம், 5. மணிகர்ணிகா கட்டம்

மேற்படி ஐந்து ஸ்நான கட்டங்களிலே சிரத்தையோடு நீராடி, இறந்துபோன நமது மூதாதையர்களுக்கான திவசம், திதி முதலானவற்றிற்கு பிண்ட தானங்களை முடித்துக்கொண்டு, கங்கையிலிருந்து கரைக்கு வருகிறோம்.

காசியில் வழிபடவேண்டிய மூர்த்திகளை கீழேகண்டபடி வரிசைப் படுத்தியிருக்கிறார்கள் சான்றோர்.

"விஸ்வேசம், மாதவம், டுண்டிம், தண்டபாணியும், ச பைரம்
வந்தே காசீம், குஹாம், கங்காம், பவானீம் மணி கர்ணிகாம்"

காசி விஸ்வநாதர், விசாலாட்சி, (துங்க) அன்னபூரணி, டுண்டி கணபதி, அஷ்ட விநாயகர்கள், கேதாரேஸ்வரர், பிந்துமாதவர், நவதுர்க்கை, தண்டபாணி, காலபைரவர், காமகோடீஸ்வரர், பாதாளவராஹி முதலான சந்நிதிகளோடு, உமாமகேஸ்வரர் கோயில்களோடு, நவீன அமைப்புடன் கூடிய பிர்லாமந்திர், துளசிமானஸமந்திர் ஆகிய ஆலய மூர்த்திகளின் தரிசனங்களையும் முடித்து... **"கௌடிமாதா"** என்னும் காசி "கிராமத்தின் காவல்தேவதை"யிடம் விடைபெற்றுப் புறப்பட வேண்டும்.

காசியில் விசாலாட்சியைவிட, அன்னபூரணிதான் பொன்னும் மணியுமாய் புதுப்பொலிவுக் கோயிலுமாய் "ஓஹோ" எனத் திகழ்பவள்.

தீபாவளி சமயத்தில் மூன்று நாட்கள் காசியில் உள்ள ஆலயங்கள் அனைத்தும் கோலாகலமாக விளங்கும். **"மிட்டாய்த் திருவிழா"**வும், அன்னகூட, அன்னாபிஷேக ஆராதனைகளும் பிரமிக்க வைப்பதாகும்; அந்த கால கட்டத்தில்தான் **தங்க அன்னபூரணி** தரிசனம் கிடைக்கிறது.

காசி "அநுமான்காட்"டின் அருகில் தான் தமிழன்பர்கள் அதிகம்.

கடந்த 180 ஆண்டுகளாக - இன்றளவும் - ஒருநாள் கூடத் தவறாமல் ஸ்ரீ விஸ்வநாதருக்கு நித்திய ஆராதனை நைவேத்தியப் பொருட்களை **"சம்போ"** என்ற

பெயரிலே, புனிதம் குறையாமல் கைங்கர்யம் செய்து வருகிறார்கள், நமது **நகரத்தார் சமூகத்தினர்.** அவர்கள் சிரத்தையோடு நிர்வகித்து வரும் நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரமானது, காசிக்குப் போகும் தமிழகத்து யாத்ரீகப் பெருமக்களுக்கு,ஓர்வரப்பிரசாதம்.

ஸ்ரீ காமகோடிமடம், ஸ்ரீ சிருங்கேரிமடம், ஸ்ரீ குமாரசாமி மடம் (திருப்பனந்தாள்) முதலான திருமடங்களும் காசியிலே தத்தம் பிரதிநிதிகளை நியமித்து, நிறைவான அருட்பணிகளைப் புரிந்துவருகின்றன.

காசி விஸ்வநாதர் ஆலயத்தில், அதிகாலை மூன்று மணிக்கு சப்ததீர்த்த அபிஷேகம் முடிந்து ஹாரத்தியானதும், நான்கு மணியிலிருந்து... இரவு ஒன்பதரை மணிவரை சுவாமி தரிசனம் செய்யலாம்; மூலவரை நாமே தொட்டுத் தழுவி அபிஷேகம் புரிந்து ஆராதனையை நடத்திக் கொள்வது, பரவசம் தருகிற ஒரு சுக அனுபவமே!

கங்கைக் கரையின் ஒரு பக்கம் காசி நகரம், எதிர்க்கரையில் "ராம்நகர்" எனப்படும் காசிமன்னரின் அரண்மனையுள்ள பகுதி. அரண்மனையில் மன்னர் பரம்பரை இன்றும் சிறப்போடு இருக்கிறது. "வியாசகாசி" எனப்படும் இப்பகுதியில் **வேதவியாசர்** பூஜித்த சிவலிங்கக் கோயிலும் உள்ளது.




இங்கிருந்து சுமார் ஒன்பது மைல் தொலைவில்; **"புத்தகாசி"** எனப்புகழ் பெற்ற **சாரனாத்** உள்ளது; **பௌத்தமதத்தினரின்** முக்கிய க்ஷேத்திரமான இங்கே, **ஜைனமத** தீர்த்தங்கர் ஒருவரும் முக்திபெற்றுள்ளார். "சாரங்கநாதர்" என்ற பெயரோடு சிவன் கோயில் ஒன்றும் அங்கே உள்ளது.

காசியிலிருந்து 220 கி.மீ. தூரத்திலிருக்கும் **கயை,** புத்த பகவானின் சத்தியவிரத க்ஷேத்திரம்; பல நாடுகளிலுள்ள புத்தமத குருமார்களையும், பக்தர் களையும், போதிமரத்து நிழலிலே இங்கே ஒருமித்துக் காணலாம்.

திதி மந்திரங்களில் பிரதானமாகக் கூறப்படும் **"அட்சயவடம்"** என்னும் அற்புத ஆலமரம் இங்குதான் உள்ளது; அட்சய வடத்தின் வேர் பிரயாகையில், நடுப் பகுதி காசியில், நுனிப்பகுதி, இங்கே... அற்புதத்திலும் அற்புதம்!

"காசியில் தண்டம், பிரயாகையில் முண்டம், கயையில் பிண்டம்" என்பது நமது சனாதன தர்மத்தின் நியதியாகும். சாஸ்திர பூர்வமாக கயையில் 48-இடங்களில் பிண்டதானம் செய்யவேண்டும். (64-என்றும் கூறுவது உண்டு) சிரார்த்த காரியங்களை பக்தி, சிரத்தையோடு முடித்து, விஷ்ணுபாத தரிசனம் செய்தோர், மூதாதையர்களுக்கான சர்வ கடன்களையும் இப்பிறவியில் தீர்த்து முடித்த மிகப்பெரும் புண்ணியம் செய்தவர்களாகிறார்கள்.

ஒழுக்கத்தின் வித்தான பக்தியைப் பேணுவோம் உயர்வான தெய்விகச் சக்தியைத் தேடுவோம் கலக்கமும் துயரமும் நமை விட்டு ஓடும்; காசியும் கங்கை யும் நம் தெய்வமாகும்.

சாஸ்தா ஐயப்ப சபரிமலை

தேவாதி தேவுர்களும், திருவருட் செல்வர்களும் ஆழ்வார்களும், வந்து பிறந்து, வாழ்வாங்கு வாழ்ந்த அருளறமிக்க ஞான பூமியான நமது புனித பாரதத்திலே **பிரம்மச்சர்யம், இல்லறம் வானப்பிரஸ்தம், துறவறம்** ஆகிய நான்கும் நிறை வாழ்வின் இலக்கணங்களாகும்.

நால்வகை இலக்கணத்துள், திருமணநாள்வரை கடைப்பிடிக்கப்படும், தூய பிரம்மச்சர்யமே மற்ற மூன்றையும் தாங்கும் அடித்தளமாகும்.

அத்தகைய தெய்விக தியாக பிரம்மச்சர்யத்தின் மொத்த உருவகமே ஐயனாரப்ப சாஸ்தாவான மணிகண்ட ஸ்ரீ ஐயப்பனாகும்.

கேரளத்து ஐயப்ப வழிபாடு, கடந்த முப்பது ஆண்டுகளாகத்தான் தமிழ் நாட்டிலே பிரபலமானது என்றாலும், ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே **ஐயனாரப்பன்** என்ற பெயரிலே நமது ஊர்கள் தோறும் எல்லைகளிலே நிறைந்து இருப்பவர் ஸ்ரீ ஐயப்பன்.

பதினெட்டுப் புராணங்களிலே ஒன்றான பிரமாண்ட புராணத்திலும், கந்தபுராணம், பெரியபுராணம், சிலப்பதிகாரம் முதலான காவியங்களிலும், ஐயனாரப்ப, ஐயப்ப, சாஸ்தாக்கள் பற்றிய கதையும், குறிப்புகளும் ஏராளமாக இடம் பெற்றுள்ளன.

"ஐயன்" என்பது "ஆர்ய" என்பதன் திரிபு; "ஆர்ய" என்றால் "மதிப்புக் குரிய" என்றுதான் பொருள்...

"சாஸ்தா" என்பதே தமிழில் "சாத்தன்"; தமிழ்நாட்டில் இருக்கப்பட்ட அனேக சாத்தனூர்களில் முக்கியமான தெய்வம் சாஸ்தாவான ஐயப்பன்தான்".

"கேரளத்தில் எட்டாக்கையில் சபரிமலையில் இருக்கிற ஐயப்பன், கொஞ்சம் கொஞ்சமாகத் தமிழ்நாடு மற்ற ராஜ்யங்கள் மீதெல்லாம்கூடத் தனது ராஜ தானியை விஸ்தரித்துக் கொண்டே வருகிறார்" என்று சொன்னவர்-காஞ்சிமுனிவர், ஸ்ரீ பரமாச்சார்ய சுவாமிகள்."

நம் காலத்திலே வாழ்ந்த சிவாம்சமான ஸ்ரீ பரமாச்சார்யரின் ஞானதிருஷ்டிமிக்க அருள்வாக்குக்கிணங்க, சபரிமலை யாத்திரை இன்று, சர்வ ஜனபாத்தியதையாகி வருகிறது. நமது . கிராமங்களில் வழிபாடற்றுப் போன ஆயிரக்கணக்கான ஐயனார்களின் சக்திகள் அனைத்துமே, சபரிமலை ஐயப்பனிடம் சங்கமமாகி விட்டதோ எனக்கருதும் வகையிலே, ஆண்டுதோறும் சபரிமலைச் சன்னி தானத்திலே மக்கள் தொகை காட்டாற்று வெள்ளமென கோடி கோடியாகப் பெருகிக் கொண்டே போகிறது.

அதிநவீன வசதிகளும், துரித வாகனாதிகளும், எந்த ஒரு மாநிலத்திலிருந் தும் காலையில் புறப்பட்டால், மாலையில் சபரிமலைமேலே இருக்கும் அளவிலே பகாசுரப் போக்குவரத்தும் புனிதமிகு வனப்பகுதித் திருமலையாகத் திகழ்ந்த சபரி மலைப்பகுதியிலே இன்று பரிணமித்துவிட்டன.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன் மகரஜோதி நாளிலே ஆயிரக்கணக் கிலே பக்தர்களைக் கண்ட, இரண்டு மைல் விஸ்தீரணமுள்ள சபரிமலை, இன்று லட்சோப லட்ச "ஐயப்பன்மார்"களைச் சுமந்து பாரம் தாங்காமல் நெளிகிறது என்றே கூறலாம்! ஆலய வருவாயும் மேற்காணும் தோராய மக்கட் தொகைப்படியே பெருகித் ததும்பி நிறைகிறது. ஐயப்பனின் ஆலய வருமானம், வசதியற்ற இதர பல கேரள ஆலயங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறதாம்.

1994 நவம்பர்; சாதாரண ஒரு மாதவருவாய் பத்து கோடி ரூபாய்கள்! 1995 மகரஜோதியை தரிசித்த ஐயப்பன்மார் ஐந்து லட்சமாம்!! மண்டல பூஜா, மகரஜோதிக்கு வந்த பக்தர் தொகை ஐந்து கோடியாம்!!! ஆலயவருவாய், இருபது மடங்காக இருக்கலாம்தானே! பிரசாதத்துக்கு என ஒதுக்கப்பட்ட அரிசியும், வெல்லமும் உண்ணவே தகுதியில்லாதது, "ஸ்டாக்" அளவும் குறைந்து காணப் படுகிறது என்றொரு பத்திரிகைச் செய்தி! பதினெட்டாம்படியிலே நெறிசல்! 100-ஐயப்பபக்தர் காயம் 3.1.1996-செய்தி. இந்த ஆண்டு "ஜோதி", மண்டல பூஜைகளிலே சபரிமலையிலே, ஆறுகோடி பக்தர்களாம், ஏழுகோடி ரூபாய் காணிக்கையாம். (15-1-1996 தினமணி)

ஆரம்பத்திலே கேரள மக்கள் மாத்திரமே வழிபட்டு வந்த இந்த பரசுராம க்ஷேத்திரம், கடந்த 50 ஆண்டுகளிலே "கிடுகிடு"வெனப் பெரும்புகழ்பெற்று இன்று அகில உலகமும் அறிந்த மாபெரும் திருக்கோயிலாக விளங்குகிறது.

பந்தள நாட்டு மன்னனான ராஜசேகரப்பாண்டியன் முன்னிலையிலே அன்று பரசுராமர் ஸ்தாபித்த ஐயப்ப மூல விக்ரஹத்தை அடுத்து, இன்னொரு பிரதிஷ்டையும் முடிந்து, 1948-ல் இப்போதுள்ள பஞ்சலோக ஐயப்ப மூலவர் ஸ்தாபிதமானார்.

இனமொழி, ஜாதி, மதபேதம் எதுவுமே இல்லாத, சமதர்மக் கடவுளாகிய ஐயப்பனின் கோயிலுக்கு... கார்த்திகை மாதத்திலே தமிழகமே இப்போது "மாலை" போட்டுச் செல்கிறது என்றால் தவறாகாது! ஆனால்.....

கடுமையான நெறிமுறை விரத அடிப்படையிலே இருந்த ஒரே ஒரு இறை வழிபாடும், பரிகார, வியாபார நோக்கோடு சுலப வழிமுறைக்கு நழுவுவது, எந்த அளவுக்குப்பலன் தரும், பகாசுரவேகபக்தியின் முடிவு என்னவாகும் என்பதைக் காலம்தான் கூற வேண்டும்!

சாராயக்கடைகளிலே "ஐயப்பன்" மார்களுக்கு தனி கிளாஸாம்! (23.12.1985 -மாலைமுரசு) மாலை போட்டுக்கொண்டு, மதுவைத் தொடாமல் இருப்பவர்கள், அப்படியே தொடர்ந்தால், எத்தனை குடும்பங்கள் மகிழும்.

கேரள அரசு "ருத்ரவனத்திட்டம்" ஒன்றைத் தீட்டியுள்ளதாம்! சபரிமலைப்பகுதியிலே, 250, ஏக்கர் காடுகளை அழித்து, ஆறு அடுக்கு மாடிகளை அமைப்பதாம்!! பம்பையிலிருந்து பாண்டித்தாவளம்வரை தார்ரோடாம்!!! எதிர்த்துப் போராட அ.இ.ஐ. சேவா சங்கம் தயாராம் (ஆகஸ்ட் 1995-ஓம் ஸ்ரீ ஐயப்பன்)

தமிழகத்திலும் இதரபல மாநிலங்களிலும் க்ஷேத்ராடான யாத்திரையென்பது பெரும்பாலும் "சுற்றுலாக் கேளிக்கை"யாகிவிட்ட தொத்துவியாதியானது, பயபக்தியோடு மேற்கொள்ள வேண்டிய சபரிமலைக்கு மட்டுமாவது பரவாதிருக்க இறையருளை வேண்டியபடி "சாமி ஐயப்பன்" கதையே அறிவோமாக.



சுவாமி ஐயப்பன்

காலவ ரிஷியின் மகளான **லீலை** என்பவள், **தத்தன்** என்பவனை மணந்து, காமவிகாரத்தால்; அவனை ஹிம்சை செய்கிறாள்! வெறுப்புற்ற தத்தனின் சாபத்தால், **கரம்பன்** என்ற அரசனுக்கு எருமை முகத்துடன் கூடிய **மகிஷி**யாகப் பிறக்கிறாள் லீலை.

கரம்பனின் அண்ணன் மகனான **மஹிஷாசுர**னை சண்டிகா தேவியானவள் அழித்ததை அறிந்த மகிஷி, அசுர குருவாகிய **சுக்கிராச்சாரி**யாரிடம் முறையிடு கிறாள்; அவர் தந்த மந்திரத்தை உச்சரித்தபடி, விந்திய மலையிலே அகோரத் தவம் செய்து, ஹரிஹர சம்பந்தமுள்ள ஒருவனாலன்றித் தனக்கு மரணமே வரக்கூடாது எனும் அபூர்வமான வரத்தைப் பெறுகிறாள்.

பலத்தால் தேவருலகையே துவம்சம் செய்கிறாள் மகிஷி. தேவர்கள் திரண்டு மும்மூர்த்திகளிடம் முறையிடுகிறார்கள்; சிவ பிரம்ம விஷ்ணு அம்சமாக ஓர் ஆண் மகிஷத்தைப் படைத்து, மகிஷியைப் பூலோகத்திற்கு அழைத்துச்செல்ல ஏற்பாடு செய்கின்றனர்.

வெற்றிக் களிப்பிலே மிதந்த இந்திரனிடம், துர்வாச முனிவர் பூஜாமாலை ஒன்றைத் தருகிறார்; ஐராவதத்தின் (வெள்ளையானை) மேல், மாலையை அலட்சியமாக வீசுகிறான் தேவராஜன்: மாலையை யானை மிதித்துச் சிதைத்து விடுகிறது. வெகுண்ட துர்வாசர் "தேவர்களின் அழியா இளமை அழியட்டும்" எனச் சாபமிடுகிறார். கிழத்தன்மையடைந்த தேவர்களின் "நித்யஇளமை"க்காக, பாற்கடல் அமுதம் கடையப்படுகிறது; திரண்டு வந்த அமுதத்தைத் திருடிக்கொண்டு ஓடிய அசுரர் முன்னால், மகாவிஷ்ணு மோஹினியாக வந்து அமுதத்தை மீட்கிறார்.

"விஷ்ணு மோஹினி"யைச் சிவபெருமான் மோஹிக்கிறார்; சிவவிஷ்ணு அம்சமாக **ஹரிஹரசுதன் ஐயப்பன்** அவதரிக்கிறார்.

கைலாயத்திலே கோலாகலமாக வளர்ந்த ஐயப்பனை, மகிஷிவதத்துக்காகப் பூமிக்கு அனுப்புகிறார் சிவபெருமான். வேட்டைக்கு வந்த பந்தள மன்னனிடம் மணிகண்ட ஐயப்பன் கிடைத்த வேளை, ராணிக்கு ஒரு ஆண் குழந்தை பிறக்கிறது. துன்மந்திரியின் போதனையால் "தலைவலிக்குப் புலிப்பால் தேவை" என்று குழந்தை ஐயப்பனை காட்டுக்கு அனுப்புகிறாள் இராணி.

மகிஷியோடு பூமியில் குலவித்திரிந்த தேவமகிஷம் மறைகிறது; மோகாவேச மகிஷி, மூவுலகையும் நிர்மூலமாக்கப் புறப்படும் தருணம், புலிப்பால் தேடி வனத்துக்கு வந்த ஐயப்பன், நியதிப்படி மகிஷியின் வதத்தை முடிக்கிறார்.

புலிக்கூட்டத்தோடு, கரும்புலி வாஹனனாக அரண்மனை திரும்பிய ஐயப்ப தெய்வத்தைக் கண்ட அனைவரும், மெய்வருந்திச் சரண் அடைகின்றனர்; அவதார நோக்கம் பூர்த்தியான நிலையிலே, ஐயப்பன் விடை கேட்கிறார்; மன்னனின்

சோகம். தந்தையைத் தேற்றி, தான் விடும் அம்பு எங்குபோய் விழுகிறதோ, அங்கே தன்னை தரிசிக்கலாம் எனச் சொல்லிவிட்டு மறைந்து விடுகிறார் ஐயப்பன்.

பாசத்தால் புலம்பிய மன்னனுக்குத் தேவர் உலக நியதிகளையும், திவ்யக்ஷேத்ரங்களின் மகிமைகளையும் அகத்தியர் உபதேசித்து, ஐயப்பனின் அம்பு விழுந்த சபரிமலைக்குப் புறப்படுகிறார் மன்னனுடன்.

வழியிலே... ஊனக் கண்களுக்குப் புலப்படாத பொன்னம்பல மேட்டிலே, பந்தளமன்னனுக்கு சாஸ்தா ஐயப்பன் காட்சிதந்து, சக்தி மிக்க தெய்விக ஆயுதம் ஒன்றையும் தந்தருளுகிறார்.

ஐயப்பனுக்கு ஆலயப்பணி செய்யும் பந்தளமன்னன், கைங்கர்யப் பயனால் தன்னையும்மிஞ்சி, தனது பதவிக்கே "உலை" வைத்துவிடுவானோ எனப் பயந்த இந்திரன், பந்தள ராஜாவுடன் போருக்கு வருகிறான். ஐயப்பன் தந்த சக்தி ஆயுதத்தின் உதவியால், இந்திரனையும் ஜெயித்த பந்தள மன்னன் மேற்கொண்ட ஆலயத் திருப்பணிக்கு, தேவதர்ச்சனான விஸ்வகர்மாவும் துணையிருந்து; சபரிமலை ஆலயத்தைப் பூர்த்திசெய்கிறார்.

மகர சங்கராந்தி, சனிவார சுபமுர்த்த காலத்திலே, சிரஞ்சீவியான பரசுராமர் சபரிமலைக்கு வந்து, **சின்முத்திரையுடன் கூடிய பட்டபந்தன ஸ்ரீ ஐயப்பன்** விக்ரஹத்தை ஆகம முறைப்படி ஆலயத்துள் பிரதிஷ்டை செய்து, மஞ்சமாதா, கருப்பணசாமி முதலான காவல் தெய்வங்களையும் ஸ்தாபிதம் செய்து, அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகத்தைப் பூர்த்தி செய்தபின், **"கேரளாவில் உள்ள பதினெட்டு ஆலயங்களிலும் சாஸ்தாவாகிய ஐயப்பன், சான்னித்தியம் பெற்றுத் திகழ்ந்து பூமியைக் காப்பார்"** என்று பக்தர்களிடம் கூறிவிடை பெறுகிறார்.

தேவாம்ச ஐயப்பனை வளர்க்கும் 'பேறுபெற்ற பந்தளமன்னன், பேரானந்த நிலையில் புனித நதியான பம்பைக் கரையிலேயே பிரம்ம சமாதியாகிவிடுகிறான்.

அன்று முதல் இன்று வரை, பந்தள ராஜ பரம்பரைதான் சபரி மலை ஐயப்ப ஆலயத்தின் கௌரவக் காப்பாளர்களாகச் செயல்பட்டு வருகின்றனர்.

பந்தளத்து அரண்மனையிலிருந்து மகரஜோதித் திருவிழாவிற்கு வரும் திருவாபரணப் பெட்டிகளின் முன்பு, கருடன் எழுந்தருளும் மகாமகத்துவம், இன்றும் குறையாமல் இருப்பதும் இறையருளே.

ஆபரணப் பெட்டிகள் மூன்றும், பக்தர்களின் கூட்ட அலைகளில் "நீந்தி"யபடியே பதினெட்டாம்படியை நெருங்குகின்றன. இரண்டு சிறிய பெட்டிகள் "மாளிகைப்புறத்தம்மை"யின் ஆலயத்துக்குச் சென்றுவிட, ஸ்ரீ ஐயப்பனுக்கான ஆபரணப் பெட்டி பதினெட்டுப் படிகளில் "பறந்தே" போகிறது. **("நம்பினார் கெடுவதில்லை" படப்பிடிப்பிலே (1985) நாங்களே ஷ அற்புதக்காட்சிகளை எடுத்திருக்கிறோம்).**

சில நிமிடங்களில், லட்சோப லட்ச விழிகள் கீழ்த்திசையிலேயே குத்திட்டு நிற்கின்றன. நம்பி வந்த "சாமி"களுக்குப் பொன்னம்பல மேடையிலே, புனிதமான ஜோதி தரிசனம் கிடைக்கிறது.

"சாமியே சரணம் ஐயப்பா" என்ற லட்சோபலட்ச ஐயப்ப பக்தர்களின் பரவசப் பேரொலியும், கற்பூர ஆழியிலிருந்து, விண்ணை அளாவப் பிரகாசிக்கும் ஜோதிச் சுடரொளியும் இடையிடையே முழங்கும் வெடியோசையும், கண்கொள்ளா - காது கொள்ளா ஒளி-ஒலிக் காட்சிகளாகும்.

"ஐயப்ப"னிலும் இடைச் செருகல்!

நாம் கண்ட "சுவாமி ஐயப்பன்" வரலாறு பிரமாண்ட புராணத்து **"பூத நாதோ பாக்கியான"**த்தின் சாரமாகும்; "ஏழு சேவகங்கள்" எனப்படும் சாஸ்தா பாடல்களில் ஐயப்பனை ஓர் மாபெரும் வீரனாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. மேலும் பலவகை வேறுபட்ட சம்பவப் பின்னல்களைக் கொண்ட வேறுசில ஐயப்பன் கதைகளும் உண்டு!

நமது நாட்டிலே ஏனைய இதிகாச, புராண சரிதங்களுக்கு ஏற்பட்ட இடைச் செருகல் விபத்து, சாஸ்தா சரிதத்துக்கும் விலக்கல்ல!

கம்பராமாயணத்தில் இன்றுள்ள பாடல் தொகை சுமார் பத்தாயிரத்து ஐநூறாகும்; அதில் பாதிக்குமேல் இடைச்செருகல் என்று வேதனைப்பட்டிருக்கிறார், காவிய மேதையான அமரர் **திரு.டி.கே சிதம்பரநாத முதலியார்** அவர்கள்.

மகாபாரதத்தில் இன்றுள்ள பாடல் தொகை சுமார் ஒரு லட்சமாகும். வியாச பகவான் அருளி, விநாயகர் எழுதிய "ஒரிஜினல்" பாடல்கள் நாலாயிரத்து ஐநூறுதான் என்று உறுதியாகக் கூறியிருக்கிறார் மஹாயோகி **சுவாமி தயானந்த சரஸ்வதி** அவர்கள்!

காவியங்கள் மட்டுமல்ல... காவியத் "திலகங்க"ளும் அப்படியே! ஆறேழு அகத்தியர்! நாலைந்து ஔவையார்!! காலத்துக்கொரு கம்பர்!!! இப்படியாகச் சந்தி சிரிக்கும் வகையிலே சிந்திக் கலந்து, சிதைந்து கிடக்கும் உண்மைகளைச் சலித்தெடுக்க நாதியற்ற இன்றைய நவீன சமுதாயம், நாளுக்கொரு விழாவும், பொழுதுக்கொரு "போஸ்டரு"மாகச் சுழன்று கொண்டிருக்கிறது!

"ஐயப்பா! இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் சீக்கிரம் ஓர் முடிவைச் செய்யப்பா!" என்று வேண்டியபடி, 'ஏழு சேவகங்கள்' கூறும் வீரன் ஐயப்பன் கதையை அறிவோமா?

வீரன் ஐயப்பன்

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் பல சிற்றரசுகளால் கேரளப் பகுதி சிதறிக் கிடந்தது. உள்நாட்டுத் திருடர்களும், வெளிநாட்டுக் கப்பற் கொள்ளையரும் இஷ்டம்போல் சேர மன்னர்களின் தாய் பூமியை வேட்டையாடித் திரிந்தனர்.

கரிமலைக் கொள்ளைத் தலைவனான **உதயன்,** அன்றைய சபரிமலை ஆலயத்தைத் தகர்த்து, அர்ச்சகரைக் கொன்று, ஐயப்ப மூலவரைச் சிதைத்துக்

கொள்ளையடிக்கிறான். மத்திய திருவிதாங்கூர் பகுதியிருந்த அரண்மனையும் கொள்ளையரின் சூரையாடலுக்கு இலக்கானது! ராஜ விசுவாசமுள்ள **ஜயந்தன்** என்பவனால் இளவரசி காப்பாற்றப்படுகிறாள்.

பொன்னம்பல மேடு சென்று இருவரும் தங்கியிருந்து, புதுமணத் தம்பதிய ராகி, நல்லற இல்லறத்தால் பிள்ளை ஐயப்பனைப் பெற்றெடுக்கின்றனர் .

பதினாறு வயதிற்குள் சகல கலைகளையும் கற்றுத் தேர்ந்த ஐயப்பனுக்கு, மணிமாலை ஒன்றை அணிவித்துப் பந்தள அரண்மனைக்கு அனுப்பி வைக்கிறார் தந்தை ஜயந்தன்.

தனது சந்ததியைப் புரிந்து கொண்ட பந்தள மன்னன், ஐயப்பனைக் கண்டதும் உடனே நாட்டுக்கு அவனை மன்னன் ஆக்குகிறான்.

திடீர் அரசனான ஐயப்பனை சேனைத் தலைவர்களான **கடுத்தை, மல்லன்** ஆகியோர் எதிர்த்து, அவனது வீரத்தால் தோற்று, முடிவில் ஐயப்பனையே தலை வனாக ஏற்கின்றனர்.

அந்த நிலையில்... கப்பற்கொள்ளைக்காரனான **வாபர்** அங்கே வந்து, ஐயப்பனை எதிர்த்துத் தோற்று, முடிவில் மணிகண்ட மாவீரனின் அன்புடன் கூடிய விவேகத்திற்கு, தாசானு தாசனாகிவிடுகிறான்.

மாவீரர்களின் ஒருங்கிணைந்த துணை கிடைத்ததும், கொள்ளையரின் கொட்டத்தை அடக்கி ஒடுக்குவதற்காகப் பரந்த அளவிலான, முப்படைப் பயிற்சியை பிரகடனப் படுத்துகிறான் ஐயப்பன்.

கொச்சிப் பகுதியின் வீரத் தளபதியாகத் திகழ்ந்த **சிறமூரப்பன்**, தன் படை களைப் பயிற்சி முகாமுக்கு அனுப்ப மறுக்கிறான்; ஐயனே நேரில் சென்று ஐம்புலன் களையும் வென்ற தேஜோ மயமான தனது தேக வலிமையால் அவனைக் கவர்ந்து, அவனது மகளான **சிறுகூத்தி**யின் ஒருதலைப்பட்ட காதலைப் பாசமாக, பக்தியாக ஏற்றுப் பரிணமிக்கச் செய்து புகழ்பெறுகிறார்.

உள்நாட்டு பாதுகாப்பைப் பலப்படுத்தியதும், பாண்டிய நாட்டிலிருந்து வரும் கொள்ளைக்காரர்களின் ஆயுத மற்றும் ஆள்பலத்தை அறிவதற்காகவும், ஒற்றன் வேடத்தில் மதுரைக்குப் புறப்படுகிறான் ஐயப்பன்.

பாண்டியராஜாவிடம் சேவகனாகப் பணியேற்ற மணிகண்ட ஐயப்பன், தனது நேர்மைத் திறத்தால் வீராதிவீரனாகப் போற்றப்படுகிறார்; "கேரளத்து ஒற்றன்" எனத் தவறாகக் கருதிவிட்ட பாண்டிய ராணி, சூழ்ச்சியால் "வயிற்றுவலி" எனக் கூறிப் புலிப்பால் கொண்டுவரும்படி ஐயப்பனிடம் சொல்கிறாள்.

பாலுக்குச் சென்ற ஐயப்பன், தனது தேகவலிமையால், புலிக்கூட்டத்தையே கொண்டு வருகிறான். "மாவீரா, நீ யாரப்பா ?" என்ற பாண்டிய மன்னனிடம், தனது வரலாற்றினைக் கூறி, அங்கே வந்ததற்கான காரணத்தையும் நெறிமுறையோடு விளக்குகிறார் மாவீர மணிகண்ட ஐயப்பன்.

"நினைத்ததை முடிக்கும் நீயன்றோ மாவீரன்!" எனப் புகழ்ந்த மதுரை மன்னன், ஏராள வெகுமதிகளைத் தந்து, இனிமேல் எனது நாட்டுக் கொள்ளை யரால் உங்களது கேரளபூமிக்குத் தொல்லையே இருக்காது என உறுதி கூறிப் பரிசு பல தந்து, ஐயப்பனை வழியனுப்பி வைக்கிறார்.


பந்தளம் வந்தடைந்த ஐயப்பன், கரிமலைப் பகுதிக் கொள்ளையர்களான உதயன், முண்டன் ஆகியோரது கோட்டைகளை அழிப்பதற்காக தமது படையை முப்பிரிவுகளாக்கி, கொச்சுகடுத்தை, வாவர், மல்லன் ஆகிய மாபெரும் வீராதி வீரர்களைத் தலைவர்களாக்கி, கடலென அலைமோதித் ததும்பிய பயிற்சிமுடித்த முப்படை வீரர்களுக்கும் கீழ்க்கண்டவாறு கட்டளை பிறப்பிக்கிறார்.

"ஏக காலத்திலே நாலாபக்கங்களிலிருந்தும் நீங்கள் புறப்பட்டு, **எரிமேலியில்** ஒன்றுகூடி, நெறிமுறை விரதம் காத்து, ஆடிப்பாடிப் புறப்பட்டு, **பெருந்தோட்டில்** ஒய்வெடுத்து, **காளைகட்டி** வழியாக நடந்து **அழுதாநதி** யைக் கடந்து, **கரிமலையை** அடைந்து, **இஞ்சிப்பாறைக்கோட்டை** முதலானவற்றைத் தவிடு பொடியாக்கி, எதிரிகளை வென்று புறப்பட்டு, **வலியானைவட்டம், சிறியானைவட்டம்** தாண்டிப் புனித நதியான **பம்பை**யின் தீரத்திலே ஓய்வெடுத்து, விடிந்ததும் மாண்டுபோன வீரர்கட்குப் பம்பா நதிக்கரையில் "நீர்க்கடன்" முடித்து அன்னதானம், மோட்சதீபம் முடிந்ததும், **நீலிமலை, அப்பாச்சிக்குழி, சபரிபீடம்** ஆகியவற்றைக் கடந்து ஆயுதங்களையெல்லாம் **சரங்குத்திஆலில்** சேர்த்தபின், கனிந்த பயபக்தியோடு **சபரிமலையை** அடைந்து, **பதினெட்டாம்படி**களைக் கடந்து சன்னிதானத்திற்கு வந்து சேருங்கள்!" என்று முடித்த ஐயப்பன், முப்படைப் பிரிவுக்கும் ஒப்பில்லாத் தலைவனாகி, அதர்மங்களை வீழ்த்தித் தருமத்தைக் காத்து ரட்சிக்கிறான்.

சிதைந்திருந்த ஆலயத்தைச் செப்பனிட்டு ஐயப்பனின் வருகைக்கு காத்திருந்த ஜயந்தன், வெற்றி வீரனாக வந்த மகனைக் கண்டதும் பேரானந்தப் பெருமிதம் அடைகிறான். மகரத் திருநாளில் ஜீர்ணோத்தாரண மகா கும்பாபிஷேகம் முடிந்ததும், மூல மூர்த்தியான சாஸ்தாவிலிருந்து கிளம்பிய ஓர் பேரொளிப் பிழம்பு, மாவீர ஐயப்பனை மகாதேவ ஐயப்பனாக்குகிறது! ஜோதியாய் சுடராய் மாறி அரு உரு வடிவிலே சுடர் விடும் ஐயப்ப ஒளியைக் கண்ட அனைவரும், மெய் சிலிர்க்க **"சாமியே சரணம் ஐயப்பா"** என்று பரவசத்தோடு வணங்குகின்றார்.

மகர சங்கராந்தியன்று மட்டும் **பொன்னம்பலமேட்டி** லே ஜோதிச்சுடரா கவும், மற்றெல்லா நாட்களிலும் **அச்சன் கோயிலில்** "பூர்ணா புஷ்கலை" எனும் இரண்டு துணைவியரோடும், **ஆரியங்காவிலே** "பிரபை" என்ற ஒரே துணைவி யோடும், **குழத்துப்புழைக்** கோயிலிலே குழந்தை வடிவாகவும், **சபரிமலையில்** பட்டபந்தனம் பூண்ட சின்மய மூர்த்தியான ஸ்ரீ ஐயப்பனாகவும் பகவான் விளங்கு வதாக ஐதிகம்.

"ஐயனாரப்ப ஐயப்பனின் வரலாறுகள் மாறுபட்டிருந்தாலும், தருமத்தைக் காக்கும் காவல் லட்சியம் மட்டும் அனைத்து தெய்வ உருவகங்களுக்கும் ஒன்றுதான் என்பதை இளைய தலைமுறை சிந்தையில் கொள்ள வேண்டும்"





ஸ்ரீ ராம சிவமய இராமேஸ்வரம்

"ஆஸேது ஹிமாசலம்" என்று காஷ்மீர் முதல் கன்யாகுமரி வரை தேசீய ஒருமைப்பாட்டினைக் காலம் காலமாகக் காத்து வருவது, ஸ்ரீராம சிவமய இராமேஸ்வர க்ஷேத்திரமாகும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றிலும் முதன்மைபெற்ற காசியும், இராமேஸ்வரசேதுதீர்த்தமும். உள்ளவரை பாரத மக்களின் ஒற்றுமைக்கு, ஆரோக்கியத்துக்கு அழிவேயில்லை. தெய்விகச் சிந்தனையால் வரும் ஒருமைப்பாட்டிலே தான், நமது அகண்டபாரத, ஏகஇந்திய தேசிய ஒருமைப்பாடே அடங்கியுள்ளது.

"காலத்தால் மூத்தது சைவமே" என்போரும், **"கடவுளரில் உயர்ந்தவர் விஷ்ணு"** தான் என்போரும் தெளிந்தமதிச் சீலத்தால் ஞானம் பெற்ற ஒன்றாகும் **"ஸ்ரீராமசிவமய"**த் திருத்தலமான, சேதுமஹாதீர்த்த **இராமேஸ்வரம்.**

"காசி ராமேஸ்வரம்" என்பது அனைத்து இந்தியரின் ஆத்மாவுடன் கலந்த தாரகமந்த்ரமாகும்!

நமது பாரதநாட்டின் **"ஞானக்கண்கள்"** ஆன மஹாபாரத, ராமாயண இதிகாசங்கங்களின் அடித்தளமே, ஸ்ரீராம சிவமயம் தான்!!

இராமயணத்தோடு தொடர்பு உடைய திருத்தலமான இராமேஸ்வரப் புராண வரலாற்றுச் சுருக்கமாவது...; இலங்காதிபதியான இராவணேஸ்வரன் ஓர் பிராமணன்! (பிரம்மாவின் பேரனின் மகன்) இராவணனை ஸம்ஹரித்த பிரம்மஹத்தி தோஷம் தீருவதற்காக, அகத்தியர் முதலான முனிவர்களின் ஆலோசனைப்படி நர்மதைநதிக்கரை யிலிருந்து ஸ்ரீராமர் பூஜிப் பதற்கான லிங்கத்தை அமைக்கக்கல் கொண்டுவர ஹநுமன் போகின்றான்.

வாயுபுத்ர ஹநுமன் தேடிப்போன காரியம் சற்றுத் தாமதமாகிறது!

முஹூர்த்த வேளை தவறிவிடும் நேரத்திலே, கடற்கரை மணலையே ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியின் கட்டளைப்படி, லிங்கமாகப் பிரதிஷ்டை செய்கிறாள் பூமாதேவியின் மகளான சீதாதேவி.

நர்மதை நதியின்புனித லிங்கத்தோடு வந்த அநுமன், மணல் லிங்கத்தை அகற்றும் முயற்சியிலே தோற்று விடுகிறான்; (இன்றும் ஸ்ரீராமலிங்கத்தின் (இராமேஸ்வர் மூலவர்) மேல் அநுமனின் வால்தழும்பைக் காணலாம்) தொண்டரின் பெருமையை உயர்த்தும் வகையிலே ஸ்ரீராமர் **"அநும! நீ கொண்டு வந்த லிங்கத்திற்கே இங்கு முதல் பூஜை நடக்கும்"**. என்று அருள்பாலிக்கிறார். இராமேஸ்வரத்தில் "ஹநுமலிங்கத்திற்கே இன்றும் முதல் மரியாதை" மூலஸ்தானத்திலே


ஸ்ரீராமலிங்கமும், ஹநுமன் கொண்டு வந்த விஸ்வநாதரும் (இலிங்கமும்) இணைத்தே ஆராதனை பெறுகின்றன.

கந்தமாதனம், தனுஷ்கோடி, தர்ப்பசயனம் மூன்றையும், வானுலக தேவர்களே உருவாக்கியதால் "ருண மோக்ஷம்" அதாவது "முக்திதரும் சக்தியுடைய திருத் தலம் இராமேஸ்வரம்" என்று **"சைவ பூஷணம்"** என்கிற சிவாகமம் கூறுகிறது.

இராமேஸ்வர சேதுவின் பெருமைகளை ....ருக், யஜுர் வேதங்களும், தைத்ரீக, சனத்குமார..., சூத, சம்ஹிதைகளும், மரீசி., மனு., நாராயண., அத்திரி., காலவ., கௌதம., பராசர ஸ்மிருதிகளோடு., வால்மீகி., கம்ப., அத்யாத்ம., ஆனந்த, துளசி ராமாயணங்களும்., சங்க கால எட்டுத்தொகை நூல்கள், அப்பரின் தேவாரம்., சம்பந்தரின் திருக்கடைக்காப்பு, ஆழ்வார்களின் திவ்யப் பிரபந்தம் முதலானவை ராமேஸ்வரத்தைக் கொண்டாடு கின்றன.

புராணங்களிலே சிவ புராணம், ஸ்கந்த., தேவி., விஷ்ணு,. அக்னி.,பத்ம., பாகவத,. மச்ச., கூர்ம., காளிக.,கருட., மார்க்கண்டேய., திருவிளையாடல்., பெரிய புராணம்., ஆகியவையும்., கயாதரரின் இராமேஸ்வரக்கோவையுலா (14-ம் நூற்றாண்டு)வும் நிரம்ப அழகிய தேசிகர் பாடிய (16-ம் நூ.ஆ) சேதுபுராணமும், இராமப்பையன் அம்மானை (17நூற்றாண்டு), தாயுமானாரின் "மலைவளர்காதலி"., பலபட்டடைச் சொக்க நாதப். புலவரின் (18-ம் நூ.ஆ) தேவையுலா, காஞ்சி சிதம்பரநாத முனிவரின் சேது மகத்துவம், வேதாந்த தேசிகரின் தயாசதகம், வேங்கடாத்திரியின் விஸ்வகுணதர்ஸம், மு.ரா. அருணாசலக் கவியராயரின் சேது பர்வதவர்த்தினியம்மை பிள்ளைத்தமிழ் முதலான இதிகாச, இலக்கியங்களிலும் இராமேஸ்வர மகத்துவங்கள் இடம் பெற்றுள்ளன,.

இருபதாம்நூற்றாண்டின் வியாசமுனிவராக, எல்லா மதஸ்தர்களுக்கும் "மஹாப்பெரியவராக" நம்மோடெல்லாம் பேசி, நம்மோடு பல ஆண்டுகள்



வாழ்ந்திருந்த மஹான் (20-5-1894 - 8-1-1994) காஞ்சிமுனிவர் ஸ்ரீலஸ்ரீ சந்திரசேக ரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் திருவாக்கு "தெய்வத்தின் குரலாகும்" அந்த தெய்வத்தின் குரல், இராமேஸ்வரம் பற்றி ஒலித்ததை - பேசியதை - ஓரிரு வரிகள் பார்ப்போமா ?

"ராமேச்சுவரம், வேதாரண்யம், பட்டீச்வரம் என்ற மூன்று க்ஷேத்திரங்களும் கிட்டே கிட்டே இருப்பவை அல்ல. ராமேச்வரம்,ராமநாதபுரம் ஜில்லாவில் தெற்கு ஸமுத்ரக் கோடியில் இருக்கிறது. வேதாரண்யம், தஞ்சாவூர் ஜில்லாவில் ஒரு கோடியில் ஸமுத்ரக்கரையில், திருத்துறைப்பூண்டி தாலூக்காவில் இருக்கிறது. அதே ஜில்லாவில், ஆனால் இதற்கு ரொம்பவும் தள்ளி- கும்பகோணத்துக்குப் பக்கத்தில் பட்டீச்சவரம் இருக்கிறது. இப்படி ஒன்றுக்கொன்று தூரத்தில் உள்ள ஸ்தலங்களில் ஒரே வரலாறு சரடுமாதிரி இழையோடுகிறது என்றால், அதைப் பொய்யென்று சொல்ல முடியாது தானே ?

இந்த மூன்று ஊர்களிலும் ஈச்வரன் கோவிலில் **"ராமலிங்கம்"** என்ற பெயரில் லிங்கம் இருக்கிறது. மூன்றும் மஹாக்ஷேத்திரங்கள். ஸ்ரீராமசந்திர மூர்த்தியின் ஸம்பந்தமுள்ள க்ஷேத்திரங்கள் என்ற மகிமை அவற்றுக்கு இருக்கின்றன.

அதோடு கூட இந்த மூன்று இடங்களிலும் நாராயணவதாரமான ஸ்ரீராமன், லிங்கப் பிரதிஷ்டை பண்ணியிருக்கிறார் என்பதால், சைவ வைஷ்ணவ ஒற்று மைக்கும் இவை பலம் கொடுப்பதாக இருக்கின்றன. இதல்லாமல் மற்ற விசேஷங்களும் கொண்ட க்ஷேத்திரங் களாக இவை இருக்கின்றன. பாரத தேசத்தின் நாலு கோடிகளில் உள்ள நாலு முக்கிய க்ஷேத்திரங்களாக **"சார்-தாம்"** எனப்படும். சதுர்தாமங்களில் ராமேச்சுவரம் தான் தக்ஷிணத்துக்குரிய பெரிய க்ஷேத்ரமாக இருக்கிறது. வடக்கே **பதரிநாதம்,** மேற்கே **சோமநாதம்,** கிழக்கே பூரி ஜெகன்னாதம், தெற்கே **ராமநாதம்** என்பவையே "சார்தாம்." ஆகும். வேதாரண்யம் சுதந்திரப் போராட்டத்தின் போது உப்பு ஸத்தியாக்கிரஹம் நடந்த ஊர். "திரு மறைக்காடு" என்பதாக மூவர் தேவாரமும் பெற்ற ஸ்தலமாக இருக்கிறது. இங்கே வேதங்கள் ஈச்வரனைப் பூஜித்து திருக்காப்புச் செய்த கதவைத் திறக்கும் படியாக அப்பர் ஸ்வாமிகள் பதிகம் பாடினார். திருஞான ஸம்பந்தர் பாடல் பாடி அதை மறுபடி மூடும்படி செய்தார். பட்டீசுவரம் என்பது காமதேனுவின் நாலு பெண்களில் ஒன்றான பட்டி பூஜித்த க்ஷேத்திரம். மேலே திருஆவடுதுறையில் சொன்னது போல பசு பூஜித்த க்ஷேத்ரங்கள் அநேகம் உள்ளன. திரு ஆமாத்தூர் என்று பண்ருட்டியருகே அப்பரோடு ஸம்பந்தமுள்ள ஸ்தலம் இருக்கிறது. அங்கேயும் பசு பூஜித்து இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு ஊர் பட்டீச்வரம். ஞானசம்பந்தமூர்த்தி - குழந்தை - நல்ல வெயிலில் ஈச்வர நாமாவைச் சொல்லிக்கொண்டு ஆடிப்பாடிக் கொண்டு வருவதைப் பார்த்து ஈச்வரனே மனமுருகி பூதங்களைக் கொண்டு ஸுப்ரமண்ய அவதாரமான அந்தப் பிள்ளைக்கு ஊர் பூராவும் முத்துப் பந்தல் போட்டு வெயில் தெரியாமல் வரவழைத்துக் கொண்ட க்ஷேத்ரம் பட்டீச்வரம். நானூறு, நானூற்றைம்பது வருடங்களுக்கு முன்னால் தஞ்சாவூரி லிருந்து ஆண்டு

வந்த நாயக்க ராஜாக்களுக்கு மந்திரியாக இருந்த மஹான் கோவிந்த தீக்ஷிதருக்கு அந்த ஊரில் ஒரு தனியான வசீகரம் இருந்தது. இந்தக் கோயிலுக்கு அவர் விசேஷமாகத் திருப்பணிகள் செய்திருக் கிறார். அம்பாள் ஸந்நிதியில் அவருக்கும் அவருடைய பத்தினிக்கும் பிம்பங்கள் இருக்கின்றன.

ராமலிங்க ஸம்பந்தத்துக்காக இந்த மூன்று க்ஷேத்திரங்களைப் பற்றிச் சொல்லவந்தேன்.

அகஸ்தியர் திருக்கல்யாணக் காட்சி கண்ட இடம் என்று, ஒரேசம்பவத்தை பல க்ஷேத்ரங்களில் சொல்வது மாதிரி இல்லை, இந்த மூன்று ஸ்தலங்களில் உள்ள ராமலிங்கப் பிரதிஷ்டை. ஒவ்வொரு பிரதிஷ்டைக்கும் வெவ்வேறு காரணம் இருக்கிறது.

ராவணனைக் கொன்றதால் ராமருக்கு மூன்று தோஷங்கள் ஏற்பட்டன. முதலாவது, ராவணன் விச்ரவஸ் என்ற மஹரிஷியின் பிள்ளையானதால் பிராம்மணன் என்பது. அவனை ஸம்ஹாரம் செய்ததால் ராமருக்கு பிரம்மஹத்தி தோஷம் உண்டாயிற்று. **சிவலிங்கப் பிரதிஷ்டை பண்ணி, இந்த தோஷத்தை அவர் போக்கிக் கொண்ட இடம்தான் ராமேஸ்வரம்.**

இப்போது ராம ராவண யுத்தத்தை ஆரிய திராவிடச் சண்டை என்று சில பேர் சொல்வது அடியோடு தப்பு என்பதற்கு இதைவிட வேறு Proof (சான்று) வேண்டாம். ராமாயணத்தைப் பொய் என்று தள்ளினால் ராம ராவண யுத்தத்தையும் அடியோடு தள்ளத்தான் வேண்டும். இந்த யுத்தத்திற்கு மட்டும் Historical Basis (சரித்திர அடிப்படை) இருக்கிறது என்று சொல்லக் கூடாது. ராமாயணம் நிஜம் என்று ஒப்புக் கொண்டால், அதிலே ராவணனைப் பற்றி திரும்பத் திரும்ப "ரிஷிபுத்ரன், வேதாத்யயனம் பண்ணினவன், ஸாமகானம் செய்தே பரமேச்வரனை திருப்திப் படுத்தி கைலாஸத்துக்கு அடியிலிருந்து மீண்டவன்" என்றெல்லாம் சொல்லியிருப்பதையும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். 'எங்களுக்குப் பிடித்ததை மட்டும் ஒப்புக்கொள்வோம் பாக்கியெல்லாம் கட்டுக்கதை' என்றால் அது முறையான வாதத்தில் சேராது.

ராமேச்வரம்

ராமாயண புஸ்தகத்தில் எழுதி வைத்தது இருக்கட்டும். பிரத்யக்ஷமாகத் தெரிகிறமாதிரி, இந்த லோகத்திலேயே மிகப் பெரிய பிராகாரங்களோடு ராமேச்வரத்தில் கோவில் இருக்கிறது. சரித்திரக்காரர்களே ஒப்புக்கொள்கிறபடி ஆயிரக் கணக்கான வருஷங்களாக அங்கே ராமர் பிரம்மஹத்தி தோஷம் நீங்குவதற்காகப் பிரதிஷ்டை செய்த லிங்கம்என்று, ராமநாத ஸ்வாமியைச் சொல்லி தேசம் பூராவும் வழிபட்டு வந்திருக்கிறது. இதனால் ராவணன் பிராம்மணன் என்ற நம்பிக்கைக்கு மாறாகத் தமிழ்நாட்டில் பூர்விகர்கள் நினைத்ததேயில்லை என்று தெரிகிறது.

ராவணன் பிராம்மணன் என்பது மட்டும்மில்லை. அவன் மஹாவீரன் லோகங்களெல்லாம். கிடுகிடுவென்று நடுங்கும் படியாகப் பண்ணினான். கார்த்த வீர்யார்ஜுனனையும், வாலியையும் தவிர, தான் சண்டை போட்ட அத்தனை பேரையும் ஜயித்தவன். இப்படிப் பட்டவனைக் கொன்றதால் வீரஹத்தி தோஷமும் ஸ்ரீராமனுக்கு உண்டாயிற்று. இந்த தோஷத்துக்குப் பிராயசித்த மாகத்தான் **ராமர் வேதாரண்யத்திலே ராமலிங்கப் பிரதிஷ்டை செய்தார்.**

பிராம்மணன், வீரன் என்பது தவிர ராவணனுக் கென்று வேறு பெருமைகளும் உண்டு. அவன் நல்ல சிவபக்தன். வீணை வாசித்துப் பாடுவதில் நிபுணன். இம்மாதிரி நல்ல அம்சங்களை **'சாயை'** என்பார்கள். **'சாயை'** என்றால் ஒளி. நிழல், என்று இரண்டு அர்த்தமும் உண்டு. **'மரகதச் சாயை'** என்று மீனாக்ஷியைச் சொல்லுகிறபோது 'மரகதம் போன்ற ஒளி உடையவளே' என்று அர்த்தம். ஒளி என்பது பெருமை வாய்ந்த குணங்களையெல்லாம் குறிப்பிடும். சாயை (பெருமை) உடைய ராவணனை வதம் செய்ததால் ராமருக்கு 'சாயாஹத்தி' என்ற மூன்றாவது தோஷம் உண்டாயிற்று. இது தீர்வதற்காகத்தான் அவர் **பட்டீச்வரத்தில் ராமலிங்கப் பிரதிஷ்டை செய்து பூஜை பண்ணினார்.**

சாஸ்திரப்படி பார்த்தால் ராவணனை ஸம்ஹரித்த மநுஷ்யருக்கு **பிரம்மஹத்தி, வீரஹத்தி, சாயாஹத்தி**, என்ற மூன்று தோஷங்கள் ஏற்பட்டுத்தான் இருக்கவேண்டும். பதிதபாவனனான ராமச்சந்திர மூர்த்திக்கு வாஸ்தவத்தில் தோஷமே ஏற்பட முடியாதுதான். எவன் பெயரை ஸ்மரித்தாலே ஸமஸ்த மஹா பாபங்களும் ஓடிப்போகுமோ, அப்படிப்பட்ட தாரக நாமனான ராமன், தனக்கென்று பிராயச்சித்தம் பண்ணிக்கொள்ள வேண்டியதே இல்லைதான். ஆனாலும் அவர் இந்த பூலோகத்திலே, 'ஐடியல்' (ஆதரிச) மநுஷ்யராக வாழ்ந்து காட்ட வேண்டும் என்று தான் நரவேஷம் போட்டுக்கொண்டு வந்திருந்தார். ஒவ்வொரு சின்ன காரியத்துக்கும் கூட சாஸ்திரத்தில் என்ன சொல்லியிருக்கிறது என்று பார்த்துப் பார்த்தே அந்தப் பிரகாரம் பண்ணினார். சாஸ்திரதர்மங்களைத் துளிக்கூட வழு இல்லாமல் பண்ணிக் காட்டுவதில் ராமரை மிஞ்சி இன்னொருத்தர் கிடையாது. ராமாயணத்தில் எங்கே பார்த்தாலும் இந்த குணாதிசயத்தைப் பார்க்கிறோம்.

தம்மை ஸாதாரண மநுஷ்யராகவே வைத்துக்கொண்டு, அவர்களுக்கு சாஸ்திரத்தில் என்னென்ன தர்மங்கள், விதிகள்,பிராயச்சித்தங்கள் சொல்லியிருக் கின்றனவோ அவற்றையெல்லாம் விடாமல் செய்தார். ஆகவே ஒவ்வொரு அல்ப காரியத்துக்கும் கூட சாஸ்திரத்தைப் பார்த்து அதன்படி பண்ணின ராமன், இந்த மூன்று பெரிய தோஷங்களுக்கு மட்டும் பிராயச்சித்தம் பண்ணிக்கொள்ளாமல் இருந்திருப்பாரா? அப்படிச் சொல்வது கொஞ்சம் கூடப் பொருத்தமில்லை.அதனால் வால்மீகி இராமயணத்தில் இது என்னவோ விட்டுப்போய்விட்டது என்றுதான் ஆகிறது! அதிலே விட்டுப்போன குறையைத்தான் ராமேச்வரம், வேதாரண்யம், பட்டீச்வரம் ஆகிய ஊர்களுக்கான ஸ்தலபுராணங்கள் பூர்த்தி செய்கின்றன.

'இது ராமாயணத்தில் இல்லை; அதனால் ஏதோ அத்தைப் பாட்டிக் கதை' என்று நினைப்பது தப்பு. ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் குணத்தை நன்றாக ஆழ்ந்து அநுபவித்துப்பார்த்தால், அவர் இந்த மூன்று பிராயச் சித்தங்களை பண்ணிக் கொண்டுதான் இருப்பார்; அப்படிப் பண்ணினால்தான் அவர் ராமர். ஆகையால் ஏதோ காரணத்தால் ராமயணத்தில் விட்டுப்போன இந்த விஷயத்தைச் சொல்கிற ஸ்தலபுரணங்கள் தான் அவருடைய மனோபாவத்துக்கும், சரித்திரத்துக்கும் Conduct -க்கும் பூர்த்தியைத் தருகின்றன என்ற தெளிவு உண்டாகிறது. லோகத்தையெல்லாம் ஹிம்சித்து வந்தவனும், ஜகன் மாதாவான சீதையையே கெட்ட எண்ணத்தோடு மாறு வேஷத்தில் வந்து நீசமாகத் திருடிக் கொண்டு போனவனுமான ஒருத்தனை ஸம்ஹாரம் பண்ணி, அதனால் ஸமஸ்த ஜீவ ராசிகளும் சந்தோஷம் அடைந்து இவரைக் கொண்டாடும் சமயத்தில் அப்படிப்பட்ட சத்துருவிடத்தில் இருந்து மூன்று பெருமைகளை நினைத்து அவனைக் கொன்றதற்காகத் தம்மீதே மூன்று தோஷங்களை சுமத்திக் கொண்டு பிராயச் சித்தம் பண்ணிக் கொண்டதாக ஸ்ரீராமனைச் சொல்வதுதான் அவருடைய உத்தம ஸ்வபாவத்தையே ஒரு தூக்குத் தூக்கிப் பிரகாசிக்க வைக்கிறது. அவர் லிங்கப் பிரதிஷ்டை பண்ணினது, ஹரி, ஹர அபேதத்திற்கு ஒத்தாசை செய்கிறது."

நடமாடும் கடவுளாக நம்மிடையே வாழ்ந்த ஸ்ரீ மஹா பெரியவர், இன்று அரூபமாகி விட்டாலும், இராமேஸ்வர க்ஷேத்திரத்திலே அவர் அமைத்த மண்டபம் கம்பீரமாகத் திகழ்கிறது.

ராமேச்வர ஸ்ரீ சங்கர மண்டபம்

(மநுநீதிச் சோழன் காலத்திய ஆராய்ச்சிமணி சம்ரதாயத் துடன் கூடிய மணிமண்டபம், காஞ்சி முனிவரின் கட்டளைப் படி 1973- காலகட்டத்திலே ராமேஸ்வர வங்கக்கடல் அக்கினிதீர்த்தக் கரையிலே அமைக்கப்பட்டது)

ஸ்ரீசங்கர மண்டபத்திலே உள்ள குறிப்புகள் கீழே தரப்படுகின்றது.

இமயம் முதல் கன்யாகுமரி வரையில் உள்ள எல்லா ஆஸ்திகர்களும் அநேகமாய் வாழ்நாளில் ஒரு முறையாவது ராமேச்வரம் வந்து தரிசித்து ஸ்நானம் செய்யாமல் இரார். ராமேச்வரம் க்ஷேத்ரம் நான்கு ஆம்னாயங்களில் ஒரு ஆம்னாய க்ஷேத்ரமாகச் சொல்லப் பட்டிருக்கிறது. ஸ்ரீசங்கர பகவத் பாதர்கள் பாடியிருக்கும் த்வாதசஜோதிர்லிங்கக்ஷேத்ர ங்களில் தெற்குக் கோடி யிலிருக்கும் ராமநாத லிங்கத்தின் க்ஷேத்ரமாக விளங்குகிறது ராமேச்வரம். "சார்தாம்" என்று சொல்லப் படும் நான்கு ஸ்தானங்களிலும் ஒன்றாக இருக்கிறது. ராமேச்வரம். இந்த க்ஷேத்ரத்தில் அக்னி தீர்த்தக் கரையில் சுமார் 50 அடி உயரத்தில் நான்கு சிஷ்யர்களுடன் சலவைக்கற்களில் தயார் செய்யப்பட்ட ஸ்ரீ ஆதிசங்கர மூர்த்தியின் மண்டப விமானம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ ஆசார்யாள் அமர்ந்திருக்கும் பீடம் பூமியிலிருந்து 25 அடி உயரத்தில் உள்ளது. இந்த விமானத்திற்கு முன்பு கிழக்குப்பக்கத்தில் ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயமும் அவரது

இருபுறங்களிலும் (1) ஹிமயத்திலுள்ள கேதாரேச்வரர், (2) ஸௌராஷ்டிர மோமநாதர், (3) உஜ்ஜயினி மஹாகாளேச்வரர், (4) காசி விச்வநாதர், (5) பரளி வைத்தியநாதர், (6) டாகினி பீமேச்வரர், (7) ஔண்டு நாகேசர், (8) நர்மதா ஓங்காரேச்வரர், (9) எல்லோரா குஸ௺ருணேசர், (10) கௌதமீ தடத்தில் த்ரயம்பகேச்வரர், (11) ஸ்ரீசைலமல்லிகார்ஜ௺னர், (12) ராமேச்வர ராமநாதர் ஆகிய ஆதிசங்கரரால் பாடப்பெற்ற பன்னிரண்டு மஹாலிங்கங் களின் கர்ப்ப கிரஹங்கள் சிறிய அளவில் அந்தந்த க்ஷேத்ரத்தில் உள்ள விமானசில்பப்படியே சிறு விமான சித்ரங்களுடன் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீ ஆதிசங்கரரின் விமானத்தைச் சுற்றிலும் ஜனகமஹாராஜா யாக்ஞவல்கியர், சனத்குமாரர்-நாரத முனிவர், ரைக்வ முனிவர், யமதர்மராஜா நசிகேதஸ், சூதமாமுனிவர், - த்ருவர், ஜடபரதர், ப்ரஹ்லாதர், ஸப்த ரிஷி களுடன் வேடர் வால்மீகி, குச, லவர்களுடன் வால்மீகி முனிவர், ஸனத் ஸ௺ஜாதர், பீஷ்மர் தர்மபுத்ரர், வாசஸ்பதி மிச்ரர், வித்யாரண்ய முனிவர், அப்பய்ய தீக்ஷிதர், மதுஸ௺தனஸரஸ்வதி, கபீர்தாஸ், ஜயதேவர், போதேந்த்ராள், சதாசிவபிரம்மம், தியாகபிரம்மம், பட்டிணத்தார் - பத்ரகிரியார், சசிவர்ண போதர், சைதன்ய மஹா பிரபு, துளசிதாஸ், முதலான மஹான்களின் சிலா ரூபங்கள் பதிப்பிக்கப் பட்டிருக்கின்றன.

மற்றும் அங்கே விமானத்திற்குப் பின்பக்கத்தில் ஒரு நூல் நிலையமும், வெண்சலவைக் கல்லில் ஸரஸ்வதி மூர்த்தியும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. ஸரஸ்வதி தேவியின் கர்ப்ப கிரஹத்தைச் சுற்றி (1) விநாயகர் துதிக்கையில் விளங்கும் ஔவையார், (2) கண்ணகி (3) வள்ளுவரின் வாசுகி, (4) அருந்ததி,(5) அனுசூயை (6) அகஸ்தியரின் லோபாமுத்திரையாம் காவேரி, (7)மண்டோதரி, (8) ஸீதையுடன் திரிசடை, (9) சபரி, (10) சந்திரமதி, (11) தமயந்தி (12) கணவன் உலகைப்பார்க்க முடியாமல் இருந்ததால் தன் கண்களைக் கட்டிக் கொண்ட காந்தாரி, (13) ஆதிசங்கரரின் தாயார் ஆர்யாம்பிகை, (14) நெல்லிக்கனி கொடுத்த கனகதாரை, (15) மண்டன மிச்ரரின் பத்னி ஸரஸவாணி, (16) **'கொக்கென நினைத்தாயோ கொங்கணவா'** என்று கடிந்த பார்ப்பனி, (17) நளாயினி, (18) ஸாவித்ரி, (19) ச்யவனரின் ஸ௺கன்யை, (20) திலீப மஹாராஜனின் சுதக்ஷிணை, (21) துளசியைத் தராசில் வைத்துக் கண்ணனை மீட்ட ருக்மணி ஆகிய இந்தப் புண்யவதிகளின் மூர்த்திகளைச் சிலை செதுக்கி அபூர்வ முறையில் தயாரித்துப் பதிப்பிக்கப் பட்டிருக்கிறது.

கைலாய, வைகுந்தங்களோடு, திரிலோகசஞ்சாரியான நாரதர், வேதவியாசர், அகத்தியர், ஜாபாலி, சியவனர், தேவலர், ஆதிசங்கரர், அருணகிரி, கச்சியப்பர், குமரகுருபரர், பாம்பன் சுவாமிகள், இராமலிங்க அடிகள் போன்ற பல நூறு மகான்கள் இராமேஸ்வர ஸ்ரீசேதுநாதனை பூஜித்துள்ளனர்.

"எச்சம் யாவினும் தீர்த்தம் எவற்றிலும், அச்சம் நீங்கும் அளவையில் யோகிலும்
விச்சை நோன்பு பலவினும் மிக்கதால், முச்சகம் புகழ் சேதுவின் மூழ்கலே"

-சேதுபுராணம்

"முச்சகம்" -மூவுலகும்- புகழ்பெற்றது சேதுதீர்த்தம் என்பது கற்பனையல்ல; இராமேஸ்வர சேதுக்கரைக் கடல் நீர், சுமார் இரண்டு லட்ச மைல்கள் சுற்றிச் சுழன்று வருவதாகும்; அந்த நீரோட்டம், அமாவாசை பௌர்ணமி, அஷ்டமி, நவமி நாட்களில் அதிவேகம் பெறுகிறது. அந்த வேகத்திலே கடலின் அடியிலுள்ள மூலிகைகளின் ஜீவ அணுக்கள், கடலின் மேல்மட்டத்துக்கு வருகின்றன. அந்த ஜீவசத்துக்கள் அமிர்தத்துக்குச் சமமானவை.

அந்த அமிர்தத்திரள், இயற்கை நியதிப்படி... (இறை யருளால்) விஞ்ஞான ரீதியாகவும் உலகத்திலேயே சேதுக் கரையில் மட்டுமே ஒதுங்குகிறது.

காந்த சக்தியும், மருத்துவகுணமும், ஜீவ அணுக்களை போஷித்து வளர்க்கும் அதீதமகத்துவமும் கொண்டது. சேதுதீர்த்த புனிதஸ்நான கடல் தீர்த்த மாகும்.

பாதாள அமுதத்தோடு, கைலாயதீர்த்த மகா சக்தி யும் சங்கமமாகும் அற்புதத்தை அறிவோமா! சேதுக் கரையும், கன்னியாகுமரியும் பாரதத் தாயின் திருவடிகள் என்றால், திருமுடியாக விளங்குவது இமயத்துத் திருக்கைலாயமாகும்.

இந்திய நாட்டுக்கு, மலைமகளாகிய அன்னை பராசக்தி தந்த இயற்கை அரணாக விளங்கும் இமய மலைத்தொடரின் மொத்த நீளம் சுமார் 2000 மைல்கள்.

சேதுக்கரையிலிருந்து குறுக்கு வழியில் பார்த்தா லும், இமயமலையின் அடிவாரம் சுமார் 2500 மைல்கள்.

அடிவாரத்திலிருந்து திருக்கைலாய தரிசனம் பெற, 240 மைல்களை மலைமேல் நடந்தே கடந்தாகவேண்டும்.

திருக்கைலாயம் இருப்பது இன்றைய திபெத் நாடு. அந்நாட்டின் ஆளுமை உரிமை, தற்போது சீனாவிடம் உள்ளது.

அருளறமும் இறைபக்தியும் மிகுந்த நமது, காவல் துறை போலீஸ் கமிஷனர் **ஸ்ரீ ராஜகோபாலன்** அவர்கள் 1989,1990- ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் இரண்டு முறை திருக்கைலைக்குப் புனிதப் பயணம் சென்று திரும்பிய பெரும் புண்ணியர்.

"பதினாறு ஆயிரம் அடி உயரத்திற்கு மேல் பிராணவாயு இல்லாத இமயத்து இருபத்திரெண்டாயிரம் அடி உயரத்திலே, பக்தர்களைக் காப்பது, கயிலைநாதனின் பேரருளே" என்கிறார் ஸ்ரீராஜகோபாலன்.

இந்திய, சீன யுத்த கால முதல் தடை செய்யப் பட்டிருந்த திருக்கைலாய யாத்திரை, 1981-ல் தான் மீண்டும் தொடங்கியது. (சீன ஆக்ரமிப்பு, 20-10-1962 முதல் 21-11-62-வரை நீடித்தது)

கைலாசவாசன் எனும் அருஉருவான சிவப்பரம் பொருளை அங்கு நாம் வானோங்கி வளர்ந்துள்ள பனிமாமலையாகத்தான் காண் கிறோம். வானைமுட்டி

நிற்கும் திருக்கைலைச்சிகரத்தை மாநுடம்எப்படிக் கணக்கிடமுடியும்! கைலாயகிரியின் பிரதட்சணம் (வலம் வரும் தொலைவு) 52 கிலோமீட்டர்.

சூரிய வெளிச்சத்திற்கேற்ப நிறம்மாறுபடுகின்ற **"மானசரோவர் ஏரி"** 15-ஆயிரம் அடி உயரத்தில் அங்கே இருப்பதாகும். பதினைந்து மைல் நீளமும், முன்னூறு அடி ஆழமும் கொண்ட அந்த மானசரோவர் புனித ஏரிதான். சிவத்தின் **சக்தியாகும்.**

25-ஆயிரரூபாய் இருந்தால் தென்னாட்டவர் திருக் கைலையாத்திரையை பூர்த்தி செய்யலாம்; ஆனால் பணம் மட்டுமே போதாது, தீவிர பக்தி, திட ஆரோக்கியம், மாபெரும் துயரையும் தாங்கும் மனோவலிமை, முதலான அனைத்தும் உள்ளவர்கள் மட்டுமே அரசாங்கத்தாரரின் தீவிர சோதனைக்குப்பிறகு அங்கே போய்வர முடியும்.

அந்தத் திருக்கைலாயத்து மானசரோவர் தீர்த்தமும், நமது ராமேஸ்வரத்து சேதுதீர்த்தமும் சங்கமமாகும் ஒரே இடம் இராமேஸ்வரத்து **தனுஸ்கோடியாகும்.**

மூன்று சிகரங்களைக் கொண்ட இமயத்தில், மூன்றாவது பெரிய சிகரத்திலே... 22,980- அடி உயரத்தில் விஸ்வலிங்க ரூப வெள்ளிப் பனிமலையாக கைலைநாதன், உருவருவத்திருக்கோலத்திலே காட்சி தருகிறான்.

"ஊனக் கண்களுக்கு அடங்காத பேரருட்பெரும் காட்சி" என்று கூறுகிறார், 1937-ல் நேரில் சென்று கண்டு திருக்கைலாயத்திருமலையை வலம் வந்து பரவசமடைந்த சுவாமி, **அமரர் ஸ்ரீமத் சித்பவானந்தர்.**

சிலவருடங்களுக்கு முன்பு நமது வில்லாதி வில்லன் நடிகர் **ஸ்ரீநம்பியார்** (M.N.) சுவாமிகள் திருக் கைலாயம் சென்று திரும்பியது நமக்கெல்லாம் பெருமை தருவதாகும்.

நெருங்க முடியாத பிரம்மாண்டமான அந்த **சங்கர** லிங்க மலையின் இடது புறம் 18,600, அடி உயரத்தில் **கௌரி** குண்டமும் கோயிலும் உள்ளன. அதற்கும் கீழே 14,950 அடியில் பார்வதிதேவியின் அம்சமான மானசரோவர் ஏரி, 56-மைல் சுற்றளவிலே சமுத்திரம் போலத்ததும்பி வழிகிறது.

வானிலிருந்து உதிரும் வெள்ளிக் கமலங்களாக பனித்திரள் துகள் மலர்கள், சர்வசதா காலமும் மாமேரு இலிங்கத்தை ஸ்பரிசித்தபடி கௌரி குண்டத்தில் விழுந்து, மான சரோவரில் கலந்து, அங்கிருந்து **"பிரம்மபுத்திரா, சிந்து"** நதிகளாக இமாலய அடவியிலுள்ள (காடுகளில்) ஏராளமான சஞ்சீவி மூலிகைகளைத் தழுவியபடி கீழிறங்கி, அலகந்தா, பாகீரதி (கங்கை) என்று பலவேறு கிளை நதிகளாய் **அமர்நாத்** (13,500-அடி), **கேதார்நாத்** (11,000-அடி), **பத்திரிநாத்** (10,300-அடி) **பசுபதி நாத்** (நேபாளம்), வந்து **கங்கையாகி ரிஷிகேசம், ஹரித்துவார்** என்று பாய்ந்து, **திருவேணி சங்கமத்திற்குப்** பிறகு காசியைத் தழுவி ஒடிக்கடலிலே கலந்து., சேதுக்கரைக்கு வந்து தீர்த்தமாடும் அனைவருக்கும் இறையருளையும், நிறைவான ஆரோக்கியத்தையும் காலம் காலமாக வாரி வழங்குகிறது நமது சேது தீர்த்தம். பக்தி வழியிலே கங்கையும், காவிரியும் என்றோ, ஒன்றாகி விட்டன. மனித

சக்தியால் அந்த இரு பெருநதிகளும் இணையும் திட்டம்மட்டும் செயலாகி விட்டால், வடக்கே வெள்ள மேது; தெற்கே வறட்சியேது! நதி நீர்ப் புரட்சியேது!

இதையெல்லாம் பள்ளிப் பாடங்களிலே சொல்லிக் கொடுத்தால் என்ன? ஹூ ஹூம்! எற்கனவே இருந்த **"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"** என்பதையே **"சென்சார்"** செய்துவிட்ட நமது பாட நூற்குழுவிற்கு தீர்த்தமாவது, தெய்வமாவது!(இரண்டு ஆண்டுகளுக் குப்பிறகு **"இல்லறமல்லது நல்லறமன்று"** **"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"** என்பன, பெரும்அறப் போராட்டத்திற்கு பிறகு மீண்டும் பாடப்புத் தகங்களில் இணைக்கப்பட்டது)

64-சக்தி பீடத்தில் ஒன்றாகவும், 14 பாண்டிப் பதிகளில் ஏழாவதாகவும், பாரதத்திலுள்ள பன்னிரு ஜோதிர்லிங்க க்ஷேத்திரங்களில் தலையாயதுமான இராமேஸ்வர க்ஷேத்திர தீர்த்தங்கள் 64, 56, 48, 22, என்று பலவாறு கூறப்படு கின்றன.

அந்தநாளில் மாதக்கணக்கிலே க்ஷேத்ராடானம் நடை பெறும். இப்போது முடியுமா? காலத்திற்கும் - மனித நடைமுறை "கம்பியூட்டர்" வேகத்திற்கும் ஏற்றார் போல் தீர்த்த எண்களும் குறைந்து வருகின்றன போலும்!

இராமேஸ்வர யாத்திரையை **உப்பூர்** விநாயகரில் தொடங்கி, **தேவிப்பட்டினம்** (சூரியன்) **பாம்பன்** (பைரவர்) **இராமேஸ்வரம்** (அம்பாள்), **தனுஷ்கோடி** (சேது), **திருப்புல்லாணி** (மஹாவிஷ்ணு) **உத்தரகோச மங்கை** (நடராஜர்) என்று முடிக்க வேண்டுமாம். 36 நாட்கள் சேது நாட்டில் தங்கி இருந்து தினசரி தீர்த்தங்களில் மூழ்குவது, தெய்வங்களை தரிசிப்பதென்பது அணு விஞ்ஞான இந்த அவசர யுகத்தில் நடக்கிற காரியமா?

இராமேஸ்வர ஆலயத்தின் எதிரில் உள்ள அக்கினி தீர்த்தத்தில் (கடல்) மூழ்கியதும் **"கைடு"**களின் பின்னாலேயே சென்றால் இருபத்திரண்டு தீர்த்தங் களில் (கிணறுகள்) வைகை எக்ஸ்பிரஸ் **வேகத்திலே ஓடி ஆடி முடிக்கிறோம்.**

1 - மஹாலட்சுமி தீர்த்தம்,	**2 - சாவித்ரி தீர்த்தம்**	**3 - காயத்ரீ தீர்த்தம்**
4 - சரஸ்வதி தீர்த்தம்	**5 - சேதுமாதவ தீர்த்தம்**	**6 - கந்தமாதன தீர்த்தம்**
7 - கவாட்ச தீர்த்தம்	**8 கவப தீர்த்தம்**	**9 - நளன் தீர்த்தம்**
10 நீலன் தீர்த்தம்	**11 சங்க தீர்த்தம்**	**12 - சக்ர தீர்த்தம்**
13 - பிரம்மஹத்திவிமோசன.,	**14 சூரிய தீர்த்தம்**	**15 சந்திர தீர்த்தம்**
16 - கங்கா தீர்த்தம்	**17 - யமுனா தீர்த்தம்**	**18 - கயா தீர்த்தம்**
19 - சிவ தீர்த்தம்	**20 சத்தியாம்ருத தீர்த்தம்**	**21 - சர்வ தீர்த்தம்**

22 - வது வங்கக் கடலான கோடித் தீர்த்தமாகும்.

மெய்ஞானவிதிப்படி ஒவ்வொரு தீர்த்தமும் ஒவ்வொரு வினைகளைத் தீர்க்கவல்லது; விஞ்ஞான முறைப்படி., ஒவ்வொரு தீர்த்தத்திலும் மனிதாரோக்கி யத்துக்குத் தேவையான வெவ்வேறு ஜீவசத்துக்கள் மருத்துவக்குணங்கள், மகாசக்தி மின் அலைகளும் உள்ள தாக நிரூபணமாகியுள்ளது.

ஆத்மதிருப்திக்காக, நியதிப்படியான 48 தீர்த்தங் களை ஒரு முறை நினைத்துப்பார்ப்போமா? (ஆலயத்துள் இருப்பவற்றுள், மிகப்பெரிய திருக்குளமாய்த் ததும்பி நிற்பது சேதுமாதவ தீர்த்தமாகும்)

1- உப்பூர்விநாயகர்,		2 -நவபாஷாண தீர்த்தம் (தேவி பட்டினம்),	
3-சக்கர தீர்த்தம் (தர்மபுஷ்கரணி),		4-சக்கர தீர்த்தம் (திருப்புல்லாணி),	
5-வேதாள தீர்த்தம்,		6-பாபவினாச தீர்த்தம்,	
7- கபிதீர்த்தம் (பாம்பன்)		8- வைரவதீர்த்தம் (பாம்பன் கடலுள்),	
9-சீதாகுண்டதீர்த்தம்		10-வில்லூன்றித் தீர்த்தம் (கடலுள்)	
11-மங்கல	தீர்த்தம்,	12-இரணவிமோசன	தீர்த்தம்,
13-அமுதவாலி	"	14-லட்சு மண	"
15-ஸ்ரீராம	"	16-தனுஷ் கோடி	"
17-சடாம குட	"	18-சுக்ரீவ	"
19-பாண்டவ	"	20-பீம	"
21-அர்ஜுன	"	22-நகுல	"
23-சகாதேவ	"	24-திரௌபதி	"
25- பிரம்ம	"	26-பரசுராம	"
27-அநுமகுண்ட	"	28-அகஸ்திய	"
29-அக்னி	"	30- நாக	"
31-சேதுமாதவ	"	32-நளன்	"
33-நீலன்	"	34-கபி	"
35- கவாட்சி	"	36- கந்தமாதன	"
37-பிரம்மஹத்தி	"	38-சூர்ய புஷ்கரணி	"
39-சந்திரபுஷ்கரணி	"	40-கங்காய முனாகயா"	
41-சங்க.,	"	42-முனி	"
43-காயத்ரிசாவித்திரி	"	44-மகாலட்சுமி	"
45 -சிவ.,	"	46-சத்யாமுர்த	"
47-சர்வ	"	48-வது, கோடி தீர்த்தமாகும்.	







கோடிதீர்த்தம் ஆடியதோடு ஆலயத்துட் சென்று ஸ்ரீ ராமநாதசுவாமி, பர்வதவர்த்தினிதாயார், விஸ்வநாதர் விசாலாட்சியரோடு, பள்ளிகொண்டபெருமாள், சந்தானகணபதி, மகா கணபதி, முருகன், சேதுமாதவர், சபாபதி, ஆஞ்சநேயர், மகாலட்சுமி முதலான மூர்த்திகளின் சந்நிதிகளை தரிசித்த பின், அபூர்வமான நகைகளைக் கொண்ட கருவூலத்தையும் விருப்பமானவர்கள் பார்க்கலாம். (விஷேச அனுமதி பெற்று) அறுபத்துமூவரொடு... 542 பூஜாமூர்த்திகள் இங்கே உள்ளன; அதோடு வெள்ளி, தங்கத்தாலான கைலாய வாகனம், கமல, ஹம்ச, கருட, நந்தி..., பூத, காமதேனு., கற்பக., கிளி, சிம்ம., வாகனங்களோடு இரண்டிரடண்டாக உள்ள ரிஷப, யானை, குதிரை வாகனங்களோடு வெள்ளிரதம் இப்படியாக மிகப்பெரிய 16-வாகனங்கள். பள்ளியறைகளோடு ஒரே சங்கினுள் அடுத்தடுத்து இரு சங்குகளைக் கொண்ட தெய்வீகத் திரிசங்கும், 1008 அபிஷேகச் சங்குகளும் இராமேஸ்வரம் கோயிலிலே உள்ளன.

இராமேஸ்வர ஆலயத்துள் காண வேண்டிய முக்கிய இடங்கள் - சன்னிதிகள்

இராமநாதசுவாமி	சந்நிதி	விசுவநாதர்	சந்நிதி
விசாலாட்சி	சந்நிதி	உற்சவமூர்த்தி	சந்நிதி
அம்பாள்	சந்நிதி	பெருமாள்	சந்நிதி
சந்தான கணபதி	சந்நிதி	சுக்கிரவார சவுக்கை	சந்நிதி
மகாகணபதி	சந்நிதி	முருகர்	சந்நிதி
கருவூலம்	சந்நிதி	சேதுமாதவர்	சந்நிதி
இராமலிங்க பிரதிஷ்டை	சந்நிதி	சபாபதி	சந்நிதி
ஆஞ்சநேயர்	சந்நிதி	அனுப்பு மண்டபம்	
மகாலட்சுமி	சந்நிதி	கல்யாண மண்டபம் மற்றும் நந்தி	

ஸ்ரீராமலிங்கசுவாமியின் பரிவாரத் தெய்வங்களை யும், அம்பாள் **பர்வதவத்தினி**யையும் வணங்கி ஐயன் சந்நிதிக்கு வரும் போது ஒரு புதுமையான லிங்கத்தைச் சுட்டிக் காட்டுகிறார்கள்.

அதுதான் - **லவணலிங்கம் !**

புதுமையான இந்த லிங்கத்தை அலயத்துள். அமைத்தவர் ஸ்ரீவித்யா உபாசகர் களின் குருமகானான **ஸ்ரீபாஸ்கரராயர் !**

மூலிகைகளாலேயே ஆன ஒரு புதுமையான லிங்கம். ஒளி ஊடுருவும் ஸ்படிகமான தோற்றம். பனங்கற்கண்டுகளைப் பதித்தது போல் சொற சொறப்பான நெருடலான உருவம்.

பிராகாரத்தில் **'ஜோதிலிங்கம்'** என்ற பெயருடன் இன்னொரு லிங்கமும் இருக்கிறது.

உண்மையில் ராமர் பிரதிஷ்டை செய்த மூலலிங்கம் தான் ஜோதிர்லிங்கம். ஆயினும் இதையும் ஜோதிர்லிங்கம் என்று கூறுவதற்குக் காரணம் இருக்கிறது. இந்த லிங்கத்தை இங்கு பிரதிஷ்டை செய்தது விபீஷணன்.

இலங்கை வேந்தன் விபீஷணனின் பெருமை கூறி, அருள் ஒளியை வழங்கிக் கொண்டிருக்கிறது இந்த ஜோதிர்லிங்கம். (பிற்கால இலங்கை மன்னர் களின் பணியும் இவ்வாலயத்தில் உண்டு. 12-ம் நூற்றாண்டில் இலங்கை யை ஆண்ட பராக்கிரமபாகு, இந்தஆலயத்தில் திருப்பணிபல செய்திருக்கிறார்.

கங்கை நீரை எடுத்து கங்காபூஜை செய்வது போல் ராமபிரானே - மணல் லிங்கவடிவிலே சிவபெருமானைப் பிரதிஷ்டை செய்து வழிபட்ட பெருமைமிக்க ராமலிங்கமாகிய ஜோதிர்லிங்கத்தைத் தொழுது நிற்கிறோம்.

சிவபெருமானைப் பூஜை செய்யும் உரிமை

அகண்ட பாரதத்தின் ஏகநாயகனான ராமலிங்க சுவாமிக்கு பூஜை செய்வதிலும் ஒரு ஏகபாரதப் பாரம்பர்யப் பெருமை அமைந்திருக்கிறது.

அதாவது: ராமபிரான் பிரிதிஷ்டை செய்த அந்த லிங்கத்தைத் தொட்டு பூஜை செய்யும் பெருமை மூன்று பேருக்கு உண்டு. (அர்ச்சகர்கள் நீங்கலாக)

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடிப்பெரியவர்கள்.
ஜகத்குரு ஸ்ரீ சிருங்கேரி மகாசந்நிதானம்.

மூன்றாமவர்: **நேபாள மன்னர்.** (ராமபிரானின் ரவி குலத்து வாரிசு என்பதால் நேபாள அரசருக்கு இந்தப் பெருமை உண்டு.)

இங்கு நித்திய பூஜை செய்பவர்கள் கர்நாடக மாநிலத்து மறையவர்கள். (சிருங்கேரி மகாசந்நிதிதானத் திடம் சிவாச்சாரிய தீட்சை பெற்றுத்தான் ராமேஸ்வர ஆலயத்தில் பூஜை செய்யும் தகுதியைப் பெறுகிறார்கள்)

பூஜா முறைச் சிறப்பில் மட்டுமா பாரதமணத்தை ஏற்றியிருக்கிறார், ஜோதிர்லிங்கமாக எழுந்தருளியிருக்கும் மகாதேவர்?

இன்னும் ஓர் அரிய அம்சமும் உண்டு.

தினம் தோறும் ராமநாத சுவாமிக்கு கங்கைநீரால் தான் அபிஷேகம் நடக்கிறது. (அதற்காகவே ஒரு வடநாட்டு பக்தர்-கங்காஜலத்தை தவறாமல் மிகப்பெரும் ''டிரம்''களில் அனுப்பிக் கொண்டிருக்கிறாராம்.)

தீர்த்தப் பெருமை-

திருவருள் பெருமை-

பிரார்த்தனைப் பெருமை (ஆம்; குழந்தைப் பேறில்லாதவர்கள் மருத்துவ சக்தியும் - மகாதேவர் சக்தியும் மிக்க இந்தத் தீர்த்தங்களில் நீராடி, புத்திரப் பேறு பெறுகிறார்கள். நாகதோஷம் நீங்குவதற்கும் அரியதலம் இது).

இப்படி எண்ணிலாப் பெருமையுடன்,

யுக யுகாந்திரமாய் தேவ தேவர்களுக்கும், மகரிஷிகளுக்கும், மகான் களுக்கும், அருளாளர்களுக்கும் காட்சியருளி, கருணை பொழியும் அந்தக் கைலாயநாத ராமநாதனைக் கண் குளிரத் தரிசித்து நிற்கிறோம்.

''கோடி மாதவங்கள் செய்து குன்றினார் தம்மையெல்லாம், வீடவே சக்கரத்தால் எறிந்துபின் அன்பு கொண்டு, தேடிமால் செய்த கோயில் திருஇராமேஸ் வரத்தை, நாடிவாழ் நெஞ்சகமே நீ நன்னெறி யாகுமன்றே''.

- என்று அப்பர் பெருமான் பாடிய தேவாரம், ராமேஸ்வரத்து மூலவர் சந்நிதியில் அருளாய்க் கனிந்து இனிக்கக் காண்கிறோம்.

இராமேஸ்வர மூலவர் மணல் மேனியராதலால், இங்கு (இராமேஸ்வரத்தில்) மண்ணெல்லாம் லிங்கங்களே! அதனால் உழுவது, செக்காட்டுவது, சட்டி பானை செய்வது, சுடுவது முதலானவை தீவினுள் தவிர்க்கப்படு கின்றன.

ஆதிகாலத்தில் இராமேஸ்வரம் தீவாக இல்லை. பல நூறு வருடங்களுக்கு முன் ஏற்பட்ட புயலால், கரை கரைந்து போய் கடலால் சூழப்பட்டு, சங்கு வடிவத்தீவாக, வங்கக் கடல் நடுவே மிதந்து கொண்டிருக்கிறது. அந்தப் புனித ஆலய ஸ்தல வரலாறுகளை சுருக்கமாக அறிவோமா. கந்த மாதன, பர்வத இராமேஸ்வரத் திருத்தலம் தோன்றி **"பத்து சதுர்யுகம்"** ஆகிறது என்கிறது ஓர் புராணக்குறிப்பு.

"சதுர்யுகம்" என்பது எத்தனை ஆண்டுகள்? ஹிந்துமத நூல்களின் புள்ளி விபரப்படி... நமக்கு ஒரு வருஷம் தேவர்களின் ஒரு நாள். மானிடரின் 360 வருடங்கள், தேவர்களுக்கு ஒரு ஆண்டு.

12-ஆயிரம் தேவ ஆண்டுகள், ஆதவது 43,20,000 மாநுட வருடங்களு ஒரு சதுர்யுகம், பத்து சதுர்யுகங்களுக்கு எத்தனை மானுட வருடங்கள்? நீங்களே "கால்குலேட்டர்"வைத்துப் பெருக்கிப் பார்த்துக் கொள்ளுங்கள்!

"இந்தா விபிஷணா இலங்காபுரி ராஜ்யம்" என வழங்கிய ஸ்ரீராமர், சேதுக்கரையைப் பாதுகாப்பதற்காகவும்,. இராம லிங்கத்தைப் பராமரிப்பதற்காகவும், கங்கைக்கரைச் "சகோதரனாக விளங்கிய குகனின் வழிவந்த மாவீரர்களை நியமித்திருக்கிறார்.

அந்த மாவீரர்களே பின்னாளைய **சேதுபதி**களாவர்;

அருள்வளம் மிகுந்து இருந்த சேதுக்காவலரிடம், பொருள்வளம் இல்லாததால், வானமே கூரையாக வீற்றிருந்த ஸ்ரீராமலிங்கர், வடநாட்டுத் துறவி ஒருவரால் கொட்டகை நிழலைக் கண்டிருக்கிறார். அந்நாளிலே முதன் முதலாக.

தமிழகத்தில் பாண்டிய, சோழமன்னர்கள் கி.மு. ஆயிரமாயிர ஆண்டுகளுக்கு முற்பட்டவர்கள் என்பது வரலாறு. இருமன்னர்களிடத்திலும் அந்த நாள் முதலாகவே, செந்தமிழ் மறவர்களான சேதுக் காவலர்கள் போர்ப்படை, புறநகர் பாதுகாப்பாளர்களாக - வீரத்தளபதிகளாகப் பெரும்பங்கு ஏற்றிருந்தனர்.

கி.பி. பத்தாம் நூற்றாண்டிலே சிரத்தாபக்தியுள்ள மாவீர மறவர் பெருமக்களால், ஸ்ரீராமலிங்கருக்கு ஓர் சிறு ஆலயம் இராமேஸ்வரத் தீவிலே ஆகம பூர்வமாக அமைகிறது.

12-ம் நூற்றாண்டிலே (1173) பாண்டியருள் ஏற்பட்ட பிணக்கைத்தீர்த்து வைப்பதற்காக வந்த இலங்கை அரசன் **பராக்கிரமபாகு**. அம்பாள், சுவாமியர்க்கு மூலத்தானம் அமைத்ததோடு., தனது தாய்நாடு (இன்றைய ஸ்ரீலங்கா) திரும்பியதும் திருகோணமலைக்கற்களால் இராமேஸ்வர ஆலயத்திருப்பணியை மேலும் பொலிவுறச் செய்ததாக கல்வெட்டுகள் கூறுகின்றன.

13-ம் நூற்றாண்டு

பாண்டியரிடையே மீண்டும் பதவிச்சண்டை! மத்யஸ்தராக அப்போது வந்த சிங்கள மன்னர்கள், பாண்டிய மண்டலத்தையே "ஏப்ப" மிடத் திட்டமிட்டதும், சோழர்களால் அச்சதித்திட்டம் முறியடிக்கப்பட்டு மீண்டும் நாடு, பாண்டியருக்குக் கிடைத்திருக்கிறது.

14-ம் நூற்றாண்டு

பிற்காலப் பாண்டியரிடையே- வழக்கமான சிம்மாசனச் சண்டையால் பெரும் பிளவு ஏற்பட்டு ஒரு சாரார், **"சனி"** யனை "விலைக்கு" வாங்கியிருக்கிறார்கள் (நமக்கு நாமே முதல் எதிரிகள் என்பதை அன்றே சுந்தர, வீர, மதியிலாப்பாண்டிய ராஜ சகோதரர்கள், மதுரையிலே நிரூபித்திருக்கிறார்கள்!). அப்பத்தைப் பங்கிட வந்த குரங்காக, தமிழகத்துள் புகுந்த **"மாலிக்காபூர்", ருஸ்ருகான், உலூகான்** களால் சுமார் 50 ஆண்டுகள் (1311-1361) மதுரைப் பெருநாடு சிதைந்து சின்னா பின்னமானது. ஆலயச் செல்வங்கள் கோடி கோடியாக (டன் கணக்கிலே) கொள்ளை போனதும், மதுரை அங்கையற்கண்ணி மீனாட்சியம்மனின் ஆலயம், பல மாதங்கள் மூடிக் கிடந்ததும், இரண்டாம் கம்பணர்களால் தமிழ்நிலம் மீட்கப்பட்டதும் சரித்திரக் குறிப்புககளாகும்.

பேராசை வெறியர்களான துருக்க மன்னர்களின் சிம்ம சொப்பனமாக எழுந்தது 1336-ல் **விஜயநகர ஹிந்து சாம் ராஜ்யப் பேரரசு.**

இராமேஸ்வரம் உள்ளிட்ட தமிழ் நிலப் பகுதிகளை எழுபத்திரெண்டு பாளையங்களாக்கி... ஆங்காங்கே தகுதியான வீரர்களைக் கொண்டு நிர்வகிக்கச் செய்தனர் நாயக்க மன்னர்கள்.

விஜயநகர மன்னர்களின் பிரதிநிதிகளாய் மதுரையை நிர்வகிக்க வந்த **நாயக்கர்கள்...** விஜயநகர சாம்ராஜ்யப் பிடியிலிருந்து படிப்படியாக சுதேச மன்னர் களாகிறார்கள்.

72-பாளையக்காரருள் 34-பேர் வீரமறக் குலத்து முக்குலத்தோர். நாயக்கர் ஆட்சிக்கும், மறவர் குலத்துக்கும் பலகாரணங்களால் பகைப்பூசல் தொடர்ந்து வந்த இந்த கால கட்டத்திலே, முப்பத்திநான்கு வீரமறக்குலத்துப் பாளையக்கார்களுக் குள்ளேயே உட்பூசல், பங்காளிக் காய்ச்சல் தாயாதிச் சண்டைகள், பதவித் தகராறுகள் ஏற்பட்டன! இந்த நிலையிலே... **போர்த்துகீசிய, டச்சு, பிரிட்டிஷ் காரர்கள், ஒன்று பட்டு வாழத் தெரியாத வீரத் தமிழ் மக்களின் ஆலயச் செல்வங்களைக் கோலாகலமாகச் சூறையாடினர்.**

பாளையக்காரர்களை முன்னால் வைத்துக் கொண்டே, உரிமைப்போர் நடத்திய ஒரு பாளையக் காரனை தூக்கிலே போட்டனர்! கோபுரத்துக்கு வெடிவைப் பதாகக் கூறி, ஒரு மாவீரனின் உயிரைப்பறித்தனர்.!! இப்படி எத்தனை எத்தனையோ??? ஒன்றுபட்டு வாழத் தெரியாததால் நன்றி கெட்ட ஒரு சிலரைக் கைக்கூலிகளாக்கிக் கொண்டு தியாக வீரர் பலரைத் துவளவைத்தனர் விதேசிகள்.

இந்த இடத்திலே... "முக்குலத்து மூத்த குடிமக்கள்" எனும் சிறப்புப் பெற்ற தேவர் குலம்பற்றியஒரு கால வரிசையை அறிந்து கொண்டபிறகு ராமேஸ்வர ஆலய வரலாற்றைத் தொடர்வோமா.

சேர, சோழ, பாண்டியர்களான மூவேந்தர்களின் வம்சமாக உருவாகிப் பெருகிய.. **கள்ளர், மறவர், அகமுடையர்** ஆகிய "முக்குலத்தவர்" எனப்படும் வீரமறக் குலத்தவர்தான் ஆதியிலே சேதுவைக் காத்தவர்கள். இராமேஸ்வர, ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டியவர்கள்! ஜாதிக்குரிய வீரமும், சர்வபரித்தியாக ஞானமும், நீதிவழுவா நேர்மையும், நெறிமுறை தவராத சீர்மையும் கொண்ட முக்குலத்தோரிடையேமட்டும், இனப்பற்றும், எண்ணிப் பார்க்கும் பொறுமையும், சற்று விட்டுக் கொடுக்கும் மனோபாவமும் இருந்திருந்தால்... நமது சமுதாய அரங்கிலே அவர்கள் தான்... என்றென்றும் முன்னணியிலே இருந்திருப்பார்கள்!

"சிவகெங்கைச் சீமை" சீரழிந்ததற்கும், சீரான ஜமீன்கள் வாரிசற்றுப் போனதற்கும் அவர்களிடையே ஏற்பட்ட பங்காளிச் சண்டையும், உட்பூசல்களும் தான் காரணம் என்பதை வரலாறு உணர்த்துகின்றது.

தேவர் இனம் பற்றி... தேவர்குல திலகம், திருமுருக அம்சம், மாவீரரான **பசும்பொன் ஸ்ரீமுத்துராமலிங்கத்தேவர்** கூறிய சிலவரிகளை இங்கு காண்போம்.

"பறவைகளில் - ராஜாளி, வல்லூறு, வைரி; ஆகியவைகளும், மிருக ஜாதியிலே... புலி, சிங்கம், யாளி போன்றவைகளும்; தங்கள் இனத்தோடு கூடி வாழத் தெரியாமல், ஒன்றோடொன்று மோதி அழிவதைப் போல, பகுத்தறிவுடைய வீர மரபினர்கள்; (முக்குலத்தோர்) அகங்காரம், ஆணவம் முதலான முரண்பாடான குணங்களுக்கு அடிமையாகி... போட்டி, பொறாமையால் சேர்ந்து வாழத் தெரியாமல்... அழிவுப் பாதையில் இறங்கிவிடக் கூடாது..."

(தேவர் திருமகனின் உரைக் கோவையிலிருந்து மேற்படி வரிகளை எடுத்து எழுதியவர் ஸ்ரீ P.K. மூக்கையா தேவர்)

மதயானைத்தோற்றமும், மாவீர ஏற்றமும், அதேசமயம் குழந்தை உள்ளமும் கொண்ட அந்த நல்லவர்களான **தேவர் இனம்** தான் பின்னாளிலே **சேதுபதி மன்னர்**களாகப் பரிணமித்தது.

"ஸ்வெல்ஸ்" எனும் மேனாட்டு அறிஞர் தொகுத்தபடி ஆதிச்சேதுபதி மன்னர் சிலர்...

1.	ஆதி ரகுநாத	சேதுபதி.	2.	ஜயதுங்க ரகுநாத	சேதுபதி
3.	ஆதிவீர ரகுநாத	சேதுபதி	4.	வரகுண ரகுநாத	சேதுபதி
5.	குலோத்துங்க	சேதுபதி	6.	மார்த்தாண்ட பைரவ	சேதுபதி
7.	சுந்தரபாண்டிய	சேதுபதி	8.	காங்கேய ரகுநாத	சேதுபதி
9.	விஜயமுத்துராமலிங்க சேதுபதி				

"ஆ. சிங்காரவேலு முதலியார் 1890-ரில் தொகுத்த அபிதான சிந்தாமணி" நூலிலும், இராமநாதபுர சமஸ்தான "ரிக்கார்டு"களிலும் எடுக்கப்பட்ட சேது பதிகளின் காலப் பட்டியல், பின் வருமாறு அமைகிறது.



1.	"சடையக்கத்தேவர்" என்கிற உடையான்	சேதுபதி கி.பி.	1605-1621
2.	கூத்தன்	சேதுபதி	1621-1635
3.	தளவாய்	சேதுபதி	1635-1645
4.	ரகுநாததேவர் என்கிற திருமலைச்	சேதுபதி	1645-1670
5.	இராஜ சூரிய	சேதுபதி	1670-1673
6.	ஆதனரகுநாத	சேதுபதி	1673
7.	"கிழவன் சேதுபதி" எனப்புகழ்பெற்ற ரகுநாத	சேதுபதி	1673-1708
8.	"திருவுடைத்தேவர்" எனும், விஜயரகுநாத	சேதுபதி	1708-1723
9.	தண்டத்தேவர் எனும், சுந்தரேஸ்வர ரகுநாத	சேதுபதி	1724
10.	பவானிசங்கரத் தேவர்		1726-1728
11.	குமாரமுத்து விஜயரகுநாத	சேதுபதி	1728-1734
12.	முத்துக்குமார விஜயரகுநாத	சேதுபதி	1734-1747
13.	சேதுபதி இராக்கத்தேவர்		1747-1748
14.	"செல்லத்தேவர்" எனும் செல்வமுத்து விஜயரகுநாத	சேதுபதி	1748-1760
15.	முத்து ராமலிங்க	சேதுபதி	1760-1794
16.	ராணிமங்களேஸ்வரி நாச்சியார்		1803-1812
17.	அண்ணாசாமி	சேதுபதி	1812-1815
18.	சிவிணி முத்து வீரராகவ நாச்சியார்		1815-1829
19.	இராமசாமி	சேதுபதி	1829
20.	ராணிமங்களேஸ்வரி நாச்சியார்		1829-1838
21.	ராணி துரைராஜ் நாச்சியார்		1838-1845
22.	ராணிபர்வதவர்த்தினி நாச்சியார்		1845-1868
23.	முத்துராமலிங்க	சேதுபதி	1868-1873
24.	ராஜாபாஸ்கர	சேதுபதி	1873-1903
25.	ராஜராஜேஸ்வர (முத்துராமலிங்க)	சேதுபதி	1903-1931
26.	நாகநாத (சண்முகராஜேஸ்வர)	சேதுபதி	1931-1967
27.	இராமநாத	சேதுபதி	1967-1979
28.	ராணி இந்திரா தேவி		1979-முதல்...

எப்படியோ ஏற்பட்ட ஏதோ ஒரு சாபத்தால் ஆண்வாரிசற்றுப் போன இராமனாதபுரச் சேதுபதிகளின் வம்சாவளியிலே.. **"சின்னராணி"** என்ற பட்டத்துடன் இருப்பவர், சுமார் 26 வயதாகும் **பிரம்ம கிருஷ்ண ராஜேஸ்வரி** யாகும்.

இராமேஸ்வர ஆலய வரலாற்றிலே 15-ம் நூற்றாண்டு முதல், சேதுக் காவலர்களான சேதுபதிகளின் சிறப்புத் திருப்பணிகள் விரிவாகத் தொடர்ந்தன! ஓரிருவரிகளில் தொடர்கிறேன்.

15-ம் நூற்றாண்டு

1434-ல் இராமேஸ்வர ஆலய மேற்கு கோபுரத்தை அந்நாளைய சேதுக்காவலர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

1450-ல் மதுரை, நாகூர்தனவந்தர்களால்அம்பாள் சன்னிதிப் பிராகாரமும். ஆலயத்தின் சில பகுதிகளும் ஏற்படுகின்றன.

இந்த நூற்றாண்டின் இறுதியில் மதுரை மன்னர் கிருஷ்ணப்ப நாயக்கர் இராமேஸ்வரத், தீவுக்கு ஓர் பாலம்கட்டி, அது புயலால் அழிந்திருக்கிறது.

16-ம் நூற்றாண்டு

விஜயநகரம் வீழ்ச்சி பெற்று அழிந்த நிலை. (1565): தமிழகமெங்கும் பரவலாக நாயக்க மன்னர்களின் ஆட்சி வளர்ந்தோங்கியது. வைணவர்களாக இருந்தாலும் நாயக்க அரசர்கள், சைவ, சாக்த, கௌமாற ஆலயங்களிலும் ஏராளமான திருப்பணிகளை மேற்கொண் டனர். தென்னாட்டு "தாஜ்மஹால்" எனப்போற்றப்படும் மதுரை, திருமலை நாயக்கர் மஹாலும், மாரியம்மன் தெப்பக் குளமும், புதுமண்டபமும் காலத்தால் அழியாமல் இன்றும் லோகத்தின் கவனத்தில் பொலிவோடு நிலைத்திருக் கின்றன.

17-ம் நூற்றாண்டு

நாயக்க மன்னராட்சி நிழலிலே 1600 வரை பாளையக்காரர்களாக, ஜமீன்தார்களாக ஆங்காங்கே ஆட்சி செய்த சேது மன்னர்கள், வரலாற்றுப் புகழ்மிக்க அமைச்சரான **அரியநாத முதலி**யாருக்குப் பிறகு (1600), இயல்பான பதவிச் சண்டையில் ஈடுபட்டனர். சேதுச் சீமையிலே வழிப்பறியும் கொலையும், பழியும் மலிந்தன! பரங்கியரின் கடற்கரைக் கொள்ளையும் சேர்ந்து சேது நாட்டைச் சின்னாபின்னப் படுத்தின. இராமேஸ்வர யாத்திரீகர்கள் திண்டாடினர்! நிலமையைச் சமாளிப்பதற்காக... அப்போதைய மதுரை அரசர் **முத்து கிருஷ்ணப்ப நாயக்கர், முதலாம் சடையத் தேவர்** என்ற மாவீரரிடம் 1605-ல் சேதுச் சீமையின் முழு நிர்வாகத்தையும் ஒப்படைக்கிறார்.

1621-ல் சடையத் தேவர் காலமாகி, அவர் மகன் **கூத்தன் சேதுபதி**க்குப் பிறகு, 1635-ல் **தளவாய் சேதுபதி** மன்னராகிறார். அரசுரிமையற்ற **தம்பித்தேவர்** என்பவர் **மதுரை மன்னர் ஸ்ரீ திருமலை நாயக்க**ரிடம் கொடுத்த புகாரின் அடிப்படையில், ஆராய்ந்துபாராமல் அவசரப் பட்டு தளபதி **இராமப்பையன்** தலைமையில் சேது நாட்டைத் தாக்கி, தளவாயைக் கைது செய்து சிறையிலிட்டார் திருமலைநாயக்கர். (மேற்படி போரிலே தளவாயின் மருமகன் வன்னியத்தேவன் உயிர் கொடுத்த வீர சாகசப் போர்த்திறன் பற்றியும், புனித நாட்டுப் பற்றுடன் கூடிய புண்ணிய வரலாற்றை ஓர்திரைப்படமாகவே எடுக்கலாம்)

ராமப்பையனின கூலிப்படையையும், போர்த்துகீசிய நாட்டினரின் பீரங்கியுள்ள கப்பற்படைகளையும் ஒரே சமயத்தில் எதிர்த்துப் போரிட்ட வாள் வீரன் வன்னியத் தேவன், போர்முனையில் புலியெனப் பாய்ந்த மாவீரம் மகத்தானது. ஆனால் போரின் முடி,வு வீரத்திற்கு வெற்றியைத் தரவில்லை. அந்தப் போர் ஒப்பந்தத்தால் தொண்டியில் இருந்து பாம்பன் வரை ஏழு மதாகோயில்களும், **'உதியம்''** என்கிற பிரதான கோட்டையும் போர்த்துகீசியருக்குக் கிடைத்தன. ஏராள உயிர்சேதமும் மாவீர வன்னியத் தேவனின் வீரமரணமும் நிகழ்ந்த பிறகே, மதுரைத்திருமலை நாயக்கருக்குப் புரிகிறது. நியாயம் தளவாய் சேதுபதியின் பக்கமே என்று!

தவறை உணர்ந்த திருமலை மன்னர், மீண்டும் தளவாய் சேது பதியை சேது நாட்டின் மன்னராக்கினார்.

1644-ல் தளவாய் சேதுபதி, இரமேஸ்வர ஆலயத்தின் மேற்கு கோபுரத்தை புனர் நிம்மாணம் செய்து பொலிவுறச் செய்திருக்கிறார்.

1645-ல் பங்காளிக்காய்ச்சலால், பதவிவெறியால் தம்பித் தேவன் தளவா யைக் கொன்று விட, நாட்டில் பதட்டம் ஏற்பட்டு அமைதி அழிகிறது. உடனே சேது நாட்டை மூன்று சிறு நாடுகளாகத் 'துண்டு' போட்டு, இராமேஸ்வரம் உள்ளிட்ட இராம நாதபுரத்தை, பரம்பரை வாரிசான ரகுநாதத் தேவருக்கு வழங்கினார் திருமலை மன்னர்.

1656-ல் திருமலை அரசரின் முதுமையிலே திடீரென மதுரையைத்தாக்கிய மைசூர்ப் படையை, ரகுநாதத்தேவரின் வீரம் முறியடித்ததால், **''திருமலைச் சேதுபதி''** என்ற பட்டத்தைத் திருமலை மன்னரிடம் பெறுகிறார் சேதுக்காவலர்.

1662-ல் **''ரஷ்டம்கான்''** போன்ற துருக்கியரிட மிருந்து நாயக்க மன்னரைக் காத்த பெருமையும் சேதுபதி மன்னர்களுக்கு உண்டு.

1664-ல் சேது நாட்டுக் காவலரான ரகுநாத சேதுபதி யெனும் **''கிழவன் சேதுபதி''** யால் முக்குலத்தோருள் இணைப்பும் பிணைப்பும் ஏற்பட்டுப் பெரும் புகழ் விளைந்தது.

(முக்குலத்தோர்களான தேவர்குலப் பெருமக்கள் சிலர், இன்று கோடீஸ்வரர்களாகவும், தொழில் அதிபர்களாகவும், மாபெரும் பதவி களிலும் மகத்தான சாதனை புரிபவர்களாகவும் உள்ளனர். கிழவன் சேதுபதி போன்ற தமது மூதாதையர்களின் மாவீரத்தை மகத்தான தியாகத்தை - அந்த வரலாறுகளை - உலகம் அறியப்பரப்ப வேண்டாமா? மதுரை மில்லையனிலே **வி. ஆ. ஆண்டியப்பத் தேவர்** ''(தேவர் முரசு நிறுவனர்)'' போன்ற ... பொருளில்லாத அருளாளர்களுக்கு உதவியாவது, வரலாறு களை திரைப் படமாக, பள்ளிப் பாடமாக உருவாக்கி சமுதாயத்திற்கு வழங்கலாமே. தெய்வ, தேசபக்தி நிறைந்த திரு.ஆண்டியப்பத் தேவர், 77-வயதிலே 1995 - அக்டோபர் 30-ஆம் தேதி அமரராகிவிட்டார்)

1693-ல் ''பிரிட்டோ'' பாதிரியாரின் விஷமத்தனத்தால், நாடாள வேண்டிய தடியத்தேவர் கிறிஸ்தவரானதும். நாடு முழுவதையும் கிறிஸ்தவமயமாக்க அவர்கள் போட்ட திட்டமும் இறையருளால் தவிடுபொடியானது! மேற்படிகால கட்டத்திலே...

இலங்கையிலுள்ள திரிகோணமலை, திருக் கேதீஸ்வர ஆலயங்களை இடித்துக் கோட்டை கட்டிக் கொண்ட பரங்கியர், இராமேஸ்வர ஆலயத்தையும் சேதப் படுத்தினர்! அங்கிருந்த துறவி **ஸ்ரீதாயுமானவர்** முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மறவர் படையோடு, புறப்பட்டு, **"சாது மிரண்டால் ?"** என்னவாகும் என்பதைப் போர் முனையிலே காட்டி, பரங்கியரை வீழ்த்தி, இராமேஸ்வர ஆலயத்தையும் சேது நாட்டையும் மீட்டிருக்கிறார்.

18-ம் நூற்றாண்டு

1702-ல் கிழவன் சேதுபதி, அம்பாள் பர்வதவர்த்தினியின் சந்நிதியை விரிவுபடுத்தினார். மதுரை அரசி **ராணிமங்கம்மா** (1689-1706)வின் இறுதிக் காலத்தில் (1703) கிழவன்சேதுபதி சேதுநாட்டின் முழு உரிமை அரசராகிறார்.

1711-முதல் 1735-முடிய நான்கு சேதுபதிகள் ஆட்சியிலே குறிப்பிடத்தக்க ஆலய நிகழ்ச்சிகள் இல்லை.

1740-ல் **முத்து விஜயரகுநாத சேதுபதி** காலத்திலே ஆலயத்தின் மூன்றாம் பிராகார ஆரம்ப வேலை தொடங்கியது.

1763-ல் பட்டத்துக்கு வந்த **முத்துராமலிங்க சேதுபதி**யால் முப்பது ஆண்டுகளின் அசுரசாதனையின் பூர்த்தியாக 1794-ல் உலகப்புகழ் பெற்ற இராமேஸ்வர ஆலயத்தின் மூன்றாம் பிராகாரம், பூர்த்தி பெறுகிறது.

3850-அடி நீளமும், 60-அடி உயரமும், 20-அடி அகலமும் கொண்டு... 1212, தூண்களால் ஆன மூன்றாம் பிராகாரம் இந்திய ஆலய அமைப்பின் ஓர் அற்புதமாகவே இன்றும் விளங்கி வருகிறது.

"சேதுபதிகளுக்கு பன்னிரு தலைமுறைகளுக்கு முறையான ஆண் வாரிசு ஏற்படாது" என்பது தாயுமானவர் சாபமாம்! சுவீகார வாரிசுகளே பெரும் பாலான சேதுபதிகள்; சுவீகாரம் அமையாதபோது **நாச்சியார்களே** (ராணியர்) ஆட்சி புரிந்திருக்கிறார்கள்; 18-ம் நூற்றாண்டின் இறுதிக்காலம் அப்படிப்பட்டது. அதோடு... பிரிட்டிஷ் ஆட்சியும் பாரதமெங்கிலும் பரவலாகி விடவே, சேதுசமஸ்தானம், அளவிலும் வளத்திலும், ஆள்வோர் நலத்திலும் குறுகிக் கொண்டே வந்தது.

19-ம் நூற்றாண்டு

1803-முதல், சேதுநாட்டு வாரிசு பலவீனத்தால் இராமேஸ்வர ஆலயம் அரச குடும்பத்தின் கண்காணிப்பை படிப்படியாக இழக்கிறது; ஆலயத்தில் இருந்த பண்டாரங்களின் பாடு கொண்டாட்டமாகிறது. ஆலய உரிமைகளை அரச குடும்பம் அறவே இழக்கின்ற கொடிய நிலை ஏற்படுகிறது!!

1832-வரை நீடித்த அந்த நிலை 1833-ல் மதுரை நகர வெள்ளைக்கார நீதிபதியின் பார்வைக்கு வந்து 1853-ல் ஆலயத்திற்கு அரசாங்க (வெள்ளையர்) மேற் பார்வைக்குழு ஒன்று ஏற்படுகிறது.

அரசர்களுக்குப் பிறகு நமது நாட்டு ஆலயப்பணிகளை இதய பூர்வமான சிரத்தாபக்தியுடன் மேற்கொண்டவர்கள், **நகரத்தார் (செட்டியார்)** பெருமக்கள்.

தேவகோட்டை ஜமீன் **A.L.A.R. அருணாசலம் செட்டியாருக்கும்**, அப்போதைய சேதுமன்னர் **பாஸ்கர சேதுபதிக்கும்** (1873-1903) நட்பை ஏற்படுத்தினார் இராமேஸ்வர ஸ்ரீஇராமநாதர்.

1893-ல் லண்டன் **"பிரிவிகௌன்சில்"** தீர்ப்பின்படி ஆலய முழு உரிமையும் மன்னர் பாஸ்கர சேதுபதிக்கு வருகிறது.

இவரது காலத்திலேதான் இராமநாதபுரத்திலே கோட்டை (அரண்மனை) கட்டப்பட்டது.

(அதுவரை ராமநாதபுரத்திற்கு மேற்கே பத்து மைல் தூரத்தில்உள்ள **"போகணர்"** என்ற சிறு குடியிருப்புப் பகுதியே சேதுபதிகளின் தலைநகராக தங்குமிடமாக இருந்துவந்தது).

1894-ல் அரசர் பாஸ்கரசேதுபதியின் ஒத்துழைப் போடு A.L.A.R. குடும்பத்தினர், காலத்தால் ஏற்பட்ட இராமேஸ்வர ஆலயப் பழுதுகளை நீக்கி,, 126-அடி கிழக்கு கோபுரத்தையும் பூர்த்தி செய்வதற்கான திருப்பணியைத் தொடங்கினார்கள்.

மன்னர் பாஸ்கர சேதுபதி எனும் போது, அவரது முதல் அமைச்சராகவும், நிழலாகவும் இறுதிவரை விளங்கிய அவரது ஒன்று விட்ட சகோதரர், வள்ளல் **பாண்டியத்துரைத்தேவரும்** நினைவில் தோன்றுவார். செக்கிழுத்த செம்மல் **வ.உ.சி.யின்** சுதேசிக்கப்பல் கம்பெனியின் பெரும் பங்கு (ஒரு லட்ச ரூபாய்) ஸ்ரீ பாண்டித் துரைத்தேவருடையதாகும்.

1897-ல் இராமேஸ்வரத்துக்கு வந்த வங்க மாநில ஆன்மிகச் சிம்மம் **சுவாமி ஸ்ரீவிவேகானந்தரின்** உலகப்புகழ் **"சிகாகோ"** பயணத்துக்குத் தூண்டு கோலாக இருந்து அயராதுபாடுபட்டு, 1893 ஆம் ஆண்டு காலகட்டத்திலே ஸ்ரீவிவேகானந் தரை அமெரிக்க நாட்டில் நடந்த சர்வமத மாநாட்டில் கலந்து கொள்ள முழு பிரயாண ஏற்பாடுகளைச் செய்து, வெற்றி வீரராக இந்தியா திரும்பிய சுவாமியை வரவேற்றுப் பூரித்தவர்கள் பாஸ்கர சேதுபதியும், பாண்டித்துரைத்தேவரு மாவார்கள்.

இராமநாதபுர சமஸ்தானமானது....., **வேம்பத்தூர் சிலேடைப்புலி பிச்சுவையர்** போன்ற பல நூறு புலவர்களை ஆதரித்துத் தமிழைப் போற்றி வந்தது: ஆங்கில மொழியின் அதிகார, ஆவேசக் குறுக்கீட்டால், நலிந்து போன தமிழைப்பற்றி பாஸ்கர, பாண்டித்துரைத் தேவர்கள் இருவரும் சிந்தித்தனர். 1893-ஜனவரி 14-ம் தேதி ஸ்ரீபாஸ்கர சேதுபதியவர்கள் தனது டைரியில் எழுதியிருக்கிறார்... **"எப்படியும் மீண்டும் ஒரு தமிழ்ச்சங்கம் ஏற்படுத்த வேண்டும்"** என்று.

20-ம் நூற்றாண்டிலே இராமேஸ்வரம் ?

14.9.1901 ல் பாஸ்கர சேதுபதி, பாண்டியத்துரைத் தேவர்களின், இடைவிடா முயற்சியால் மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் தோன்றியது. இதே ஆண்டில் இராமேஸ்வர ஆலய நிர்வாகத்தை AL.AR. அருணாசலம் செட்டியார் ஏற்கிறார்.

1902-ல் மதுரை-மண்டபம் ரயில் போக்குவரத்துக்கான பாதை ஏற்பட்டது. 1903-ல் பாஸ்கர சேதுபதியை அடுத்து, முத்துராமலிங்க சேதுபதி 1903-ல் பட்டத்திற்கு வருகிறார். 1931-வரை இராமேஸ்வர ஆலயத்தைக் கண்களைப்போல் பேணிக் காக்கின்றார்.

உலகிலேயே நீண்ட பிராகாரமாகிய இராமேஸ்ரம் கோயிலின் மூன்றாம் பிராகாரம், முக்கால் மைல் (3850-அடிகள்) நீளமுள்ளது. அற்புதச் சிற்ப அமைப்புடன் 1212-தூண்கள்! நூலிழை கூடப்பிசகாத நுண்ணிய நுணுக்கக் கட்டுமானக் கட்டமைப்பு! அதைத்திட்டமிட்டு உருவாக்கியவர், ஸ்ரீமுத்துராமலிங்க சேதுபதி.

கடல் சூழ்ந்த தீவுக்குள் எப்படி அத்தனை உயர, அகல கருங்கல் மலைகள் கொண்டு வரப்பட்டிருக்கும் ? வியப்போ வியப்பு! ஜகம் புகழ் மஹா சாதனை!

முப்பது ஆண்டுகளில் உலகமகா அதிசய மூன்றாம் பிரகாரம் இராமேஸ்வரத்திலே அந்த நாளிலே- உருவாகியிருக்கிறது! ஆனால் கம்ப்யூட்டர் விஞ்ஞான பகாசுர சாதனங்களும், ராட்சதபுல்டோசர்களும், நவீன கிரேன்களும் நிறைந்து போன இந்த நாளிலே... ?

30.4.1995 தினமணி நாளிதழிலே **"நத்தை வேகத்திலே நகரும் பணி"** என்ற தலைப்பிலே வெளிவந்த (எழுதியவர் ஸ்ரீ S.விஸ்வநாதன்) கட்டுரையிலே... சில வரிகளைப் பாருங்கள்!..

30 ஆண்டும் 33 ஆண்டும்

"புகழ்பெற்ற மூன்றாம் பிராகாரத்தை, நவீன வசதியில்லாத காலத்தில் 30 ஆண்டுகளில் கட்டி முடித்துள்ளார் முத்துராமலிங்க சேதுபதி. மூன்றாம் பிராகாரத்தை விட சிறியதான இரண்டாம் பிராகாரம் கட்டத் துவங்கி, 33- ஆண்டுகளாகியும் 50 சதவிகித வேலைகள் கூட இதுவரை பூர்த்தியாகவில்லை.

சேதுபதி மண்டபம் அருகே அம்பாள் சன்னதி முன்பாக பிரம்மாண்ட மண்டபம் கட்டுவதற்கு 1977 ஆம் ஆண்டு பிப்ரவரி 16 தேதி காஞ்சி **ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்** அடிக்கல் நாட்டினார். இதற்கான முழுச் செலவையும் தொழிலதிபர் **பிர்லா** ஏற்றுக் கொண்டார். அதற்கான தொகையை தேவஸ்தானத்திடம் செலுத்தினார். ஆனால் 18 ஆண்டுகள் உருண்டோடியும், இந்தக் கட்டுமானப் பணி இன்று வரை துவக்கப்படவில்லை.

ஆரம்பத்தில் அம்பாள் மண்டபத்தைத் தாங்களே கட்டித் தருவதாக பிர்லா கூறியபோது "நீங்கள் கட்டித் தரவேண்டாம். அதற்கான நிதியை மட்டும்

கொடுத்தால் நாங்களே கட்டி முடிக்கிறோம்." என்று ஆலய நிர்வாகம் கூறிவிட்டது. பிர்லாவும் நிதியை வழங்கினார். அவர் கொடுத்த தொகை வங்கியின் வைப்பு நிதியில் கிடப்பில் கிடக்கிறது.

ராஜகோபுரத்தில் பழுது

அருள்மிகு ராமநாத சுவாமி ஆலயத்தின் கிழக்கு பகுதியில் 126 அடி உயரமுள்ள ராஜகோபுரம் உள்ளது.

இக்கோபுரத்தில் பல இடங்களில் செடிகள் வளர்ந்து நிர்வாகத்தின் **'பாரமரிப்புத் திற'**னுக்குச் சாட்சியம் அளிக்கின்றன. செடிகளின் வேர்கள் ஊடுருவி யதால் கோபுரத்தில் லேசான விரிசல்கள் ஏற்பட்டுள்ளன. செடிகளையும், வேரையும் பிடுங்கி ஏறியக் கூட ஆலய நிர்வாகத்துக்கு அவகாசம் இல்லை.

கோபுரத்திலுள்ள அற்புத அபூர்வ பற்பல சிற்பங்கள் ஊனமடைந்துள்ளன. கை, கால் உடைந்த நிலையில் அந்தச் சிற்பங்கள் அவலட்சணமாக் காட்சியளிக்கின்றன.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வட இந்தியாவிலிருந்து வந்த தொழிலதிபர்கள் சிலர், ஆலய நிர்வாக அதிகாரியை அணுகி, ராஜகோபுரத்தைச் சீரமைக்கவும், வர்ணமிடவும் பெரும் தொகை அளிப்பதாகக் கூறினார்கள். அவர்களது ஆர்வத்தை ஆலய நிர்வாகம் அலட்சியம் செய்தது. அதன் பிறகு ராஜகோபுரத்தைப் பழுதுபார்க்க ஆலய நிர்வாகமும் மறந்துவிட்டது.

தமிழக முதல்வர் ஜெயலலிதா கடந்த ஆண்டு இராமேஸ்வர ஆலய இரு கோபுரங்களையும் கட்டப்போவதாக அறிவித்தார். அடிக்கல் நாட்டு விழாவிற்குத் தேதியும் குறிக்கப்பட்டது. பின்னர் ஏதோ சாக்கு போக்கு சொல்லி, அடிக்கல் நாட்டு விழாவை ஒத்தி வைத்தனர்.

திட்டப்படி நடக்காத கும்பாபிஷேகம்

பனிரெண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்த வேண்டிய கும்பாபிஷேகம், 1975 பிப்ரவரிக்குப் பிறகு நடத்தப்படவில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளில் கும்பாபிஷேகம் நடத்த மூன்று முறை திட்டமிட்டனர். திட்டமிட்டபடி அதை நடத்த முடியாததற்கு ஆலய நிர்வாகத்தால் சரியான காரணம் கூட கூற முடியவில்லை.

கிழக்கு பிராகராத்தின் வடகிழக்கு மூலையில் மதில் சுவர் அருகே தீர்த்தக் கிணறுகள் உள்ளன. மதில் சுவரின் வெளிப்பகுதியில் குடியிருப்போர் **'செப்டிக் டாங்க்'** அமைத்துள்ளதால், கழிவு நீர், தீர்த்தக் கிணறுகளுக்குச் செல்லும் வாய்ப்பு உள்ளது. ஆலய மதில் சுவரையொட்டி செப்டிக் டாங்க் அமைக்க, நகரிய நிர்வாகம் அனுமதி யளித்தது எப்படி என்பது புதிராக உள்ளது.

ஆலய பிராகாரங்களில் 22 தீர்த்தக் கிணறுகளில் காலைமுதல், மாலை வரை பக்தர்கள் நீராடுவதால் ஆலயத்தின் தரைப் பகுதி ஈரத்துடன் பாசி படிந்துள் ளது. அதனால் முதியவர்கள் வழுக்கி விழுகின்றனர். இதைத் தவிர்க்க தொழில் நுட்ப வல்லுநர்கள் கூறிய ஆலோசனைகள், கிடப்பில் போடப்பட்டுள்ளன.

இத்தனைப் பிரச்சினைகளையும் மறந்து விட்ட அறங்காவல் குழு உறுப்பினர்கள், தேவையற்ற விஷயங் களிலேயே அதிக அக்கறை காட்டுகின்றனர். இறை அச்சமும் பக்தியும் கொண்ட ஆன்மிக அன்பர் களை அறங்காவலர் குழுவில் நியமிக்காத வரை இந்த ஆலயத்தில் திருப்பணியும் நடக்கப் போவ தில்லை அறப்பணியும் நடக்கப் போவதில்லை என்கிறார்கள் ஸ்ரீராம சிவபக்தர்கள்".

வருவாய் அதிகமுள்ள பேராலாயங்கள் பலவற்றிலும் இதே "கதி" தான்!

"அரசன் அன்று வெல்வான்! தெய்வம் நின்று வெல்லும்"

எனும் முதுமொழிக்கேற்ப தெய்வங்களே வந்து நின்றுதான், இன்றைய பேராசை பிடித்த பெரும்பான்மை (ஆலய நிர்வாக மானுடத்தை வெல்ல வேண்டும்! எனக் கூறியபடி இராமேஸ்வரம் கோயிலின் காலக்கணக்குத் தொடருக்கு மீண்டும் வருகிறேன்.

1904-ல் ராமேஸ்வர கிழக்கு கோபுரம் பூர்த்தியாகி கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

1908-ல் மண்டபம் ரயில்பாதை ஏற்பட்டது; 1911-ல் பாம்பன்பாலம் வேலை ஆரம்பம்; 1913-ல் கடல் தாண்டி தனுஷ்கோடி வரை ஓடியது.

சேதுபதிகள், AL.AR குடும்பம் உள்ளிட்ட ஐவர் குழுவிடம் ஆலய நிர்வாகம் ஒப்படைக்கபடுகிறது. பிரதேச வாரியாகத் தருமச் சத்திரங்கள் ஏற்படல்.

மஹா கும்பாபிஷேகங்கள்!

காலம் காலமாக ஸ்ரீ இராமநாதரை வழிபட்டு வரும் நேபாள, தாய்லாந்து மன்னர்களோடு, மைசூர், திருவாங்கூர் அரசர்களின் நன்கொடைகளோடு பெரிய அளவிலான திருப்பணிகள் தொடங்கி, 1912-ல் கும்பாபிஷேகம் நடந்துள்ளது.

கடல் அரிப்பால் ஆலயத்தின் தளங்கள் பாதிக்கப்பட்டன; அம்பா சமுத்திரத் திலிருந்து கருங்கற்களைக் கொண்டு வந்து 25 லட்ச ரூபாய் செலவிலே ஆலய விரிவாக்கமும் செய்து, நகரத்தாரும் AL.AR குடும்பத்தினரும் 1925-ல் கும்பாபி ஷேகத்தை நடத்தினர்.

1631-முத்து ராமலிங்க சேதுபதியை அடுத்து வந்த சண்முகராஜேஸ்வர நாகநாத சேதுபதி (1931-1967)கள் மேற்கொண்ட ஆர்வத்தால் இராமேஸ்வரம் ஜகப் பிரசித்தமானது. யாத்திரீகர் தொகை பல மடங்கானது.

ஏராளமான ஆங்கிலேயே கவர்னர்கள், பிரபுக்களோடு தத்துவமேதை டாக் டர் **S.ராதாகிருஷ்ணன்** போன்ற பேரறிஞர்கள் இராமேஸ்வர ஆலயச் சிறப்பினைப் புகழ்ந்து பாராட்டியுள்ளார்கள். **"இந்தியாவிலேயே சிறந்த ஆலயம்" என்று தேர்ந் தெடுத்து 1935-ல் பிரிட்டிஷ்அரசு, இராமேஸ்வர ஆலயப் படத்துடன் கூடிய விசேஷ தபால்தலையை வெளியிட்டது.**

865-அடிநீளமும், 657-அடி அகலமும் கொண்ட இராமேஸ்வர ஆலயத்திற்கு 1946-ல் மிகப்பெரிய அளவிலான கும்பாபிஷேகம் நடை பெற்றது.

1947-இந்திய நாட்டு விடுதலைக்குப்பிறகு, 1951-ல் வந்த **இனாம் ஒழிப்பு**ச்சட்டத்தால் 67-கிராமங்களை, அதன் வருவாய்களை இராமேஸ்வர ஆலயம் இழந்தது. குடியரசு நாடாகிறது நமது பாரதம்.

ஜமீன் ஒழிப்பு, இனாம் ஒழிப்பு, நில உடமைச் சட்ட மாற்றம் முதலான வற்றால் அரண்மனை கஜானாக்கள் காலியாகிவிடவே.. தெய்விகத்தையும், தேசியத்தையும், மொழி, கலைபண்பாடுகளையும் தமிழகத்திலே வளர்த்த சேது பதிகள் போன்ற நல்ல தமிழ் ராஜாக்கள், குடும்ப (அரண்மனை பராமரிப்பு) செலவுக்கே கோர்ட் ஏறவேண்டிய அவலங்களுக்கு ஆளானபின்பும்... ஐம்பதுக்கும் மேலான ஆலயங்களையும், முப்பதுக்கும் மேலான அறச்சாலைகளையும் (தர்ம சத்திரங்கள்) சேதுக்காவலரின் இன்றைய "மாதர் சந்ததி" சீராக நிர்வகித்து வருவது குறிப்பிடத்தக்க தாகும், நினைத்துக் கும்பிட வேண்டியதுமாகும்.

1959-ல் ஏற்பட்ட இந்துசமய அறநிலைய பாதுகாப்பு இலாக்காவின் கண்காணிப்பிலே, ராமேஸ்வர ஆலய நிர்வாகம் செயல் படத் தொடங்குகிறது.

1964-ல் ஏற்பட்ட பெரும் புயலால் தனுஸ்கோடி ரயில்பாதை அழிந்து மணல் மேடானது. (இப்போது சேது கரைக்கு ஜீப்பிலும், படகிலும்தான் போக முடியும்) மீண்டும் ரயில் பாதை தனுஷ்கோடியிலே வேண்டும்! வேண்டும்!! வேண்டும்!!!

சட்டம் என்கிற இருட்டைச் சாதகமாக்கிக் கொண்டு **கோயில்நிலங்களை "யார்யாரோ" மேய்ந்து கொண்டிருக்க, உண்டியலை மட்டுமே நம்பிக்கிடக்கும் இராமேஸ்வர ஆலயத்தின் வருவாய் 5-லட்ச ரூபாய்கள் தான்!**

1967-முதல் 1990-வரையில் உண்டியல் வருவாய் மேற்படி இலக்கைத்தாண்டவேயில்லை! ஆனால் குறைந் துள்ளது!

1990-ல் சுமார் நான்கு லட்சமாம்! விந்தை தான்!!

உள்துறையில் 150, வெளித்துறையில் 200 என்று ஆலய நிரந்தர ஊழியர் தொகை சுமார் முன்னூறு அளவிலே உள்ளது. 'கால்டஜன், கால்டஜன்' பேஷ்கார் சூப்ரெண்டுகள்!!

கிட்டத்தட்ட ஒண்ணேகால் லட்சமாக ஆலயத்தின் சம்பளப்பட்டுவாடா நடக்கிறதாம்!

இதர பேராலயங்களைப்போலவே டிக்கெட் கலெக்ஷன் (கோடி அர்ச்சனை) இங்கேயும் உண்டு!

அரசுக் காரியாலயங்களைப் போலவே ஆலய அலுவலகங்களும் இயங்கத்தொடங்குவது எந்த அளவுக்கு ஏற்புடையது? இராமலிங்கரே அறிவார்!

சேதுபதிகள் "எனும் கவசங்கள் இல்லாமல் போனது, ராமேஸ்வர ஆலயத்திற்கு பலவீனமே!!!

S.R.நாகநாத சேதுபதிக்குப்பிறகு 4-3-1967-ல் இராமனாதபுர மன்னர் களின் அரண்மனையான "**இராமலிங்க விலாச**"த்தின் அதிபராய்ப் பொறுப்பேற்ற ஸ்ரீS.இராமநாதசேதுபதி அவர்கள், இராமேஸ்வர ஆலயத் தோடு மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். சுமார் 4800-கிராம் தங்கம் வழங்கினார்.

1972-ல் மூன்றாம் பிராகராத்தில் ஏற்பட்ட தீவிபத்தால் பழுதுபார்க்கும் திருப்பணி ஆரம்பமானது. 1973-ல் இராமேஸ்வர தீவை இணைக்கும் தரைப் பாலவேலையை, நமது முன்னாள் பிரதமர் அமரர் திருமதி. **இந்திராகாந்தி** தொடங்கிவைத்தார்;

முக்கால் வாசி முடிந்ததும் "அம்போ" என்று நின்று போய், பதினைந்து ஆண்டுகளுக்குப்பிறகு இப்போது தரைவழிப்பாலம் பூர்த்தியாகி, காரும் லாரியும் டூரிஸ்ட்பஸ்ஸூம் பறக்கின்றன!!!

ஸ்ரீகாஞ்சி,சிருங்கேரி ஆச்சாரியர்கள், தமிழகமடாதிபதிகள், நகரத்தார், பொதுமக்கள் ஆதரவோடு 5-2-1975 இராமேஸ்வர ஆலயத்திற்கு வரலாறு காணாத அளவிலே ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகத்தை நடத்தி வைத்த மன்னர் ந. இராமநாதசேதுபதியவர்கள் 1979ல் இறைவனடி சேர்ந்தார்.

ஸ்ரீஇராமநாதர் ஆலயத்துக்கு உள்ள வாகனங்கள், விளைநிலங்கள், அபூர்வ ஆபரணங்கள் ஆகியவற்றுள் சரி பாதிக்குமேல் சேதுபதி அரசர்களின் உபயமாகும்.

காலம் காலமாக ஸ்ரீஇராமநாதர், பர்வதவர்த்தினி யின் "தாய்வீடா"க விளங்கிய இராமநாதபுரமன்னர் மாளிகை. இன்று ஆண்வாரிசற்று... வெறிச்சோடி வெறும் வீடாகக் கிடக்கிறது!

புராதனச் சின்னங்களும், கட்டிடங்களும், கோட்டைகளும் இருந்ததை இருப்பதை - அறிவிப்பவை வரலாற்றுச் சுவடிகள். பல "சுவடி"களை நாம் செல் லரிக்க விட்டுவிட்டோம்! இருக்கும் ஒன்றிரண் டையாவது காக்கும் கடமை நமக்கு உண்டென்பதை உணர்வோமாக.

ஆலயங்களால்... கோடிக்கணக்கிலே வருவாய் பெறும் அறநிலையத்துறை, தமிழகத்திலே எத்தனை கோயில்கள் எங்கெங்கு உள்ளதென்ற "கைடை"யாவது வெளியிடக் கூடாதா?

தெய்வதரிசனம் முடிந்த பிறகு, பாரம்பர்ய சம்ரதாயப்படி, இப்போது ராஜதரி சனம் பெற முடியா விட்டாலும், அந்தப்புனித மாமன்னர்கள் வாழ்ந்து அரசோச்சிய இராமநாதபுர அரண்மனையையாவது மிதித்து, இராமேஸ்வர சேதுயாத்திரையைப் பூர்த்தி செய்வோமாக.

எல்லோரும் மன்னர்களாகி, தொகையிலே, எண் பத்துஐந்து கோடிகளையும் தாண்டிக்கொண்டிருக்கும். இந்தியர் ஒவ்வொருவருக்கும், இராமேஸ்வரம் போன்ற புராதன புகழ்மிகு ஆலயங்களைப்பேணிக் காக்க வேண்டிய கடமை உண்டு.

"இராமேஸ்வர, ஆலய பிரதான தங்க வாகனத்திலே, ஒரு மீட்டர் நீளம் தங்கப்பட்டை திருட்டு! வெள்ளி வாகனங்களிலும் கொள்ளை!! "பல லட்ச ரூபாய் பெருமானமுள்ள கொள்ளையிது" என இந்து பக்த ஜன சபை ஹைகோர்ட்டிலே வழக்கு கொடுத்துள்ளது! - 12.2.1996 - பேப்பர் நியூஸ்.".

இளைய தலைமுறை, உரிமைகளை மட்டுமே முழங்கவும்; பொது வுடமைகளை உடைக்கவும், சாம்பலாக்கவும் கற்றுவருவது சமுதாயத்திற்கு ஆரோக் கியம் தருவதாகாது!

பக்திக்காக மட்டுமல்ல ஆலயங்கள்! நிகழ்கால, எதிர்கால நம்மவர்களின் படிப்பினைக்காவும் வரலாற்றினை அறிவதற்காகவும் பேராலயங்களை நாம் சிரத்தையோடு பேணியே தீரவேண்டும்.

கடமைகளை மறந்தோர்க்குக் காலம் நிச்சயம் கருணை காட்டுவதே யில்லை! நடையில், பாவனையில். நல்லறம் காக்கும் கடமைகளில் நாம் அனை வரும் ஸ்ரீராம சிவமதஸ்ராய் வாழ்வோமாக.

பன்னிரு ஆண்டுகளுக்கு ஒரு முறை புராதன ஆலயங்களை ஜீர்ணோத்தாரணம் செய்து குடமுழுக்குச் செய்ய வேண்டுமென்பது ஆகமவிதி. (இறையுருவங்களை (மூலவர்க்ளை) பீடத்தோடு இணைக்கும் அஷ்டபந்தன மருந்துகளின் வீரியம், பன்னிரண்டு ஆண்டுகள் வரைதான், சீராக இருக்கும் என்பது ஆகமத்தைப் படைத்த மாமுனிவர்களின் அறிவுரை. அந்த நாளிலே சிரத்தையோடு - உண்மையான - அஷ்டபந்தன (குடமுழுக்கு மருந்து) இடித்து பீடத்தை இணைத்த காலத்திலே 12 வருடம் என்றார்கள்... இப்போது எல்லாம் காசு.. எதிலும் காசு என்கிற இந்நாளிலே அஷ்டபந்தன மருந்தின்சக்தி ஐந்தாறு ஆண்டுகள் நிலைத்தாலே பெரிதானது! அதனால்தான் பனிரெண்டு வருடங் களுக்கு ஒருமுறை மூலவர்களின் பீடத்தை பலப்படுத்துவதே அஷ்டபந்தனம் எனப்படும்.

இனியொரு விதி செய்வோம், தேச ஒருமைப்பாட்டைக் காத்துவரும் புராதன ஆலயங் களை எந்த நாளும் காப்போம்!

இராமேஸ்வரம் கோயிலிலே ஆராதனை, திருவிழா, பூஜா முறை

பாண்டிநாட்டுப் பாடல்பெற்ற பதினான்கு சிவஸ் தலங்களின் திலகமாக விளங்குவது இராமேஸ்வரம்.

புனிதபாரதத்திலுள்ள பன்னிரு ஜோதிர்லிங்க க்ஷேத்திரங்களிலே, ஏழாவ தாக ஒளிர்வது இராமேஸ்வரம்.

சேதுசமுத்திர தீர்த்தக்கோயிலை சிரத்தாபக்தியுடன் பேணிய சேதுபதிகளின் நாம நட்சத்திரங்கள் இன்றும் மூலவர் முன்னால் சங்கல்பத்திலே ஓதப்படுகிறது.

தேசத்தைக் கட்டியாண்ட சேதுபதிமன்னர்கள், ஈசனுக்குத் தீவெட்டி ஏந்திச் சேவை செய்த இராமேஸ்வரக் கோயிலிலே மஹாசிவாராத்திரி மிகப் புகழ்பெற்றது.

காலை 5-மணி திருவனந்தல்; காலை 7 மணி உதய காலம் (விளாபூஜை);
" 9-மணி காலசந்தி; நடுப்பகல் 12-மணி உச்சி காலம்;
மாலை 6-மணி சாயரட்சை; இரவு 9-மணி அர்த்த ஜாம பூஜை தொடங்கி 9-30க்கு பள்ளியறை தீபாரதனையோடு அன்றாட ஆராதனைகள் பூர்த்தி பெறுகின்றன.

வெள்ளிக்கிழமை தோறும் நவசக்தி மண்டபத்திலே அம்பாள் மலைவளர் காதலி (பர்வதவர்த்தினி) க்கு விஷேச ஆராதனை முடிந்து, தங்கப்பல்லக்கிலே வருகிற, மூன்றாம் பிராகாரபவனியை காணக்கண் நூறு வேண்டும்.



மாதாந்திர விழாக்கள்

சித்திரை - வருடப்பிறப்பு - பஞ்ச மூர்த்திபுறப்பாடு.
வைகாசி- வஸந்த மகா உத்ஸவம் (பத்து நாட்கள்)
ஆனி - ஸ்ரீராமர், லிங்க பிரதிஷ்டை விழா (மூன்று நாட்கள்)
ஆடி - திருக்கல்யாணத் திருவிழா (பதினேழு நாள்) ஆடி அமாவாசை
ஆவணி- முழுமுதற்கடவுளான விநாயகருக்கு சதுர்த்திப் பெருவிழா
புரட்டாசி- நவராத்திரி மஹோத்ஸவம் (பத்து நாள் திருவிழா)
ஐப்பசி - கந்தர் சஷ்டிவிழா - சூரசம்ஹாரம் (ஆறு நாள் விழா)
கார்த்திகை- திருக்கார்த்திகை திருவிழா. தீவுக்கோயிலில் தீபப்பெருவிழா.
மார்கழி- ஆருத்ரா தரிசனம் (10-நாள்) வைகுண்ட ஏகாதசி.
தை- தைப்பூசத் தெப்பத்திருவிழா - சங்கராந்தி, தை அமாவாசை
மாசி - மகாசிவராத்திரி (12-நாள் விழா)
பங்குனி- பங்குனி உத்தர மங்கலப் பெருவிழா.

கைலாய வைகுந்தத் தெய்வங்களின் சங்கமத் தீவுக்கோயிலாக விளங்கும் இராமேஸ்வரம், அனைத்துலக மக்களுக்கும் எண்ணியதைத் தரவல்ல புண்ணியத் திருத்தலமாகும்.

இராமேஸ்வரத்தின் எதிர்காலம் ?

1 - சாலைப்பாலம் (இப்போது வந்துவிட்டது), 2. ஆகாய விமானப் போக்குவரத்து:

உச்சிப்புளிக்கும் வாலாந்தருவைக்கும் இடையே 1942 அளவில் இரண்டாம் உலகப்போர் காலத்தில், கடற்படையினரின் தேவை கருதி, ஆங்கிலேய அரசு ஒரு விமான நிலையத்தை உண்டாக்கிற்று. அந்த விமான தளம் இப்போது பயன்படுத்தப்படவில்லை. சுற்றுலாவைப் பெருக்கும் முயற்சியில் ஒன்றாக இந்த

விமான நிலையத்தைப் புதுப்பிக்கவும், இங்கு விமானங்களை விடவும் தமிழ அரசு திட்டமிட்டு வருகிறது. இதைத் தொடர்ந்து அடுத்தக் கட்டமாக இந்த விமான நிலையத்திற்கு, இராமேஸ்வரத்திற்கும் ஹெலிகாப்டர் பயணங்கள் மேற்கொள்ளப் படக் கூடும்.

3. சேது சமுத்திர திட்டம்

மண்டபத்திற்கும் உச்சிப்புளிக்கும் இடையே ஒரு கால்வாய் வெட்டவேண்டு என்ற திட்டம் நெடுங்காலமாக இருந்து வருகிறது. இன்று ஏட்டளவில் இருக்கும் இந்தத் திட்டம், அடுத்த ஐம்பது அல்லது 100 ஆண்டுகளில் செயல்வடிவம் பெறும். அதன் பயனாக உலகத்துப் பெரிய கப்பல்கள் எல்லாம் இராமஸ்வரத்திற்கு அருகே செல்லும். சூயஸ் கால்வாய் வழியாக பிரயாணம் செய்யும் கடற்பயணிகள், எகிப்தில் இறங்கி 'பிரமிட்'டுகளைப் பார்த்து விட்டு, அடுத்தக் கப்பலில் பயணத்தைத் தொடர்வது போல், சேது சமுத்திரம் கால்வாய் வழியாக இருபத்து ஒன்றாம் நூற்றாண்டில் செல்லும் அனைவரும், இங்குஇறங்கி இராமேச்சுவர ஆலயக்கலைச் செல்வங்களைக் கண்டு மகிழ்வர்.

4. காசி - இராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ்

இந்திய நாட்டில் இப்போது பல வகையான அளவுகள் உள்ள இரயில் பாதைகள் இயங்குகின்றன. இவை பிராட்கேஜ், மீட்டர் கேஜ், ஸ்டாண்டர்ட் கேஜ் முதலியன. அமெரிக்காவைப் போல இந்தியாவிலும் நாடு முழுவதும் ஒரே அளவான இரயில் மட்டும் இருக்க வேண்டும் என்ற கொள்கை ஒப்புக் கொள்ளப்பட்டிருக் கிறது. இந்திய அரசாங்கத்தார் படிப்படியாக இத்திட்டத்தை நிறைவேற்றி வருகிறார் கள். விரைவில் தூத்துக்குடி அகலப் பாதை வசதியைப் பெறும். (பெற்றுவிட்டது)

கி. பி. இரண்டாயிரம் அளவில், சென்னைக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையே அகலப் பாதை இரயில்கள் இயங்கும். அதைத் தொடர்ந்து காசிக்கும் இராமேஸ்வரத்திற்கும் நேரடி இரயில்கள் விடப்படும். அந்த நாள், இராமேஸ்வரத் தின் பொன்னாளாக மிளிரும்.

(6-2-1975) கும்பாபிஷேக மலரிலே பதிப்பாசிரியர் - திரு. " சோமலெ"



இமயத்தில் வைகுந்தம் பத்ரிநாத்

"வனோ பாந்த நதீ சைல நிர் ஜரோ பாந்த புமிஷு
ராமந்தே தேவதா நித்யம் புரேஷுத்யான வத்ஸுச "

"ஆறுகள் மலைகள் அழகான சோலைகள் முதலான இயற்கையழகு நிறைந்த இடங்களில் தேவதைகள் வாசம் செய்கிறார்கள்"

என்று கூறுகிறது பழம் பெரும் ஆகம சிற்ப கோயிலமைப்பின் இலக்கணங் களைக் கூறும் அற்புத நூலான **பிருஹத்சம்ஹிதை.**

கோயில்கள் நாலுவகை

1. **தைவிகம்** - தேவர்களே மூலவிக்ரஹங்களை ஸ்தாபிதம் செய்தது (காஞ்சியில் அம்பாள் ஸ்தாபித்தலிங்கம், திருவிழிமிழலையில் விஷ்ணு)

2. **ஆசுரம்** - திரிசிரன், ஓணன் முதலான அரசுரர்கள் ஏற்படுத்தியது

பிரதிஷ்டை (திருசிரபுரம், ஓணகாந்தன் தளி முதலான திருத்தலங்கள்)

3. **ஆர்ஷம்** - ரிஷிகள், மூலவரை ஸ்தாபித்தது (குற்றாலம் - அகத்தியர் * சிக்கல் வசிஷ்டர் திருக்களர் - துர்வாசர்)

4. **மாநுஷம்** - மன்னரும், மக்களும், சித்தர்களும் ஆலய மூலவரை ஸ்தாபித்து, குடமுழுக்குச் செய்த கோயில்கள்.

ஞான பூமியான நமது பாரதத்திலே, இமயமுதல் குமரி வரையிலான நதிக்கரை, மலைமுடிகள் அனைத்துமே மகரிஷிகள் வாழ்ந்த இருப்பிடங்களாகத் திகழ்ந்து, யாக யக்ஞங்களாலும், யோக தியானங்களாலும் கனிந்து நாளடைவில் ஆலய, க்ஷேத்திரங்களாகப் பரிணமித்தன என்றும் கூறலாம். பிரபல கோயில் ஒவ்வொன்றிலும் ஒரு முனிவர், அல்லது ரிஷி, சித்தர்களின் மகத்துவம் உண்டு. ஒரு "சாம்பிள் பட்டியலைப் பார்ப்போமா!"

சித்தர் மகத்துவ க்ஷேத்திரங்கள்

சித்தர்களின் பாடல்கள் மாநுடத்துக்குச் சிந்தாமணியாகும். சித்த மருந்து கள் சமுதாயத்தின் ஜீவாம்ருதமாகும். சத்திய ஞானச் சித்தர் மகத்துவச் க்ஷேத்திரம் பலவாகும், சாதி இன மொழி பேதமில்லாதோர் சங்கமச்சில ஊர்கள்,

பெயர்	குலம்	தலம்	பெயர்	குலம்	தலம்
நந்தி	தேவகணம்	திருவாவடுதுறை	அகத்தியர்	வேளாளர்	அனந்தசயனம்
திருமூலர்	வேளாளர்	சிதம்பரம்	கும்பமுனி	வேளாளர்	கும்பகோணம்
அகப்பேய்சித்தர்	வேளாளர்	திருவையாறு	அழுகண்ணர்	சீனர்	நாகப்பட்டினம்
இடைக்காடர்	ஆயர்	திருவண்ணாமலை	கமலமுனி	உவச்சர்	திருவிடைமருதூர்

கருவூரார்	கன்னார்	திருகோணமலை	காளாங்கிநாதர்	சீனர்	காஞ்சிபுரம்
குதம்பைச் சித்தர்	ஆயர்குலம்	மாயூரம்	கொங்கணர்	கன்னடியர்	திருப்பதி
சுந்தரர்	ஐயர்	திருவாரூர்	கோரக்கர்	கள்ளர்	கோயமுத்தூர்
சட்டைமுனி	சிங்களவர்	ஸ்ரீரங்கம்	புவஸ்தியர்	சிங்களவர்	யாழ்ப்பாணம்
சுந்தரானந்தர்	வேளாளர்	மதுரை	தன்வந்திரி	ஐயர்	வைத்தீஸ்வரன் கோயில்
பதஞ்சலியார்	கள்ளர்	ராமேஸ்வரம்	பாம்பாட்டி சித்தர்	கோஸாயி	விருத்தாசலம்
புண்ணாக்கீசர்	கன்னடியர்	நாங்குநேரி	பூனைக்கண்ணர்		எகிப்தியர் எகிப்து
போகமுனிவர்	?	பழனி	மச்சமுனிசெம்படவர்		திருப்பரங்குன்றம்
வால்மீகர்	வேடர்	எட்டுக்குடி	சிவவாக்கியர்	ஐயர்	?
திருவள்ளுவர்	??	திருமயிலை	பட்டினத்தார்	செட்டியார்	திருஒற்றியூர்
இராமலிங்க சுவாமிகள்	கருணீகர்(பிள்ளை)	மேட்டுக் குப்பம்			

காலத்தால் அழியாத ஷ ஜீவன் முக்தர்களான சிரஞ்சிவிச் சித்தர்களின் சக்தியும், சித்தியும் இருப்பதால்தான் பேராலயங்கள் இன்றும் பிரகாசிக்கினறன.


கணக்கில் அகப்படாத அல்லது காலத்தால் சிதைந்து போன ஆலய, க்ஷேத்திரங்களைப் பேணிக் காப்பதும் சித்தர்களின் வரலாறுகளைத் தெளிவுடன் விளக்குவதும் ஒவ்வொரு ஹிந்துவின் முழுமுதற் கடமையாகும்.

ஸ்ரீஆதிசங்கரர் வகுத்துவைத்த ஆறுசமயங்கள்

காணாபத்யம் - கணபதி வழிபாடு; சௌரம் - சூர்யபகவானின் ஆராதனை; சைவம் - சிவபெருமான் வழிபாடு; வைஷ்ணவம் - விஷ்ணுவே முழுமுதற்கடவுள்; சாக்தம்- அம்பாளை ஆதாரமாகக் கொண்டது; கௌமாறம்-முருகனைப் பிரதானமாகக் கொண்டது.

சைவசமய அறுபத்துமூன்று நாயன்மார்களால் பாடல் பெற்ற சிவத்தலங்கள் 275. வைஷ்ணவ சம்பிரதாயப் பன்னிரு ஆழ்வார் பெருமக்களால் மங்களாசாசனம் (பாசுரம்) பெற்ற திருப்பதிகள் 108 என்பது தொன்மை வழக்கம்.

நூற்றெட்டு வைணவ திவ்ய தேசங்களை இரத்தினச் சுருக்கமாக எண்ணிக்கை கீழே தரப்படுகிறது. சோழநாடு-40; தொண்டைநாடு-22; பாண்டி நாடு-18; மலைநாடு-13; வடநாடு-12; நடுநாடு-2; பரமபதமாகிய வைகுந்தம்-1.



பன்னிரு வடதேச வைணவத் திருத்தலங்களாவன...

1. திருவேங்கடம் (திருமலை-திருப்பதி)
2. சிங்கவேள் குன்றம் (அகோபிலம்)
3. அயோத்தி(சரயு நதி தீரம்)
4. நைமிசாரண்யம்(லக்னௌ)
5. சாளக்கிராமம்(நேபாள நாடு)
6. பதரியாச்சிரமம்(பத்திரிநாத்)
7. கண்டம்கடி நகர் (ஹரித்வார் அருகே)
8. திருப்பிரிதி (ஜோஷி மடம்)
9. துவாரகை (பம்பாய் அருகில்)
10. வடமதுரை (டில்லி அருகில்)
11. திரு ஆயப்பாடி (யமுனா நதி தீரம்)
12. திருப்பாற் கடல் ("ஞான தரிசனம்")

பாற்கடல் நாயகனான ஸ்ரீ மகாவிஷ்ணுவின் எண்ணற்ற அவதாரங்களில், பத்து அவதாரங்களைச் சத்தியப் பிராமணமாகச் சொல்லுகின்றன நமது இதிகாசங்கள். பூமண்டலத்துப் பரிணாம வளர்ச்சிக்கு ஏற்ப அமைந்திருக்கும் ஸ்ரீமந்நாரயணனின் தசாவதார மஹத்துவம், நமது அன்புச் சமயத்திற்கே தனிச் சிறப்பைத் தருவதாகும். ஸ்ரீமந் நாராயணனின் பத்து அவதாரத் தத்துவத்திலேயே அண்ட சராசரத் தோற்றம், அனைத்துயிர்களின் பரிணாம வளர்ச்சி, ஓரறிவு முதல் ஆறறிவு வரையிலான அற்புதச் செயல்கள் அனைத்தும் விளக்கப்படுகின்றன. இன்றைய நவீன விஞ்ஞானம் அனைத்திற்கும் அடிப்படையே நமது மெய்ஞ்ஞான இதிகாச புராணக் குறிப்புகளே என்பது உண்மையிலும் உண்மை. இதோ பத்து அவதாரங்கள்!



ஆதார வேதங்கள் நான்கையும் காக்கவே மீனாக அவதரித்தான்.
அமுதம் திரட்டவே மந்திர கிரியைத் தாங்கும் ஆமையாய் நீந்தி வந்தான்.
பூமியை இரண்யாட்சன் பாதாளம் கொண்டேக பொல்லா வராகமானான்.
புல்லிலும் கல்லிலும் தானுள்ளதைக் காட்ட புதிய நரசிம்மம் ஆனான்.
மாபலி மன்னனின் ஆணவம் தீரவே வாமனன் வடிவெடுத்தான்.
மன்னர் சிலர் நீதியை மதியாததால், பரசு ராமனாய் மாறி நின்றான்.
தந்தை சொல் மந்திரம் என்பதைக் காட்டவே தசரதராமன் வந்தான்.
தமையனின் கடமையைச் சொல்லவே பலராமன் தானாகி வாழ்ந்திருந்தான்.
பூ பாரம் தீர்க்கவே மா-மாய ஸ்ரீ கிருஷ்ணப் பூரணன் அவதரித்தான்.
புவி மீது பாவம் பழுத்ததும் பாற்கடற் புண்ணியன் "கல்கி" ஆவான்.

அனைத்துப் பொருள் மற்றும் உயிர்களிலும் ஊடுறுவி நிற்கும் ஸ்ரீமந்நாராயணன், பத்திரிநாத் க்ஷேத்திரத்திலே நர நாராயண ரிஷிகளாக அவதரித்து, வேதம் தழைக்கவும், ஜீவாத்ம பரமாத்ம விவேகம் விளங்கவும், நலந்தரும் "ஓம் நமோ நாராயண" எனும் மந்த்ர நாமம் நிலைக்கவும் வழிவகுத் துள்ளான். "உலகத்திலுள்ள திருத்தலங்களிலேயே முதன்மையானது" என்று மகா பாரதம் போற்றியுள்ள இமயத்தலமான பத்திரிநாதத்தைப் பெரியாழ்வாரும், திருமங்கையாழ்வாரும் பல பாசுரங்களால் மங்களாசாசனம் செய்துள்ளார்கள்

."பீளை சோரக் கண் இடுங்கிப் பித்து எழ மூத்து, முட்டித்
தாள்கள் நோவத் தம்மில் முட்டித் தள்ளி நடவா முன்;
காளை ஆகிக் கன்று மேய்த்துக் குன்றெடுத்து அன்று நின்றான்
வாளை பாயும் தண்தடம் சூழ் வதரி வணங்குதுமே."

என்று, மூப்புவருமுன் பத்திரிநாதத்து முகுந்தனின் தரிசனம் பெறவேண்டுமென்று பாடித் துடிக்கிறார் திருமங்கையாழ்வார்.

புனிதமிகு இமாலய க்ஷேத்திரமான பத்திரிநாத் சென்றுவரும் பாக்கியத்தை "சுப்ரபாதம்" (திரைப்படம் 1978) மூலமாக எனக்குத் தந்தான் எம்பெருமான் ஏழுமலையான். யான் பெற்ற இன்பம் பெறுக எம் அன்பர்! வாருங்கள் போய் வருவோம் "இமயத்திலே உள்ள வைகுந்தத்திற்கு".

மே மாதம் முதல் வாரத்திலிருந்து, நவம்பர்-முதல் வாரம் வரை பத்திரிநாத் ஆலயம் திறக்கப்பட்டிருக்கும். நவம்பரில் ஆலயம் மூடப்படும்போது ஏற்றப்படும் தீபம், மீண்டும் கோயில் திறக்கப்படும் வரை - அதாவது ஆறு மாத காலம் எரிந்தபடியே இருக்கும் அற்புதம், இன்றும் தொடர்ந்து நிகழ்வதாகும்.

சென்னையிலிருந்து டெல்லி சென்று வசதிக்கேற்ப... கரோல்பாக், ராமகிருஷ்ணா நகர் பகுதிகளில் (இங்கெல்லாம் தென்னாட்டினர் அதிகம்) வசதியுடன் தங்கிக் கொள்ளலாம்.

பத்திரிநாத் யாத்திரை என்றதும், டில்லி கரோல்பாக், குருத்வாரா ரோடிலுள்ள "பணிக்கர் டிராவல்" தான், தென்னிந்தியர் நினைவுக்கு முதலிலே வரும்.

நம்பிக்கை, நாணயம், பயண உறுதிப்பாடு முதலான கோட்பாடுகளைக் கொண்ட பணிக்கர் டிராவல் பஸ்ஸிலே புறப்படத் தயாராகிறோம்.

டெல்லியிலிருந்து பத்ரிநாத் 590 கிலோமீட்டர். போகவர (ஆறு நாள்) பஸ் கட்டணம் ரூ. 300 வசூலிக்கப்படுகிறது. இந்த ரேட் 1977-ல் இருந்தது இப்போது... சுமார் ரூ.2000 ஆகிறது. 38ஸீட் கொண்ட சொகுசு "மினி" பஸ்ஸில் புறப்படு கிறோம். இதற்குமேல் பெரிய பஸ்கள் மலைப்பாதையில் சொல்லமுடியாது.

டெல்லியிலிருந்து சுமார் 140 மைல்களைக் கடந்து "ஹரத்துவார்" எனச் சைவருலகம் கொண்டாடும், ஹரித்துவாருக்குள் பரவசத்துடன் நுழைகிறோம். (ஹரித்துவார், அதை அடுத்து உள்ள ரிஷிகேஷ் வரையிலே இரயில் உண்டு).

பத்ரிநாத், கேதார்நாத், அமர்நாத், கங்கோத்ரி (கங்கை நதி உற்பத்தியாகும் "கோமுகி" குகை உள்ள இடம் இமயமலையில் 14-ஆயிர அடி உயரத்தில் உள்ளது கங்கோத்திரி) முதலான யாத்திரைகளின் நுழைவாயிலாக விளங்குவது ஹரித்து வார் ஆகும்.

சைவ, வைணவ தேவையற்ற வீண் சர்ச்சைகள் எல்லாம் காஞ்சி, ஸ்ரீரங்க, சிதம்பர, மதுரைகளில் தான்... வடஇந்தியத் திருத்தல, க்ஷேத்திரங்களுக்குப் போனால் சங்கர நாராயணர்கள் பளிங்குக்கற்களிலே ஒரே கோயில்களில், ஒரே இடத்திலே ஜொலித்துக் கொண்டிருப்பார்கள்! ஹரித்துவாரிலே சைவரும் வைண வரும் இரண்டறக் கலந்து மகிழும் பெருமையை உணரலாம்.

"மாயாபுரி"யாக இதிகாசத்திலிருந்து, "ஹரத்துவார்" ஆன இந்த ஹரித்து வாரை எல்லாப் புராணங்களுமே புகழ்ந்துபாடும். கங்கோத்ரியிலிருந்து இமயத்திலே பற்பல பனிமுகடுகளிலே தவழ்ந்து ஆடி... சீறிப்பாய்ந்து குதித்து வரும் கங்காநதி... இந்த ஹரித்துவாரிலே வந்து தான் சமதரையிலே பாயத்தொடங்குகிறாள்.

''ஹரிகி பைரி'', ''ஹரிகாட்'' என்றெல்லாம் அழைக்கப்படும் படித்துறையில் தான், பன்னிரு ஆண்டுக்கு ஒருமுறை கொண்டாடப்படும் **கும்ப மேளா**. விழா நாட்களில் கோடிக்கணக்கான பக்தர்களும், பவித்ரமான சாதுக்களும் நீராடுவர்.

சிவப்பு மணிக் கூண்டு, சிறிய அளவிலே ஓர் கங்காதேவி கோவிலுமாக இருந்த இந்த ஹரிகாட், இப்போது பற்பல நவீன வடிவமைப்புப் பாலங்களும், படித்துறைகளுமாக விரிவு படுத்தப்பட்டுள்ளது. கங்கையில் தீர்த்தமாடியதும், இங்குள்ள ''சிவலிக்'' மலைமேல் உள்ள **மானசாதேவி** கோயிலுக்குச்சென்று திரும்பலாம். திருச்சிமலைக் கோட்டை போன்ற சுமார் இருநூறு அடி உயரம் தான்; நடக்கமுடியாதவர்களுக்கு கம்பி ''விஞ்சு'' உள்ளது. மானசாதேவி, சிவபெருமானின் திருமகள் என்றும் ஓர் கதை இங்கு உண்டு. எப்படியோ அந்த தேவிதரிசனம் திவ்யமானது. ஹரித்துவாரிலே தற்போது பற்பல நவீன ஆலயங்கள் தோன்றியுள்ளன. பாரத்மாதா மந்திர், பவன்தாம் கோயில் என்று பற்பல நவீன கோயில்கள். ஆனால் அனைத்திலும் புனிதமான கடவுளர்கள். **''பவன் தாம்''** ஆலயத்திலே ஏராளமான அற்புதக் கலைவண்ண தெய்வங்களின் வடிவங்கள்; காண வேண்டியவை. ஹரித்துவார் நகரிலே நான்கு வீதிகளின் சந்திப்பிலே சிவபெருமானின் ஓர் அபூர்வ பளிங்கு வடிவம், ஆறு கைகளிலே, இரண்டு கைகள் கலசம் ஏந்தி, அவருக்கு அவரே கங்காபிஷேகம் செய்து கொள்ளும் அற்புதக் காட்சி. இவரை **மிருத்ஞ்யுசயன்** என்று கூறுவர்! கங்காதீர்த்தத்தின் மகத்துவத்தை இப்படிக் கங்காதரனே உணர்த்தும் தத்துவம், மிகமிக அற்புதமாக பளிங்குக் கல்லிலே ஆபூர்வச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது.

கோடானு கோடி பாரத மக்களின் ஜீவ நதியாகத் திகழும் கங்கையை, ஹரித்துவாரில் கண்டு, குளித்து புளகாங்கிதமடைகிறோம். க்ஷேத்ராடானத்தில், முதல்தர கங்கா ஸ்நாநம், ஹரித்துவாரிலே நடைபெறுகிறது.

சிவ க்ஷேத்திரமான கேதார்நாத் க்ஷேத்திரத்துக்கும், இமயத்துவைகுந்தமான பத்ரிநாத்துக்கும் ஹரித்துவார் ஓர் தோரண வாயிலாக விளங்குகிறது.

தட்சயக்ஞம் நடந்த கேந்திரமான **கனகல்** இங்கிருந்து இரண்டு மைல் தொலைவிலே உள்ளது. மானசாதேவி, சண்டிதேவி, ''பீமகோடா'' குளம் (பீமனே வெட்டியது) முதலான பல க்ஷேத்திரங்கள், கோயில்கள் இப்பகுதியிலே உள்ளன.

ஹரித்துவாரிலிருந்து 15 மைல் மேலே கடந்து சென்று, **ரிஷிகேசம்** வருகிறோம்; ஞான மஹரிஷிகளின் மோனத் தபோவனமாக இருந்தது - இருப்பது - ரிஷிகேசம். ஸ்ரீ லெட்சுமணப் பெருமாள் தவம் செய்த பெருமையைப் பெற்றது இந்த ரிஷிகேசம். கங்கையைக் கடக்க உதவும் **''லட்சுமண் ஜூலா''** இரும்பால் ஆன தொங்கு பாலம் இங்கு ஒரு பொறியியல் விஞ்ஞான சாதனையே.

வனவாச காலத்திலும், ராம ராவண இந்திர ஜித்துகளின் யுத்த முடிவுகளாலும் ஏற்பட்ட ''பிரம்மஹத்தி'' (கொலைப்பாவம்) தீருவதற்காக லட்சுமணப் பெருமாள், இங்கு இருநூறு ஆண்டுகள் தவமிருந்ததாக வரலாறு. ஆதிபத்ரி நாராயண மூர்த்தியின் கோயில் இங்கே உண்டு. பத்திரிநாராயணன் அருகிலேயே

ஸ்ரீதேவியான லட்சுமியும், திரிலோக சஞ்சாரியான நாரதரும் இருக்கிறார்கள். கங்கா, யமுனா, சரஸ்வதி ஆகிய திரிவேணி (மூன்று நதி) சங்கமமும் இங்கே உண்டு.

இரு கரைகளிலும் சிவன், அம்பாள், ராமர், பரதர், லெட்சுமணர், ஹநுமன் முதலான சகல தெய்வச் சிறு சிறு கோயில்கள்; ஆதிசங்கரர் மண்டபங்கள். அனைத்திலும் நாழிகை பிசகாமல் வேதகீத பாராயண முழக்கங்கள்!

ஸ்ரீ ஆதிசங்கரர் மண்டபம், லட்சுமண குண்டம், ஸ்ரீ சச்சாதாம், யாகசாலை முதலானவற்றைத் தரிசிக்கிறோம்.

கோரக்பூர் கீதாபிரஸ் நிர்வகிக்கும் அறக்கட்டளை அருமையாக நிர்வாகம் செய்கிற **கீதாபவன்,** யாத்திரீகர்களுக்கு ஓர் வரப்பிரசாதம். அதோடு "காலா கம்பளிவாலா", ஆந்திர ஆஸ்ரமம் முதலான தருமச் சாலைகள், கருமமே கண்ணாயிருந்து அறப்பணி புரிகின்றன.

ஸ்ரீஅரவிந்த, ரமண மாகான்களைப் போன்ற குருதேவர் **ஸ்ரீசிவானந்தர்** (1887-1963) உருவாக்கிய **சிவானந்த ஆஸ்ரமம்** ரிஷிகேச கங்கை நதி தீரத்திலே ஞானப் பயிர் விளைவிக்கிறது.

சிவானந்த ஆஸ்ரமம் அருகில் தற்போது கங்கா நதியில் புதிய ஒரு **ராம்ஜுலா** (இரும்புக் கம்பிகளாலான தொங்குபாலம் 500-அடிநீளம் பாலமும் ஏற்பட்டுள்ளது. இதை **"சிவானந்தாஜுலா"** என்றும் அழைக்கிறார்கள்.

"ஜுலா"க்களிலே ஆடி நடந்தபடி எதிர்க்கரையை அடைகிறோம் எட்டுமாடி, பத்துமாடி, கட்டிடங்கள் தற்போது புதிது புதிதாகத் தோன்றியுள்ளன. பழைய சத்திரங்களும், சிவாமந்திர் (கோயில்) லட்சுமணர் கோயிலும் உண்டு.

பலபடிகள் ஏறிச்சென்று சில கடவுளரின் காட்சிகளை தரிசிக்கிறோம். ஆயிரத்தெட்டு லிங்கங்களைக் கொண்ட ஏகலிங்க தரிசனமும் பெறலாம்.

ஹரித்துவாரில் நம்மை இதமாகத் தழுவிய கங்காதேவி, இங்கே சற்று அதிகமான பாச உணர்வுடன் "ஜில்"லென்று இருக்கிறாள். ரிஷிகேச்த்திலிருந்து நமது பஸ் புறப்படுகிறது. நமது பேருந்துக்கு வழிகாட்டுவதைப் போல கங்கா தேவி (நதி) முன்னும் பின்னுமாக வளைந்து வளைந்து ஓடிக் கொண்டேயிருக்கிறாள்.

மலைப்பாதை; பற்பல வளைவுகள்; குலுங்கும் பஸ்ஸிலே பக்தர்களின் பரவச "பத்திரி விஷால்கி ஜே" கோஷம் மலைப்பகுதியிலே எதிரொலிக்கிறது.

சிவக்ஷேத்திரமான கங்கோத்திரியிலிருந்து வரும் **பாகீரதி** (கங்கையும்) **வைணவக்ஷேத்திரமான** பத்திரிநாத்துக்கு மேலிருந்து வரும் **அலகநந்தாவும் சங்காமமாகும் தேவப்பிரயாகையை** அடைகிறோம்.

பன்னிரு வடஇந்திய வைணவத் திருப்பதிகளில் "கண்டம்கடிநகர்" என்று பெரியாழ்வார் பாடிப்பரவிய தேவப் பிரயாகையில் நீராடியபின், அங்குள்ள ரகுநாதர் கோயில், காசி விஸ்வநாதர் கோயில்களைக் கண்டும் மூலவர்களை தரிசித்தும் "ஜெய்பத்திரிநாராயணா" எனும் தாரக மந்த்ர கோஷத்தோடு நமது பஸ் மேல் நோக்கிப் புறப்படுகிறது.

சிவனது திருமுடிக்கங்கையும், விஷ்ணுவின் பாதத்திலே உற்பத்தியாகும் அலகநந்தா நதியும் சங்கமமாகும். தேவப்பிரயாகையிலிருந்து 24 மைல் கடந்து ஸ்ரீநகர் வந்தடைகிறோம். (இது காஷ்மீர் தலைநகரான ஸ்ரீநகர் அல்ல) இங்குள்ள சைவ வைணவ ஆலயங்களை தரிசித்தப்பின் அங்குள்ள "டால்மியா கெஸ்ட் ஹவுஸி"ல் ஓரிரவு தங்கி ஓய்வு பெறுகிறோம்.

காலையில் புறப்பட்டு கடல் மட்டத்திற்கு 2,000 அடி உயரத்திலுள்ள **ருத்ரப்பிரயாகையை** வந்தடைகிறோம். கேதார்நாத்திலிருந்து வேகமாக வரும் **மந்தாகினி** நதியானது, பத்திரிநாத்திலிருந்து பெருகிவரும் அலகநந்தாவுடன் இங்கே சங்கமித்து விடுகிறது. சங்கமத்திலே, சிவருத்ரநாதர் ஆலயமும் தட்சிணகாளியின் கோயிலும் உள்ளன.

அடுத்து நாம் "பிண்டர்கங்கா" நதி, அலகநந்தாவடன் சங்கமிக்கும் **கர்ணப்பிரயாகைக்கு** வருகிறோம் குந்திதேவி, குழந்தைக் கர்ணனை ஆற்றிலே விட்ட க்ஷேத்திரம் இது. கர்ணன் தவம் செய்து, தானங்கள் பல செய்த புண்ணியத்தலம் இது என்பதற்கும் ஒர்கதை உண்டு. எது எப்படியோ சிவ்ஜி மந்திரம் (சிவன் கோயிலுடன், கொடைவள்ளல் கர்ணனுக்கு இங்கு ஒரு தனிக் கோயிலும் இருக்கிறது).

அடுத்து நந்தகோபர் வாழ்ந்த நந்தப்பிராகைக்கு வந்து சேருகிறோம். இங்கு அலகநந்தாவோடு நந்தாகினி நதி இணைகிறது. இங்கு சண்டிகாதேவி ஆலயமும், ஸ்ரீகோபாலகிருஷ்ணர் கோயிலும் உள்ளது. நந்தப்பிரயாகையிலிருந்து முன்று கி.மீ. தொலைவிலே தான் ராவணேஸ்வரன் தவம் செய்து, கைலைமலையைத் தூக்கிய திருத்தலம் இருக்கிறது. அடுத்த ஏழு மைல் தூரத்திலுள்ள **சமோலி** எனும் பெரிய ஊர், பத்திரிநாத் க்ஷேத்திரத்தின் மாவட்டத் தலைநகரமாகும். மேலும் 17 கி.மீ தாண்டுகிறோம்; **பிப்பல்கோட்** எனும் ஊரை வந்தடைகிறோம் பத்திரிநாத்தில் உள்ள நர நாரயண மலையின் திவ்ய தரிசனம் முதன் முதலாக இங்கு கிடைக்கிறது. "தாகசாந்தி" செய்து கொண்ட நமது பஸ், வேகமாகப் புறப்படுகிறது.

இருபுறமும் நீலநிற வானோடு கொஞ்சும் பச்சைமணி மாமலைகள். மலை கள் தெரியாத இடத்தில் எட்டிப்பார்த்தால் அதலபாதாளம். ஆழம் தெரிய முடியாத பூமி, நீளம் அறிய முடியாத வானம். இடையில் எறும்பு போல நமது பஸ் இயற்கை மலைத்தாயின் மடியிலே ஊர்ந்துசெல்லும் அழகை, எழுத்தாளர்கள் மட்டுமே ரஸிக்க முடியும், ஏனெனில் சாதாரண மக்களின் குலைநடுங்கும் படியான கிடுகிடு பாதாள மேடு பள்ளங்கள்! எந்த நிமிடமும் ஏதாவது ஒரு பகுதியிலிருந்து ஒரு

மலைச்சிகரத்துண்டு சிதறிப் புரண்டு கீழே உருளும்! மறு வினாடி பஸ் செல்லும் பாதை மலைமேடு ஆகும். போக்குவத்துநின்றுவிடும். சில நிமிடங்களில் "வயர்லெஸ்" செய்திகள் பறக்கும், ஆங்காங்கே தயார் நிலையிலுள்ள "புல்டோசர்" இயந்திரங்கள் படையெடுத்து வரும், "சிலமணி நேரத்திற்குள் மலைப்பாதை சீர்படுமா?" எனக் கேட்காதீர்கள், அனைத்தும் நமது ராணுவ வீரர்களின் தனிச்சிறப்பு. இப்பகுதி அனைத்தும் இந்திய ராணுவத்தின் கண்காணிப்பிலே உள்ளவை. தன்னலங்கருதாத அந்தப் புண்ணியப் போர் வீரர்களின் கடமை உணர்வால் பாதை சீராகும். பக்திப் பயணம் தொடரும் இவை வாடிக்கையான நிகழ்ச்சிகளாம்.


அடுத்தபடியாக ஸ்ரீஆதிசங்கரருக்கு ஞானஒளி கிடைத்த **ஜோதிர்மடம்.** காலத்தால் மருவி இப்போது "ஜோஷிமடம்" ஆகியிருக்கிறது. ஸ்ரீசங்கரர் ஐந்து ஆண்டுகள் தவமிருந்த குகையோடு; சைவ, வைணவ ஆலயங்களும் பிரசித்தமான நரசிம்மசுவாமி கோயிலும் உள்ளன. (வியாச பகவான் தரிசனமும், அருளாசியும் ஸ்ரீஆதிசங்கரருக்கு இங்குதான் கிடைத்ததாம்)

ஜோஷிமடம் பக்திக் கேந்திரம் மட்டுமல்ல, நமது பாரததேச ராணுவத்தினரின் "சக்தி"க் கேந்திரமாகவும் விளங்குகிறது.

வடபாரதத்தின் பன்னிரு திருப்பதிகளில் ஒன்றான திருப்பிரிதியான ஜோஷி மடத்தில், பத்திரிநாத் ஆலயம் மூடப்பட்டிருக்கும் காலத்திலே... (நவம்பர் to மே) மூலவருக்கான மானஸிகமான விஷேச பூஜைகள் இங்கு நடைபெறும். ஜோஷிமடத்திலிருந்து பத்திரியை நோக்கிப் போகும் நாம், **கோவிந்தகாட்** என்ற இடத்தைக் கடந்துபோகிறோம். இங்கே சீக்கியப் பெருமக்களின் புனிதாலயம் ஒன்று உள்ளது, அங்கும் கொதிநீர் ஊற்று உள்ளதாம். சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்புவரை இதற்கு மேல் கார்ப்பாதை கிடையாது. ஸ்ரீபத்திரி நாதனை பக்த கோடிகள், அன்றெல்லாம் பாதயாத்திரை மூலமாகத்தான் சென்று தரிசித்து இருக்கிறார்கள்.

ஆயிர அடிகளுக்கும் மேலாக நமது பஸ், கீழ்நோக்கி ஓடி தௌலிநதி, அலகந்தாவுடன் கலக்கும் **விஷ்ணுபிரயாகை** யை அடைகிறது.

விஷ்ணுபிரயாகை யிலிருந்து ஏழாவது மைலில் உள்ள **"பாண்டுகேச்வரம்"** வருகிறோம். பாண்டவர்களின் சரிதத்தோடு பிணைந்து கிடக்கும் பாண்டுகேச் வரத்தில்தான், ஆலயம் மூடப்பட்டிருக்கும் ஆறுமாதகாலமும், பத்திரிநாதத்து உற்சவமூர்த்தி இருப்பாராம், இங்கே குபேரனுக்குத் தனிக் கோயில் இருக்கிறதாம்.



பாண்டுகேச்சவரத்தைத் தாண்டிய நமது பஸ், சீறிய பெருமூச்சுகளோடு திக்கித் திணறியபடி இமயத்து வைகுந்தமான பத்திரிநாத் பாதையிலே ஊர்ந்து, தவழ்ந்து நடந்து ஓடுகிறது செங்குத்தான ஏற்றம்.

அடுத்துவரும் **"ஹநுமான்சட்டி"** சிறிய கிராமம்தான் என்றாலும், மகாபார தத்து பீமன், கிழக்குரங்கு வடிவிலே ஹநுமானைச் சந்தித்து, தெய்வீக பாரிஜாத மலரைப் பெற்றது முதலான பல அற்புதங்கள் நிகழ்ந்த பூமியாகப் போற்றப்படுகிறது இது.

ஓடிக்கொண்டேயிருந்த ஊர்தி நிற்கிறது. இடப்புறம் இருந்த போர்டு நம் அனைவரது விழிகளையும் மலர்த்துகிறது. **"தேவதர்சினி"** என்று தமிழிலும் ஏனைய பல மொழிகளையும் தாங்கிய பெயர்ப்பலகை அது.

அங்கிருந்து வடக்கே பார்க்கிறோம்; பத்திரிநாத மலைச்சிகரத்திரு நகரம், தொலைதூரக் காட்சியாக தரிசனம் தருகிறது. வானிலே ஜாலம் செய்யும் மேகக்கூட்டம், மண்ணில் நிறைந்திருக்கும் மாமலைக்குன்றுகள் சூழ்ந்த அழகான பள்ளத்தாக்கு; சிறிய பெரிய கட்டிடங்கள் நடுநாயகமாக வைகுந்தவாசனின் செவ்வண்ணத் திருமாமணிக்கோயில்; நம்மை நாம் முற்றிலும் மறந்த நிலையில் இம்மையின் பேரின்பப் பரவசத்திலே கைகளைக்கூப்பி **"ஜெய்பத்திரிநாத்"** என்று கோஷித்துப் புத்துணர்வு பெறுகிறோம். உணர்வலைகளின் நடுவே நாம் மூழ்கித் தத்தளிக்கும் போதே, நமது சுற்றுலா ஊர்தி, சரியான நேரத்திற்கு பத்திரி நாத்தில் உள்ள "பரமார்த்த லோக்லாட்ஜ்" என்ற தங்குமிடத்தை வந்தடைகிறது. இமயத்திலே உள்ள வைகுந்த பூமியில் நமது மூதாதையர் செய்த பூர்வபுண்ணயத் தால் வந்து இறங்குகிறோம்.

இரவு 11 மணிக்கு டில்லியில் புறப்பட்டு, மறுநாள் காலை 5 மணிக்கு ஹரித்துவார் வந்து, அன்றிரவு ஸ்ரீநகரில் தங்கி, அடுத்த நாள் காலை முதல் ஓடி மாலை 6 மணி அளவில் சுமார் பத்தாயிர அடி உயர பத்திரிநாத் க்ஷேத்திரத்தில் நம்மை பத்திரமாகக் கொண்டு வந்து சேர்த்த பஸ்ஸையும், அதன் ஓட்டுநரையும் நன்றியோடு பரவசம் பெருகப் பார்க்கிறோம்.

மிதமாகப் பொழியும் பனிப் படலக்குளிரிலே மின் விளக்குகள் பாதி ஒளியோடு தூங்கி வழிகின்றன! நிமிட நேரத்தைக் கூட வீணாக்கக் கூடாது என்ற ஆசையில், ஆர்வத்தில் அருகிலே இருந்த பஜனைக் கூடமான "பரமார்த்தலோக்" சங்கஹாலுக்குள் நுழைகிறோம். ஸ்ரீமந்நாராயணனின் லீலா வினோதங்களை அழகாக விளக்கும் நாற்பதுக்கும் மேற்பட்ட தெய்வவிக்ரஹ அற்புத சிற்பக் களஞ்சியமாக விளங்குகிறது அது. கண்ணாடிப் பெட்டிகளில் வெகு கவனமாகப் பராமரிக்கப்படுகின்றன தெய்விகச் சிற்பங்கள்.

இரவு ஏழு மணிதானே ஆகிறது, எங்காவது போய் எதையாவது கண்டு வரலாம் என்ற உள்ளுணர்வு எழுந்தது; ஆனால் எப்படிப் போவது ? முன் பின் பழக்கமில்லாத இடம், தவிரவும் சற்று தூரத்திலே இருந்த ஆலயத்தின் அருகில்

தான் ஓரளவு மனிதநடமாட்டம் இருந்தது. எல்லாவற்றையும்விட "ஜில்லோஜில்" லான குளிர் நம் கைகளைத் தாளம் போடவைக்கிறது! ரூமுக்குத் திரும்புகிறோம். இரவு மணி எட்டைத் தாண்டுகிறது, பல் கிட்டும் குளிர், ரூமினுள் சென்று குளிர்தாங்கும் மெத்தையால் நம்மைச்சுருட்டி உருட்டிக் கொள்ளுகிறோம்! அப்போதும் குளிர் உள்ளே புகுந்து "நலம்" விசாரிக்கிறது. ஸ்வெட்டர், மப்ளர், கால் உல்லன் உறைகள் நமது உணர்வுகளைக் காக்கும் துணைவர்கள் ஆகின்றன. காற்றில் ஆனந்தமாக மிதந்து வரும் பஜன் பக்திப்பாசுர இனிய இசைத் தாலாட்டின் லயத்திலே கண்ணயர்ந்து விடுகிறோம். "வெடவெட" குளிரிலே காலை ஐந்து மணிக்கு அற்புதமான காட்சியொன்றை மேற்குத்திசையில் காண்கிறோம்!

இதமான மயக்கத்திலே காலை ஐந்து மணிக்கு கண்விழித்து குளிரால் மீண்டும் சுருண்டு படுக்கிறோம். "ஆஹா அற்புதம், ஓடிவா" என்ற சகபக்தர்களின் குரல் கேட்டு வெளியே வருகிறோம்! 12,600 அடி உயரமுள்ள நீலகண்ட சிகரத்தின் மேல் சூரிய ஒளிபட்டு, பட்டைதீட்டிய வைரமாகஜொலித்தபடி அந்த மலைச்சிகரம் பெரிதாகிக் கொண்டேவருகிறது! பளிச்சென்று அமரகவி சுப்ரமண்ய பாரதிதான் நினைவுக்குவந்தார். எட்டையபுரத்து மகாகவிபாடிய **"வெள்ளிப்பனி மலையின் மீதுலாவுவோம்"** எத்தனை சத்தியமான வார்த்தைகள்.

காலைக்கடன்களை முடித்ததும், தங்குமிடத்திலிருந்து சுமார் 300 அடி தூரத்திலிருக்கும் கோயிலை நோக்கி நடக்கிறோம்.

அனைத்து அண்டங்களின் அனைத்துமாக, ஆத்மாக்களின் உள்ளிருந்து துடிக்கும் பரமாத்மாவாகவிளங்கும் வைகுந்த வாசானாகிய ஸ்ரீமந்நாராயணன், அனைத்துலக மனிதப்பிறவிகளின் பெருமையை உணர்த்துவதற்காகவும், மாபெரும் சாதனையாளர்களாக மாந்தரை மாற்றியமைக்கவும் நர-நாரயணர்களாக எழுந் தருளி, அஷ்டாட்க்ஷரமந்திரத்தை அதன் மகத்துவத்தை உணர்த்திய புனித பூமியிலே: இமயத்துவைகுந்தத்திலே நாமும் வந்து, நடந்து, வலம் வருகிறோம் என்று நினைத்துப் பார்ப்பது, இனிமையாகவும் மனதிற்கு இதமாகவும் இருந்தது. மூதாதையரின் மாதவமோ, பூர்வபுண்ணியமோ என எண்ணி எண்ணிப் பெருமித மடைகிறோம். **"பஞ்சாபி சிந்து குஜராட்ட மராட்ட திராவிட உத்கல வங்கா"** என்ற தேசிய கீத வாசங்களை மெய்ப்பிப்பது போல, பலமொழி, பலஜாதி, பலஇன பக்தர் கூட்டம் ஒன்று கூடி ஒரே பக்தி உணர்வோடு அதிகாலை வேளையிலேயே பத்ரிநாதனின் கோயிற்பகுதி முழுவதையும் ஆக்ரமித்துக் கொள்ளுகிறது.

சாதாரண ஒரு பெரிய கால்வாய் அளவிலே அலகந்தா நதியானது வடக்கிலிருந்து சீறிப்பாய்ந்து ஓடிவருகிறது. இரும்புப் பாலம் வழியாக நதியைக் கடந்து கோயிலின் முன் பகுதியை வந்தடைகிறோம். கோயிலைச் சுற்றிலும் சிறிய, பெரிய கடைவரிசைகள் வலப்புறமாகத் திரும்புகிறோம். **"தப்தகுண்டம்"** என்ற போர்டைத்தாங்கிய சிறுமண்டபம்: உள்ளே நுழைகிறோம். "குபுகுபு" வென ஆவி கிளம்பும் தப்த குண்டத்தீர்த்தக்குளம்: அங்கிருந்து எட்டிப்பார்க்கிறோம், தொட்டால் "சுறீர்" என்று குளிர் ஊசியால் குத்தும் அலகநந்தாநதியின் குளிர் நீர் ஒருபக்கம்

ஆறாக ஓட, பத்தடி தூரத்திலேயே கொதி நீர்க்குண்டம் "குபுகுபு" வென்ற ஆவியுடன் விளங்க...


நீரையும், நெருப்பையும் அடுத்தடுத்து இமயமாமலைமேல், வைத்து எப்படியெல் லாம் விளையாடுகிறான், அந்தப் செப்பிடுவித்தை ஜெகஜ்ஜால மாமாயனாகிய ஸ்ரீ மந்நாராயணன்!

மிக மிக உயர்ந்த இமயப் பனிமலை க்ஷேத்திரங்களான திருத்கைலாய கிரி (18,600 அடி) அமர்நாத் (13,500), கேதார்நாத் (11,000) முதலான அனைத்திலும் இப்படி ஒரு சில கொதிநீர்க் குண்டத்தை ஏற்படுத்தித் தந்துள்ள ஈசனின் கருணையை எப்படி விமர்சிப்பது! தப்தகுண்டத்தில் மூழ்கி எழுந்து "புதூ" மனிதராகிப் பத்திரி நாராயணனின் சந்நிதியைத் தேடி ஓடுகிறோம்.

பத்ரிநாத் கோயிலின் முன்னால் நிற்கிறோம்: சுமார் நாற்பது அடி உயரத் திற்கு வரிசையான படிகள். ஆலயத்தின் மேல் பூசியுள்ள "பளீ"ரென்றசெவ்வண்ண வண்ணக்கலவையானது, கண்ணைப்பறிக்கிறது. கோயிலின் எதிரே பார்க்கிறோம்; கம்பீரமான **நர-நாராயண மலைகள்.** வலப்புறம், வானளாவிய **நீல கண்டபர்வதம்.** ஆலயத்தைச் சுற்றிலும் உள்ள ஒவ்வொரு மலையும், வெவ்வேறு வகையாக நமது சனாதன தர்மத்திற்கு உதவியிருக்கின்றன. வைணவப் பெருமக்கள் இப்பகுதியை **"பத்ரிகாச்ரமம்"** என்றே போற்றுவர். ஆம் ரிஷிகளும், ஞானிகளும், வேதங்களும், உபநிஷத்களும், பிறந்த பூமியிது. இங்கிருந்த மனுவின் ஆஸ்ரமத்திற்கு ஸ்ரீகண்ணபரமாத்மா வந்தாராம். அக்ஞாதவாச காலத்திலே பஞ்ச பாண்டவர்கள் சில ஆண்டுகள் இங்கே இருந்திருக்கிறார்கள். அர்ஜுனனும் கண்ணபிரானும் தவமியற்றிய போது, நாரத பகவான் இங்கு வந்து, வெகு காலம் தங்கியிருக்கிறார். மகரிஷியான வேதவியாசர் அநந்தமான ஆதிவேதங்களை நான்காகப் பிரித்து வகுத்ததும் இங்குதான். வியாசபகவான் விநாயகரை முன்வைத்து மஹாபாரதத்தை எழுதிய "வியாசகுகையும்" இப்பகுதியிலே உள்ளது. அப்பப்பா! இந்த பத்ரிநாத் பகுதிக்குதான் எத்தனை மகத்துவங்கள் "சுயநிலை"யை அடைந்து பரபரப்போடு ஆலயத்தை நெருங்குகிறோம்.

பலவிதவண்ணங்களால் மெருகு தரப்பட்ட கோயில், கண்ணுக்கினிய காட்சிக்கு இலக்கணமாகத் திகழ்கிறது: நாற்பதடி உயரக்கோயிலை, அரை நொடியில் தாவி (படிகளில்) ஆலய வளாகத்தை அடைந்துவிடுகிறோம்.

கிழக்குக்கோபுரப் பெரிய வாசலைக் கடந்ததும் முன்மண்டபத்திலே "பெரியதிருவடி" கருடாழ்வார் தரிசனம் தருகிறார்: கைகளைக் கூப்பியபடியே பிராகாரத்தைச் சுற்றி வருகிறோம். "சிறியதிருவடி" யாகிய ஆஞ்சநேயர், விநாயகர், துர்க்கை ஆகிய தெய்வ சந்நிதிகளை தரிசித்தபடி, தென்பிராகாரத்தில் வீற்றிருக் கும் ஸ்ரீ தேவியாகிய நவநிதிகளின் நாயகியான அன்னை ஸ்ரீமகாலட்சுமியை தரிசிக்கிறோம். பிராகாரமெங்கிலும் ஸ்ரீமந்நாராயண கோவிந்த, கோபால ஹரே ராம, ஹரே கிருஷ்ணப் பாராயண ஒலியலைகள் மோதிய வண்ணமாகவே உள்ளன.



அடியேனுக்கும் (வேம்பத்தூர் கிருஷ்ணன்) காஞ்சிமுனிவர் ஸ்ரீபரமாச்சார் யருக்கும் 1970-முதல், அவரது முக்தி நிலைவரை இடைவிடா ஈடுபாடு இருந்தது. பாரதத்திலே வாழ்ந்திருந்த ஒரே நிறைகுடப்பெருமகானையும் நாம் இழந்து விட்டோம். அவர் சொல்வார் "என்னை ஜெகத்குரு" என்று கூறுவது தவறு. காலடியிலே தோன்றி, கங்கையின் மடியிலும் தவழ்ந்து வாழ்ந்த ஸ்ரீபகவத்பாதாள் (ஸ்ரீஆதிசங்கரர்) மட்டுமே ஜெகத்துக்கெல்லாம் "குரு" என்பார்கள். அந்த ஜெகத் குரு ஆயிரமாண்டுகளுக்கு முன் தென்கோடிபாரதத்திலே பிறந்து, வடகோடியான இமயம் வரை நடந்தே வந்து, இங்குள்ள நாரதகுண்டத்திலே நீராடியிருக்கிறார். புனித நீரிலே கிடந்த சாளக்கிராமத்தை தப்தகுண்டத்துக்கும் கருடமண்டபத் துக்கும் இடையிலே பிரதிஷ்டை செய்திருக்கிறார். (இப்போதைய பத்ரிநாத் மூலவரும், ஆதிசங்கரரால் ஸ்தாபிக்கப்பட்டவரே).

தொழுநோயால் அவதிப்பட்ட கார்வால் மகாராஜா இங்கு வந்து பிரார்தனை புரிய, நோய்தீர, தற்போதைய மூலஸ்தான விரிவினை ஏற்படுத்தினார். இந்தோர் மகாராணி அகல்யாபாய் இந்தப் புனிதாலய விமானத்திற்குப் பொன் வேய்ந்தவர். சாளக்ராம ஸ்ரீமந்நாராயணர் பத்மாசனத்திலே இருப்பதால், அதுவே புத்தர் என்று பௌத்தர் களும் இங்கு வந்துவழிபாடு புரிகிறார்கள்; அனைத்து மகத்துவத்திற்கும் மூலகாரணர் நமது ஆதிசங்கராகும்.

வட நாட்டிலுள்ள புகழ்மிகு க்ஷேத்திரங்களிலும், ஹரித்துவாரிலிருந்து, பத்ரிநாத்வரையிலுள்ள க்ஷேத்திரங்களில் காணப்படும் கோயில்கள் தீர்த்தங்கள், மண்டபங்கள் அனைத்திலுமே ஏதாவது ஒரு வகையிலே ஸ்ரீ ஆதிசங்கரரின் ஈடுபாடு இருந்திருப்பதை அறிந்து பாரத "காலடி" (தென்பாரத) வாசிகளாகிய நாம் யாவரும் பெருமிதமடையலாம்.

ஆலயத்தின் ஒரே பிரகாரத்தை வலம் வந்து முடித்து, மூலஸ்தானத்தை நெருங்குகிறோம். கார்மேகவண்ணனைக் காணப் போகிறோம்! கருவறையை நெருங்கு கிறோம்! வழியில் ஒரு நந்திதேவர் குறுக்கிடுகிறார். கைலையின் காவலராகிய அவரை வணங்கியபடி சஞ்சீவிமலையுடன் எதிர்ப்படுகின்ற ஸ்ரீ ஆஞ்சநேயரையும் இருகரம்கூப்பித் தொழுதபடி முன்னேறுகிறோம். இதோ பத்ரிநாராயணர்! நானாவித புஷ்பாலங்காரங்களின் மத்தியிலே, நவரத்தின அணிமணிகளின் ஒளிச்சுடர் நடுவிலே சர்வலோக நாயகனாகிய, ஜகத்ரக்ஷக ஸ்ரீமந்நாராயணன், பேரெழிற் கோலத்திலே ஜாஜ்வல்யமாகக் காட்சி தருகிறான். அமர்ந்த திருக்கோலமுடன் விளங்கும் சாளக்ராம மூலவருக்கு இருபுறமும், நரநாரயணர்கள், உத்தவர், விநாயகர், கருடன், நாரதர், குபேரன் முதலான உற்சவ மூர்த்திகளின் திவ்ய அணிவகுப்பு.

பத்ரிநாராயணனைப் பராமரித்துப் பூஜிக்கும் உரிமையை ஆதியிலிருந்தே பெற்று, பக்தி சிரத்தையோடு இன்றளவும் அதை நிறைவேற்றி வரும் பாக்கி யத்தைப் பெற்றவர்கள், கேரளநாட்டு நம்பூதிரிகள் "ராவல்ஜி" என்று சிறப்புடன் கொண்டாடப்படும் அந்தத் திருமேனி தீண்டுவோரின் இடைவிடாத, அபிஷேக, நைவேத்திய ஆராதனைகளால் பத்ரிநாராயணன் மென் மேலும் பொலிவு பெற்று, நம் உள்ளத்தைக் கொள்ளையடித்து விடுகிறான்! உரிய கட்டணத்தை ஆலய அலுவலகத்திலே முதலிலே செலுத்திவிட்டால், ஸ்ரீ பத்ரிநாதனுக்கு விஷேச அபிஷே கம் திருமஞ்சனம் ஆராதனைகளைச் செய்து பரவசம் பெறலாம்.

"ஜரகண்டி ஜரகண்டி" யோ யோவ்! போய்யா போ போ!!" என பக்தர்களை விரட்டுவோர் அங்கு இல்லை. பலமுறை வரிசையிலே சுற்றிச் சுற்றிச் வந்து இமாலயத்துப் பரந்தாமனைக் கண்குளிர, மனம் நிறைய தரிசிக்கிறோம்.

சிருங்காரதரிசனமும், இரவிலே நடைபெறும் "சயனாரத்தி" பூஜையிலும் ஸ்ரீபத்ரிநாராயணனின் அலங்கார மில்லாத திருமேனி தரிசனம் கிடைக்கிறது கன்றைப் பிரியும் தாய்பசுவின் நிலையிலே, இல்லை தாயைப்பிரியும் கன்றின் நிலையிலே கருவறையை விட்டு வெளியே வருகிறோம்.

பித்ருக்களுக்குப் பிண்டதானம் செய்வதற்குப் பூமியில் சிறந்த இடம், பத்ரிநாத்திலுள்ள **பிரம்மகபாலம்** ஆகும். இங்கு ஒரு முறை பித்ருக்களுக்கு சிரார்த்தம் கொடுத்து, ஜபம் செய்து, உரியவகையிலே தானங்கள் கொடுத்து விட்டால், நமது ஈரேழுதலைமுறைகளும் சீர்பெற்று உய்யுமாம். இந்திரன், பிருகுமுனிவர்முதலானோர் தவமிருந்த இடமாகவும், ஊர்வசி பீடமாகவும், நாரத க்ஷேத்திரமாகவும் விளங்கும் பத்திரிநாதம், இம்மையில் மாநுடத்தைச் செம்மையாக் கும் இறையருட் திருத்தலமாகும்.

"சுப்ரபாதம்" பக்திப்படத்திலே வில்லாதிவில்லன் நமது **M.N நம்பியார்** அவர்கள்தான் ஹீரோ! அவரும் திரு **முத்துராமன்,** திருமதியர் **லதா, விஜயகுமாரி,** சம்பந்தப்பட்ட காட்சிகளை பத்ரிநாத் செல்லும் வழியிலும், கோயில் வெளியிலும் சினிமாபடமாக எடுத்த, அந்த சுகானுபவம், என்னால் மறக்கவே முடியாத ஒன்று.

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக (1954முதல்) படஉலகிலே துணை டைரக் டர், கதாசிரியக் கவிஞனாக இருக்கும் எனக்கு (வேம்பத்தூர் கிருஷ்ணனுக்கு) "இறையருட்கலைச்செல்வர்" திரைப்பட பழம் பெரும் டைரக்டர் **கே.சங்கர்** அவர்கள் கொடுத்த வாய்ப்பு பத்திரிநாத்திலே ஐந்துநாள் தங்கி இருக்கும்படியான

மகாபாக்கியம். அன்று முதல் என் வாழ்வில் நான் மகத்தான வாய்ப்புகளைப் பெறுகிறேன். 1990ல் 13 வாரம் "சென்னைத் தொலைக்காட்சி" TVயில் ஒளிபரப்பான "**காவிரியின்கதை**" மீண்டும் பல TV-களில் இருமுறை ஒளிபரப்பானது.) இந்த ஆண்டுக்கான "TV" தொடர்களாக **தமிழிசைச் செல்வர், மாவீரன் ராஜா தேசிங்கு, அறுபத்துமூவர்உலா** ஆகிய மூன்று கதைத்தொடர்களும் சென்னை தொலைகாட்சியில் "ok" செய்யப்பட்டுள்ளன. அனைத்துமே ஸ்ரீ பத்ரிநாராயணனின் பேரருள் என்றே நான் கருதுகிறேன். 1996 மார்ச்-ஏப்ரல் மாதங்களில் அறுபத்துமூவர்உலா ஒளிபரப்பாகிறது.

பரிசுபல பெற்ற எனது "காவிரியின் கதை"யைவிட, அறுபத்துமூவர்உலாவை உருவாக்கப் படாதபாடுபட்டுள்ளேன்.

1994 - "**பங்கஜ்விஷன்**" கம்பெனியார் என்னை அழைத்து, "**அறுபத்து மூவர்உலா**" எனும் தலைப்பைச் சொன்னார்கள்; உடனே பெரியபுராணத்தை சின்னத் திரைக்கு ஏற்றவண்ணம் ஓர் குறிப்பைச் சொன்னேன்; "ஆஹா" என்றனர்; அன்றே எழுதத் தொடங்கினேன்.

கதைத்தொகுப்பு, வசனம் பாடல்களுடன் 1.5.1994-லில் பைஃலை அனுப்பினோம்; முதல் சுற்றிலேயே முதல் தரமான தொடர் என்று "OK" ஆனது.

சேக்கிழார், திருமூலர், குங்கிலிய கலையனார்களின் வரலாறுகளிலே.. பற்பல ஆய்வுகள் செய்து, பலப்பல அறிஞர்களிடம் ஆலோசனை கலந்து, அற்புதமான சில அபூர்வ மாற்றங்களைச் செய்து எழுதினேன். "ஓஹோ" எனப் பாராட்டிய டைரக்டரும், தயாரிப்பாளரும் ஒருவரேதான்; யார் தெரியுமா ?

பொற்காலத் தமிழ்ப்பட நட்சத்திர "நால்வர்"களாக.., **M.G.R., சிவாஜி, ஜெமினி, SSR.** விளங்கினர்; இந்த நால்வருக்குமே பாடம் (வசனம்) சொல்லும் பாக்யத்தைப் பெற்றவன் நான் (வேம்பத்தூர் கிருஷ்ணன்) அந்த நால்வருள் ஒருவரான "இலட்சிய நடிகர்" திரு. **S.S. ராஜேந்திரன்** அவர்களது பிள்ளை **கலைவாணன்** (கார்த்திக் சரண்) தான் அறுபத்து மூவருலாவின் தயாரிப்பு டைரக்டர்.

"அப்பா"வின் "**இரட்டை மனிதன்**" (1979) படத்திலும் பணிபுரிந்தேன்; "பிள்ளை"களின் "அறுபத்துமூவர்உலா"வுக்கும் ஆசிரியனாக இருக்கிறேன். அனைத்துக்கும் காரணம், அடியேன் தரிசித்த இமயத்து பத்ரிநாராயணனின் திருவருள்தான்.

பத்ரிநாத்துக்கு வடக்கே அலகநந்தாவுடன் சரஸ்வதிநதி இணையும் கேசவப்பிரயாகை யைக் கடந்தால், இந்திய நாட்டின் எல்லையில் உள்ள கடைசி கிராமமான "**மானா**"வை அடையலாம். மகாபாரத இதிகாசத்தை எழுதுவதற்கு ஸ்ரீவிநாயப்பெருமானே வந்திருந்து வியாசபகவானுக்கு அருள் புரிந்த திருத்தலம் (மலைப்பகுதி) இது தான் என்று கூறப்படுகிறது. இயற்கையாகவே அடுக்கடுக்காய் (ஓலைச்சுவடிக்கட்டுகள் போல) அமைந்த மலைக்கோபுர அமைப்பிலே **வியாசர் குகை** இங்கே இருக்கிறது.

.திரும்பும் நேரம் நெருங்கிவிட்டது மீண்டும் மீண்டும் அந்தப் பாண்டுரங்கனை, பண்டரிநாதனை, பைந்நாகப் பள்ளியானை, வேண்டுகின்ற வரங்கள் அனைத்தையும் அள்ளி வழங்கும் வைகுந்த வள்ளலை, ஆலிலைக் கண்ணனை, அரங்கத்துத்தலைவனை, ஆயிரநாமத்தானை, "**நாராயணா ஹரி நாராயணா, ஓம்**

நாராயணா பத்ரிநாராயணா" என்று பாடித் தொழுதபடி, இமயத்து வைகுந்தப் பெருமானிடம், பிரியாவிடை பெற்றுப் புறப்படுகிறோம்.


10.300 - அடி உயரத்திலுள்ள வைணவத் திருத்தலமான பத்திரிநாத் புனித யாத்திரையின் பூர்த்தியிலே, மா-மலையாம் இமயத்திலே உள்ள சைவ சமயத்தின் திருத்தலக்குறிப்புகளை அறிவோம்.

22.980 - அடி உயரத்திலே வானுக்கும் பூமிக்குமாக நிற்கிறது திருக்கலாய மலை. "அந்தமாபெரும் வெள்ளிப்பனிமலைதான் முழுமுதல் சிவலிங்க சொரூபம்" 52 கி.மீட்டர் நடந்து அந்தக் கைலாயமலையை கிரிபிரதட்சணம் (பரிக்ரமா) செய்ய வேண்டும் என்பது சம்ரதாயம் (திபேத் நாட்டைச் சார்ந்த திருக்கைலாயம் தற்போது சீன அரசின் மேற்பார்வையிலே உள்ளது)

கைலைமலையைச் சிவம் என்றால், 16-ஆயிர அடி உயரத்திலே அங்கிருக்கும் மானசரோவர் எனப்படும் மிகப்பெரிய ஏரிதான் பார்வதியாகும். 300 அடி ஆழமும் 15 மைல் நீளமும் உள்ளது மானசரோவர் ஏரி. 25 ஆயிரம் ரூ செலவு செய்தால் மட்டுமே போய் வந்து விட முடியாது. தேக ஆரோக்கியம் மாறாத தெய்வ பக்தி வேண்டும். அரசுக்கு நாம் மரண வாக்குமூலமே எழுதித் தரவேண்டும் அப்போது தான் திருக்கைலாயம் போய் வர நமக்கு அனுமதி கிடைக்கும்.

காஷ்மீரை அடுத்த நமது இமயப்பகுதியில் 13.500-அடி உயரத்திலே இருப்பது அமர்நாத் குகை. அமாவாசை முடிந்து பௌர்ணமி வரை படிப்படியாக வளர்ந்து 11 அடி பனிலிங்கமாக சிவம் (அரு உருவாகி) தரிசனம் தருகின்ற திவ்ய சிவக்ஷேத்திரம் அமர்நாத் ஆகும். இலிங்கவடிவிலே இமயத்தின் மற்றோர்புறம், "மந்தாகினி" நதிக்கரையிலே, 11,750 அடி உயரத்திலே கேதார்நாத் ஈசன், கேதாரேஸ்வரர் தரிசனம் தருகிறார்.

பத்ரிநாத் கேதார்நாத், அமர்நாத், கோமுகி, மானசரோவர், திருக்கைலாயம் என்று நினைத்துப் பார்த்து, நமது அன்னை பூமியின் மகத்துவம் அறிந்து, முடிந்தவர்கள் யாத்திரை புரிந்து புனிதம் பெறுவோமாக.



மருத்துவத்திருத்தலம் - பழனி

"அருவமும் உருவும்ஆகி அனாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரம்மமாய் நின்றஜோதிப் பிழம்ப தோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய" - கந்த புராணம்

தோன்றியவனல்ல, பிறந்தவனல்ல; ஸ்ரீ முருகப் பெருமான் மேதினியிலே உதித்தவன்.

நிலையான சூரியன் எப்படி நம் கண்களுக்கு அன்றாடம் உதிப்பதாகத் தோன்றுகிறதோ, அதுபோலவே, சாஸ்வதமான சிவகுமாரனாகிய சண்முகப்பெரு மான், சதுர்யுகந்தோறும் மாநுட நலன் கருதிப் பூமியில் உதிக்கின்றான்.

கந்தபுராணப்படி அந்தச் சுந்தரமுருகனின் (முற்பகுதி) வரலாற்றுச் சுருக்க மாவது...

பிரம்மபுத்திரனாகிய **தட்சண்,** பேராசை வெறியால் தான் தோன்றித் தனமாக நடந்து, அசுர நிலையை அடைகிறான்.

பஞ்சாக்கினியிலே நின்று தவம் செய்து, சிவனையே மருமகனாக அடையும் மாபெரும் வரத்தையும் அவன் பெறுகிறான்.

அரிதான வரங்களைப் பெற்ற தட்சண், "தட்சபுரி" என்ற நகரின் அரசனாகி, **வேதவல்லி** என்பவளை மணந்து, ஆயிரம் பிள்ளைகளைப் பெறுகிறான். அவர்களை யும் தன்னைப் போலவே பேராசையான வரங்களைப் பெறத் தூண்டுகிறான்.

இதை அறிந்த நாரதமுனிவர், தட்சகுமாரர்களைச் சந்தித்து, சிவபதமான பேரின்பம் காணும் அருந்தவத்திலே ஈடுபடச் செய்கிறார். இதை அறிந்து, நாரதரை சபித்து விடும் தட்சண், ஐம்பது பெண்களைப் பெற்று, 10 பெண்களை - **தரும தேவருக்கும்,** 13-புதல்வியரை **காசிபருக்கும்,** கார்த்திகை முதலான 27 பெண் மக்களைச் **சந்திரனுக்கும்** மணமுடிக்கிறான். இளைய பெண்ணாகிய **ரோகிணி**யிடம் மட்டும் சந்திரன் அன்பாய் இருப்பது; மற்ற பெண்கள் தந்தையிடம் புகார் செய்கிறார்கள், 'தேய்ந்து அழியக்கடவது' என்று சந்திரனை தட்சண் சபித்து விடுகிறான்.

சிவபெருமானின் கைலாயம் சென்று காலிலே விழுந்து சாபவிமோசனம் வேண்டிய சந்திரனுக்கு, "பெண்களை ஒதுக்கிய நீ... தேய வேண்டியதே, எனினும் குற்றத்தை உணர்ந்து மன்னிப்புக் கேட்டதால்... தேய்ந்து மீண்டும் வளர்வாயாக" என்று அபயமளிக்கறார் ஈஸ்வரன்.

தான் கொடுத்த சாபத்தை மாற்றிய சிவன் மேல், தட்சண் சினந்திருக்கும் போது, முன்பு அவன் பெற்ற வரத்தின் பலனாக, உமாதேவி அவனது மகளாகத் தோன்றி **'தாட்சாயணி'** என்ற பெயரிலே வளர்வது; சிவனுக்குத் திருமணம் செய்துதர தட்சண் மறுப்பது! சிவம் சக்தியை "களவு மணம்" கொள்கிறது!.


மகளைக் கவர்ந்த மஹாதேவனை அவமானப்படுத்துவதற்காக, தட்சண் ஒரு மாபெரும் யாகத்தைச் செய்கிறான். அவனுக்குப் பயந்த தேவர்கள், பலரும் வந்து, அவன்தந்த "அவிர்பாகத்தை"ப் பெற்றுப்போவது. தனது கணவரை (ஈஸ் வரனை) மதிக்காத தந்தையை தாட்சாயிணி எச்சரிக்கிறாள், ஆணவத்தால் மதி மயங்கிய தட்சண், சிவத்தையே அவதூறு செய்கிறான். அவனது மகள் என்ற பந்தத்தை நீக்கும் வகையில், தாட்சாயிணி, தனது உடலை அழித்துக் கொள் கிறாள். மனைவியை இழந்த மஹாசிவத்தின் ரௌத்திரத்தை, ஸ்ரீ மஹாவிஷ்ணு மாற்றி வைக்கிறார்.

இமயமலைப் பகுதியை ஆண்ட அரச தம்பதியினர், பிள்ளையில்லாமல் சிவ பெருமானிடம் வேண்டி, உமாதேவியை மகளாகப் பெறும் வரத்தைப் பெற்றிருந்தனர்; உடலை விடுத்த தாட்சாயிணி இமவானுக்கு மகளாகத் தோன்றி, **'பார்வதி'** என்ற பெயருடன் பெதும்பைப் பருவத்திலே சிவபெருமானின் வருகைக்காகத் தவம் மேற்கொண்டு மேருமலையிலே காத்திருக்கிறாள்.

சக்தியைப்பிரிந்த சிவம், **தட்சிணாமூர்த்தி** யாகி, கல்லால மரத்தடியிலே சின்முத் திரையோடு மோனத்திலே மூழ்கி விடுகிறார்.

சிவமும் சக்தியும் பிரிந்து இருந்ததால், ஜகமனைத்தும் ஜீவனற்றுப் போகி றது. தட்டிக்கேட்கத் தகுந்த அளில்லாததால், அசுரகுலம் பேயாட்டம் போடுகிறது.

ஆயிரத்தெட்டுஅண்டங்களை, நூற்றெட்டு யுகங்கள் கட்டி ஆளவும், நினைத்தவுடன் நினைத்த அண்டத்தில் கொண்டு சேர்க்கும் இந்திர ஞாலத்தேரும், எந்த சமயத்திலும் யாராலும் - சிவசக்தியால்அன்றி - மரணம் இல்லை என்ற வரங்களையும் சிவபெருமானிடம் பெற்றிருந்த அசுரேந்திரனான **சூரபத்மன்,** சிவனது தவயோக மோன காலத்திலே, தேவருலகை துவம்சம் செய்து, கற்பக விருட்சம், சிந்தாமணி, சங்கநிதி, பதுமநிதிகளைக் கவர்ந்து சென்று தேவர்களை யெல்லாம் தனது மாளிகையின் ஏவலர்களாக மாற்றிக் கொண்டு... மூவுலகையும் பாடாய்ப்படுத்துகிறான்.



காமதேவமன்மதனின் மலர்க்கணையால், தியான நிலையிலிருந்து மகா தேவன் சிலிர்த்தெழுந்தார்! நெற்றிக்கண்ணின் தீஜுவாலையால், மன்மதன் சாம்பலானான், ரதியும், தேவர்களும் வேண்டவே, ரதிக்கு மடிப்பிச்சை அருளினார் மகாதேவர். பார்வதி பரமேஸ்வரன் திருமணம் முடிந்தது... ஆனால் சூரனை அழிக்கும் சிவனதுசக்தி பூமிக்கு வருவதுஎப்போது? தேவர்கள் எல்லாம் சூரபத்மனின் அரண் மனைக்கு மீன் கூடை சுமக்குமளவுக்கு நிலைமை மோசமாகவே, மறுபடியும் கைலைக்கு வந்த தேவாதி தேவர்கள். கங்காதரனிடம் மன்றாடி வேண்டினர்.

ஸ்ரீபரமேஸ்வரன் தனது ஐந்து முகங்களான **சத்யோஜாதம், வாமதேவம், தத்புருஷம், ஈசானம், அகோரம்** ஆகியவற்றோடு பரமஞானியர்க்கு மட்டுமே புலப் படுகின்ற **அதோமுகம்** ஆகிய ஆறு திருமுகங்களின் நெற்றிக் கண்களையும் ஏககாலத்திலே திறந்தருளினார்.

ஆயிரம் கோடி மின்னல்களின் ஒளியோடு இருமூன்று ஜோதிச்சுடர்கள் புறப்பட்டன! தீச்சுடர்களின் வெப்பம் தாங்காமல் அனைத்துலக அண்ட சராசரங்களும் நிலைகுலைந்தன!உமையம்மை திகைத்து ஓட... அவளது பாதச் சிலம்பிலிருந்து சிதறிய ஒன்பது முத்துக்களும் நவசக்தியராகி, பரமேஸ்வரனின் அருட்பார்வையால் **வீர பாகுத் தேவர்** முதலான நவவீரர்கள்... தோன்றினர்.

ஆறுசுடர்களும் கங்கையில் மிதந்து, சரவணப் பொய்கையை அடைந்து ஆறு குழந்தைகளாகிச் சிரித்தபடி... கார்த்திகைப் பெண்களின் (ஆறு மாதவப் பெண் மணியர்) அரவணைப்பிலே தவழ்ந்தனர்.

கங்கையிலே சுடர்கள் மிதந்ததால் **"காங்கேயன்"** சரவணப் பொய்கையை அடைந்ததால் **"சரவணபவன்"**, கார்த்திகைப் பெண்கள் வளர்த்ததால் **"கார்த்தி கேயன்"** என்று முருகனின் காரணப்பெயர்கள் பல நூறாகும்.

ஆறு குழந்தைகளையும் ஒருசேர வாரி எடுத்து, அணைத்து, ஒருருவாக்கி... மூவிருமுகங்களைக் கொண்ட **சண்முகன்** ஆக்கிய அன்னை பார்வதிதேவி, தனது திருமுலைப்பாலையும், திரிசூல அம்சமான சக்தி வடிவேலையும் கொடுத்து சிவகுமாரனை வாழ்த்தியருளினாள்.

கைலாயமலையிலும், வைகுந்தப் பகுதி, சத்திய பிரம்மலோக, தேவர்களின் நகரமான அமராவதிகளிலே... கார்த்திகேய முருகக் குழந்தை ஆடித் தவழ்ந்தது! அழகு மயிலேறி ஓடித்திரிந்தது!!

ஆறுமுகக் குழந்தையின் பெருமையறியாத தேவர்கள் சீறி எழுந்து, தோற்று விழுந்தனர்! தேவகுருவான **வியாழபகவான், "இவனே அனைத்துலக ஆதார மூர்த்தி"** என்பதை விளக்குகிறார். "தேவசேனாபதி" யாக ஸ்ரீமுருகப் பெருமானை ஏகமனதாக அனைவரும் ஏற்று **ஸ்கந்தகிரி** யிலே மகுடாபிஷேகம் செய்கின்றனர்.

"ஓம்" எனும் பிரணவத்தின் பொருள் புரியாமல் **"நான்"** என்ற பிரம்மனைச் சிறையிலிட்டதும், **"ஏன்"** என்ற பரமசிவனைச் சீடராக இருத்தி உபதேசித்து

"தகப்பன் சாமி" ஆனதும், நாரதரின் தவறான யாகத்தைச் சரி செய்ததும், மாதுளம் பழப் போட்டியிலே... மகா கணபதியிடம் தோற்றது... கோபித்துக் கொண்டு பூமிக்குப் புறப்பட்டது இப்படியாக முருகனின் பற்பல திருவிளையாடல்கள்.

பாலமுருகன் பூமிக்கு வந்ததுமே, பரமேஸ்வரனின் பேருளைப் பூரணமாகப் பெற்ற **அகத்தியமுனிவர்...** தனது சீடன் **இடும்பனிடம்** கூறி... கைலையிலே இருந்த **"சிவகிரி, சக்திகிரி"** ஆகிய இரு சஞ்சீவி மலைகளையும் பூமிக்கு எடுத்துப் போகச் சொன்னார்.

இருமலைகளையும், அஷ்ட நாகங்களால் பிணைந்து, பிரம்ம தண்டத்திலே இணைத்து காவடியாய் சுமந்தபடி... பூமிக்கு வந்த இடும்பன், இமயமலையைக் கடந்து, தென்னாடு நோக்கி வந்து கொண்டிருந்தான்.

(சிங்கமுகன், தாரகன் அஜமுகி ஆகிய தம்பியர் தங்கையோடு.. 1008 அண்டங்களைக் கட்டி ஆன்டபடி தலைநகரமான வீரமகேந்திர புரத்திலே கோலோச்சிய சூரபத்மனிடம் சேனாதிபதியாக இருந்தவர் இடும்பன்; சூரபத்மனின் பேராசையால் விளைந்த கொடுமைகளைச் "தவறு" எனக் கூறி, அவன் கேளாததால்... மனம்நொந்து வெளியேறி அகத்தியரின் சீடரானவர்)

காவடியோடு வந்த இடும்பன், நெல்லிவனமாக இருந்த ஆவினன்குடி அருகே வந்து சற்று இளைப்பாறினான்... மீண்டும் காவடியைத் தூக்க முடியாததைக் கண்டு திகைக்கிறான்! பிரம்மதண்டமும், அஷ்ட நாகங்களும் திடீரென மறைந்ததைக் கண்டு அதிர்ச்சியடைகிறான்.

சிவகிரிமலையின் உச்சியிலே ஓர் கோவணாண்டிச் சிறுவன் கையில் தடியோடு நிற்பது தெரிகிறது. **"யாரடா நீ ?"** எனக் கர்ஜிக்கிறான் இடும்பன்! **"சரியாகப் பாரடா நீ"** என பதில் கொடுக்கிறான் சிறுவன்! வந்ததே கோபம் இடும்பனுக்கு; அவனைப் பந்தாட நினைத்து சிறுவனது பிஞ்சுக்கால்களைப் பற்றி இழுத்தான்! சிறுவன் அசையாமல் நின்று சிரித்தான்!

வெகுண்ட இடும்பன் ஆவேசமாக மோதினான், கோவணாண்டிச் சிறுவன், தனது கால் சுட்டு விரலால் அவனைத் தட்டிவிட்டான்.

குப்புற விழுந்து சரிந்து "குருவே" எனக் கதறிபடி உயிர் நீத்தான், இடும்பனின் மனைவி **இடும்பி** ஓடிவந்து கதறினாள்.

அகத்தியர் தோன்றினார். சிறுவனான நின்ற பாலமுருகனை வேண்டினார், இடும்பன் உயிர் பெற்று எழுந்தான். **"கோவணாண்டிச் சிறுவனல்ல அவன், ஈரேழுலக உயிர்க் குலம் காக்கும் தலைவன் முருகன்"** என்று அகத்தியர் கூற...

இடும்பனின் ஆனந்தக் கண்ணீர்! "பாவி நான்" எனப்பதறிய இடும்பனிடம், "இனி நீயே இந்தச் சிவகிரி, சக்திகிரிகளின் காவற் தலைவன்" என்று ஆசி கூறுகிறான் அரனார் திருமகன்!

(சூரசம்ஹாரம் முடிந்த பிறகே இடும்பன் அகத்தியரின் சீடரானான் என்றும் பலர் கூறுவர், எது எப்படியோ... இடும்பனால் ஏற்பட்டது பழனிமலை. இடும்பனை வணங்கிய பிறகே பக்தர்கள், பழனி ஆண்டவரை வழிபடவேண்டும் என்பது சம்பிரதாயம்.)

நெல்லிவனத்திலே திடீரென எதிர்பாராமல் வந்திறங்கிய இரண்டு மலைகளால் பூமி குலுங்கியது. அந்த அதிர்ச்சியால் அங்கு தவமியற்றிக் கொண்டிருந்த சில தேவர்களின் தவம் கலைந்தது... அவர்களின் விபரமாவது...

பிருகுமுனிவரின் கால் பட்டதால் ஸ்ரீமந் நாராயணனின் இதயப் பகுதியிலிருந்து வெளியேறிய **ஸ்ரீதேவி, பூதேவியர்**, தன்னால்தான் உயிர்க்குலம் அனைத்தும் தழைக்கிறது என கர்வம் கொண்டு அதற்கான தண்டனையைக் கண்ட **சூரியன்**; தட்சணின் யாகத்திலே ஓடிச்சென்று முதலிலே அவிர்பாகம் பெற்ற **அக்கினி**, பிரம்மரிஷியான க்ஷத்திரியர், விஸ்வாமித்திரரை அலட்சியம் செய்த **காமதேனு**, ஆகியோர் தவம் கலைந்து, பரபரப்போடு சிவகிரிச் சிகரத்தை அடைந்தனர்.

ஸ்ரீமந்நராயாணனும், இந்திரன், வாயு, வருணன், நாராதர் முதலான தேவர்களும், பிரம்மரிஷியான வஷிஸ்டர், புராணங்களின் கர்த்தரான வேதவியாசர் முதலானவர்களும் அங்கே பிரசன்னமானார்கள்!

வானம் சிலிர்க்க, வையம் மணக்க... வினாயகப் பெருமானும் ஸ்ரீ உமா மகேஸ்வரரும் அங்கே எழுந்தருளினர். பெற்றோரைக் கண்டதும் "சோமஸ்கந்த மூர்த்தியாக" அவர்கள்மடியிலே தாவிஅமர்ந்து கொண்டான், பாலமுருகனாகிய திருமாலின்மருகன். அனைவரும் வணங்க, ஆசிதந்த சிவபெருமான்...

"**திரு-மஹாலட்சுமி; ஆ-காமதேனு; இனன்-சூரியன்; கு-பூமாதேவி; டி-அக்கனி**; ஆகியோர் இந்த பூமியிலே தவமிருந்ததால், இந்தநெல்லிவனம் இன்றுமுதல் "**திருஆவினன் குடி**" ஆகிறது. நாரதர் கலகம் நன்மையில் முடிகிறது. அவர் கொண்டுவந்த பழத்திற்காக... ஞானப்பழமாகிய முருகன் இங்கு வந்து நின்றதால், இன்று முதல் இத்தலம் "**பழநி**" என விளங்குவதாகுக..." என அருளியதுமே... மாதுளம் கனியை நாரதரிடம் கொடுத்தப்படி... "நாரதமகரிஷியே! நீங்கள் கைலையிலே தொடங்கிய நாடகம், எதிர்கால மானுடரின் நன்மைக்கான மகத்துவத்திலே திருஆவினன்குடிச் சிவகிரிப் பழநியிலே முடிந்திருக்கிறது. திருப்தி தானே?" என்கிறார் வினாயகப் பெருமான்! "நாராயணா" என்றபடி நாரதமகரிஷி திருலோக சஞ்சாரத்திற்குப் புறப்படுகிறார்.

"அண்ட சராசரங்களையெல்லாம் தன்னுள் கொண்ட ஆனை முகப் பரம்பொருளே! விளையப் போகும் மாநுட மகத்துவத்தை நாங்கள் அறியலாமா?" என்ற அகத்தியரிடம்...

"மாதவ முனிவரே! மனிதருள் புனிதரே! கலியுகத்திலே பாவங்கள் மலியும்! பிணிமூப்பு பெருகும்! நலிந்து மலியப் போகும் மாநுடரின் நோய் நொடிகளைத் தீர்ப்பதற்காகவே 'பழனி" எனும் பெயரோடு இந்த '**மருத்துவத்திருத்தலம்**" முருகனால் தோற்றுவிக்கப்பட்டது" என வினாயகர் சொன்னதும்...

"ஐயனே! கலியுக மக்களுக்குத் தேகாரோக்கியம் மட்டுமே போதுமா?" எனப் பரமேஸ்வரனைப் பார்த்துப் பதறிய அகத்தியரிடம்...

"முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்து எண்ணாயிரம் ரிஷிகளும், கோடானுகோடிமாநுடரும், ஏனைய ஜீவர்களும் பார்வதி கல்யாணத்தின் போது இமயத்தில் வந்து கூடவே... தென்திசை சென்று பூமியைச் சமன் செய்த புனிதனே! அகத்தியா! உனது ஒரு கேள்வியிலேயே பல கேள்விகள் பொதிந்துள்ளதை யாம் அறிவோம்! அனைத்திற்கும் விடைகளை... ஆறுமுகன் உனக்கு அருள்வான்!" என்றதும் அகத்தியருக்கு ஸ்ரீ முருகப்பெருமான், முக்காலத்தையும் உணருகின்ற மந்த்ரோபதேசம் செய்தருளினார்.

"சிவனைநிகர் பொதியவரை முனிவனக மகிழஇரு
செவிகுளிர இனியதமிழ் பகர்வோனே..." -திருப்புகழ்

மந்த்ரோபதேசம் பெற்றதுமே அகத்தியமுனிவரின் மனத்திரை விரிந்தது கீழ்க்காணும் காட்சிகள் தெளிவாகத் தெரிந்தன.

மாமதுரைத் தமிழ் சங்கம். மகேஸ்வரனும் முருகனும் அங்கம் வகிப்பது. அகத்தியம், தமிழின் முதல் இலக்கண நூல் ஆவது. **தொல்காப்பியர்** முதலான பலநூறு புலவர்கள் பைந்தமிழ் இலக்கண, இலக்கியங்களைப் படைப்பது. ஆகமக்களஞ்சியமான திருமந்திர நூலைத் தரப்போகும் **திருமூலர்,** அட்டமா சித்திகளை நிகழ்த்தப் போகும் **போகர், புலிப்பாணி** முதலான சித்தர் பெருமக்கள்; திருமுருகாற்றுப்படை பாடப்போகின்ற **நக்கீரர்,** ஆத்திச்சூடியின் **ஔவையார்,** திருக்குறள் **வள்ளுவர்,** தேவாரத் திருவாசக **நால்வர்,** நாலாயிரதிவ்வியப்பிரபந்தப் **பன்னிருவர், ஆதிசங்கர, ராமாநுஜ, மத்வர்...** ஆகிய சமயாச்சார்யர்கள்.. **அருணகிரிநாதர், வள்ளலார்,** முதலான பல நூறு அருளாளர்கள், எதிர் காலத் திலே... தமிழகத்தில் தோன்றப் போவதை ஸ்ரீ முருகப் பெருமானின் திருவருளால் ஞானதிருஷ்டியிலே கண்ட அகத்திய முனிவர்...

"இத்தனை ஞானியர்களையும், உத்தமர்களையும், அவர்களது சத்திய இலக்கிய நூல்களையும் மிஞ்சியா... கலிபுருஷன் சீறிவிடுவான்" என்று கேட்டார்.

சர்வயுக, அண்டசராசரங்களின் சகலதர்ம, அதர்மங்களையும், ஆயுதங்களை யும் அறியப் பெற்றவரும், ஸ்ரீமஹாவிஷ்ணுவின் அம்சமுமான வியாச மகரிஷி கூறுகிறார்.



"கலியிலே திருமணம் மணல்வீடு ஆகும்! காவலாம் வேலியே பயிர்களை மேயும்!
பலசாலி அரசாளும் நிலைவந்து சேரும்! பாமரர் மேல்வரிகள் பலமாக ஏறும்!

வியாபார நேர்மைகள் காணாமல் போகும்! வீடெல்லாம் சோரங்கள் விளையாட்டு ஆகும்!
குருசிஷ்ய நெறிதர்மம், அரிதாகிப் போகும்! குலமங்கை பொருளுக்குத் தடுமாறல் ஆகும்!

உள்ளம்உடல் ரெண்டுமே பிஞ்சிலே தீயும்! ஊரெல்லாம் பக்தியின் வேடங்கள் மேயும்
கள்ளக் கணக்குகளும் கொலைகளவு மீறும்! கடமையும் கண்யமும் நூலளவில் வாழும்!"

"போதும் வியாசரே! போதும்! கலியிலே நான் சீரழிந்து சிதறிவிடுவேன் என்று ஒரே வரியில் முடித்து விடுங்கள்" என்று பூமா தேவி அலறினாள்! "இல்லை தாயே! எத்தனை பாவங்கள் கலியிலே விளையுமோ, அத்தனைக்கும் பலநூறு மடங்காகப் புண்ணியங்கள் நிறையும் புனிதமும், கலியுகத்துக்கே உரித்தாகிறது!

கிருதயுகத்திலே பத்தாண்டு காலம் தவமிருந்து பெற்ற புண்ணியம், திரேதாயுகத்திலே ஒரு வருடத்திலே கிடைத்தது! அதுவே, துவாபரயுகத்தில் ஒரு மாதத்தில் வந்தது! கலியுகத்திலே... அந்தப் பலனை ஒரே நாளிலே அடையமுடியும்!

அஸ்வமேதயாகமோ, அனலிடை நின்று அருந்தவமோ... கானகம் செல்லவோ, காற்றைப் புசிக்கவோ தேவையில்லை...! இறைவனது நாமத்தை பக்தியோடு பூஜிப்பதாலும், முறையாகத் திருக்கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்வதாலுமே, எல்லா நன்மைகளையும் கலியுகத்திலே மானுடர் பெற்று விட முடியும்!

அகத்தியர் வழியிலே ஒரு சித்தர் பரம்பரை பூமியிலே தோன்றப் போகிறது! அழியாத ஒளி உடம்போடு... பலநூறு வருடங்கள் அவர்கள் பூமியிலே இருப் பார்கள்! மக்கள் எதைச் செய்யலாம், எப்படி வாழலாம் என்பதை... "ஞானக் கோவை"யாகப் பாடிவைப்பர். அதையும் மீறிப் பிணியால் வருந்தப் போகும் மாந்தருக்கு, இந்தப் பழனி மலையிலே... உள்ள அரியபல தெய்விக மூலிகைகள் மருந்தாகப் பயன்படும்!"

எனக் கூறி முடித்த நேரத்திலே ஓடிவந்த இந்திரன், "சர்வேஸ்வரா! என் மகன் ஜயந்தனையும், பல தேவர்களையும் சூரபத்மன் சிறையில் அடைத்து விட்டான்" என்று கூறிக்கதறவே.....

"சூரனை ஆட்கொள்ள வேண்டிய நேரம் நெருங்கி விட்டது. பிரம்ம தண்டத்தை ஊன்றியபடி நாம் இங்கே தண்டாயுதபாணியாக வந்து நின்றதால், இந்த தண்டம், நமது சக்தி வேலுக்குச் சமமாகிறது! இதை இங்கே ஸ்தாபிக்கிறோம். கால முழுவதும் இதன் மூலமாக நமது அம்சம் பழனியிலே நிலை பெறும்" என்று முருகப் பெருமான் அருளியதும், அகத்தியர், இடும்பன் ஆகியோர் "தண்டாயுதபாணியின் கருணையே கருணை" எனப்பணிவது; தேவசபை பூமியிலிருந்து மறைவது.

காலம் கழன்றது! கலியுகம் பிறந்தது! அகத்தியருக்கு ஈசன் அருளிய காட்சிகளின்படியே யாவும் நடந்தன!

(பேரறிஞர் "சோமு லெ" அவர்கள் 1982-ல் எழுதிய **"பழநி திருக்கோயில் வழிகாட்டி"** என்ற நூலிலே... பழனியின் மூலவர் பற்றிய ஓர் குறிப்பு. அதை அப்படியே கீழே தருகிறேன்)

"இங்குள்ள மூலவர் திருவுருவம் கல்லால் ஆனதன்று" இது உண்டான வரலாற்றை ஈசான்ய சிவாச்சாரியார் அவர்கள் பின் வருமாறு கூறினார் என்பர்.

"பல முனிவர்கள் இதைப்பற்றிச் சிந்தித்து அகத்தியர் கருத்தைக் கேட்டனர். அவர், "போகரை யோசனை கேட்போம்" என்று சொன்னார். எல்லோரும் போகரிடம் சென்றார்கள் "81-முனிவர்களாகிய நாம் சேர்ந்து 81-வகையான பாஷாணத்தை உருவாக்கி ஒரு ஞான தண்டாயுதபாணி உருவம்

சமைப்போம். அதைப் பிரதிஷ்டை செய்து விட்டால் கலியுகத்தில் வாழும் மக்கள் நன்மையடைவர்" என்று கூறினாராம்.

அவ்வாறே 81-முனிவர்களும் தனித்தனியே ஒவ்வொரு பாஷாணத்தை வேகவைத்து முடித்தனர். அவற்றை இணைத்து ஒரு திருவுருமாக்கிய அந்த தண்டாயுதபாணி மூலவருக்கு முதலில் அபிஷேகம் செய்து ஆராதித்தவர் போகர்.

"81" என்பது ஒன்பதை ஒன்பதால் பெருக்கிய தொகை எனவே இதை (மூலவரை) "நவபாஷாணம்" என்கின்றனர்.

போகரை அடுத்து அவரது சீடர் புலிப்பாணிச்சித்தரும் தொடர்ந்து புலிப்பாணிச் சித்தரின் சந்ததியரான பண்டாரப்பெருமக்களும் பழனி ஸ்ரீ தண்டாயுதபாணியைப் பராமரித்துப் பாதுகாத்து வந்தனர். 1900-வருடம் வரை மலைக்கோயிலுக்கு அதிகபக்தர்கள் வருவதில்லை. விழாக்காலச் செலவுகளுக்குப் பணமில்லாமல் பண்டாரங்கள் தவித்தனர். உத்ஸவ மூர்த்தியை ஊரூராய்ச் சுமந்து சென்று, உண்டியலில் பணம் திரட்டிப் பழனிமலைக் கோயிலைப் பாதுகாத்தனர்."

மலைக்கோயிலில் மூலவரை பூஜை செய்து வந்த பண்டாரங்கள் கையிலிருந்து, பூஜை செய்யும் உரிமை பறிபோன நாள் 30.01.1634.

திருமலை நாயக்கரின் தளபதி ராமப்பையன், பழனிக்கோயிலுக்கு வந்து வழிபாடு செய்தார்; அர்ச்சனை செய்த பண்டாரம் தந்த விபூதியைப் பெறாமல், கொடுமுடியில் இருந்து ஐந்துசிவாச்சார்யர்களைக் கொண்டு வந்து, பழனிக் கோயிலுக்கு குருக்களாக நியமித்த குறிப்புக்கள் கல்வெட்டிலே உள்ளதாகும்.

மலைமேல் ஆலையவளாகத்திலே உள்ள போகர் சன்னதி, துர்கை, மரகதலிங்கம் ஆகிய மூர்த்திகளை இன்றும் பண்டாரங்களே பூஜிக்கின்றனர். தண்டாயுதபாணியின் ஆராதனைச் சேவையிலே பண்டாரங்களுக்கு பெரும் பங்கு இன்றும் உண்டு.

நவலோக மருத்துவத் திருவுருவான பழனி ஸ்ரீ தண்டாயுதபாணியின் திருமேனியிலே அபிஷேகமாகும் பாலும், பஞ்சாமிர்தமும், சந்தன, விபூதிகளும் தீராத நோய்களையெல்லாம் தீர்ப்பவையாகும்.

ஒரு சாதாரண கார்த்திகையன்று மூலவருக்கு ஏழு நூறு அபிஷேகம் கூட நடந்த ஒரு காலம் உண்டு!

இப்போது அதெல்லாம் முடியாது! ஏனெனில்... மாநுடரின் பேராசைப் "பிரார்த்தனை பிராண்டல்"களால் பழனி மூலவர் மிகவும், "இளைத்து" விட்டார்! ஆகம பூர்வமான ஆறுவேளை பூஜாகாலங்களிலுல் மட்டுமே இப்போது மூலவருக்கு அபிஷேக சம்பிரதாயம்!!

அடியேன் (வேம்பத்தூர் கிருஷ்ணன்) தேவர் பிலிம்ஸில் அந்த நாள் ஊழியனாக இருந்த போது, மூலவர் திருமேனியிலேயே அபிஷேகமான பஞ்சாமிர்தம், விபூதி, இராக்கால சந்தனங்களை ஏராளமாக அனுபவித்து ஆரோக்கியம் பெற்றவன்.

ஆறுபடை வீடுகளிலேயே... சித்தர்களின் உற்பத்திக் கேந்திரமாகவும் சிரஞ்சிவியான மருத்துவத் திருத்தலமாகவும் விளங்குவது **பழனி.**

தேவர்களுக்கும் கூடாது ஆணவம் என்பதைத் தெளிவு படுத்தும் விதத்திலே பிரம்மனைச் சிறையில் அடைத்து, பிரணவப் பொருளை சிவனுக்கு முருகன் உபதேசித்திருத்தலம். **சுவாமிமலை.**

பேராசையால் ஈரேழு உலகங்களையும் பந்தாடிய சூரபத்மனை சம்ஹாரம் செய்து; அவனை அழித்து விடாமல் சேவலாகவும், மயிலாகவும் மாற்றி சிவசுப்ர-மண்யன் அசுரனை ஆட்கொண்ட இடம் **திருச்செந்தூர்.**

திருமாலின் இருகண்மணிகளிலே ஒருத்தியான அமிர்தவல்லி தேவேந்திர னின் வளர்ப்பு மகளாகி, திருமுருகனை "தெய்வயானை" என்ற பெயரோடு மணந்த திருத்தலமாக விளங்குவது முதற்படை வீடான **திருப்பரங்குன்றம்.**

மஹாவிஷ்ணுவின் அடுத்த கண்மணியான சுந்தரவல்லி... வேடுவனின் மகளாகி, முருகப்பெருமானின் ஊடலுக்குப் பிறகு... "வள்ளியம்மை"யாக முருகனை அடைந்து சகோதரி தெய்வ யானையோடு தரிசனம் தருவது **திருத்தணிகை.**

சூரபத்மனின் கூறுகளான சேவலும் மயிலும் பூர்வஜன்ம அசுர ஆவேசம் தீருவதற்ககாகத் தவமிருந்த சோலை. 'சுடாத பழம்' கேட்ட ஔவையிடம் 'அரியது இனியது'களை மாட்டுக்காரச் சிறுவனாக வந்த பாலமுருகன் கேட்டுத் திருவிளை யாடல் நடத்தியது **பழமுதிர்சோலை.**

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தய நக்கீர தேவரின் திருமுருகாற்றுப் படை, ஆறுபடை வீடுகளையும், அருள் தரும் முருகனின் **குன்றுதோறாடல்** கோயில் களையும்! பக்தி பூர்வமாக நமக்கு விளக்குவதாகும்.

14-ம் நூற்றாண்டிலே வாழ்ந்த அருணகிரி நாதர் முருகனிடமே ஜபமாலை பெற்று திருப்புகழ் பாடத் தொடங்கியவர். அவர் பாடிய மொத்தத் திருப்புகழ் பாடல்கள் 16-ஆயிரம்; நமக்கு இன்று கிடைத்துள்ளவை 1330- மட்டுமே பழனிக்கு 96-திருப்புகழ் பாடல்கள் உண்டு. அருணகிரி சுவாமிகளின் பாடல்களால் 274-முருகனின் புகழ்மிகு ஆலயங்களை அறியமுடிகிறது. அனைத்திலுமிருந்து மாறுபட்டு... மண்ணுலகிலே மனிதவாழ்வுக்கு அத்தியாவசியமான "மருத்துவத் திருத்தலம்" ஆக விளங்குவது பழனி மலையாகும்.

(பழனித் திருத்தல மகிமையை மெய்ஞான விஞ்ஞான பூர்வமாக என்றென்றும் நிலைபெற சிரத்தாபக்தியோடு பேண வேண்டியது, ஆலய நிர்வாகத் தின் தலையாய முழுமுதற்கடமை, **ஊழியர் ஸ்ட்ரைக் (19.1.1995) மறியல் போன்றவை எல்லாம், பழனி போன்ற புகழ்மிகு புனித க்ஷேத்திரங்களிலே நடப்பது கொடுமையிலும் கொடுமை; ஊழியர்களும், நிர்வாகமும் சிந்திக்கட்டும்)**

எந்தக் கடவுளுக்கும் இல்லாத மகத்துவம், தமிழகத்திலே கந்தக் கடவுளுக்கு உண்டு! அதிலும் பழநி ஸ்ரீ தண்டாயுத பாணியின் பெருமை உலகிலே பலநாடுகளிலும் பரவியதாகும்.

மலேஷியநாட்டுத்தலைநகரான கோலாலம்பூர் அருகே, **பத்துமலை** மேல் நின்றருளும் பால தண்டாயுத பாணியையும், சிங்கப்பூர் நகர தண்டாயுத பாணியையும் அடியேன் (வேம்பத்தூர் கிருஷ்ணன்) மாதக் கணக்கில் தங்கியிருந்து தரிசிக்கும் பேறு பெற்றவன். எனது நாற்பது ஆண்டுகாலத் திரைப்படத் துறை துணை டைரக்டர் வேலையால், இலங்கை, (ஸ்ரீலங்கா) கதிர்காமக்ஷேத்திரத்தையும்,

துணைவன், தெய்வம், வருவான்வடிவேன், வேலுண்டு வினையில்லை, தாய்மூகாம்பிகை,.. யாருமிருக்க பயமேன் போன்ற பற்பல முருகன் படங்களுக்கு பழனிக்குச் சென்று பல நாட்கள் இருந்து படப்பிடிப்பு நடத்திய போதெல்லாம் பழனியின் அதிசயங்களை ஆராய முற்படுவேன்.

"அதிசயங்கள் அனேகமுற்ற பழனி மலை" என்பது, அருணகிரிநாதரின் வாக்கு, பழனியின் அனேக அதிசயங்களிலே... அடியேனது சிற்றறிவுக்கு எட்டிய சிலவற்றைக் குறிப்பிட்டுள்ளேன்... "ஞானக்கனி" போல நம்மிடையே வாழ்ந்திருந்த **திருமுருக வாரியார் சுவாமிகள்** பழனிபற்றிக் கூறும் சில வரிகளைப் பாருங்கள்.

"காசியின் மீறிய பழனாபுரி மேவிய பெருமானே" என்று அருணகிரிநாதர் அருளிச்செய்கின்றார்.

இதனால், பழனித்தலம் எல்லாத் தலங்களிலும் மேலான அரிய திருத்ததலம் என்பது சித்திக்கின்றது. இறைவன் அருளிச்செய்த சிவாகமங்கள் நான்கு பாதங்களுடையவை, சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற இந்த நான்கும் அரும்பு, மலர், காய், கனி போல் ஒன்று ஒன்றாக பரிணமிக்கின்றன.

**"விரும்பும் சரியை முதல் மெய்ஞானம் நான்கும்
அரும்பு மலர் காய் கனி போல் அன்றோ பராபரமே"** என்கிறார் தாயுமானவர்.

1.இறைவனை புறத்தே வைத்து வழிபடுவது சரியான மார்க்கம் - இது **அரும்பு.**

2. இறைவனை அகத்தேயும், புறத்தேயும் வைத்து வழிபடுவது கிரியா மார்க்கம் - இது **மலர்.**

3.அக வழிபாட்டின் முதிர்ச்சியினால், புறவழிபாடு தானே கழன்று (தூங்கினவன் கைப்பொருள் தானே நழுவதுபோல்) அகவழிபாட்டில் நிலைத்து நிற்பது யோகம் - இது **காய்.**

4. எல்லாம் அதுவாகக் கண்டு சலனமற்று இருப்பது ஞானம் - இது **பழம்.**

இந்த ஞானமே இறைவன், இந்த ஞானபண்டிதன் உறையுந்திருத்தலம் பழநி. ஆதலால் பழநி ஞானஸ்தலம். ஒரு காரியம் நிறைவேறியதை 'பழம்' என்பார்கள். நீ போன காரியம் காயா பழமா என்று கேட்பார்கள். பழம் தான் என்றால் காரியம் நிறைவேறியது என்று பொருள்படும். ஆதலால் பழநி ஸ்ரீ ஞானதண்டாயுதபாணியை வழிபட்டோருக்கு தொட்ட காரியங்கள் அனைத்தும் பழமாகும் என்பது சித்திக்கும்."

480 அடி உயரச் சிவகிரி எனும் பழனி மலையிலே, ஸ்ரீ தண்டாயுதபாணி கோயில் கொண்டிருக்கிறான். மலையின் சுற்றுப்பாதை ஒன்றரை மைல். 597 -படிகளைக் கொண்ட நடைபாதை, யானைப்பாதை, இழுவை ரயில்(விஞ்ச்) ஆகிய மூன்று வழிகளிலே மலைமேல் போகலாம். திருவாவினன்குடிக்கு **நெல்லிமரமும்,** பழனிக்குக் கடம்பும் தலவிருக்ஷங்கள். திருஆவினன்குடி குழந்தை வேலாயுத சுவாமி, பெரியநாயகி, பெருஉடையார், ஸ்ரீ வேணுகோபாலன், லட்சுமி நாராயணர், வரதராஜப் பெருமாள் முதலான மொத்தம் முப்பத்தி ஏழு கோயில்களைப் பராமரித்து வருகிறா. ஸ்ரீ பழனியாண்டவர்.

வைகாசி விசாகம், ஐப்பசி கந்தர்சஷ்டி, தைப்பூசம், பங்குனி உத்திரம், சித்திரை அக்கினி நட்க்ஷத்திர விழா முதலானவை பழனியிலே சிறப்பான திருவிழாக்கள்.

மலைமேல் கொடி மரம், பலிபீடம், விநாயகர், மலைக் கொழுந்து ஈஸ்வரர், தட்சிணாமூர்த்தி, நடராசர், கைலை நாதர், புவனேஸ்வரி, மரகத லிங்கம், நக்கீரர், போகர்சமாதி (சன்னதி)களை முறைப்படி வணங்கிய பிறகு, மூலஸ்தானத்திலே... ஞான தண்டாயுதபாணியாக விங்கும் ஆண்டிக் கோல ஸ்ரீமுருகப் பெருமானை தரிசிக்கிறோம்.

"நாதவிந்துக லாதீநமோநம வேதமந்த்ரசொரூபா நமோ நம
ஞானபண்டித சாமிநமோ நம..."

பழனி மூலவருக்கு அருகிலே உள்ள பேழையிலே, சாளக்கிராம ஸ்படிக லிங்கமாக இருக்கும் சிவசக்தியரை பழனியாண்டவரே பூஜிப்பதாக ஐதிகம்.

ஆறுகால பூஜை நேரங்களில் மட்டுமே தற்போது, மூலவர் சிரசிலே வைக்கப்படும் பஞ்சாமிர்தமும், ராக்கால சந்தனமும், கௌபீனத் தீர்த்தமும் இன்றைய சூழலிலே 'VIP' க்களுக்கு மட்டுமே கிடைக்க முடியும்.!!

தங்கவெள்ளியாலான ஏழெட்டு வாகனம், ரதங்களோடு, 2 கோடி ரூபாய் மதிப்புக்கும் மேலான நகைகளையும் தனதாகக் கொண்டவர் பழனி உத்ஸவ மூர்த்தியான **ஸ்ரீ சின்னக்குமாரர்.**

சுமார்... 320-ஏக்கர் நஞ்சை, 318-ஏக்கர் புஞ்சை; 220 -ஏக்கர் மானாவாரி நிலங்களையும், கோடிக் கணக்கிலே ஆண்டுவருவாய் தருகிற, பலகோடி ரூ. வைப்பு நிதிகளையும் கொண்டவர் ஸ்ரீ பழனியாண்டவர். (ரூ. பத்து கோடி மதிப்புள்ள கட்டிடங்கள். காலிமனைகள் நந்தவனங்களுக்கும் சொந்தக்காரர்.)

37-உபகோயில்களுடன், பற்பல கல்லூரிகள், வேத ஆகம தேவார, நாதசுர, செவிடர் பள்ளிகள், ஆங்கில, சித்த மருத்துவ மனைகள், குழந்தைகள், பெரியர் காப்பகங்களோடு, நாள்வாடகை ரூ.20 முதல் ரூ.200- வரையிலான (A/C) பலநூறு தங்குமிடங்களுக்கும் உரிமையாளன் ஸ்ரீதண்டாயுதபாணி.

பழனிக்கோயிலின் மொத்த ஊழியர் 647, மிராசுப் பண்டாரங்கள் அறுபத்து நால்வர், பூஜை குருக்கள் - 32, மற்றும் முடியெடுப்போர், பகுதி நேர ஊழியர் என்று சுமார் ஆயிரம் பேர்களின் குடும்பங்களுக்கு **"நிழல் தரும் குடை"**யாக விளங்குவது **பழனி தேவஸ்தானம்.**

அகத்தியர், ஔவையார், நக்கீரர், சிகண்டிமுனிவர், அருணகிரிநாதர், கச்சியப்பர், பொய்யாமொழிப்புலவர், முருகம்மை, மாம்பழக் கவிச்சிங்க நாவலர், பகழிக்கூத்தர், சாதுசாமிகள், பாம்பன்சுவாமிகள், வள்ளிமலை சுவாமிகள் என்று பலநூறு முருகனடிமைகளும், அவர்கள் அருளிய பழனித்திருத்தல இலக்கியங் களும் ஏராளமாகும். பழனி ஸ்ரீ பாலசுப்பிரமணியக் கவிராயரால் 1628-ம் ஆண்டு பழனித் தலபுராணம் எழுதப்பட்டது.

இந்த மருத்துவப்புனிதத் திருத்தலப் பழநி வரலாறு. அடியேனது 25-வது "சுடர்மணிமாலை"யில் இடம்பெற்றதாகும். வெள்ளிவிழா ஆண்டின் சுடர்மணி மாலையை வெளியிட்ட "கலைமாமணி" டாக்டர். பழனி **ஸ்ரீ இளங்கம்பன்** அவர்களின் ஓரிரு அருள்வாழ்த்துக்களுடன் மருத்துவத் திருத்தலப் பழநியைப் பூர்த்தி செய்கிறேன்.

"பழனிமலையின் பெருமையினை நம் நண்பர் கவிஞர் ஆன்மீகச் செல்வர் வேம்பத்தூர்கிருஷ்ணன் அவர்கள், மிகவும் அற்புதமான முறையில் இந்நூலில் தந்துள்ளார். பழனிமலைக்கும் வேம்பத்தூருக்கும் ஓர் தொடர்பு உண்டு. முருகப் பெருமான் அருள்பெற்ற **மாம்பழக் கவிச்சிங்கத்தை**, வேம்பத்தூர் மக்கள் விரும்பி அழைத்து வெகுமதியும் தந்து, விருந்துமிட்டு மகிழ்ந்து அனுப்பி வைத்தார்கள். இதனைப் பழநி மாம்பழக் கவிச் சிங்க நாவலர் அவர்கள் மறவாமல், தம் பிரபந்தத்துள் வேம்பத்தூர் மக்களின் தமிழறிவைப் பாராட்டிப் பாடியுள்ளார்கள்.

"பொங்கு கடல்வாழி புயல்வாழி சீர்வாழி
தங்கு நூல்வாழி தமிழ்வாழி - துங்கமிகுந்
தேசமெங்கும் போற்றத் திறல்படைத்த வேம்பத்தூர்
மாசனங்கள் வாழி மகிழ்ந்து."

திறனும், தமிழ்ப்புலமையும் மிக்க வேம்பத்தூரில் தோன்றிய நம் வேம்பத்தூர் கிருஷ்ணன் அவர்கள், சுமார் 40 ஆண்டுகளாக திரைப் படத்துறையுள் பணியாற்றி யவர், இன்றும் 'டி.வி' தொடர்களை எழுதிக் கொண்டிருப்பவர்.

இந்த25-வது சுடர்மணிமாலை நூலிலே உள்ள வரலாறு, பழனி ஸ்தல வரலாற்றை அடியொற்றி எழுதப்பட்டுள்ளது. பழம் வேண்டி வந்த பரமன் அனைவரையும் "பழம்நீ" என்று பழமாக்கி வைக்கின்றான். மிகவும் அரிதான முயற்சியில் இந்த வரலாற்றை வேம்பத்தூர் கிருஷ்ணன் அவர்கள், அழகிய நடையில் மிகவும் எளிமையாகச் செய்திகளைச் சேகரித்து எழுதியுள்ளார்கள். ஓர் முழுமையான பழனியின் வரலாற்றை இதில் காண முடிகிறது. இதுவே இந்த நூலின் வெற்றியாகும்.

மனங்கவரும் இந்த பழனிமலையைச் சித்தர்கள் இன்றைக்கும் தங்கள் குடியாகக் கொண்டு இவ்வூரை **'சித்தன் வாழ்வு"** என்று மாற்றிய தோடல்லாமல் இங்கு வாழும் முருகப் பெருமானையும் **'சித்தனாதன்'** என்று ஆக்கி மருத்துவத் திருத்தலமாக இப்பதியை மாற்றியுள்ளார்கள். இதனையே மனத்தில் கொண்டு வேம்பத்தூர் கிருஷ்ணன் அவர்கள், இந்நூலை மருத்துவத் திருத்தலத்தை மிகவும் சிறப்பாக ஆக்கியுள்ளார்கள்.

பழனியம்பதியின் வரலாற்றை இதுவரை யாரும் இவ்வளவு அழகாக வெளியிடவில்லை. பழனித் திருக்கோயில் நிர்வாகம், இப்பதிப்பை தங்கள் வெளியீடாகக் கூட வெளியிடலாம், அந்த அளவுக்கு இந்நூலிலே, பழனி பற்றிய வரலாற்றுச் செய்திகளும், புராணச் செய்திகளும் இடம் பெற்றுள்ளன."

"முருகப்பன் இல்லாத ஊருமில்லை, ஒரு முத்தையன் இல்லாத வீடுமில்லை
பழனியப்ப னின்றி வம்சமில்லை; எங்கள் பரம்பரைக் கவனின்றி அம்சமில்லை-."

- கவியரசர் கண்ணதாசன்



திருமலை - திருப்பதி



அகில உலகங்களையும் காத்து ரட்சிக்கும் ஸ்ரீமந் நாராயணன், **கிருதயுகத்திலே** மச்ச, கூர்ம, வராக, நரசிம்ம, வாமனர் களாகவும், **திரேதாயுகத் திலே** பரசுராமர், ஸ்ரீராமச்சந்திரர்களாகவும், **துவாபரயுகத்திலே** பலராமர், ஸ்ரீகிருஷ் ணர்களாகவும், சுமார் ஆறு ஆயிரம் ஆண்டுகளாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் **கலியுகத்திலே** (ஏழுமலை) **"ஸப்தகிரி"** யிலே ஸ்ரீ வேங்கடா சலபதி யாகவும் எழுந்தருளியிருக்கிறார்.



"வட வேங்கடம் தென் குமரி யாயிடை
தமிழ் கூறும் நல்லுலகம்..."

ஸ்ரீ வெங்கடாசலபதி நின்றருளுகின்ற வேங்கட முதல், **தமிழகம்** என்று நமது வரலாற்று இதிகாசங்கள் பாடுகின்றன.

இடைச்சங்க காலத்துத் தொல்காப்பிய காலம் முதல், மண்ணுலகிலே ஓர் விண்ணுலகமாக மாபெரும் இறையருட்கேந்திரமாக விளங்குவது திருப்பதித் திருமலையாகும்.

"ஸ்ப்தகிரி"யாகிய திருமலையிலே மகாவிஷ்ணுவே வராகமாக வந்து பூமாதேவியை மீட்டதால் **வராககிரி.**

விருஷபாசுரனை பகவான் ஆட்கொண்டு பேரருள் புரிந்ததால் **விருஷபகிரி.**

அஞ்சனா தேவியானவள் மாதவம் செய்து சிவ பெருமானின் திருவருளால் ஆஞ்சநேயரைப் பெற்றதால் **அஞ்சனாகிரி.**

ஆதிசேஷனே திருமலையாகி ஸ்ரீனிவாசனைத் தாங்குவதால் **சேஷகிரி.**

வேம் (பாவம்) கடம் (எரித்தல்) பாவங்களை எரிக்கும் மகத்துவத்தால் **வேங்கடகிரி.**

ஜெகத் ரட்சகனான ஸ்ரீமந் நாராயணர், தாமேவந்து கோயில் கொண்டதால் **நாராயணகிரி.**

லோகக்ஷேமத்திற்காக மிகப் பெரும் பற்பல யாகம் செய்யும் ஞானரிஷி களின் இருப்பிடமானதால் **ஞானகிரி.** இப்படியாகத் திருமலையின் திருப்புகழ் அளவிடற்கரியதாகிறது.

சங்ககாலத்திலே இப்பகுதி, தமிழகத்திற்கும், **"வடுகுநாடு"** எனப்படும் இன்றைய கன்னட நாட்டுக்கும் எல்லைப்பகுதியாக இருந்திருக்கின்றது.

ஸ்ரீவேங்கடாசலபதி நின்றிருக்கும் கோயிலைக் கொண்ட திருமலைப் பகுதியானது, பலகுன்றுகளின் நடுவிலே, சற்றுப்பள்ளமான பகுதியிலே அமைந் திருப்பது போலக் காட்சியளிக்கும்.

திருமலைக்கோயில் கடல் மட்டத்திலிருந்து சுமார் 3,426 -அடி உயரத்திலே உள்ளது. "இத்திருமலையில் உள்ள சிலமண்படிமங்களை ஆராய்ந்ததில், நூறு கோடி ஆண்டுகளுக்கும் முற்பட்டது இப்பகுதி", என்கிறது ஓர் அதிகாரப் பூர்வமான ஆராய்ச்சித் தீர்ப்பு!

இந்த இடத்திலே... "ஓம் சக்தி" மாத இதழ் வெளியிட்டிருந்த ஓர் குறிப்பு திருமலையின் பழமையை விஞ்ஞான பூர்வமாக அறிய உதவுவதாகும் . அரிதான - அற்புதமான - அந்தப் புள்ளி விபரங்களைத் தொகுத்தவர்:- ஸ்ரீசுப. வேங்கடராமன்

"....திருமலை சென்ற யுகத்திலேயே புகழ்பெற்றது. கலியுகம் பிறக்கும் முன்பேயுள்ள புண்ய தலம்.

மகாபிரளயம் நேர்ந்து, இறைவன் அவதாரம் எடுத்து நான்கு வேதங்களையும் காப்பாற்றினார் என்பது புராணம். ஆனால் சுமார் பத்து வருஷத்தில், சில விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள் தோன்றியுள்ளன.

திருமலைக் கோயிலுக்கு ஒரு கிலோ மீட்டர் தொலைவில், சில பழமையான பாறைகள் கண்டு பிடிக்கப்பட்டு இருக்கின்றன.

அவை உலகிலேயே மிகவும் தொன்மையான படிமங்கள். அந்த மாதிரி படிமங்கள் உலகில் வேறு ஒரேஒரு இடத்தில்தான் உள்ளது.

அமெரிக்காவில் உடா (UTAH) என்னும் இடத்தில் உள்ளது.

இங்கே திருமலையில் உள்ளது "சிலாதோரணம்" என்று பெயர்.

இந்தப் படிமங்கள் சுமார் 250 கோடி வருஷம் பழமையானது, அதாவது பூமியின் வயது 250 கோடி!

அவ்வளவு தொன்மையானது இந்தப் பாறைகள். ஐதீகப்படி, பெருமான் அப்போதுதான் தோன்றினார். சிலா வடிவமாக நின்றார் என்பது நில நூல் ஆய்வாளர்களின் அறிக்கையாகும்.

திருமலைக் கோயிலில், சுமார் இருபது ஆயிரம் கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

அவற்றில் இங்குள்ள மிகப் பழமையான பெயர் "மலைகுனிய நின்றான்". அதற்கு அடுத்தது "வெறுங்கை வேடன்." அதன் பிறகு, *திருவேங்கடமுடையான்*, என்ற பெயர்கள்.

இதில் *"மலைகுனிய நின்றான்"* என்ற பெயர் சென்ற யுகத்தில் இருந்த பெயர்.

அப்போது திருமலைக்கு சென்று பார்த்தால், கோயில் தாழ்ந்தும், சுற்றியுள்ள மலைகள் உயர்ந்தும் இருந்தன. இப்போது மலை குனிந்து நிற்கவில்லை, போனயுகத்திலே பெருமாள் மிகவும் உயர்ந்த இடத்தில் இருந்து, மலைகள், கீழே இருந்து, மலைகுனிய பெருமாளாக இருந்து இருக்க வேண்டும். இதற்கு என்ன ஆதாரம்?



பத்து வருஷத்திற்கு முன்பு, இந்திய அரசு "ராயல சீமா" பகுதியில் இரும்பு பித்தளை கண்டுபிடிப்பு ஆய்வு செய்வதற்காக செயற்கை கோள் பயன்படுத்தி (REMOTE SENSING AGENCY) வரைபடங்கள் (SATELLITE PICTURES) வந்து இருக்கிறது.

அவற்றில் திருமலைப் பிரதேசமும் வந்து இருக்கிறது. 5000 / 6000 வருஷத்திற்கு முன்பு பிரளய காலத்தில் கடல் நீர், திருமலையில் கரக்கம்பாடி பாளையம் (13^{o} 41 ^{0} N.LATITUDE) சந்திரகிரி (13^{o} 51 ^{0} N. LATITUDE79-19ELONGITUDE)கரக்கம்பாடியில் நுழைந்து சந்திரகிரியில் கடல் கொந்தளிப்பு வந்து இருக்கிறது.

திருமலையில் ஆதிசேஷனும், வாயு தேவனும் சண்டை போட்டுக் கொண்டார்கள் என்பது புராணம்.

கடல் நீர், புயலால் திருமலையை உடைத்ததை இன்றும் பார்க்கலாம். 'ஜ்வால நரசிம்மம்' என்ற இடம் திருமலையில் இன்றும் உள்ளது. இதை (TUMBURN JANLT) மலை முறிந்து இருப்பது தெரியவரும்.

இந்த இடங்களில் கடல்வாழ் உயிரினங்கள் (MARINE FOSILES) கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன.

அதாவது அப்போதைய கோயிலுக்குச் சற்றுத் தொலைவில்தான் அங்கு 300 / 400 அடிக்கு நேர் செங்குத்தாக மலை பிளவுபட்டு இருக்கிறது (SEDIMENT ROCKS).

அந்தப் பிளவுகள் ஏற்பட்ட சமயத்திலே, திருமலை உச்சிப் பகுதி, சுமார் 22 ஏக்கர் கீழே இறங்கிவிட்டது.

இப்போது கோயில் இருக்கும் பகுதியும் 22 ஏக்கர். இது இப்பொழுது பள்ளத்தில் இருக்கிறது. அதனால் போன யுகத்தில் "மலைகுனிய நின்றான்" என்ற பெயர் பொருந்துகிறது. (REPORTS OF REMOTE SENSING AGENCY CSIR).

கதையின்(வேங்கட நாத விஜயம்) ஆசிரியர், (விஷ்ணுப்ரியா) சாமவை அரசிக்குபின் திருமலைக்கு வந்து வழிபட்டவர்களை அழகாகவும், விரிவாகவும் எழுதியிருக்கிறார். படிப்பதற்கு மிகவும் சுவையாக இருக்கிறது.

சாமவைக்கு முன்பும் பலர் வந்து இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் மிக மிகப் பெரியவர். அவர்தான் *ஸ்ரீஆதிசங்கரர்,* அகஸ்தியர், வஷிஸ்டர், ஜாபாலி, கௌதமர் முதலிய இறையருள் பெற்ற மக ரிஷிகள் திருமலையில் பலகாலம் தவம் செய்தார்கள் என்பது புராணம்.

ஆதிசங்கரர்,திருமலைக்கு வந்ததற்கான நேரடிச் சான்றுகள் உள்ளன. ஆதிசங்கரர், திருமலையிலே ஸ்ரீ திருவேங்கடமுடையானுக்கு தனஆகர்ஷண சக்கரமும், ஸ்ரீ சக்கரமும் பிரதிஷ்டை செய்தார் என்பது கர்ண பரம்பரைச் செய்தி.

இதைக் கோயிலிலுள்ள வைஷ்ணவ ஆசாரியர்களே ஒப்புக் கொள்கிறார்கள்.

ஆதிசங்கரர், திருவேங்கடமுடையான் மீது ஒரு 'கத்யம்' அருளிச்செய்து இருக்கிறார்.

அதன் உரைநடை இலக்கண அமைப்பானது, ஆதிசங்கரரின் மற்றய படைப்புகளான பஜகோவிந்தம் முதலியவற்றை ஒத்து இருக்கிறது.

தவிர இந்த கத்யத்தில் சங்கரர் என்ற முத்திரையும் வருகிறது.

இந்த கத்யம் கோயிலில் சுமார் அறுபது வருஷத்திற்கும் முன்பு வரை சொல்லப்பட்டது. இப்போது இல்லை.

கர்னல் (COL. MACKENZIE) 18, 19 நூற்றாண்டுகளில் வரலாற்று ஓலைச் சுவடிகளைச் சேகரிக்கத் தொடங்கினார்.

அந்த தொகுப்பில் 64 ஓலைச்சுவடி, காவெல்லி இராமஸ்வாமி சாஸ்திரி யால் 1822 ஆம் வருஷம் கல்கத்தாவில் வெள்ளைக்காரப் பிரபுவான 'லார்டுபெண்டிங்' முகவுரையுடன் வெளியிடப்பட்டது.

ராமஸ்வாமி சாஸ்திரி, கர்னல் மெகன்சி யின் உதவியாளர் ஆகியோரது இந்த ஓலைச்சுவடிகள், ஆதிசங்கரர் திருமலைக்கு விஜயம் செய்தது பற்றிக் கூறுகிறது.

திருவேங்கடமுடையான் மார்பில் இருப்பது அலர்மேல் மங்கை நாச்சியார் பத்மாவதி என்றோ, லட்சுமி என்றோ பெயர் கிடையாது.

கோயிலில் 2000 கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒருதரம்கூட "பத்மாவதி" என்ற பெயர் வரவில்லை.

நம்மாழ்வார் "அலர்மேல் மங்கை" என்ற இந்த தெய்வாம்சத்திற்குத்தான் பாடி இருக்கிறார்.

அலர்மேல் மங்கைமேல் ஆதிசங்கரர் ஒரு நாமாவளி செய்து இருக்கிறார். 51 மந்திரங்களைக் கொண்டது அது. சுமார் 50 வருஷத்திற்கு முன்பு வரையிலும், அந்த 51- மந்திரங்களையும் (திருமலைக் கோயிலில்) சொல்லி வந்தார்கள். இப்போது 21 மந்திரங்கள் சொல்கிறார்கள். தினமும் மூன்று வேளை மிகவும் ரகசியமாகச் சொல்லுகிறார்கள். இந்த அர்ச்சனை மந்திரங்களிலே, அலர்மேல்மங்கை நாச்சியாரை ஸ்ரீஆதி சங்கர பகவத்பாதாள், "காஞ்சியில் இருப்பதைப் போல சோபிக்கிறாயே" என்று சொல்கிறார் (காஞ்சி நூபுர சோபி தாயை)

இதுவரை, இந்த அலர்மேல் மங்கை தாயார்மீது உண்டான மந்திரங்கள் புஸ்தகமாகவோ காசெட்டாகவோ வெளிவரவில்லை.

அவை. ஆச்சர்யமான பிரயோகங்களும் அபூர்வ மந்திரங்களும் உள்ளடக்கியவை.

செங்கல்பட்டு மாவட்டம் முதல் நீதிபதி ஜியோ, ஸ்டராட்டன் என்பவர். 1801 ஆம் ஆண்டு முதல், 1803 ஆம் ஆண்டு வரை இவரிடம் திருமலைக் கோயில் நிர்வாகப் பொறுப்பு இருந்து வந்தது.

இவர் பொறுப்பு ஏற்குமுன்பு ஒரு நீதிபதி விசாரணை செய்தார்.

கோயில் அர்ச்சகர்கள், ஜீயர் ஆகியோரிடம் துருவித் துருவி விசாரணை செய்தார்.

தன்னுடைய அறிக்கையை 31.03.1804 ஆம் ஆண்டில் லண்டனில் உள்ள கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமைக்கு சமர்ப்பித்தார்.

இந்த அறிக்கையின் பெயர் ''சாவல் - இ-ஜவாப்''.

இது சரித்திர முக்யத்வம் வாய்ந்த ஒரு ஆவணம்.

"லார்ட் மெக்னட்டன்" என்னும் லண்டன் பிரிவு கௌன்சில் ஒரு அடிப்படை சட்ட ஆவணமாக இதை ஏற்றுக் கொண்டது.

இந்த "சாவல்-இ-ஜவாப்" ஆவணத்திலே ஆதிசங்கரரின் திருமலை விஜயம் பற்றி விபரம் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. கேள்வி - பதில் 28, 29, 30 ஆதிசங்கரர்தான் திருமலையில் முதன் முதலிலே நைவேத்யம், பிரம்மோத்சவம் ஏற்பாடு செய்தார்.

ஆதிசங்கரர் அவதார காலம் பற்றி காஞ்சி பரமாசார்யாள் ஒரு கருத்தரங்கு செய்தார்.

அதில் பல அறிஞர்கள் கலந்துகொண்டு ஆதிசங்கரர் காலம் கி.மு 509 அதாவது இன்றைக்கு 2500 வருஷங்களுக்கு முன்பு என்று முடிவுக்கு வந்தனர். ஆகவே ஆதிசங்கரர் சாமவை அரசியார் வருவதற்கு முன்பாக, திருவேங்கடமுடையானை நேரில் வந்து வழிபாடு செய்து இருக்கிறார்.

ஆதிசங்கரர் விஷ்ணுவின் எதிரி அல்ல. பஜகோவிந்தம் பாடி இருக்கிறார். *''நாராயண ஸ்மிருதி''* என்று கையொப்பம் போட்டு இருக்கிறார்.

சென்னை ஆவண அலுவலகத்தில் பல அரிய செய்திகள் திருவேங்கடமுடையானைப் பற்றி உள்ளன.

- நன்றி "ஓம் சக்தி"

''ஏழுமலையா'' னாகிய ஸ்ரீவேங்கடாசலபதியின் பெருமைகளை, வியாச மகரிஷியின் பதினெட்டுப்புராணங்களுள், பன்னிரெண்டிலே - காணலாம்.

(திருமலாத்ரி, தர்மாத்திரி, அநந்தாத்திரி, வேதாத்திரி ... என்று பற்பல பெயர்கள் உண்டு ஏழுமலைக்கு)

ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தின் முடிவிலே, ஸ்ரீநிவாசனின் திருஉருவம் ஏற்பட்டு ஏழுமலைகளின் மேலே ஸ்தாபிதமானதாகவும், ஒரு சில ஆயிர வருடங்களுக்கு முன்புவரை பிரம்மாதி தேவர்களால் மட்டுமே ஏழுமலையான் பூஜிக்கப் பட்டதாக ஓர் ஐதிகம் உண்டு.

ஸ்ரீகிருஷ்ணருக்கும், ஸ்ரீனிவாசனுக்கும் புராண பூர்வமான தொடர்பும் உண் டாம். துவாபர யுக முடிவிலே வேடனின் அம்புபட்டு, விதிப்படி உடலை விட்ட ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவின் ஆவியானது, வானுலகிலே ஓர் நெடிய கற்சிலையாய் மாறி நின்றதென்றும், கலியுக ஆரம்பம் வரை பிரம்மா முதலான தேவர்கள் பூஜித்தனராம்; "மலைகுனிய" நின்றதாம். அதுதான் இன்றைய திருப்பதித்திருமலை மூலவர், வேங்கடாசலபதி. **(அதனால்தான் மூலவர் முன் ஓர் கிருஷ்ணர் சிலையும், திருச்சானூரிலே மிகப்பெரிய அளவிலே ஸ்ரீகிருஷ்ணர் சந்நிதியும் உள்ளனவோ!!)**

தற்கால வரலாற்று அறிஞர்களின் குறிப்பின்படியே பார்த்தாலும் பாரதப் போர் நடந்தகாலம் கி.மு. 3102- மகாபாரத அர்ஜுனன் "அரவக்கிரி" (சேஷாசலம்) வந்து தீர்த்தமாடியதாக மகாபாரத இதிகாசம் கூறுகிறது.

கி.பி. முதல் நூற்றாண்டு முதல் மானிடரின் கவனத்திற்கு வந்து திருப்பதி திருமலையில் போக்குவரத்து துவங்கியிருக்கிறது.

கி.மு. 2-ம் நூற்றாண்டிலிருந்து திருப்பதியின் மகத்துவம் நாடெங்கும் பரவலாகப் பேசப்பட்டிருக்கிறது.

2-ம் நூற்றாண்டு சங்க இலக்கணமான தொல்காப்பியம், இலக்கியங்களான பரிபாடல், அகநானூறு, எட்டுத் தொகை முதலானவற்றில் திருப்பதிச் சிறப்புகள் இடம் பெற்றுள்ளன.

மேற்படி நூற்றாண்டின் பிற்பகுதி இலக்கியமான இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தில், சேரநாட்டிலிருந்து திருப்பதிக்கு யாத்திரீகர் போனதாகக் குறிப்பு உள்ளது.

மேற்படி காலகட்டத்தில் திருப்பதி மலைப்பகுதியை **"புல்லிதிரையன்"** என்னும் வடுகர்கள் (கர்நாடகர்) பரம்பரை ஆண்டனர். சோழ மன்னர்கள் அவர்களைப் போரிலே ஜெயித்து **"சுவர்ணமுகி"** நதியுடன் கூடிய அப்பகுதியைக் கைப்பற்றியிருக்கிறார்கள்.

வேங்கடாசல புராணத்தில் வரும் சந்திரகிரி சோழ மன்னரில் தொடங்கி, சுதர்மன், **ஆகாசராஜன்** என்று வளர்ந்து, **தொண்டைமான் சக்கரவர்த்தி** யால் திருமலை ஆலயம் முதலிலே உருவாகி இருக்கிறது.

புராணக்கால மேற்படி தொண்டைமானை அடுத்து, சோழராஜ பரம்பரையில் வந்த **தொண்டைமான் இளந்திரையன்** (2-ம் நூ.ஆ) இப்பகுதியைத்

"தொண்டைமண்டலம்" என்ற பெயரோடு இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரித்து ஆண்டிருக்கிறான்; அதில் ஒரு கோட்டம் திருவேங்கடக்கோட்ட மாகும்.

3-ம் நூற்றாண்டிலே தொகுக்கப் பெற்ற வால்மீகி இராமாயணத்தில் ஏழுமலையுடன் கூடிய திருவேங்கடப் புகழ் பாடப்பட்டிருக்கிறது.

4-5, ஆம் நூற்றாண்டுகளிலே.... தமிழ்நாட்டின் பெரும்பகுதியோடு, தொண்டைமண்டலமும், பக்தி உணர்வே இல்லாத **'களப்பிரர்'** என்ற முரட்டு இனத்தவரால் ஆளப்பட்டு, நாடெங்கும் அறநெறிகளும், ஆலய வழிபாடுகளும் ஸ்தம்பித்துப் போயிருக்கின்றன.

திருமலைமேல் மனித நடமாட்டம் குறைந்து போய், அரிதாக இருந்த காலகட்டம் அது!

மேற்படி கால கட்டங்களில் "**பிரமவாதம். ஆசீவகம், நிகண்டம், சாங்கியம், வைசேடிகம், லோகாயதம்**" முதலான பல மதக் கலவங்களாலும், சமண, பௌத்த மதங்களின் ஆவேச வளர்ச்சிபாலும்; சைவ வைணவ பக்தி நெறிகள் சக்தியிழந்து போய்க் கிடந்திருக்கின்றன! **(எழுபத்திரெண்டு துர்மதங்கள் பாரதமெங்கிலும் இருந்த தாக ஆதிசங்கரர் பிற்காலத்தில் குறிப்பிடுகிறார்).**

கி.பி. ஆறாம் நூற்றாண்டு

சைவ, வைணவ சமயங்களைக் கண்களாகப் பேணிய பல்லவ மன்னர்களின் நல்லாட்சிக் காலம்.

பன்னிரு ஆழ்வார் பெருமக்களான பேயாழ்வார், பொய்கை யாழ்வார், பூதத்தாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், குலசேகர ஆழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய பன்னிரு வரும் (கி.பி. 6-முதல் 9-முடிய) 108 திவ்ய தேச மூர்த்திகளுக்கான நாலாயிர திவ்ய பாசுரங்களின் பிரபந்தத்தைப் பாடியருளினார்கள், பனிரெண்டு ஆழ்வார்களுள் 10-பேர், திருப்பதி ஸ்ரீவேங்கடாசலபதியை 213 பாசுரங்களால்' மங்களாசாசனம்' செய்துள்ளனர்.

வைணவ ஆசார்ய பரம்பரையான நாதமுனிகள், உய்யக் கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார், பெரிய நம்பி, ராமானுஜர், எம்பார், பராசரப்பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்குதிருவீதிப்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை, பிள்ளைலோகாசார்யர், திருவாய்மொழிப்பிள்ளை, மணவாளமாமுநிகள், பிள்ளான், கிடாம்பி ஆச்சான், எங்களாழ்வான், நடாதூரம்மாள், அப்புள்ளர்... ஆகிய ஆச்சாரியப் பெருமக்களுடன்... **இறையருட்செல்வர்களான** திருமூலர், கபிலதேவர், கொங்கணர், கம்பர், அருணகிரி, அகோபிலவண்சடகோபஜீயர், பெரிய திருமலாச்சார், "வேதாந்த தேசிகன்" எனப்படும் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன், ராயசம் வேங்கடபதி, சிவப்பிரகாச சுவாமிகள், சைவ எல்லப்ப நாவலர், புரந்தரதாஸர், பிள்ளைப்பெருமாள் அய்யங்கார் , க்ஷேத்திரய்யா, ஸ்ரீ ராமதரிசனம் பெற்ற பக்த

ராமதாசர், தியாகப் பிரம்மம், முதலான பல மகான்களோடு தென்னாட்டின் ஹிந்து சமய மும்மூர்த்திகளான **அத்வைத ஸ்ரீ ஆதிசங்கரர்** (788-820), **விசிட்டாத் வைத ஸ்ரீராமாநுஜர்** (1017-1137), **துவைத ஸ்ரீமத்வாச்சார்யர்** (1198-1275) ஆகியோரும் திருப்பதிப் பெருமைக்கு பெருமை சேர்ந்தவராவார்கள்.

திருப்பதித் திருமலையில் எழுந்தருளிய ஸ்ரீ வேங்கடாசலபதியின் புராண வரலாற்றுச் சுருக்க மாவது....

வேங்கடாசலபதியின் புராண வரலாறு என்றால், அதன் பிள்ளையார் "சுழி" யாகப் போடப்பட வேண்டியது. ஸ்ரீ மகாவிஷ்ணுவின் வராக அவதாரமாகும்!

இப்போதெல்லாம் "திருப்பதி" திருமலைக்கு சுவாமி தரிசனம் செய்யப் போகிறவர்கள், நேராக "வைகுண்டம்" (கியூ - வரிசை மண்டபம்) போய் அமர்ந்து இடிபட்டு, மிதிபட்டு நகர்ந்து கொண்டே கோயிலுக்குள் போய் திருவேங்கடவனை பார்த்தும் பார்க்காமலும் திரும்பி விடுவதில் யாத்திரையின் பலன் பூர்த்தியாகாது!" என்று T.T.D (திருமலா திருப்பதி தேவஸ்தானம்) ஸ்பீக்கர்களே அலறுகின்றன! ஆனால் அதையெல்லாம் யார் கேட்கிறார்கள்? ஆயிரத்தில் ஒருவர்தான் முறைப் படியாக சுவாமி புஷ்கரணி (திருக்குளம்) கரையிலே இருக்கும் **ஸ்ரீ வராகமூர்த்தி**யை தரிசித்த பிறகு "வைகுண்ட மண்டபத்திற்கு" போகிறார் கள்!

வரலாறு எழுதும் போதாவது, வராக மூர்த்தியைக் கூறிவிட்டு அவரது அனுமதி பெற்று, ஏழுமலை மேல் குடிபுகுந்த ஸ்ரீ பாலாஜியைப் பார்ப்போம்! துவாபரயுகம் முடிந்ததும் அண்டசராசர அனைத்து உலகங்களும் இருந்த இடம் தெரியாதபடி எங்குமே நிறைந்திருந்த நீர்ப்பரப்பின் அலைநடுவே. ஆலிலைமேல், கொவ்வைச் செவ்வாயும் குமிண் சிரிப்புமாக குழந்தைக் கண்ணன் (ஸ்ரீமஹா விஷ்ணு) மிதந்து கொண்டிருந்தான்!

அந்தப் பிரளயத்தால் பாதாளத்திலே அழுந்திக் கிடந்த பூமண்டலத்தை, பாயாகச் சுருட்டிக் கட்லின் அடியிலே பதுக்குகிறான். **ஹிரண்யாட்சன்** எனும் அசுரன்.

பூமாதேவி யின் சோகத்தைத் தீர்ப்பதற்காக ஸ்ரீ மகா விஷ்ணு **சுவேதவராக** அவதாரம் (வெள்ளைப்பன்றி) வடிவெடுத்து அதளபாதாளம் சென்று அசுரனை வதம் செய்து பூமண்டலத்தை மீட்டுவருகிறார்; வானவர் பூமாரிபொழிய... ஸ்ரீவாரக மூர்த்தியின் கட்டளைப்படி வைகுந்தத்திலிருந்து **கிரீடாசலத்தை** எடுத்துவந்து ஸ்தாபிக்கிறான் "பெரிய திருவடி" யாகிய **கருடபகவான்.** காலச்சுழலிலே சில யுகங்கள் கரைந்து போகின்றன! அந்த கிரீடாசலம் தான் இன்றைய ஏழுமலை நடுவிலை உள்ள திருமலையாகும். "பிறக்கப்போகும் கலியுகத்திலே மக்களின் நலிவு தீர்ப்போம்" என்று ஸ்ரீவாரகமூர்த்தி அங்கேயே ஆதிவராகமூர்த்தியாகி பூமிக்குக் காவலாய் கோயில் கொண்டு இருப்பதால் தான் இந்தயுகத்துக்கே "**சுவேதவராக கல்பம்**" எனப் பெயர் ஏற்படுகிறது.

கிருதயுகத்தில் நூற்றுக்குநூறு முழுமையாக தர்மம் உண்மை, சத்தியம்; திரேதாயுகத்திலே அவை பாதிக்குப் பாதியாகக் குறைந்தது! அடுத்த துவாபரயுகத்திலே அதிலும் பாதியானது அதாவது நூற்றுக்கு இருபத்தைந்து என்றானது! நாம் வாழும் இந்த கலியுகத்திலோ... நூற்றுக்குப் பத்தாவது தர்மம் தேறுமா என்ற நிலையில்தான் யுகதர்மத்தைக் காப்பதற்காக மகரிஷிகள் ஒன்று கூடி அனைத்துலக நலத்துக்கான ஓர் மகா யாகம் செய்கின்றனர்!

யாகத்தின் "பூர்ணாஹூதி" அவிர்பாகத்தை மும்மூர்த்தி களில் யாருக்கு வழங்குவதென்று சர்ச்சை ஏற்படுகிறது. பரீட்சை செய்து முடிவு செய்ய, முனிவருள் முன் கோபியும், மகா ஞானியுமாகிய **பிருகு முனிவர்** மூன்று லோகங்களுக்கும் புறப்படுகிறார்.

கைலாயம் செல்கிறார், சிவனும் உமையும் கண்மூடி நிஷ்டையில் இருக்கிறார்கள்! சத்தியலோகம் போகிறார். பிரம்மனும் சரஸ்வதியும் படைப்புத் தொழிலின் நுணுக் கத்தை விவாதித்தப்படி சர்ச்சையிலே இருக்கின்றனர்!

வைகுந்தத்திலே, ஸ்ரீமகா விஷ்ணுவாகிய ஸ்ரீமந் நாராயணன், ஆதிசேஷமஞ்சத்திலே ஸ்ரீமகாலட்சுமியின் அன்பான பணிவிடையிலே. தன்னை மறந்த நிலையிலே மாயப்புன்னகையோடு யோக நித்திரையில் இருந்தார்.

கோபாவேசமுடன் எதிரில் நின்றிருந்த பிருகு முனிவர், பகவானின் திருமார்பிலே எட்டி உதைக்கிறார்! கண்மலர்ந்த திருமால், பக்தனின் காலைப் பிடித்து நீவிவிடுகிறார்.! அவரது இதயத்திலே குடியிருந்த மகாலட்சுமி சினமிகுந்து எழுந்து, மண்ணுலகிலே **கரவீரபுரம்** எனும் ஏகாந்த இடம்சென்று தவத்திலே மூழ்கிவிடுகிறாள்.

மகாலட்சுமி இல்லாத நாரயணர், இருண்டு போன வைகுந்தத்தை விட்டு பூமிக்கு வருகிறார்.

சந்திர கிரிப் பகுதியில் புஷ்கரகணிக் கரையிலே, கோயில் கொண்டிருந்த ஸ்ரீவராகமூர்த்தியை தரிசித்து வணங்கி, அவரது அனுமதியோடு ஏழுமலைகளின் வனப்பகுதியிலே வாழும் உரிமையைப் பெறுகிறார். ஸ்ரீ (நர) நாராயணர்.

கரவீரபுரத்திலே தவம் செய்த மகாலட்சுமியிடம் வந்த பிரம்மா முதலான தேவர்கள், ஸ்ரீமந்நாராயணர் பூமிக்கு வந்துவிட்ட நிலை, வனத்திலே அலைந்து புளிய மரத்தடியில் அமர்ந்து தியானத்திலே மூழ்கியது, அவரை மிகப்பெரும் புற்று வளர்ந்து மூடிவிட்டது. முதலான சகல விஷயங்களையும் கூறியதும் மாநுடவடிவிலே பூமிக்கு வந்துவிட்ட மணவாளனைக்காக்க முடிவெடுத்த மகா லட்சுமி. பசுவை மேய்க்கும் இடைப் பெண்ணாக உருவெடுத்துப் புறப்படுகிறாள்.

சந்திரகிரிப் பகுதியை ஆண்ட ஆதிக்காலச் சோழ மன்னனிடம் வந்த இடைப்பெண் (மகாலட்சுமி), தனது பசுவையும் கன்றையும் ஒப்படைத்து தான் தீர்த்த யாத்திரை போவதாயும் திரும்பி வரும்வரை, இப்பசுவும் கன்றும் உங்களது அடைக்கலம் எனப் போகிறாள்.

அந்தமாயப்பசு, புற்றிலே இருந்த நாராயணனுக்கு, வேளைதவறால் பாலைப் பொழிந்தது! இத்தகவலை மாடோட்டி, அரசனிடம் கூற. அரசினின் சினம்! புற்றை இடிக்கச் சொல்வது - கடப்பாறை கொண்டு சேவகர் புற்றை இடிக்க! சிரசிலே அடிபட்டு ரத்தம் வடிய பெருமாள் எழுகிறார். விபரம் அறிந்த சந்திரகிரி மன்னன் மன்னிப்பு கேட்பது!

காயத்துடன் பெருமாள் காட்டில் அலைகிறார். அப்போது வகுளமாலிகை எனும் முதாட்டியை சந்திக்கிறார். "நான் ஸ்ரீனிவாசன்"; அனாதை எனக்கூற; "இனி நானே உன் தாய்" என்று கூறி ஸ்ரீனிவாசனைத் தனது குடிலுக்கு அழைத்துப் போகிறாள் வகுளமாலிகை.

(இந்த வகுளமாலிகை கடந்து போன யுகத்திலே ஸ்ரீகிருஷ்ணனைப் பேணிய, கோகுலத்து யசோதையாகும்; அந்த ஜன்மாவிலே பகவான் தந்த வரத்தின்படி, இந்த ஜன்மாவில் பகவான் சீனிவானாகவும் அவனை வளர்க்கும் தாயாக யசோதை வகுளமாலிகை யாகவும் வந்தனர்)

வழக்கம்போல வராக மூர்த்தியை வணங்கிய வகுளமாலிகையிடம் "நான் வேறு, ஸ்ரீநிவாசன் வேறு அல்ல; கலியுக நலிவுகளைத் தீர்ப்பதற்காக எனது அம்சமே இப்படி வந்துள்ளது." என்று கூறி ஆசி வழங்குகிறார். காலம் சுழல்கிறது!

சோழமன்னர் பரம்பரைகள் தொடர்ந்து, சுதர்மன், ஆகாசராஜன் என்று படர்ந்து தழைத்தது. ஆகாச ராஜனுக்கு பிள்ளைபேறு இல்லாததால். யாகம் செய்வது. யாகபூமியில் பொன் ஏர் உழும்போது, தந்தப் பேழையிலே பெண்குழந்தை கிடைப்பது. தாமரை இதழ்களிலே தவழ்ந்த அந்தச் சிசுவிற்கு பத்மாவதி எனப் பெயரிட்டு வளர்க் கிறான் ஆகாசராசன்.

செடியென வளர்ந்து, கொடியெனப் படர்ந்து பேரழகுப்பெண்ணாகிய பத்மாவதி, தனது சேடியருடன் ஆடிப்பாடும் வேளையிலே கானகத்தில் ஸ்ரீநிவாசனை சந்திக்கிறாள். தனது முற்பிறப்பைச் சிந்திக்கிறாள்.

திரேதாயுகத்திலே வேதவதியெனும் இளமங்கை. ஸ்ரீமகா விஷ்ணுவே தனக்கு மணாளனாக வரவேண்டும் எனத்தவமிருக்கிறாள். அங்கு வந்த இராவணன், அவளை பலவந்தமாக அடைய நினைக்கிறான். "பெண்ணால் தான் உனக்கு அழிவு" என சபித்த வேதவதி, தீயிலே பாய்ந்து உயிர்விடுகிறாள். அதன் பிறகு (ராமாயணத்தில்) சீதையை ராவணன் சிறையெடுத்துச் செல்லும் போது தன்னிடம் அடைக்கலமாகியிருந்த வேதவதியைச் சீதையாக்கி உண்மைச் சீதையைத் தனது மனைவியிடம் ஒப்படைக்கிறான் அக்னிதேவன்.

ராம, ராவணப்போர் முடிவில் தீக்குளித்த சீதையோடு, உண்மைச் சீதையும் வருகிறாள். அக்னிதேவன் விபரம் கூற, "இப்பிறவியிலே நான் ஏகபத்னி விரதன், அடுத்த யுகத்திலே ஸ்ரீனிவாசனாக வந்து உன்னை மணம் புரிவோம்" என்று பகவான் (ஸ்ரீராமர்) தந்த வரம் நினைவுக்கு வருகிறது பத்மாவதிக்கு.

கணவனாக வரப்போகும் காதலனை கண்ணால் விழுங்குகிறாள் பத்மாவதி! காதலியைப் பிரிய முடியாமல் பிரிகிறார் ஸ்ரீனிவாசன். விபரம் அறிந்த வகுளமாலிகை மன்னன் ஆகாச ராஜனிடம் விபரம் கூறி, "பகவானே உங்களுக்கு மருமகனாக வரப்போகிறார்" என்றதும் மன்னன் தனது குலகுருவான சுக முனிவரை வணங்க "நீ மஹாபாக்யவான்" என்று சுகர் மொழிந்ததும் ஆகாசராஜனின் பரவசம்.

ஸ்ரீனிவாசன் பத்மாவதி திருமணம் முடிவாகிறது! திருமணச் செலவுக்குப் பணம் வேண்டுமே. என்று சிவபெருமானுடன் ஸ்ரீனிவாசன் ஆலோசனை செய்து முடிவிலே, பிரம்மாவின் யோசனைப்படி செல்வத்தின் அதிபதியாகிய குபேரனிடம் **பதிநாலாயிரம் ராமநிஷ்காமப் பொற்காசுகளை** கடனாகப் பெறுவது ஆண்டு தோறும் வட்டி செலுத்துவது என்று தீர்மானிப்பது.

கரவீரபுரத்திலே தவமியற்றிய நிலையில் இருந்த மகாலட்சுமியிடம், சூரிய தேவனான ஆதவனே தூது போகிறான். நிலைவிளக்கத்தின் பிறகு ஸ்ரீதேவியாகிய மகாலட்சுமி, பத்மாவதி ஸ்ரீனிவாசனின் திருமணத்திற்கு ஒப்புதல் தந்ததோடு உடன் புறப்படுகிறாள்.


மூவுலக தேவ, மானுடர் யாவரும் கூடியிருக்க. ஸ்ரீனிவாசன் பத்மாவதி திருமணம் நாராயணபுரம் அரண்மனையிலே கோலாகலமாக நடைபெறுகிறது.

புதுமணத்தம்பதியர் ஸ்ரீநிவாசன் பத்மாவதி இருவரும், பூவுலகப் புனித முனிவரான **அகஸ்தியர்** ஆஸ்ரமத்திலே விருந்துக்குவந்து, ஆறுமாதகாலம் வரை மலையேறக் கூடாதாகையால் அங்கேயே தங்கி விடுகின்றனர்.

அப்போது பத்மாவதியின் பெற்றோர், பூவுலக வாழ்வை முடித்து வைகுந்த வாசிகளாகிறார்கள்!

ஆகாச ராஜனுக்குப் பிறகு அவனது மகன் தொண்டைமான் சக்ரவர்த்தியாகிறார். அவரிடம் தனக்கொரு "இல்" அமைத்துத்தரும் படி ஸ்ரீனி வாசன் கட்டளையிட, ஆனந்த விமானத்துடன் கூடிய மாபொரும் புனிதமான **"கோ - இல்"** ஒன்றையே ஏழுமலைகளின் மேல் அமைத்து, ஸ்ரீனிவாச பத்மாவதி யரை அதில் குடியேற அழைத்துச் செல்கிறார் தொண்டைமான் சக்கரவர்த்தி.

மங்கல இசை முழக்கத்தோடு வேதகோஷங்களும் "ஏழுமலைவாசா! வேங்கடரமணா! ஸ்ரீனிவாசா." என்ற மக்களின் ஏகோபித்த பரவசப் பேரொலி முழக்கமும் ததும்பித்தவழும் இனிய வேளையிலே, மகாலட்சுமி பத்மாவதியருடன் ஸ்ரீனிவாசப்பெருமாள் ஆனந்தவிமான கருவறையில் நுழைகிறார். நாரதர், பெரியதிருவடியான கருடாழ்வார், சிறிய திருவடியான ஆஞ்சநேயர், பாற்கடல் மஞ்சமாகிய ஆதிசேஷன், விஸ்வக்ஷேனர், நித்யசூரிகள் முதலான அனைவரது வருகையும், அத்தனை பேருடைய மொத்த ஆராதனையும் - மானுட ஸ்ரீனிவாசனை மகா பிரபு திருமாலவன் **ஸ்ரீனிவாச வேங்கடாசலபதி** யாக மாற்றி விடுகிறது!



முன்பெல்லாம் குலசேகரன்படி வரையிலே சென்று பெருமானை வணங்குகிறோம். (சுமார் முன்றடி இடைவெளியில்) ஒரு ரூபாய் சீட்டுக்கு கற்பூர ஹாரத்தி) பச்சைக் கற்பூரம் குங்குமம் பூ மணக்கும் தீர்த்தம் உண்டு. இப்போது மூச்! மூலவர் பாலாஜிக்கும், நமக்கும் இடைவெளி 50 அடி தூரம் ஆகிவிட்டது.. 1972-ல் ஓவியர் S. கணேசனுக்காக "திருப்பதி தெய்வம்" நூல் எழுதினேன். அதை குலசேகரன்படியிலிருந்து வெளியிட்டோம், இப்போது "V.I.P" க்களைத் தவிர, மற்ற அனைவருக்கும்... "போ.. போ.:. போ" தான்! இனிமேல், தர்மதரிசனப் பாமரனுக்கு ஸ்ரீனிவாசனை நின்று பார்த்து தரிசிக்கும் பாக்கியம் மீண்டும் வருமா?

"திருப்பதித் திருமலை வேங்கடரமணா! சரணம் சரணம்"

திருப்பதி, திருமலையெங்கிலும் சுமார் 66-கோடி தீர்த்தங்கள் வியாபித்துள்ளன! கால- நேர- அவரவர் வசதிக்கேற்ப.... புனித யாத்திரையிலே 1008, 364, 216, 108, 68, 26, 18, என்று தீர்த்தமாடலாம்.. பிரதான தீர்த்தங் களாகிய.... **சுவாமிபுஷ்கரணி, தும்புரு தீர்த்தம், நாரத தீர்த்தம், ஆகாய கங்கை** (கோயிலிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் உள்ளது"ஆகாயகங்கை".) **பாபவிநாச தீர்த்தம்,** (கோயிலிருந்து மூன்று மைல் தூரத்தில் உள்ளதாகும்!) (முன்பெல்லாம் திருப்பதி யாத்திரீகர்கள் தவறாமல் பாபவிநாசம் சென்று தீர்த்தமாடித்திரும்புவர், இப்போது... ஆயிரத்தில் ஒருவர்தான்!) **கிருஷ்ணதீர்த்தம், சக்கரதீர்த்தம்,... சப்தரிஷிதீர்த்தம், பாண்டவதீர்த்தம்..., கபிலதீர்த்தம்,** (மலையேறும் வழியில் சமதரைப்பகுதியில் உள்ள ஈஸ்வரன் (சிவன்) கோயிலுடன் உள்ளது கபில தீர்த்தம்). **தொட்டிதீர்த்தம் குமாரதாரை.., விஷ்வக்ஸேன தீர்த்தம், பஞ்சாயுததீர்த்தம் இந்திர தீர்த்தம், அக்கினி தீர்த்தம், பிரம்மதீர்த்தம், கோகர்ப்பதீர்த்தம்** முதலான பதி னெட்டுத் தீர்த்தங்களிலும் முறையோடு நீராடினால் "குறையில்லாப் பெருவாழ்வு" என்கிறது "வேங்கடேசபராக் கிரமம்".

ஆண்டுதோறும் மாசிமாதப் பௌர்ணமிகளில் அண்டசராசரங்களிலுள்ள அறுபத்திஆறு கோடித் தீர்த்தங் களும் "கோனேரிக்கரை" யான (திருமலை) **சுவாமி புஷ்கரணி** யில் சங்கமமாவதால், "அன்றைய புஷ்கரணி தீர்த்த ஸ்பரிசம் சர்வபாப நாசம்" என்கிறது "பிரமாண்ட புராணம்".

திருப்பதி திருமலை ஆலயங்களின் ஆரம்பகால போஷகர்களாக புகழ்மிகு தஞ்சைத் தரணிச் சோழர்கள், மதுரைநாட்டுப் பாண்டியர்களோடு ஆறாம் நூற்றாண்டு முதல், காஞ்சிமாநகரப்புகழ் மிகு பல்லவ மன்னர்களும் இடம் பெறு கிறார்கள்.

ஏழாம் நூற்றாண்டு

வைணவ ஆச்சார்ய பரம்பரையில் வரும் நாதமுனிகள் திருப்பதிக்கு வந்து அன்றைய ஆலய வழிபாட்டு நடைமுறைகள்... சிறப்பில்லாததைக் கண்டு, தமது பேரன் **ஆளவந்தாரை**த் திருமலைக்கோயிலின் சேவைக்கு அனுப்பியிருக்கிறார்.

ஆளவந்தாரின் பேரனாகிய **திருமலைநம்பி** யின் திருப்பதித் தொண்டு குறிப்பிடத்தக்கதாகும். (திருமலை நம்பியின் மருமகனான ஸ்ரீ ராமாநுஜரால் திருப்பதி க்ஷேத்திரம் பிற்காலத்தில் பெரும் புகழ் பெறப்போகிறது.)

பிரதேச மன்னர்களின் மான்யங்களோடு ஏழாம் நூற்றாண்டின் இறுதியில் நந்திவர்மப் பல்லவன் தந்த ஏராளமான பொற்காசுகளால், ஆலய நந்தா விளக்குத் திருப்பணி புதுப் பொலிவோடு சிறப்படைகிறது.

எட்டாம் நூற்றாண்டு

தென் பாரதத்தில் சமண, பௌத்த மதங்கள் வளர்ந்துவிட்ட மதர்ப்பிலே... அளவுக்கு மீறிய சட்டதிட்ட சம்ராதாய கெடுபிடி களில் ஈடுபடவே, படிப்படியாக மெருகைஇழந்ததோடு, மற்ற சில்லரை மதங்களும் இல்லாமல் தேய்ந்து வந்த காலகட்டம்.

பிறமதச் சூறாவளியால் வீழ்ந்து விடாதிருக்க சைவ, வைணவக் கொடிகள் இரண்டும், ஒரு மரமாகப் பிணைந்து வளர்ந்த ஒருமைப்பாட்டு நிலைமாறி, அளவை மீறிய சம்ரதாய கெடுபிடிகள்! "எதிர்க்கட்சி" போலப்பாவித்து ஒன்றை ஒன்று ஏசியபடியே... "நீயா நானா" ப் பூசல்கள் தோன்றிப் புகைந்த பொல்லாத நேரம்...! திருப்பதிப் பெருமாள் "**சிவனா, விஷ்ணுவா, முருகனா, அம்பாளா**" என்ற சர்ச்சை உருவாகத் தொடங்கியது.

ஏழுமலை மூலவர், சங்கு சக்கரங்கள் இல்லாமல் இரு புயங்களோடு நிற்பதால், குன்று தோறும் நின்று ஆடும் குமரன் **முருகன்** என்றும், சடாமுடி, நாகாபரணம், மழுவோடு விளங்குவதால் **சிவபெருமான்** எனவும், ஸ்ரீசக்கரம் உள்ள கிரீடமும், சிம்ம இலச்சினை ஆலயத்துள் ஆங்காங்கே இருப்பதால் **தேவிபராசக்தி** யெனவும் பேதாபேதச் சர்ச்சைகள் பெருகி வளர்கின்றன. கோயிலில் பெருமாளை ஆராதித்து வந்த வைணவப் பூசகர்கள் வருமானத்தைப் பெரிதெனக் கருதத் தொடங்கி வியாபார ரீதியிலே செயல்படத் தொடங்கினர்!

சிரத்தா பக்தியற்றபட்டாச்சார்யர்களை, அப்போதய திருப்பதிப் பகுதியை ஆண்ட யாதவமன்னர் தண்டித்து வெளியேற்றி விடுகிறார்! திருமலைக் கோயில், ஆகம முறைப்படியான பூஜையற்றுப் போன நிலையிலே சைவர்கள், பெருமாளுக்கு கடமையைச் செய்தனர். ஆனால் சில "படி" களிலே காணப்படுவது போல கோயிலை ஆக்ரமித்து உரிமை கொண்டாடியதாகச் சொல்லப்படுவதில், உண்மையே இருக்க முடியாது என்பதை அடுத்த நூற்றாண்டு நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டப் போகின்றன.

ஒன்பதாம் நூற்றாண்டு

கி.பி. 828-ல் திருமலை மூலத்தானம் புதுபிக்கப்பட்ட தால், **"திருவிளங்கோயில்"** ஏற்படுத்தி மூலவருக்கு ("திருச்சோகினூர்" என்னும் இடத்திலே) தாற்காலிக பூஜைகள் நடந்துள்ளன. மேற்படி இளங்கோயிலில் நொந்தா விளக்கு (அணையாவிளக்கு) எரிவதற்காக கி.பி **850-ல் நந்திவர்ம பல்லவன்** ஏராளமான பொன் கொடுத்திருக்கிறார்.

பல்லவமன்னர்களின் ஆதரவுடனும், யாதவச் சிற்றரசர்களின் மட்டற்ற சேவைகளாலும் இந்த காலகட்டத்திலே திருமலை ஆலயம் செழுமை பெறுகிறது.

சோழ பரம்பரையைச் சேர்ந்த பல்லவ அரசி **சாமவை** எனும் பெண்ணரசி 3-ஆயிரம் குழி நிலத்தையும், 47-களஞ்சுப் பொன்னையும் திருமலை ஆலயத்துக்கு வழங்குகிறாள்.

பல்லவமன்னர்கள் **"ஓஹோ"** என்றிருந்த நிலைமாறி வைபோக சௌபாக்கி யங்களையெல்லாம் இழந்து சிற்றரசர்களாய், சேனாதிபதிகளாய் மாறிக் கொண் டிருந்த காலகட்டம்! அப்போதைய காஞ்சிப் பல்லவனின் ராணி **சாமவை,** ஏழுமலையான் மீது மாறாத பக்தி கொண்டவள். திருமலைப் பெருமாள் கோயில், சர்வ சாதாரண கிராமக் கோயிலாக இருந்த அப்போது "திருப்பதி" (கீழ்) என்று ஊரே இல்லாமல் காடாகக் கிடந்த நேரம்(கி.பி.-833) திருமலையிலோ... சாதாரண சுற்றுச்சுவருடன் கூடிய வேங்கடாசலபதி கோயில், பக்கத்திலே ஸ்வாமி புஷ்கரணிக் குளம், எதிரே மிகச்சிறிதான ஆதிவராகர் கோயில் என்றிருந்த அந்த நாளிலே, பல்லவ ராணி சாமவைதான் திருமலைக் கோயிலிலே முதன் முதலாக **பிரம்மோத்ஸவம்** நடத்தியிருக்கிறார் என்பது கல்வெட்டுச் செய்தி. **திருமலை** ஸ்ரீநிவாசனுக்கு பல்லவ அரசி சாமவை அன்று செய்து வைத்த **மணவாளர் (உத்ஸவமூர்த்தி)** வெள்ளிப்படிமம், இன்றும் மூலவர் ஸ்ரீவேங்கடாஜலபதியின் முன்னால் உள்ளது.

பத்தாம் நூற்றாண்டு

ஆலய நிவாகத்தை சிரத்தையோடு கண் காணித்துவந்த திருமலை நம்பியின் முதுமை காரணமாக... அடுத்த ஒரு சிறந்த நிர்வாகி திருலைக்குத் தேவைப் பட்ட காலகட்டம்!

கி.பி. 952-ல் **பராந்தகச் சோழ**ரின் ஆட்சியில் தொண்டைமண்டலம் பல சிறப்புகளைப் பெறுகிறது;

சோழமன்னரின் படைத்தலைவன் ஒருவன், ஏராளமான பொன்னா பரணங்களை திருமலை ஆலயத் திற்கு காணிக்கையாக வழங்குகிறான்.

கணக்கில்லாமல் நிலங்களும் பொன்னும் மணியும் காணிக்கைகளுமாக ஏழுமலையானுக்குக் குவிந்த அந்த காலகட்டத்தில், கோயிலைப் பேண வேண்டிய திருமலை வைணவக் குடும்பத்தார் சிலரால், ஆலயப் புனிதம் பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது! இந்த நிலையில் சைவர்கள் ஏராளமாக வந்து ஏழு மலை யானை வழிபடவே.., முன்பே... புகைந்து கொண்டிருந்த சைவ வைணவ மூர்த்தி பேதப்புகை... தீயாய்க் கனிந்திருக்கிறது, ஏகதெய்வ ஒருமைப்பாட்டுத் தெய்விகம், திருப்பதித் திருமலையிலே நலிந்திருக்கிறது!!

பதினொன்றாம் நூற்றாண்டு

கி.பி. 1001-ல் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டி உலகப்புகழ்பெற்ற "சோழர் குலத் திலகம்" **ராஜராஜ சோழ**னின் காணிக்கை களோடு, சோழ அரசி, "**அம்மனார்**" என்ற மாதரசியின் ஐம்பத்திஏழு களஞ்சுப் பொன்னும் திருமலை ஆலயத்திற்கு கிடைத்திருக்கிறது.

சோழ மாமன்னர்களின் புகழ்மிக்க ஆட்சியிலே, காலப்புயலால் ஏற்பட்ட சரிவிற்குப் பிறகு, கை ஓங்கிய பாண்டிய ராஜாக்களின் பராமரிப்பிலே திருமலைக் கோயில் பெருமை கண்டிருக்கிறது.


1016-ல் சோழதேச பிராமணர் ஒருவர் 26 களஞ்சுப் பொன்னைத் திருமலைப்பெருமாளுக்கு வழங்கியுள்ளார்... இந்த நிலையில்தான்... "**ஸ்ரீரங்கம் கோயிலொழுகு**", "**திருமலைக் கோயிலொழுகு**" எனப்படும் ஆலய நடைமுறை மற்றும் வரலாறுகளைத் தொகுத்துக் கூறும் "ஆலயக்களஞ்சிய" நூல்களை உருவாக்கியவரும், "எம்பெருமானார்', "உடையவர்" எனப் போற்றப் படுபவருமான **ஸ்ரீ ராமாநுஜர்**, ஸ்ரீரங்கத்திலிருந்து திருமலை ஆலயத்தின் நிர்வாக சேவைக்காக **அனந்தாழ்வான்** என்னும் தனது சீடனை அனுப்பிவைக்கிறார்.

1030-ல் ஸ்ரீ ராமாநுஜர் திருமலைக்கு வந்து போயிருக்கிறார்; மூர்த்தி பேதப்பூசலும், திருமலை ஆலய நடைமுறைக் குறைபாடுகளும் அவரைத் தீவிரமாகச் சிந்திக்க வைக்கின்றன. எப்படியும் ஓர் முடிவெடுத்தே தீருவது என்ற தீர்மானத்திற்கு வருகிறார்.

பனிரெண்டாம் நூற்றாண்டு

யாதவ, சாளுவ, காகதீய, மன்னர்களோடு, மைசூர்ச் சீமையை ஆண்ட **விட்டல தேவராயன்** என்ற ஜைன அரசன், ஸ்ரீராமாநுஜ மகாசக்தியால் ஈர்க்கப்பட்டு வைணவராகி "**விஷ்ணுவர்த்தனர்**" என்ற பெயரோடு திருமலைப் பெருமாளைப் போற்றிய நூற்றாண்டு.

1130-ல் இரண்டாம் முறையாக ஸ்ரீராமாநுஜர் திருமலைக்கு வந்து... ஆலய நிர்வாக நடைமுறை, பூஜை வழிபாடுகளை ஒழுங்குபடுத்தியதோடு, கீழ்த்திருப்பதி கோவிந்தராஜப் பெருமாள் ஆலயத்தையும் விரிவுப்படுத்தி, தன்னலமற்று ஆலயத்தை நிர்வகிக்க "ஜீயர்கள்' (மடாதிபதி) ஸ்தானத்தை ஏற்படுத்தி, உரியவர்களை நியமித்து, திருமலையின் முழு நிர்வாகப் பொறுப்பையும் அவர்களிடம் ஒப்படைக்கிறார்.



மூன்று நூற்றாண்டுகளாகத் தொடர்ந்த மூர்த்தி பேதச் சர்ச்சைக்கு, சாம, தான, பேத, தண்ட சாதுர்யங்களாலும் "அலர் மேல் மங்கை உரைமார்பா" என்ற நம்மாழ்வார் பாசுர ஆதாரத்தையும் எடுத்துக்காட்டி, அன்றைய சந்திரிகிரி திருப்பதிப் பகுதி மன்னன் **கட்டிதேவயாதவராயன்** அவையிலே, ஏழுமலைக் கோயிலின் ஆனந்த நிலைய மூலவர், **"சங்கு சக்கர ஸ்ரீனிவாசன்"** தான் என்பதை ஸ்ரீராமாநுஜர் உறுதி செய்கிறார்.

"மாலவனா? வேலவனா" திருமலைமூலவன்? எனும் சர்ச்சை மேலும் சிலகாலம் புகைந்தே வந்திருக்கிறது! (இன்றும் கூட சில தீவிர சைவர் நெஞ்சிலே அந்த பிரச்னை "சுருக்" தான்!!

1150-காலகட்டத்திலே மதுரை நாட்டு **ஜடாவர்மசுந்தரபாண்டிய** னின் திருப்பணிகள் திருப்பதி திருமலைக் கோயி லுக்கு விரிவாக இருந்ததற்கான தமிழ் கல்வெட்டுகளை இன்றும் திருப்பதி திருமலைக் கோயில்களிலே காணலாம்.

ஸ்ரீரங்கத்தை மையமாக வைத்து 120 வயதுவரை வாழ்ந்து, வைணவத்தைக் கட்டிக் காத்த ஸ்ரீராமாநுஜப் பெருந்தகை, மூர்த்தி பேதத்தை விரும்பாதவர் என்பதற்கு ஸ்ரீரங்க விமானத்திலே இடம் பெற்றுள்ள துர்க்கை, விநாயகர் விக்ரஹங்களே சாட்சி, அதோடு மைசூர் சீமையிலே வைணவக் கோட்டையான திருநாராயணபுரத்திலே சிதிலம் அடைந்து இடிந்து கிடந்த ஒரு சிவன் கோயிலைச் சீர்படுத்தி பூஜைக்கு வழிவகுத்திருக்கிறார் ஸ்ரீராமாநுஜர் என்பது வரலாற்றுக்குறிப்பு. **(எனவே ஆதிசங்கரர், வைஷ்ணவ துவேஷி அல்ல, ராமாநுஜர் சைவத்தின் எதிரியல்ல என்பதை நாமெல்லோரும் பூரணமாக உணர்வோமாக)**

ஸ்ரீராமாநுஜரின் பிரதான சீடரான ஆளவந்தார் பாடிய "வேங்கடேச இதிகாசமாலை" யில் **"திருமலையில் முருகனும் ஒரு தெய்வமே"**, என உறுதியாகக் கூறியிருக் கிறார்.

திருமலையின் தற்போதைய கார்ப்பாதை விநாயகரும், குமாரதாரை தீர்த்தக்கரையிலுள்ள முருகன் சன்னதியும், கபில தீர்த்த ஈஸ்வரன் (சிவன்)

கோயிலும் சான்னித்யம் குறையாமல் இன்றளவும் திருப்பதி க்ஷேத்திரத்திலே ஆராதனை பெறுகின்றன.

"பதினெட்டு வைணவ சம்ரதாயங்களில், முருகன் கோயிலுக்குச் சென்று வழிபடுவதும் ஒன்று" என்ற "புகைப்பட" ஆதாரமும், 12-ம் நூற்றாண்டிலே திருமலைக் கோயில் வளாகத்திலே பூஜையில் இருந்த சண்முகர் சிற்பம் (மூலவர்) திருமலா திருப்பதி பொன்விழா மியூசியத்தில் இடம் பெற்றிருந்ததையும் அடியேன் (வேம்பத்தூர் கிருஷ்ணன்) பலமுறை கண்டு மகிழ்ந்திருக்கிறேன். எனவே சைவ, வைஷ்ணவ மூர்த்தி பேத வீண்சர்ச்சை விதண்டா வாதங்களெல்லாம். ஆந்திர, கர்நாடக கேரளாக்களிலே பெரும்பாலும் இல்லை என்றே கூறலாம்!

நாற்பது ஆண்டுகாலமாக தமிழ் சினிமா துறையின் துணை டைரக்டராக, இந்திய பிரதான க்ஷேத்திரம் பலவற்றையும் நிதானமாக இருந்து தரிசித்தவன். அங்கெல்லாம் மூர்த்தி பேதமில்லாத **ஸ்ரீராமசிவமயம்** தான். தமிழகத்தில் மட்டுமே யானைக்குப் போடும் நாமம்- பற்றிய வழக்கு நூறு, நூறு ஆண்டுகளாக நடக்கும் அதிசயம்! இல்லை! கொடுமை!!

பதின்மூன்றாம் நூற்றாண்டு

ஸ்ரீராமானுஜரின் கட்டளைப்படி, இரு மடாலயங் களின் ஞானானுபவ "ஜீயர்" களால் திருமலை ஆலய நிர்வாகம் பெருவளர்ச்சி கண்டு, அது நாள் வரை தடைப் பட்டு நின்றிருந்த பெருவிழாவான **பிரம்மோத்ஸவம்,** மீண்டும் இந்த நூற்றாண்டில் தொடங்குகிறது.

1251-ல் நெல்லூர், கடப்பை வரை கைப்பற்றிய **சடையவர்மசுந்தர பாண்டியன்,** திருமலை ஆலயத்திற்குப் பல பொற்கலங்களை காணிக்கை தருகிறான். 1260-ல் **வீர நரசிம்ம யாதவ ராயர்,** ஆலய விமானத்திற்கு முதன் முதலாகப் பொன் வேய்ந்து, தங்கக்கலசங்களை அமைத்தார் எனச் சாசனங்கள் கூறுகின்றன.

1268-ல் பிறந்த **வேதாந்த தேசிகர்** (திருமலைக் கோயில் காண்டாமணியின் அம்சமாக அவதரித்தார் என்பது வைணவ சம்பிரதாயம்) திருப்பதி ஆலயத்தோடு நூற்றாண்டு காலம் இரண்டறக்கலந்தே வாழ்ந்திருக்கிறார். அவர் பாடிய **"சங்கல்பசூர்யோதயம்"** எனும் நாடகத்திலும், **"அம்சசந்தேசம்"** எனும் பாடல் இலக்கியத்திலும் ஸ்ரீவேங்கடவன் பெருமைகளை வேதாந்த தேசிகர், சிரத்தா பக்தியுடன் விளக்கியிருக்கிறார். இதையொட்டிய கால கட்டத்தில்தான் மகான் **வியாசதீர்த்த** ரின் சேவையும், அகோபில மடத்தின் ஜீயர்களது கவனிப்பும் திருமலை ஆலயத்திற்குக் கிடைத்தது.

1294-ல் டெல்லிபாதுஷா **அலாவுதீன்கில்ஜி,** தென் நாட்டின் மேல் முதல் முறையாகப் படையெடுத்து, ஏராளமான பொன்னாபரணங்களைக் கவர்ந்து

சென்றான்; அப்போதய திருப்பதிப் பகுதி அரசர்களான யாதவ, காகதீய, ஹொய்சளமன்னர்கள் ஒன்றுபட்டு நின்று, அன்று அந்தக் கொள்ளையரை எதிர்த்திருந்தால், தென்னக ஆலயங்களிலே இருந்த கோடானுகோடி பெருமான முள்ள, தங்க வைர நவரத்தின ஆபரணங்கள் இன்றும் நமது ஆலயங்களின் உடமைகளாகவே இருந்திருக்கும்.

பதினான்காம் நூற்றாண்டு

ஆலயச் செல்வங்களை "ருசி"கண்ட மொகலாயப் பூனைகளின் மோப்பம், தென்னாட்டின் பல திசைகளிலும் அடுத்தடுத்துத் தொடருகிறது...!

1307, 1310-ல் **மாலிக்காபூர்,** 1317-ல் **ருஸ்ருகான்,** 1323-ல் **உலூகான்...** இப்படியாக முகம்மதிய தளபதியரின் படையெடுப்புகள் தொடர்ந்து, 1325-ல் தென்னாட்டின் பெரும் பகுதி **உரிமை, துக்ளக்** வசம் போய்ச் சேர்ந்தது.

ஹிந்துமத மறுமலர்ச்சிக்கும், ஆலயங்களின் வளர்ச்சிக்காகவும் ஆண்ட வனே அருளியது போல 1336-ல் விஜய நகரப்பேரரசு தோன்றியது.

பேரரசின் கிளைகளான சங்கம, சவாளுவ, துளுவ நாடுகளின் மன்னர்கள் திருமலைப் பெருமாளின் சேவையையே, முழுமுதற் கடமையாக ஏற்கின்றனர்; திருமலை ஆலயம் அமைப்பிலும், பொருளாதாரத்திலும் உயருகிறது.

1356-ல் விஜயநகர மன்னரான **சாளுவமங்கதேவர்** திருமலை கோபுரத் துக்கு பொன் வேய்ந்தார்.

முகலாயரின் சூறையாடலிலிருந்து திருப்பதியில் சுமார் 50 ஆண்டுகள் வைத்துக் காப்பாற்றப்பட்ட ஸ்ரீரங்கநாதர் (உற்சவமூர்த்தி) 1371-ல் மீண்டும் திருவரங்கம் போய் சேருகிறார்!

மேற்படி நூற்றாண்டில் தொடர்ந்து ஆலயம் நேரடியாகப் பாதிக்கப்பட வில்லை யென்றாலும், போர்மேகங்களால் ஏற்பட்ட இருளால், சீரான வழிபாடு திருமலையில் ஸ்தம்பித்து விட்டது என்றே கூறலாம்.

பதினைந்தாம் நூற்றாண்டு

விஜய நகர சாம்ராஜ்யம் தழைத்துச் செழித்த இந்த கால கட்டத்தில், அவர்களது இஷ்ட தெய்வமாகிவிட்ட ஏழுமலையானின் கோயில், வரலாறு காணாதவகையில் பொருள் வளம் கண்டதாகச் சரித்திரம் பேசுகிறது. (தலைக்கோட்டைப் போரிலே (1563) தோற்று விஜய நகர சாம்ராஜ்யத்தின் பெருமை சரியத்தொடங்கியது வரை, சுமார் 270- வருடகாலம் திருமலைக் கோயிலுக்கு சாம்ராஜ்யப் பேராதரவும் பெருந்தொகைத் திருப்பணிகளும் தொடர்ந்தன.)

1404-ல் இரண்டாம் ஹரிஹரர் **"ஸ்ரீவேங்கடேஸ்வராய நமஹ"** என்னும் சுலோகம் பதித்த தங்க நாணயத்தை வெளியிட்டார். ஸ்ரீவேங்கடாசலபதியின் திருப்பள்ளி யெழுச்சியான **"சுப்ரபாதம்"** பாடும் சம்ரதாயமும், தமிழ் அமுதமான **"திவ்யப் பிரபந்தம்"** சொல்லும் ஏற்பாடுகளும் திருமலையிலே அமலாக்கப்பட்டன.

1444-ல் வீரநரசிம்ம யாதவ ராயர் மணிமண்டபம்; 1456,ல் கட்டிசாளுவர், அலிபிரி கிராமத்தையே கோயிலுக்கு வழங்கியது, சாளுவ நரசிம்மன் கோயிலுக்குப் பொன் வேய்ந்ததோடு, பத்து கிராமங்களையும் தந்தது, 1464-ல் சாளுவமல்லய தேவன், ஆயிரக்கால் மண்டபம் கட்டியது.1490-ல் ஏழு மைல் நீளத் திருமலைக்குக் கீழேயிருந்து படிக்கட்டுகள் அமைத்தது முதலான ஏராளமான பொருட்செல்வங்க ளோடு, அருட்செல்வங்களாக **"பாஸிந்தி வேங்கடத்துறைவன்"** என்ற மகான் **"திருவேங்கடமஹாத்மியம்"** பாடியது, ஆதிவராக ஏழுமலையான் க்ஷேத்திர மகத்துவத்தை **மதுரகவி வீரராகவ ஐயங்கார்**, தலபுராணமாகப் பாடியது, திருமலை யான் புகழ் பாடும் மஹாபாரதத்தை **வில்லிபுத்தூரார்** எழுதி முடித்தது, 32 ஆயிரம் கீர்த்தனைகளை ஏழுமலையான் மேல், மகாகவி **"தாள்ளபாக்க" ஸ்ரீ அன்னமாச் சார்யா** (கி.பி. 1408-1503) பாடிக் கொடுத்தது போன்ற பற்பல அற்புதச் சிறப்புகளைப் பெறுகிறது திருப்பதித் திருமலை. (அன்னமாச்சார்யாவின் கீர்த்தனை களின் பழங்காலச் செப்பேடுகள் இன்றும் புனித முன் பாதுகாக்கப்படுகின்றது).

பதினாறாம் நூற்றாண்டு

விஜயநகர துளுவ வம்ச மன்னர்களுள் அழியாப் புகழ் பெற்றவர் **ஸ்ரீகிருஷ்ண தேவராயர்.** அவர் பட்டத்திலிருந்த 1509-முதல் 1529-க்குள் எழு முறை திருமலைக்கு வந்திருக்கிறார்; ஏழு கிராமங்களை பல சேவைகளுக்காகக் கோயிலுக்குத் தந்திருக்கிறார். திருமலை ஆலயத்திலே தங்க பலிபீடம், தங்கக் கொடி மரம், நூற்றுக்கால்மண்டபம், ஆயிரக்கால் மண்டப ஆபூர்வமான சிற்பச் சிறப்பு முதலானவை அவரால் ஏற்பட்டன.

1513-ல் ஏராளமான வைரநகைகளோடு, கனகாபிஷேகமும் செய்து, நவரத்தனக் கிரீடம் சூட்டி மகிழ்ந்ததோடு, தொடர்ந்து. 1514, 1517, 1518... ஆண்டுகளில் மனைவியரோடு வந்து திருமலையானை ஆராதித்திருக்கிறார். ஆலய கோபுரத்துக்குப் பொன் வேய்ந்த கிருஷ்ணதேவராயரைப் போலவே, அவரது மனைவியர்களான **திருமலாதேவி, சின்னாதேவி** இருவரும் போட்டி போட்டுக் காணிக்கைச் செல்வங்களைக் குவித்திருக்கிறார்கள் திருமலைக் கடவுளுக்கு.

1517-ல் ஏற்பட்ட மேற்படி மூவரது ஆளுயர வெண்கலச் சிலைகளைத் திருமலை ஆலயத்தில் இன்றும் காணலாம். ஸ்ரீகிருஷ்ண தேவராயர் இறுதியாகத் திருமலைக்கு வந்த ஆண்டு கி.பி. 1521.

1528-சாசனப்படி கோயில் பூஜைக்காரர்கள் ஏழுமலையானின் நகைகளைத் திருடிவிட, மன்னன் சாளுவ நரசிம்மன், சம்பந்தப்பட்டவர்களுக்கு மரணதண்டனை கொடுத்ததால், திருமலை ஆலயத்தில் சில மாதங்கள் பூஜைகள் நின்று போய், பிறகு துவங்கியிருக்கிறது.

கிருஷ்ண தேவராயருக்குப்பின் வந்த **அச்சுத தேவராயர்** (1530-1542), **சதாசிவராயர்** (1542-1575), **திருமலைராயர்** (1576) முதலான மன்னர்களின் ஏராள நில தானங்களால் திருமலையின் தானிய வருவாய் வெகுவாகப் பெருகியது.

சங்கீத மும்மூர்த்திகளிலே முதல்வரான **ஸ்ரீதியாகய்யர்,** வேங்கடவன் சன்னிதிக்கு வந்து தரிசனம் பெற முடியாமல், மூடியிருந்த திரையைப் பாடியே விலகச் செய்த அற்புதமும் இதே கால கட்டத்திலேதான்.

இந்த இடத்தில் நினைவு கொள்ள வேண்டியவர், மணவாளஜீயரின் பிரதான சீடரான **கந்தாடைராமாநுஜ ஐயங்கார்.** திருமலை யாத்தீகர்களின் உணவுத் தேவை, பிரசாத வகை, மற்றும் பொது நலன்களைச் சிறப்பாக மாற்றி அமைத்த கந்தாடை ராமாநுஜரை கல்வெட்டுகள் பாராட்டுகின்றன.

1548-ல் துவாரக பாலர்கள் ஸ்தாபிதம்; 1561-ல் திருமலைராயன் மண்டபம் அமைத்தது, **அக்பர் சக்ரவர்த்தி**யின் காலத்திலே, திருமாலின் திருப்பதிப் பெருமை டெல்லி வரை பரவியிருக்கிறது.

ஏழுமலையாரின் அத்யந்த பக்தரான அக்பரின் பொக்கிஷ அமைச்சர் **ராஜா தோடர்மால்,** 1859-ல் வைகுந்த பதவியடைகிறார். (தோடர்மால் மனைவியரோடு இருக்கும் ஆளுயரச் செப்புச் சிலைகளை, இன்றும் திருமலை ஆலய வளாகத்திலே காணலாம்)

இதே நூற்றாண்டின் பிற்பகுதியில் திருமலை ஆலயத்தைக் கொள்ளையிட முயன்ற போர்த்துகீசியர் தோல்வியடைந்தாலும், தொல்லைகள் நீடிக்கின்றன. பிஜப்பூர், கோல்கொண்டா ராணுவம், அகோபிலம் வரை வந்து (1575) திருமலை ஆலயத்தின் திரண்ட செல்வத்தைக் கொள்ளையிட நினைக்கிறது!

பதினேழாம் நூற்றாண்டு

போர்த்துகீசியர், டச்சுக்காரர், பிரிட்டிஷார் ஆகியமூவரும் பாரதத்தின் நில வளங்களை, ஆலயங்களின் செல்வங்களைத் தனித் தனியே "மோப்பம்" பிடித்து, ஒருவரையொருவர் முந்துவதில் அடித்துக் "கடித்து"குதறிக் கொண்ட கொடுமைக ளெல்லாம் முடிந்து, **பிரிட்டிஷ் கிழக்கிந்திய வாணிபக் கழகம்.** 1600-ல் ஏற்படுகிறது.

வைரமும் தங்கமுமாகக் குவியும் திருமலை ஆலய உண்டியலைக் குறிவைக்கின்றன "கழக" த்தின் பூனைக் கண்கள்!

1610-ல் மன்னர் ராஜஒடையார் மைசூர் ராஜ்யத்தை மீண்டும் உருவாக்கி முடிசூடுகிறார்.

1618-ல் ஏற்பட்ட கோல்கொண்டா படையெடுப்பால், திருமலை ஆலயம் வருவாயை இழந்ததோடு, சூன்யத்திலும் ஆழ்ந்திருக்கிறது.

1630-விஜயநகர அரசர் **முதலாம் வேங்கடவர்,** திருமலை ஆலய ஆனந்த விமானத்திற்கு தங்கமூலாம் பூசி ஜொலிக்கச் செய்கிறார்.

1636-ல் வேலூரை - **பீஜப்பூர்சுல்தானும்,**திருப்பதிப் பகுதியின் பிரதான கேந்திரமான சந்திரகிரியை **கோல்கொண்டாநவாபும்** படைபலத்தால் தன் வசப்படுத்திக் கொள்கின்றனர்.

1639-முதல் மைசூர் அரசர்கள் அக்கரை கொண்டதால், திருமலை ஆலயம் மீண்டும் வழிபாட்டிலே சமநிலை பெறுகிறது.

1646-ல் விஜயநகர சாம்ராஜ்யத்தின் கடைசி வாரிசான **ஸ்ரீரங்கனின்** வேலூர் கோட்டைமேல், பிஜப்பூர் சுல்தான் படையெடுக்கவே, போர்ச் செலவுக்காக திருமலையின் உண்டியல் பணத்தையெடுத்த ஸ்ரீரங்கன், போரிலே தோல்வி கண்டு மடிகிறான்.

இந்த கால கட்டத்தில் தான் ஸ்ரீ வேங்கடாசலபதியின் அருளால் பிறந்து (1581-1671) வேங்கடநாதனாக வாழ்ந்த **ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள்,** பிஜப்பூர் சுல்தானின் சிற்றரசனான **சித்திமசூத்கானு**க்குப் பேரருள் புரிந்த மகத்துவத்தால் திருமலை ஆலயம் பெரும்புகழ் பெற்றது.

1668-ல் ஆலயப் பணத்திலே உரிமை கொண்டாட புதுவித அதிநூதன சமயச் சட்டத்தைப் போட்டு ஹிந்துக்களின் மத உணர்வை நோட்டமிடுகிறது வெள்ளைக் கம்பெனி.

1670-ல் திருப்பதிப் பகுதியைப் போர்மேகம் சூழுகிறது.

1672-முதல் கோல்கொண்டா நவாபும், **மீர்ஜும்லா** படைகளும் மாறி மாறித் திருமலைப்பகுதியைப் பந்தாடி, கைப்பற்றத் துடிக்கின்றனர்.

1674-ல் முடிசூடிக் கொண்ட **சத்ரபதிசிவாஜி** யால் ஹிந்து மதம் புதுபலம் பெற்றாலும், சிவாஜியின் பார்வை திருப்பதிப் பக்கம் திரும்பாததால், 1680-ல் மீர்ஜும்லா படைகள் திருப்பதியைக் கைப்பற்றுகின்றனர். திருமலைக் கோயிலே பிற மதப் பேராசைக்காரர்கள் பெற்ற வெற்றியை அறிந்த சிவாஜி மன்னரின் அதிர்ச்சி! அந்த நேரத்திலே ஆயுத பலமுள்ள கிழக்கிந்திய வெள்ளைக்கம்பெனி, ஆலயத்தை ஆக்ரமிப்பாளர் பிடியிலிருந்து மீட்டு, நவாபிடம் குத்தகைக்கு விடத் திட்டமிடுகிறது.

1681-ல் கோல்கொண்டா நவாபின் மந்திரியான **அக்கண்ணா** என்பவர் திருமலைக்கு வந்தார்; தாய்மொழி (தெலுங்கு) வெறியால், ஏற்கனவே திருமலைக் கோயிலில் சிறப்புற்றிருந்த தமிழ்ச் சான்றோர்களையும், பிரதான நிர்வாகிகளையும் ஒதுக்கி விடுகிறார்! அர்ச்சகர்களும், ஜீயர்களுமே மிச்சமாக இருந்து (இன்று வரை) நீடிக்கின்றனர்.

1684-ல் சிவாஜியின் பிரதிநிதி ஒருவர், திருமலைக்கோயிலுக்கு வந்து கோயிலின் நித்தியப்படி பூஜையிலே ஏற்பட்ட குறையைத் தீர்த்திருக்கிறார். மகாராஷ்டிரரான சிவாஜியின் சிரத்தையால், வடதேச மகாராஷ்டிரர்கள் "பாலாஜி" யின் கோயிலுக்கு (திருமலைக்கு) ஏராளமாக வரத்தொடங்கினர்.

பதினெட்டாம் நூற்றாண்டு

1707-ல் ஏழுமலையான் ஆலயத்தை, ஆற்காடு நவாபிடம் அடமானம் வைக்கிறான் வெள்ளைக்காரன்.

1730-ல் மைசூர் அரசர் **கிருஷ்ணராஜஒடையாரின்** அகண்டதீப கைங்கர்யமும், சிரத்தா பக்தியும் திருமலைக்கு மீண்டும் பெருமைகளைச் சேர்க்கின்றன. யாத்திரீகர் தொகை மிகுதியாகிறது.

1751-ல் "ஆர்மி" என்கிற வெள்ளையரின் டைரிக் குறிப்பின்படி, திருமலை வருவாய் 24-ஆயிரம் பவுன்கள்; நவாபிடமிருந்த ஆலய உரிமையை **"ராபர்ட்கிளைவ்"**, எனும் வெள்ளையர் தளபதி, கம்பெனியின் பெயரால் தட்டிப் பறித்துக் கொள்ளுகிறார்.

1753-முதல், பெருகிய திருமலை ஆலயவருமானத்திற்காக வெள்ளையர், மற்றும் நவாபுகளின் திரைமறைவுப் போட்டாபோட்டிகள் நடந்துவந்தன.

1758-ல், வெள்ளைக்கம்பெனி, ஆற்காடுநவாப், மராட்டியர் இப்படியாக கூட்டணியமைத்து திருமலை மேல் படையெடுத்தனர். **முப்படைகளின் போர் வெறிச்சங்கமப் பிரளயத்தைத் திருமலை கண்ட பொல்லாத காலக்கட்டம்! ஆலய வாசலில் ரத்தகளறி!** வழக்கம் போல வெள்ளையரே ஜெயித்து, அதிக குத்தகைக்கு ஆற்காடு நவாபிடமே ஆலயத்தை மீண்டும் ஒப்படைக்கின்றனர். நவாபின் அதிரடிக் "கெடுபிடி"யால் பக்தர்களின் அவதி, வெள்ளையர் அதிர்ச்சி!

பதினொன்பதாம் நூற்றாண்டு

1801-ல் நவாவிடம் இருந்த திருமலைக் கோயிலிலின் நிர்வாக உரிமை, கம்பெனியாரால் பறிமுதல் செய்யப்படுகிறது. நீறுபூத்த நெருப்பாகிறார் நவாப்!

இருபேராசைக் கும்பலுக்கு இடையே மாட்டிக் கொண்ட கோயில் நிர்வாகத்தை, மைசூர் அரசரின் சிபாரிசால் **"ஜான் வேல்ஸ்"** என்பவர் தலைமையிலே ஏற்பட்ட **"வேல்ஸ் கமிட்டி"** ஏற்கிறது.

1831-ல் மைசூர் ராஜகுடும்பம் கம்பெனியாரிடம் தனது அரசுரிமையை இழக்கிறது அந்த நிலையிலும் திருமலைச் சேவையில் சீராகச் செயல்படுகிறது.

1842-ல் பிரிட்டிஷ் அரசின் இலண்டன் **"மக்கள்சபை"** எடுத்த முடிவின் படி, மதவிவகாரத்திலிருந்து கம்பெனி விலக வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது! சட்டப்படி திருமலைக்கோயில் நிர்வாகத்தை யாரிடம் ஒப்படைப்பது என்ற குழப்பம்! அர்ச்சகர் கூட்டமும், ஜீயர்குழுவும் "ஆட்சி"' க்கு வரத் துடியாய்த் துடித்தன!

நிலைமையை கூர்ந்து ஆராய்ந்த "வேல்ஸ் கமிட்டி" **ஹதிராம்ஜி மடத்தின்** தலைவரிடம் ஒப்படைக்க முடிவு செய்கிறது. ஹதிராம்ஜி மடம் என்பது, அக்பர்

காலத்திலே வட பாரதத்தில் புகழ் பெற்றிருந்த ஓர் தர்ம கேந்திரம். அக்பரின் நிதியமைச்சர் தோடர்மால் மடத்தின் பிரதான சீடர். சிவாஜி மன்னர் காலத்திலே (17-ம் நூற்றாண்டு) திருமலைக்கு வந்த ஹதிராம்ஜி மடத்துத் தலைவர்களான **"மஹந்து"** களால் திருமலைக்கோயில் பற்பல அற்புத மாற்றங்களைக் கண்டது.

1843-ல் திருமலையில் இருந்த "ஹதிராம்ஜி மடத்து" மஹந்து களிடம் கோயில் நிர்வாகத்தை ஒப்படைத்து, விலகியிருந்து கண்காணிக்கிறது வெள்ளைக்காரக் கம்பெனி.

1857-ல் நடந்த சிப்பாய் கலகத்தால் எச்சரிக்கை பெற்ற லண்டன் மேலிடம், 1858-ல் கம்பெனியைக்கலைத்துவிட்டு, இந்தியாவை நேரடியாக ஆளமுற்படு கிறது. "மதசுதந்திரத்திலே தலையிடமாட்டோம்" என்ற **விக்டோரியா மகாராணி** யாரின் பிரகடனத்தால், வெள்ளையரின் அடக்குமுறையிலிருந்து திருமலை ஆலய நிர் வாகம் ஓரளவு விடுபடுகிறது.

1875-ல் **வீரராகவ சுவாமிக**ளால் "திருவேங்கடதல புராணம்" உருவாகிறது. புகழ்மிக்க **"கருடோத்ஸவம், திருப்பதிக்குடை"** விழாக்கள் ஏற்படுகின்றன.

1881-ல் ஏழுமலையானின் திருவருளால் மைசூர் ராஜ குடும்பத்திற்கு மீண்டும் அரசுரிமை கிடைத்து விடுகிறது.

இருபதாம் நூற்றாண்டு

1909 -ல் **ராமலெட்சுமணபாவா** என்கிற ஜீயர் பெருமான், திருமலை கோபுரத் துக்குப் பொன்வேய்கிறார்.

1914 - 1918 முதலாவது உலகப்போர் காலங்களிலும், மஹந்துகளால் திருப்பதி திருமலையில் படிக்காவல் கோபுரம், திருக்குளப் பராமரிப்பு, மின்சார இணைப்புகள் ஏற்படுகின்றன.

1928 - கால கட்டத்திலே ஆண்டு ஒன்றுக்கு சுமார் 20 ஆயிரம் ரூபாய் களை பல தர்மங்களுக்காக திருமலைக்கு ஒதுக்குகிறது மைசூர் அரசு.

திருமலை ஆலயத்தின் சேவையாளர்களாக இருந்த மஹந்துகளின் வழித்தோன்றல்கள். இந்த காலக்கட்டத்திலே சுய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் குறுக்கு வழியிலே செல்லத் தொடங்கி, கள்ளக் கணக்குகளைத் தயாரிக்கத் தயாராயினர்.

1933 -ல் சென்னைமாகாண சட்டசபைத் தீர்மானத்தின்படி (ஆந்திர மாநிலம் அப்போது இல்லை) ஆலய நிர்வாகம் மஹந்துகளிடமிருந்து பறிக்கப்பட்டு, ஓர் தனிக்கமிட்டியிடம் ஒப்படைக்கப்படுகிறது.

1944 -ல் இரண்டு பஸ்களோடு 12 மைல் தூர திருப்பதி திருமலை பஸ் போக்குவரத்து ஆரம்பம் (இப்போது சுமார் 500 பஸ்களுக்குமேல் ஓடுகின்றன.

1951-ல் **"இந்துமத ஆலயப் பாதுகாப்புத் துறை"** ஏற்பட்டு, 1952-ல் **திருப்பதி திருமலை தேவஸ்தானம் போர்டு** (T.T.D) உருவாகி... சுற்றுப்புற சுமார் நாற்பது கோயில்களையும் இணைத்துக் கொண்டு, நிர்வாகம் விரிந்து கொண்டே போகிறது.

1953-ல் ஆந்திர ராஜ்யப் பிரிவினையேற்பட்டு, தமிழகத்து எல்லையாக விளங்கிய வடவேங்கடம், ஆந்திரச் சோதரரின் பங்காகப் போய்ச் சேருகிறது.

1958-ல் இருபது லட்ச ரூபாய் செலவிலே நாற்பது சதுர அடிகளைக் கொண்ட **"ஆனந்த விமானம்"** பொன்வேயப் படுகிறது.

1959-ல் அடியேன் (வேம்பத்தூர் கிருஷ்ணன்) முதன் முதலாகத் திருமலையானைத் தரிசித்தபோது சுமார் 4 ஆயிரமாக இருந்த தினசரி யாத்திரீகர் தொகை, 1968-ல் கியூவரிசை ஏற்பட்டுப் பெருகி. 1975-ல் 10 ஆயிரம்; 1983-ல் 30 ஆயிரம்... இப்படியாக உயர்ந்து... 22.9.1985. கருடோத்ஸவ தினத்தில் மட்டும் இரண்டறை லட்சம் பக்தர்கள் கூடினர் திருமலைமேல்!

ஆறு கோடி ரூபாயில் வைரக்கீரிடம் ஏழுமலையானுக்கு 20.12.85 அன்று சூட்டப் பெற்றது. மூன்று கோடி ரூபாய் செலவிலே, 16500 பக்தர்கள் ஒரே சமயத்தில் தங்கும் வசதி கொண்டே பிரமாண்டமான நவீன "கீயூ" வரிசை மண்டபம் 6.4.85 முதல் செயல்படுகிறது. அடுத்த மண்டபம் வடிவாகிறது!

இந்த காலக்கட்டத்திலே திருப்பதி திருமலைக் கோயில் சம்பந்த ஊழியர் தொகை சுமார் ஏழாயிரம். இப்போது உத்தேசமாகப் பத்தாயிரத்தை எட்டலாம்.

21.9.1985. அறிவிப்பின்படி திருப்பதி திருமலை ஆலயம் **"பாலாஜி திவ்ய க்ஷேத்திரம்"** என்ற தனித்தன்மை கொண்ட அமைப்பாக விரைவில் உருவாகும் என்றது... அந்த முடிவு என்ன ஆனது?

26.10.85 ஒரேநாளில் 230 திருக்கல்யாண உற்சவங்கள்! திருமலையில் அரிதாகி வருபவை, "ஸ்ரீராமதூதர்" களே! ஆலயத்தின் வருவாய், ஆயிரம், லட்சங்களைக் கடந்து, 10.6.85 முற்பகல் உண்டியல் வருவாய் மட்டும் சுமார் நாலரை லட்சரூபாய்கள்!!

"திருமலை"யின் ஆதாரபூர்வமான ஓர் வருவாய் பட்டியல்...!

1962 - ஆண்டு முழுவதும் வருமானம் சுமார் 50-லட்சம்

1972-ல் சுமார் ஆறு கோடி ரூபாய்கள்.

வருடம்	வரவு ரூ.		செலவு ரூ.	
1981-82	26 கோடி	42 1/2 லட்சம்	23 கோடி	8 லட்சம்
1982-83	33 "	64 "	27 "	58 "
1983-84	37 "	22 "	29 "	5 "
1984-85	39 "	30 "	30 "	16 "
1985-86	56 "	86 "	37 "	33 "
1986-87	55 "	86 "	43 "	56 "
1987-88	61 "	23 "	50 "	10 "
1988-89	72 "	21 "	53 "	43 "
1989-1990	92 "	51 "	71 "	36 "
1990-91	101 "	60 "	81 "	13 "



1994-95 ஓராண்டு வருமானம் மட்டும் 202 - கோடியே இரண்டு லட்ச ரூபாய்களாம் (4-7-95 தினமணி செய்திக்குறிப்பு)

1995 அக்டோபர் பிரம்மோத்ஸவ வருவாய் மட்டும் மூன்று கோடி ரூபாய்கள்!

12-7-1995 சென்னையைச் சேர்ந்த **வேங்கடாசல உடையார்** என்பவர் 20 லட்சம் ரூ வைரக் கிரீடம் காணிக்கை தந்துள்ளார்.


14-8-1995 இலங்கை **G.சதாசிவம்** 50 லட்சம் ரூ வைர கிரீடம். இப்படியான "இமாலய" காணிக்கைகள் ஏழுமலையானுக்கு சர்வசாதாரணம். 30 ரூ தரிசன டிக்கெட் மக்கள் லட்சோப லட்சம்! வரவுக்கேத்த செலவுகளாக, இசை, சிற்ப கல்லூரிகள்... அனாதை இல்லம், பாலமந்திர், அஸ்வினி ஆஸ்பிட்டல், மெடிகல் காலேஜ், இப்படிப் பற்பல அற்புத நற்பணிகளை "TTD" தேவஸ்தானம் புரிந்து வருகிறது.

வருவாய் உயர்வது போலவே, பக்தர்கள் வருகையும் உயர்கிறது. 1995 பிரம்மோத்ஸவத்திற்கு வந்தவர் தொகை மட்டுமே சுமார் ஏழு லட்சமாம்! அதோடு நவநாகரீக "சொகுசு" வசதிகளும் திருமலையில் "அசுரகதியிலே" பெருகுவது ஓர் உறுத்தல்தான்!

'சுப்ராபாத'ப் புனித ஒலியும், யாகப் புகைமணமும், புனித லட்டுவின் நெய்மணமும் "கமகம"த்த திருமலைமேல் இப்போது, டீசல் பெட்ரோல், கார்பஸ், ஸ்கூட்டர், லாரி... ஐயையோ ஒரே அலறல் கூச்சல்... இறைச்சல்! **இவற்றிற்கெல்லாம் நிரந்தரத் தீர்வு எப்போது ?**

சினிமாக்காரர்களின் ஈடுபாடு நெடுநாட்களாக இருக்கும் திருப்பதி திருமலை நிர்வாகத்தில், நமது "சூப்பர்ஸ்டார்" **ரஜினிகாந்த்** கூட போர்டு உறுப்பினராக (28-7-1995) பொறுப்பேற்று... அரசுத் தலைமை மாறியதால், அடுத்த மாதமே ராஜினாமா செய்து விட்டார்.

"பாலாஜி திவ்ய க்ஷேத்திர" த்தில் தொன்மையான புனித விழாக்களும், புகழ்மிகு சம்ரதாயங்களும் அதிவேக நவநாகரீகச் சூழல்களால் நிர்வாக ஊழல்களால் - கரைந்து விடாமல் திகழ்வதாகுக.



ஆழிசூழ் உலகிலே முதல் நிலம் தமிழகம். முதல்மனிதன் தமிழன். முதல்மொழி தமிழ். என்பது பன்மொழி ஆராய்ச்சியாளரும் , புலவரும் ஏற்பதாகும்.

சேர, சோழ, பாண்டியரென்னும் முடிமன்னர் மூவர்தம் மரபும் புராதமானதே. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தவர் பாண்டியர்-அத்தமிழை முத்தமிழாய் முகிழச் செய்தவர் சோழர்.

யுகயுகாந்திரத் தொன்மைமிக்க சோழர்குலத்தை **"சூரிய குலம்"** என்பர். இடைச்சங்கத்தின் ஆதி இலக்கணமான தொல்காப்பியத்திலேயே சோழர்குலம் விரிவாக இடம் பெற்றிருக்கிறது.

கி.மு. முப்பதாயிரம் ஆண்டுகளுக்குமுன்பே, **சூரியச்சோழன், மனு, இக்ஷவாகு, இமயன்சண்டன்** முதலான பலசோழமன்னர்கள் நாடாண்டதாகக் கூறும் புராண, இதிகாச வரலாறுகள் ஏராளம் உண்டு.

பழம்பெரும் புராண, இதிகாச வரலாற்று இலக்கியங்களின்படி சோழர் வரலாற்றினை மூன்று காலங்களாக ஆராய்ச்சியாளர் வகுத்துள்ளனர்.

சங்ககாலச் சோழர் - கி.மு. பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்பிருந்து கி.பி. 300 வரை. **இடைக்காலச் சோழர்** - கி.பி. 300 முதல், 900 வரை; **பிற்காலச் சோழர்;** கி.பி 900 முதல் 1300 வரை.

சங்ககாலச் சோழர்களிலே தேவலோகத் தொடர்பு கொண்ட **முசுகுந்தச் சக்கரவர்த்தி.** ஜீவகாருண்ய **சிபிச்சக்கரவர்த்தி,** தருமமே வடிவான **மனு நீதிச்சோழன்** முதலான இருபதுக்கும் மேற்பட்ட மாமன்னர் வரிசையிலே வருகின்ற மன்னர்களிலே, **கரிகாலச்சோழன்** பெரும்புகழ் பெற்றவன்: அவன் கட்டிய (கி.பி. 1002) **"கல்லணை"**தான் இன்றும் தஞ்சைத் தரணிக்கு ஆதார காவிரிநீர்ச் சேமிப்புக் கோட்டைச் சுவராக விளங்குகிறது!

"எழுபதுமாடக் கோயில்களைக் கட்டியவன்" எனத் திருமங்கை ஆழ்வாரின் பாசுரம் பெற்ற சோழனாகிய **கோச்செங்கணான்,** சைவசமயத்து ஆதிக்காவலனாக விளங்கிய சோழ மாமன்னர்.

இடைக்காலச் சோழருள் (300-900) **முதலாம்கிள்ளி, ஆதிமந்தி (பெண்ணரசி), இளந்திரையன், கோப்பெருஞ்சோழன்** முதலான பதினாறு மாமன்னர்கள் ஆண்டிருக்கிறார்கள். (மேற்படி காலகட்ட ஆரம்பத்திலே, களப் பிரர்கள் தமிழகத்திலே பெரும்பகுதியைக் கைப்பற்றி ஆண்டதால், கன்னட, தெலுங்குக் கலப்படச் சோழரின் சந்ததியும் தமிழகத்திலே, உண்டானது! களப்பிரரை, பல்லவ மன்னர்கள் வென்றனர். சோழநாட்டுக்காக பல்லவர், பாண்டியர் சண்டைகள் நடந்தன. இடையில் புகுந்த மாவீர **"முத்தரையர்"** என்ற இனம், சோழநாட்டைச் சிறிது காலம் ஆண்டனர்: **"இளங்கோ" எனும்**

முத்தரையரிட மிருந்து சோழநாட்டை விஜயாலயச்சோழன் மீட்டது முதல், பிற்காலச் சோழர்தம் காலங்கள், சாதனைகளை, ஒரிருவரிகளில் கீழே தரப்படுகிறது. (சங்ககாலத்திலே பூம்புகார் (காவிரிப்பூம்பட்டினம்) கரூர், உறையூர்,வல்லம், திருவாரூர், நந்திபுரம் ஆகிய பேரூர்களைத் தலை நகர்களாகக் கொண்டும், பின்நாட்களிலே பழையாறை, தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம் முதலான பேரூர்கள், சோழர்களின்தலை நகர்களாகவும் இருந்தன.

முத்தரையரை வென்று, மூன்றாம் முறையாக சோழப் பேரரசை ஸ்தாபித்தவன் "**நிசும்பசூதனி**" எனும் மகாசக்தியை "**தஞ்சாபுரி**"யின் (தஞ்சை) காவல் தெய்வமாக பிரதிஷ்டை செய்த **விஜயாலயச் சோழன்** கி.பி. 850-871.

"திருப்புறம்பிய"ப்பெரும் போரிலே பாண்டியரை வென்றவன்: சைவசமய வளர்ச்சியிலே பேரார்வமுள்ள மன்னராக விளங்கியவர் **ஆதித்த சோழன் 871-907.**

பாண்டியர்தம் தலைநகர் மதுரையைப் போரிலே, வென்றவன். தில்லைச் சிதம்பர நடராஜரின் கோயிலுக்கு, பொன்வேய்ந்து வரலாற்றுப் புகழ் கண்டவன், **(முதல்) பராந்தகன் 907-955.**

இளவரசுப் பட்டத்தை ஏற்றதுமே, போர்முனை கண்டவன். தக்கோலத்திலே இராஷ்டிரகூட மன்னருடன் மோதி, வீரமரணம் பெற்றவன், **ராஜாதித்தன்** 947-949.

பராந்தகனின் (I) இரண்டாம் மகனான இவன், சோழ நாட்டிலே பல ஆலயங்களை உருவாக்கி, பக்திப்பயிர் தழைக்கப் பாடுபட்ட உத்தமச்சோழன், **கண்டராதித்தன்** 949-957.

கண்டராதித்தனின் சகோதரன்; இராஷ்டிரகூட மன்னர்களுடன் களத்திலே மோதி, சாகசம்பலபுரிந்து போர்க்களத்திலேயே... வீரமரணம் கண்டவன். **அரிஞ்சயன் (அரூர்துஞ்சியதேவர்)** 956-967.

அரிஞயனின் மூன்று மனைவியருள், "கல்யாணி" என்பவளின் வயிற்றிலே பிறந்தவன் "இராஜகேசரி" எனும் சிறப்பு விருதினைப் பெற்றவன், **சுந்தரச்சோழன் (பராந்தகன்II)** 956-973.



தொண்டைநாடு, பாண்டியநாடுகளை வென்று, சோழமண்டல நிர்வாகத் திலே இணைத்தவன்; "பரகேசரி" எனும் புகழ் விருதுடன், தொண்டை நாட்டைக் கட்டி ஆண்டவன் **ஆதித்த கரிகாலன்** (II) 956-969.

கண்டராதித்தன், **செம்பியன்மாதேவியரின் அருமை மகனாகப் பிறந்த வன், கரிகாலனைக் கொலை செய்ததாக வீண்பழி சுமந்து, விரக்திக்கு ஆளான வன், மதுராந்தகன்** (உத்தமச் சோழன்) 973-985.

தஞ்சைப் பெரிய கோயிலின் சிருஷ்டி கர்த்தா. அரசியல் எப்படி நடத்த வேண்டும்? ஆட்சி எப்படி இருக்க வேண்டும், என்பதற்கு புது இலக்கணம் வகுத்தவன்! பெரிய **கோயிலை** மையமாக்கி, சமுதாய மக்கள் அனைவரையும் ஆலய நடை முறைகளோடு இணைத்தவன். சோழப்பேரரசிலேயே பொற்காலம் கண்ட புகழ்மிகு மன்னன் **ராஜராஜசோழன்** (அருண்மொழிவர்மன்) 985-1014.

கடல்கடந்த பலநாடுகளையும் சோழமண்டலமாக்கியவன்! புதிய ஒரு தலை நகராகக் **கங்கைகொண்டசோழபுரத்தை** உருவாக்கி, சிற்ப அற்புதச் "சோழீச்சரம்" (ஆலயம் கட்டியவன்) **ராஜேந்திரன்** 1-1012-1044.

சேரர், பாண்டியர் மேலைச்சாளுக்கியர்களை ஏககாலத்தில் எதிர்த்த மாவீரன். போர்க்களத்திலே பட்டத்துயானைமீதே, வெற்றிவீரனான மரணத்தைப் பெற்ற நற்றவச் செல்வன், **ராஜாதி ராஜன்** 1018-1054.

தனதுமகள் "**மதுராந்தகி**"யை கீழைச்சாளுக்கிய (தெலுகு) மன்னன் "**நரேந்திரன்**" மகனுக்கு மணமுடித்து வைத்து, மேலைச்சாளுக்கியரை முழு வெற்றி கண்டவன், **ராஜேந்திரன்** (II) 1052-1064.

சாளுக்கியர்களுடன், பரஸ்பர நட்பை ஏற்படுத்த தனது மகள் "**திரைலோக்ய மகாதேவி**"யை சாளுக்கிய **விக்கிரமாதித்தனுக்கு** மணம் செய்து வைத்தும், பலன் பெறாத அபாக்ய மன்னன், **வீரராஜேந்திரன்** 1063-1069.

சாளுக்கிய விக்ரமாதித்தனின் பக்கபலம் இருந்தும், உட்பூசல் காரணமாக, ஆட்சிக்குவந்த ஓரிரு . வருடங்களிலேயே, அகாலமரணம் (கொலையா?) கண்டவன், **அதிராஜேந்திரன்** 1068-1070).

தாய்வழியில் சோழரையும், தந்தைவழியில் கீழைச் சாளுக்கியரையும் கொண்டவன்: "**சுங்கம் தவிர்த்த சோழன்**" எனும் புகழோடு, பேரருட் புலவர் ஒட்டக்கூத்தரால் "கலிங்கத்துப்பரணி" பாடல் பெற்றவன் **குலோத்துங்கன்** (I) 1071-1120.

அதிராஜேந்திரனின் நாலாவது மகன், கலிங்கப்போர்ச் சாதனையாளன், ஒட்டக்கூத்தரையே அவைப்புலவராகக் கொண்டவன்; தில்லைக்கு ஏராளமான திருப்பணிகளைச் செய்தவன். **விக்கிரமன்** 1120-1135.

தில்லைச் சிதம்பரத்தை மிகப் பெரியநகராக விரிவு படுத்தியவன்; "திரு நீற்றுச்சோழன்" என விருதுபெற்று, பெரும் புலவர் ஒட்டக்கூத்தரையே ஆலோச கராகத், தொடர்ந்து துணைகொண்டவன். தனது அமைச்சராக இருந்த "அருண்

மொழித்தேவரை" "சேக்கிழார்"ஆக்கி தமிழகத்தின் வரலாறு கூறும் **"பெரியபுராணம்"** பாடவைத்தவன். **குலோத்துங்கன்** (II) 1133-1150.

வஞ்சி நாட்டில் போர் தொடுத்துச் சேரனைவென்றவன். அடைக்கப்பட்ட காவிரி அணையை உடைத்தெறிந்து நீர் கொணர்ந்தவன். தராசுரத்திலே ஐராவ தேஸ்வரருக்கு ஆலயம் கட்டியவன், **ராஜராஜன்** (II) 1146-1173.

பாண்டியரின் தாயாதிச் சண்டைக்குத் தீர்வுகண்டு, முடிசூட்டி வைத்த அவனையே, குலசேகரபாண்டியன் எதிர்க்கவே, வீரபாண்டியனுக்கு மதுரையின் மணிமுடியை மாற்றி வைத்த, **ராஜாதிராஜன்** (II) 1163-1179.

சேர, பாண்டிய, தொண்டை, கொங்கு நாடுகளை வென்று 'திரிபுவன வீர தேவன்' எனும் விருது பெற்றவன். மதுரை மற்றும், சிதம்பரம் ஆலயங்களிலே திருப்பணி பலபுரிந்தவன். தன்மகளைப் பொதுநலன் கருதி, (காடவராயப்) பல்லவனுக்கு மணமுடித்தவன், **குலோத்துங்கன்** (III) 1178-1218.

மதுரையை ஆண்ட சுந்தரபாண்டியன், படையோடுவந்து, உறையூர், தஞ்சை நகரங்களைத் தகர்த்து தீயிட்டதைக் கண்டும், பலமற்றுத் தவித்தவன். போரிலே வென்ற சுந்தர பாண்டியன், ஆயிரத்தளி (நந்திபுரம்)யில் முடிசூடியதும், கப்பம் கட்டும் பரிதாப நிலைக்கு ஆளான சோழமன்னன், **ராஜராஜன்** (III) 1216-1256.

தஞ்சையைக் கொளுத்திய சுந்தரபாண்டியனின் மதுரையைத் தவிடு பொடியாக்கியவன். பாண்டியரிடம் வாள்முனையிலே கப்பம் பெற்றவன். மீண்டும் பாண்டியரின் வீராவேச எழுச்சியால், சோழப் பேரரசு சரிந்த கொடுமையைக் கண்டு துடித்த, சோழப் பேரரசின் கடைசி வாரிசு... **ராஜேந்திரன்** (III) 1246-1280.

ராஜேந்திரனை வீழ்த்தி, சோழப்பேரரசைச் சூறையாடிய **சுந்தரபாண்டியன்,** தாயாதிப் போட்டியால் அரியணையிலிருந்து **வீரபாண்டியனை** இறக்குவதற்காக, தென்னாட்டின் ஆலயச் செல்வங்களைச் சூறையாடுவதற்காகவே 1224-லில் டெல்லியிலிருந்து புறப்பட்ட **மாலிக்காபூரின்** காலடியில் "உதவி" என விழுந்தான். அவனையே பயன்படுத்தி மதுரையையும் வீழ்த்தி, அவனையும் அழித்து மீனாட்சியம்மன் கோயிலையும் பாழ்படுத்திய மாலிக்காபூரின் வெறிச்சுவடு படாத பிரபல தமிழக் கோயில்களே இல்லை என்று ஆனது!! **(தனது இன அழிவிற்குத் தானே காரணமாக இருப்பது தான். தமிழனின் பாரம்பரியத் தலைவிதி போலும்).**

கி.பி. 1311-ல் மாலிக்காபூர், தமிழக ஆலயங்களின் செல்வங்களைச் சூறையாடி டெல்லி திரும்பிய போது, கொண்டு சென்றவற்றின் சிறு பட்டியல்... 612-யானைகள் 20,000 குதிரைகள் 96,000 மணங்கு தங்கம், ஆயிரக்கணக்கான பெட்டிகளில் நவரத்ன, முத்துக்கள் முதலானவை.

மூன்றாம் ராஜேந்திரனின் வீழ்ச்சிக்குப் பிறகு, தஞ்சைத் தரணியை "சில்லறைச் சோழர்கள்" சிலர், பலவிதமாக ஆட்சி புரிந்து சீரழிந்தனர்! அந்த காலகட்டத்திலே சிறந்தோங்கி விளங்கிய விஜயநகரப் பேரரசு, 1360- ல் தஞ்சைத்

தரணியில் புகுந்து, 1532-ல் சோழநாடு முழுவதையும் கைப்பற்றித் தனது பிரதி நிதியாக "**செவ்வப்பநாயக்கன்**" என்பவரை நியமித்தது. தஞ்சைத் தரணியிலே நாயக்கர் ஆட்சி தொடங்கியது.

விஜயநகர அரசர் **அச்சுதராயரிடம்** வெற்றிலை மடித்துத் தரும் "அடைப்பக்கார"க வாழ்வைத் தொடங்கியவர், அச்சுதராயரின் "சகலை" ஆகி, தஞ்சையின் விஜயநகரப் பிரதிநிதியாக வந்து, மன்னராய் மாறியவர், தஞ்சையின் உட்கோட்டையை அமைத்தவர். சோழர்கால சிவகங்கைத் தீர்த்தக் குளத்தைச் செப்பனிட்டுச் சீர்படுத்தியவர், **செவ்வப்ப நாயக்கர்** 1535-1580.

அறிவாற்றல் மிக்கவர்: தனது அமைச்சர் **கோவிந்த தீட்சிதரால்,** ஆட்சியிலே மேலும் புகழ்பெற்றவர், **அச்சுதப்ப நாயக்கர்** 1580-1600.

மதுரை, செஞ்சி மன்னர்களை வென்றவர். போர்த்துகீசியரிடமிருந்து யாழ்ப்பாணத்தை மீட்டு, உரியவரிடம் சேர்த்தவர். டேனிஷ்காரருக்கு இடம் தந்து, ஐரோப்பிய வாணிபத்தை ஈர்த்தவர் **ரகுநாதநாயக்கர்** 1600-1634.

மதியூக மன்னர், மாபெரும் கலைஞர், மன்னார்குடி ராஜகோபாலசுவாமியை குலதெய்வமாகக் கொண்டவர். மதுரையை ஆண்ட முரட்டு **சொக்கப்ப நாயக்கனுக்கு** மகளைத் தரமறுத்ததால், மதுரைப்படை திடீரெனப் புகுந்து, தஞ்சையைப் பிடித்து விடவே, அரசபோகத்தைக் குடும்பத்தோடுமுடித்துக்கொண்ட, மாவீர மானஸ்தர், **விஜயராகவ நாயக்கர்** 1633-1673.

அகால மரணமடைந்த விஜயராகவ நாயக்கரின் மகன் **செங்கமலதாஸ்** எனும் சிறுவனை, `ராயசம் **வெங்கண்ணா** காப்பாற்றினார். **அழகிரிநாயக்கன்** என்பவன், "நானேராஜா" என்றார். "செங்கமலதாஸ் தான் உண்மை வாரிசு" என்று **ஜெய்ப்பூர் சுல்தானிடம்** வெங்கண்ணா முறையீடு. தனது "**ஜாகீர்தார்**" **ஏகோஜி** (மராட்டியர்)யை உதவி செய்யும்படி தஞ்சைக்கு அனுப்பினார் சுல்தான். **செங்கமலதாஸ்** அரசரானதும், வெங்கண்ணாவை லட்சியம் செய்யாததால், தனது "சாணக்கிய" மதியூகத்தால் உதவ வந்த மராட்டிய **ஏகோஜி**யையே, தஞ்சைக்கு அரசனாக்கிவிடுகிறார் வெங்கண்ணா. தஞ்சைத் தரணியிலே மராட்டியர், ஆட்சி மலர்ந்தது.

சத்ரபதி சிவாஜியின் ஒன்று விட்டதம்பி, நாயக்கர்வாரிசுக்கு உதவி செய்ய வந்த இவர், வெங்கண்ணாவின் (அல்லது தளபதிகளின்) வஞ்சத்தீர்ப்பால், தஞ்சைத் தரணிக்குத்திடீர் மன்னரானவர், **ஏகோஜி** 1676-1683.

மதுரை அரசி **ராணிமங்கம்மா,** இராமனாதபுரத்து மன்னன், **கிழவன் சேதுபதி** ஆகியோரிடம் அரசியல்ரீதியாக உரிமைப்போர் செய்தாலும், அடிப்படை நட்பைப் போற்றி வளர்த்த புத்திசாலி அரசர் **இரண்டாம் சகஜி** 1681-1712.

நடனநாடக இசைப்பிரியர், சிற்ப மற்றும் ஓவியக்கலைகளைப் போற்றியவர், அபிராமி பட்டர், அருணாசலக் கவிராயர் முதலான இறையருட் பெரும் புலவர்களை ஆதரித்தவர் **முதலாம் சரபோஜி** 1712-1728.

நீர்ப்பங்கீட்டைச்சீர் செய்து, மக்களின் ஆரோக்கியம் தழைப்பதற்காக, சித்த மருத்துவ ஆய்வுகளை ஊக்குவித்து வளர்த்தவர், வடமொழி இலக்கியங்களையும் போற்றியவர், **முதலாம் துளஜா** (துக்கோஜி) 1729-1735.

தஞ்சையை முற்றுகையிட்ட **சந்தாசாகிபுவை** வெற்றிகண்டவர், தனது கோட்டைக்காவல் அதிகாரியான **"சையது" என்பவன்,** செய்த துரோகத்தால் படைபலத்தை இழந்தவர், **இரண்டாம் ஏகோஜி** (பாவாசாகிப்) 1736-1737.

"பாவாசாகி" பின் மனைவி; மராட்டியரின் தஞ்சைத் தரணியின் ஆட்சியிலே, ராணி ஆன ஒரே பெண்ணரசி. காவலதிகாரி சையதின் துரோகம் தஞ்சைத் தரணியின் அரசியலிலே தொடர்ந்ததை எதிர்த்து (வாட்போரில்) வீரமரணம் பெற்றவள். **சுஜான்பாய்** 1737-1738.

துரோகி சையதின் ஆதரவோடு மன்னனானவர்: அரசியலில் முதிர்ந்த ஞானமில்லாததால், பிரஞ்சு, மற்றும் டச்சுக்காரர்களுக்கு "ஒண்ட" இடம் கொடுத்து ஏமாந்தவர்: சந்தா சாகிபால் வீழ்த்தப்பட்டவர், **சாஹூஜி** (காட்டுராஜா) 1738-1739.

வாரிசாக இல்லாமல் மன்னரானாலும், நவாப், நிஜாம், வெள்ளை கம்பெனி களை எதிர்த்துப் போராடியவர். தானைத் தலைவர் **மானோஜியின்** வீரத்துணையால் தஞ்சையைச் சீராக ஆண்டவர். **பிரதாபசிம்மன்** 1739-1763.

சிவகெங்கைச் சிங்கங்களான **சின்னமருது, பெரியமருது** மன்னர்களையே... "என்ன" என்றவர்: நவாப், ஆங்கிலேயரின் ஓயாத்தொல்லையால், ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டு, ஒப்பந்தத் தொகையைத் தரமுடியாமல் சிறைப்பட்டு, அவரது மதியூகத்தால் சிக்கல் தீர்ந்து, கம்பெனியின் உதவியோடு, மீண்டும் அரசரானவர் **இரண்டாம் துளஜா** 1763-1787.

வாரிசற்ற இரண்டாம் துளஜா, "சரபோஜி" எனும் சிறுவனை "தத்து" எடுத்து அவனது பாதுகாப்பாளனாக நியமிக்கப்பட்டவர்: சரபோஜிச் சிறுவன், பாதிரியார் ஒருவரால் சென்னையில் வளர்ந்து படித்துவரும் காலத்திலே, குறுக்கு வழியிலே ராஜா ஆனவர், **அமர சிம்மன்** 1787-1798.

"சுவார்ட்ஸ்" பாதிரியாரால் சென்னையிலே வளர்ந்து, ஆங்கில பிரஞ்சு, மொழிப்புலமை பெற்றவர். கம்பெனியின் தயவால் சட்டப்படி ராஜா ஆகி, தன் இஷ்டப்படி அரசாண்டதால், வெள்ளையரால் "நாசூக்காக" தண்டிக்கப்பெற்றவர். "பென்ஷன்" பணத்தோடு பெயருக்கு "ராஜா"வாக இருந்தபடி, பல சிறந்த கலைகளையும், அரிதான **சரஸ்வதிநூலகத்தை** வளர்ப்பதிலும், வாழ்வின் இறுதிவரை பாடுபட்டு, ஈடுபட்டவர், **இரண்டாம் சரபோஜி** 1798-1833.

இரண்டாம் சரபோஜி மன்னருக்கு அருமை மகனாகப் பிறந்து, வளர்ந்து, தந்தையைப் போலவே பெயருக்கு ராஜாவாக விளங்கியதால், செங்கோல் பிடித்தும் சாதனை எதையும் செய்ய முடியாமல்போன நல்லவர், **சிவாஜி** 1833-1855.

(இரண்டாம் துளஜா "ஹவுஸ் அரஸ்ட்" கைதியாக இருந்த காலத்தில் சுமார் மூன்றாண்டுகள் (1773-1776) நவாபுகள் தஞ்சையை ஆண்டனர்! 1781-லே மைசூர் நாட்டு ஹைதர்அலியும் தஞ்சைத் தரணியின் செல்வ வளத்தை ஏழெட்டு மாதகாலம் "ருசி" பார்த்திருக்கிறார்).

பாலுக்கும்காவலாய், பூனைக்கும் தோழனாய் விளங்கிய கிழக்கிந்தியக் கம்பெனி, சரபோஜி மன்னர்கட்க்குப் "பென்ஷன்" தந்த நாளிலேயே, தஞ்சைத் தரணி ஆங்கிலேயரின் முழு உடைமை ஆகிவிட்டது. மண்ணின் மைந்தர்களான சோழர்களும், பல்வேறு கால கட்டங்களிலே தஞ்சையைக் கட்டியாண்ட பாண்டியர், சேரர், பல்லவர், முத்தரையர், நாயக்கர், மராட்டியர், நவாபுகள், ஆங்கிலேயர்... முதலான அனைவருமே தஞ்சைப் பெரிய கோயிலைக் களங்கப்படுத்தியதாக வரலாறு இல்லை. (பிற்காலப் போர்வெறியர் சிலர், பெரிய கோயிலைப் படைகள் தங்கும்பாசறை ஆக்கியுள்ளதைத்தவிர) ராஜராஜ சோழனுக்குப்பிறகு, பெரிய கோயில் வளர்ச்சி யிலே ஈடுபட்ட சில நாயக்கமன்னர்களை நினைவில் கொண்டே தீர வேண்டும்.

ஆலயச் செல்வங்களுக்காக மாலிக்காபூர் போன்ற பேராசைக் கொள்ளையரின் பிரவேசத்தால்தான், தமிழக மற்றும் தஞ்சை ஆலயங்களில் செல்வ இழப்பும், சிற்ப ஊனங்களும் பெருமளவிலே ஏற்பட்டிருக்கின்றன!

பாண்டிய, பல்லவ, சோழ மன்னர்கள் கட்டிவைத்த பேராலயங்களின் பெரும்பகுதி, இன்றும் இருக்கின்றன. ஆனால் அந்தப் புகழ்மிகு மன்னர்கள் வாழ்ந்த அரண்மனை, மாட மாளிகை, கூடகோபுரங்கள் எல்லாம் எங்கே?

பல்லவன் உறையூறைத்தாக்குவது, பாண்டியன் தஞ்சையை இடிப்பது: சோழன் மதுரையை உடைப்பது... இப்படி மாறி நடந்த மண்ணாசைப் போர்களால் தான் ராஜாக்களின் அரண்மனைகள் காணாமல் போயின!

சாமிகும்பிட மட்டுமே, கோயிலைக் கட்டினர் பிறமன்னர்கள்: ஆனால் ராஜராஜ சோழனோ, சமுதாயநிர்வாக நிலைக்களனாகவும் முத்தமிழோடு வித்தகக் கலை பலவற்றின் விளை நிலமாகவும் தஞ்சைப் பெரியகோயிலை உருவாக்கினான்.

தஞ்சைப் பெரியகோயில் என்றால், 25 சதுர அடி, 80 டன் நிறையுள்ள பிரம்மரேந்திர ஒரேகல்! நிழல் விழாத கோபுரம்! ஆணி அடிக்கப்பட்டதால் வளர்ச்சி நின்றுவிட்ட 20 அடி நீள, 12 அடி உயர, 8 அடி அகல ஒரே கல்லால் ஆன ராஜராஜன் காலத்திய மாபெரும் நந்தி. அஷ்டபந்தன மருந்தால் இணையாத பாணத்தை (லிங்கம்) கருவூர்த்தேவரின் பாக்கு வெற்றிலைநீர் இணைத்தது! பாடப்புத்தகங்களிலுள்ள ராஜராஜன், கருவூர்த்தேவர் படம் ஆகியவையே... "அற்புதம்" எனப்பேசப்படுபவை. இவற்றில் கற்பனைக்கலப்படம். ஒரு "சாம்பிள்"! **தஞ்சைப் பெரியகோயிலின் நிழல், நன்றாகவே தரையில் விழுகிறது!** இக்காட்சி "விடியோ"வில் பதிவாகியுள்ளது. தமிழக அரசு தொல்லியல் துறை, முன்னாள் இயக்குநர், **இரா.நாகசாமி** அவர்கள் ஆதாரத்துடன் விளக்குகிறார். யுனெஸ்கோ.., மற்றும் தில்லி இந்திராகாந்தி தேசிய கலைக்கழகத்தின் ஆய்வுகள்.



செய்தி ஆதாரம் - "தினமணி" - 10.3.1996

தஞ்சைப் பெரியகோயில், கும்பிடுவதற்கு மட்டுமே ஏற்பட்டதல்ல; மக்களின் அனைத்துக் குறைகளையும் பூர்த்தி செய்வதற்காக மாமன்னன் ராஜராஜ சோழனால் கட்டப்பட்டதாகும்.

தஞ்சைத் திருத்தலத்தின் புராணவரலாற்று மகாத்மியம் கூட இதே உயர்ந்த கருத்தைத்தான் கொண் டுள்ளது பாருங்கள்.....

''பன்னிரண்டு ஆண்டுகள் தஞ்சைத் தரணியெங்கும் தொடர்ந்து கடும் பஞ்சம்: பசி பட்டினியால் தவித்த மக்களின் துயர் நீங்குவதற்காக, **பராசரமுனிவர்** கடுந்தவம்புரிந்து, தளிக்குளத்து இலிங்கத்திலே ஈஸ்வர தரிசனம் பெறுகிறார். ஈஸ்வரனின் அருளால் அமுதத்துளிகளை அடைந்தார். புஷ்கரணியில் கரைத்து மக்களைப் பருகச் செய்வதற்காக எடுத்துச் செல்லும்போது, **தஞ்சன், தாரகன், தண்டகன்** எனும் மூன்று அசுரர்கள், முனிவரிடமிருந்து அமுதத்தைப் பிடுங்கிச் சாப்பிட்டுவிட்டு ஆட்டம் போடுகின்றனர். முனிவர், மீண்டும் தவம் செய்து, மகா விஷ்ணு, அம்பாள் இருவரையும் தரிசனம் கண்டு முறையிடுகிறார். **பத்ரகாளி** வடிவிலே உருமாறி, தண்டன், தாரகனை அம்பாள் வதம் செய்கிறாள். அமுதத்தைப் பெரும் பகுதி உண்டு விட்ட தஞ்சனை, **ஸ்ரீ மகா விஷ்ணு நரசிம்மூர்த்தியாக** மீண்டும் தோன்றி, வீழ்த்துகிறார். தஞ்சனின் இறுதி வேண்டுதலின்படி... ''இன்றுமுதல் இந்த இடம் **தஞ்சன் ஊர்-தஞ்சாவூர்**-என விளங்கும்'' என்று வரமளிக்கிறார்.

பாரசர முனிவரின் பிரார்த்தனைப்படி, பசி நோயின் நிரந்தரத் தீர்வாக தஞ்சைத் தரணியிலே, பஞ்சமேவராதபடி... மூன்றுபோகம் விளைந்துகொட்டும். **''நெற்களஞ்சியமாக''** விளங்கவும் அருள் பாலிக்கிறார் ஸ்ரீமத் **நாராயணன்.**

ஸ்ரீவைகுந்தவாசன், பூமிக்குவந்த ரூபத்திலும், தஞ்சனுக்கு முக்தி தந்தவடிவத்திலும், தஞ்சையிலே கோயில் கொள்கிறார். **நீலமேகப் பெருமாள் செங்கமலத்தாயார், சிங்கப்பெருமாள்** ஆகிய திருப்பெயர்களோடு **''தஞ்சைமா மணி''**களாக இன்றும் விளங்குகின்றனர்.


அம்பாளின் ஆவேசத் திருக்கோலங்கள், **பச்சைக்காளி,பவளக்காளி, கோடியம்மன், மாரியம்மன்** என... எட்டுவித வடிவங்களிலே தஞ்சையின் எல்லைகளைக் காக்கும் தெய்வங்களாகின்றன.

(மேற்படி தஞ்சை மகாத்மியத்திலே வரும் தளிக்குள பூமியில்தான், ராஜராஜ சோழன் பெரிய கோயிலைக் கட்டிப், பெருஉடையாரை ஸ்தாபித்தான்.)

தஞ்சைக்கு **''அழகாபுரி''** எனும் மற்றொரு பெயரும் உண்டு. அதன் காரணப் புராணக் குறிப்பாவது...

சாமகானத்தால் பரமேஸ்வரனிடமே ''ஈஸ்வரன்'' பட்டம்பெற்ற இலங்காதி பதியிடம், குபேரன் ஏதோ **''சில்மிஷம்''** செய்திருக்கிறான்: குபேரனுடைய செல்வச் சிறப்புக்களோடு, அமராவதிபட்டினத்தையும்... இலங்கேஸ்வரன் கவர்ந்து கொண்டு, குபேரனையே தரித்திரனாக்கிவிட்டான்! இதே தளிக்குளத்து ஈஸ்வரனிடம் (சிவலிங்கத்திடம்) முறையிட்டுப் பரிகாரம் கண்டு... மீண்டும் தனது அழகாபுரி (அமராவதியை) அடைந்திருக்கிறான். குபேரன்! தான்வரம்பெற்று வளம் கண்ட தால், இந்த பூமிக்குத் தனது ''அழகாபுரி''யின் பெயரையே சூட்டி ''தளிக் குளத்து

எல்லைக்கு வந்து பிரார்த்தித்துக் கொண்டவர்கள் சகல சௌபாக்கியங் களையும் பெறுவர்'' என்றும் குபேரதேவன் அருளியிருக்கிறான். (எனவே **தஞ்சைப் பிரகதீஸ்வரரின் பெருவுடையார்- கோயிலுக்கு, இன்று நாம் பிரார்த்தனை செய்து ஆராதனை அபிஷேகங்களை முறைப்படி செய்தால், கேட்டது கிடைக்கும்.**



பிரச்சினை எதுவும் வந்தால் தானே, சாதனையே பிறக்கிறது! அதுபோல் ராஜராஜனுக்கும் ஒரு பிரச்சினை வந்திருக்க வேண்டும். தளிக்குளத்து பூமி ஈஸ்வரனை (லிங்கத்தை) வேண்டியதும் தீர்ந்திருக்கும்: வெற்றிமேல் வெற்றியும், மலைபோல் செல்வமும் குவிந்ததும் **பெரிய கோயிலை** உருவாக்கியிருக்கிறான்.

"இஞ்சிசூழ்தஞ்சை" (இஞ்சி-கோட்டை) எனும் திருவிசைப்பா பாடலால், தஞ்சை நகரைச் சுற்றிலும் பதிமூன்று மைல் நீளக் கோட்டை இருந்ததாம்: ஆசாரவாசல்கள் நான்கும், மிக ஆழமான அகழியும் இருந்ததாம்.

காலப்புயலிலே நகர்க்கோட்டை தகர்ந்து, அரண்மனை ஆலயம் இரண்டும் கோட்டையுள் விளங்கியுருக்கிறது. மாவீர சோழ சாம்ராஜ்ய அஸ்தமன காலத்திலே, (14 நூற்றாண்டு) மதுரைப் படைகளின் வீராவேசத் தாக்குதலால்.., தஞ்சை அரண்மனைகள் தவிடு பொடியாயின.

பிற்கால நாயக்கர்கள், பெரியகோயிலின் கோட்டையை மட்டும் சீர்படுத்தி, ஆலய வளாகத்துள் பல சன்னிதிகள், மண்டபங்களை அமைத்ததோடு, தமது குடும்பத்துக்குச் சில புதிய அரண்மனைக் குடியிருப்புகளையும் ஏற்படுத்திக் கொண்டார்கள்.

மராட்டியர் காலத்திலே, கோயில் கோட்டையும் சிதிலமானது: அகழி தூர்ந்தது. தங்களுக்கென ஏழு மாடி (ராணி மஹால்) மாடங்களையும், எழிலான வேறு பல கூடங்களையும் சரபோஜி மன்னர்கள் உருவாக்கிக் கொண்டனர்.

பட்டுக்கோட்டை அருகிலுள்ள சாளுவநாயக்கன் பட்டினத்திலே 1815-ல் இரண்டாம் சரபோஜி கட்டிய, ஒன்பது-அடுக்கு **"மனோரா"** (Tower) காண வேண்டிய ஒரு நூதன கட்டுமான அமைப்பாகும்.

ஆங்கிலேயர் காலத்திலே, பெரும்பாலான அகழிப்பகுதிகள் மூடப்பட்டு ரோடுகளாயின. சுதந்திர இந்தியாவிலே, கோட்டைச் சுவர்களிலும் அரண்மனை இடிபாடுகளிலும், இடையிடையே நவீனவீடுகள்! சுயநலமிக்க நம்மவர்களால்

"ஒட்டப் பட்டன". பஸ் ஸ்டாண்டும் பழமார்க்கெட்டுமாக வரலாற்றுப் புகழ்மிகு சிற்பச் சின்னங்கள் சிதைந்து இடிந்து, அழிந்து வருகின்றன.

பெரியகோயிலுக்கு அருகே உள்ள **சிவகெங்கைத் தீர்த்துக்** குளம், மிகமிகப் பெரியது: ஆனால் அது தற்போது "பார்க்"கின், குப்பை, மற்றும் **கழிவுநீர்களின் சங்கமக் குளம்** ஆகி வருகின்றது! கோயிலை ஒட்டிய வெளிச்சுற்று, மரம் செடி கொடிகளால் அடர்ந்த காடாக இருந்ததை, நவீன "பார்க்" ஆக்கிக் கொண்டு வருகின்றது தொல்பொருள் துறை.

மராட்டிய மன்னர்களின் அரண்மனைக்கும், பெரிய கோயிலுக்கும் சுமார் ஒரு மைல் தூர இடைவெளி இருக்கும். சரபோஜி மன்னரின் மஹால்கள், தர்பார் மண்டபங்களெல்லாம் "கிழடுதட்டி"த் தள்ளாடி வருகின்றன. கடந்த நவம்பர், டிசம்பர்களில் கூட (1993) வருணபகவானின் சீற்றத்தால், சிலபகுதிகள் இடிந்து விழுந்துவிட்டன! இந்த வளாகத்திலேதான், சமுதாய நல அரசுச்சார்பு பற்பல அலுவலகங்கள் உள்ளன: உலகப்புகழ் பெற்ற **சரஸ்வதி மஹால் நூலகம். கலைக்கூடம்.... ராஜராஜன் அருங்காட்சியகம்... தமிழ் பல்கலைக் கழக அச்சகம்,** விற்பனை அலுவலகம் இன்னும் பற்பல...! ஆஃபீஸ், அலுவலகங்கள்!!

தஞ்சை போன்ற புராதன நகர்களிலே உள்ள பழங்கால வரலாற்றுச் சின்னங்களை... கட்டிடங்களை, சிற்ப அற்புதங்களைப் பராமரித்துப் பாதுகாப்பது. பிராதனப் பணிகளுள்ஒன்றாக மதிக்கப்படவேண்டும்! நிதி ஒதுக்கப்பட வேண்டும்!

ஆலயத்தின் கிழக்குவாசல், அகழியின் சுவடே தெரியாதபடி போடப்பட்டு விட்ட தார்ரோட்டைக் கடந்து, மராட்டியர்கால சிறுவாசலைத்தாண்டி, ஐந்து நிலைகளைக் கொண்ட **கேரளாந்தகன்வாசல்:** அடுத்து, மூன்றுநிலை கோபுர **ராஜராஜன் வாசலில்** நுழைந்து: உள்ளே போனால்... கிழக்கு மேற்காக 793 அடி நீளமும், தென் வடல் 397 அடி அகலமும் கொண்ட **பெரிய கோயிலின் பெரிய வளாகம்.** ஆலயத்துள் நமது முதல் பார்வைக்கு இலக்காவது... நாற்சதுர வடிவிலே 96 -அடி அகலத்திலிருந்து மேலே குறுகியபடி... எண்பட்டை கிரீவம் (சிகரமுடி) பொன்முலாம் பூசப்பட்ட கும்பத்துடன் கூடிய அபூர்வ அமைப்பான **பெரியகோபுரம்** தான்! உயரம் 216 அடிகள். வட்டச் சிகரத்தைத் தாங்கும் பிரம்மராந்திர தளக்கல். 25 சதுர, 80 டன் எடையுள்ள ஒரேகல் என்பது வெறும் வதந்திதான். பல இணைப்புடன் கூடியது அது; **"அழகி"** என்னும் கிழவியின் சிறுகல்லும் அதில் இணைக்கப்பட்டுள்ளது அவ்வளவே. (நிழல்விழா கோபுரம் என்பதும் வீண் வதந்தியேதான்)

மிகப்பெரிய திறந்த வெளிப்பிராகாரம்! ஆலயத்தின் வெளித் திருமதிலின் உட்புரம் திருச்சுற்று. ராஜராஜனின் படைத்தளபதி **கிருஷ்ணன் ராமனின்** உபயம்: கட்டும்போது இரண்டு அடுக்காகும்! (இப்போது கீழ்தள வரிசைமட்டுமே உள்ளது.)

திருச்சுற்றுமாளிகைத் தொடரின் இடையிடையே முப்பத்தி ஆறு சிறு சன்னிதிகள் உள்ளன: ஆரம்பத்திலே அவற்றுள் விநாயகர், முருகன், சாஸ்தா, அஸ்வினி தேவர்கள், அக்கினி, நிருதி, யமன், குபேரன், வருணன், வாயு, ஈசானன் முதலான காவல் தெய்வங்கள் (அஷ்திக்பாலர்கள்) இடம்பெற்றிருந்தனர். **(ஒளியிழந்த, மூளியான ஒரு சில விக்ரஹங்களைத் தவிர, பெரும்பாலான**

கருவறை கள் இப்போது "சூன்யமாகவே" உள்ளன.) பலிபீடத்தை அடுத்து, 20 அடி நீள: 12 அடி உயர: 8 அடி அகல ஒரே கல்லால் ஆன சோழர்காலத்திய மிகப்பெரிய நந்தி. மண்டபம் நாயக்கர் காலத்தது. "நந்தியும் அப்படியே" என்கிறது இன்றைய ஆய்வு.

சம்பிரதாயப்படி திறந்த வெளிப்பிராகாரத்திலே இடமிருந்து வலமாக மெதுவாக நடக்கிறோம். லட்டு வடைபிரசாதக் கடை, தோட்டப்பராமரிப்பு அலுவலகம். புல்வெளியிலே சிறுசன்னிதி ஒன்று; நின்று பணிகிறோம்; ராஜராஜ சோழனின் வெற்றிகளுக்குத் துணைபுரிந்த **ஸ்ரீ வராஹி அம்மன்,** மஹாவரப் பிரசாதியாம்! தொடர்ந்து நடந்தால் தொல்பொருள்துறை ஆஃபீஸ், அப்படியே நடந்தால், மேற்குத் திருச்சுற்றிலே, 108 இலிங்கங்களின் அணிவகுப்பு.

பெரிய கோயிலின் தற்போதைய... விநாயகர், முருகன், அம்பாள் கோயில்கள், நடராஜர் மண்டபம், கருவூர்த் தேவரின் சிறிய ஒட்டுவீட்டுச் சன்னிதி... முதலானவை, சமீப (ராஜராஜனுக்கு பிற்பட்ட) காலத்தவை. ஆதியில் பெரியகோயில் வளாகத் திருச்சுற்று மாளிகை, பரிவார தேவதைகளைத் தவிர... **சண்டிகேஸ்வரர் சன்னதி** ஒன்றுதான் அன்று, தனியாக அமைக்கப்பட்டிருந்தது.

15-ம் நூற்றாண்டில் அருணகிரிநாதர் இத்தலத்திற்கு வந்த போது, திருச்சுற்றுமாளிகையின் முருகன் சன்னிதி காலியாகவும், பிற்கால முருகன் கோயில் கட்டப்படாமலும் இருந்ததால், கோபுரத்தில் உள்ள முருகனைத்தான் அருணகிரிநாதர், திருப்புகழில் பாடியிருக்கிறார்.

பிராகார வடகிழக்கிலே உள்ள நடராஜர் (உத்ஸவமூர்த்தி) பற்றி அறிந்தே தீரவேண்டும்; மராட்டியர் காலத்துச் சன்னிதி (மண்டபம்)யில், சோழர் காலத்து நடராஜரின் செப்புத் திருமேனி மிகவும் பெரிது. ஆடும் அழகும், திருமுருகப் பொலிவும், சாய்ந்த முகபாவத்திலே ஜொலிக்கும் ஜீவகளையும், இதழிலே மின்னும் குமிண் சிரிப்பும்... அப்பப்பா! வேறு எங்குமே காணமுடியாத அற்புதவடிவ ஆடும் தெய்வம்.

கோபுரத்தின் முன்புறமும் ஏனைய மூன்று பக்கங்களிலும் கல்லிலே, புராண இதிகாசக் கவிதைகளையே வடித்துள்ளனர் சோழர்காலச் சிற்பிகள்! **(தலைமைச் சிற்பியாக இருந்தவர், குஞ்சரமல்லன்)** பைரவர். விநாயகர், திருமால், சரஸ்வதி, சந்திரசேகரர், மஹிசாசுரமர்த்தனி, அண்ணாமலையார், காலாந்தகர், நடராஜர், லிங்கோத் பவர், சங்கர நாராயண மூர்த்தி... இப்படியாக... எண்ணி லடங்காச் சிற்பங்களோடு, புத்த சமயச் சிற்பங்களும், துறவிகளும் கூட தஞ்சைப்பெரிய கோ யில் கோபுரத்திலே இடம்பெற்றுள்ளனர். சிற்பங்களின் ஜீவ களைக்கு ஒரு "சாம்பிள்". ஒரு அடி அகல மார்கண்டேயன் கதைச்சிற்பம்! லிங்கத்தை மார்க் கண்டேயன் தாவித்தழுவும் பரபரப்பு. எமதர்மராஜன் ஓடிவரும்போது ஆடும் அவனது மேலாடை, தலைமுடிகள்பறப்பது-முதலான அனைத்தையும் காண முடி கிறது! ஒரு அடி உயரச் சிற்பத்திலேயே இத்தனை உயிரோட்டம் உள்ளது என்றால், நூற்றுக்கணக்கான சிற்ப விற்பன்னர்கள் ஆறாண்டுக் காலமாகப் பாடுபட்டு உருவாக்கிய பெரிய கோயிலின் ஆறடி ஏழடி உயரச் சிற்பங்களெல்லாம் எப்படி இருக்கும் என்பதைக் காணாதவர்கள், கற்பனை செய்து காணத் துடியுங்கள்.

பெரிய கோயிலின் பிரதான உள்வாசலுக்கு வருகிறோம். பத்தொன்பது அடி உயர மிகப் பெரிய துவாரபாலர்கள், அருகிலே வாளும் கேடயமுமாக ராஜராஜனும், அவன் மகன் ராஜேந்திரனும், சிறிய அளவிலே, கணபதி துர்க்கை சிற்பங்கள்.

மகாமண்டபம், பிற்கால நாயக்கர் காலப்பாணியில் விளங்குகிறதே ? அர்த்த மண்டபத் தூண்கள்... நாற் சதுரவடிவிலே, மிகமிகப் பெரியவைகளாக உள்ளதே ? இவற்றின் விவரங்களை, மேலே, கோபுர அற்புதத்தைக் கண்டபிறகு விளக்குவோம்.

மூலஸ்தானத்தின் முன்னால் வந்து நிற்கிறோம். கருவரையின்வாசல், அகலம் 6 1/2 அடி: உயரம் 13 1/2 அடிகள்: ஆனால் மூலவரோ, 54 அடிச் சுற்றள வுள்ள ஆவுடையாருடன், சுமார் 20 அடி உயரமுள்ளவர். "**கருகரு**" வென்றதிரண்ட மிகப் பெரிய திருமேனி, வேறெங்குமே இல்லாத பெரிய இலிங்கமான **ஸ்ரீ பிரகதீஸ்வரர்** என்கின்ற **தஞ்சைப் பெருவுடையார்** முன், கைகூப்பித் தியானிக் கிறோம்.

மணியோசை முழங்க கற்பூரதீபாராதனை முடிந்து, பிரசாதம் பெற்றதும், கருவறையுள் பார்க்கிறோம், பிரம்மாண்டமான மூலவரைச் சுற்றிலும் மேல் பகுதியிலே பிரத்தியேக இரும்புப் பாலத்தின் சிறப்பான அமைப்பு. அங்கிருந்துதான் மூலவருக்கு அபிஷேகம். அலங்காரங்கள் செய்யப்படுகின்றன. நிலைப்படியோரம் மிகச்சிறிய வடிவமான **போகசக்தி** (செப்புப்படிமம்) யை கும்பிட்டதும், கோபுர அற்புதத்தைக் காணப் புறப்படுகிறோம்.

பிரத்யேக அனுமதி பெற்றதால்... மகா மண்டப இடதுபுறம் இருந்த கதவைத்திறந்து விட்டு நம்மோடு உடன் தொடருகிறார் ஆலயக்காவலர்.


மேல் தளத்தை நாம் அடைந்ததும், ஆலயத்தின்மேல் வாசலிலே கட்டுமானம், அறைகுறையாகப் பூசி மெழுகப்பட்டிருப்பதன் விபரத்தைக் கேட்டு அறிகிறோம்.

இப்போதைய நாயக்கர்கால மஹாமண்டபம் எப்படி வந்ததென்றால், சோழர்கால மஹாமண்டபமும், மண்டபத்தின் மேலே இருந்த இரண்டு அடுக்கு மாடியமைப்பும், திருச்சுற்றுமாளிகையின் மேல் பகுதியும், ஆலயத்துள் நுழையும் போது கண்டோமே, 19 அடி உயர துவாரபாலர்கள் அது போலவே இரண்டு, மற்றும் ஏராள நுட்பமிகு சிற்பங்களும் 14-ம் நூற்றாண்டிலே புயலெனப்புகுந்த பிறமத வெறியர்களால் நாசமானவை. (கீழே உள்ள துவாரபாலர்களின்கால் கைப்பகுதிகள் அப்போது சிதைந்து, தற்போது சிமிண்ட்டால் சரிசெய்யப்பட்டவை) முற்றிலும் இடிந்து கிடந்த மஹாமண்டபத்தை, நாயக்க மன்னர்கள் தமது பாணியில் கீழ்பகுதியைமட்டும் பூர்த்தி செய்தனர். எங்கோ இருந்த பல்லவர் காலத் தூணும் அப்போது தான் மஹாமண்டபத்தில் இடம்பெற்றது.

அர்த்த மண்டபத்திலே உள்ள நாற் சதுர வடிவான மிகப்பெரும் முரட்டுத் தூண்கள் ஏனென்றால், மேலே உள்ள இரண்டடுக்கு கோபுரங்களையும் தாங்கு வதற்காக! என்ற விளக்கத்தைக் கேட்டதும், "**கோபுரம் ஒன்றுதானே ? எப்படி இரண்டு ?**" என்ற நம்மிடம் "வாருங்கள்" என்றார் வழிகாட்டி: பின்தொடர்ந்தோம்.

கோபுரத்துள் நுழையும் வாசலிலே இரண்டு அடுக்குமாடி அப்போது இருந்ததற்கான அடையாளங்களாக, இருபுறமும் உள்ள பெரிய துவாரபாலர்களைப் பார்த்தபடி உள்ளே செல்கிறோம்.

பெரிய கோயில் கோபுரத்துள் "உண்ணாழி" (ஒரு கோபுரத்துள் இன்னொரு கோபுரம்) இருப்பது பல உள்ளூர் பிரமுகர்களுக்கும், அவர்தம் நண்பர்களுக்கும் மற்றும் ஆலய ஊழியர்களுக்கும் பழய செய்தியாக இருக்கலாம். ஆனால் பெரும்பாலும் "V.I.P." அல்லாத வெளியூர் பொது மக்களுக்கு இது புது "நீயூஸ்" தான்!



தஞ்சை பெரிய கோயில் கோபுரம் மற்றும் மூலஸ்தான "எக்ஸ்ரே"

தரையிலே சிறு பொம்மை லிங்கம் ஒன்றை வைத்து, அடிபாகம் குறுகியுள்ள ஒரு லிட்டர் டம்ளரை மேலே கவிழ்த்து, அந்த டம்ளர் மேல், மூன்று லிட்டர் பெரிய டம்ளரை கவிழ்த்தால், இரண்டு டம்ளர் களுக்கும் நடுவிலே இடைவெளி இருக்கு மல்லவா? அதையே பெரிய கோவிலின் 216 அடி உயர கோபுரமாக மனதிற்குள்ளே உருவகப்படுத்திக்கொள்ளுங்கள். தஞ்சைக் கோபுரத்தின் இரண்டு அடுக்குகளுக்கு மிடையே இடைவெளி சுமார் ஏழு அடிகள். அதை இரண்டு அடுக்குகளாப் பிரித்து, கீழ் அடுக்குச்சுற்று முழுதும், உலகப் புகழ் பெற்ற ராஜராஜ சோழன் காலத்திய அற்புத ஓவியங்களான, சுந்தரர் காணும் கைலைக் காட்சி, திரிபுரதகனம் செய்யும் சிவபெரு மான், பெருவுடையாரை ராஜராஜனும், அவனது துணைவியார்களும் வழிபடுதல், தேவலோக நடனமாதர், இரண்டிரண்டு முனிவராக ஜனகாதியர் நால்வர் **(இவர்களில் இருவர் ஓவியத்தைத்தான் நாம் இதுவரை ராஜராஜன் கருவூர்த் தேவர் எனக்கருதி வருகிறோம்)** இன்னும் பல்வேறு அரிதான சித்திரங்கள்! இவற்றை நாயக்கர்கால நவீன ஓவியங்கள் மறைத்திருந்து... 1951-லே அண்ணாமலை பல்கலைக் கழகத்து, ஸ்ரீ **S.K. கோவிந்த சாமிப்பிள்ளை** என்கின்ற அறிஞரால் கண்டுபிடிக்கப்பட்டு, தற்போது, முழுவதுமாக அவை மீட்கப்பட்டு உள்ளது.

"உண்ணாழி"யின் கோபுர-மேல் அடுக்கிலே... இடமிருந்து வலமாக பரதக்கலை யின் **108** கரணங்களை (நடன முத்திரைகளை) சிவபெருமானே ஆடிக்காட்டுவதாகத்... தனித்தனிச் சிற்பங்கள் வரிசையாக அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 81 கரணச் சிற்பங்கள் தான் பூர்த்தியாகியிருக்கிறது: பாக்கிச் சிற்பங் களுக்கான இட ஒதுக்கீடு இருந்தும், ஏனோ அவைகள் செதுக்கப்படவில்லை? விடை காண்பதற்கு, நாம் சற்று வரலாற்றுக் காலத்திற்குச் செல்ல வேண்டும்.

ராஜராஜ சோழனின் 57 வது வயதிலே (கி.பி. 1010) பெரிய கோயில் கும்பாபிஷேகம், 1012-ல் தனது மகன் ராஜேந்திரனுக்குப் பட்டம் கட்டினான். 1013-ல் போர்க்களங்களிலே பற்பல எதிரிகளை கொன்று குவித்த கொலைப்பாவம் தீர... "டன்" கணக்கிலே தங்கத்தை செலவு செய்து **"ஹேமகர்ப தானம்"** செய்தான். 1014-ல் ராஜராஜசோழன், மரண முற்றான்.

சோழர்குலத் திலகமாக விளங்கிய ராஜராஜசோழனின், வெற்றிப் பட்டியலைச் சொல்லும் **"மெய் கீர்த்தி"**யில் சில வரிகளைப்படியுங்கள்...

"காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி, வேங்கைநாடும் கங்கை பாடியும், துளம்பபாடியும், தடிகைபாடியும், குடமலைநாடும். கொல்லமும் கலிங்கமும், முரட்டொழில் சிங்களர் ஈழமண்டலமும், இரட்டைப்பாடி ஏழரை இலக்கமும், முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும்..." என்று தொடர்ந்த அந்த மாவீரனின் ஒவ்வொரு வெற்றியும், மலைபோன்று செல்வங்களைக் குவித்திருக்கத் தானே செய்யும்: அதில் ஒரு பகுதியை ஆலயம் கட்டவும், அறக்கொடைக்கும் செலவழித் தான்: நாலு ஆண்டுக்காலம் ஓயாது உழைத்த சிற்பிகளுக்குச் சற்று ஓய்வு தந்து... சிலகாலம் சென்றதும் பிரகதீஸ்வரர் ஆலயத்தை மேலும் பொலிவு பெறச் செய்யவும், "உண்ணாழி"யின் கரணச்சிற்பங்களைப் பூர்த்தி செய்யவும் எண்ணி யிருக்கலாம். ஆனால் அதற்குள் சிவலோக பதவியை அடைந்து விட்டான்!

ராஜராஜசோழனின் இறுதிக் காலத்திலேயே தனது புகழை உயர்த்திக் கொள்வதற்காக.. கங்கை கொண்ட சோழீச் சரத்தைக் கட்டமுற்பட்டுவிட்ட அவனது மகன், **ராஜேந்திர சோழன்**, தஞ்சையிலிருந்த சிற்பிகளை அங்கே அனுப்பிவிட்டான். (பெரிய கோயிலைவிட கங்கைகொண்ட சோழபுரச்சிவன் கோயில், அதிகப்பொலிடன் விளங்குவது இதனால்தானோ? **தனது கோயிலின் சிறப்புக்காக, தனது தந்தையின் பெரிய கோயிலுக்கு இருந்த சில நிவந்தங்களை ராஜேந்திரன், தனது ஆலயத்திற்குத் திருப்பி விட்டதற்கான ஆதாரங்களும் உண்டு)**

உண்ணாழியிலேயே சிந்தனையில் மூழ்கிவிட்ட நம்மை, "மேலைபாருங்கள்" என்றபடி மின்விளக்கைப்போட்டார் காவலர். **நாற்சதுர உட்கோபுர அமைப்பு! வரிசையாக மின்விளக்குகள்: மேல்நோக்கி எரிந்து, சிகரத்தைப் "ப்ளிச்" எனக் காட்டின. நாற்சதுர அமைப்பானது, வட்ட வடிவமாகிக் கூம்பியபடி, அங்குலம் அங்குலமாகக் குறைந்து, இருகோபுர அடுக்குகளும் சிகரத்திலே ஒன்றாக இணையும் அந்த அற்புதக் காட்சியை என்னென்பது!!**

நூலிழை வித்தியாசம் கூட இல்லாமல், ஒரேசீராக உட்புற இணைப்புக் கற்கள் செருகப்பட்டுள்ள நுண்ணிய கட்டுமான விந்தையிலும் விந்தையான அமைப்பு!, நவீன விஞ்ஞான "கம்ப்யூட்டர்" தரும் சரியானதீர்ப்பு அனைத்தையும் சவாலுக்கு அழைக்கும் துல்லிதமான கணக்கு! ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நமது கட்டிடக்கலை எத்தனை சிறப்பாக இருந்திருக்கிறது! எண்ணவே இனித்தது.

கோபுர மாடியில் நாங்கள் நின்ற இடத்தின் முன்னால் வட்டமான சமதரை, சிமிண்ட் பூசப்பட்டிருந்தது. அதன்மேல் நடந்தோம். **"ஓரமாகச் செல்லுங்கள் கீழேதான் மூலவர்"** என்றதும் அதிர்ச்சியால் துடித்தபடி வெளியேறினோம்.

கீழே மகாமண்டப வாசலில் வந்து அமர்ந்ததும், சிமிண்ட் தளம் போடப்பட்ட காரணத்தை அறிந்ததும், சிந்தனையால் பலகுறிப்புகளை வரிசைப்படுத்தினேன்...

சைவ ஆகமங்கள் 28. அதிலே 17-வதாக வருவது **"மகுடாமகம்"**. அரிதான அந்த மகுடாமகம் முறையிலே, **அருவம், அருஉருவம், உருவம்** இப்படி மூன்றுவகை மூர்த்திகளும் இருக்கவேண்டும். அதன்படியே தஞ்சைப் பெரியகோயிலில், உருவம்,

உத்ஸவமூர்த்தியாகேசர். அருஉருவம், பெருவுடையார்லிங்கம்: அருவ மூர்த்தியாக விளங்குவது "தட்சிணமேரு" எனப் போற்றப்படும் பெரிய கோபுரத்தின் "உள்வெளி" ஆகும்.

மஹாமண்டபம் மூன்று அடுக்குகளுடன் விளங்கிய அந்த நாளிலே, அன்றாட ஆகம முறை பூஜைகளுக்குப்பிறகு, 48 "பிடாரர்களின்" (ஓதுவார்களின்) தேவாரப் பாராயணம் முடிந்ததும், ஆடல்மகளிர் (தேவரடியார்கள்) நானூறு பேரும், மாடிக்கு இருநூறு மங்கையர்களாக அணிவகுத்து, சாஸ்திர பூர்வ நடனங்களை அபிநயித்து ஆடியபடி, முடிவிலே, அங்கிருந்தபடியே புத்தம் புதிய மலர்களை, வழிபாட்டின் நிறைவாக, "கோபுர வெளி"யில் பொழிந்து "புஷ்பாஞ்சலி" செய்வார்களாம்!

கீழே மூலஸ்தானத்துக்கு வெளியே நின்றிருக்கும் பக்தர்களுக்கு பெருவுடையார் லிங்கத்திலே பூமாரி பொழிவதாய் அமைந்து, பரவாசப் பேரானந்தம் தருவதாக இருக்கிறது; (விஷேச நாட்களிலே ராஜராஜ சோழனும் புஷ்பாஞ்சலி செய்வ துண்டு).

மஹாமண்டபச் சிதைவுக்குப்பிறகு (நாயக்கர்காலம்) புஷ்பாஞ்சலி கைவிடப்பட்டது போலும்! மராட்டிய அல்லது சமீப காலத்திலே... ஆகம முறைப்படி அரூபச்சிவமாகிய "வெளி"யை... மூலஸ்தானத்திற்குமேல், சிமிண்ட் தளத்தால் மூடித்... துண்டித்து விட்டனர்! அப்பட்டமான (ஆகம முறை மீறல் என்றே நான் இதைக் கருதுகிறேன்) ஆகமங்களின் பொது விதிப்படியே... கோபுரம் ஸ்தூல லிங்கமாகும். மேலே சிகரத்திலே உள்ள கலசம், மூலவர்க்கும் மூலவராகும்! இரண்டுக்கும் சிறு இடைவெளித் தொடர்பு இருந்தே தீரவேண்டும்.

தற்போது பெரும்பாலான நமது பேராலயங்களிலே, கோபுர சிகரத்தைப் பிளந்து... கலச மேடைகளிலே "மெர்க்குரி" விளக்கை இணைத்து... ஆலய கோபுரங்களை வேடிக்கைக் காட்டும் சர்க்கஸ் கூடாரங்களாக்கி வருவது, சாஸ்திரப்படி பாவம்! சம்ரதாயப்படி குற்றம்!! சமயாசாரப்படி விபரீதம்!!!

பக்தர்கள் குறைந்து, விழாக்களெல்லாம் "காமாசோமா" என ஆனதற்கும், பழம்பெரும் தொல்பொருள் சின்னமாய் பெரிய கோயில், முடங்கிப் போனதற்கும் அரூப "வெளி"க் கடவுளைத் துண்டாடியது தான் காரணமாக இருக்குமோ ?

இந்த ஆகம முறை மீறலைச் சரி செய்ய வேண்டுமானால்... மாநில அரசின் அறநிலையத் துறையும், தஞ்சை அரண்மனை தேவஸ்தானமும், மத்திய அரசின் ஆர்க்கலாஜிகல் டிபாட்மென்ட்டும் இணைந்து செயல்பட வேண்டும்! நடக்க முடியாதது அல்ல! ஸ்ரீ பிரகதீஸ்வரர் திருவருளால் நடக்க வேண்டும்!

"கடவுள் இல்லாத இடமேது? அதனால் மூலவருக்கு நேர்மேல் தளத்திலே நாம் நடப்பதில் தவறேது?" என்பது விதண்டாவாதம்! வீடு, மற்றும் ரோடுகளில் அது சரியாகலாம். "மகேந்திர மலைமீதிருந்து அந்த மாதொருபாகனே அருளியவை ஆகமங்கள்" என்று திருமூலரின் திருமந்திரம் கூறுகிறது. சிவபெருமான் அருளிய ஆகமங்களிலேயே... அரிதாக விளங்குவது பெரியகோயிலின் "மகுடாமகம்". அந்தக் கோயிலிலே இந்த "ஆகம மீறல்" நீக்கப்படவேண்டாமா?

கற்கோயில்களை முதலிலே அமைத்த பல்லவ மன்னர்கள் பக்தியையும், சுற்றுலாவையுமே (காஞ்சி கைலாசநாதர் ஆலயம் மகாபலிபுரம்) குறிக்கோளாகக் கொண்டனர். ஆனால் மாமன்னன் ராஜராஜனோ, தஞ்சைப் பெரிய கோயிலை வெறும் வழிபாட்டுத் தலமாக மட்டுமே அமைக்கவில்லை! மக்களின் வாழ்வுக்கான சகல தேவைகளையும் பூர்த்தி செய்யும் புனிதமிகு கேந்திரமாக, அனைத்துக் கலைகளின் மாதிரிப் பண்ணையாக, ஆகம பூர்வ க்ஷேத்திரமாகவே படைத்திருக் கிறான்.

"சக்கரவர்த்தி" என்ற பெயரிலே, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, ஜனநாயகக் **குடியரசுத் தலைவராக-ஜனாதிபதியாக**-விளங்கி, அனைத்து மக்களுக் கும் அனைத்து வசதிகளையும் ஆங்காங்கே, சமமாகப் பங்கிட்டு வழங்கும். இமாலயச் சாதனையின் ஏக வடிவாக விளங்கியிருக்கிறான். **சிவபாதசேகரனான மா மன்னன் "ஸ்ரீ ராஜராஜசோழன்"**

ஆலயத்திலே பெறப்படும் காணிக்கைச் செல்வங்கள், காலகாலத்திற்கும் குறையாமலும், ஆலயக் கருவூலக் களஞ்சியத்திலேயே தேங்கி வீணாகிவிடாமலும், அதே சமயம், பரந்து விரிந்த சோழசாம்ராஜ்யப் பிரஜைகள், தொழில் செய்ய முதலீடு இல்லாமல் தவிக்காமலும், அற்புதமான ஒரு ஏற்பாட்டைத் தஞ்சைப் பெரிய கோயிலை மையமாக வைத்து உருவாக்கிச் செயல்படுத்தியிருக்கிறான் அந்த மா மன்னன்.

குறிப்பிட்ட கைங்கர்யத்திற்காகச் செலுத்தப்படும் தொகை, குறைந்த வட்டிக்கு (12 1/2) விட்டால், ஆண்டு முழுவதும் அந்த வட்டி வருவாயைக் கொண்டே, அந்தக் கைங்கர்யம் தடையின்றி நடக்கும் என்றால் தான், ராஜராஜன் காலத்திலே, காணிக்கைகள் பெரிய கோயிலிலே ஏற்றுக் கொள்ளப்படும்.

அப்படி வந்த தொகையை, சோழ நாட்டில் எந்தப் பகுதியில்... வருவாய்க் குறைவால் குடும்பங்கள் தவிக்கிறதோ, அவற்றின் தலைவருக்கு வழங்கப்படும்: கேட்டும் பெறலாம். அதை முதலாக வைத்து ஆடு, மாடு... முதலான பண்ணை களை வைத்துத் தனது திறமையால், எவ்வளவு வேண்டுமானாலும் (எதையும் அரசு குறிப்பிட்ட விலைச் குமேல் விற்கவோ, வாங்கவோ கூடாது என்ற கடும் தணிக் கையும் உண்டு) உழைத்து சம்பாதித்து, கைங்கர்யத்துக்கான பொருட்களை, நாள் தோறும் கோயிலில் சேர்ப்பித்து விடவேண்டும். இதுபோலப் பெரும் பிரபுக்களும், சிற்றரசர்களும் கூட, கோடிக்கணக்கிலே ஆலயக் கருவூலத் திலிருந்து கடன் பெறுவதும், வட்டியோடு திருப்பித் தருவதும் உண்டு.

இன்றைய பாங்க் உதவித் திட்டங்களுக்கு, அன்றே வித்திட்டவன் ராஜராஜன் **(ஆனால் வாங்கின கடனை, யாரும் அவன் காலத்திலே கட்டாமல் ஏப்பமிட்ட தில்லை ! ராஜாக்கள் காலத்திலே அது முடியவும் முடியாது)**

காணிக்கை செலுத்தியவர், கோயிலில் அதைப் பெற்றுக் கொண்டவர், கடனாக வாங்கியவர், அதன் வட்டியாக அவர்தர வேண்டிய (காலம் காலத்திற்கும்)

பொருள்... முதலான அனைத்தும் "விரிவான" கல்வெட்டுக்களாக்கப்பட்டு, மூன்றுபடி (பிரதிகள்) எடுக்கப்பட்டு... ஒன்று கோயிலிலும், மற்றவை அரண்மனை, கஜானாக்களிலும் பாதுகாக்கப்பட்டன! எந்த வகையிலும், யாரும், ஒரு சிறு தவறு கூடப் புரியாவண்ணம் கண்காணிக்க, ஏராள ஊழியர்கள் சோழ மண்டலமெங்கும் நியமிக்கப்பட்டிருந்தனர். இப்படியாகச் சோழ மண்டலத்து அனைத்துப் பிரஜை களுக்கும் தஞ்சைப் பெரிய கோயிலுடன் ஏதேனும் ஒருவகை நேரடித் தொடர்பு, என்றென்றும் இருந்து கொண்டே இருக்கும்.

அரண்மனை தர்பார் மண்டபத்தைவிட, ஆலய கர்பக் கிரஹத்துள்ளே, ஆட்சியின் சூட்சுமத்தை... வைத்து, **அரசியல் பொருளாதாரம், குடவோலைமுறை (தேர்தல்), கல்வி, மருத்துவம், சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம்** முதலான அனைத்திலுமே தெய்விகத்தை இணைத்து வைத்த, மாமன்னன் ராஜராஜ சோழன் தான். நானூறுக்கும் அதிகமான ஆடல்மகளிருக்கு வீடு, நிலம் கொடுத்துப் பராமரித்த போதும், அரண்மனையிலே அவர்களது "குரூப்டான்ஸ்" ஒருபோதும் கிடையாது! எல்லாமே **"அரன்மனை"யான பெரிய கோயிலில்**தான்.

"எல்லாம் பெருவுடையார்தான்" என நம்பினான் ராஜராஜன். இன்றும் நம்முடைய இதயங்களிலே, சிரஞ்சீவியாக இருக்கிறான். குபேரனுக்கு வாழ்வு கொடுத்தவர் பெருவுடையார். அடைப்பக்காரனை அரசனாக்கியதும் அவரே! ஆலவட்ட ஊழியனை ஏழடுக்கு மாளிகைப் பிரபுவாக மாற்றியதும் பிரகதீஸ்வரரே! எனவே **பெருவுடையார் வேண்டுதற் கடவுள் தான். தன்னால் இயன்ற காணிக்கைகளைச் செலுத்தி, கோரிக்கை தந்தால், நிச்சயம் கேட்டது கிடைக்கும் நினைத்தது** நடக்கும். விரைவிலேயே ஆகமத்தடைகள் நீங்கட்டும்; ஏராள, அருளற பூஜைகள் தொடரட்டும்... என்று தனிக்கோயில் கொண்டுள்ள அன்னை **பெரியநாயகியிடம்** (பிரஹன்ன நாயகி) வேண்டியபடி, கோயிலின் வெளியே வந்து கேரளாந்தகன் வாயிலை மீண்டும் உற்றுப்பார்த்தோம்.

வேறெங்குமே இல்லாத வகையிலே, ஐந்து முகம், பத்துக் கைகளைக் கொண்ட சிவபெருமானின் அரிதான சுதைச் சிற்பம் ஒன்று நமது கண்ணைக் கவரும். தமிழக அரசின் அறநிலையத்துறைக்காக, 1962-லே பழம்பெரும் டைரக்டர் **ஸ்ரீ. கே.சுப்ரமண்ய ஐயர்** எடுத்துக்கொடுத்த **'ஆலயங்களும் திருவிழாவும்'** என்ற வண்ணப்படத்திற்கு, அடியேன் **(வேம்பத்தூர்கிருஷ்ணன்)** விளக்க உரை எழுதியிருந்தேன். அப்படத்தின் தொடக்கத்திலே, தத்துவமேதை, முன்னாள் ஜனாதிபதி **Dr.S.** ராதாகிருஷ்ணன் அவர்கள் தோன்றிப் பேசியிருக்கிறார். அப்படத்திலே, பிரபல ஆலயங்களின் உத்ஸவ மூர்த்திகள், ஆலய வளர்ச்சி, திருவிழாக்கள், அனைத்துமே ஆராய்ச்சி பூர்வமாக எளிய நடையிலே விளக்கப்பட்டு உள்ளன.

ராஜராஜசோழனின் கல்வெட்டிலே... உள்ள **"பஞ்சதேகமூர்த்தி"** பற்றிய ஓரிருவரி களைப்பாருங்கள்...

"பஞ்சதேகமூர்த்திகளில் பாதாதி கேசாந்தம் இருபத்திருவிரலே நான்கு தோரை உசரத்து, பத்து ஸ்ரீஹஸ்தம் உடையவராக, கனமாக எழுந்தருளிவித்த

திருமேனி ஒருவர் ... இவரோடுங் கூட நாலுமுகத்திலும், பாதாதி கேசாந்தம் பதிநால் - விரல் உசரத்து, நந்நாலு ஸ்ரீ ஹஸ்தலங்கள் உடையவர்களாக எழுந்தருளு வித்த திருமேனிநாலு"...

இதுபோல் பல கல்வெட்டுக்கள்! பலப்பல திருமேனிகள்! (ஐம்பொன் சிலைகள்) ராஜராஜனும் அவனது தமக்கை **குந்தவை தேவியார்** மட்டுமே... **இரு பத்திரமு திருமேனிகளை** ஆலயத்திற்கு வழங்கியிருக்கிறார்கள்! பெரிய கோயில் நிர்வாக அதிகாரி **"மூவேந்த வேளான்"** என்பவர், **தேவாரமூவரோடு, சிறுத் தொண்டர், பரவையர், மெய்ப்பொருள் நாயனார்,** மற்றும் **ராஜராஜன்** அவனது மனைவி **உலகமகாதேவி... அறுபத்துமூவர்** இப்படி ஏராளமான திருமேனி (பஞ்சலோகச் சிலைகள்)களைக் கோயிலுக்கு வழங்கியதற்கான கல்வெட்டுக்கள் உள்ளன. சோழர் காலத்து அந்தப் பழமையான ராஜராஜ சோழத் தம்பதியின் சிலைகள், தற்போது அகமதாபாத், **"கௌதம் சாராபாய்" மியூசியத்திலே உள்ளது.** மராட்டிய கடைசி அரசர் "சிவாஜி"க்கு பிறகு... ஏற்பட்ட பாகப்பிரிவினை கலாட்டா விலே, (கி.பி.1855) கோயில் சொத்துக்களும், அபூர்வ விக்ரஹங்களும் இப்படி இடம்மாறி எங்கெங்கோ கடத்தப்பட்ட கொடுமைகள் நடந்துள்ளன.


ஒரு கோயில் நிர்வாகி (ஸ்ரீகார்யம்)யே, இத்தனை எண்ணிக்கையுள்ள செப்புச் சிலைகளைக் கொடுத்திருக்கும் போது, தளபதிகள்... சிற்றரசர்கள், பிற்காலச் சோழர்கள்... பிரபுக்கள் எத்தனை செப்புகளைச் சிலைகளை கொடுத் தார்களோ? **"கொள்கைத் தேவர், க்ஷேத்திர பாலதேவர்" என இரண்டு தங்கச் சிலைகளும் பெரிய கோயிலிலே இருந்திருக்கின்றன.**

ராஜராஜன் காலத்திலே பெரியகோயில் 1823 கிலோ தங்கப் பாத்திரங்கள், 222 கிலோ வெள்ளிப்பாத்திரங்கள். ராஜராஜன் மட்டுமே **"இராஜேஸ்வரத்து பரமஸ்வாமி"** எனப்படும் பெருவுடையார்க்குக் கொடுத்த தங்க நகைகள் 22 கிலோ எடை. அவனது மனைவியரும் எத்தனையோ நகைகள், பஞ்சலோகச் சிலைகளைக் கொடுத்திருப்பர்.

1980-1986 காலகட்டங்களில் மட்டும் 682 செப்புச்சிலைகள் (தமிழகக் கோயில்களிலிருந்து) களவாடப்பட்டதாகக் கணக்கு வந்தது பார்லிமெண்டுக்கு! கணக்கில் வராதது எவ்வளவோ! மற்ற ஆண்டுகளில் எத்தனையோ? 1981-கால கட்டத்திலே, லண்டனுக்கு கடத்தப்பட்டு 10 கோடி ரூபாய்க்கு விற்கப்பட்ட **பத்தூர் நடராஜர் சிலை,** நமது மாநில அரசின்தீவிர முயற்சியினாலே, சமீபத்தில் தமிழகம் திரும்பியுள்ளது. 9.8.91 தமிழக முதல்வர் **புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா** பெற்றுக் கொண்டார்.

சமீபத்தில் மதுரை ஆலயத்தை ஆய்வுசெய்த தமிழக அறநிலையத்துறை அமைச்சர், திரு **நடேசன்பால்ராஜ்** அவர்கள், எழுபத்தி ஒன்பது, பழங்காலச் சிலைகள் அங்கே குறைந்து இருப்பதை அறிந்து, விசாரணைக்கு உத்தர விட்டுள்ளார்.

"கோயில்களில் உள்ள புராதன விக்ரகங்களும், சிலைகளும் திருட்டுப் போவதைத் தடுக்க அரசு, நேரடியாகக் கவனம் செலுத்தி நடவடிக்கைகளை எடுப்பது அவசியம்" **26.12.93 தினமணிக்கதிர்.**



"சிலைகள், நகைகள் கடத்தப்பட்டன, திருடப்பட்டன. "டுப்ளிகெட்"டுகளை வைத்துவிட்டு, ஒரிஜினல் மறைக்கப்பட்டன", என்று கணக்கையாவது எழுதி முடித்துவிடலாம்! ஆனால் கோயில் நிலங்களும், குடியிருப்பு மனைகளும்... மறைந்த விதம்? குத்தகைப் பணங்கள், குறைந்தவிதம்?

1989 தமிழ்நாடு அரசுநியமித்த ஆலய ஆலோசனைக்குழு கணக்குப்படி, தமிழகக் கோயில்கள் 33,112 (அறநிலையத்துறை நிர்வாகத்திலே உள்ளவை) ஆலயங்களுக்குச் சொந்தமானநிலம் நன்செய், புன்செய் உட்பட 4,34,095 ஏக்கர்கள்.

"குத்தகை பாக்கிமட்டும் 6590 கோடி" ரூபாய்கள்! (தினமணி 27.9.91) "நிலமே இல்லாத ஒருவர், திருவண்ணாமலை கோயில் நிலத்தை விற்றுப்பணம் பெற்றார்." 29.11.91 - பேப்பர் விளம்பரம்.

"நெல்லையப்பர் கோயிலுக்கு 3500 ஏக்கர் நிலம் இருந்தும், இன்றைய நிலை உண்டியலை நம்பித்தான் - 7,4.75 தினமணி. "திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாளின் வைர கிரீடம்! தங்கத்தகடுக்குப் பதில் தகரம்!! 40-லட்ச ரூபாய் நகை கொள்ளை" - 13.6.92 - மாலைமுரசு.

"பல கோயில்களில், சிவபெருமானும், நாராயணனும் நலிவுற்றிருக்காங்க, முதல் வேலையா, ஒரு வேளை சாப்பாடாவது (நைவேத்யம்) போடணும்... நிலைமை ரொம்ப சீரியஸ்... அறநிலையத்துறை அமைச்சர் திரு நடேசன் பால்ராஜ் (1993 ஆகஸ்ட்)

தஞ்சைப்பெரியகோயில் "சீரியஸ்" நிலையைப்பாருங்கள்!

1,0,000 கல நெல் வரும்வகையிலே, நிலங்களை ராஜராஜசோழன் பெரிய கோயிலுக்கு அளித்திருந்தான்.

"தஞ்சைப்பெரிய கோயிலுக்கு 18,000 ஆயிரம் வேலி நிலம் இருந்ததாக கல்வெட்டு. உள்ளது!, ஆனால் இப்போது ஒரு வேலி நிலமாவது உண்டா?"-

-இந்தியா டுடே; ஆகஸ்ட் 1993.

இது போன்ற பல "உண்டா ?" க்களுக்கு விளக்கம் தேடித் தஞ்சையிலே பத்து நாள், இருமுறை முகாமிட்டேன். பலன் பூஜ்யம் தான்!! அரண்மனை தேவஸ் தான நிர்வாகத்திலே உள்ள எண்பத்தி எட்டுக் கோயில்கள் பற்றிய விபர்ங் களை... அறிய, உரிய இடங்களிலே... விபரம் தெரிந்தவர்களைத் தேடி அலைந்து சோர்ந்து திரும்பினேன்! சிறு ஆறுதலைத் தந்தது "துக்ளக்"கின் கீழே காணும் குறிப்புதான்...

"அரண்மனை தேவஸ்தான நிர்வாகத்திலே தஞ்சைப் பெரிய கோமிலையும் சேர்த்து 88 கோயில்கள் உள்ளன. இவைகளுக்குச் சொந்தமான நிலம் 924 ஏக்கர்கள். இதில் பெரிய கோமில் நிலம் மட்டும் 160 ஏக்கர். புன்னை நல்லூர் (தஞ்சை முத்து) மாரியம்மன் கோமிலில் மட்டும் ஆண்டுவருமானம் ஆறு லட்ச ரூபாய். இதர 87-ன் மொத்த வருமானமும் ஒன்பது லட்சரூபாய்தான். ஊழியர் தொகை 170. இவர்களுக்கு ஒருவருடசம்பள நெல் கொடுக்கப்படாமல் உள்ளது. ஏனெனில் மேற்படி கோமில்களுக்கு" 30.6.86 முடிய வரவேண்டிய குத்தகை பாக்கி நெல் 20,000 ஆயிரம் மூட்டைகள். இருபதுக்கும் மேலான குத்தகை வழக்குகள் ? பரம்பரை அறங்காவலர், சரபோஜி வழிவந்த இளவரசர் ஸ்ரீ பாபாஜி ராஜா பான்ஸ்லே அவர்கள். நிருபரிடம் கூறுகிறார். "சில தேவஸ்தானங்களிலே கோமில் ஊழியர்களுக்கு நெல் சம்பளம் மட்டுமல்ல. சம்பளப் பணமே கொடுக்க முடியாத நிலை காணப்படுகிறது."

நன்றி - "துக்ளக்" 1.7.1987.

ஒன்பதுவருட இடைவெளியிலே, தேவஸ்தான நிர்வாக 88-ஆலயங்களிலும் சிற்சில மாறுதல்கள் இருக்கலாம். ஆனாலும் ஓர் "அவுட்லைன்" கிடைத்தது. இனிச்சுருக்கமாக பெரிய கோயிலின் ஆராதனை. வழிபாடு விழாக்களை அறிவோம். கி.பி. 1010-ல் ராஜராஜன் செய்வித்த முதல் கும்பாபிஷேகத்தை அடுத்து, சோழர்களின் தலைநகர், **கங்கைகொண்டசோழபுரம்** ஆகிவிட்டதால், அடுத்த கும்பாபிஷேகக் குறிப்புக்களே இல்லை. இரண்டாம் சரபோஜி காலத்திலே, ஒரு கும்பாபிஷேகத் தகவல். அதையடுத்து இறையருட் "கலெக்டர்" **ஸ்ரீ கங்கப்பா** I.A.S. அவர்களது பெருமுயற்சியால், 3.4.1980-ல் கும்பாபிஷேகம் நடந்துள்ளது, தஞ்சைப் பெரிய கோயிலுக்கு.

கோயிலின் உள்ளே இருந்த, "சிவகெங்கை" இணைந்த "தேரைதீர்த்தம்" கிணறாக மாற்றப்பட்டு, பின்னாட்களில் அதையும் மூடிவிட்டனர். மகுடாகம முறை யிலான நாலு காலபூஜை காணும், பெருவுடையாருக்கு மார்கழியில் மட்டுமே ஐந்து காலபூஜை.

சித்திரைமாதம் **சைத்ரோத்ஸவம்**, வைகாசி-**பால்குடம்** (முருகனுக்கு) ஆனி-**திருமஞ்சனம்**, ஆடி-**பூரம்**, ஆவணி-**சதுர்த்தி** (விநாயகர்), புரட்டாசி- **நவராத்திரி, 9** நாளும், 10 - அடி உயர ஸ்ரீ பெரியநாயகி மூலவருக்கு தினம் ஒரு அலங்காரம். ஐப்பசி-**சதய (ராஜராஜன்) விழா**. கார்த்திகை-**சோம வாரம்தோறும் 1008 சங்காபி ஷேகம்**. மார்கழி-**ஆருத்ரா** தை-**பொங்கல்** மாசி-**சிவராத்திரி**, பங்குனி-**உத்திரத் திருவிழா**.

சித்திரை, மாசி மாதப் பெருவிழாக்களிலே, மாபெரும் இருதேர்களிலே, அதிகாரப்பூர்வ பிரகதீஸ்வரர் (தியாகேசர்) அம்பாளுடன் வீதிவலம் வருவார். (தேர்கள் காணாமல் போய் பலகாலம் ஆகிறது). இப்போது தியாகேசரைப்போல்,

சந்திரசேகர் விக்ரஹத்துக்கு ஆடை அணிமணிகளைப் போட்டு (உத்ஸவருக்கே "டுப்") கட்டுமானத் தேரிலே "டுப்" உத்ஸவரைத் திருவீதி வலமாகக் கொண்டு செல்லுகிறார்கள். "டுப்" புக்குப் போடப்படும் நகைகளும், "டுப்"தானாம். "ஏனப்படி?" என்றேன். ஒரிஜினல் பழங்கால நகைகள் எல்லாம்... இற்றுப்போய் உதிர்ந்துவிடும் நிலையிலே உள்ளனவாம்! (எந்த அளவு உண்மையோ?)

(கி.பி. 1006)-ல் மேலைச் சாளுக்கியரை வென்ற ராஜராஜசோழன், தங்கத்தாமரைகளால் ஆராதித்த தளிக்குளத்து ஸ்ரீ தட்சிணமேருவிடங்கர் தான் பெருவுடையாராக பெரிய கோயிலிலே ஆவாஹனமாகியுள்ளார். தனிக்குளத்து ஈசனுக்கு, திருநாவுக்கரசரின் தேவாரம் உண்டு. மற்றும்... தஞ்சைத்தலத்தின் புராண வரலாறு, ஸ்ரீமத் பிரதீஸ்வர மஹாத்மியம், சமீவன க்ஷேத்ர புராணம், திருவிசைப்பா, கருவூர்ப் புராணம், தஞ்சைப் பெருவுடையார் உலா, அருணகிரி நாதரின் திருப்புகழ் முதலான பலவும், பெரிய தஞ்சைக் கோயிலுக்கான ஆதார இலக்கியங்களாகும்.

நாற்பத்தி எட்டுப் "பிடாரர்"கள் (தேவார ஓதுவார்) 120 - கருவூலக்காரர்கள், 400 - தேவரடியார்கள் (ஆடல் மகளிர்) உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்டிருந்த தஞ்சைவூர் பெரிய கோயில், "ஆர்க்கலாஜிகல் டிபாட்மென்ட்"டின் சர்வாதி காரத்தின் கீழ் இப்போது.. ஆறேழு ஊழியர், இருமூன்று சிவாசார்யர்களைக் கொண்டு... "ஏனோ தானோ" என்று காலத்தைத் தள்ளி வருகிறது!

"திருமுறைகளை மீட்ட பெருமன்னன்" ராஜராஜ சோழனின் காலத்திலே, ஆதினத்துச் சைவர்களுக்கும், அந்தணப் பெருமக்களுக்கும் "குகையிடிக்கலகம்" என்ற பெயரிலே ஒரு பெரும் மோதல் நிகழ்ந்துள்ளது.

அந்த நிலையில்தான் தேவார ஏடுகள், தில்லைப் பதியிலே "சிறை" வைக்கப்பட்டிருக்கலாம். நம்பியாண்டார்நம்பியின் துணையோடும், தனது மதி யூகத்தாலும் திருமுறைகளை ராஜராஜ சோழன் மீட்ட மகத்துவம் நிகழ்ந்திருக்கிறது.

"அசோக சாம்ராஜ்யத்துக்கு இணையானது தஞ்சைப் பேரரசு" என நேருஜி, தமது "உலகவரலாற்று நூலிலே" பெருமிதத்தோடு கூறுகிறார்.

உலகத்து ஆலயங்களிலே சரிபாதி இந்தியாவில், இந்தியக் கோயில்களிலே பாதியளவு தென்னாட்டிலே. தென்னாட்டுக் கோயில்களிலே ஒருபாதி தமிழ்நாட்டில்! தமிழகக் கோயில்களின் மொத்த எண்ணிக்கையிலே பாதிக்குமேல் இருப்பது தஞ்சைத் தரணியிலே!

அந்தப் புனிதமிகு தஞ்சைத் தரணியின் கோயில்களிலே, மிகமிகத் தொன்மையானது திருவாரூர் தியாகேசர் கோயில் தான் என்றாலும், சோழர்கால ஐந்து கோயில்கள் மிகமிக அபூர்வமானவை.

புதுக்கோட்டை நார்த்தாமலை விஜயாலயச்சோழீச்சரம். தஞ்சைப் பெரிய கோயிலான ஸ்ரீ ராஜராஜேஸ்வரம். கங்கை கொண்ட சோழீச்சரம், தாராசுரம் ஐராவதேஸ்வரர் கோயில். திரிபுவனம் ஸ்ரீ கம்ப ஹர ஈஸ்வரன் கோயில்களாகும்.

மேற்படி ஐந்து ஆலயங்களிலே "முதன்மையானது 1" தஞ்சைப் பெரிய கோயில் ஆகும்.

சர்வதேச இயற்கைமற்றும் கலாசாரப்பாரம்பர்ய பாதுகாப்புக் குழுவினரால், உலகமரபுச் சின்னமாகப் பெரியகோயில் தேர்வு செய்யப்பட்டு, பராமரிப்பிற்காகச் சிறப்பு மான்யங்களையும் உதவிக் கொண்டிருக்கிறது. "ஐ.நா." சபை.

பழம்பெரும் கலைச் செல்வங்களைப் பாதுகாக்கும் மத்திய அரசின் தொல்பொருள் துறை. **1950ல்,** பெரிய கோயிலைத் "தத்து" எடுத்துக் கொண்டு களையெடுத்துச் சீர்படுத்திக் **"கண்கொத்திப் பாம்பாக"**க் காத்துவருகிறது!

மந்த்ராலய மஹான் **ஸ்ரீ ராக வேந்திரர்,** மாபெரும் சித்தர் **ஸ்ரீ நாகூர் ஆண்டவர்** முதலான பல ஞானியின் தியான பூமி தஞ்சைத்தரணியாகும். நமது வாழ்வுக்கான பலாபலன்களை, அவரவர் வினைகளுக்கேற்ப வழங்கி, வழிநடத்தும் நவகிரஹங்களுக்கு, தஞ்சைத் தரணியிலே உள்ள தனித் திருத்தல விபரமாவது... **சூரியன்-சூரியனார் கோயில், சந்திரன்-திங்களூர், செவ்வாய்- வைத்தீஸ்வரன் கோயில் புதன்-திருவெண்காடு, வியாழன் - (குரு)-ஆலங்குடி. சுக்கிரன் (வெள்ளி)-கஞ்சனூர்: சனி-திருநள்ளாறு. ராகு-திருநாகேஸ்வரம். கேது- பெரும்பள்ளம்.** (பூம்புகார் அருகில்) கலைவாணி சரஸ்வதிக்குக் கூத்தனூரிலும், படைக்கும் கடவுளான பிரம்ம தேவனுக்கு, திருக்கண்டியூரிலும் தனிக்கோயில்கள் உள்ளன.


ஆலயத்தால் மட்டுமல்லாமல், மிகப்பெரிய நூலகத்தாலும் உலகப்புகழ்பெற்ற தஞ்சைத்தரணி பற்றிய சில தகவல் துளிகள்...

சோழர்காலத்திலே உருவாகி, மராட்டியர் காலத்திலே மிகப் பெரிதாக விரிவு பெற்ற **தஞ்சை சரஸ்வதி மஹால் நூலகத்திலே... 30,433-வட, தென், தமிழ்மொழிச் சுவடிகளும், 6,426-பழம்பெரும்-பலமொழி-அச்சு நூல்களும் உள்ளன.**

சோழர், நாயக்கர் காலங்களிலே... சமஸ்கிருதம் கன்னடம், தெலுங்கு, மராட்டி, ஹிந்தி முதலான மொழிகளும், அடுத்தடுத்து, இஸ்லாம், கிறிஸ்தவ மத கலாச்சாரங்களும் தமிழோடு இணைந்து, ஏக இந்தியர்களாக வாழ்வதை, இன்றும் தஞ்சை, நாகப்பட்டினகாயிதேமில்லத் மாவட்டங்களில் (மாவட்டப்பிரிவு 18.10.1991) காணலாம்.

இந்திய விடுதலைப்போரிலே காந்தியடிகளின் உப்பு சத்தியாக்கிரகப் போராட்டத்தில் (1930) **ராஜாஜியும், சர்தார் வேதரத்தினம்பிள்ளை** யும் செய்த தியாகப் புகழும் தஞ்சைத் தரணிக்கே. மதுரையில், 1981-ஐந்தாவது உலகத் தமிழ்மகாநாட்டில் அமரர், முதல்வர் M.G.R. அறிவித்து, உடனே உருவான **தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்...** முத்தமிழ், சிற்பம், கல்வெட்டு, சுவடி, மருத்துவம் முதலான பலதுறைகளின் அரிய சேவைகளுடன் தஞ்சையின் மணி மகுடமாகவும் திகழுகிறது. 1985-லே தஞ்சையில் நடைபெற்ற ராஜராஜசோழன் (சதயவிழா) சிலை திறப்பிலே பாரதப் பிரதமர் திருமதி **இந்திரா காந்தி**யும், தமிழக முதலமைச்சர் திரு. **M.G.R.** அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தமிழக உணவுத் தேவையிலே நாலில் ஒருபங்கைப் பூர்த்தி செய்யும் தஞ்சைத் தரணியின் ஜீவநதி, காவிரியாகும். தலைக் காவிரியிலிருந்து (குடகு) சுமார் 800கிலோ மீட்டர் ஓடி... இங்குள்ள வங்காள விரிகுடாவிலே சங்கமமாகிறது.



திருமால் முருகன் சோலைமலை

சோலைமலை **திருமாலிருஞ்சோலை,** பழமுதிர்ச்சோலை, குலமலை, கோல மலை,... என்றெல்லாம் கொண்டாடப்படும், "**அழகர்மலை**"க்கு 'விருஷபாத்திரி' எனும் பெயரும் உண்டு.

மதுரையைச் சுற்றிலும் எட்டு மலைகள்; அதில் ஒன்று தான், சோலைமலை. இரண்டாயிர ஆண்டுகளுக்கு முன், இந்த மலைகளிலே எட்டாயிரம் சமண முனி வர்கள் வாழ்ந்திருந்தனர்.

ஆயிர அடி உயரமும், பத்து மைல் நீளமும் உள்ள சோலைமலையின் அடிவாரத்திலே, **கள்ளழகர்** எனும் சிறப்புப் பெயர் கொண்ட திருமாலும், மலைமேல் **முருகப் பெருமானும்** கோயில் கொண்டுள்ளனர்.

வராக..., பிரம்ம..., ஆக்கினேய..., வாமன... ஆகிய புராணங்களிலே இத் திருத்தலக் குறிப்புகள் உள்ளதாம். புராணகாலத்துக்கும் முந்திய கோயிலாதலால், தலபுராணம் ஏதும் கிடையாது என்பது வைணவக் கோட்பாடு.

பிற்காலத்திலே தொகுக்கப் பெற்ற "**விருஷபாத்திரி மஹாத்மியம்**" எனும் தலபுராணப்படி, திருமாலிருஞ் சோலைப் பெருமாளின் ஆலய வரலாறு.....

வாமன அவதாரத்திலே ஓங்கி உலகளந்த ஸ்ரீ ஹரியின் திருவடியானது, பிரம்மலோகம் வரை நீண்டது. தந்தையின் திருவடிக்கு மகன் (பிரம்மா) அபிஷேகம் செய்கிறார்; அந்தத் தீர்த்தம், பூமியிலே ரிஷபாத்திரியில் விழுந்து, நூபுரகங்கையாகப் பெருகிப் பாய்கிறது.

ரிஷப (காளை மாட்டின்) வடிவிலே எமதர்மராஜன் தவம்செய்து, பெருமாளின் பேரருளைப் பெற்றதால், இம்மலை "விருஷபாத்திரி" ஆனதாம்!

தேவதச்சனாகிய மயனைக் கொண்டு, ஆதிக் கோயிலை அமைத்து, "**சோமசுந்தர விமான**"த்தின் கீழே, '**பரமஸ்வாமி**' எனும் திருப்பெயரோடு, மூலவரை (பெருமாளை) ஸ்தாபித்து வழிபடுகிறான் எமதர்மன்.

அகத்திய முனிவரை முதல் அமைச்சராகக் கொண்டு, சங்கம் வைத்துத் தமிழ்வளர்த்த, ஆதி மதுரையை ஆண்டுவந்த **மலையத்துவஜபாண்டியன்,** இறை வழிபாட்டிற்காக, புஷ்பக விமானத்திலே, நாள் தோறும் கங்கைக்கரை சென்று வரு பவன்; ஒரு நாள் அசரீரியாக **ஸ்ரீ சுந்தரராஜப் பெருமாள்** (கள்ளழகர்) அவனைத் தடுத்து நிறுத்தி, தன்னை வணங்கினால்போதும், சர்வநலன்களும் உண்டாகும் என்று, மலையத்துவஜ பாண்டியனுக்கு அருள் பாலித்திருக்கிறார்.

அன்றுமுதல், பாண்டிய மன்னர் பரம்பரை, பெருமாளைக் குலதெய்வமாகக் கொண்டது; அவர்களது இலச்சினையான மீன் சின்னம், திருமாலின் மச்சாவ தாரத்தை நினைவு படுத்துவதாகும் என்பது, வைணவப் பெருமக்களின் கோட்பாடு!

மயன் அமைத்த ஆதிக்கோயில், மலையத்வஜனால் விரிவு பெற்று, மாபெரும் க்ஷேத்திரமானது. மலையத்வஜனின் மகன் சந்திரகேதுவை அடுத்து, அவனது மகன் குப்தபாண்டியன், மதுராபுரிக்கு மன்னனாகிறான். அவனுக்கு வாரிசு இல்லாமல் போகவே, கள்ளழகப்பெருமாளை வேண்டி... 'தடாதகை' எனும் மீனாட்சியை மகளாக அடைந்தான்.

(மதுரை மீனாட்சியம்மனின் வரலாறு, வைணவத்து "ரிஷபாத்திரி மஹாத்மியத்தி"லே மேற்கண்டவாறு கூறப்படுகிறது; மலையத்வஜனின் தந்தை பெயரும் மாறு படுகிறது; மலையத்வஜ பாண்டியனின் மனைவியான சோழமகள் காஞ்சன மாலையின் மாதவத்தால்தான், பார்வதிதேவியே மீனாட்சியாக மதுரையிலே அவதரித்தாள் என்று சைவ சமயத் திருவிளையாடற் புராணம் கூறும்.)

மீனாட்சியின் திக்விஜயம்; சோமசுந்தரரை மணப்பது, குண்டோதரன், பசிதாகம், வைகைநதி முதலான அனைத்தும் திருவிளையாடற்புராணப்படியேதான்... விரு ஷபாத்திரி புராணத்திலும் எழுதப்பட்டுள்ளது.

மார்க்கண்டேயர், துர்வாசர், அம்பரீஷர் முதலான மகரிஷிகள் ரிஷ பாத்திரியிலே தவம்செய்து, மகத்துவ சக்திகளைப் பெற்றனர். திருமாலிருஞ் சோலைப் பெருமாளின் புராண வரலாறு இப்படியாகப் பூர்த்தி பெறுகிறது.

இதிகாச, வரலாற்று ரீதியிலே திருமாலிருஞ்சோலைக் கோயிலின் விபரங்களாவது...

கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலே இம்மலையில் ஜைன (சமண) பௌத்த அருளாளர்கள் தங்கியிருந்ததற்கான குகைகளும், கல்வெட்டுக்களும் இன்றும் இம்மலைப்பகுதிகளிலே காணக்கிடைக்கின்றன.

இரண்டாயிர வருடங்களுக்கு முந்தைய, மூன்றாம் தமிழ்ச்சங்க இலக்கியங்களாகிய பரிபாடலிலும், சங்க மருவிய காலத்துச் சிலப்பதிகாரத்திலும் இத்தலம் போற்றப்படுகிறது. கண்ணபிரான், பலராமன் ஆகியோருக்கும் சன்னிதிகள் இருந்தன. நூபுர கங்கை,' சிலம்பாற்றுடன் சிரவணம், இஷ்டசித்தி, பவகாரிணி ஆகிய இத்தலத்துத் தீர்த்தங்களிலே, சிவபெருமானின் பஞ்சாட்சரத்தையும், மகாவிஷ்ணுவின் அஷ்டாட்சரத்தையும் ஜபித்தபடி நீராடினால், கேட்டது கிடைக்கும், நினைத்தது நடக்கும் என்றெல்லாம் சிலப்பதிகாரம் கூறுகிறது. (நூபுர கங்கையைத் தவிர ஏனைய தீர்த்தங்கள் தற்போது இல்லை!)



ஆழ்வாராதியர், நாயன்மார்களின் கி.பி.7,8,9-ஆம் நூற்றாண்டுகளிலே இச் சோலைமலையான, பழமுதிர்சோலை, பெரும்புகழ் பெற்று விளங்கியிருக்கிறது.

12-முதல் 14-ம் நூற்றாண்டு வரை, பாண்டியரின் திருப்பணிகளால் ஆலயம் பேணப்பட்டுள்ளது; **ஜடாவர்ம சுந்தரபாண்டியன்,** (1251-1270) மூலவர், **"பரம சுவாமி"**யின் விமானத்திற்கு பொன் வேய்ந்துள்ளான். 14-ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலேயே (கி.பி. 1311) பிறமதத்தவர்களின் படையெடுப்பால் தமிழகப் பிரபல ஆலயங்களில் சிதைவு தொடங்கியது. 1324-முதல், 1372-வரை சுமார் 50 ஆண்டு கள் மதுரை நாடு, பிற மதத்தவரால் ஆளப்பட்டது! 1336-ல் ஏற்பட்ட விஜயநகர சாம்ராஜ்யத்தின் உதயத்தால், தென்பாரதத்தின் பிரபல ஆலய அழிவுகள் தடுக் கப்பட்டன. மேற்படி சாம்ராஜ்யத்தின் புகழ்மிகு மன்னரான **ஸ்ரீ கிருஷ்ண தேவராயர்** (1509-1529) திருப்பணிகளால், தமிழக ஆலயங்கள் பலவும் நலம் பெற்றன. அழகர் கோயிலுக்கு வருவதைதந்து கிருஷ்ணதேவராயர் தங்கியிருந்த குறிப்புகளும் உண்டு. தொடர்ந்து... **அச்சுததேவராயர், சதாசிவராயர்** முதலான மன்னர்கள் அழகர் கோயி லுக்கு ஏராள காணிக்கைகளை வழங்கியுள்ளனர்; இணையிலாத் திருப்பனிகளைப் புரிந்துள்ளனர்.

1565-ல் தலைக்கோட்டைப் போரிலே, விஜயநகரப் பேரரசு அஸ்தமித்தது! பேரரசுக்கு உட்பட்டு அவர்களது பிரதிநிதிகளாக மதுரை நாட்டை நிர்வகித்து வந்த நாயக்கர் பரம்பரை, தனியுரிமை பெற்றனர்!

13-நாயக்க மன்னர்கள் 207-ஆண்டுகாலம் மதுரை நாட்டை ஆண்டனர். அவர்களுள், தனிச்சிறப்புப் பெற்றவர் **ஸ்ரீ திருமலை நாயக்கர்.** (1623-1659) மதுரை மீனாட்சியம்மன் கோயில் உட்பட, பற்பல ஆலயங்களைப் பொலிவு செய்த திரு மலை நாயக்கர், அழகர் கோயிலிலே... ஒர் அழகான அரண்மனையைக் கட்டி, கோட்டைச் சுவர்களை அமைத்து, பற்பல மண்டபங்களையும் உருவாக்கினார்.

1736-ராணிமீனாட்சியோடு, நாயக்கர் சந்ததி முற்றுப் பெற்றது; ஆற்காடு நவாப் **சந்தாசாயிபு,** மதுரை நாட்டின் அதிபராகி, நமது பிரபல ஆலயச் சொத்துக் களையெல்லாம் **"அசை"** போட்டிருக்கிறார்.

1757-ல் கர்நாடகத்து **ஹைதர்அலி,** மதுரையைக் கைப்பற்றி ஆலயங்களைச் சூறையாடியுள்ளார்! அழகர்கோயிலின் பேரழகுக் கல்யாண மண்டபம் இடிபட்டது! கோட்டைச் சுவர்கள் தகர்க்கப்பட்டன! அந்தக் கொடுமையான இடிபாடுகளை, இன்றும் நாம் அழகர் கோயிலிலே காணலாம்.

1758-ல் ஹைதர்அலியை, **யூசுப்கான்** தோற்கடித்து, திண்டுக்கல்லுக்கு விரட்டினார்! அவரால் கொள்ளையிடப்பட்ட கோயில் நகைகளை மீண்டும் உரிய ஆலயத்திலே ஒப்படைத்தார் வாழ்க அந்த நல்ல இஸ்லாமியரின் புகழ்.

1780-ல் யூசுப்கானை சில மதவெறியர்கள் அடித்துக் கொன்றனர். ஹைதர் அலி, மீண்டும் படையெடுத்தார். ஆனால் வெள்ளையரிடம் தோற்றார்! பேரிழப்புக்கு

உள்ளான அழகர்கோயில் ஆலயம், இப்படியாகப்பல, வெறியர்களின் "கை"மாறி... 1790-ல் கிழக் கிந்திய- வெள்ளையர்-கம்பெனியின் வசமானது.

1801-முதல் "கம்பெனி" நிர்வாகம் போய், ஆலயத்திற்கு பிரிட்டிஷ் அரசின் நேரடி ஆட்சி ஏற்பட்டது! மதுரையின் முதல் கலெக்டரான **ஸ்ரீ "ஹர்டீஸ்"** எனும் வெள்ளைக்காரப் பிரமுகர், அழகர் கோயிலுக்கு **"தர்மகர்த்தா"** ஆனார். அந்தப் பெருமகனாரின் ஆலய நிர்வாகம், வெகு சிறப்பாக இருந்திருக்கிறது. தொடர்ந்து ஆறு பிரிட்டிஷ் பிரமுகர்கள் ஆலய நிர்வாகத் தலைமையை ஏற்றிருந்தனர்.

1817-ல் "போர்டு ஆஃப் ரெவின்யூ" (நிலவரி வசூல் வாரியம்) வசம் அழகர் கோயிலின் ஆலய நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது.

1863-ல் வட்டாரப் பிரமுகர்களைக் கொண்ட ஆலய நிர்வாகக் கமிட்டி ஏற்பட்டது. ஏராளமான நிலங்களையும் காலிமனைகளையும் கொண்டிருந்த அழகர் கோயில் நிர்வாகத்திலே, பலர் பங்கு பெற்றதால் **"ஊழல்"** முளைத்தது! கோயில் சொத்துக்களை, ஆலயப் பணியாளர் சிலர், **"பட்டா"** போட்டுப் பகிர்ந்து கொண்டனர்! பிரதானமானமூல **"தஸ்தாவேஜு"**கள் "தாறுமாறாக" மாற்றப்பட்டன! "வேலியே பயிரை மேயும்" விபரீதங்களை, சட்டப்படி தடுக்க முடியாத வெள்ளையர் அரசு, வெளியிலிருந்தபடியே பேராசைபிடித்த நம்மவர்களை, வேடிக்கை பார்த்தது!

இப்படியாகப் பல ஆயிர ஏக்கர் நிலங்களையும், ஏராள மனைகளையும் இழந்து போன அழகர் கோவிலின் 1990-ஆண்டின் கட்டிட-நில-வருமானங்கள் வெறும் ஆயிரம் ரூபாய் தானாம்! (உண்டியல் முதலான அனைத்து வருவாயுமாக! சுமார் 50 ஆயிர ரூபாய்) ஏறத்தாழ நூற்றிருபது ஆலய ஊழியர், பத்துப் பதினைந்து பட்டாச்சார்யர்கள்; மேற்படியார்களுக்கு வசதியான குடியிருப்புகள்! நூறாண்டுக்கு முன் ஏற்பட்ட வள்ளல் **ஸ்ரீ பச்சையப்ப முதலியார்** போன்ற சான்றோரின் அறக் கட்டளைகள்தான், அழகர்கோயில் பெருமாளுக்கு "ரேஷன்" வராமல் இன்று வரை நிறைவாகப் பாதுகாக்கின்றன!

1929-ல் ஏற்பட்ட ஹிந்துமத அறநிலையப் பாதுகாப்புத்துறை, கோயில் நிர்வாகத்தை ஏற்று, நாளது தேதி வரை நடத்தி வருகிறது.

திருமாலிருஞ்சோலைக் கள்ளழகரின் திருவிழாக்களை வரிசைப்படுத் தினால்.....

சித்திரை: கோடை சைத்ர உத்ஸவம் (9நாள்)	**வைகாசி:** வசந்தோத்ஸவம் (10நாட்கள்)
ஆனி: முப்பழத் திருவிழா.	**ஆடி:** பிரம்மோத்ஸவம்(10நாள்), ஆடிப்பூரம்
ஆவணி: பவித்ரோத்ஸவம் (5-நாள்),உறியடி விழா	**புரட்டாசி:** விநாயக சதுர்த்தி, கருட சேவை
ஐப்பசி: தொட்டி (அருவி) உற்சவம் (3-நாள்),	**கார்த்திகை:** கைசிகம்
மார்கழி: பகல் பத்து-ராப்பத்து (10-10-நாள் விழா)	**தை:** கனுஉத்ஸவம்; தைலப் பிரதிஷ்டை (3நாள்)
மாசி: தெப்பத் திருவிழா, கஜேந்திர மோட்சம்.	**பங்குனி:**திருக்கல்யாண மகோத்ஸவம் (5-நாள்)

அபரஞ்சி (சுத்தத்தங்க) உத்ஸவமூர்த்தியான "கள்ளழகர்", "விருஷபாத்ரீசர்" "அழகர்", "சுந்தரராஜர்" என்றெல்லாம் அழைக்கப்படுகிறார். ஸ்ரீதேவி, பூதேவி, கல்யாண சுந்தரவல்லித்தயார், ஆண்டாள் ஆகிய நான்கு தேவியருடன் திருமணம் காணும் சுந்தரராஜப்பெருமாளின் அரிதான சம்ரதாயமுள்ள இத்திருத்தலத்தைப் போற்றிப் புகழும் புராண, இதிகாச, இலக்கியங்களின் வரிசையிலே.....

சனத்குமாரசம்ஹிதை, பிரம்மசம்ஹிதை, ஜகந்நாத க்ஷேத்ர மகாத்மியம், திவ்யசூரிசரிதம், ஹம்சசந்தேசம், கோயிலொழுகு, சுந்தரபஹூஸ்தவம்... இராமா நுஜநூற்றந்தாதி, பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின், அழகர் அந்தாதி, வேம்பத்தூர் கவிகலாருத்ரரின், அழகர் பிள்ளைத் தமிழ், வேம்பத்தூர் கவிக் குஞ்சர பாரதியின், அழகர்கலம்பகம், மற்றும் சோலைமலைக் குறவஞ்சி, பல பட்டடைச்சொக்கநாதப் புலவரின், அழகர்கிள்ளை விடுதூது முதலான நூல்கள், குறிப்பிடத் தக்கவை.

பன்னிரு ஆழ்வார்களிலே... பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார், நம்மாழ்வார், ஆகிய அறுவர், இந்தச் சோலைமலைப் பெருமாளை -123, பாசுரங்களால், மங்களா சாசனம், செய்துள்ளனர்.

(பெரியாழ்வாரின் திருமகளான ஆண்டாளின் ஆன்ம ஐக்யம், ஸ்ரீ ரங்கத்தில் பூர்த்தியானதும், தந்தையும் மகளும் வாழ்வின் பிற்பகுதியைத் திருமாலிருஞ் சோலையிலே நிறைவு செய்ததாக ஓர் வரலாற்றுக் குறிப்பு உள்ளது; அது சரியா தவறா ?)

மேற்படி கோயில் சம்பந்தப்பட்ட, 120-கட்வெட்டுக்களை, சம்பந்தப்பட்ட இலாகா ஆராய்ந்து, குறிப்புகளைப் "படி" எடுத்துள்ளதாம்.

கள்ளழகரின் சொத்துக்கள் பற்றிய 1991- மதிப்பீடு கீழே தரப்படுகிறது.

தங்க நகைகளின் மொத்த மதிப்பு. 85 லட்ச ரூபாய்	வெள்ளிப் பொருட்கள். 40- லட்சம்
நஞ்சை நிலம் ஏக்கர்கள். 138-5	புஞ்சை நிலம் ஏக்கர்கள். 144-74.
தோப்புகள் ஏக்கர்..... 16-28.	ஆலயம் உள்ள பகுதி ஏக்கர்கள் 92-27.

சோலைமலையிலே, சுமார் 45-சதுர மைல் பிரதேசம் கோயிலுக்குச் சொந்த மாகும் எனச் சாசனங்கள் உள்ளதாம். ஆனால் தற்போது மலைமேல் உள்ள நூபுர கங்கைக்குப் பெருமாள் தீர்த்தவாரி காணப் போவதற்கே, "பாஃரஸ்ட் (காட்டு) இலாகாவின் "பர்மிஷன்" தேவையாம்!

மதுரையிலிருந்து "டவுன்பஸ்"ஸில் புறப்பட்டு அழகர்கோயிலை, வந்தடைந்து, ஊரின்-1 1/2 மைல் சுற்றளவுள்ள கோட்டை வாசலைக் கடந்து, ஆலயத்தை உள்ளடக்கிய **"இரணியன் கோட்டை"** வாசலிலே இறங்குகிறோம்.

இடதுபுறம் பாதிக்கோபுரமாக நிற்கும்-**ராயகோபுரம்**-தெரிகிறது! 1654-லில் இதுபோல 64-பேராலயங்களில் மதுரை மன்னர், திருமலைநாயக்கர் கோபுரங் களைத் தொடங்கினாராம். அவற்றுள், ஸ்ரீரங்கம் ஒன்றில்தான் மொட்டைக்கோபுரம், தற்போது, 236- அடி உயர பிரம்மாண்டமான முழு கோபுரமாகியுள்ளது.

பெருமூச்சு விட்டபடி இரணியன் கோட்டை வாசலைத்தாண்டி உள்ளே செல்கிறோம். பதினெட்டுப் படிகளோடு, 112 அடி உயர, ராஜ கோபுரத்தின் பிரதான வழி, மூடிக்கிடக்கிறது! அதன்முன்னால், "ஐயங்கார்" அல்லாத "நான்பிராமின்" பூசாரி ஒருவர் நின்றபடி, பதினெட்டுப் படிகளுக்கும் ஆரத்தி காட்டி விபூதி தருகிறார். "பெருமாள்கோயில் ராஜகோபுரத்தின் கீழே விபூதி பிரசாதமா ?" விபரம் கேட்டுப்பெறுகிறோம்.

கள்ளழகரின் அனுக்கிரஹ மஹாசக்தியை கிரஹித்துப் போவதற்காக... அந்நாளிலே 18-மந்திரவாதிகள் இங்கு வந்தனராம்; பட்டாச்சார்யர்களின் சிரத்தா

பக்தியால், கொள்ளையடிக்க வந்தவர்கள், அழகர்கோயிலின் படிகளாயினர்! மேற்படி குழுவின் தலைவன், **பதினெட்டாம்படிக் கருப்பண்ணசாமியாகி**, திருமாலிருஞ்சோலைப் பெருமானின் காவல் தளபதியாகிறான். **"பதினெட்டாம் படியில் சத்தியம் செய்"** என்றால், எந்த ஒரு மாபெரும் மதுரைச் "சண்டியர்"க்கும் "ஷாக்" அடிக்கும். தென் நாட்டின் கண்கண்ட காவல் தெய்வமாக விளங்குபவர் தமிழ் பதினெட்டாம் படி கருப்பண்ணசாமி.

பயபக்தியோடு வணங்கி, விபூதியை பூசிக்கொண்ட பிறகு, அடுத்துள்ள "வண்டிவாசல்" வழியாக ஸ்ரீ கள்ளழகரின் பேராலயத்துள்ளே செல்கிறோம்.

பொற்றகடு போர்த்திய கொடிமரம்; "தகதக"வென மின்னுகிறது; வீழ்ந்து வணங்கி, இடதுபுற ஆழ்வார் சன்னிதி மண்டபத்தைத் தாண்டியதும், 5 1/2 உயர "லிங்காயத்" **(வீர சைவர்)** சிலையை வியப்புடன் வணங்கி நகருகிறோம்.

பிரதான உத்ஸவங்கள் நிகழும் **சுந்தர பாண்டிய மண்டபம்**, ஆயிரக்கால் **மண்டபம், "முனையதரையன்"** முதாலான மண்டபங்களைக் கடந்து, ஆலயத்தின் இரண்டாம் பிராகாரத்துள் பிரவேசிக்கிறோம்.

மூலவரின் தங்க விமானத் தரிசனம்; வணங்கியபடி, கருவறை முன்னால் உள்ள மஹாமண்டபத்திலே, வீற்றிருந்து அருள்பாலிக்கும் பெருமாளின் மூத்த மகனாகிய. **ஸ்ரீவலம்புரி விநாயகப் பெருமானைக்** கும்பிட்டு, விபூதிப் பிரசாதத்தோடு, கள்ளழகரைக் காணப் புறப்படு கிறோம்.

பஞ்சாயுதங்களோடு, ஆறடி உயரத்திற்கும் குறையாத மூலவர் பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவியர் சகிதம் திவ்யதரிசனம் தருகிறார் மெய் சிலிர்க்கிறது.

"சோலைமலையானே! சுந்தரராஜப் பெருமானே!
பாலில் கலந்தசுவை போலிருக்கும் திருமா லே!
சுப்ரமண்ய முருகனுடன் திருமலையில் இருப்பவனே
பரமனே ஸ்வாமியே! சரணமுன் திருவடியே."

எனப் பாடித்தொழுது பரவசம் பெற்றதும், கையிலே கிடைத்த பிரசாதத்துடன் வெளியேறுகிறோம்; திருச்சுற்றிலே **"நாமாவளி"**யை ஜபித்தபடி மிக மிக வயதான ஓர் ஐயங்கார் அமர்ந்திருந்தார்; அவரிடம், "சுவாமி! சைவ, வைணவ பேதமில்லா இங்குள்ள பூஜா முறைகளையும், அனைத்துக் கடவுளருக்குமான சன்னிதிகளையும் கண்டு பரவசமானேன்; புராதனமான பழமுதிர்ச்சோலை முருகன் கோயில் வெகுதொலைவோ?" என்றேன். என்னை மெதுவாக நிமிர்ந்து பார்த்த அவர், ஓரிரு விநாடி என்னையே கூர்ந்து நோக்கிய பிறகு, ஓர் "பேரிடி"யைப் போட்டார்!

"புராதனமான கோவிலா...? யார் சொன்னா?... இந்த, பி.டி. ராஜன் காலத்திலே... அதாவது... 25 வருஷத்துக்கு முன்னாலே ஏற்பட்ட அது, நூபுரகங்கை போற வழியிலே இருக்கு..." என அலட்சியமாகக் கூறியதும், வேகமாக எழுந்து, வெளி யே போனார்! அதிர்ந்து போனேன்!

கடந்த 25-ஆண்டுகளாகச் **சுடர்மணிமாலையில்** ஆண்டுக்கொரு கோயில் வரலாற்றினை எழுதி வரும் அடியேன் (வேம்பத்தூர் கிருஷ்ணன்) (1992) அழகர்மலை விபரங்களை சேகரிக்கச் சென்றிருந்தேன்! அப்போது நடந்த "கூத்து"

தான் அது. ஆரம்பமே பேரிடியாக உள்ளதே, என்று நினைத்தபடி... கள்ளழகர் திருக்கோயில் நிர்வாகத்திலே ஓடுகின்ற "மினி" பஸ்ஸிலே, **நூபுரகங்கை சென்று** தீர்த்த மாடி முடிந்ததும், மலையின் மேலே உள்ளே காவல் தெய்வமான **ராக்காயி அம்மனை** கும்பிட்டு முடித்துக் கீழே இறங்கி.. எட்டிநடந்து எதிரிலே இருந்த **பழமுதிர்ச்சோலை முருகன் கோயிலை** அடைந்தேன்.

பழமுதிர்ச்சோலை முருகன் கோயிலுக்கு முன்னால், புதிய மண்டபம் ஒன்று கட்டப்பட்டிருந்தது; அதிலே...

"அருள்மிகு முருகன் திருக்கோயில் **சோலைமலை மண்டபம்**"

'வழிபடுவோர் ஓய்வு மண்டபம். 6-4-1991'

என்று ஒரு கல்வெட்டு இருந்ததைக்கண்டு, அருகில் இருந்த "யூனிபா முடன்" கூடிய, கோயில் ஊழியரிடம் விசாரித்தேன்! **'அது அப்படித்தான்'** என்றபடி அங்கிருந்து வேகமாக நழுவினார்! பெருமூச்சுடன் ஸ்ரீ முருகப் பெருமானின் சன்னிதி முன்பா கப் போய் "சிவனே" என்று நின்றேன்.

சிறியதொரு மூலஸ்தானத்திலே, வள்ளி தேவானை துணைவியருடன் வடி வேல் முருகன், கள்ளச் சிரிப்போடு எனக்குக் காட்சி கொடுத்தான்.

"ஆதிக் குறிஞ்சிமலைத் தலைவா முருகா! ..... அகத்தியரின் குருவான ஆதிமுதல் தமிழா!
பாதிமதிச் சிவனாரின் நெற்றி வழித் திலகா!..... பழமுதிரும் சோலைமலைத் திருமாலின்மருகா!"

எனப் பாடிப் பணிந்து, பிரசாதம் பெற்றதும், ஆராதனை புரியும் குருக்களி டம் விபரம் அறிய நினைத்தபோது, உபயதாரர் குழுவொன்று ஆவேசமுடன் வந்து அபிஷேகப் பொருட்களைக் குவித்தனர். குருக்கள் விழித்தார்! நிலையுணர்ந்து வெளியே வந்து, வயதான ஒரு முருகப் பக்தரிடம் விபரங்களைக் கேட்டேன்.

"இங்கே **"பழமுதிர்ச்சோலை"** என்று போர்டு போடக்கூடாது. முருகன் கோயிலுக்கென்று புதிய எதையும் கட்டக் கூடாது, இது ஒரு பழைய கோர்ட் தீர்ப்பு" என்றார்.

நீதிமன்றத்தீர்ப்பையும், அதற்கான வழக்கையும் சிலவரிகளிலே பார்ப்போமா!

நூபுர கங்கையின் அருகிலே, **சாம்பல் புத்துமண்டபம்,** அதிலே ஒரு வேல்! இவைதான் 1957-க்கு முன்னால் இருந்த பழமுதிர்சோலை முருகன் கோயில்! (அதற்கு முன்னுக்கும் முன்னால் இருந்த, ஆதி காலத்திய மிகப்பெரிய முருகன் கோயில், சரவணப் பொய்கை பற்றியெல்லாம் பின்னால் அறியலாம்)

அறநிலையத்துறை ஆணையர் **ஸ்ரீ உத்தண்டராமபிள்ளை,** அழகர் கோயில் தர்மகர்த்தா குழுத்தலைவர் **ஸ்ரீ அருணாச்சல முதலியார், "தமிழவேள்" ஸ்ரீ பி.டி. ராஜன், "விவேகானந்தர் பிரஸ் அதிபர், ஸ்ரீ பழனியப்பபிள்ளை! சிவனாச்சாரி** (சிற்பி) ஆகியோரிடம் முருகபக்தர்கள் வேண்டிக் கொண்டதற்கிணங்க, 1957- ஆவணிப் பூரத்திலே மலைமேல், சாம்பல் மேட்டு மண்டபத்தின் உள்ளே, பழமுதிர்ச் சோலையின் புராண வரலாற்றுப்படி, வள்ளி தெய்வானையோடு ஸ்ரீ முருகப் பெரு மானை ஆகம பூர்வமாக பிரதிஷ்டை செய்து அஷ்டபந்தன கும்பாபிஷேகத்தையும் வைத்தது, மேற்படி பிரமுகர்களின் குழு.

காஞ்சிபுரத்தைச் சேர்ந்த தீவிர வைணவரான, **ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார்,** என்பவர் சோலைமலைக்கு வந்து, சாம்பல் புத்து.., விபூதி, வேல், ஆகியவற்றைப்

பற்றி "ஓரலாக" விசாரித்திருக்கிறார்! கையாலாகாத உள்ளூர் வைணவர் சிலர், அவ ரது காதைக் "கடித்து" ஏதேதோ குதறியிருக்கிறார்கள்! உடனே அவர், மூலவர் முருகன் பிரதிஷ்டையை எதிர்த்துக் குரல் கொடுத்தார்! பலர் சேர்ந்து "கோரஸ்" பாடினர்! "திடீர் முருகனை அகற்ற வேண்டும்" என்று உடனடியாக அடுத்திருந்த **மேலூர் கோர்ட்டிலே வழக்குத்** தொடரப்பட்டது.

"பிரதிஷ்டையான மூலவர் முருகனைப் பெயர்த்தெடுக்க வேண்டாம்" என்று 1962-ல் மேலூர் கோர்ட்டார் நியாயமான தீர்ப்பளித்தனர்.

விடுவார்களா ?; மதுரை நீதிமன்றத்திலே **"அப்பீல்"** செய்யப்பட்டது. "ஆகம பூர்வமாக அமைந்துவிட்ட முருகனின் ஆலய வழிபாட்டிற்கு இடையூறு செய்ய வேண்டாம்" என்று மதுரை நீதிமன்றமும் 1967-ல் கூறிவிட்டது.

உடனே, வழக்காடுவோர், சென்னைக்கு விரைந்தனர்! ஹைக்கோர்ட்டில் நுழைந்தனர்! அப்போதைய **ஜட்ஜ் ஸ்ரீ அழகர் சாமி** நாயுடு அவர்களின் தீர்ப்பு கீழ்காணும் வகையிலே 1968-ல் அமைந்தது.

"இப்போது முருகன் இருக்கும் சாம்பல் புத்து மண்டபம்பற்றித் தாக்கலான, ஆதாரபூர்வ தஸ்தாவேஜுகளின்படி, அழகர் கோயிலுக்கு உரியது அது!, எனவே... "பழமுதிர்சோலை" என்று எந்த போர்டும் வைக்கக் **கூடாது**! மூலவர் இருக்கு மிடத்தைப் பெரிதுபடுத்தக்**கூடாது**. புதிய மண்டபங்கள் எதையும் கட்டக் **கூடாது**! ராஜகோபுரம் முதலான திருப்பணிகள் **அறவே கூடாது**! சுவாமி (முருகன்) புறப்பாடு இருக்கவே**கூடாது...**! இப்படிப் பலப்பல "**கூடாது**"கள். அந்தத் தீர்ப்பிலே இடம் பெற்றிருந்தன.

தீர்ப்பைச் சிலர் எதிர்த்தனர்; "முதலுக்கே மோசமாகிவிடக் கூடாதே" என்று பலர், அதை ஏற்றனர்! இந்த நிலையிலேயே ஆண்டுகள் பல உருண்டோடின. ஆல யங்கள், தீர்த்தங்கள் உள்ள இடங்களைத் தவிர, ஏனைய மலைப்பகுதி அனைத்தும் வனத்துறையின் பொறுப்பிலே இருந்ததால், 1972-ல், வசதியுள்ள முருக பக்தர் களின் காணிக்கைகளைக் கொண்டு, ஆலயத்துக்கு எதிரே ஒரு ஏக்கர் நிலம் விலைக்கு வாங்கப் பட்டது.

அறநிலையத் துறையினரின் கண்காணிப்புடன் 1980-ல் பழமுதிர்சோலை முருகன் சன்னிதிக்கு முன்னால், ஓர் மண்டபம் உருவானது!

"மண்டபம் கட்டியது தீர்ப்புக்கு முரண்" என உடனே வழக்கு உருவாகி, ஏதோ ஒரு வகையில் சமரசம் ஏற்பட்டு, **"ஒய்வு மண்டபம்"** என்ற பெயரோடு 1991-ல் திறப்பு விழாவும் நடைபெற்றது. பழமுதிர்ச்சோலை முருகப்பெருமானின் "உரிமை"க்கான பரிதாபநிலை, பெரும் "பிரமுகர்" சிலரது மனதை, நெருடியது!

"சக்தி"யுள்ள தொழிலதிபர் பலர், ஒருங்கிணைந்து, வனத்துறையிடமிருந்து மூன்று ஏக்கர் (5) நிலத்தை விலைக்கு வாங்கினர். பழமுதிர்ச்சோலை முருகன் கோயிலை இதே மலையின் வேறுபக்கத்திலே பிரமாண்ட முறையிலே உருவாக்கத் திட்டமிட்டு சிருங்கேரி சுவாமிகளைக் கொண்டு, ஆரம்ப அடிக்கல் பூஜையும் நடந்ததாம்! ஓடி வந்தது வழக்கு! ஒதுங்கிவிட்டனர் பிரமுகர்கள்!

"மண்டபத்தைக் கட்ட விட்டதால்தானே மண்டையிடி" "ஓய்வு" மண்டபமே கூடாது என ஒரு வழக்கு மேல் கோர்ட்டிலே உடனே தாக்கலானது.

திட்டமிட்டு சிருங்கேரி சுவாமிகளைக் கொண்டு, ஆரம்ப அடிக்கல் பூஜையும் நடந்ததாம்! ஓடி வந்தது வழக்கு! ஒதுங்கிவிட்டனர் பிரமுகர்கள்!

"மண்டபத்தைக் கட்ட விட்டதால்தானே மண்டையிடி" "ஓய்வு" மண்டபமே கூடாது என ஒரு வழக்கு மேல் கோர்ட்டிலே உடனே தாக்கலானது. சபைகள், கமிட்டிகள், பேரவைகளின் சாம, தான, பேத, **"பனிப்போர்கள்!"** சம்மன், வழக்கு! சாட்சி! விசாரணை என்று நாளது தேதிவரை பழமுதிர்ச்சோலை முருகாலயத் தொடர்வழக்கு, முடியாத் தொடர்க்கதையாகத், தொடர்கிறது. சம்பந்தப்பட்ட இரு சாராரையும் சந்திக்க முயன்றேன்! ஒரு சிலரை நேரிலும் சந்தித்தேன்! சட்ட அவை, "வழக்குரை"ஞப் பிரபலஸ்தர் ஒருவரை (மிக முக்யஸ்தர்) சந்தித்து, வந்த விஷயத்தைக் கூறினேன்.

இனிய முகத்துடன் ஆரம்பத்திலே வரவேற்ற அவர், காரணத்தை அறிந்ததும், முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டு.., "இந்த விஷயமெல்லாம் கோர்ட்டிலே இருக்கு; நான் சொல்றதுக்கு ஒண்...ணுமில்லே..." என்றார்.

"சாமி! விபூதியும், திருமண்ணும் ஆதியிலிருந்தே "மாமன், மச்சான்" உறவோடு... மகிழ்ந்தொன்றாய் கலந்தாடும் மகிமை உள்ளவை, இந்தப் பழமுதிர் சோலை விவகாரம்...?" என்றேன் அவரிடம் "படா"ரென்று எழுந்த அவர், "ஓய்! பழமுதிர் சோலைங்கறது, அழகர் கோயிலிலேயே இல்லை! போதுமோல்லியோ?" எனக் கோபாவேசமுடன் சீறினார்!

"வேறெங்குதான் உள்ளது?" பணிவுடன் கேட்டேன்.

"தேடிப்பாரும்"! "பளீ"ரெனக் கூறிவிட்டுச் "சடா"ரென எழுந்து போனார்.

"சுரீர்" என்றது எனக்கு! தேடத் தொடங்கினேன், மதுரையிலும் சென்னையிலும் சைவ, வைணவச் சான்றோர், தலைவர், தொண்டர், சாதுக்கள், பிரவசனப் பிரமுகர்கள் என்று பலரையும் பார்த்தேன், விபரம் கேட்டேன்!

"விபூதி"யைவிடத் **"திருமண்"**ணின் சிந்தனை, செயல்திறன், உறுதிப் பாடு, பணபலங்கள் ஓங்கியிருந்தது கண்டு... கேட்டு... பார்த்து... வியந்தேன்.

இரு சாராரிடமிருந்தும் பெரும்பாலும் "ஏனோதானோ" பதில்கள்தான்! ஆள் பலம் உதவாததால், நூல் பலத்தைத்தேடினேன் ஏழு, எட்டு மாதங்களாக ஆறுபடை வீடுகளில் ஒன்றான **பழமுதிர்சோலை**க்கான இதிகாச, வரலாற்று ஆதாரங்களை, ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்கள், பிரசுரம், பேப்பர்களை தேடித் தேடிப் படித்தேன். திகைப்பூட்டும் (முருகனுக்குச் சாதகமான நாற்பதுக்கும் மேற்பட்ட குறிப்புகளைத் தொகுத்தேன்!) குறிப்புகளுக்கு முன்னால், குமரகுருபரனின் ஆறுபடைவீடுகளின் புராண வரலாறுகளை ஓரிருவரிகளில் கூறி விடுகிறேன்.

அண்டசராசரம் அனைத்திலும், அனைத்துமாகிய சிவத்துக்கு, பிரணவத்தின் பெரும் பொருளை உபதேசிக்கும் பாவனையிலே, பிரம்மதேவருக்கு இங்கே பேரருள் புரிந்தார் முருகப் பெருமான். அதனால், ஈரேழுலக, எண்ணாயிரம் கோடி ஜீவராசிகளும், ஓரறிவு முதல், ஆறறிவு வரை பெற்றுத் திகழுகின்றன. அந்த அருள் ஞானசக்திதரன். **சுவாமிநாதனாகச்** சுடர்விடும் திருத்தலம், தான் "திருவேரகமா"கிய, **சுவாமிமலை.**

ஐங்கரத்து அண்ணனும், அறுமுகத் தம்பியும் நாரதமுனிவரோடு இணைந்து ஆடிய "ஞானக்கனி"த் திருவிளையாடலால், பூமிக்குக் கிடைத்த பரிசு, "திருவாவி னன்குடி" எனும் மருத்துவத் திருத்தலமாகிய, 'பழநி' மலையாகும். பூமிக்கு வந்த பாலமுருகன், மக்களைக் காப்பதற்காக, சித்தர் பெருமக் களை உருவாக்கி, சித்தமருத்துவ மகத்துவத்தை மானுடத்துக்கு வழங்கிய அடை யாளமாக, நவபாஷாணத்தால் ஆன மூலவராக,... ஸ்ரீ தண்டாயுதபாணியாக, முருகப் பெருமான் நின்றருளும் பஞ்சாமிர்தப் படைவீடு... **பழனி.**

ஆயிரத்தெட்டு அண்டங்களை, நூற்றெட்டு யுகங்கள் ஆளுகின்ற மாபெரும் வரங்களைப் பெற்றிருந்தும், "போதும்" என வாழாமல் பேராசை வெறியால், தேவ லோகத் தையே துவம்சம் செய்யத் தீர்மானித்தான் அசுரேந்திர னாகிய, சூரபத்மன். அசுரனின் ஆணவம் தீரவும், அமரர்தம் க்ஷீணங்கள் மாறவும், **'தேவ சேனாதிபதி'**யாகப் போர்க்கோலம் கண்டு, சீறிவந்த, சூரபத்மனைச் சேவலும் மயிலு மாக ஆட்கொண்ட சிவசுப்ரமண்யனின் வேற்படை வீடு, **திருச்செந்தூர்.**

சூரசம்ஹாரத்தால், விண்ணவர் குறைதீர்த்த சண்முகப் பெருமானுக்குப் பரிசுதர விரும்பிய தேவர்குழாம், திருமாலின் கண்மலர்ச் செல்வியும், தேவேந்திர னின் வளர்ப்பு மகளுமான தேவயானையைப் பரிசாக ஏற்றருளப் பிரார்த்தித்தனர். முப்பத்து முக்கோடி தேவர்தம் திருமுன், தேவயானையை முருகப்பெருமான், கைத்தலம் பற்றிய திருமணத் திருத்தலமாகவும், சண்முகப் பெருமானது, ஆறுபடை வீடுகளையும் நமக்கு விளங்கவைத்த நக்கீரர் பெருமானின் திருமுறுகாற்றுப் படைக்குப் பிறப்பிடமாகவும் விளங்கும் மாங்கல்ய க்ஷேத்திரம், **திருப்பரங்குன்றம்.**

திருமாலின் மற்றொரு கண்ணின் மணிச்செல்வியான, சுந்தரவல்லி யானவள், நம்பிராஜ வேடனின் மகள் வள்ளிக் குழந்தையாகப் பூமியிலே தோன்றி... வளர்ந்து... குமரியாகித் தினைப்புனம் காத்து வந்தாள்.

வேடனாய், விருத்தனாய் வந்து ஆடிப்பாடிய வடிவேல் முருகன், விநாயகப் பெருமானின் துணையோடு, குறமா மகளைக் களவு மணம் கொண்டு, அழகிய பெருமாளாக,- அருள் ஞானசக்தி தரனாக ஆனந்த மூர்த்தியாக, வள்ளி, தெய்வ யானையரோடு, பேரருளை அள்ளி வழங்கும் இல்லறப்படை வீடு, **திருத்தணிகை.**





பழமுதிர்சோலை

சூரசம்ஹார முடிவிலே, சுப்ரமண்ய சுவாமியின் வாஹனமான மயிலும், கொடிச் சின்னமான சேவலும், பூர்வஜன்ம (சூரபத்மன்) சீறும் குணம் முற்றிலும் தீருவதற்காக, பழமுதிர்சோலையின் சரவணப் பொய்கையிலே வந்திருந்து, நீராடிப், பாகுலேயனின் கருணையை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றன.

அந்தக் கானகச்சாலை வழியே வந்த ஔவை மூதாட்டி, பசியும் களைப்பும் மேலிட... "முருகா" என்றொரு மரத்தடியிலே அமர்கிறாள்; "என்னபாட்டி! ரொம்ப பசிக்கிறதா?" மரத்தின் மேலிருந்த மாட்டுக்காரச் சிறுவன் குரல் கொடுத்தான்!

"ஒன்றிரண்டு பழங்கள் கிடைத்தால் பசிதீரும்" என்ற ஔவையிடம் **"சுட்டப்பழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா?"** என்ற சிறுவனின் கேள்வியால் திகைத்தபடி "சுடாதபழமே போடப்பா" என்கிறாள் ஔவை. கிளை குலுங்குகிறது; நாவற் பழங்கள் 'பொலபொல'வெனத் தரையிலே உதிருகின்றன!

"ஆவணியில் தீர்ந்துவிடும் நாவற் பழங்கள், ஐப்பசியில் எப்படி வந்தன!" என வியத்தபடி... சில கனிகளை எடுத்து மண்ணை நீக்குதற்காக, ஊதுகிறாள்.

"என்ன பாட்டி! பழம் ரொம்பச் சுடுதா?" என்றபடி சிறுவன், கீழே குதிக்கிறான்! கனியுடன் கூடிய ஔவையின் கரங்கள் நடுங்கின! கண்கள் கலங்கின.

"கருங்காலிக் கட்டைக்கு நாணாக் கோடாலி ..... இருங்கதலித் தண்டுக்கு நாணும்-பெருங்கானில் காரெருமை மேய்கின்ற காளைக்கு நான்தோற்றேன் ஈரிரவும் துஞ்சாதென் கண்."

எனக்கதறிய ஔவையின் கண்ணீரைத் துடைத்தபடி "தாயே! தமிழே! உனக்குத் தோல்வியா? என, "கலகல" வெனச் சிரித்தான் அந்தச் சிறுவன். எங்கிருந்தோ வந்த வண்ண மயிலும், வாளிப்பான சேவலும் அவனைச் சுற்றிச் சுற்றி வந்தன.

"யாரப்பா நீ! சேவலும் மயிலும் உன்னை வலம் வந்து அகவல்பாடுகின்றன; விநாயக சதுர்த்தியோடு தீர்ந்துவிடும் நாவற்கனிகள் கந்தர்சஷ்டி நாளிலும் வந்து விழுகின்றன! விந்தையாக உள்ளதே; மாடுகளை மேய்ப்பவன்தானா நீ?"

"மாடு மேய்ப்பது, எனது தாய்மாமனின் வேலை; மயிலேறி விளையாடி மலைகளையெல்லாம் வலம் வருவதே நமது வேலை".

"வேலை வணங்குவதே எமது வேலை; முருகா! நீயா மாட்டுக்காரனாக வந்து, சுட்டப்பழம் கேட்டு எனை இப்படிச் சோதித்தாய்?" எனத் துடிக்கிறாள் தமிழ்மூதாட்டியான ஔவை.

"மூவகைத் தமிழையும் முற்றுமாகக் கற்றுணர்ந்த மூதாட்டியே!" "கற்றது கை மண்ணளவே" என்று கூறி, என்னிடமிருந்து நீ தப்பிக்கமுடியாது! **"இனியது, கொடியது, பெரியது, அரியது எது, எது,** என்று நீ இப்போது, இங்கே பாடியே தீர வேண்டும்!"

"ஹரியின் மருகா! ஹரனின் முருகா! ஆனைமுகனின் தம்பியே! நீ அறியாததும் இப்பூமியிலே ஒன்றுண்டோ!" எனக் கேட்க.....

"யாமறிந்த அதனை நீ பாடினால், பூ மண்டலம் பயன்பெறும்!" என்றதும் "இனியது, கொடியது, பெரியது, அரியது" களைப்பாடி... முடிவிலே, **"தொண்டர் தம்பெருமை சொல்லவும் அரிதே"** என முடிக்கிறாள் கலியுகவாணி.

"அடேயப்பா! தேவாதி, அசுரர்தம் திறன்களைவிட.. மானுடத் தொண்டரின் பெருமைதான் உயர்ந்தது, என அடித்துப் பாடிவிட்டாயே!"

"முருகா! நானா பாடினேன்; அனைத்தினுள்ளும் அங்கிங்கெனாதபடி, நிறைந்துள்ள நீயல்லவா என்னை அப்படிப் பாடவைத்தாய்!"

"ஔவையே! மனிதப் பிறவியின் மகத்துவத்தை அனைத்துலகுக்கும் உணர்த்தவே இந்தப் பழமுதிர்ச்சோலைத் திருவிளையாடல்; பங்கு பெற்ற உனக்கு, நீ மிகவும் விரும்பிய ஒருபரிசும் உண்டு!" என்றதும்...

வானவரும் வேடர்களும் புடசூழ, வள்ளயம்மையின் திருமணம் பழமுதிர் சோலையிலே மீண்டும் நடைபெறுகிறது. ஔவைக் கிழவியின் ஆனந்தம், பரமானந் தமாகும் வகையிலே... இச்சாசக்தியான குறமகள் வள்ளியோடும், கிரியாசக்தியான தேவமகள் தெய்வயானையோடும் இணைந்த ஸ்ரீ முருகப் பெருமானின் திவ்ய தரிசனம் தமிழ் மூதாட்டிக்குப் பழமுதிர்ச் சோலையிலே கிடைக்கிறது.

"அனைவர்க்கும் உரிய ஆதியே! ஆறுமுக ஜோதியே! யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையம். பழமுதிர் சோலைக்கு உனைத்தேடி வரும் அடியவர்க்கெல்லாம் இப்பரமானந்தம் சித்திக்கவேண்டும்" என வணங்க...

திருக்கரமுயர்த்தி, அருள் வழங்கியபடி... "உலகெலாம் உணர்ந்து ஓதுவதற் காக, அரிய பெரிய தர்மங்களையெல்லாம் "ஆத்திச்சூடி" போன்ற எளிய தமிழிலே பாடி வழங்கும் ஔவையே! அனைத்துக் காலங்களிலுமே, உனது அம்சம் பூமியிலே தழைப்பதாகுக; அருளறத்தோடும், சிரத்தாபக்தியோடும் இந்தப் பழமுதிர்சோலை மலைக்கு வருவோர்க்கெல்லாம் நமதருள் நிலைப்ப தாகுக!"

என்றவுடன் தேவியரும் முருகனும் ஆறடி உயர மூலவர்களாகிறார்கள்; பூ மழை பொழிகிறது; பழமுதிர்ச் சோலை முருகனின் புராண வரலாறும், பூர்விகக் கதையும் இவ்வாறாக நிறைவு பெறுகிறது.

"பழமுதிர்சோலை என்பது, ஆறுபடை வீடுகளில் ஒன்றாக இருக்கலாம்; ஆனால் அது அழகர்கோயிலிலே இல்லை" என்பது சிலரது வாதம்!

"சோலைமலை"யிலே சுப்ரமண்யனுக்குக் கோயில் "உண்டு" என்பதற்கான ஆதாரக் குறிப்புகளைப் பற்பல நூல்களிலிருந்து இங்கே தொகுத்துத் தரப்படுகிறது! சர்வமும் அல்ல சில "சாம்பிள்" தான்!

முதலாவது நூல் எது தெரியுமா? **கள்ளழகர் திருக்கோயில் தேவஸ்தான** வெளியீடுதான். பாருங்கள்! பிறகு உங்களது மன சாட்சிப்படி தீர்ப்பைக் கூறுங்கள்.

"இரண்டாயிர வருஷத்துக்குமுன், நக்கீரர் என்னும் புலவரால் எழுதப்பட்ட திருமுருகாற்றுப்படை என்னும் பாட்டு ஒன்றில் "பழமுதிர் சோலை மலைகிழவோன்" என்று, இம்மலை முருகனுக்கு உரியதாகச் சொல்லப்படுகிறது"

வடமொழி ஸ்கந்த புராணத்தில் இம்மலை "பழமுதிர் சோலை" என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. முருகனுக்கும் திருமாலுக்கும் உரிய மலையாக இருந்ததென்று அறிகிறோம்.

திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் இதை, (பழமுதிர் சோலையை) முருகப் பெருமான் கோயில் கொண்ட இடமாகவே வர்ணிக்கிறார்.

"அழகர் கலம்பகம்" பாடிய வேம்பத்தூர் கவிகுஞ்சரமையர், இம்மலைமேல் முருகனுக்கும் கோயில் இருந்ததென்று உறுதியாகக் கூறுகிறார்.

ஆழ்வார் சன்னிதி (கள்ளழகரின் கோயில் உள்ளே) மண்டப அருகே 5 1/2 அடி உயர லிங்காயத் (வீரசைவர்) சிலை உள்ளது... முன்பு, இங்கிருந்த முருகன் சன்னிதியிலிருந்து கொண்டு வந்து, பிறகு இதை யாரோ இங்கு வைத்திருக்கலாம்.

இங்கு (அழகர் கோயிலில்) முற்காலத்தில் இருந்து அழிந்துபோன கோயில்களில் முக்கியமானவை... சிவன். சுப்ரமண்யர், பலராமன், கிருஷ்ணன், ஸ்ரீ நிவாசர், சுஸர்சனர், இவற்றின் மூல விக்ரஹங்கள் மட்டும் பிரதான கோயிலுக் குள் எடுத்துச் சென்று பத்திரப்படுத்தி வைக்கப்பட்டன; சுதர்ஸனருடைய மூல விக்ரஹச் சிலை மட்டும் பழைய இடத்திலிருந்து இப்போதுள்ள இடத்தில் பிரதிஷ் டை செய்யப்பட்டது. மற்றவை மறைந்துவிட்டன !

-(1970-1991) "கள்ளழகர் தல வரலாறு" பதிப்பித்தது: கள்ளழகர் திருக்கோயில்,

"அழகர் கோயில் பதினெட்டாம்படிக்கு எதிரில் பெரிய மேடு ஒன்று இருக்கிறது; இம்மேட்டின் அடியில்தான் **முன்பு இருந்த முருகன் கோயில்** அழிந்து கிடப்பதாகச் சொல்லுகிறார்கள் (பக்கம் 47)'

"ஆதி அழகர் கோயில்" "நத்தம்" என்ற ஊரிலிருந்து தெற்கே இரண்டுகல் தொலைவிலே உள்ளது; இங்கிருந்து தான் **அழகர், தற்போதுள்ள கோயிலுக்குக்** குடிபெயர்ந்ததாகவும் சொல்லப்படுகிறது. (பக்கம் 154,155)

- (1942) "திருமாலிருஞ்சோலை தல வரலாறு" - கள்ளழகர் தேவஸ்தான 'ஆங்கில' வெளியீடு

"ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே ஆழ்வார்கள் தரிசித்து மங்களாசாசனம் செய்தது ஆதி அழகர் கோயில்தான்."

"தற்போதைய 'மேப்' நெ. 36, "முடி காணிக்கை செலுத்துமிடம்" என்று போர்டு உள்ள இடம், **சிவன் கோயில்** இருந்த இடமாகும்.

நெ. 35 "புஷ்கரணி" எனக் குறிப்பிட்டுள்ள இடமானது, புண்ணிய சரவணம் எனப்படும்; **முருகனின் சரவணப் பொய்கை.**

(1986) 'ஆதி அழகர் கோயில் வரலாறு' வெளியிட்டோர்: தி.சு. கோவிந்தசுவாமி

"அழகர் கோவில், வைணவத் திருத்தலமாக மாற்றப்படுவதற்குமுன், சிவஸ்தலமாக இருந்திருக்க வேண்டும்! ஏனெனில், (இங்குள்ள) கல்வெட்டுக்களில் (காணப்படும்) மூலவரின் பெயர், "**பரமசுவாமி**" என்று உள்ளது."

(108 திவ்ய தேசப் பெருமாள்களின் (மூலவர்களின்) திருநாமங்களிலே ''பரமஸ்வாமி'' என்னும் பெயர் எங்காவது உண்டா)

-'அழகர் மலையும் கல்வெட்டுச் சான்றுகளும்' தி.சு. கோ.V. வெங்கடசுப்பையர்

''கி.மு. 50,000-முதல், 25,000-வரை நடைபெற்ற கடற்கோளால் குமரி மலை கடலுள் மூழ்கியது. (இமயக்கடல் மலையானது) பொதிகை மலைப் புறத்தே மக்கள் கரையேறினர். இம்மலையின் **(குறிஞ்சி) நாகரீகமே முதலில் தோன்றியது.** பொதிகை (குறிஞ்சி)யில்தான் தமிழ் பிறந்ததாகக் கூறப்படுகிறது. குறிஞ்சிக் கடவுளான முருகன் ''தமிழ்'' எனக் கூறப்படுவதன் காரணமும் இதுவே.

பொருள் ஆராய்ச்சியில் ஆதிச்சநல்லூர்தாழியிலே பல்லாயிரம் ஆண்டு களுக்கு முற்பட்ட வேலும், வெண்கலத்தால் ஆன சேவற்கொடியும் கிடைத் திருப்பதால் முருக வழிபாடு அப்போதே தோன்றியிருக்கிறது என்பர்.

'தமிழ் நாட்டு வரலாறு' - பா. இறையரசன் M.A.

'இன்றைக்கு ஏறத்தாழ இருபதாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது சைவ சமயம்' என **சர் ஜான் மார்ஷல்** எனும் மேலை நாட்டுப் பேரறிஞர் நடுநிலை பிரழாது ஆராய்ந்து நவின்றிருக்கிறார்.

தமிழ்மொழிநூல் அனைத்திலும் மிகப் பழமையானது தொல்காப்பியம். இதன் காலம் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. மறைமலை அடிகள் முதலான சான்றோர் தம் ஆய்வின் முடிவு இது.

-(1984) சைவ சித்தாந்தம், - ந.ரா. முருகவேள், M.A.

''சேயோன் மேய மைவ்ரை உலகம்'' என்று தொல்காப்பியம், முருகனை பசுமையான மலைத் தெய்வம் என்று பேசுகிறது. கடவுட் கொள்கையில் முதலில் தோன்றியது முருக வழிபாடு. அழகர் கோயில் தூண் ஒன்றிலே, முருகன் ஆண்டிக்கோலத்தில் காட்சி தருகிறான்; சோலைமலையில் வேல் வழிபாடு நீண்ட காலத்தது எனச் சிலப்பதிகாரம் கூறும். (1984) 'முருக தரிசனம்' - டாக்டர் நஜன்

'சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டும் கி.பி 6ம் நூற்றாண்டின் இறுதியில் இயற்றப்பட்டிருக்கலாம்; கண்ணுசாமி பிள்ளை 8ம் நூற்றாண்டு என்பார்; பேராசிரியர் நாராயணனின்,9ம் நூற்றாண்டு என்ற ஆராய்ச்சியும் உண்டு'

சென்ற நூற்றாண்டில் யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், சமணப் பெண் தெய்வமான கண்ணகியைத் தமிழர்கள் யாருமே வணங்கலாகாதென, பற்பல கண்ணகி கோயில்களை, ராஜராஜேஸ்வரி ஆலயங்களாக மாற்றினார் என்பர்.

(1972) 'தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்' - டாக்டர். K.K.பிள்ளை.



"கி.பி. மூன்றாம் நூற்றாண்டு, பல்லவர் கால முதல், விஜயநகரப் பேரரசின் இறுதிவரை ஆரியக் கடவுளர் (விநாயகர், சிவன், விஷ்ணு) திருமேனிகள், கோயில்களில் பிரதிஷ்டை செய்யப்பட்ட வண்ணமாக இருந்தன. ஏற்கனவே அவற்றுள் (கோயிலுக்குள்) இருந்த திராவிட இறைவன், இறைவியர் (முருகன், ஐயனார்களோ) உருவங்கள் புறக்கணிக்கப்பட்டன; அல்லது ஆலய வெளிச்சுற்றுப் பிராகாரங்களில் வைக்கப்பட்டன; "ஒண்டவந்த பிடாரி, ஊர்ப்பிடாரியை ஓட்டிற்று" என்ற பழமொழி ஏற்பட்டது...'

(1974) 'தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்' - "சோமலே" (S.M. லட்சுமணன் செட்டியார்)

"உலகில் மனிதன் தோன்றிய முதல் இடம், உலகின் நடுக்காட்டுப் பகுதி. குறிப்பாக நமது நாட்டின் குறிஞ்சி நிலத்தில்தான் முதலில் மனிதன் தோன்றினான் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர். "குறிஞ்சி நிலத்தின் ஆதி தெய்வம் முருகன்" என்கிறது தொல்காப்பியம். (1979) 'ஸ்ரீ கந்தலீலை'-மீனாட்சி இராமன்

"முருகன் தலமாக சைவர்களையும், திருமால்பதியாக வைணவப் பெருமையுடனும் விளங்குகிறது... மலையடிவாரத்திலே, திருமால் கோயில், மலைமீது முருகனின் ஆலயம். கண்ணனும் **அழகர்**; முருகனும் **அழகர்**; இரு அழகர்களின் மலையே **அழகர்மலை...** 1986-"அறுபடைவீடுகள்-வெற்றிச்செல்வன்.

'தொல்காப்பியத்தில், முருகன் வழிபாடு இருந்ததற்கு அகச்சான்று உண்டு தொடக்க நிலையா? இல்லை! பழகிப் பழகி முதிர்ந்த நிலையிலே இருந்தது'.

ஆதிக்கடவுளை "குறிஞ்சிக் கிழான்" "மலைகிழவோன்" என்றே ஆதி முதல் மக்கள் வழிபட்டனர். அதைத்தான் நக்கீரரின் திருமுருகாற்றுப்படை கூறுகிறது. (1971) 'முருகன் அல்லது அழகு' - (திருவிக) திரு.வி. கலியாண சுந்தரனார்.

'திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் காட்டும் இயற்கை (அருவி-ஆறு-சோலை) வர்ணனைகளும், திவ்யப் பிரபந்தத்தில் திருமங்கையாழ்வாரின் வர்ணனையும் ஒரே மாதிரியாகவே உள்ளன; வேடர்கள் வந்து சோலைமலையிலே வழிபடுவதை, இருவரு மே பாடியுள்ளார்கள்; எனவே பழமுதிர் சோலையும், திருமாலிருஞ் சோலையும் அழ கர் கோயில்தான்..... ஆதிக்கடவுள் குறிஞ்சிமுருகன்'.

(1968) ஆறுமுகனுக்குகந்த ஆறுபடை வீடுகள் - அருட்கலை ஆய்வர் N. பத்மநாபன்

'முருகன் குறிஞ்சி நிலத்திற்கு உரிய தெய்வம்; பெருமானின் அருள் கொண்டு வெறியாடுவோனை "வேலன்" என்றே பண்டைய நாளில் குறிப்பது'. "இழுமென இழிதரும் அருவிப் பழமுதிர் சோலை மலைகிழவோனே"

"மலையுச்சியிலிருந்து இழுமென்னும் ஓசையுடன் அருவியானது இழுந்து கொண்டிருக்கும், அத்தகைய பழம் முற்றிய சோலைகளுடைய மலைக்கு உரிமையுடையவனான பெருமானே" (1960) 'உதய சூரியன்' திருமுருகாற்றுப்படை, தெளிவுரை - புலியூர் கேசிகன்

"சங்க காலத்திலே சிவனும், திருமாலும், முருகனும் பிற சிறு தெய்வங்களும், வீரர் வழிபாடும் காணப்படுகின்றன. அக்காலத்திலேயும் அத்தெய்வங்களைப் போற்றிப் பரவும் பக்தி இலக்கியம் இல்லை; முதன் முதலாக தமிழில் திருமுருகாற்றுப்படையே சங்ககாலப் பக்தி இலக்கியமாக நமக்குக் கிடைக்கிறது"

(1982) 'தாய்மை' பேராசிரியர் : அ.மு. பரமசிவானந்தம் M.A. M. IITT

"பத்துப்பாட்டில் (சங்க இலக்கியம்) அதிலே - முதலாவதாகக் கூறப்படுவது, திரு முருகாற்றுப்படை, "புலவராற்றுப்படை" என்றும் வழங்கப்பெறும். 317 அடிகளையுடைய ஆசிரியப்பாவால் அமைந்த நூல்; முருகன் திருவருளை வேண்டி, சைவர்கள் நாள்தோறும் பாராயணம் செய்வது. ஆறுபடை வீடுகளை இது இனிமையுற விளக்குகிறது." (1959) 'தமிழ் இலக்கிய வரலாறு' - சி. பாலசுப்பிரணியன் M.A.

"ஆறாவது படைவீடாகிய பழமுதிர்சோலை, மதுரைக்கு அருகே உள்ள அழகர் மலையாகும். சோலைமலையென்றும், திருமாலிருஞ்சோலையென்றும் அது வழங்கப்பெறும். இப்போது அழகருக்குரிய கோயில் அங்கு இருக்கிறது... அதோடு, முருகனுக்கும் கோயில் இருந்ததற்குரிய அடையாளங்கள் அங்கே உள்ளன என்பர்..."

(1987) "வழிகாட்டி" - "வாகீசகலாநிதி" கி.வா. ஜெகந்நாதன்

"சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்... ஐந்தையும் உணறுவது மனம்; இந்த ஆறும் சேர்ந்த உருவகம்தான், ஆறுமுகனாகிய முருகன். ஒவ்வொரு மனிதனிலும், முருக மஹிமை உள்ளது. முருக தத்துவம் புரிந்தால், ஒவ்வொரு மனிதனுமே தெய்வாம்சம் பெறலாம்." -(1962) "கடவுளின் வடிவங்கள்" ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

"முருகனுக்குரிய வெள்ளிக் கிழமைகளில்தான் அழகருக்கு மலரணிவித்துத் தேனும், தினைமாவும் வழங்குகின்றனர்; அரச்சனைக்கு அரளிப்பூவே இங்கு பயன் படுத்தப் படுகிறது அடியார்களுக்குத் துளசி வழங்கும் முறை, எக்காலத்தும் கிடையாது!"

"பழமுதிர்சோலை" என்ற முருகன் கோயிலும், ஆறுமுகப் பெருமான் திருக்கோயிலும் இத்தலத்தில் நெடுங்காலம் இருந்து, எவ்வாறோ மறைந்துவிட்டன! ஒரு மதில் எடுக்கப் பள்ளம் வெட்டியபோது, 1903-ல் சிவலிங்கம், விநாயகர், சுப்ரமண்யர் உருவங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, உடனே மறைக்கப்பட்டதாயும் கூறுவர்!

(1980) 'மதுரை மாவட்டம்' (நூல்)- "சோமலெ"

'சங்ககாலப் புறநானூற்றில் சிவபெருமானுக்கு முதலிடம்; அதுபோலவே தமிழர், முருகனைத் தொன்று தொட்டு வழிபட்டு வந்ததாக அறிகிறோம்'.

குறிஞ்சிநில (மலை) தெய்வமாகிய முருகனின் தோற்றம், தாமரையில் வளர்ந்தது முதலான விபரம் பரிபாடலில் உள்ளது. பதிற்றுப்பத்திலும் முருகன் பெருமை பாடப்படுகிறது.. (1956) 'தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர்' - "ஔவை" சு. துரைசாமி பிள்ளை

"கண்ணாரிரண்டு உடையானும், கார்மேனியானும் பழமுதிர் சோலையிலே கோயில் கொண்டுள்ளதாக, பழநித்தல புராணம் குறிப்பிடுகிறது: கந்த புராணத்திலும் இதே கருத்து உள்ளது. இம்மலையின் ஒருபகுதி **வெள்ளிமலை** அங்கே...

சுப்பையா கோயில் உண்டு; அங்குதான், முருக சான்னித்தியம். வேம்பத்தூர் புலவரால் பாடப்பட்ட "அழகர்கலம்பக" முதற்பாட்டிலேயே "பழமுதிர் பூஞ்சோலைமலை" என்று இத்தலத்தின் பெயர் இடம் பெற்றுள்ளது. அழகர் கலம்பகம், இத்தலத்தை முருக வேளின் தலமாகவும் குறிப்பிடுவது கூர்ந்து கவனிக்கத் தக்கது. (1988) 'பெறுதற்கு அரிய பரிசு'- பி. ஸ்ரீ.

'சிலப்பதிகாரத்தில் இந்தக் குன்றத்திலே **"புண்ணியசரவணம்"** என்ற பொய்கை இருந்ததாகவும் ஒரு செய்தி வருகிறது முருகன் எழுந்தருளியுள்ள தலங்களிளெல்லாம் "சரவணப்பொய்கை" இருக்கும், அந்த வகையில் முருகன் திருக்கோயிலும் (திருமாலிருஞ்சோலையில்) இருந்திருக்க வேண்டும் என்று தெளியலாம்...' (1969) ஆனந்த விகடன், தீபாவளி மலர் - "ஆறுபடை வீடுகள்'

சிலப்பதிகாரத்திலே அழகர் கோயில் பக்கத்தில் புண்ணிய சரவணம்... என்று கூறப்பட்டுள்ளது, "சரவணம்" என்பது முருகனது தீர்த்தத்தின் பெயர் என்பதில் ஐயமில்லை. இத்தலம் இன்று முருகன் தலமாக இல்லை. கள்ளழகர் கோயிலாக விளங்குகிறது."

(1959) திருவாவடுதுறை ஆதீன வெளியீடு 'முருகன்' - ச. தண்டபாணி தேசிகர்

"சிலர், முருகனை "பரிவாரதேவதை" என்று கூறிப் பாவமூட்டையைச் சுமக்கின்றனர். சிவமூர்த்தியும், குகநாதனும் ஒன்றே. திருவாலி அமுதனார், புருஷோத்தம நம்பி போன்ற வைணவ, சமயப் பெரியோர்கள், சைவ இலக்கியமான பன்னிரு திருமுறைகளிலே பதிகங்கள் பாடியுள்ளனர்... வைணவரான பகழிக் கூத்தர், முருகனருள் பெற்றுப் "பிள்ளைத்தமிழ்" பாடினார்."

(1978) "முருகன்" - திருமுருக கிருபானந்த வாரியார்

"புத்தமித்திரர் எனும் பௌத்தப் புலவரும், நாற்கவி ராசநம்பி எனும் ஜைனக் கவியும், **பெஸ்கி** எனும் கிறிஸ்தவ அறிஞரும் எழுதியுள்ள தத்தம் இலக்கண நூல்களில், "குறிஞ்சிக்குத் தெய்வம் முருகனே" என்று உறுதிபடக் கூறுகின்றனர்."

(1974) 'முத்தமிழ் முருகன்' - பா. இறையரசன்

"அழகர்மலையை முருகப் பெருமானது படைவீட்டுத் தலங்களுள் ஒன்றான "பழமுதிர்சோலை" என்பர்; அனாதி காலமாக அழகர்மலையை திருமால் குன்ற மெனத் தமிழ் நூல்களும், சாசனங்களும் கண்டிருக்கின்றன."

(1971) 'தமிழ் வளர்த்த கோ யில்கள்' - M. ராதாகிருஷ்ண பிள்ளை

"பழமுதிர்சோலையென்பது நக்கீரர் பார்த்த இடமாக, நன்கு பழகிய இடமாக- இருக்க வேண்டும், அவரோ, மதுரையில் வாழ்ந்தவர்! பழமுதிர்சோலை, அழகர் கோயிலாகத்தான் இருக்க முடியுமன்றோ! சமய வேறுபாடு கொண்டு பாராமல், சமநோக்குடன் பார்த்தால், அம்மலை **பழமுதிரும் திருமால் முருகன் இருஞ்சோலைமலை"** தான். (1966) 'திருப்புகழ் மஞ்சரி'- "லிப்கோ" தொகுப்பு

"பழமுதிர்சோலை என்பது முருகப் பெருமானுடைய ஆறுபடைவீடுகளில் ஒன்றென்றும், அஃது, இக்காலத்தே திருமால் திருப்பதியாக விளங்கும், திருமாலிருஞ்சோலையேயாம்" என்றும் சிலர் கூறுவர்;..... அது பண்டு, முருகன் கோயிலாக இருந்ததற்குரிய சில சான்றுகளும் காட்டா நிற்பர்...

-1983-"தென்னாட்டுத் திருத்தலங்கள்" ந்நாராயணவேலுபிள்ளை.

"திருமாலிருஞ் சோலைமலை; இத்தலத்தைப் பழமுதிர் சோலை என்பர்; முருகன் கோயிலைத் திருமால் கோயிலாக மாற்றப் பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. இன்னோரன்ன ஆராய்ச்சிக்கு உரியவை! முடிவு காண்பது கடினம்." (1966) 'திருத்தலப் பயணம்'- "தமிழ்க்கடல்" ராய. சொ.

"அருகர் போற்றிய சோலைமலை, என்றுமே, முருகனுக்கு உரிய திருமலையாகும். பொதுவாக மலைகள் எல்லாம் முருகனுக்கு உரியனவேயாயினும், சிறப்பு வகையில் அப்பெருமான் சோலைமலையை ஒரு படைவீடாகக் கொண்டுள்ளார் என்று அறிந்தோர் கூறுவர்." (1948) 'தமிழ் இன்பம்' - ரா.பி. சேதுப்பிள்ளை B.A., B.L.

"நூபுர கங்கை, சிலம்பாறு இருந்த இடத்தில்தான் பழமுதிர்சோலை மலை கிழவோனாக, முருகன் அன்று கோயில் கொண்டிருந்தான்; அதுவே ஆறுபடை வீடுகளில் ஒன்றான பழமுதிர் சோலை என்று அறிகிறோம். "இல்லை; இது விவாதத்திற்கு உரிய விஷயம்" என்று வாதிடுவோரும் உண்டு."

(1962) 'வேங்கடம் முதல் குமரி வரை' - தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்

"அழகர்மலை-இதனைத் திருமாலிருஞ்சோலையென்பர். இது முதலில், குமரவேள் குன்றென்றும், பின் திருமாலுக்கிடமென்றும் கூறுவர்."

(1910) 'அபிதான சிந்தாமணி'- ஆ. சிங்கார வேலு முதலியார்

"சங்க காலத்திலும், அருணகிரியார் காலத்திலும் விளங்கிய கோயில் தற்போது இல்லை; இன்று காணப்படும் அண்மைக் காலக் கோயிலே, பழமுதிர் சோலையாகத் திகழ்கிறது.

(1989) 'அருணகிரிநாதர் அடிச்சுவட்டில்' - R.ராமசேஷன் வலயபேட்டை R.கிருஷ்ணன்

"நூபுர கங்கைக்குப் போகிற வழியிலே நக்கீரர் பாடிய பழமுதிர்சோலை முருகப் பெருமான் அருட்கோலத்தில் நிற்கிறார்; விபூதி மணக்கிறது சந்நிதியில்."

(1989) 'ஓம் சக்தி' - ஏப்ரல் இதழ் - மதுசூதனன்

மெய்யன்பர்களே! 'விபூதி'யும். 'திருமண்'ணும் யுக யுகாந்திரமாக, சம்பந்திப் பிணைப்பிலே இணைந்து, நம்நாட்டின் சனாதன தர்மத்தை வளர்ப்பவையாகும்.

சோலைமலை, பழமுதிர் சோலை வழக்குகளின் பிணக்கிலே, சுப்ரமண்ய மருகனையும், சுந்தரராஜ மாமனையும் திணிக்கப் பார்ப்பது, மிகப்பெரிய பாவமாகும். கடந்தகால சைவ, வைணவ விபரீத மோதல்களும், வேலியே பயிரை மேயும் விபத்துக்களும் பலப்பலவாகும்; சேவார்த்திகளுக்கு, இதோ ஒருசில "சாம்பிள்"கள்.

"நூபுர கங்கைக்குப் போகிற வழியிலே நக்கீரர் பாடிய பழமுதிர்சோலை முருகப் பெருமான் அருட்கோலத்தில் நிற்கிறார்; விபூதி மணக்கிறது சந்நிதியில்."

(1989) 'ஓம் சக்தி' - ஏப்ரல் இதழ் - மதுசூதனன்

மெய்யன்பர்களே! 'விபூதி'யும். 'திருமண்'ணும் யுக யுகாந்திரமாக, சம்பந்திப் பிணைப்பிலே இணைந்து, நம்நாட்டின் சனாதன தர்மத்தை வளர்ப்பவையாகும்.

சோலைமலை, பழமுதிர் சோலை வழக்குகளின் பிணக்கிலே, சுப்ரமண்ய மருகனையும், சுந்தரராஜ மாம்னையும் திணிக்கப் பார்ப்பது, மிகப்பெரிய பாவமாகும். கடந்தகால சைவ, வைணவ விபரீத மோதல்களும், வேலியே பயிரை மேயும் விபத்துக்களும் பலப்பலவாகும்; சேவார்த்திகளுக்கு, இதோ ஒருசில "சாம்பிள்"கள்.

"சிதம்பரம் சபாநாயகர் கோயிலுக்குள் திண்ணை அளவிலேயே நந்திவர்ம பல்லவன் (726-775) கோவிந்தராஜப் பெருமாளை பிரதிஷ்டை செய்தான்!"

வேங்கடபதிதேவமகாராயரின் பிரதிநிதியாகச் செஞ்சியிலிருந்து ஆட்சி புரிந்த **வையப்ப கிருஷ்ணப்ப கொண்டம நாயக்கன்** எனும் அதிகாரி, கி.பி. 1597-ல் நடராஜர் கோயில் முதல் பிரகாரத்திலேயே, கோவிந்த ராஜப் பெருமாளுக்கு தனிக் கோயிலை அமைக்கத் தொடங்கினான்; எதிர்த்துத் தோற்ற தில்லைவாழ் **அந்தணர்கள் இருபது பேர், கோபுரமீதேறி உயிர்விடுவாராயினர்!** துப்பாக்கிச் சூடு; இருவர் பலி! பெண் தற்கொலை!

"திலலைப் பெருங்கோயில் வரலாறு" - பேராசிரியர் க. வெள்ளைவாரணனார்

"18-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து 'Y', 'U' (தென்கலை-வடகலை) நாமத்தகராறு! 1854-ல் செங்கற்பட்டு கோர்ட் உத்தரவு! அப்பீல்! 1966-ல் "தென்கலை" வெற்றி; டெல்லி சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல்! 1980-ல் இருவித நாமத்தை, இருயானைகளுக்கு (காஞ்சிபுரம்) போடலாம் என சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு!"

செய்தி ஆதாரம்: தினமணி 21-5-1980

காஞ்சி வரதராஜப்பெருமாள் கோயிலிலே உள்ள ஸ்ரீராமாநுஜருக்கு, அடுத்த ஸ்தான ஸ்ரீமணவாள மாமுனிக்கு சடாரி மரியாதை செய்திட, சென்னை உயர்நீதி மன்றமே உத்திரவிட வேண்டிய கொடிய வட, தென்கலைப் பூசல்கள் இன்னமும் இருக்கலாமா? **- செய்தி ஆதாரம் 10-1-1996 - தினமணி)**

"தங்கமும் வெள்ளியும் கலந்த 780-கிராம் பிரம்ம வளையத்தை திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில், கைலாசபட்டரின் உதவியோடு, சுவாமிநாதபட்டர் திருடியதால், கைது செய்யப்பட்டனர்!" - 2721992 தினமணி

"தங்கத் தகட்டுக்குப்பதில் தகரத்தகடுகள்! வைரக் கிரீடத்துக்குப் பதில் பிளாஸ்டிக் கிரீடம்! குமரி மாவட்ட திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் கோயிலிலே (நூரி போத்தி, கேசவன் போத்தி அர்ச்சகர்களால்) 5-ஆண்டுகளாகப் படிப்படியாகத் திருடப்பட்ட தங்கநகை 5-கிலோ, 57-கிராம்." மாலைமுரசு, 1361992

"தமிழ்நாட்டில் கோயில் நிலங்கள் ஆக்ரமிக்கப்பட்டதால், 35,000 கோடி ரூபாய் வருமான இழப்பு ஏற்பட்டிருக்கிறது. - 15121989 'கல்கண்டு'

இனிப்பான "கல்கண்டு" தரும் இந்த கசப்பான செய்திகளைப்போல, இன்னும் ஏராளமான "கசப்பு"கள் ஹிந்து சமய உட்பிரிவுகளிலே உள்ளன! "பழ முதிர் திருமால் சோலைமலை"ப் பிணக்கு, வழக்குகள் இனியும் அவசியந்தானா?

கடந்த நாற்பதாண்டுக் காலமாகத் திரைப்படத் துணை டைரக்டராக பாரதத்திலும், வெளிநாடுகளிலும் பிரபல ஆலயங்களின் அவலங்களை அடியேன் -

(வேம்பத்தூர் கிருஷ்ணன்) நேரில் கண்டு மனம் வெதும்பி **'க்ஷேத்ராடானச் சித்ரவதை'** என்ற தொடர் (1978-1980) கட்டுரையே எழுதினேன்! சுடர்மணி மாலையில் வெளியான அடியேனது... **"இமயத்தில் வைகுந்தம்"** (1980) **ஜீயரின் பாராட்டைப் பெற்றது. "திருப்பதித் திருமலை"** (1985 தொகுப்பு, T.T.D. தேவஸ்தான **"ஸ்ப்தகிரி"** இதழிலேயே (அக்டோபர், 1986) மறுபதிப்பாகப் பிரசுரமானது. **(18-வைணவ சம்ரதாயங்களில் ஸ்ரீ முருகன் கோயிலை வழிபடுவதும் ஒன்று"** என்ற விபரம் உட்பட) "பெரியகோயில்" (திருவரங்கம்) வரலாறு (1987) எழுதியதால் ஸ்ரீரங்க மூலவர்முன், "V.I.P."தரிசனமே பெற்றேன்! தில்லைச் திருச்சித்திரகூடப் பெரு மாளின் தொன்மைக்காக, நடமாடும் நடராஜாக்களான, தீட்சிதர் பெருமக்களிடம் உரிமைப்போரே நடத்தி யுள்ளேன்! (1988)

சென்னை "T.V."யில், 13-வாரம் (10-7-90 to 9-10-90) ஒளிபரப்பான **"காவிரி யின் கதை"** தொடரின் கதை, வசனம், பாடல்களை எழுதிய அடியேன், அப்பரின் பாடலை, ஸ்ரீராமாநுஜரே பாடிக்காட்டுவதாக காரண காரியத்துடன் அமைத்திருந்தேன்! "வைஷ்ணவத்தின் பெருமையை வானளாவ உயர்த்திவிட்டீர் கள்" சைவ, வைணவ ஒருமைக்குச் சரியான சான்று என்று**,** திருமாலடியார் கூட்டமே அடியேனைப் பாராட்டியது!


பிறப்பால் நான் சைவனானாலும், பேச்சாலும் மூச்சாலும், வைணவப் பித்தன்! கடந்த 35-ஆண்டுகளாகத் தவறாமல் ஆண்டுதோறும் குடும்பத்துடன், திருப்பதித் "திருமலை" சென்று ஏழுமலையானை தரிசித்து வருபவன்!

திருப்பதித் திருமலையிலே குவியும் **கோடானு கோடியும்,** தனித் "திருமண்"ணால்தானா? மதுரை, சித்திரைத் திருவிழாவில் வைகை ஆற்றிலே வந்து இறங்கும், அழகரைச் சேவிக்கும் பலலட்சங்களிலே, பத்துக்கு எட்டு "விபூதி"தான் என்பதை வைணவப் பிடிவாதத் திலகங்கள் உணர்வதாகுக!

அருளறத்தின், ஆன்மிகத்தின், இயற்கைப் பொருள்வளத்தின் முன்னோடி களான நாம்... "பழமுதிர்சோலையா?, திருமாலிருஞ்சோலையா?" என்று திண்ணை வேதாந்திகளாய்க் கோர்ட் வராண்டாக்களிலேயே இன்னும் திரிந்து கொண்டிருக் கலாமா? **சிந்தியுங்கள்! ஹிந்துக்களே! ஒன்றுபட்டுச் செயல்படுங்கள்.**

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு--நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு"

- மகாகவி சுப்ரமண்ய பாரதி



கைலாய வைகுந்த காஞ்சி

கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என நான்கு (சதுர்) யுகங்களைக் கொண்ட பற்பல சதுர்யுக வரலாறுகளை விளக்கும் நமது வேத, இதிகாச, புராணங்கள் எல்லாம், ஞானம் கனிந்த முனீந்திரர்களின், ரிஷிகளின் உள்மன ஆழ்தியானத்தால் கணித்துத் தொகுக்கப் பெற்ற காலக் கணக்காகும்.

ஒவ்வொரு சதுர்யுக முடிவிலும் ஜலப்பிரளயம் ஏற்பட்டு "பூமிப் பந்து" மீண்டும் சிருஷ்டிக்கப் பெற்று, படைக்கும் **பிரம்மா,** காக்கும் **விஷ்ணு,** அழிக்கும் **ருத்திரர்களுக்கு** மீண்டும் பதவிப் பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

அண்ட சராசர அனைத்துக் கோளங்களையும் சிருஷ்டித்து, அவற்றைப் பரிபாலிப்பதற்கு மும்மூர்த்திகளுக்கும் பதவிப் பிரமாணம் செய்வித்து, அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கும் அனைத்தையும் கண்காணிக்கும் **"அதை"**த்தான **"ஒன்றே தெய்வம்" "ஒருவனே தேவன்"** என்றனர் நமது மூதாதையர்.

கடந்து போய்விட்ட சதுர் யுகத்தின் இறுதி யுகமான கலியுகத்திலே, பிரம்மனுக்கு மகனாகப் பிறந்த **தட்சண்,** தனது தபோ பலத்தால் ஈஸ்வரியையே **"தாட்சாயணி"** என்ற மகளாக அடைகிறான். மகேஸ்வரியே தனக்கு மகளாக வந்துவிட்டாள் என்ற ஆணவத்திலே, ஈஸ்வரனையே மதிக்காமல் முரண்பட்ட வேள்வி ஒன்றைச் செய்து சிவசக்தியின் தண்டனையால், மாள்கிறான்.

தாட்சாயணி, தனது தூல உடல் விடுத்து... மேருமலையிலே தவம் புரிந்த இமாவானின் மகள் **பார்வதியாக** அவதரித்து, பரமேஸ்வரனின் வருகையை எதிர் நோக்கித் தவம் புரிகிறாள்.

அதேமலையில் சிவனை நோக்கிக் கடும் தவம் செய்த **தாருகாசுரன்,** "அவரைவிட உயர்ந்த சக்தியால்தான் தனக்கு அழிவு ஏற்பட வேண்டும்" என்னும் வரத்தைச் சிவனிடமே கேட்டுப் பெறுகிறான்.

அசுரனுக்கு வரத்தைக் கொடுத்ததும், **மோனதட்சிணாமூர்த்தி**யாக கல்லால மரத்தடியில் தியானத்திலே மூழ்கி விடுகிறார் சிவபெருமான்.

தாருகாசுரனின் பேராசை வெறியாட்டம், ஈரேழ் உலகங்களையும் சீரழிக்கின்றது! அதிர்ந்துபோன தேவர்கள், **மன்மதனை** வேண்டித் தூண்டிவிட்டு, மலர்க்கணையால் சிவபெருமானின் தவத்தைக் கலைக்கச் செய்கின்றனர்.

திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளின் நெற்றிக்கண் திறக்கிறது. சீறிவந்த கோபாக்கினியால் நீறாகிய (சாம்பலாகிய) மன்மதன் அரூபனாகிறான்! தேவர்கள் வேண்டிக் கொண்டதும், மன்மதன் சாபவிமோசனம் பெறுகிறான். **பார்வதி பரமேஸ்வரன் திருக்கல்யாணம்** நடைபெறுகிறது! ஈசனின் ஐந்து முகத்தோடு அதோ முகமும் ஏக காலத்திலே இணையத் தோன்றிய, சண்முகனின் (முருகனின்) சக்திவேல், ஈரேழு உலகங்களையும் சீரழித்த தாருகாசுரனை வீழ்த்துகிறது.

அவதாரத் தேவைகள் முடிந்து யதாஸ்தானம் (கைலை) திரும்பிய அம்பிகை, ஒரு சமயம் விளையாட்டாக ஈசனின் விழிகளைத் தனது கரங்களால் மூடிவிடவே;; அனைத்துலகையும் அந்தகாரம் (இருள்) சூழ்கிறது.


பதவியில் உள்ளவர்கள் விளையாட்டாகக் கூடத் தவறு புரிந்துவிடக் கூடாது, என்பதை உணர்த்தும் வண்ணம், சர்வேஸ்வரியையே சாபம் கொடுத்து பூமிக்கு அனுப்பி விடுகிறார் பரமேஸ்வரன்.

தேவாதி தேவர்களும் சாபவிமோசனம்பெற, மாநுடர் வாழும் பூமிக்குத்தான் வரவேண்டியுள்ளது; ஓரிரு சான்றுகள்... மாண்டவ்ய முனிவரின் சாபத்தால், **யமன் விதுரனாகப் பிறந்தார்;** வசிஷ்டரின் சாபத்தால் அஷ்டதிக் தேவருள் **"ப்ரபாசன்" பீஷ்மரானது;** பிருகு முனிவரது சாபத்தால் **மகாவிஷ்ணு ராமனாக அவதரித்தார்,** துர்வாசரின் சாபத்தால் **தேவேந்திரன் நீசனாக** மாறினான்! இப்படியாக சாப விமோசன சௌபாக்கிய பூமி நமது பாரதம்!

பத்திரிநாதத்தில் மா தவம்புரிந்து வந்த காத்யாயனமுனிவரின் திருமகள் **காத்யாயனி** யாக பூமியில் அவதரித்த பார்வதிதேவி... தந்தையிடம் விடைபெற்று காசிக்குச் சென்று **அன்னபூரணி**யாகி, பசிப்பிணி தீர்த்து, அங்கிருந்து புறப்பட்டு "ஆம்ராரண்யம்" எனப்படும் **மாங்காடு** வந்து, பஞ்சாக்கினி நடுவிலே நின்றபடி **மாங்காடு காமாட்சி** யாக ஞானத்தவம் புரிகிறாள் மகேஸ்வரி.

தவம் கனிந்ததும், அன்புச் சிவம் வருகிறது; இருநாழிநெல் தந்து, "அறம் கொழிக்கும் "கச்சிப்பேடு" காஞ்சிக்குச் சென்று, முப்பத்திரெண்டு அறங்களையும் முறையாகப் புரிந்து, இப்புவியோர்க்குப் பூஜா மகத்துவத்தைப் புலப்படுத்துவாயாக" என்று வரம் தந்து மறைகிறது.

ஐப்பசி மாதப் பூரத்திருநாளிலே **பிலத்துவாரம்** வழியாகக் காஞ்சியை அடைந்த காமாட்சி, கம்பையாற்றங்கரையிலே, வேத வடிவான **ஒற்றை மாமரத்தடி யில்...** மணலால் ஆன சிவலிங்கத்தை ஸ்தாபித்து, முப்பத்தி இரண்டு அறங்களை யும் புரிந்தபடி, இறைவனை ஆராதித்து வருகின்றாள்.



சக்தியுடன் சிவம் இணைய வேண்டிய காலம் கனிந்தது; மாமரத்தடியிலே சிவபெருமான் தோன்றினார்; யோக நிஷ்டையிலே மூழ்கி விட்ட காமாட்சியின் தவம் கலைவதற்காக **"கொட்டிச் சேதம்"** எனும் நடனத்தை ஆடியும், ஈஸ்வரியின் தவம் கலையாததால்... தனது திருமுடிக் கங்கையைக் கம்பா நதியிலே வெள்ள மாகப் பெருகவிடுகிறார்.

திடீர் வெள்ளத்தால் சிவலிங்கம் தள்ளப்பட்டுவிடுமோ எனப் பயந்த காமாட்சி, இலிங்கத்தை ஆரத்தழுவுதல்; தழுவக்குழைந்த தயாபரன், ஏகமாமரத் தடியிலே பிரத்யட்சமாகி **ஏகாம்பரர்** ஆகிறார்.

மேருமலையிலே நடந்த பார்வதி கல்யாணத்தின்போது அகத்தியருக்குக் கொடுத்த வாக்கின்படி, பங்குனி உத்திரத் திரு நாளிலே ஏகாம்பரராகிய சர்வேஸ்வரன், காமாட்சியாகிய சர்வேஸ்வரியை **"ஏலவார் குழலி"** எனும் திருநாமத் தோடு மணந்து, **திருக்கல்யாண கோலத்தைக் காஞ்சியிலே அகத்திய ருக்குத் தந்தருளுகிறார்.**

ராஜராஜஸ்வரியான காமாட்சியம்மன், காம கோட்டத்திலே தனிக் கோயில் கொள்கிறாள். காஞ்சியில் உள்ள சிவாயலயங்களிலே அம்பாள் சன்னதிகள் தனியே கிடையாது. அனைத்திற்கும் ஏக சக்தியாக விளங்குபவள் காம கோட்டத்துக் **காமாட்சிதான்.** காமகோட்டத்தை அடுத்து அமைந்துள்ள குமரகோட்டத்து முருகன் கோயிலின் வரலாறு...

காஞ்சி குமரகோட்ட முருகன்



பிரணவப் பொருளை மறந்து விட்டுத் தடுமாறிய பிரம்மதேவனைச் சிறையிலிட்டு, படைப்புத் தொழிலை மேற்கொண்ட முருகப் பெருமானின் **"உரிமை மீறல்"** செய்கையின் பாவம் தீருவதற்காக, காஞ்சியில் "தேவசேனாபதீசர்" எனும் சிவலிங்கத்தை அமைத்து வழிபடவேண்டிய நிலை ஏற்படுகிறது முருகப்பெருமா னுக்கு; காஞ்சிக்கு வந்த தனது குமரனைத் தனக்கு அருகிலேயே **குமர கோட்டத்தில்** இருத்திக் கொள்கிறாள் அன்னை காமாட்சி; இந்தக் குமரகோட்டத் தில் அர்ச்சகராக இருந்த **கச்சியப்பசிவாச்சார்யர்** தான் கந்தபுராணத்தைப் பாடியவர். கந்தபுராண அரங்கேற்றத்திலே முருகப்பெருமானே பங்கேற்றுப் பூர்த்தி செய்த வரலாறு காஞ்சிக் குமரகோட்டத்தின் தனிச் சிறப்பாகும்.

திருஏகம்பம், காமகோட்டம், குமரகோட்டம் முதலான "சிவகாஞ்சி"யின் வரலாறு இப்படி; "அத்திகிரி" எனப்படுகின்ற சத்தியவிரத க்ஷேத்திரமாகிய **"விஷ்ணு காஞ்சி"**யின் புராண வரலாற்றுச் சுருக்கமாவது....

பூலோக ஜீவர்களின் சிருஷ்டிகர்த்தாவாகிய பிரம்ம தேவனுக்கு, ஒரு சமயம் ஞாபகமறதி ஏற்படுகிறது; படைப்புகள் ஊனமடைகின்றன! தவறுக்குப் பிராயச்சித்த மாக ஆயிரம் அசுவமேத யாகங்களைப் புரிந்தாக வேண்டிய நிலையிலே தவித்த நான்முகனின் வேதனையைக் கண்ட மகாவிஷ்ணு, "ஒன்றுக்கு ஆயிரமாகப் பலன்

தருகிற "அத்திகிரி"யாகிய காஞ்சிக்குப் போய், ஒரே ஒரு மஹாயாகம் செய்தால் புனிதமடைவாய்" என்று கூறுகிறார்.

"படைப்புக் கடவுளே தவறு புரிவதா?" எனப்பிணங்கிய **சரஸ்வதி தேவி,** கணவரான பிரம்மனின் யாகத்தைப் புறக்கணித்துவிடுகிறாள்; இதர துணைவிய ரான "**சாவித்ரி, காயத்ரி** யரோடு யாகத்தைப் பூர்த்தி செய்ய நினைக்கிறார் பிரம்மதேவன்! "நானில்லாமல் மஹா யாகாமா?" எனச் சினந்த கலைவாணி, **வேகவதி** நதியாகமாறி... யாகசாலையையே மூழ்கடிக்கப் பாய்ந்து வருகிறாள்! தந்தையான விஷ்ணுவைச் சரணடைகிறார் பிரம்மா! பாய்ந்து வரும் வெள்ளத்தின் முன் "**ஸ்ரீரங்க சயனத்**"தை மேற்கொண்டு... யாக பூமியைக் காத்து, சதி, பதி இருவரது ஊடலையும் தீர்த்து வைக்கிறார் ஸ்ரீமந் நாராயணன்.

மகாயாகம், பூர்த்தியானதும் பிரம்மதேவன் புனிதம் பெறுகிறார்; "**புண்ணியகோடி**" விமானத்திலே ஸ்ரீமந் நாராயணரும் மகாலட்சுமியும், **வரதராஜப் பெருமாள், பெருந்தேவித்தாயாராக** பிரம்மனுக்குப் பிரத்தியட்சமாகிறார்கள். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று பிரம்மாவின் வேண்டுகோளுக்கு இணங்க... அத்திகிரியான விஷ்ணு காஞ்சியிலே, ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோயில் கொள்கிறார்.

சைவ, வைணவங்களின் இணைப்புக் கடவுளாகிய "தும்பிக்கையான்" மகாவிஷ்ணுவின் சக்கரத்தோடு நடத்திய திருவிளையாடலால்... '**விகடசக்கரவி நாயகராக**' - காஞ்சிப்பதியின் தலவிநாயகராக எழுந்திருளியிருக்கிறார்.

பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், அம்பாள்ஆகிய நான்கு மூர்த்திகளின் பேரருள் நிறைந்த திருநகர் காஞ்சி; முக்தி தரும் நகரேழில் முதலாவதாகப் போற்றப்படுவது இந்தக் கச்சிப்பதியாகிய காஞ்சிமாநகரமே.

"சிவபுரம், விஷ்ணுபுரம், பிரம்மபுரம், மும்மூர்த்திவாச ஆதிபீடம், காமபீடம், கன்னிக்காப்பு, தண்டகபுரம், தபோமயம், துண்டீரபுரம், புவனசாரம், கலிசித்து, இலயசித்து, சகலசித்திபுரம்" முதலான... பற்பல திருப்பெயர்களைக் கொண்டது காஞ்சி க்ஷேத்ரம்.

கம்பாநதி, வேகவதி. பம்பை..., புண்ணிய, மஞ்சள், பாலி, சேய்நதி இப்படியாக ஆதிநாளிலே ஏழு நதிகளின் சங்கமக் கேந்திரமாக விளங்கியது இந்த மங்கலக் காஞ்சி.

காஞ்சியிலே கடவுளர் கோயில் கொண்ட காலமும், தாருகாவனரிஷிகளின் தானென்னும் ஆணவ கர்வம் தீர்ந்து, பிட்சாடனர், மோஹினியராக வந்த சங்கரநாராயணர்களைப் பணிந்த காலமும் ஏகமானதால், பிருகு முனிவர் முதலான நாற்பத்தொண்ணாயிர ரிஷிகளும், அவர்தம் பத்தினியரும் வனத்தை விடுத்து, காஞ்சிப்பதியின் பிரஜை களாகிறார்கள்! எனவே காஞ்சியில் பிறந்த அனைவருமே ரிஷிபரம்பரை எனப் பெருமிதம் கொள்ளலாம்.

உலகிலே மொத்தம் மூன்றரைக் கோடி தீர்த்தங்களென்பர்; அவை அனைத்திலும் நீராடிய புண்ணியம், கங்கா நதியில் மூழ்கி எழுந்தால் கிடைத்துவிடுகிறதாம்; அந்த கங்கையே கம்பா நதியாகக் காஞ்சியில் பெருகியதால், இங்குள்ள **"சர்வதீர்த்த"**த்தின் மஹிமை சொல்லிமுடியாததாகிறது.

சர்வ தீர்த்தக் குளத்திலே நீராடித் தொழுது, பாவங்களைத் தீர்த்துக் கொண்ட சில இதிகாச, வரலாற்று நாயகர்கள்...

தந்தையான இரண்யனின் மறைவுக்குக் காரணமான **பிரகலாதன்,** தமையனான இராவணனுக்குச் செஞ்சோற்றுக் கடன் தீர்க்காத **விபீஷணன்,** க்ஷத்திரிய மா மன்னர்களின் ரத்தக் குளத்திலே, பித்ருக்களுக்கு நீர்க்கடன் தீர்த்த **பரசுராமன்;** குலகுருமார் சகோதரர்கள், பிதாமகர்களையெல்லாம் காண்டீபத்தால் அழித்த **அர்ஜுனன்,** பாண்டவர் குலமே பூண்டற்றுப் போவதற்காக படு கொலையைப் புரிந்த **அஸ்வத்தாமன்** முதலான அனைவருமே காஞ்சிப்பதிக்கு வந்து, தீர்த்தமாடித் தத்தம் பாவங்களைப் போக்கிக் கொண்டதாக வரலாறு.

தீர்த்தம், தலம், மூர்த்திகளின்... சான்னித்திய மிகுந்த க்ஷேத்திரமான, காஞ்சியின் பெருமைகளையும், அங்கு கோயில் கொண்டுள்ள கடவுளர் தம் மஹிமைகளையும் கூறும் வேத, இதிகாச, புராண, வரலாற்று நூல்களும், துதிப் பாசுரத் தொகுப்புகளும் பலநூறாகும்...! அவற்றுள் பிரதானமான ஒருசிலவற்றைக் இங்கே காணலாமா...

யஜுர் வேதம், சாந்தோய உபநிஷத், சிவபுராணம், ஸ்கந்தபுராணம், "அத்தி கிரிமஹாத்மியம்" கூறும் பிரம்ம புராணம், "காமாட்சி விலாசம்" காட்டும் மார்க்கண்டேய புராணம், பாகவத புராணம்... முதலானவற்றுள் காஞ்சி க்ஷேத்திர வரலாற்றுக் குறிப்புகள் ஏராளம்.

கச்சிக் கச்சோலை தேசிகரின் "காஞ்சிப் புராணம்", "காமாட்சி கல்யாணம்" எனும் "கலித்துறைக் காஞ்சிப் புராணம்", **சிவஞான சுவாமிகள், கச்சியப்ப முனிவர்** ஆகிய இருவரது "காஞ்சிப் புராணம்", "காமகோட்டத்தலபுராணம்", **கச்சியப்ப சிவாச்சார்யரின்** "கந்தபுராணம்", **வேதாந்த தேசிகரின்** "அத்திகிரிமஹாத்மியம்" முதலானவை காஞ்சிக்கான தனி இலக்கியங்களாகும்.

இரண்டாயிரம் வருடங்களுக்கு முந்தைய பதஞ்சலி முனிவரின் **"மா பாடியம்"** சங்கப்புலவரான உருத்திரங் கண்ணனாரின் **"பெரும்பாணாற்றுப் படை;** வட மொழியின் மகாகவியான தண்டியின் **"தண்டியலங்காரம்",** மகாகவி காளிதாஸரின் இலக்கியம், ஜெயங்கொண்டாரின் **கலிங்கத்துப்பரணி** மற்றும் **தக்கயாகப்பரணி,** மகேந்திரவர்மபல்லவ மன்னனின் மத்த விலாசப் பிரகசனம், தீக் நாகரின் சமண (ஜைன சமய) இலக்கியங்கள், சீத்தலைச் சாத்தனாரின் **மணிமேலை,** நாகுதத்தனாரின் **குண்டலகேசி,** ஹர்ஷ மகாகவியின் **நைஷ சரிதம்,** சேக்கிழாரின் **பெரியபுராணம்** முதலானவற்றுள், காஞ்சிப்பதியின் பெருமைகளை ஏராளமாகக் காணலாம்.

புனிதமிகு காஞ்சிப்பதியைப் போற்றி வணங்கி வழிபட்டோர் பட்டியலிலே...

அகத்தியர், வியாசர், உபமன்யு, ததீச முனிவர், பராசர... கொங்கண... மார்க்கண்டேயர், ஔவையார், காஞ்சிக் கொன்றனார், இளந்தச்சனார், பெருந்தச்சனார் மற்றும் ஐயடிகள் காடவர்கோன், கழற்சிங்கர், திருக்குறள் உரையாசிரியரான பரிமேலழகர், அத்வைத ஆதிசங்கரர், வித்யாரண்யர், மூகசங்கரர், ஸ்ரீராமானுஜர், சாக்கியநாயனார், அருணகிரிநாதர், நந்திக்கலம்பக ஆசிரியர்களோடு, தேவார திருவாசக **அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர்கள்**, திவ்யப்பிரப்பந்த **பெரியாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், பொய்கையாழ்வார்** ஆகியோரின் பாசுரப்பிரபந்த பக்தி வழிப்பாடுகள்.


மணவாள மாமுனிகள், அப்பைய தீட்சிதர், தியாகராஜர், சியாமா சாஸ்திரிகள், முத்துசாமி தீட்சிதர், ஸ்வாமிதேசிகன், பாம்பன் சுவாமிகள், ராமலிங்க சுவாமிகள், அந்தகக் கவி வீரராகவ முதலியார், புலிவேலுச்சாமிபிள்ளை, சயங்கொண்ட முதலியார்... ஆகியோர் காஞ்சிக் கடவுளரைப் பாடியுள்ளார்கள்.

ஆளவந்தாரின் **ஸ்தோத்திரத்தினம்,** திருக்கச்சி நம்பிகளின் **தேவ ராஜாஷ்டகம்,** கூரத்தாழ்வானின் **வரதாராஜ ஸ்தவம்,** பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் **நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி,** வேங்கடாசாரியரின் **வரதாப்யுதயம்,** வீரராகவ முதலியாரின் **பெருந்தேவித் தாயார்** பதிகங்களோடு, நாகலிங்க முனிவரின் **வண்ணக் களஞ்சியம்,** சிவஞான சுவாமிகளின் **சிவஞான போதம்,** பட்டினத்தாரின் **திருவேகம்பமுடையார் திருவந்தாதி,** இரட்டைப் புலவர்களின் **ஏகாம்பர நாதருலா,** பூண்டி அரங்கநாத முதலியாரின் **கச்சிக்கலம்பகம்,** கோட்டையப்பப் புலவரின் "**கச்சி ஏகம்பன் கைச்சிலம்பப் பாட்டு**" மற்றும் டாக்டர் உ.வே.சுவாமிநாதய்யர் நூல்நிலைய '**அத்திகிரி அந்தாதி...**' போன்ற பற்பல பக்தி இலக்கியங்கள்... பாசுரத் தொகுப்புகள் சர்வமத, சமரச, சன்மார்க்கக் காஞ்சியின் பெருமைகளைப் பாடுவதாகும்.

பக்திக்கு மட்டுமல்லாமல், உயர் படிப்புக்கும் கல்விக் கடலாக விளங்கியது காஞ்சி மாநகரம்; அந்நாளிலே உலகப் புகழ் பெற்று விளங்கிய வடபுலத்து நாளந்தா பல்கலைக் கழகத்திற்குப் பேராசிரியர்களைப் பயிற்றுவித்து அனுப்பிய **கச்சிக் கடிகை** (கடிகாஸ்தானம்)யான காஞ்சிபுரம், ஓர் ஞானானந்த கலைக்கேந்திர விதைப்பண்ணையாக விளங்கியது.

காஞ்சியைச் சார்ந்த திண்ணாகரரும், தருமபாலரும் நாளந்தா பல்கலைக் கழகத்தின் போதகர்கள்; அர்த்தசாஸ்திர கௌடில்யர், (சாணக்கியர்) காஞ்சியில் பிறந்தவர், "காஞ்சிக்கடிகை"யால், தழைத்த கலை, இலக்கியம், பண்பாடுகள் உலகெங்கும் பரவிச் செழித்ததை, ஏழாம் நூற்றாண்டிலே இங்கு வந்த சீனயாத்ரீகர்களான **'யுவான்-சுவாங்', பாஹியான்,** முதலான பெருமக்கள் சிறப்பாக எழுதி வைத்துள்ளனர்.

கி.பி. நான்காம் நூற்றாண்டிலே கதம்பநாட்டு மன்னன், **"மயூரசன்மன்"** முதலான பல வடநாட்டு மன்னர்கள், காஞ்சியில் கல்வி பயின்று திரும்பியுள்ளார்கள்; அந்தப் பெருமைகளிலே பௌத்த, சமண சமயங்களுக்கும் சமபங்குண்டு!



வரலாற்றுக் காஞ்சி

அசோகச்சக்ரவர்த்தியால் உலகின் பல நாடுகளில் பரவிய பௌத்த மதத்தின் கர்த்தாவாகிய கௌதமபுத்தர் (கி.மு. 563+483) காஞ்சிக்குவந்து, அறம் உரைத்ததாகக் கூறப்படுகிறது! அப்போது காஞ்சியில் 100 பௌத்தப் பள்ளிகளும், சைவ, வைணவ, சமண ஆலயங்கள் மொத்தமாக 80 அளவிலே இருந்ததாகவும் சீன யாத்ரீகர்களின் குறிப்புகள் அறிவிக்கின்றன.

மௌரியப் பேராசன் **சந்திரகுப்தனின்** பேராதரவில் தழைத்த **சணம சமயம், (வர்த்தமான மகாவீரர் 539+476)** பௌத்த மதத்தைப் பின்தொடர்ந்து, காஞ்சியுள் நுழைந்தது என்பதை அறியமுடிகிறது. மேற்படி இரண்டு மதங்களுமே காஞ்சியில் எதிர்ப்பின்றித் தழைத்தன!சுமார் நாலாயிர ஆண்டுகளுக்கு முன், ஆடு மேய்க்கும் குறும்பர்கள் நிறைந்த காஞ்சிப் பகுதி **"அருவா நாடு"** என அழைக்கப்பட்டது; **ஆதொண்டைமன்னன்** என்பவர் அப்பகுதியைக் கைப்பற்றி, **"தொண்டை நாடு"** எனப் பெயர் சூட்டி ஆண்டுவந்தார்.

கி.மு. கடைசி நூற்றாண்டு முதல், கி.பி முதல் நூற்றாண்டு வரை, சோழர்கள் தொண்டை நாட்டை ஆண்டனர்; வரலாற்றுப்புகழ் கரிகாற்சோழனின் திருப்பணிகள் அப்போதுதான் ஏகாம்பரேஸ்வரர் ஆலயத்திற்குக் கிடைத்தது. கோட்டையும், அகழியும், நூறு அடி அகல ராஜ வீதிகளும் காஞ்சியில் கரிகாலச் சோழச் சக்கரவர்த்தி அமைத்தவை.

கி.பி. முதல் நூற்றாண்டிலே, சிலப்பதிகார **மாதவியின்** மகளான **மணிமேகலை** காஞ்சிக்கு வந்து, சோழர் (கிள்ளிவளவன்) கட்டிய பௌத்த விஹாரத்தில் அரவணஅடிகளின் துணையோடு, மக்களின் பசிப்பிணி தீர்த்த கல்வெட்டு ஆதாரங்களும் இங்கே உண்டு.

கி.பி.2, 3-ம் நூற்றாண்டின் முற்பகுதிவரை, காஞ்சியைக் கைப்பற்றி ஆண்ட கன்னடக் களப்பிரர்கள்; பௌத்த சமண மதங்களைப் போற்றி வளர்த்தனர்.

3-ம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல், கல்லையெல்லாம் கவி பாடவைத்த பல்லவ மன்னர்களின் தலைநகராக விளங்கியது காஞ்சி; ஆரம்பகாலப் பல்லவர்கள் சமணர்களாக இருந்து, அப்பர் (திருநாவுக்கரசர்) பெருமானால் சைவர்கள் ஆனதாக வரலாறு கூறுகிறது.

4,5,6-ஆகிய நூற்றாண்டுகளிலே, காஞ்சியில் பௌத்த, சமண சமயங்கள் இரண்டுமே "ஓஹோ"வெனக் கொடிகட்டிப் பறந்தன!

கி.பி 7-ம் நூற்றாண்டு முதல் தோன்றிய, ஆழ்வார், நாயன்மார்களின் அருளற பக்திப் பிரவாகத்திலே - சமண, பௌத்த மதங்கள் சரியத் தொடங்கின! பல்லவர் ஆட்சி 9-ம் நூற்றாண்டுடன் முடிவு பெற்றது.

10-முதல் 12-ம் நூற்றாண்டின் முற்பகுதிவரை, சோழர்கள் மீண்டும் காஞ்சியைக் கைப்பற்றி ஆண்டனர்; 12-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாண்டிய மன்னரால் ஆளப்பட்டது காஞ்சி மண்டலம். 13 முதல் 17-ம் நூற்றாண்டு வரை,

விஜய நகர மன்னர்களால் ஆளப்பட்டுள்ளது. விஜய நகர மன்னர்களால் ஹிந்து சமயம் புத்துயிர் பெற்றதும், காஞ்சிக் கோயில்கள், சிற்ப அற்புதக் கலைவண்ணம் கண்ட தும் புகழ்மிக்க சிறப்பு வரலாறு ஆகும்.

18-ம் நூற்றாண்டிலே... தொண்டை மண்டலத்திலே, கண்ட கண்ட பிற மதஸ்தர்களின் நிலையற்ற கலப்பட நிர்வாகங்கள்! 19-ம் நூற்றாண்டிலே, வெள்ளை யரின் முழு உரிமையானது காஞ்சி. 20-ம் நூற்றாண்டிலே காந்தீய இந்திய விடுதலைப் போராட்டத்தால் 1947-ம் ஆண்டு ஆகஸ்ட் 15-ல் நாம் சுதந்திரம் பெற்றோம்! தேசத்தைக் குடியரசாக்கினோம்!!

"அன்பே தெய்வம்" என்று புத்தர் வளர்த்த பௌத்த சமயம், பிற்காலத்திலே ஏற்பட்ட **"கடவுளே இல்லை"** என்ற வரட்டு நாத்திக வாதத்தாலும், போதனையில் அஹிம்சையையும், புசிப்பதில் மாமிசத்தையும் ஏற்று... முன்னுக்குப்பின் முரண் ஆன தாலும், தமிழகத்திலே படிப்படியாக வீழ்ச்சியுற்றது!

அருகதேவனை மட்டுமே கடவுளாகவும், அன்பான ஜீவகாருண்யத்தையே ஆதாரமாகவும் கொண்டு, மகாவீரர் வளர்த்த சமணம், பிற்காலத்தில் தலைமை ஏற்றவர்களின் அலட்சியப் போக்காலும், பிறசமய தூஷணைகளாலும், வேண்டாத விதண்டா வாத வெட்டிப் பட்டிமன்றங்களாலுமே மக்களிடம் வெறுப்பைச் சம்பாதித்துச் சிதைந்து குறையத் தொடங்கியது எனக் கூறலாம்.

கி.பி. 14-ம் நூற்றாண்டு வரை, காஞ்சியில் பௌத்தப் பள்ளிகள் இருந்ததற்கான ஆதாரம் உண்டு; காமாட்சி அம்மன் ஆலயத்துள் இருந்த எழு அடி உயர புத்தர்சிலை, சில ஸ்தூபிகள், **"புத்தேரித்தெரு"**, **"அரவணத்சேரித்தெரு"** என இப்போது மருவிவழங்கும் ஓரிருதெருக்களுமே காஞ்சியில்... பௌத்தம் இருந்ததற் கான இன்றைய அடையாளங்களாகும்.

சமணமதம், காஞ்சியில் இன்றும் ஓரளவு ஜீவகளையோடு விளங்குகின்றது; காஞ்சியை அடுத்த நான்கு கி.மீ தூர, **திருப்பருத்திக்குன்றத்திலே** அருகதேவன் **(திரை லோக்ய நாதர்)** ஆலயம், இன்றும் ஆராதனையில் இருந்து வருகிறது.

அந்த நாளிலே பௌத்த, சமண, சைவ, வைணவ சமயங்களின் மிகப்பெரும் ஆலயங்கள், மொத்தம் ஆயிரம் இருந்ததாம் காஞ்சியில்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே, ஆராதனையுடன் கூடிய சைவக் கோயில்கள் **108**-ம், வைணவ ஆலயங்கள் 80-ம் இருப்பதாக ஓர் கணக்கு.

இன்றைய நிலையில் வழிபாடு நடைபெறும் நமது மொத்த ஆலயங்கள், தொண்ணூறு தான் என்கிறது ஓர் காஞ்சிப் பிரசுரப் புள்ளி விபரம்; கணக்கு எப்படி இருந்தாலும் பழைய, புதிய, சிறிய, பெரிய கோயில்கள் காஞ்சியில் ஏராளமாக இருப்பதென்னவோ முழு உண்மை; "காஞ்சியில் எழுபத்து ஒன்று" என்ற மலரிலே குறிப்பிட்டுள்ள காஞ்சியின் சைவ, வைணவத்தோடு ஏனைய (இப்போதைய) வழிபாட்டு 71 கோயில்களின் பட்டியல் அப்படியே இங்கே தரப்படுகிறது.

1. ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஸன்னதி	2. ஸ்ரீ உலகளந்த பெருமாள் ஸன்னதி
3. ஸ்ரீ சதுர்ப்புஜ ஆஞ்சநேயர்	4. ஸ்ரீ சங்குபாணி விநாயகர் ஸன்னதி
5. ஸ்ரீ அபிராமேச்வரர் ஸன்னதி	6. ஸ்ரீ ஐராவதேச்வரர் ஸன்னதி
7. ஸ்ரீ கச்சேபேச்வரர் ஸன்னதி	8. ஸ்ரீ அமரேச்வரர் ஸன்னதி
9. ஸ்ரீ குமர கோட்டம் (முருகன்)	10. ஸ்ரீ காளிகாம்பாள் ஸன்னதி
11. ஸ்ரீ ஏகாம்பரேச்வரர் ஸன்னதி	12. திருக்கச்சி மயானம்
13. ஸ்ரீ ராமேச்வரர் ஸன்னதி	14. ஸ்ரீ சீதேஸ்வரர் ஸ்ன்னதி
15. ஸ்ரீ லக்ஷ்மணேச்வரர் ஸன்னதி	16. ஸ்ரீ மல்லிகார்ஜுனன் ஸன்னதி
17. ஸ்ரீ தீர்த்தேஸ்வர் ஸன்னதி	18. ஸ்ரீ மன்மதேஸ்வரர் ஸன்னதி
19. ஸ்ரீ ஹிரண்யேஸ்வரர் ஸன்னதி	20. ஸ்ரீ காசி விஸ்வநாதர் ஸன்னதி
21. ஸ்ரீ தவளேஸ்வரர் ஸன்னதி	22. ஸ்ரீ கங்காதரேஸ்வரர் ஸன்னதி
23. ஸ்ரீ ஒண காங்தேஸ்வரர் ஸன்னதி	24. ஸ்ரீ சோளேச்வரர் ஸன்னதி
25. ஸ்ரீ திரு மேற்றளி	26. ஸ்ரீ ஈயகோஷ்டேஸ்வரர் ஸன்னதி
27. ஸ்ரீ திருக்கச்சி அநேகதங்காவதம்	28. ஸ்ரீ கைலாஸநாதர் ஸன்னதி
29. ஸ்ரீ அகஸ்த்யேச்வரர் ஸன்னதி	30. ஸ்ரீ காயாரோஹணேச்வரர் ஸன்னதி
31. ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஸன்னதி	32. ஸ்ரீ ஜ்வரஸரேஸ்வரர் ஸன்னதி
33. ஸ்ரீ பாண்டவ தூதர் ஸன்னதி	34. ஸ்ரீ செவிலிமேடு சிவன் ஸன்னதி
35. ஸ்ரீ செவிலிமேடு விஷ்ணு ஸன்னதி	36. ஸ்ரீ ஆலடிப் பிள்ளையார்
37. ஸ்ரீ மாண்டகர்ணீஸ்வர் ஸன்னதி	38. ஸ்ரீ பணாதரேஸ்வரர் ஸன்னதி
39. ஸ்ரீ விருபாக்ஷேஸ்வரர் ஸன்னதி	40. ஸ்ரீ பாகீஸ்வரர் ஸன்னதி
41. ஸ்ரீ நரஸிம்மஸ்வாமி ஸன்னதி	42. ஸ்ரீ அஷ்டபுஜர் ஸன்னதி
43. ஸ்ரீ யதோத்காரிப்பெருமாள் ஸன்னதி	44. ஸ்ரீ திருக்காஞ்சீஸ்வரர் ஸன்னதி
45. ஸ்ரீ வியாஸசாந்தலேச்வரர் ஸன்னதி	46. ஸ்ரீ முக்தீஸ்வரர் ஸன்னதி
47. ஸ்ரீ தீபப்பிரகாசர் ஸன்னதி	48. ஸ்ரீ புண்ணிய கோடீஸ்வரர் ஸன்னதி
49. ஸ்ரீ வரதராஜ ஸ்வாமி ஸன்னதி	50. ஸ்ரீ சிவாஸ்தானம்
51. ஸ்ரீ திருக்காளீஸ்வரர் ஸன்னதி	52. ஸ்ரீ சித்திரகுப்தர் ஸன்னதி
53. ஸ்ரீ மதங்கேஸ்வர் ஸன்னதி	54. ஸ்ரீ மணிகண்டேஸ்வரர் ஸன்னதி
55. ஸ்ரீ நகரீஸ்வரர் ஸன்னதி	56. ஸ்ரீ த்ரிகாலஞ்னேஸ்வரர் ஸன்னதி
57. ஸ்ரீ வன்ஹிஸ்வரர் ஸன்னதி	58. ஸ்ரீ கங்கனேசுவரர் ஸன்னதி
59. ஸ்ரீ கடகேஸ்வரர் ஸன்னதி	60. ஸ்ரீ திருவட்டானேஸ்வரர் ஸன்னதி
61. ஸ்ரீ பிறவாதேஸ்வரர் ஸன்னதி	62. ஸ்ரீ இறவாதேஸ்வரர் ஸன்னதி

63. ஸ்ரீ ருத்திர கோடீஸ்வரர் ஸன்னதி
64. ஸ்ரீ வைகுண்டப் பெருமாள் ஸன்னதி
65. ஸ்ரீ மத்ஸ்யேஸ்வரர் ஸன்னதி
66. ஸ்ரீ 'ஆஞ்சனேயர் ' சின்ன காஞ்சி
67. ஸ்ரீ வளத்தீஸ்வரர் ஸன்னதி
68. ஸ்ரீ ஸித்தீஸ்வரர் ஸன்னதி
69. ஸ்ரீ முக்தீஸ்வரர் ஸன்னதி
70. ஸ்ரீ பச்சைவண்ண ஸன்னதி
71. ஸ்ரீ பவளவண்ணப்பெருமாள் ஸன்னதி

காஞ்சிபுரத்திலே உள்ள எல்லா ஆலயங்களையும் முறையாக வலம்வந்து, சரியாக தரிசனம் செய்வதென்றால் குறைந்தது ஒரு மாதகாலமாவது ஆகும்!

"காஞ்சி " என்றதும் அன்னை காமாட்சிதான் முன்னுரிமை பெறுகிறாள்! சைவ, வைணவ, சாக்த, கௌமார, காணாபத்ய, சௌரம் முதலான சண்மதங் களின் சமஷ்டி தெய்வமாக விளங்கி... சௌபாக்கியங்களை நல்கும் வைபோக அன்னை யாகிய ஸ்ரீகாமாட்சியம்மன் ஆலயத்தைக் காண்போமா!

ஆதிபராசக்தியின் பீடங்கள்.... 1400, 108, 64, 56, 39, 18, 3 எனச் சான்றோர் கள் வகுத்துள்ளனர்; பிரதான மூன்று பீடங்களிலே **காமராஜ - காமகோடி** பீடமான காஞ்சி **ஸ்ரீகாமாட்சி சன்னதி** உலகெங்கும் போற்றப்படுவதாகும். **"காமம் " என்பது போகம்; வைபோகம்;** வாழ்வுக்கான சகல சௌபாக்கியங் களையும் தருபவள், இந்த காமகோட்டத்துக் காமாட்சியம்மன்.

"கா" சரஸ்வதி "மா" லட்சுமி; "அட்சி" கண்; சரஸ்வதியையும், லெட்சுமி யையும் இரு விழிகளாகக் கொண்டவள் காமாட்சி; எனவே கல்வி, செல்வம், வீரம் ஆகிய மூன்றையும் ஒருசேர வழங்கும் பராசக்தியாக விளங்குபவள் ஸ்ரீகாமாட்சி.

காமாட்சியம்மன் கோயிலின் ராஜகோபுரத்தைக் கடந்து உள்ளே நுழைந்த தும் கொடிமர பலிபீட தரிசனம் முடித்து, வெளிப்பிராகாரத்தில், (சுவரில்) உள்ள ஜன்னல் வழியே காமாட்சியம்மனை முயன்று தரிசிக்கலாம்; விநாயகப் பெருமானை வணங்கியபடி, கோபுர வாயிலைக் கடந்து **சுக்ரவாரமண்டப** வழியாக உள்ளேசெல் கிறோம். ஜெயஸ்தம்ப தரிசனம்; விக்னநிவாரண மகாகணபதியை வணங்கியபடி... **மூலஸ்தானத்தை** அடைகிறோம். இருபத்துநான்கு தூண்களைக் கொண்ட **"காயத்ரீ"** மண்டபத்திலே **பஞ்ச பிரம்ம** பீடத்தில், பத்மாசனத் திருக்கோலத்திலே வீற்றிருக்கும் காமாட்சியம்மனைக் கண் குளிர, மனம் மகிழத் தரிசிக்கிறோம்.



அம்பாளுக்கான "லலிதாசகஸ்ரநாமாவளி"யில் **ஸ்ரீ ஷோட சாக்ஷரீநீ வித்யா யை, த்ரி கூடாயை, காமகோடிகாயை"** என ஆராதிக்கப்படும். தாய்க் குலத்தின் தலையாய நாயகியை வாயினிக்கப் பாடிப் பரவசம் பெறுகிறோம்.

அங்குசம், பாசம், புஷ்பபாணம், கருப்புவில் தாங்கிய நான்கு திருக் கரங்களுடன், தேஜோமயமாகக் காட்சி தரும் அன்னை காமாட்சியின் முன்னால், வட்டத் தொட்டி வடிவிலே, **அஷ்ட லட்சுமியருடன் கூடிய ஸ்ரீ சக்கரம்** உள்ளது. ஸ்ரீ சக்கரமும், காமாட்சியம்மன் வெளிப்பட்ட "**பிலாகாச**"மும் இங்கே மிகமிகப் புனிதமாக ஆராதிக்கப்படுகின்றன.

மூலத்தானத்திலே காமாட்சியின் குங்குமம் பெற்றதும், பக்கத்தில் உள்ள "**அரூப லட்சுமி**"யிடம் சமர்ப்பித்துப் பிறகு, - அங்கிருந்து குங்குமத்தை எடுத்துக் கொள்வது தொன்மையான மரபாகும்.

கிருதயுகத்திலே **துர்வாசமுனிவர்** 200 ஸ்லோகங்களாலும்; திரேதாயுகத் திலே **பரசுராமர்** 1500 பாடல்களாலும்; துவாபரயுகத்திலே **தௌம்ய முனிவர்** 1000 பாடல்களாலும்; இந்தக் கலியுகத்திலே, ஊமையாகப் பிறந்த **மூகசங்கரர்**, காமாட்சி யருளால் பாடும் திரன் பெற்று 500 பாசுரங்களாலும் **(மூக பஞ்ச சதீ)** காமாட்சி யம்மனைப் போற்றிப் பாடிப்பரவியுள்ளனர்.

கலியின் தொடக்கத்திலே, காஞ்சியை ஆண்ட மன்னர் **ஆகாசபூபதி**யின் பக்திக்காக, நாட்டின் வறுமைதீர பொன்மாரி பொழிந்த மகத்துவம் கொண்டவள் இந்தக் காமகோட்டக் காமாட்சியம்மன்.

மேற்படி ஆகாசபூபதியின் மகன்தான், இதிகாசப் புகழ்பெற்ற-விநாயகர் அம்சமான-**துண்டீர மகாராஜா** என்பது வரலாற்றுக் குறிப்பாகும்.

காமாட்சியம்மனின் கருவறையிலும், அதைச் சுற்றியும் அன்னபூரணி, அரூபலட்சுமி, வராகி, அர்த்தநாரி, மகா சரஸ்வதி, தபஸ் காமாட்சி, பங்காரு காமாட்சியர் உண்டு; "**பங்காரு காமாட்சி**" பற்றிய ஓர் வரலாற்றுச் செய்தி.

பிரம்ம தேவனால் உருவாக்கப்பட்ட முழுவதும் தங்கத்தினால் ஆன - பங்காரு காமாட்சி விக்ரஹம், இப்போது இருப்பது தஞ்சையில், ஹைதரலியின் "கடத்தல் வீரர்"களிடமிருந்து பங்காரு (துங்க) காமாட்சியைக் காப்பாற்றுவதற்காக அந்நாளிலே தஞ்சைக்குக் கொண்டு போகப்பட்ட பங்காரு (துங்க) காமாட்சி விக்ரஹம், அங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டது; 1941-ல் காஞ்சிப் பெரியவர், ஸ்ரீபரமாசார்யாள், சமுதாய நலன்கருதி, ஸ்தாபிதம் செய்த "பங்காரு காமாட்சி" யின் பொன்னாலான திருவடிகள் மட்டுமே, தற்போது காமாட்சியம்மன் கோயிலுக் குள் தரிசனம்.

உலகாணித்தீர்த்தம் என்கிற "பஞ்சகங்கை"யுடன் கூடிய காமாட்சி ஆலயத்துள், சந்தானஸ்தம்பம், காலபைரவர், பூதநிக்ரஹபெருமாள், மஹிஷமர்தனி, ஹயக்கிரீவர், சாஸ்தா என்கிற ஐயப்பன் (பூர்ணாபுஷ்கலையருடன்) துண்டீரராஜா,

அகஸ்தியர், துர்வாசர் ஆதிசங்கரர் இப்படியாக 26 சன்னதிகள் உள்ளன; துர்வாசர் நியமித்த **சௌபாக்ய சிந்தாமணி** எனும் ஆகம பூஜா முறைதான் இங்கே, இன்றும் தொடர்ந்து பின்பற்றப்படுகிறது.

ஆதி நாளிலே பிலாகாசத்திருந்து வெளிவந்த காமாட்சி, சும்ப-நிசும்பர்கள் என்கிற அரக்கர்களை அழிப்பதற்காக தனது அம்சமாக "**கௌசிகி**"யை உற்பிவித்தாள்; (தோற்றுவித்தாள்) அரக்கர்வதம் முடிந்ததும், கௌசிகி, காஞ்சி யின் காவல் தெய்வமாக நியமிக்கப்படுகிறாள்.

கௌசிகியை உற்பவித்ததால், உக்ர சொரூபிணியாக மாறிய காமாட்சிக்கு, அந்நாளிலே **காபாலிகர்கள்** நரபலி கொடுப்பதுண்டாம்; பௌர்ணமியின்போது நிறை மாத கர்பிணிகளைக்கூட காமாட்சி சன்னிதியிலே பலியிடும் கொடிய நிலையிருந்ததாக "**கலிங்கத்துப்பரணி**" எனும் இலக்கியம் கூறுகிறது.

கி.பி. எட்டாம் நூற்றாண்டிலே இங்கு வந்த ஆதிசங்கரர், மஹாமந்த்ர, யந்த்ரமான **ஸ்ரீசக்ரபிரதிஷ்டை** செய்து, ஆவேச வடிவுக் காஞ்சி காமாட்சி அம்பாளை, சௌ மிய நாயகியாக, சாந்தசொரூபியாக மாற்றியதாக வரலாறு.

அன்பையே பிரதானமாகக் கொண்ட பௌத்த, சமண மத தர்மோபதேசங்க ளாலும், ஆதிசங்கரரின் இதோபதேசங்களாலும், பின்னாளில் வந்த பல்லவமன்னர் களின் பராக்கிரமங்களாலும், காஞ்சியிலே நரபலி அறவே ஒழிந்தது எனக் கொள்ளலாம்.

ஆதிசங்கர பகவத் பாதாள் அவர்களால் ஸ்தாபிதமான காஞ்சி ஸ்ரீமடத்து - சந்யாசிகளின் நேரடி ஈடுபாடு, நிலையான கவனிப்பைக் கொண்ட காமாட்சி கோயில், "பளிச்" சென்றும், பாமர சான்னித்யத்தோடும் விளங்குகிறது!

1894-மே 20-ம் நாள் விழுப்புரத்திலே அவதரித்த ஸ்ரீபரமாசார்யாளை, ஆண்டுதோறும் அடியேன் குடும்பத்தோடு சென்று தரிசித்து அருளாசி பெற்றதும், 26.11.1990-ல் ஏகாந்தமாக தரிசித்தபோது, மோனமூர்த்தியாக இருந்த நிலையிலே "வேம்பத்தூர் கிருஷ்ணன் நமஸ்காரம் பண்றார்" என்று ஐயர்கள் கூற, திருக்கரம் அசைத்து ஆசி வழங்கிய அந்த தெய்வத்தின் தியானநிலை தரிசனம் தான் பேரானந்தமோ!

ஸ்ரீமடத்திலிருந்தபடியே லோகமனைத்தையும் காணும் யோகமூர்த்தியான ஸ்ரீ பரமாசார்யாளின் அருளாசி பெற்று, அற்புதமான சித்திகளை - வெற்றிகளை - அடையப் பெற்ற பக்தகோடிகள் ஆயிரமாயிரமாகும்! 8.1.1994-தேதியுடன் அந்த மஹாபாக்யத்தை இழந்தோம்.

பொன்மழை பொழிவித்த காஞ்சி மாநகர அன்னை ஸ்ரீ காமாட்சியின் ஆலயத் திருப்பணிகளை, அந்நாளிலே... **ஆதிசங்கரர், அச்சுதராயர், பராக்கிரம பாண்டியர், சம்புவராயர், சதாசிவதேவமகாராயர்** முதலானவர்கள் செய்துள்ளனர்.

கி.பி. 1392-ல் விஜயநகர மன்னன் **ஹரிஹரன்,** கர்பகிரஹ விமானத்திற்கு பொன் வேய்ந்துள்ளதாக கல்வெட்டு உள்ளது. தொடர்ந்து விஜயநகர ராஜாக்களின் தானங்களும், நகைக் காணிக்கைகளும் ஏராளம்!

1761-ல் காமகோடி ஸ்ரீமடத்தின் சார்பில், காமாட்சி கோயிலுக்கு ஜீர்ணோத்தாரண மஹாகும்பாபிஷேகம் நடந்துள்ளது.

1942-ல் ஸ்ரீமடத்தின் சார்பிலே.. ஸ்ரீபரமாசார்யாள் பல திருப்பணிகளைச் செய்து, ஆலத்தைச் செப்பனிட்டுக் கும்பாபிஷேகம் செய்வித்தார்கள். 7.12.1944-ல் ஸ்ரீ மடத்தின் சார்பிலே காமாட்சியம்மனுக்கு சிறப்பு வழிபாடு.

5.4.1976-ல் **ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்** மேற்பார்வையில் காமாட்சி கோயிலுக்குக் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

1979-ல் காமாட்சி கோயிலின் **காமகோடி விமானத்**திற்கு தங்கத் தகடு போர்த்தப்பெற்று கும்பாபிஷேகம் நடைபெற்றது.

1993-ல் ஸ்ரீ பரமாசார்யருக்கு நடைபெற்ற கனகாபிஷேகத்திலே பெறப்பட்ட **84**-கிலோ தங்கத்தால், காமாட்சி கோயில் மூலஸ்தான கோபுரத்திற்கு கவசம் போடப்பட்டு, ஆலய முழுவதையும் **80**-லட்ச ரூபாய் செலவிலே செப்பனிட்டு, **20**-லட்ச ரூபாய் செலவிலே **12..6.1995**- அன்று கும்பாபிஷேகத்தை நடத்தினார்கள் **ஸ்ரீ ஜெயேந்திர, விஜயேந்திர சரஸ்வதி** சுவாமிகள்.

காமாட்சியம்மன் கோயிலில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை, அமாவாசை, பூர்ணிமை, தமிழ் மாதப் பிறப்பு ஆகிய தினங்களில் காமாட்சியம்மன் தங்கத்தேர் பவனி, ஆலயவளாகத்துள் நடைபெறுகிறது.

பிரதி பௌர்ணமி தோறும் ஸ்ரீ வித்யா பூஜா முறையிலே நடைபெறுகின்ற **நவாவரணபூஜை** மிகச் சிறப்பானது.

புரட்டாசி நவராத்திரியும், தைமாதம் கனு உத்ஸவமும், மாசி பிரம்மோத்ஸவமும் காமாட்சியம்மனின் பிரதான திருவிழாக்கள்.

ஸ்ரீலலிதா திரிபுரசுந்தரியின் சர்வாம்ச சக்தியாகத் திகழ்கின்ற ஸ்ரீகாஞ்சி காமாட்சியிடம், இதய பூர்வமாகப் பிரார்த்தனை செய்து கொண்டால், கேட்டது கிடைக்கும், நினைத்தது நடக்கும்;

காஞ்சி ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோயில்

தொண்டை மண்டலத்திலே... ஆழ்வார்களின் மங்களா சாசனம் பெற்ற வைஷ்ணவத் திருப்பதிகள் 22; காஞ்சியில் மட்டும் 18 திவ்ய தேசங்கள் உள்ளன. "அத்திகிரி"யெனும் **திருக்கச்சியிலே** - வரதராஜர்+பெருந்தேவித்தாயார்; **அட்டபுயம்** - அஷ்டபுஜர் + புஷ்பகவல்லி; **திருத்தண்கா** - தீபப்பிரகாசர் + மரகவல்லி; **வேளுக்கை** -நரசிம்மர்+அமிர்தவல்லி; **திருவெஃகா**-யதோத்காரி+கோமளவல்லி; பாடகம்-பாண்டவதூதன்+ருக்மணி; **ஊரகம்**-உலகளந்தான்+அமுதவல்லி; **நீரகம்**-ஜகதீஸ்வரன்+நிலமங்கை; **காரகம்**-கருணாகரன்+பத்மாமணி; கார்வானம்-நவநீத சோரன்+கமலவல்லி; **நிலாத்திங்கள்துண்டம்**-(ஏகாம்பரேஸ்வரர் ஆலயத்துள்); **கள்வனூர்**- (காமாட்சி ஆலயத்துள்); **பவளவண்ணம்**-பவளவண்ணர்+ பிரவாளவல்லி;

பச்சை வண்ணர் + மரகதவல்லி; பரமேஸ்வரவிண்ணகர் - வைகுந்த நாதன் + வைகுந்த வல்லி.

காஞ்சியிலுள்ள மேற்படி அனைத்து திவ்யதேசங்களுக்கும் திருமுடியாக விளங்கும் "விஷ்ணுகாஞ்சி" ஸ்ரீவரதராஜப் பெருமாளின் ஆலயத்திற்குப் போவோமா!

காஞ்சிவரதர் ஆலயம், 1200 அடி நீளமும், 800 அடி அகலமும் கொண்டது; மேல ராஜகோபுரம் 96 அடி உயரம்; கீழ்கோபுரம் 125 அடி உயரமுள்ளது.

மேலக் கோபுர வழியாக ஆலயத்துள் செல்கிறோம்; மைய மண்டபத்துடன் கூடிய **அனந்த புஷ்கரணி** தீர்த்தக்குளம்; இந்த குளத்திற்குதான் பிரம்ம தேவனால் உருவாக்கப் பெற்ற **ஆதிவரதர்** (தேவதாருமரத்தால் ஆனவர்) நீள்துயில் கொள்கிறார். அறுபது ஆண்டுகளுக்கு ஒருமுறையாக இருந்து, தற்போது 40 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆதிவரதரை வெளியே கொண்டுவந்து, 48 நாட்கள் பூஜை செய்து மீண்டும் புஷ்கரணியுள் துயிலச் செய்துவிடுகின்றனர்; 1979-ல் வெளியே வந்து போயிருக்கிறார் **(அத்தி) ஆதிவரதர்**. மேற்படி புஷ்கரணியோடு **வராக..., சக்கர..., பத்ம...,** பிரம்ம தீர்த்தங்களும் ஆலயத்தினுள் உண்டு.

ஐந்து திருச்சுற்றுக்களைக் கொண்ட வரதராஜப் பெருமாள் ஆலயத்துள், வலம்புரிவிநாயகர், சக்கரத்தாழ்வார், கரிமாணிக்க வரதர், விஷ்வக்ஷேனர், தன்வந்திரி, சேனை முதலியார்... சன்னதிகளும் உள்ளன.

வரதராஜப் பெருமாளின் துணைவியாக இங்கு எழுந்தருளியிருப்பது **பெருந் தேவித்தாயார்;** அடியவரான தேசிகருக்காக இந்தத் தாயார், பொன் மழையே பெய்வித்ததாக வரலாறு உண்டு.

மகா மரியாதை வாசல், திருமஞ்சன மண்டபம், தாயார் சன்னதி, கருடாழ் வார், குகைநரசிம்மர்களை வலம் வந்தபடி, 24 படிகள் மேலேறி "அத்திகிரி" எனப்படும் கட்டுமானச் செயற்கை மலைச் சிகரத்தை அடைகிறோம்.

கிருதயுகத்திலே பிரம்மா, திரேதாயுகத்தில் கஜேந்திரன், துவாபரயுகத்திலே தேவகுரு பிரகஸ்பதி, கலியுகத்தில் ஆதிசேஷனால் பூஜிக்கப்பட்ட - பூஜிக்கப் படுகின்ற **புண்ணியகோடிவிமான** மூலவரான **ஸ்ரீவரதராஜப் பெருமாளின்** திவ்ய தரிசனத்தைக் கண் குளிரப்பெறுகிறோம்.

"பைந்தமிழின் பின் சென்ற பச்சைப் பசுங் கொண்ட"லான, வரதராஜரின் (சுமார் 10 அடி உயரம்) பாதாதிகேச தரிசனத்தால் பேரருட் பரவசம் பெறுகிறோம்.

"யக்ஞோத்பவர். கஜேந்திரவரதர், தேவராஜசுவாமி, மாணிக்கவரதன், பிரண தார்த்திஹரண், அருளாளன், என்றெல்லாம் கொண்டாடப்படுகின்ற கச்சிப் பெரு மாளின் திவ்ய தரிசனத்தால் திருவருள் பெற்றதும் கீழே இறங்குகிறோம்.

சாபத்தால் பல்லிகளான அயோத்தி ராஜ குடும்பம், இங்கே சாப விமோசனம் பெற்றதாம்; அதன் நினைவாக இங்குள்ள தங்க, வெள்ளிப் பல்லிகளை தரிசிப்பது சம்ரதாயமாக இருந்து வருகிறது.

வரதாராஜப் பெருமாளுக்கு தீர்த்தக் கைங்கர்யம் புரிந்துவந்த ஸ்ரீபெரும்பூதூர் ராமாநுஜர்தான், உலகம் புகழும் "உடையவர்" ஆனார். ஸ்ரீ ஆதிசங்கரரின் கைங்கர்யங்களும் அந்நாளிலே இக்கோயிலுக்கு இருந்திருக்கிறது.

தேவராஜப் பெருமாளோடு உரையாடும் பேறுபெற்ற **திருக்கச்சிநம்பி**களின் சிரத்தாபக்தியானது, "விஷ்ணு காஞ்சி"யில் அறியப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஆலயம் முழுவதுமே... அபூர்வ சிற்பங்கள் இருந்தாலும், நாயக்க மன்னர்கள் சிரத்தையோடு கட்டிய, இங்குள்ள நூற்றுக்கால் மண்டபமானது, ஓர் அற்புத சிற்பக்கலைக் களஞ்சியமாகும்.

வரதராஜரின் மாதாந்திர திருவிழாக்கள்



சித்திரை : திரு அவதார (தோட்ட) உத்ஸவம்.

வைகாசி : ஏழு நாள் பிரம்மோத்ஸவம் (கருடசேவை)

ஆனி : ஏழு நாள், ஆனி கருடன் (பரதத்துவ நிர்ணயம்)

ஆடி : ஆடிக் கருடன் - கஜேந்திர மோக்ஷத் திருவிழா

ஆவணி : ஏழு நாட்கள் பவித்ரோத்ஸவம்

புரட்டாசி : பத்து நாட்கள், நவராத்திரித் திருவிழா.

ஐப்பசி : தீபாவளித் திருநாள்; சிறப்பு ஆராதனைகள்

கார்த்திகை : தாததேசிகன் சாற்றுமுறை.

மார்கழி : அனுஷ்டான குள உத்ஸவம்

தை : வரதர், பெருந்தேவித்தாயார் தெப்போத்ஸவம்

மாசி : தாயார், பெருமாள் தவனோத்ஸவம்

பங்குனி : தாயார் திருக்கல்யாணம்: பல்லவ உத்ஸவம்

வைகாசி, ஆனி, ஆடி ஆகிய மூன்று மாதங்களிலே, நடைபெறும் **கருட சேவை** களிலே, வைகாசி மாத கருடசேவைதான் உலகப் புகழ்பெற்றதாகும்.

பழையசீவரம், மங்களகிரி, ஜயங்குளம், ராஜகுளம் முதலான வெளியூர்களிலும் காஞ்சிவரதருக்கு வருடாந்திர திருவிழாக்கள் உண்டு.

தினசரி காலை 7.30 முதல், நண்பகல் 12 மணிவரை: மாலை 3-30 முதல் இரவு 8.45 வரை ஆலய (மூலவர்) தரிசன காலங்களாகும்.

திருப்பதி - திருமலை **லட்டு** போல, காஞ்சிபுரம் **கோயில்இட்லி** யும் தனிச்சுவை கொண்ட இறையருட் பிரசாதமாகும். (ஆனால் இப்போது ??)

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தய கரிகாலச் சோழன் முதலாக... கடைசியாக பாரதநாட்டைக் கட்டியாண்ட, இங்கிலாந்துக்காரர்கள் வரை... வரதர்

கோயிலுக்கு, பலப்பல திருப்பணிகள், நிலதானம், நகைக் காணிக்கைகளைச் செய்துள்ளனர்: கவர்னர் **லார்ட் கிளைவ்** தந்த மகரகண்டி மாலை, கலக்டர் **ப்ளேஸ்** கொடுத்தசந்திரஹாரம் முதலான பல அபூர்வ நகைகள் 'கருடசேவை'யின் போது இப்போதும் பெருமாளுக்கு அணிவிக்கப்படுகின்றன.

விஜயநகர மன்னர்கள், வரதர் கோயிலுக்கு பதினேழு கிராமங்களைத் தானம் வழங்கியதாகச் சாசனம் உண்டு: **அச்சுததேவராயர்**, புகழ்மிகு **திருமலை நாயக்கர்** முதலானவர்கள் செய்த நிலதானம், திருப்பணிகள் பற்றிய முழுவிபரங்கள்- ?

14-ஆம் நூற்றாண்டு தொடங்கி, 17-ம் நூற்றாண்டு வரை, தென்னாட்டுப் பிரபல ஆலயங்களுக்கு ஏற்பட்ட "**சூறையாடல் விபத்து**" காஞ்சி வரதரையும் விட்டுவைக்கவில்லை. 1690-ல் உத்ஸவ வரதர், உடையார் பாளையத்திற்குப் போய், (எடுத்துச் செல்லப்பட்டு) **தோடர்மால்** என்பவரால் 1710-ல் மீண்டும் காஞ்சிக்கு வந்திருக்கிறார்!

காஞ்சிவரதர் ஆலயத்திற்கு இப்போதும் ஏராள நிலபுலங்கள் நகை நட்டுகள் உள்ளன, 16-ம் நூற்றாண்டிலே புண்ணிய கோடி விமானத்திற்கு **கிருஷ்ண தேவராயர்** குடமுழுக்குச் செய்து, ஏராள நகைகளையும் வழங்கியிருக்கிறார்! ஆலயத்தின் சொத்துக்கள் பற்றிய முழுவிபரங்களை அறியும் உரிமை, இந்நாட்டுக் குடிமகன் அனைவருக்கும் உண்டு. தேவஸ்தான நிர்வாகிகள், அறநிலையத் துறையோடு வாதிட்டு, இனியேனும் ஆதாரபூர்வமான ஸ்தல புராணத்தைப் போட்டு, ஆண்டு வரவு, செலவு முதலான சகல விபரங்களையும் வெளியிடட்டும், (காஞ்சிக்கு அடியேன் வேம்பத்தூர் கிருஷ்ணன்) நேரில் சென்று திரு "E.O" அவர்களுக்கு கடிதம் கொடுத்து விபரம் கேட்டேன்... பலன்... ? ? ?)

"உண்டியல் வைத்துப் பணம் குவிக்கும் ஒவ்வொரு கோயிலிலும் தலபுராணம் - மலிவு விலையில் - இருந்தே தீரவேண்டும்" என்று ஓர் சட்டம் போட்டால் என்ன ? "ஜெர்மனியிலிருந்து தமிழகத்திற்கு, ஆண்டுதோறும் எண்பது ஆயிரம் பயணிகள் வருகிறார்கள்; கோயில்களின் சிற்பக் கூறுகளையும், வரலாறு களையும் விபரமாகக் கேட்கிறார் கள் ! யார் பதில் கூறுவது ? கலைச் செல்வங் களின் விபரம் கிடைக்காதபோது அவர்களுக்கு ஏமாற்றம் ஏற்படுவதை எப்படித் தவிர்க்க முடியும் ?" என்று தினமணி நாளிதழ் 28.4.95-ல் துணைத்தலையங்கம் எழுதிப் புலம்பியிருக்கிறது ? தருமத்தின் புலம்பலுக்கு சம்பந்தப்பட்டோர் தயவு செய்து செவிசாய்ப்பார்களா ? ? ?

17-ம் நூற்றாண்டு வரை "ஸ்தலத்தார் பொறுப்பிலே இருந்த வரதராஜப் பெருமாளின் ஆலய நிர்வாகத்தை, 18-ம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து கிழக்கிந்திய (வெள்ளையர்) கம்பெனி, பிடுங்கிக் கொண்டு, கலெக்டர் மூலமாக நிர்வகித்தது.

1841-வரை கலெக்டரிடம் இருந்த நிர்வாகம், 1842, "கல்யாணகோடி" **குமாரதாதாசாரியசுவாமி** எனும் வைணவப் பெரியார் கைக்கு மாறுகிறது; மேற்படி சுவாமிகளின் பரம்பரையினரிடமே..., 1907-வரை இருந்த பொறுப்பிலே பெரிதான

குழப்பம் (சிக்கல்?) ஏற்பட்டு "கோர்ட்" ரிஸீவரிடம் கோயில் நிர்வாகம் ஒப்படைக்கப்படுகிறது! வழக்கின் தீர்ப்பாக ஆலயத்திலே, தேர்தல் முறை அமலாகிறது!! தாதாசாரியர் வம்சத்திடம் மீண்டும் ஆலயம்: சில ஆண்டுகளிலேயே மீண்டும் சிக்கல் ! மீண்டும் வழக்கு!!

1941-சென்னை ஹைக்கோர்ட்டின் தீர்ப்பின்படி.. **ஒரு சைவபிராமணர், இரு தாதாசார்ய சந்ததியரோடு, இரு கௌரவ ட்ரஸ்டிகள்** ஆக, ஐவர்குழுவின் மேற்பார்வையிலே, தமிழக அரசு அறநிலைய பாதுகாப்பிலாகாவின் நேரடிக் கண்காணிப்புடன் இன்றளவும் வரதர் கோயில் இருந்து செயல்பட்டு வருகிறது.

பொன், பொருள், நிலம், மனை, வீடுகள், அதிகமாக உள்ள தமிழகத்துப் பிரபல ஆலயங்களுக்கும், கோர்ட் வழக்குகளுக்கும் காலம் காலமாக ஏதேனும் ஒரு வகையிலே ஈடுபாடு இருந்துகொண்டே வருவது - தமிழகத்துக்கே சாபக்கேடு போலும்! **"சிவன்சொத்து குலநாசம், பெருமாள் சொத்து பெரு நாசம்"** என்பதெல்லாம் கலியில் எடுபடாதோ!! ஆனால் ஒன்று மட்டும் சர்வ நிச்சயம்; **"அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்."** ஆலயச் செல்வங்களை "ஸ்வாஹா" செய்வோர்க்கு இன்றில்லாவிடினும் என்றேனும் ஒருநாள் நிச்சயம் தண்டனை உண்டு! இது கண்கூடு!!

வழக்கமான **"கசமுசா"**க்களோடு வினோதமான "Y" "U" யானை நாமச்சண்டை கள் காஞ்சியிலே நூற்றாண்டுக் கணக்கிலே நடைபெறுவதும், கோயில்யானை படாதபாடுபட்டதும், இருசாரார்களின் இடையே ஏற்பட்ட **"தீப்பந்த முத்தங்"**களும் பிரதான வைணவ திவ்ய தேசமான "விஷ்ணுகாஞ்சி"க்குத் தேவைதானா?

ஸ்ரீ ஆத்தான் ஜீயரால் 18-ம் நூற்றாண்டிலே **வட, தென்** இரு கலையார்களும் ஒருசேர வரதராஜரை வழிபடும் முறை, நடை முறைக்கு வந்தது என்றாலும் "புகை" என்னவோ முற்றிலும் அடங்கியதாகக் கொள்ளமுடியவில்லை! வடகலைக் காஞ்சி வரதரும், தென்கலைச் ஸ்ரீரங்கநாதரும் பாமரனுக்கும், என்போன்ற சாதாரண பக்தர்களுக்கும் - ஒருவரேதான்!

அறுபது வருடங்களுக்கு முன்பு காஞ்சி வரத ராஜப்பெருமாள் கோயிலுக்கு, கும்பாபிஷே கம் நடந்ததாம்!

1937-ல் கொடிமரம் சீர்செய்யப்பட்டதாம்; புண்ணியகோடி விமானம் சீர்செய்யப்பட்டு, ஜனவரி (1991) 27-ம் தேதி கும்பாபிஷேகம் நடைபெற்றது.

ஆலய அர்ச்சகர்கள் (பட்டாச்சார்யர்கள்) பதினைந்து குடும்பங்கள் விஷ்ணு காஞ்சியிலே இருந்து, வரதராஜப்பெருமாளை ஆராதித்து வருகின்றனர். இதற்கு மேல் விவரங்கள் பலவற்றை அறிய எவ்வளவோ... முயன்றேன்... "வரதன்" அருள் செய்யவில்லை! ஆஃபீஸர்களை அணுகினேன் அசாத்திய மௌனம்! அர்ச்சர்களை வேண்டினேன் மௌனமோ மௌனம்!! ஆண்டவா! கோயிலைப்பற்றிய வரலாற்று, நடைமுறை, திருவிழா விபரங்களை அறியத் துடிக்கும் என்போன்ற "அப்பாவி" களுக்கு, ஆலயப் பணியாளர்கள், ஆஃபீஸர்கள் உதவினால், "பிரம்ம ஹத்தி"தோஷமா பிடித்துவிடும்?

ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர் ஆலயம்

பூமியிலுள்ள பிரதான சிவத்திருத்தலங்கள் 1008: அவற்றுள் சிறந்தவை 108: மிகச் சிறந்தவை 68. அறுபத்து எட்டினுள் தனிச்சிறப்புபெற்ற **பிருத்வி (பூமி) க்ஷேத்திரம் சிவ காஞ்சி.**

ஆயிரத்தெட்டு சிவலிங்கங்கள் ஆங்காங்கே நிறைந்துள்ளதான காஞ்சிப் பதியை, சிவபெருமானின் திருமேனியென்ற ஞானியர் கூறுவர்.

கோயில் மயமான காஞ்சிபுரத்தின் 108 சிவாலயங்களுக்கும் தாய்போல் விளங்குவது ஏகாம்பரேஸ்வரரின் ஆலயமாகும்.

காஞ்சிப்பதியிலுள்ள சிவத்தலங்களின் புராணப் பெயர்களாவன...

ஏகம்பரம், கச்ச பாலயம், காரோகணம், மாகாளம், பச்சிமாலயம், அனேக தங்காவதம், பணாகரம், பனீச்சுரம், திருமேற்றளி, திருமாற்பேறு, வராகம், சுரகரீச்சுரம், இராமம், வீராட்டம், வேதநூபுரம், உருத்திரம், வஜ்ர நகரம், பிரம்மம், மறைசை,இந்த்ராலயம், மணீசம், சங்கரம், பரசிராமம், ஒத்தூர், ஓணகாந்தன்தளி குரங்கணில்முற்றம், வாலீச்சரம், வெள்ளக்கம்பம், கள்ளக்கம்பம், நல்லகம்பம், திருக்கச்சிமயானம் இப்படிப் பலப்பல...! பிரளய காலத்திலே, தேவர்களைச் சுள்ளிகளாகக் கொண்டு சிவபெருமான் மஹாயாகம் செய்த இடம்தான் **"திருக்கச்சி மயானம்"** என்பதாகும்.

கி.பி 7-ம் நூற்றாண்டிலே... ஆறுமைல் சுற்றளவும் 14-ம் நூற்றாண்டிலே மாமல்லபுரம் வரை பரவி, சுமார் 40 மைல் பரப்பளவையும் கொண்டு காஞ்சிமாநகர் விளங்கியதாக சீனதேச யாத்ரீகர்களின் வரலாற்றுக் குறிப்பும், சேக்கிழாரின் பெரியபுராணக் காவியமும் கூறுகின்றன.

கி.பி. 7-ம் நூற்றாண்டிலே, **ராஜசிம்ம பல்லவனால்** கட்டப்பட்ட காஞ்சி **கைலாசநாதர்** ஆலயமானது, கோயில் அமைப்பிலே ஓர் இமாலய சாதனை என்றே கூறப்படுவதாகும். மூலஸ்தானத்திற்குச் செல்லும் குறுகிய நூதனவழி, ஓர் தத்துவ வெளிப்பாடாகும்; 16 பட்டையுடன் கூடிய எட்டடி உயர மூல இலிங்கத்தைக், காஞ்சி செல்லும் யாத்ரீகர்கள் எல்லோரும் கட்டாயம் தரிசித்தே தீரவேண்டும். **"உள்ளம் பெருங்கோயில்"** எனும் திருமந்திரத் தத்துவத்தை விளக்கும் **பூசலார் நாயனார்** வரலாறு, கைலாயநாதர் ஆலயத்துடன் பின்னிப்பிணைந்ததாகும். மேற்படி ஆலயம் காஞ்சி மாநகரின் நடுப்பகுயிலே இடம் பெற்றிருப்பதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன; ஆனால் இன்றோ, ஊரின் ஒதுக்குப்புறமாக வயல்களின் நடுவிலே இருப்பதால், மிகப்பெரிதாக இருந்த காஞ்சி மாநதரம், காலத்தால் குறுகிப் போய் விட்டதை நம்மால் உணரமுடிகிறது.

வானைஅளாவிய 192 அடி உயர ஏகாம்பரேஸ்வரர் ஆலய ராஜகோபுரம், ஆரேழு மைல்களுக்கு முன்னாலேயே, காஞ்சியை நமக்கு அறிமுகப்படுத்துவதா

கும். 1509-ல் விஜயநகர மன்னர் ஸ்ரீகிருஷ்ண தேவராயரால் கட்டி முடிக்கப்பட்ட தாகும். ஆலய வெளிச்சுவரும், ஆயிரக்கால் மண்டபமும் மேற்படி மன்னரால் தான் கட்டப்பட்டன.

சுமார் 23-ஏக்கர் நிலப்பரப்பிலே, ஐந்து பிராகாரங்களைக் கொண்ட பேராலய ராஜகோபுரத்தின் (கீழ்) இரு புறமும் உள்ள விநாயகர், சண்முகர்களை வணங்கியபடி பேராலயத்தின் உள்ளே செல்கிறோம்.

புராண கால கம்பாநதி "அந்தர் வாஹினி" ஆகி திருக்குளமாக **"கம்பா தீர்த்த"**மாக விளங்குகிறது; அடுத்து திருக்கல்யாண மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், தலவிநாயகர் சன்னதிகளை தரிசித்தபடி - உட்புறத் திருமதிலைக் கடந்ததும் **"சிவகங்கை"** தீர்த்தக் குளம், கொடிமரம், நந்தி... அடுத்தடுத்துள்ளது திருக்கச்சி மாயானம்.

அர்த்த மண்டபத்தின் வெளிப்புறத்தே வலம் வரும்போது, சிவகாஞ்சியின் புனிதமிகுந்த **"மாவடி"**யை தரிசிக்கிறோம்; இந்த மாமரம் 3,500 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்; இதன் நான்கு கிளைகளும் சதுர் (நான்கு) வேதங்கள்; ஒவ்வொரு கிளையிலும் வெவ்வேறுவகை ருசி தரும் மாங்கனிகள்; புத்திர பாக்யம் தரும் இறையருட் பிரசாதம் என இக்கனிகள் போற்றப்படுகின்றன.

மாவடியின் கீழே விநாயகர், சோமாஸ்கந்தர், லிங்கோத்பவர், மாங்காடு தபஸ்காமாட்சி, தட்சிணாமூர்த்தி, இலிங்கத்தைத் தழுவிய காமாட்சி, மற்றும் துர்கையம்மன், ஸ்ரீமகாவிஷ்ணு - ஆகிய மூர்த்திகளைத் தரிசிக்கலாம்.

ஏகாம்பரர் ஆலயத்துள்ளே, ஆழ்வார்களின் மங்களா சாசனம் பெற்ற **"நிலாத் திங்கள் துண்டப் பெருமாள்"** சன்னிதியும், 108, 1008 லிங்கங்களோடு, சிவன் கோயிலுக்கு உரிய... இதர பரிவார தேவதைகளும், சூரிய பகவானுக்குத் தனிச் சன்னிதியும் உண்டு; ஹைதர் அலியின் - ஆக்ரமிப்பிலிருந்து மூலவரைக் காப்பதற் காக ஏற்படுத்தப்பட்ட **"டூப்ளிகேட்"** **"ஐதர் லிங்க"**மும் இங்கே காணவேண்டிய ஒன்றாகும்.

"அறுபத்து மூவர்"களோடு ஆடல்வல்லான் (நடராஜர்) தரிசனத்தையும் முடித்து - **உருத்திரகோடி விமான** மூலஸ்தானத்தை அடைகிறோம்.

தூண்டாமணி விளக்கின் ஜோதிச் சுடர் நடுவே, காஞ்சித் தலைவனாகிய எம்பெருமான்... **ஏகம்பனின் மணலால் ஆன இலிங்கத் திருமேனி** தரிசனம்; இவருக்கு அபிஷேகம் கிடையாது. ஆவுடையாருக்கு அபிஷேகம் செய்யலாம்; புனுகுச் சட்டம் சாற்றப்படுகிறது; திங்கட் கிழமைகளில் ஏகாம்பரரின் தரிசனம் அதிக விஷேசம்; மூலவருக்குப் பின்னால் **"ஏலவார்குழலி"**யுடன் கூடிய இறைவனது திருமணக்கோலத் திருக்காட்சியை (சோமாஸ்கந்த மூர்த்தம்) அடியவர்கள் கூர்ந்து கவனித்து தரிசிக்கவும்.

ஸ்ரீ ஏகாம்பரநாதரின் மாத விழாக்கள்!

சித்திரை : பாலூரில் திருவிழா கண்டுஇறைவன் காஞ்சிக்குத் திரும்புதல்

வைகாசி : சர்வதீர்த்தத் திருக்குளத்திலே அம்பாள் சுவாமி தெப்பத் திருவிழா

ஆனி : ஆனித் திருமஞ்சனம் (நடராஜருக்கான விஷேசத் திருவிழா)



ஆடி	: பவித்ரோத்ஸவம் (ஆலயக் களங்கம் தீர்வதற்கு)
ஆவணி	: ஈஸ்வரன் பிட்டுக்கு மண்சுமந்த திருவிழா
புரட்டாசி	: நவராத்திரி நாயகியின் கொலு; பத்து நாள் விழா
ஐப்பசி	: தீபாவளி விசேஷ வழிபாடு
கார்த்திகை	: சோமவாரவிழா; லட்சதீபத் திருவிழா
மார்கழி	: தநுர் - திருவெம்பாவை விழா, ஆருத்ரா தரிசனம்.
தை	: தைப்பூசம், தெப்பம். சூரியனின் ஈஸ்வர வழிபாடு
மாசி	: தவனோத்ஸவம், மாசிமகத் திருவிழா
பங்குனி	: பிரம்மோத்ஸவம் (14-நாள்) பங்குனி உத்திரப் பெருவிழா; தேரோட்டமும், திருக்கல்யாணமும்.

வரலாற்று ரீதியாக, ஏகாம்பரேஸ்வரர் ஆலய வளர்ச்சிகளை ஆராய்ந்தால்...

கி.பி. முதல் நூற்றாண்டை அடுத்து, கரிகாற்சோழர், ஏகாம்பரர் ஆலயத்தைச் செப்பனிட்டு விரிவுபடுத்தியுள்ளார். (ஆலய நுழைவாயிலில் கரிகாலச் சோழனின் சிலையுள்ளது.)

முதற்குலோத்துங்க சோழன் (1070) முதல், **மூன்றாம் குலோத்துங்கன்** வரை பற்பல திருப்பணிகளைப் புரிந்துள்ளனர்; அடுத்து விஜயநகரத்துப் பல மன்னர்களை அடுத்து,, **கம்பண உடையார்**, மேற்படியாரின் மனைவியரது திருப்பணிகள் பலப் பலவாம்; ஆனால் ஆதாரப் பூர்வ தகவல்கள், கும்பாபிஷேக கால விபரங்கள் ஆலய நிர்வாகத்தால் எதுவும் சேகரிக்கப்படவில்லை!! அதுபற்றிச் சிந்திப்பாரும் இல்லை!!

1534-லில் **அச்சுததேவராயர்** பற்பல கிராமங்களை மான்யமாக ஏகாம்பரேஸ் வரர் ஆலயத்திற்கு வழங்கியுள்ளார்.

கி.பி. 1767-ல் சென்னையைப் பிடிக்க வந்த ஐதரலி, காஞ்சிமா நகரையும் முற்றுகையிட்டபோது, பேராசைக் கும்பலின் பார்வையில் படாமலிருப்பதற்காக... ஏகாம்பரர் உற்சவ மூர்த்தி, ஐம்புகேஸ்வரத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, இருபத்தைந்து ஆண்டுகள் கடந்து, காஞ்சிக்குக் கொண்டுவரப்பட்டது.

1774-லில் "காஞ்சிவள்ளல்" **பச்சையப்ப முதலியார்** (1754+1794) ஏகாம் பரர் ஆலயத்திலே, திருக்கல்யாண மண்டபம், பதினாறு கால் மண்டபம், பலிபீடம் முதலான திருப்பணிகளைச் செய்ததோடு... நிரந்தர வைப்புநிதியும் ஏற்படுத்தி யுள்ளார்! ஏகாம்பரர் ஆலய அர்த்தஜாம பூஜை, பச்சையப்பரின் நிதியால்தான் இன்றளவும் நடந்து வருகிறது.

அந்த நாளிலே 4-லட்சத்து 47-ஆயிரத்து 267-ரூபாய்களை ஆலயங் களுக்கும், கல்விக்குமாக ஒதுக்கிய அந்த வள்ளலுக்கு, ஹிந்துபக்தர்களின், மற்றும் "பச்சையப்பா"ஸில் படித்த "மாஜி"மாணவர்களின் கைமாறுதான் என்ன ?

1779-ல் "ஹட்சன்" என்கிற வெள்ளைக்காரக் கலெக்டர் துரை, ஏகாம் பரரின் ஆலயச்சுற்றுச்சுவரைச் செப்பம் செய்து சீராக்கியுள்ளார்.

1889, 1900 - ஆகிய ஆண்டுகளில், திரு **லட்சுமணன் செட்டியார்** தலைமையில் திருப்பணி நடந்து, 5-லட்ச ரூபாய் செலவிலே அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நடந்துள்ளது.

கண்டனூர் **வி.எஸ் ராமனாதன் செட்டியார், சர்.சி.பி ராமசாமிஐயர்** முதலானவர்களின் திருப்பணிகளும் உண்டாம். ஆனால் விபரம்தான் இல்லை!

1927-ம் ஆண்டிலே (1937-லும்) மகாத்மாகாந்தியடிகள், காஞ்சிக்கு வந்து ஏகாம்பரநாதரை தரிசித்திருக்கிறார்.

1934-லில் ஆலய வளாகத்தில் மின் விளக்கு அமைக்கப்பட்டது.

1947 முதல் 1960 வரை திருப்பணிக் கமிட்டி ஏற்பட்டு, திருமதில், பல்லவர் கோபுரம் முதலானவை பழுதுநீக்கப் பெற்று கும்பாபிஷேகம் நடந்துள்ளது.

1962-63 வருடங்களில் மின் விளக்கு விரிவாக்கம் பூர்த்தியானது ; 1979-ல் **ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமியின்** முயற்சியால் ஓர் கும்பாபிஷேகம் நடந்தது.

ஒரு கோடியே ஏழு லட்ச ரூபாய் மதிப்பீட்டில் 25-10-1990 அன்று ஏகாம்பரர் ஆலய ராஜ கோபுரம் மற்றும் இதர கோபுரங்களின் சீராக்கத் திருப்பணிகள் தொடங்கப்பட்டு, **1993** - காலகட்டத்திலே பூர்த்தியானது.

சோழ... பல்லவ... விஜயநகர ராஜாக்கள் ஏராள நிலபுல, தங்க வெள்ளி நகைகளை ஆலயத்திற்கு வழங்கியுள்ளனர். அவற்றின் முழுப்பட்டியல்...? ஆலய வருவாய்? செலவினங்கள்? தங்க, வெள்ளி வாஹனாதிகள்,? ஊழியர்கள்,? அர்ச்சகர்கள் பற்றிய புள்ளி விபரங்கள்...?

நஞ்சையும், புஞ்சையுமாக தற்போது சுமார் 140 ஏக்கர் நிலங்கள் ஏகாம்பரர் ஆலயத்திற்கு உள்ளதாக ஓர் குறிப்பு! காலிமனைகள்...? வீடுகள்...?? அவற்றின் வருவாய் விபரங்கள்???

25-10-90 அன்று கோபுர சீரமைப்புத் தொக்க விழாவிலே அமைச்சர் அவர்கள் பேசும்போது... "ஏகாம்பரர் ஆலயத்துக்குச் சொந்தமான 150 கிரவுண்ட் நிலம், சென்னை புரசைவாக்கத்திலே உள்ளது; ஆண்டு ஒன்றுக்கு நியாயமாக, **ஒன்னறைக் கோடி ரூபாய்** வந்தாக வரவேண்டும், ஆனால் தற்போது கிடைப்பதோ வெறும் **இருபது ஆயிரம் தான்**" எனக்கூறி வருந்தியுள்ளார்! ('தினமணி' மற்றும் T.V. செய்திகள் 26-10-90) சென்னை பிராட்வேயில் காஞ்சி, வைகுண்ட பெருமாளுக்கும் **"இதே கதை"**யிலே வீடுகள் உண்டு!

கோயிலுக்கு வரவேண்டிய **ஒன்னவைக் கோடி** ரூபாய், இருபதாயிரமாய்த் தேய்ந்திருப்பதற்கு... யாரெல்லாம் காரணம்? வெளிநாட்டவரா? வேற்று மதத்த வரா? இவை போன்ற பகிரங்க சூரையாடல்கள் ஹிந்து சமய ஆலயங்களில் ஒன்றா இரண்டா?

48-ஏக்கர் நஞ்சை நிலமுள்ள "க்ஷத்ரியசிகாமணிநல்லூர் கோயில், சிவபெருமானுக்கு, அன்றாட "சாப்பாட்"டிற்கே வழியில்லையாம்! குருக்களுக்கு சம்பளம் தரப் பணமில்லையாம்! (தினமணி - 14-11-90) இது ஒரு "சாம்பிள்"தான்; ஏராள நிலவளம் கொண்ட பல தேவாரத் திருத்தலங்களும், திவ்யதேசங்களும் இடிந்து, தகர்ந்து, குட்டிச்சுவர் களாகி வருகின்றன!

பெரும்பாலான தென்னாட்டுச் சிவன் கோயில்கள்... பிரமாண்டமான புராணப் பின்னணியும், பெரிய பெரிய வீடு (கோயில்)களும் கொண்டு விளங்கினாலும், வறுமைக் கோட்டுக்குக் கீழேதான், அன்றாட வரவு செலவுகளுக்குத் திண்டாடுகின்றன என்பது "பொய்" அல்ல!

கண்ணை இமை காப்பதைப் போல சிவாலயங்களையும் வைணவ திவ்ய தேசங்களையும் காத்த மன்னர்களின் ஆட்சி போனதும், சமஸ்தானாதிபதிகள், ஜமின்தார்கள் ஆலயங்களையும், அறநிலையங்களையும் போஷித்தனர். காலப்புயலால் அவர்கள் **"சாமான்யர்கள்"** ஆனதும்... ஆலயங்களின் பொருளாதாரங்கள் சீரழிந்தன!

அதன் பிறகு, வள்ளல் **பச்சையப்ப** முதலியார் போன்ற மகான்களால் ஒளிவீசிய சிவாலயங்கள், செட்டி நாட்டு நகரத்தார் பெருமக்களின் இதயபூர்வமான திருப்பணிகளால் தான், இன்றளவும் புராதன ஆலயங்கள் ஓரளவு உயிரோட்ட முடன் விளங்குகின்றன.

தேவார, திவ்யப் பிரபந்தத் திருத்தலங்களுக்கு மட்டும் சுமார் **நாலரைக் கோடி ரூபாய்களை...** நரகத்தார் பெருமக்கள், இந்திய சுதந்திரத்திற்கு முன்பே - செலவழித்துள்ளார்கள். இப்போதைய மதிப்பீட்டில் அது பல பத்துக்கோடி ரூபாய்கள் என்பதை யாரும் மறுத்துவிடமுடியாது!

தமிழ்க்கடல் சிவமணி திரு. ராய சொ. அவர்கள் தொகுத்துள்ள "திருத்தலப்பயணம்" என்கிற நூலின் குறிப்புப் படி, நகரத்தார் அந்நாளிலே, காஞ்சி ஏகாம்பரேஸ்வர் ஆலயத்திற்கு, 25 லட்ச ரூபாய்களில் பற்பல திருப்பணிகளைப் புரிந்துள்ளார்கள்.

உலகத்திலுள்ள கோயில்களிலேயே சரிபாதி இந்தியாவில், இந்தியாவிலுள்ள ஆலயங்களில் சரிபாதி அளவுக்கு உள்ள மாநிலம் நமது தமிழகம்!

தமிழ்நாட்டிலே சைவ, வைணவ திருக்கோயில்கள் 32199; மடாலயங்கள் 55, மடங்களின் உடமையான 55 கோயில்கள், அறநிலையங்கள் 1721; சமண சமய நிறுவனங்கள் 176, மேற்படி அறக்கட்டளைகள் 189; மேற்படி அனைத்திற்கும் சொந்தமான நஞ்சை புஞ்சை விளைநிலங்கள் சுமார் ஐந்து லட்ச ஏக்கர்கள்.

இத்தனை இருந்தும் தீபத்தையே காணாத (புராதன) ஆலயங்களும், நைவேத்தியமே செய்ய முடியாத படி வறுமையில் வாடும் பாடல் பெற்ற திருத்தலங்களும் நூற்றுக்கணக்கிலே இருப்பதற்காக எப்படி வெட்கப்படுவது? யாரிடம் போய் வேதனைப்படுவது? எவரால் இப்பிரச்சனைகள் தீர்க்கப்படுவது?

திருத்தலங்களும் நூற்றுக்கணக்கிலே இருப்பதற்காக எப்படி வெட்கப்படுவது? யாரிடம் போய் வேதனைப்படுவது? எவரால், இப்பிரச்சனைகளை யார் தீர்ப்பது?

"ஆயிரம் புதுக் கோயில்களைக் கட்டுவதைவிட ஒரு பழைய கோயிலைப் புதுப்பித்து, கும்பாபிஷேகம் செய்வது மிகவும் நல்லது; காஞ்சியிலே, ஏழு புண்ணிய தீர்த்தங்கள் உள்ளன; ஆனால் அவற்றில் ஒன்றில்தான் தண்ணீர் உள்ளது. காஞ்சிக்கு வரும் யாத்ரீகர்கள் தனியார் விடுதிகளில் தங்கவேண்டி உள்ளது..... இந்தக் குறைகள் களையப்பட வேண்டும்..." என்று ஏகாம்பரேஸ்வரர் ஆலய ராஜகோபுரத்திருப்பணித் தொடக்க விழாவிலே (25 -10-1990) ஸ்ரீ ஜயேந்திர சுவாமிகள் கூறியிருக்கிறார்கள்.

மேற்படி விழாவிலே கலந்துகொண்ட அறநிலையத்துறை அமைச்சர் ஸ்ரீ கந்தசாமி சொன்னார்; "கோயில்கள் சுத்தமாக இருக்க வேண்டும், பூஜைகள் சரிவர நடைபெற வேண்டும் என்று தமிழக முதல்வர் (ஸ்ரீ கருணாநிதி) கூறுகிறார்" என்று.

30-1-1991-லே கலைஞர் கருணாநிதியின் ஆட்சி முடிந்துபோய், 24-6-1991-முதல் 12-5-1996-வரை புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா, தமிழக முதல்வராக இருந்தார்; "ஜெ ஜெ"யின் ஆட்சிக் காலத்திலே, அறநிலையத்துறை அமைச்சர்களாக; முற்பகுதியில் திரு. நடேசன்பால்ராஜூம், பிற்பகுதியில் திரு. அம்மமுத்துப்பிள்ளையும் இருந்தனர். அம்மமுத்துப்பிள்ளை பெரிய அம்பாள் பக்தர் போலும்; மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கு தனது சொந்தப்பணம் பத்து லட்ச ரூபாயில் காண்டாமணிகளை வழங்குவதாக கூறினார். (27.3.96. ஜூனியர் விகடன்). அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே, தமிழ்நாட்டில் ஏராள கும்பாபிஷேகங்கள்! என்னென்னவோ புரட்சிகரமான ஆலயத்திட்டங்கள்..! ஆனால்...??

இந்த ஆண்டு ஏப்ரல், மே பொதுத் தேர்தலிலே திருவாளர்கள் மூப்பனார், கருணாநிதியரின் கூட்டணி தமிழகத்திலே அமோக வெற்றி கண்டு, 13.5.1996-கலைஞரின் ஆட்சி மீண்டும் தமிழ்நாட்டில் மலர்ந்துள்ளது. இப்போதைய அறநிலையத்துறை அமைச்சர் புலவர் செங்குட்டுவன். அவரது அதிகாரப்பூர்வ முதல் நிகழ்ச்சியே... கோயிலில் குண்டு வெடிப்பைப் பார்வையிடுவதிலே தொடங்கியுள்ளது! (18.5.1996. அன்று இரவு மதுரை ஸ்ரீ மீனாட்சி கோயில் இரண்டாம் பிராகாரத்தில் இரண்டு குண்டுகள் அடுத்தடுத்து வெடித்தன! உயிர்ச் சேதம் இல்லை) விபத்தில் தொடங்கியது சுபத்தில் முடியும் என்பார்கள், புலவர் செங்குட்டுவனின் அறநிலைய நிர்வாகமும் அவ்வாறே அமைவதாகுக.

"கோயில்கள் சுத்தமாக இருக்க வேண்டும். பூஜைகள் சரிவர நடைபெற வேண்டும்" என்று 1990-லே அறிவித்த அதே கலைஞர், "நேர்மை, நியாயம், ஒழுங்கு, தூய்மை, வாய்மை ஆகியவைகளைக் கொண்ட ஒரு நல்லாட்சியைத் தருவோம்" என்று கூறி, இன்று மீண்டும் நமது முதல்வர் ஆகியிருக்கிறார்.

மாண்புமிகு முதலமைச்சரின் இதயத்திலே பழம்பெரும் ஆலயங்கள் அனைத்தும் பக்திபூர்வமாக இடம் பெறட்டும்; ஆலயவருவாய் முழுவதும் ஆலயங்களுக்குக் கிடைப்பதற்கு, ஆலயங்களுக்கே செலவழிப்பதற்கு - ஆவன நடைபெறட்டும்; காலத்தால் அழியாத ஆலயங்களிலே தான், கன்னித் தமிழர்தம் பண்பாடும், கலாச்சாரங்களும் ஏன் தமிழ் மக்களின் முழுமையான வாழ்வே அடங்கியுள்ளது.!

பாரதத்திலே உள்ள முக்திதரும் நகர் ஏழிலே முதல் ஸ்தானத்தைப் பெறுவது, காஞ்சிப்பதியாகும். எல்லாம்வல்ல ஏகாம்பரேஸ்வர, வரதராஜர்கள் நல்லருள் புரியட்டும்.





தெய்வத் திருமலை திருவண்ணாமலை



திருவண்ணாமலையெனப் போற்றப்படும் "தெய்வத்திருமலை"யானது, ஐந்து சிகரங்களைக் கொண்டதாகும்; ஆகம முறைப்படி சிவபெருமானுக்கு "**ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம்**" எனும் ஐந்து திருமுகங்கள் உண்டு; அனைத்தும் இணைந்த சிவபெருமானின் அகண்டாகார விஸ்வரூபப் பெருவடிவமே திருஅண்ணா மலையாகத் திகழுகிறது.

"**தட்சிணகைலாயம்**" எனக் கொண்டாடப்படுகின்ற அண்ணாமலையிலே ஈஸ்வரன், "**அருணகிரியோகி**" யாகத் திகழ்வதாகப் புராணங்கள் கூறும்.

இமயமலையைவிட காலத்தால் மூத்ததாகும், தெய்வத் திருமலையான தீபத்திருவண்ணாமலை.

"பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக, பூமியிலே நிலக்கரிப் பாளங்கள் ஏற்படுவதற்கும் முற்பட்டதாக கோடானுகோடி ஆண்டுகள்; பூமி உருவான அன்றே திருவண்ணாமலை உருவானது, கடலிலே மறைந்து போன 'லெமூரியாகண்ட'த்தின் எஞ்சிய ஒரேபகுதி அருணாசலம்" என்று "Message from Arunachala"எனும் உலகப் புகழ் பெற்ற ஆராய்ச்சி நூலிலே "பால்பிரண்டன்" எனும் மேலைநாட்டுப் பேரறிஞர், வரலாற்று ஆதாரங்களுடன் குறிப்பிடுகிறார்.

(எரிமலைக் குழம்புதான் இறுகிப்போய், அண்ணாமலையாக ஆகியுள்ளது என்று ஓர் நவீன விஞ்ஞான ஆராய்ச்சி நிரூபிக்கிறது.)

பூமண்டலத்தின் இதயப் பகுதி போல விளங்கும் திருவண்மலை, **கிருத யுகத்திலே "அக்கினி" மலையாகவும், திரேதா யுகத்திலே "மாணிக்கக்" குன்றாகவும், துவாபர யுகத்திலே தங்க மலையாகவும்,** நாம் வாழும் இந்தக் **கலியுகத்திலே** ஞானியர்கண்களுக்கு **மரகத மேருவாகவும்,** பாமர மக்களுக்குக் **கல் மலையாகவும்** காட்சி தருகிறது.

அண்ணாமலையைச் சுற்றிலும் **இந்திரன், அக்னி, வருணன், வாயு, குபேரன், நிருதி, யமன், ஈசானன்** ஆகிய எட்டு திக்குப் பாலர்களும் தவமிருந்து, பூமண்டலத்தைப் பரிபாலிப்பதற்கான சர்வ வல்லமைகளையும் பரமேஸ்வரனிடம் பெற்றார்கள். கிராம தேவதையாகத் திருவண்ணாமலை எல்லையிலே கோயில் கொண்டிருக்கும் துர்கையம்மன், அசுர சக்திகளை அழிப்பதற்காகவென்றே..., ஆவிர்பவித்த ஆதிபராசக்தியின் அம்சமாகும்.

இமயத்துத் திருமுடியான திருக்கைலாயத்திலே உமா மகேஸ்வரன், 29-மைல் சுற்றளவுள்ள பிரமாண்டமான பனிலிங்கமாக விளங்குகிறார்; திருவண் ணாமலையிலே, எட்டு மைல் சுற்றளவுள்ள ஐந்து சிகரங்களுடன் கூடிய "தெய்வத் திருமலை"யாகப் பிரகாசிக்கிறார்.

ஆதாரத் திருத்தலங்கள் ஆறினுள், மணிபூரகம், பஞ்சபூதத் தலங்களிலே அக்னி, முக்தித் தலங்கள் நான்கிலே நினைத்தாலே முக்திதரும் திருத்தலம்; மூர்த்தி தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கிணைந்தது; ஞானியரும் பாமரரும் இரண்டறக் கலந்த க்ஷேத்திரம், ஒளி ஒன்றே கண்கண்ட கடவுளின் வடிவம் என்பதை- (அகில உலக சர்வ சமய மதங்களுக்கும் இசைவானது) - உணர்த்தும் ஆதித்திருத்தலமாக விளங்குவது திருவண்ணாமலை.

நாட்டிலுள்ள சகல சிவாலயங்களிலும், திருவண்ணாமலைத் திருத்தலத்திற் குறிய லிங்கோத்பவர் இடம் பெற்று விளங்குவதால், இத்திருத்தல மகிமை சொல்லி முடியாததாகும். ("லிங்கோத்பவர்" என்பது அடிமுடி தெரியாத அக்கினி ஸ்தம்பமாகும்.)

தல புராணப்படி திருவண்ணாமலை பற்றிய புராண வரலாற்றினைச் சுருக்கமாக அறிவோமா!

அனைத்துலகங்களையும் ஆக்கவும், காக்கவும், அழிக்கவுமான சர்வ சக்திகளையும் கொண்டு இயங்குபவர்கள், பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகள்.


மகாவிஷ்ணு தந்தை, பிரம்மதேவன் பிள்ளை; இருவரில் "யார் பெரியவர்" என்ற சர்ச்சை அவர்களுக்குள் ஏற்பட்டு மிகப்பெரும் போராட்டமாக மாறிவிடுகிறது...!

படைப்பவரும், காப்பவரும் சண்டையிட்டுக் கொண்டால், பாரிலுள்ள உயிரினங்களின் கதி என்ன ஆவது? அழிக்கும் அதிகாரியான சிவபெருமான் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, அனற்பிழம்பாகி முன் வருகிறார்.

"சர்ச்சையாளர்"களின் முன்னே வானளாவிய தீப்பிழம்பு திடீரெனத் தோன்றுகிறது! திகைத்து நின்ற பிரம்மா, விஷ்ணுக் களிடம் "இந்த அனற்பிழம்பின் அடிமுடிகளை யார் தேடிக் கண்டுபிடிக்கிறீர்களோ, அவர்களே உங்களில் பெரியவர்" என அசரீரி ஒலிக்கிறது!

அன்னப்பறவை வடிவிலே, பிரம்மா முடியைத் தேடியும், வராக உருவிலே மகாவிஷ்ணு, அடியைத் தேடியும் புறப்படுகிறார்கள்.

சிவபெருமானின் திருமுடியிலிருந்து உதிர்ந்து, பல்லாண்டு காலமாக பூமியை நோக்கி வந்து கொண்டிருந்த தாழம்பூவைத் தடுத்து, பொங்கழல்



வடிவனின் (சிவனின்) திருமுடியைத் தான் கண்டுவிட்டதாகப் பொய்சாட்சி கூறவைக்கிறார் பிரம்மா.

அதல பாதாளம் முதலான கீழேழு உலகங்களையும் ஊடுறுவிச் சென்றும், "அடி"யைக் காணமுடியாத மஹாவிஷ்ணு, தனது இயலாமையை... நேர்மையுடன் ஒப்புக் கொள்ளுகிறார். ஈரேழு உலகங்களையும் ஊடுறுவி நின்ற தீப்பிழம்பு, சிவபெருமானாகப் பிரத்யட்சமாகி, **"பொய் சொன்ன தாழம்பு தனது பூஜைக்கு உதவாது என்றும், பொய் சாட்சியைத் தயாரித்த பிரம்மதேவனுக்குப்பூவுலகில் ஆக்கப்பூர்வ ஆலயங்கள் இல்லாமல் போகட்டும்"** என்றும், உண்மையை ஒப்புக்கொண்ட மகாவிஷ்ணுவை சர்வ லோகங்களும் போற்றி வணங்கும் என்றும் தீர்ப்புக் கூறுகிறார்.

கல்விக்கு அரசியான சரஸ்வதி தேவியின் கணவர், படைப்புக் கடவுளான பிரம்மதேவன், செல்வநாயகியான மகாலட்சுமியின் இதய நாயகன் மகாவிஷ்ணு; ஞானமே வடிவாகிய அம்பாளின் தலைவர் சிவபெருமான். **கல்வியும், செல்வமும், ஞானமும் சமநிலை பெறாவிடில், அண்டசராசர அனைத்துயிர்களின் இயக்கமேது ? வாழ்விலே இன்பமேது ?** எனவே... "அடிமுடி"க் கதையை நாம் கீழ்காணும் தத்துவ விளக்கமாக உருவகப் படுத்திக் கொள்ளலாம்!

வித்யா **கர்வமும்,** செல்வச் செருக்கும் "நீயா நானா" என்று போட்டியிட்டன! சத்தியமான ஞானத்தை அடைவதற்கு... ஆணவமும், கர்வமும் கூடவே கூடாது என்பதை மாநுடத்திற்கு விளக்குவதற்காக, அண்டாசராசர இயக்குநர்களான **மும்மூர்த்திகளும்,** மேற்கொண்ட திருவிளையாடற்படிப்பினை நாடகம்தான் தீபத்திருமலையிலே நடைபெற்ற அடிமுடிப்படலமாகும்!

போட்டி, பொறாமை, பொய், லஞ்சங்களைத் தவிர்த்து, நாட்டு மக்கள் எல்லோரும் வாழ்வதற்காகவே தேவாதி தேவர்களும், தேவியர் மூவரும் ஆடிய நாடகங்கள்தான் நமது புராணங்கள்!

"நாடகம்" என்றதும், முழுதும் "கற்பனை" என்ற அவசர முடிவுக்கு இளைய தலைமுறை வந்துவிடக் கூடாது! புராணங்களிலே இல்லாத அறவழி முறைகளோ, ஆளும் நெறிகளோ, உயிரின வகைகளோ, ஊர்திகள் வடிவமோ, ஆயுத வகைகளோ இதுவரை எந்த நாட்டவராலும் கண்டுபிடிக்கப் படவில்லை!

புராணமெனும் புராதன மாளிகையின் புழக்கடை, கழிவுநீர்க் கால்வாய்களை மட்டும் தேடி முகர்ந்து, விமர்சித்து, "சீச்சி" என்பதெல்லாம், ஒன்று கையாலாத் தனம், அல்லது... பாமரரை ஏமாற்றிப் பிழைக்கும் அப்பட்டமான பகல் வேஷம்!

புராண அரண்மனையின் கருவூலம், தர்பார் ஹால், பூஜாரும், வசந்த மஹால்... வரவேற்புக் கூடம் இங்கெல்லாம் நிறைந்துள்ள அற்புதங்களை பகுத்தறிவுக்கும் பொருந்துகின்ற அரிதான உண்மைகளை இளையதலைமுறைக்கு யார் அறிமுகம் செய்வது ? நூற்று ஒராண்டு நம்மோடிருந்த காஞ்சி **ஸ்ரீ பரமாச்சாரியாரின்,** படிப்பினைதரும் "அருள்வாக்கு"களையும்; நம்காலத்து அறுபத்து நான்காவது நாயன்மாராக விளங்கி, நாளொரு ஊர், பொழுதொரு மேடையென்று

அருளுரை, விரிவுரை செய்து வந்த, திருமுருக **ஸ்ரீ வாரியார் ஸ்வாமியின்** "கதை" களையும், கருத்துரைகளையும் எத்தனை பள்ளி, கல்லூரிப் பிள்ளைகள் அறிந்துள்ளார்கள்?

வரலாறு அறிவதற்காக 1991-ல் திருவண்ணாமலை போயிருந்தேன். அங்கு வாரியார் சுவாமிகள் இருந்தார், விபரம் கூறினேன். உடனே பாடிக்கொடுத்தார்கள் ஓர் வெண்பா...!

"ஏழுமலையோனும் இந்திரனும் மாயவனும், சூழுமலை, துன்பந்துடைக்கு மலை - வாழமரர் பன்னுமலை, ஓசைமுனி பாடுந்திருப்புகழ், மன்னுமலை. அண்ணாமலை"

அண்ணாமலையிலே அன்று தீபத்திருவிழா. ஆலயத்துள் சென்றேன். மாலை ஆறரை மணிக்கு **பஞ்சமூர்த்தி** களும் மண்டபத்திற்கு வந்து நின்றார்கள். ஐந்து மஹாதீபாராதனை உயர்ந்தது. அதிர்வேட்டின் முழக்கமும், "அரஹரா" எனும் பக்தர்களின் பரவசமும் ஓர் புனிதப் பேரொலிப் பிரளயமே நிகழ்ந்தது. மறுகணம், மலையுச்சியிலே... கற்பூரக் கொப்பரையிலே தீ ஜூவாலை கிளம்பியது.

பொங்கழலின் செம்மையிலே அண்ணாமலைப் பூரணனைக்கண்டு லட்சோப லட்ச மக்களின் ஆனந்தக் கூத்தாடல்! பூலோக கைலாயமாகவே மாறிவிடுகிறது. "**திருவருணை**" எனும் தீபத் திருமலையான திருவண்ணாமலை.

அமிழ்தினும் இனியதோர் செய்தியாக தமிழக அரசு தலைமைச் செயலகத்திலிருந்தே ஆலயச் சீரமைப்புத் தென்றல் வீசத் தொடங்கியுள்ளது! (**ஆலய நிர்வாகத் தனிவாரியம்** ஏற்படப் போகிறது - தினமணி 27-9-1991) மாண்புமிகு நமது முதலமைச்சர் **ஜெ.ஜெயலலிதாவின்** வேண்டுகோளுக்கு இணங்க, ஆலயப் பாதுகாப்பு நிதிக்குக் கோடிக்கணக்கிலே குவிந்துகொண்டு இருக்கிறது; நமது ஆலயங்கள்பற்றிய புள்ளி விபரங்களைப் பார்க்கும்போது, "பாதுகாப்புநிதி"யைக் கேட்டுப் பெறுவதைவிட... பழம்பெரும் புகழ்மிகு ஆலயங் களிலே பத்திரமாக-இருந்த - இருந்திருக்க வேண்டிய - நிதிகளையே மீண்டும் சேகரித்தால், பலநூறு கோடிப் பொருளாதாரம் பெருகிவிடும்!

27-9-91 "தினமணி"க் குறிப்பின்படி நமது ஆலயச் சொத்துக்களிலே... **குத்தகை பாக்கி மட்டும் 64,90 கோடியாம்!** 15-12-89 தேதி "கல்கண்டு"ச் செய்தி யொன்று... "**தமிழ்நாட்டில் கோயில் நில ஆக்ரமிப்பால் 35,000 கோடி ரூபாய் வருமான இழப்பு**" என்கிறது. இவை மட்டுமா?, "நிலமே இல்லாத ஒருவர், அடி அண்ணாமலை கோயில் நிலத்தை விற்றுப்பணம் பண்ணுகிறார்" என்ற ஓர் அபாய அறிவிப்பு (29-11-91) விளம்பரமே வெளியாகியுள்ளது!

இத்தனை கோடி ரூபாய் இழப்புகளையும் மீட்கும் நிலை ஏற்பட்டால், எத்தனை பகாசுரத்திருப்பணிகளை கோயில்களில் மேற்கொள்ளலாம்! அடே யப்பா...!!

முழு முதல் தேவையாக... மாவட்டவாரியாக ஆலயப் பட்டியல் வேண்டும்! கோயில் தவறாமல் தலபுராணம் அடக்கவிலையிலே இருந்தே தீரவேண்டும்.

ஆதீனமடாலய, அறநிலையத்துறை நூலகங்களிலே, நூலாம் படைகூட அடிக்கப் பெறாத பீரோக்களிலே, நமது சமயத்தின் மேலான புராண, இதிகாச இலக்கியங்கள் புழுதி படிந்து-சிறைப்பட்டுக்கிடக்கின்ற-அவலநிலை மாறுவதாகுக!

ஆலயவளங்கள் பெருகி, ஊழியர் வறுமை அருகி, ஸ்தல புராணங்களும், **வியாச முனிவரின்** பதினெட்டுப் புராணங்களும் **(புராணம்-18; உபபுராணம்-18; உபபுரான உபபுராணங்கள்-18 ஆக மொத்தம் 54-புராணங்கள்)** காலத்திற்கேற்ற வகையிலே-எளிய நடையில்-பதிப்பிக்கப்பெற்று, மக்கள் கையிலே-குறிப்பாகப் பாமரர், வாங்கிப் படிக்கும்படியான மலிவு விலையிலே வழங்கப்படவேண்டும்.

ஞான ஒளித்திருத்தலமாகிய திருவண்ணாமலை பற்றிய இதிகாச புராண சரித்திரக் குறிப்புகளை அறியுமுன்னால், அண்ணாமலையாரின் இன்னருள் பெற்ற நல்லற ஞானியர் சிலரை அறிவோமா!

"திருவண்ணாமலைக்கு வந்து ஞானகுருவாக இரு" என்று பொங்கழல் வடிவனாகிய ஸ்ரீஅண்ணாமலையாரின் நேர் முக அழைப்பினால் ஞானியானவர்! சீடரையே "குரு"வாக்கிய செந்தமிழ் யோகி, **குகைநமசிவாயர்.**

உண்ணாமுலை அம்மனிடமே உணவைக்கேட்டு (பாடி) தேவியின் திருக் கரங்களால் பொங்கலைப் பெற்றவர்! தில்லைக் கோயிலின் திரைச் சீலையிலே தீப் பிடித்ததை, திருவண்ணாமலையிலிருந்தபடியே அறிந்து... தீயைத் தேய்த்து அணைத்த ஞானச் செல்வர், **குருநமசிவாயர்.**

ராஜாவின் இறந்த குதிரையை உயிர்த்தெழச் செய்து, திருவண்ணாமலை ஆதீனத்தின் முதல் குருவாகி, குன்றக்குடி ஆதீனத்தை ஸ்தாபித்தவர். **ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி தேசிகர்.**

தீர்த்தக்குளத்து நீரையே திரட்டிக் குடமாக்கி, (1290) அதிலேயே தண்ணீரை எடுத்துச்சென்று, அண்ணாமலையாரை அபிஷேகித்த சித்தமகா சிவயோகி, **பாணிபத்திர சுவாமி.**

திருவண்ணாமலைப் பகுதியிலே ஏற்பட்ட பஞ்சத்தைப்போக்க, ஏரியை அமைத்து, உண்ணாமல், தவமிருந்து மழையைப் பொழிய வைத்து ஊரையே செழிக்கவைத்த, **மங்கையர்க்கரசியார்.**

தொண்ணூறு வயதுவரை நாள்தோறும், மலையைத் தவறாமல் வலம்வந்து, அந்தப் புண்ணியத்தால் அண்ணாமலையானையே நேரில் கண்டு, பரவசப் பேறு பெற்றவர், **சோணாசலத் தேவர்.**

யாழ்ப்பாணத்திலே பிறந்து, "தில்லையாடி"யின் பேரருளால், திரு அருணையிலே பெரும்புதையல் பெற்று, திருக்குளமும், திருமடமும் அமைத்து நல்லறங்களை நாளெல்லாம் கூறி மக்களைக் காத்த, **ஞானப்பிரகாசர்.**

பாதகரைத் திருத்துதற்காக... பழுக்கக் காய்ச்சிய இரும்புச் செருப்பை அணிந்து நடந்தவர்; படுபாவிகளின் கொடுவாளால் இருதுண்டுகளான பசுவை, உயிர்ப்பித்த பெருஞ்சித்தர், **வீர வைராக்யமூர்த்தி சுவாமிகள்.**

ஐநூறு சீடர்களைப் பாடுபட்டு உருவாக்கி, அண்ணாமலையின் புகழைப் பரப்பியவர்! ஆதார நூல்கள் பலவற்றை எழுதி, சைவசமயப் பெருமைகளை உலகறியச் செய்த, வேதாகம, சமயசாத்திர வித்தகரான **அப்பையதீட்சிதர்.**

காவிரியாற்றின் நீரையே எண்ணையாக்கித் தீபமேற்றியவர்! கல்லாலான நந்திக்குக் கடலையைக் கொடுத்து உண்ணச் செய்தவர்! பூமியிலிருந்து தீ ஜுவாலையை வரவழைத்து தனது திருமேனியையே... அக்னி தேவனுக்கு ஆஹுதியாக்கிய, **ஆதி சிவப்பிரகாசர்.**

ஊமையாய்ப் பிறந்து, அருணையானின் பேரருளால், பாடும் திறனைப் பெற்றவர்! விராலிமலை முருகப் பெருமான் கையால் பகலுணவு கொண்டவர்! தில்லையிலே திளைத்து, திருவாரூரில் தியாகேசர் சன்னிதி முன்னால் சிவனடிச் சோதி கண்டு அதிலே கலந்து ஒளியான, **தட்சிணாமூர்த்தி சுவாமிகள்.**

காணாமற்போன பூஜைப் பேழையை, கனலானின் திருக்கரங்களால் பெறும் பேறுபெற்றவர்! 16-ம் நூற்றாண்டில் குருதேவர் மடத்தில் தீட்சைபெற்று, 'சிவப்பிரகாசர்'எனும் ஞானியைக் கண்ட ஞானஞானி, **குமாரசாமிப் பண்டாரம்.**

கரிகாற்சோழனின் காலத்திய பாதாள லிங்கமூர்த்தியை 16-ம் நூற்றாண்டு இறுதியிலே பூஜித்தவர்! அதேஇடத்தில் விஜயநகர மன்னர் கிருஷ்ணதேவராயர், ஆயிரக்கால் மண்டபம் கட்டியபோது, பாதாள லிங்கத்தை மாற்றிவிடாமல் பாதுகாத்த ஞானயோகி, **அழியா விரதம் கொண்ட தம்பிரான்.**

தனது மரணத்தைத் தானே உணர்ந்து "ஜீவசமாதி" கண்டவர். ஜில்லா கலெக்டர் ஐடன்துரையின் தீராத வியாதியைத் தீர்த்துவைத்தவர்! இருபுறமும் வரிப்புலிகள் காவலிருக்க ஞானத்தவம் செய்தவர். (ஈசான்ய மடாலயத்தின் ஆதி குரு 1750-1829). **ஸ்ரீலஸ்ரீ ஈசான்ய ஞானதேசிகர்.**

கேரள மாநிலத்தில் பிறந்து, பாரத புனித க்ஷேத்திரமெங்கிலும் பாத யாத்திரை புரிந்து, தியானத்திற்குகந்த தெய்வத் திருமலை, திருவண்ணாமலைதான் எனத் தீர்வு கண்டவர்! (1923) மேடமலையில் முருகனுக்குக் கோயிலமைத்தவர்! வாழ்வனைத்தும் மக்களிடம் தொடர்ந்து ஈடுபாடு கொண்டு, பக்தியை வளர்க்கப் பாடுபட்ட, **சற்குரு சுவாமிகள்.**

பழனியிலிருந்து திருவண்ணாமலை வந்து, ஆலயத்துள் **உழவாரப் பணி** (தேவையற்ற செடி, கொடி, முட்களை நீக்குதல்) புரிந்தவர்! அன்னக்காவடி சுமந்து, அடியார்களுக்கு உணவளித்தவர்! பாதாள லிங்கக் குகையிலே, (1922) **பாலரமணரைப்** பலகாலம் பாதுகாத்த சீலமுனிவர்; **பழனிச்சாமிகள்.**

பூமியடிப்புதையலையும் ஊடுறுவிக் காணும் ஞானவிழி பெற்ற புண்ணியத் தாய்! பாதிக் கோபுரமாய் நின்ற திருவண்ணாமலை வடக்கு கோபுரத்தைப் பூர்த்தி செய்தவர்! மக்களின் தீராத நோய்களையெல்லாம், பஞ்சாட்சரம் சொல்லித் திருநீறு தந்ததன் மூலம் தீர்த்துவைத்த புனிதவதி **அம்மணியம்மாள்.**

நெல்லையிலே அவதரித்துத் திருவருணையிலே முருக தரிசனம் கண்டவர்! எல்லையிலா தமிழ் வண்ணப் பாக்களோடு, கம்பத்து இளையனாருக்கு (திருவண் ணாமலை முருகனுக்கு) வேல்கொடுத்து வாழ்த்திய இசைஞானி, **வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்** (1839-1898).

கார்த்திகைதீபப் பரவச நிலையிலே, (1960) காவல் தலைவரால் கன்னத்தில் அறைபட்டவர்! ஊரார் கிளர்ந்தெழ, "அனைத்துமென்முன்வினை" என்றவர்! சித் தாந்த வேதாந்தத் தத்துவங்களை யாவர்க்கும் புரியும் வகையில் விளக்குவதிலே சிம்மமாய்த் திகழ்ந்த, **காரியானூர் நடேச சுவாமிகள்.**

தீபத்திருமலைப்பாதையிலே, அங்கம்புரளஉருண்டு அன்றாடம் வலம் வரு வதையே லட்சியமாகக் கொண்டவர்! நாயன்மார்களின் வாழ்வையே வேதமெனக் கண்டவர்! திருவண்ணாமலையிலுள்ள அறுபத்துமூவர் மடாலயத்தின் ஆரம்பகால ஞானகுரு, **"அங்கப்பிரதட்சண" அண்ணாமலை சுவாமிகள்.**

எல்லாம் "சிவா", எப்போதும் "சிவா" எனச் சொல்லிச் சொல்லியே... அண்ணாமலையானின் திருவருள் பெற்றுத் தொல்லையிருள் கடந்து, சிவஞான எல்லையிலே ஒளிகண்ட தூயவராம், **சிவா சுவாமிகள்.**

திருவண்ணாமலைத் தேரடி வீதியிலே - புரண்டபடி கிடந்து, அருவுருவான அண்ணாமலையே, உமா மகேஸ்வரனாகக் கண்டு, தியானித்தபடி வருவோர்க் கெல்லாம் பேரருள் புரிந்து பார்புகழ் பெற்ற **பத்ராசல சுவாமிகள்.**

கருவிலேயே திருவுடையவராய் காஞ்சியில் பிறந்து, திருவண்ணாமலைத் தெருக்களிலே.. புரண்டு, உருண்டு, சாக்கடைச்சகதி நீரிலே அளைந்து, நனைந்து... பார் வைக்கு எளியனாய், பல தெய்வ ஒளியனாய்... அகில உலகையும் திருவருணைத் தெருவில் நின்றபடியே மனக்கண்ணால் காணும் பேராற்றல் பெற்ற... ஞானச்சித்தர், **சேஷாத்திரி சுவாமிகள்** (22-1-1870 * 4-1-1929).

திருச்சுழி கிராமத்திலே பிறந்து, மதுரையிலே கல்வி பயின்று, திருவண்ணா மலையின் நினைவால் மகரிஷியாகி உலகப் புகழ்பெற்றவர்! மேலைநாட்டு... **F.H. ஹம்ரீஸ், பால்பிரண்டன், மேஜர் சாட்விக், விஞ்ஞானி கார்ல்யுங்** முதலான பேரறி ஞர்களால் போற்றி வணங்கப் பெற்றவர்! **மகாத்மா காந்தியடிகள்,** கவிக்குயில் **சரோஜினி, ராஜேந்திரபிரஸாத், ஜம்னாலால்பஜாஜ், ராஜாஜி** போன்ற இணையிலா தேசியத் தலைவர்களின் நினைவெலாம் நிறைந் திருந்த பிறவித் துறவி, **ரமண மகரிஷி** (30-12-1879 = 14-4-1950).

"அண்ணாமலையார்க்கே என்னை ஆளாக்குவேன்" என்று கன்னிப்பருவம் வரை காத்திருந்தவர்! கண்ணுதற் கடவுள் கனவிலேவந்தார்; கண் விழித்ததும், தலைமுடி சடையாகி விட்டிருந்தது! திருவண்ணமலைக்குச் சென்று இறுதிவரை ஆலயத் திருப்பணியாற்றிய, **சடைச்சியம்மாள். (ஐடினி சண்முக யோகினி)**

துறவுகொள்வதே பொது சேவைக்கு உகந்ததென்று 36 வயது முதல் 103 வயது வரை (1882-1985) திருவண்ணாமலை, மற்றும், தருமபுரிப் பகுதியிலே திருப்பணி பலபுரிந்து, சமுதாய மக்களுக்கான அத்தியாவஸ்யச் சேவைகளையும், அவசரத் தேவைகளையும் மேற்கொண்டு, பூர்த்திசெய்து, அண்ணாமலையானின் பேரருள் பெற்ற **"தம்மணம் பட்டி" அழகானந்த அடிகள்.**

அண்ணாமலையின் மண்ணிலே, ஓரடிக்கு 1008, லிங்கங்கள் உண்டு என்பதை உலகுக்கு உணர்த்தியவர்! பஞ்சாட்சர **'நமசிவாய'** 1008 ஜபத்துடன் "தெய்வத்திருமலை"யை ஒவ்வொரு அடியாகக் நடந்து, கடந்து வலம்வந்து, பேரின்ப ஞான நலம் கண்டு பிறவிப் பிணி, தீரப்பெற்றவர் **இறை சுவாமிகள்.**

1917-ல் பிறந்து, ஆயிரத்து எட்டு முறை அண்ணாமலையை-அங்கப் பிரதட்சண (வலம்) கண்டவர்! அருணையிலுள்ள 360 தீர்த்தங்களையும் கண்ட கருணைவள்ளல்! தேவரும், சித்தர்களும் கிரிவலம் புரிவதை ஞானக் கண்களால் அறிந்து கூறிய மாதவச்செல்வர், **இசக்கி சுவாமிகள்.**

விரட்டுவதற்காக வீசிய கல், பறவையின் உயிரையே வாங்கிவிட்டதால், கங்கைக் கரையிலே பிறந்த (1918) அவர், அமைதியைத் தேடி, காவிரிக்கரை வரை அலைந்தார்! கர்னாடக **இராமதாஸர்,** புதுச்சேரி **அரவிந்தர்** - என்று ஓடி நடந்து முடிவிலே **ரமணமகரிஷியிடம்** சரணடைந்தார்! குருவருளால் அர்த்த நாரீஸ்வரரின் திருவருள் பெற்றார்! 1959 முதல் "குடுகுடுப்பாண்டி" போன்ற திருக்கோலமுடன் திருவண்ணமலையிலே உலாவரும் தியான மகா சிவயோகி, **ராம் சுரத்குமார்.**

யோகி (ஞானி) யரின் புறத்தோற்றத்தைக் கண்டு நாம் ஏமாந்துவிடக் கூடாது!, சாக்கடையில் புரண்டு திரிவாராம் ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகள், ஆனால் அவரது திருமேனியில் சந்தனம் மணக்குமாம்! (15-11-91) திருவண்ணாமலை ஆலயத்துள் நடந்த உபந்யாத்திலே, திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் சொன்னது-ஆறு வயதிலே சேக்ஷாத்திரி சுவாமிகளை நேரில் கண்டவர் ஸ்ரீவாரியார்)

அருணாசலத்திலே இருந்த-இருக்கும்- ஞானியர் மற்றும் சித்தர்களின் தொகை, அளவிட முடியா ததாகும்!

பன்னிரு ஆண்டுகள் தனிமையில் தொடர்ந்து அண்ணா மலைமேல் தவஞ்செய்த **ராதாபாய் அம்மை.** தலைச்சேரி **லட்சுமிதேவி, யோகினி லட்சுமி தேவி...** இப்படி எத்தனையோ "காரைக்கால் அம்மை"கள் அண்ணா மலைமேல் உண்ணாமல், உறங்காமல் உலக நலனுக்காகத் தவம் செய்துள்ளனர். இன்றும் செய்துகொண்டு வருகின்றனர்! பதினைந்து ஆண்டுகளாக மலைமேல் குகைகளை மாற்றிக் கொண்டு ஏகாந்தமாகத் தவம் செய்கிறார் ஓர் "ஸ்வீஸ்" நாட்டவர்; அவர் பெயர் **வர்னர்.** கேரளத்தைச் சேர்ந்த **"வல்லிக்கா"** எனும் சன்யாசினி, யாரும் போக முடியாத ஓர் குறுகிய குகையிலே அருந்தவம் செய்கிறார்; இப்படி எத்தனை யெத்தனையோ... சித்தர்களின் ஜீவபூமியான திருவண்ணாமலை பற்றிய வேத, புராண, இதிகாச, பாராயண, வரலாற்று இலக்கியங்களை ஓரளவு அறிவோமா!

(இ)ருக்வேதம், அதர்வண வேதம் ஆகிய இரண்டிலும் கேனோபநிஷத், சரப உபநிஷத், சூதசங்கிரை, ருத்ர சங்கிதை, பாஸ்கர சங்கிதை... முதலான சம்ஹிதை களிலும் அருணாசலத்தின் மகத்துவக் குறிப்புகள் உள்ளன.

தொல்காப்பியம், அகநானூறு, திருமந்திரம், ஜீவகசிந்தாமணி, சிவரகஸ்யம், சிவபுராணம், லிங்கபுராணம், கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், மூவரின் தேவாரம், மணிவாசகரின் திருவாசகம், பதினொன்றாம் திருமுறை, அருணகிரிநாதரின் திருப்புகழ்... முதலானவற்றுள், திருவண்ணா மலையின் மூர்த்தி, தீர்த்த, தலமகத்துவங்கள் இடம்பெற்றுள்ளன.

மறைஞான தேசிகர் அருளிய **"அருணகிரிப் புராணம்"** பெருங்கவிஞர், **சைவ எல்லப்ப நாவலர்** எழுதிய **"அருணாசலப் புராணம்"** ஞானாச்ரம, **ஈஸ்வர சுவாமிகளின், அருணாசல மகாத்மிய வசனம்,** முதுபெரும் புலவர் அ. பாண்டுரங் கனார் மிகச் சிறப்புடன் உருவாக்கிய **"அருள் நிறை அண்ணாமலை"**, சைவசமாஜ, **மா. பாலசுப்பிரமணிய முதலியாரின்** "திருவண்ணாமலை வரலாறு", ஈசான்யமடம் **இராமனாதசுவாமிகளின், அண்ணாமலைத் தல விளக்கம், புலவர் சண்முக அருணாசலம்** தொகுத்த **"திருவண்ணாமலைத் தலவிளக்கம்"** சோம-லெ அவர்கள் பதிப்பித்த **அண்ணாமலையார் கோயில் கும்பாபிஷேக (1976) மலர்,** ஆனந்த விகடனில் **பரணீதரன் கண்ட... "அருணாசலமகிமை"**, புலவர் **செந்துறைமுத்து** எழுதிய **"திருவண்ணாமலை"** மற்றும் பல வெளியீடுகள், அண்ணாமலையின் புராண இதிகாச, சரித்திர வரலாறுகளை விரிவாகக் கொண்டவை.

ஸ்ரீ அண்ணாமலையாரையும், உண்ணாமலை அம்மையையும் பாடிப்பரவும் பல நூறு, வழிபாட்டுக் குறுநூல்கள் உள்ளன... அவற்றுள் சிலவற்றை அறிவோமா!

அண்ணாமலை வெண்பா;... சதகம்;... வண்ணம்;... பஞ்ச ரத்னம்;... நான்மணிமாலை;... நாமாவளி;... அண்ணல் மாலை * அருணாசலேசர் வருகைப் பதிப்பகம்;... உயிர்வருக்கம் படைத்தற் பாமாலை;... பதிகம்;... நவகாரிகைமாலை;... விருத்தம்;... புராணகீர்த்தனைகள். * **அருணை** உச்சி விநாயகர் பஞ்சரத்னம்;... தியான பஞ்சகம்;... யமக அந்தாதி;... தியான பஞ்சகம்;... பதிற்றுப்பத் தந்தாதி;... சிலேடை வெண்பா மாலை;... திருத்தொண்டர் ஆனந்தக் களிப்பு;... தனி வெண்பா மாலை;... மற்றும் ஆனந்தக் களிப்பு;... அருணகிரி அந்தாதி * **ஸ்ரீ ஆதி சங்கரரின் அருணாசல அஷ்டகம், அருணாசல** நவமணிமாலை;... சதகம்;... பதிகம்;... அட்சரமாலை;... பஞ்சரத்னம்;... அட்சரமணிமாலை* திருவருணை அந்தாதி;... இரட்டை இருவர் மணிமாலை;... கலிவெண்பா;... கலியாண சுந்தரர் பதிகம்;... பதிற்றுப் பத்தந்தாதி;... தனி வெண்பா;... கலம்பகம்;... உச்சி விநாயகர் பஞ்சரத்னம் * **திருவண்ணாமலை** திருவருட்பதிகம்;... கோவை;... வழிநடைப்பதம்;... பதிகங்கள்;... மற்றும் திருவண்ணாமலையார் வண்ணம். * **சோணாசல** வெண்பா;... சதகம்;... பதிகம்;... மற்றும் ஸ்ரீ அபீதகுஜாம்பாள் ஜ்வர நிவாரணாஷ்டகம், சோணசைலமாலை, **உண்ணாமலை அம்மன்** பதிகம்;... சதகம்;... வருகைப் பதிகம்;... பிள்ளைத்தமிழ் மற்றும் சாரப்பிரபந்தம், கார்த்திகைத் தீபவெண்பா, உருத்திர சங்கிதைத் தோத்திரம், அட்சரப் பாமாலை, வல்லாள மகாராஜா நாடகம், வல்லாள மகாராஜன் கும்மி முதலானவற்றோடு... இன்னும் எத்தனையெத்தனையோ.....

"வல்லாள மகாராஜன்" என்றதும், அருணாசல புராணத்தோடு இணைந்த பற்பல "கிளை"க் கதைகளிலே... ஒன்றிரண்டை இங்கே நினைவுப்படுத்திக் கொண்டு ஆலயத்துட்செல்வோம்; முதலிலே... இத்தலத்திற்குரிய. கைலை...க் "கிளை"க் கதை ஒன்றைக் காண்போமா!

கைலை மாமலைத் தலைவனாகிய ஸ்ரீபரமேஸ்வரன், பெண்மைக்குச் சரிபாதி உரிமையைச் சாசனமாக்கிய திருத்தலம் திருவண்ணாமலை! உரிமையென்றால் சாதாரண உரிமையா? "என்னில் பாதி நீ" என்று உமாதேவியைச் சிவபிரான் ஏற்றுக்கொண்டு, அர்த்தநாரீஸ்வர ராகக் காட்சி தந்த விதமாவது..."

சிவபெருமானின் இருவிழிகளும், சூரிய சந்திரர்கள் ஆகும்! சந்திர சூரியர்களான ஈசனின் விழிகளை மூடினால், அண்ட சராசரங்களும் என்ன ஆகும் என்பதை, விளையாட்டாக அறிய ஆசைப்பட்டாள் உமாமகேஸ்வரி; ஆசையைச் செயலாக் கினாள்; விளைவு, பெரும் விபரீதமானது!

ஈரேழு பதினான்கு உலகங்களின் ஜீவராசிகளும் குருடாகி, சர்வ லோகங்களையும் இருள் மூடிவிடுகிறது. அனைத்து உலகங்களிலிருந்தும் அபயப் பேரொலி எழுகிறது! உடனே ஈசன், தனது மூன்றாவதுவிழியாகிய (அக்னி) நெற்றிக் கண்ணைத் திறந்தார்! ஒளிநிறைந்து, அனைத்துலகமும் இயல்புநிலை கண்டன! தேவர்களின் ஒரு நாள், பூமியிலுள்ள மானுடர்க்கு ஓராண்டு அல்லவா; சில வினாடி நேரமானது, பூமியிலே பல ஆண்டுகளாகப் பரிணமித்தது! மானுடர் துடித்த அந்த பாவத்திற்குப் பிராயச்சித்தமாக... கைலையிலேயிருந்து... புறப்பட்டு காஞ்சிக்கு வந்து தவமிருக்கிறாள் ஸ்ரீபரமேஸ்வரி.

கம்பாநதிக்கரையிலே, ஈஸ்வரி காமாட்சியாகி சிவலிங்கம் வைத்துத் தவமிருந்ததும், நதியிலே திடீர் வெள்ளம் ஏற்பட்டதும்,... லிங்கத்தை ஆரத்தழுவிக் கொண்டதும் ஏகாம்பரேஸ்வரர் பிரத்யட்சமானதும் காஞ்சிப் புராணத்தில் இடம் பெற்றவை. தவறு செய்து... அதைத் தானே உணர்ந்து, பிராயச்சித்தமும் செய்து கொண்ட மகேஸ்வரியை "திருவண்ணாமலைக்கு வா... அங்கு உனக்கு ஒரு பரிசு வழங்கப்படும்" எனக்கூறி மறைந்தார் ஸ்ரீபரமேஸ்வரன்.

திருவண்ணாமலை பவளக் குன்றுப் பகுதியிலே இருந்த, கௌதம முனிவரின் பாதுகாப்பிலே தேவி தவமியற்றினாள். தவத்தைக் கலைக்க முயன்ற மஹிஷாசுரனை, துர்கையை சிருஷ்டித்து அழித்துவிட்டு... (சிவபக்தனாகிய அசுர னைக் கொன்ற பாவம் தீர "கட்கதீர்த்தம்" உண்டாக்கி அதனால் புனிதம் பெற்று) தவத்தைப் பூர்த்தி செய்தாள் சிவசங்கரி. தவம் கனிந்ததும் அண்ணாமலைச் சிவம் வந்து... "**இன்று முதல் நீ என்னில் பாதி, நான் உன்னில் பாதி நாம் இருவரும் ஒருவரே**" என்றதும், "**சத்**" ஆகிய சக்தியும் "**சித்**" ஆகிய சிவமும் இணைந்து, "**சத்சித்**" ஆகி ஆனந்த வடிவம்பெறுகிறது. அந்தச் **சச்சிதானந்த** மூர்த்தமே **அர்த்தநாரீஸ்வரர்**. (ஈசனின் விழிகளை மூடினால், அனைத்துயிரும் தவிக்குமென்று ஈஸ்வரிக்குத் தெரியாதா! பிறகு எதற்காக இந்த விபரீத விளையாட்டு? திருவண்

ணாமலையிலே "கார்த்திகை தீப விழா" ஏற்பட்டு, **திருவண்ணாமலை தீபத்தை தரிசித்தவர்களின் இருபத்தோறு தலைமுறையும் புனிதமடையும்**" எனும் கைலாச பதியின் திருவருளைப் பூலோக மக்களுக்குப் பெற்றுத்தருவதற்காக, லோக மாதா மேற்கொண்ட தியாக நாடகமே அது) ஒரு மானுடனுக்கு மகனாக, சிவபெரு மான் அவதரித்த, மகத்தான திருத்தலமும் திருவண்ணாமலையே! அந்தத் திரு விளை யாடலின் சுருக்கமாவது...

திருவண்ணாமலையைத் தலைநகராகக் கொண்டு அப்பகுதியை (14-ம் நூற்றாண்டு என்பர்) **வல்லாள மகாராஜா** ஆண்டுவந்தார். அவருக்கு இரு மனை வியர் இருந்தும், பிள்ளைப் பேறு இல்லாமலிருந்தார்.

வளையாத செங்கோலுடன், சகலவித தர்மங்களையும் குறைவின்றிச் செய்தபடி... "எல்லாம் சிவனருள்" என இருந்த வல்லாளனைச் சோதித்து, நல்லருள் தரத் தீர்மானித்தார் ஞானத்திரளாகிய சோணாசலர்!

"யார் எதைக் கேட்டாலும் இல்லையெனாது வழங்குவேன்" என்ற வல்லாளன் முன்னால், சங்கமர் (சிவனடியார்) வேடத்திலே வந்த ஈஸ்வரன், "ஞானத்தீயால் புடம் போட்டு எடுத்த எமதுள்ளம், காமத்தீயால் மீண்டும் கனலாகி விட்டது... தாசி ஒருவளின் துணையைத் தானமாகத்தா" என்றார். (அந்நாளிலே கணிகையர் குலத்தொழில் அங்கீகரிக்கப் பெற்றிருந்தது). "மகாபாக்கியம்" என்ற மன்னன், அமைச்சர் மூலமாக...க் கட்டளை பிறப்பித்தான்!

பெரும் பொருளோடு அரண்மனைச் சேவகர், கணிகையர் இல்லம் சென்று மன்னரின கட்டளையைக் கூற, "இன்று நாங்கள் யாருமே... அடியவரோடு உறவாட முடியாதபடி ஏற்கனவே ஒவ்வொருவருக்கு அடிமையாகி விட்டோம்" என்று அனைவருமே உண்மை நிலையைக் கூறிவிடுகின்றனர்.

விபரம் அறிந்த வல்லாள மகாராஜா துடிக்கிறார்! வேடமிட்டு வந்த சங்கர ரோ, காமாக்கினியால் தான் கருகிவிடப் போவதாக நடிக்கிறார்! கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாத நிலையிலே... இனியும் உயிரோடு இருப்பதா... எனும்போது... மன்னரது இரண்டாவது மனைவியான **சல்லமாதேவி,** கணவரின் துயரைத் தீர்க்க ஓர் மாபெரும் தியாக முடிவுக்கு வருகிறாள்! அதன்படி; "உத்யானவன" உல்லாச மாளிகையிலே தங்கியிருந்த... சிவனடியாரிடம் சந்ரோதய மானதுமே, சர்வாலங்காரக் கோலமுடன் இளையராணி வந்து நிற்கிறாள்!

ஆழ்ந்த "தூக்கம்" போலக்கிடந்த அடியார், விழிப்பதற்காக ஏதேதோ ஒலி கொடுத்தும் பயனில்லாத நிலைகண்டு பதறினாள்! நள்ளிரவும் கடந்தது! கணவரின் வாக்குப் பொய்த்துவிடுமே என நடுங்கிய படியே "தூங்கி"க் கிடந்த அடியாரைத் தூக்கித்தன் மடியிலே தாங்கிக் கொள்கிறாள் ராணி சல்லமாதேவி. மறுகணமே சிவனிடியார்வடிவம், ஐந்துமாதச் சிறுகுழந்தையாகி, ராணியின் மடியிலே தவழுகிறது. அதிர்ச்சியால் அலறினாள்! ஓடிவந்த வல்லாள மகாராஜா, மனைவியின் கரங்களில் சிரிக்கும் குழந்தையைக் கண்டு திகைத்தார்! நடந்ததைக் கூறினாள் சல்லமாதேவி. "ஈஸ்வரா! இது என்ன சோதனை?" எனத்துடித்த மன்னனின் முன்னால், குழந்தையானது கோடிப் பிரகாசப் பேரொளிப் பின்னணியிலே ஈஸ்வரனாகியது.

"ஹே ராஜன்! பிள்ளையில்லாதார் அடையும் "புத்" எனும் நரகம் இனி உனக்கில்லை! உனது அந்திமக் காலத்தே வந்து இருந்து, நாமே உனக்கான ஈமக்கடன்களை முடிப்போம்! நீயும் உன் சுற்றமும் நீடுழி வாழ்வீர்களாக..." என அருள் பாலித்து மறைகிறார் அண்ணாமலையார். **(இன்றும் ஒவ்வொரு மாசியிலும் "பள்ளி கொண்டாபட்டு" எனும் ஊரிலே, அண்ணாமலையார் (உத்ஸவர்) சென்று, வல்லாள மகாராஜனுக்குச் சிரார்த்தம் செய்யும் திருவிழா நடைபெறுகிறது)**

வஜ்ராங்கதபாண்டியன் என்னும் மன்னனுக்கு மலை வலம்-இறைவழிபாடு செய்யும் முறையை, ஒரு புனுகுப் பூனையும், ஒரு குதிரையும் உணர்த்திய வரலாறும் ஞானமா மலையான அண்ணாமலைக்கே உரியது!

பூனையும், குதிரையும் சாப விமோசனம் பெற்று **கலாதரன், காந்திசாலி** எனும் வித்யாதரர்கள் ஆனதற்கு முற்றிலும் மாறுபட்டு, மானுடன் ஒருவன் கிளியாக மாறி, மகேஸ்வரியாகிய உண்ணாமலை அம்மனின் திருக்கரங்களை அலங்கரிக்கும் பேறுபெற்றதும் திருவருணையில்தான்!


திருவருணைக் கணிகையர் குலத்திலே பிறந்து, இளமையிலேயே பெற்றோரை இழந்து, மூத்த சகோதரியால் (ஆதி) அளவுக்குமீறிய பரிவுடன் - பாசத்துடன் - வளர்க்கப்பட்ட அவன். நெறிவழி கடந்து, தாசியர் மடிகளில் புரண்டு பெருவியாதியை அடைந்தான்! காசுக்காக அணைத்த கணிகையர்களே. "சீச்சீ" என்று அவனை அடித்து விரட்டினர்!

சிற்றின்பவெறியால், சீரழிந்த நிலையிலே... இறையருளைத்தேடும் பேரின்பப் பசியெடுத்துப் பிறவி யை வெறுத்தான்! வல்லாள மகாராஜன் கோபுரமீதிருந்து கீழே குதித்தான்!

வருந்தித் திருந்தியவனை வாழவைத்துத் திருப்புகழை உலகுக்குத் தரவிரும்பிய முருகப்பெருமான்..., மண்ணிலே பாய்ந்தவனை மடியிலே தாங்கி..., இன்னருள் தந்தார்! சிவகுமாரனின் தரிசனம் கண்டு பரவசமானான்! நோய் நீங்கிப் பகலவனானான்! "**முத்தைத்தரு**" தமிழையும், மூவுலகுக்கும் வழிகாட்டும் **ஜபமாலை**யையும் சக்தியுமைபாலனிடம் பெறும்பேறுபெற்றுத் "**திருப்புகழ்**" பாடிய அவன்தான் 15-ம் நூற்றாண்டிலே திருவண்ணாமலையிலே முருகனருள் பெற்றுப்பெரு வாழ்வுகண்ட **அருணகிரிநாதர்.**

கந்தப் பெருமான் அருளிய சந்தத்தமிழால், **பிரபுடதேவராஜ** னுடைய சபையிலே, ஆணவமே வடிவான ஆஸ்தானப் புலவனாக இருந்த **சம்பந் தாண்டானை,** அருளறப் பெரும் கவிஞனாக மாற்றியமைக்கும் போதுதான் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து அருணகிரிநாதர், கிளியான வரலாறு நிகழ்ந்தது.

முருகப் பெருமானின் திருத்தலப் பட்டியலை இன்று நாம் முழுமையாக அறிகிறோம் என்றால், அதன் சிருஷ்டி கர்த்தா அருணகிரி! (அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் பாடல்கள் 16,000-இப்போது, நமக்குக் கிடைத்துள்ளவை 1304-தான்) வாழவைத்த முருகனை, திருப்புகழால் உலகமெலாம் வளரவைக்கும் அருணகிரி நாதரின் வரலாற்றினை, மேலோட்டமாகப் பார்ப்பவர்க்கு, சிற்சில முரண்பாடுகள் தென்படலாம்; ஆனால், ஆழப் பொருள் காணும் மேலோர்க்கு, அருணகிரி நாதரின் வரலாறு, ஒரு தத்துவத் தமிழ்ச் சுரங்கமாகும்.



புராணங்களையே பார்த்திராத இளைஞரும், யுவதியரும், படிப்பினைகளை எப்படிக் கிரஹிக்க முடியும்? எனவே மீண்டும் ஒரு "ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், உலகநீதி, நல்வழி, நன்னெறி, அறநெறிச்சார நூல்களின் சகாப்தம் உடனடியாக ஆரம்பப்பள்ளிகளிலே துவங்கப்பட வேண்டும்!"

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற ஔவையின் இலக்கணப்படி, திருவண்ணாமலை ஆலயத்தைத் தொழுது, **அண்ணாமலையாரையும், உண்ணா முலைத் தாயாரையும்** பணிந்த புண்ணியர் சிலரை எண்ணிப் பார்ப்போமா!

தாருகாசுரன் வதம் முடிந்ததும், முருகப் பெருமான் வந்து தொழுத திரு வண்ணாமலையிலே, சூரியனும், சந்திரனும் பூஜித்து "ஒளி" பெற்றனர்!

அகத்தியர், நக்கீரர், கௌதமரிஷி, பிருங்கி முனிவர், மார்க்கண்டேயர், பங்குமுனி, புலகன், (அசுரன்), துர்வாசர் மஹாபாரத அர்ஜுனன், கபிலர், பரணர், அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், விருபாட்சதேவர், பட்டினத்தார், வடதேச மன்னன் பிரதார்த்தனா முதலான இதிகாச காலத்தவர்களும், வடலூர் இராமலிங்க சுவாமிகள், விட்டோபா அடிகள், சாது துரைசாமி, சடைச்சாமி, காவ்யகண்ட கணபதி முனிவர், சிவானந்த சரஸ்வதி, வள்ளிமலை சுவாமிகள், சுத்தானந்த பாரதியார் முதலான நம்காலத்திய அருளாளர்களும் **"ஞானமலை"** யானின் திருவருளால் வான்புகழ்பெற்றனர்.

அண்ணாமலையை வலம் வந்தால் கைலாசபதியான சிவபெருமானையே பிரதட்சணம் செய்த புண்ணியராகி விடுகிறோம் நாம்.

யுகயுகாந்திரங்களைக் கடந்து நிற்கும் இந்தச் **சிவமலை** யைச் சுற்றிலும், அஷ்ட திக்குப் பாலர்கள் பூஜித்த எட்டு இலிங்கங்களின் சன்னிதிகள் உள்ளன.

தெய்வத் திருமலையான திருவண்ணாமலையின் உயரம் 2668-அடிகள்; மலையின் சுற்றுச் சாலையின் நீளம் சுமார், எட்டு மைல்கள்.

அண்ணாமலைப் பேராலயத்து... கீழராஜ கோபுரத்திலிருந்து கிரிவலத்தைத் தொடங்கினால் விநாயகர், முருகன், அஷ்டலிங்கம், நந்திகள், ஸ்ரீ பாதமண்டபங்கள், ரிஷபம், முனிவர் சன்னதிகள், கண்ணப்பர், மாணிக்கவாசகர், அறுபத்துமூவர், (மடம்), அனுமன், பூத நாராயணன், வீரபத்திரர், முனீஸ்வரன், நவக்கிரகங்கள், மூன்று-ஐந்து சிகரங்களுடன் அண்ணா...மலை தரிசனம், அருவுருவ விநாயகர், அருவுருவ அம்மன்... இப்படியாக தொண்ணூற்று எட்டுச் சன்னிதிகளை மலை வலத்திலே தரிசிக்கிறோம்.

சக்கர தீர்த்தம், பாண்டவ..., அக்கினி..., சிம்ம..., யம..., சோணநதி..., உண்ணாமுலை..., பாலி..., வருணதீர்த்தம் இப்படியாக... கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாதவையுமான 360... திருவண்ணாமலைத் தீர்த்தங்களை வலம் வந்த புண்ணியர்களாகிறோம்.

(இந்த தீர்த்தங்களிலே கங்கை, யமுனை, சரஸ்வதி, காவேரி முதலான புனித நதிகள் திருவிழாக் காலங்களிலே வந்து கலப்பதாகப் புராணங்கள் கூறும்).

மஹான் சேஷாத்திரி சுவாமிகள், ரமண மகரிஷி பாணிபத்திரர், விரூபாட்சி தேவர்..., ஈசான்ய தேசிகர்..., சடைசுவாமி அண்ணாமலை முனிவர் ஆகியோரது ஆஸ்ரமங்களும், கந்தாசிரமம், சிவாஸ்ரமங்களையும் மலைவலத்திலே தரிசிக்கலாம். (ரமணாச் சிரமத்திற்கு மேலைநாட்டார் வருகை, மிக அதிகம்).

விரூப்பாட்சி, குகை, (குகை) நமசிவாயர் குகை மாமரத்துக்குகை, சடைச்சாமி குகை, அருட்பால் குகை முதலானவையும், சிற்சில அடர்ந்த புதர்களும் பற்பல ஞானியர்கள் மாதவம் செய்த-இன்றும் செய்கின்ற-மகத்தான புனித இடங்களோடு... கலையழகு மிளிர்கின்ற வேடுபறி மண்டபம், கட்டுச்சோற்று மண்டபம், வருணலிங்க மண்டபம் முதலான பற்பல மண்டபங்கள். வேடுபறி மண்டபத்துக்கருகே நின்று, **"உண்ணாமுலைத்தாயே!" என அழைத்தால், "ஏன்!" என்றும், "சோறு தருகிறாயா?" என்றால் "தருகிறேன்"! என்றும் உமாதேவியார் பதில் தருவதைக் கேட்கலாம்" என்று "உலகம் சுற்றிய தமிழன்" A.K. செட்டியார் ஒரு பிரயாணக் கட்டுரையிலே (1939) ஆதாரப்பூர்வமாகக் குறிப்பிடுகிறார்.**

தேவதைகளும், பற்பல சித்தபுருஷர், ஜீவன் முக்தர் முதலான நித்திய சிரஞ்சீவிகளும் இன்றும் மலைவலம் செய்து கொண்டிருப்பதால் (நம் கண்ணுக்குத் தெரியார்) கைலாய வைகுந்தத்திலே கால் வைப்பது போல, பயபக்தியுடன் கூடிய அமைதியோடு மலைவலத்தை மேற்கொள்ள வேண்டியது மிக மிக அவசியமாகும்.

13-ம் நூற்றாண்டு விக்கிரமபாண்டியன் காலத்திலே, மலை வழிப்பாதையிலே நடப்பெற்ற மீன் சின்னத்துடன் கூடிய மைல் கற்களை வியப்புடன் பார்த்தபடி, மேற்கில் உள்ள அடி அண்ணாமலைக்கு வருகிறோம்; அடிமுடி தேடிய படலத்திலே, தனது தவறுக்குப் பிராயச் சித்தமாக, **பிரம்மதேவன்** ஸ்தாபித்துப் பூஜித்த **ஆதி அருணாசலேஸ்வரர்** கோயில் உள்ளது. (இதுவரை 96 **பிரம்மாக்கள்** ஆதி அருணாசலேஸ்வரரை பூஜித்திருக்கிறார்கள்) உண்ணாமுலையம்மன் சன்னிதியும் உள்ள அடி அண்ணாமலை கிராமம் அமைதி மிகுந்தது. ஆத்மார்த்த பூஜைக்கு ஏற்றமூர்த்தி **ஸ்ரீ ஆதி அருணாசலேஸ்வரர்.**

அருணாசலப் பிரதட்சணம் பூர்த்தியாகுமுன்பு, திருவண்ணாமலைக் கோயிற் பகுதி முழுவதையும் மலைமேலிருந்து கூர்மையாகப் பார்க்கிறோம்.

24-ஏக்கர் பரப்பளவிலே (ஒரு ஏக்கருக்கு 18 1/2 கிரவுண்ட்) அமைந்துள்ள பிரமாண்டமான ஆலயம்! மலைச் சுற்றையும் சேர்த்து, மொத்தம் ஏழு பிராகாரங்கள்; ஆறாவது பிராகார வெளிச்சுவர், 30-அடி உயரமும்; தென்வடல் 700, அடிகள்; கீழ்மேல் 1500-அடி நீளமும் கொண்ட மிகப்பெரும் கோட்டைச் சுவர் போன்ற அமைப்புடையதாகும்.

கீழ்திசை ராஜகோபுரம், 217-அடி உயரமும், 11-நிலைகளையும் கொண்டது. தென்திசை திருமஞ்சனக் கோபுரம் 157-அடி; மேல்திசை பேய்க்கோபுரம் ("மேக் கோபுரம்") 144-அடி; வடதிசையிலே உள்ள அம்மணியம்மாள்கோபுரம். 171-அடி உயரங்களையும் கொண்டு விளங்குகின்றன.

இந்தப் பெரிய கோபுரங்களோடு, **வல்லாள மகாராஜன் கோபுரம், கிளிக் கோபுரம், ரிஷி கோபுரம், கட்டை கோபுரம்,** (தெற்கு), கட்டை கோபுரம் (வடக்கு), கட்டை கோபுரம் (மேற்கு) மொத்தம் பத்து கோபுரங்கள்.

அண்ணாமலையார் கருவரை விமானம், (தங்ககோபுரம்) உண்ணாமுலை யம்மை, பள்ளியறை..., சம்பந்த விநாயகர்..., பழனியாண்டவர்..., நடராஜர்..., சோமாஸ் கந்தர்..., ராதாருக்மணி சமேத வேணுகோபாலசுவாமி..., ஆறுமுகர்..., வைரவர் விமானம் இப்படியாகப் பத்து விமானங்கள்.

ஆயிரக்கால் மண்டபம், ஞானப்பால்..., தீர்த்தவாரி..., சக்திவிலாச..., நந்தி..., திருவருள் விலாச..., மாதப் பிறப்பு..., ருத்திராட்ச..., கொடிமர..., பதினாறுகால்..., திருக்கல்யாண..., பன்னீர்..., அமாவாசை..., காட்சிமண்டபம்..., என்று ஏராள மண்டபங்களோடு; **பிரம்ம தீர்த்தம், சிவகெங்கை தீர்த்தம்** எனப்படும் இரு புனித தீர்த்தக் குளங்களும் ஆலயத்துக்கு உள்ளேயே உள்ளன.

ஸ்ரீ அண்ணாமலேஸ்வரர் சன்னிதி..., உண்ணாமலையம்மன் (அபீதகு ஜாம் பாள்)..., கம்பத்து இளையனார் (முருகன்)..., சர்வசித்தி விநாயகர்..., கோபுரத்து இளையனார், பழனி ஆண்டவர்..., காலபைரவர்..., அருணகிரி யோகீஸ்வரர்..., **காளத்திலிங்கர்..., ஏகாம்பரேஸ்வரர்..., கல்யாண சுந்தரர்..., ஜம்புலிங்கேஸ்வரர்..., சிதம்பரமேஸ்வரர்...,** (5 மூர்த்திகள்) பிடாரி..., சப்த கன்னியர்..., அறுபத்து மூவர்..., வேணுகோபாலர்..., நவகிரஹங்கள்..., ருத்ர துர்கை..., மகாசரஸ்வதி..., மகாசக்தி..., வீரபத்ரர்..., தட்சிணாமூர்த்தி, பராசக்தியம்மன்..., சண்டிகேஸ்வரர்... என்று 318 மூர்த்திகளின் சன்னதிகள் திருவண்ணாமலைக் கோயிலுக்குள்ளே உள்ளன.

இந்த ஆலயத்தின் பலநூறு கல்வெட்டுக்களில் 119 **கல்வெட்டுக்கள்** தான் அரசினால் இதுவரையிலே, பதிவு செய்யப்பட்டுள்ளன. (ஆராயப்பட்டுள்ளன) இந்த கல்வெட்டுக் களின்படி... ஆலய வளர்ச்சியை... வரிசைப்படுத்தினால்...

இதிகாச காலத்திலே... திருவண்ணாமலைத் தலவிருட்சமான **மகிழ மர** நிழலிலேதான், அடிமுடிகாணா அழல் வடிவிலிருந்து **ஸ்வயம்புலிங்கமாகத்** தோன்றிய... இப்போதுள்ள மூலவர் இருந்திருக்கிறார்.

முதல், இரண்டாம் நூற்றாண்டுகளிலே மண்ணால் ஆன சிறுகோயிலாகி, 4, மற்றும் 5-ம் நூற்றாண்டுகளில் செங்கற் கட்டிடமாகியுள்ளது.

6-7-8 நூற்றாண்டுகளில் தேவார, திருவாசக... **அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர்...** ஆகிய நால்வர் வந்து பாடித் தொழும்போது அண்ணாமலை யார், செங்கற்கோயிலில்தான் இருந்திருக்கிறார்.

9-ம் நூற்றாண்டு-முதலாம் **ஆதித்த சோழமன்னர்** காலத்திலே (817) கருங்கல்லால் ஆன மூலஸ்தானம் ஏற்பட்டதெனலாம். 10-ம் நூற்றாண்டு இந்தச் சோழரின் வாரிசுகளால், முதல், இரண்டாம் பிராகாரங்கள் (955) உருவாகியுள்ளன.

11-ம் நூற்றாண்டு; இராஜேந்திரச் சோழர் I (1012-1054) ஆட்சிக் காலத்திலே தான், கொடிமர ரிஷிகோபுரம், சுற்றுச்சுவர்களும் ஏற்பட்டன. 1063-ல் வீரராஜேந்திரசோழனால் கிளிக்கோபுரம் கட்டப்பட்டது. (இந்தக் கால கட்டத்திலேயே திருவண்ணாமலைக்குவந்துவிட்ட "நகரத்தார்", பெருமக்கள் "அண்ணாமலையார் துணை" எனத் திருப்பணிகள் புரியத் தொடங்கியுள்ளனர்).

12-ம் நூற்றாண்டு; மூன்றாம் குலோத்துங்கச் சோழர்: (1179) உண்ணாமலையம்மனுக்குத் தனிக்கோயிலைக் கட்டினார்.

13-ம் நூற்றாண்டு; சோழரிடம் குறுநிலமன்னராய் இருந்த பல்லவராஜா, கோப்பெருஞ்சிங்கன், மூன்றாம் பிராகாரம்... பழனி ஆண்டவர் கோயில், நடராஜர் பாதம்... முதலான கட்டுமானத் திருப்பணிகளோடு, ஏராளமான நகைகளையும் திருவண்ணாமலைக் கோயிலுக்குத் தந்திருக்கிறார்.

14-ம் நூற்றாண்டு; ஹொய்சாள மன்னர் வீரவல்லாளன் 1340 முதல்... 1374-வரை... வடக்கு, தெற்கு, மேற்கு, ஆகிய மூன்று திசைகளிலும், ராஜ கோபுரங்களை... உருவாக்கி இருக்கிறார்.

15-ம் நூற்றாண்டு; விஜயநகர ராஜாக்களால், திருவண்ணாமலைக் கோயில்... பொருளாதார, நிலவளங்களை ஏராளமாகப் பெறத் தொடங்கியது.

16-ம் நூற்றாண்டு; விஜயநகரப் பேரரசர் கிருஷ்ண தேவராயர் இருபது பெரும் திருப்பணிகளைச் செய்துள்ளார். ஆயிரக்கால் மண்டபம், சிவகெங்கை தீர்த்தக் குளம், கீழ ராஜ கோபுரத் தொடக்கம், இந்திர விமானம், விநாயகர் தேர், மற்றும் ஏராள நகைகள் இப்படியாகப் பற்பல திருப்பணிகள். (கிருஷ்ணதேவராயர் தொடங்கிய பெரிய (கீழ) கோபுரத்தை தஞ்சை நாயக்க மன்னரான... செவ்வப்பர் 1590ல் பூர்த்தி செய்திருக்கிறார்).

அண்ணாமலையார் கோயிலின் ஆரம்பகாலத் திருப்பணியாளர்களை, காலச்சுவட்டுடன்கூடிய ஓர் புள்ளி விபரத்துடன் "தோராயமாக" இப்படிக் கணக்கிடமுடிகிறது.

முதலாம் ஆதித்யசோழர்	கி.பி.	871-907
முதற் பராந்தகச் சோழர்	"	907-953
கன்னர தேவர்	"	949-967
வீரபாண்டியன்	"	956-969
இராஜகேசரிவர்மன்	"	956-975
இராஜேந்திர சோழன் I	"	1012-1044
இராதிராஜன் I	"	1018-1054
இராஜேந்திரச் சோழன் II	"	1052-1064
வீரராஜேந்திர சோழன்	"	1062-1070
குலோத்துங்கச் சோழன் I	"	1070-1120
இராஜராஜ சோழன் II	"	1146-1163
குலோத்துங்கச் சோழன் III	"	1178-1276



ராஜராஜசோழன் III	கி.பி.	1216-1246
பல்லவராஜா, கோப்பெருஞ்சிங்கன் (மேற்படியார் மகன், வேணாவுடையார் திருப்பணியும் ஏராளம்)	"	1219-1178
இராஜேந்திர சோழன் III	"	1246-1279
சடையவர்மன் விக்ரமபாண்டியன்	"	1268-1281
மாறவர்மன் குலசேகரபாண்டியன்	"	1268-1311
ஹொய்சாள மன்னர், வீரவல்லாளதேவர்	"	1292-1342
இராஜ நாராயண சம்புவராயன்	"	1341-1363
ராஜப்பிரதிநிதி, அரியன்ன உடையார்	"	1377-?
க்ஷ மகன், வீர விருப்பண்ண உடையார்	"	1379-?
விஜயநகர, இரண்டாம் தேவராயர்	"	1426-1446
மேற்படியார் மகன் வீரவிஜயராயர்	"	1422-1454
மல்லிகார்ஜுனராயர்	"	1447-1465
பிரபுட தேவ மகாராஜா	"	1450-?
விஜயநகர, கிருஷ்ணதேவராயர்	"	1509-1529
சதாசிவராயர்	"	1543-1570
தஞ்சை மன்னர் செவ்வப்பநாயக்கர்	"	1541-1590



சோழ, பாண்டிய, பல்லவ, ஹொய்சாள, சம்புவராய..., விஜயநகர, தஞ்சை மன்னர்களின் திருப்பணிகளால், பிரம்மாண்டமான கோயிலைக் கொண்டதாகத் திருவண்ணாமலை விளங்குகிறது; **கோப்பெருஞ்சிங்கன், கிருஷ்ணதேவராயர், செவ்வப்ப நாயக்கர்** ஆகிய மூவரது சேவைகள், இந்தக் கோயிலுக்கு ஏராளமாகும்.

பட்டியலிலே இடம் பெற்ற ராஜாக்கள் மட்டும்தானா? இன்னும் மகாராணி கள், இளவரசர்கள், அரசப் பிரதிநிதிகள், சிற்றரசர். ஜமீன்கள், தேவரடியார்கள், பிரபுக்கள், என்று எவ்வளவோ இருந்திருக்கும்!

"ஜீரணோத்தாரதாஸகம்" எனும் அண்ணாமலைக் கோயிலின் திருப்பணி விளக்கநூல் இருந்ததாக இங்குள்ள கல்வெட்டு சொல்கிறது! ஆனால் நூல் எங்கே? இந்த நூலும், பல்லவர்கால விரிவான திருப்பணிக் குறிப்புகளும் **கோயிலிலே நடந்த போர்களினால்** அழிந்தே போயிருக்கலாம்!!

"கோயிலிலே போர் நடந்ததா?" ஆம்! 14-ம் நூற்றாண்டு முதல் 17-வரை காஞ்சி, திருப்பதி திருமலை போன்ற பிரபலமான பலகோயில் வளாகங்கள் போர்க்களமாயின. ஆதாரங்களாக இதோ சில "சாம்பிள்"கள்.

1311-மதுரை மீனாட்சியம்மன் கோயிலே தீ! கோயில் பகுதிகள் இடிந்தன! 96,000 மணங்கு தங்கத்துடன் டெல்லி புறப்பட்டனர் கொள்ளையர்!

கி.பி. 1312-சிதம்பரம் பொன்னம்பலம் தகர்க்கப்பட்டு தங்கத்தகடுகளை மாலிக்காபூர் யானைகளிலே ஏற்றிப் போனான். திருஞானசம்பந்தர் ஆலயம். இடிபட்டுத் தரைமட்டமானது.

1321-ஸ்ரீரங்கம். முகலாயரின் சூரையாடலிலிருந்து காப்பதற்கு, உற்சவ மூர்த்திப் பெருமாள், அடுத்த ஐம்பது, ஆண்டுகள் திருப்பதியில் கொண்டுபோய் வைக்கப்பட்டார்!

1335-ல் டெல்லி சுல்தானின் பிரதிநிதிகளால், திருவண்ணாமலை உள்ளிட்ட தொண்டை மண்டலம் ஆளப்பட்டது.

1341-ல் ஹொய்சாள மன்னன் மூன்றாம் வீரவல்லாளன், அலாவுதீன் உடௌஜி யோடு வீரப்போர்செய்து, திருவண்ணாமலையைமீட்டு, ராஜநாராயண சம்புவராயரிடம் ஒப்படைத்தார். (வீர வல்லாளனை 1342-ல் பாவிகள், மதுரைத்தெருவிலே தோலை உரித்துப் படுகொலை செய்தனர்.)

1362-ல் விஜயநகர சாம்ராஜ்யப் பிரதிநிதியான கம்பண உடையார், சம்புவராயரிடமிருந்து திருவண்ணாமலையைக் கைப்பற்றினார்; 15, முடிந்து, 16-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தஞ்சை நாயக்கர்கள்; 17-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் திருமலை நாயக்கர் (1623-1659, மேற்படி நூற்றாண்டின் பிற்பகுதியில் கர்நாடக நவாபுகள்; 18-ம் நூற்றாண்டு-1753 முதல் 1760-வரை முராரிராவ், கிருஷ்ணராயர், மிருத்திஸ்அலிகான், பாக்காத் உல்லாகான், பிரெஞ்சுக்காரர்களான சூப்பிரே, சாபினே; ஆங்கிலேய ஸ்டீபன்ஸ்மித்... முதலான பலரது கைகளிலே மாறி மாறிச் சீரழிந்தது புனித க்ஷேத்திரமான, திருவண்ணாமலை!

1759-ல் ஆற்காடு நவாப் ராஜாசாயபுவின் படை, அண்ணாமலையார் கோயிலுக்குள் இருந்தது! ஒரு நாள் தியாக துர்க்கம் கிருஷ்ணராவ், கோயிலுக்குள் புகுந்து, 750 சிப்பாய்களைப் படுகொலை செய்தான் 1761-ல் ஆங்கிலேயரிடம் ஐதரலி தோற்றான். சரித்திர ஆசிரியர் - டாக்டர் K.K. பிள்ளை.

"1767 முதல் 1782வரை ஆங்கிலேயர்களுக்கும், ஹைதர் அலிக்கும் திருவண்ணாமலையிலே பெரும்போர்கள்! 1791வரை இவ்வூர், இராணுவ தளமாக மாறி, பகைவரின் முற்றுகைக்கு ஆளானது; மராத்தியர், மகமதியர், பரங்கியர்களின் படையெடுப்புகளால் இந்நகரமும், கோயிலும் படாதபாடுபட்டன! சொத்துக்கள் சூறையாடப்பட்டன! மக்கள் கொல்லப்பட்டனர்!"

("வடஆற்காடு மாவட்டம்" நூல்: சோமலே)

"அண்ணாமலையார் கோயில், வெடி மருந்துக் கிடங்காகியது! படைவீடாகக் கோயில் பயன்பட்டது! எதிரிகளின் தாக்குதலால் கோயிலின் மதில்கள் இடிந்தன !"

(வரலாற்றுத் துணுக்குகள்; தி-மலை, கும்பாபிஷேக மலர் 1976)

13-ம் நூற்றாண்டிலே, டெல்லி பாதுஷா அலாவுதீன் தென்னாட்டின் மீது படையெடுக்கத் தொடங்கியது (1224) முதல், திப்புசுல்தான் வீரமரணம் (1799) வரை, தமிழகக் கோயில்கள் பலவும் சிதைந்து சீரழிந்தன எனக் கொள்ளலாம்!

19-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே இமய முதல் குமரிவரை (சிற்சில சமஸ்தான(ம்) பொம்மை ராஜாக்களைத் தவிர) ஆங்கிலேயரின் முழு உடைமை ஆகிவிட்டது நமது பாரதம்!

20-ம் நூற்றாண்டின் இடையிலே... **காந்திக்கிழவனின்** "கருணை"யாலும் நேதாஜி யின் "கர்ஜனை"யாலும், நாம் விடுதலை (15-8-1947) பெற்றோம்.

21-ம் நூற்றாண்டிலாவது நாட்டு மக்கள் அனைவருக்கும், ஒருமித்த தேசபக்தியும், அந்நாளைய நகரத்தார் போல, கோயில் சொத்துக்களைக் கையாளும் தியாகபுத்தியும் ஏற்படுவதாகுக! நமது முதல்வர் "டாக்டர்" ஜெயலலிதா அவர்களின் தலைமையிலே, அமைந்துள்ள (13-12-91) "திருக்கோயில் நிர்வாக வாரியம்" பைஃலோடு நின்றுவிடாமல், செயல்படவும் பிரார்த்திக்கிறோம்.

ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளாகப் பற்பல மன்னர்களின் திருப்பணிகளால் விரிவுபெற்ற திருவண்ணாமலை ஆலயத்தின் பழங்கால கும்பாபிஷேகக் குறிப்புகள்

இல்லை! இருபதாம் நூற்றாண்டிலே நடந்துள்ள நான்கு கும்பாபிஷேகங்களின் தேதிகள் வருமாறு; 12-6-1903; 27-1-1918; 4-6-1944; 4-4-1976;

அண்ணாமலையாரின் சொத்துக்களைப் பற்றிய 1976-ம் ஆண்டு புள்ளி விபரம்:- நன்செய்நிலம்-89, ஏக்கர், 48 1/2 செண்ட்; புன்செய்-280 ஏ... 66-செ; கடைகள்-100; காலிமனைகள்-82; கட்டணத்துடன் கூடிய தங்கும் விடுதிகள் ஏழு; சென்னை அடையாறு, மீர்சாகிப் பேட்டை, தண்டையார் பேட்டைகளிலே சுமார் 38-ஏக்கர் மனைகள் (தற்போதைய ஓராண்டு வரவு, செலவுகளை அறியப் பலமுறை முயன்றேன், படுதோல்வி)

ஆறு அடி உயரம் முதல், 15 அடி உயரம் வரை **தங்க வெள்ளி வாகனங்கள்** சுமார், நாற்பது இருக்கும்! பிரதான மூர்த்திகளுக்குத் தங்கக் கவசங்கள், நகைகளோ 12 கிலோ நாகாபரணம், நவரத்னகிரீடம், விக்டோரியா காலத்திய, நூற்று முப்பது பவுன் ஒரே மாலை; சுவர்ண கிருஷ்ணதேவராயரின் நவரத்னஹாரம், அனைத்து மூர்த்திகளுக்கும் நகரத்தார் வழங்கியுள்ள ஏராளத் தங்க நகைகள் இப்படியாக 1901-ஆண்டு **மொத்த நகை மதிப்பு, ரூ.12 லட்சம்; 1976-ல் ஒரு பவுன் 400 ரூபாய் விற்கும் போது 1 1/2 கோடி**; நாலாயிர ரூபாய்க்குப் பவுன் விற்கும் இன்றைய மதிப்பீட்டை எத்தனை கோடி என்பதை நீங்களே, 'கால்குலேட்ட'ரில் கணக்கிட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்!

நகைப் பெட்டிகளுக்கான சாவிகள் ஆறு ஜதைகள்; குருக்களிடம் 4; ஆபீஸரிடம் 2; ஆலய ஊழியர் தொகை சுமார் 180; மூலவரை ஆராதிக்கும் "பட்டம்" 2 குடும்பம்; உற்சவர்களை பூஜிக்கும் ஸ்தானிகம் 4; மூலஸ்தான உதவி பரிசாரகம் 4; பரிவார மூர்த்திகளைப் பேணும் **குருக்கள்-4; மெய்க்காவல் 4.** இப்படியாகத் திருவண்ணாமலை ஆலயத்தை நம்பிய 40-சிவாச்சார்ய குடும்பங்கள்.

(1991) ஆண்டு கார்த்திகை தீபத்தை ஆறு லட்சம் கண்கள் தரிசித்தனவாம். ஆண்டுக்கு 300 விழாக்களைக் கொண்ட திருவண்ணாமலைக் கோயிலின் அன்றாட ஆறுகால பூஜைக்கும் 14-அறக்கட்டளைகள் உண்டு. காலை 5-1/2 மணி முதல், இரவு 9 மணி வரை மூலஸ்தான தரிசனம் பெறலாம்.

2 அடி முதல், 5 அடி உயர நடராஜர் விக்ரஹம் வரை, சுமார் நாற்பத்து மூன்று **உத்ஸவமூர்த்திகள்**; ("அறுபத்துமூவர்"களைச் சேர்க்காமல்) உற்சவர்களை வணங்கியதும், மூலஸ்தானம் செல்கிறோம்.

ஈஸ்வரனின் 64- மூர்த்தி ஸ்வரூபங்களிலே, **லிங்கோத்பவராக** (நெருப்புத் தூணாக) உருவாகி, தேவர்களின் விருப்பத்திற்கிணங்க, அருவுருவ இலிங்க வடிவான தேஜோமய அண்ணாமலையாரைத் தரிசித்தபின், அம்பாளிடம் போகிறோம்.

அஷ்டலட்சுமியருடன் கூடிய அர்த்தமண்டபத்தைக் கடந்து, அனைத்துலகத் தாயான "அபீத குஜாம்பாளை"- உண்ணாமுலைஅம்மனை- வழிபட்டு இறையருட் பிரசாதங்களோடு வீடு திரும்புகிறோம்.



பெரிய கோயில் ஸ்ரீரங்கம்

"பெரிய கோயில்" என்றால் "ஸ்ரீரங்கம்" என்பதே வைணவ சித்தாந்தம். ஸ்ரீரங்கமாகிய திருவரங்கத்தின் புராண இதிகாச வரலாறு... வருமாறு...

காக்கும் இயல்பினனாகிய ஸ்ரீபரவாஸுதேவ மகாவிஷ்ணு, தேவாதி, பிரம்ம இந்திரர்களாலும் தரிசிக்க முடியாத வைகுந்தத்திலிருந்து, பாற்கடலில் எழுந்தருளி, ஆதிசேஷ அரியணையில் ஸ்ரீதேவி, பூதேவியர் சகிதம் வீற்றிருந்து லோக பரிபாலனம் புரிகிறார்.

வைகுந்த நிலையிலேயே வாசுதேவனை வழிபடுவதற்காக, பிரம்மதேவன் தவம் செய்கிறார். "அஷ்டாட்சர" மகிமையால், பகவானின் முதல் அர்ச்சாவதாரத் திருமேனி கொண்ட ஸ்ரீரங்கவிமானம் பிரம்மாவுக்குக் கிடைக்கிறது.

சத்திய லோகத்தில் வைத்து பிரம்மதேவன் அதை பூஜித்து வரும் போது, சூர்ய பகவானும் அவரது திருமகன் மனுவும் அதை தரிசிக்கிறார்கள்; மனுவின்பிள்ளையான இக்ஷ்வாகு, (அயோத்தி மன்னன்.) ரங்கவிமானத்தை அடைய மாதவம் செய்கிறான். பிரம்மா திகைக்க, "நான்கு சதுர்யுகம் சூர்யகுல மன்னர்களின் ஆராதனைக்குப் பிறகு, சோழநாட்டுக் காவிரிக் கரையிலே ஏழுமன் வந்த்ரம் இருந்து, மீண்டும் பிரம்மலோக ஆராதனைக்கு ஸ்ரீரங்கவிமானம் வந்து சேரும்" என்று திருமால் பிரம்மனிடம் கூற, கருடன் மூலமாக ரங்கவிமானம் அயோத்திக்குப் போய்ச்சேருகிறது.

சூர்யகுல முதல் மன்னன் இக்ஷவாகு தொடங்கி, வழி வழியாக வந்த பல மன்னர்களுக்குப் பிறகு, தசரதச்சக்ரவர்த்தியின் "புத்திரகாமேஷ்டியாக"த்திலே கலந்து கொள்ளவந்த 56, தேச அரசருள், ஒருவரான சோழமன்னனர் தர்மவர்மன், ஊர் திரும்பியதும், ஸ்ரீரங்கவிமானத்தை அடையத்தவம் செய்கிறான்; 'எப்படியும் ரங்கவிமானம் இங்கு வந்தே தீரும், அது ஈஸ்வர சங்கல்பம்" என்று முனிவர்கள் கூற, தவத்தைக் கைவிட்டுத் தருமத்தைக் கடைப்பிடிக்கிறான்.

அயோத்தியில் ஸ்ரீராம ஜெனனம், சீதா கல்யாணம், வனவாசம், லங்கா தகனம், ஸ்ரீராம பட்டாபிஷேகம் முடிந்து நெடுங்காலம் ராம ராஜ்யத்திற்குப் பிறகு, ரங்கவிமானத்தை, விரும்பிக்கேட்ட இலங்காதிபதி, விபீஷணருக்குத் தந்துவிட்டு "தன்னடிச்" சோதியாகிறார் ஸ்ரீராமச்சந்திர மஹாப்பிரபு.

இலங்கா புரிக்குத் திரும்பும் வழியிலே, நித்ய அனுஷ்டானத்திற்காக, "கங்கையில் புனிதமாய" காவிரிக் கரையிலே ஸ்ரீரங்கவிமானத்தைக் கீழே வைக்கிறான் விபீஷணன். (பிள்ளையாரின் திருவிளையாடலால் ஸ்ரீரங்கவிமானம் பூமியில் பதிந்தது என்பதும் உண்டு). (அதற்கு அடையாளமாக திருச்சி மலைக்கோட்டை உச்சியிலே... கோயில் கொண்டுள்ள விநாயகப் பெருமான் தலையிலே குட்டுப்பட்டவடு காணப்படுகிறது. ஸ்ரீரங்கவிமானத்தை மாடுமேய்க்கும் சிறுவனாக வந்து காவிரிக்கரையில் ஸ்தாபித்தவர், கணேசப் பெருமான் தான்).

கையடக்க அளவாக இருந்த ரெங்கவிமானம், விஸ்வரூப மூலவர் ஆனது; தர்மவர்மச் சோழனும், முனிவர்களும் ரங்கவிமான மூலவரான ஸ்ரீரங்கநாதருக்குப் **"பிரம்மோத்ஸவம்"** செய்து பரவசம் பெறுகின்றனர். (அதுவே ஆதி பிரம்மோத்ஸவம்) மறுநாள் ரங்கவிமானத்துப் பெருமாளின் விஸ்வரூபப் பெருவடிவம் கண்டு விபீஷணன் திகைப்பது. "நமது திருவுள்ளப்படி சிலகாலம் இந்தப் பூம்பொழில் அரங்கத்திலே ஞானத்துறையில் செய்து அருள் பாலிப்போம்; ஆயினும் நமது திருவருட்பார்வை தென்திசையாகிய உன் நாட்டின் மேல் என்றென்றும் உண்டு துயர்விடுக" என ஆசரீரீ ஒலிக்கிறது. விபீஷணன் இலங்கைக்குப் புறப்படுகிறான்.

ரங்கவிமான மூலவருக்காக சோழமன்னர், தர்மவர்மா ஆலயம் அமைத்தல்; பகவானே அருளிய பாஞ்சராத்திர முறைப்படியே பூஜைகள் தொடர்கிறது. காலம் சுழல்கிறது! சிவபெருமானுக்கு ஒரு சோழ ராஜன் செய்த அபசாரத்தால், காவிரி நதி சீறுகிறது. ரங்கவிமான ஆலயப்பகுதி மணல்மேடாகிப் போகிறது. திரேதாயுகம் முடிந்து, துவாபரயுகத்திலே "கிள்ளிவளவன்" என்ற சோழன் வேட்டைக்குவர, இரு கிளிகள் பேசிக்கொண்ட மொழியால். மணல் மேட்டை அகழ்ந்து ஆலயத்தைக் கண்டு ஜீர்ணோத்தாரணம் செய்கிறான் (புராணங்கள் அவனை **"கிளிச்சோழன்"** என்று குறிப்பிடுகின்றன.

கிளிச்சோழன் வழிவந்த உரையூர் மன்னன் **நந்தசோழனுக்கு**, தாமரை மலர்களின் நடுவிலே பெண்குழந்தை ஒன்று கிடைக்கிறது. அது **கமலவல்லியாக** வளர்ந்து, அரங்கனை ஆராதித்து, அவனையே மணவாளனாகக் கொள்கிறது. அடுத்து வந்த குலசேகர மன்னன் மகள் **சேரர்குல வல்லியும்** அழகிய மணவாள னாகிய ஸ்ரீபரவாசுதேவனையே உபாசித்து உபயநாச்சியாருள் ஒருத்தியாகிறாள்.

பரவாசு தேவனது அவதார மூர்த்தியாகிய ஸ்ரீராமனே, பரவாசு தேவனாகிய ஸ்ரீரங்கநாதனை ஆராதித்ததால், அரங்கன் **"பெரியபெருமாள்"** ஆகிறார்.

பெரிய பெருமாளின் துணைவியானதால், இங்கே தாயார் **பெரிய பிராட்டி** ஆகிறாள். இவர்கள் மட்டுமா? **"பெரிய"** அடைமொழியோடு பிராகாரம், அரங்கம், **கருடன், திருமொழி.., மேளம், திருப்பணியாரம், திருப்பாவாடை, திருமஞ்சனம், மண்டபம், வாகனம், திருமடல், அந்தாதி** இப்படி எல்லாம் "பெரிய", "பெரிய" தாக விளங்குவது, ஸ்ரீரங்க திவ்யக்ஷேத்திரத்தின் தனித்தன்மையாகும்.



ஸ்ரீமந் நாராயணனின் க்ஷேத்திரங்கள் நால்வகையாகும்.

1- **ஸ்வயம் வ்யக்த க்ஷேத்திரம்** - (தானாக மூலவர் தோன்றியது)

2- **திவ்ய க்ஷேத்திரம்** - (வானவர் பூமிக்கு வந்து கோயிலை அமைத்தது)

3- **ஸைத்தம க்ஷேத்திரம்** - (சித்தர்கள் ஸ்தாபித்த உத்தமக் கோயில்கள்)

4- **மானுஷ க்ஷேத்திரம்** - (மனிதர்கள் பக்தி பூர்வமாக்கட்டி, விக்ரஹம் வைத்த ஆலயங்கள்)

மேற்படி நால்வகை க்ஷேத்திரக் கலவைதான், நமது பாரதத்திலுள்ள ஸ்ரீமந் நாராயணனின் நூற்றெட்டு திவ்ய தேசங்களாகும்.

நூற்றெட்டிலும் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றிலும் சிறப்புற்று, எட்டு ஸ்வயம்வ்யக்த க்ஷேத்திரங்களில் முதலாவதாக விளங்குவது ஸ்ரீரங்கமாகும். (மற்ற ஏழு ஸ்வயம்வ்யக்த க்ஷேத்திரங்கள், **1. ஸ்ரீமுஷ்ணம், 2.திருமலை, 3.சாளகிராமம், 4.நைமிசாரண்யம், 5.தோத்தாத்ரி, 6.புஷ்கரம், 7.பத்ரிநாத்).**

"திருமாலே! ஸ்ரீரங்கச் செல்வத்தை இடையூறு இன்றி தினமும் வளரச் செய்" எனும் பொருள் கொண்ட பாசுரத்தை, 108 திவ்ய தேசங்களிலும் நித்ய ஆரா தனையின் போது தவறாமல் இன்றும் ஓதப்படுவதால், நூற்றெட்டு வைணவ திவ்யதேசங்களின் தலை மையகம் ஸ்ரீரங்கம்தான் என்பதை அறியலாம்.

அர்த்தசாம பூசை முடிந்ததும், திவ்யதேச அனைத்துப் பெருமாள் அம்சங் களும் தலைமைச் செயலகத்தில் (ஸ்ரீரங்கம்) கூடி, முதல்வரை (ரங்கநாதரை) வழி பட்டுச் செல்வதாகச் சொல்வது, வைணவ ஐதிகம்.

பகவானின் அர்ச்சா விக்ரஹ மூர்த்திகள் - **நின்ற, அமர்ந்த, கிடந்த, நடந்த** என நான்கு கோலங்களாகும்; 108 திவ்யதேசங்களிலே நின்ற கோலம் 70, அமர்ந்த கோலம் 30; கிடந்த கோலம் 6, நடந்த கோலம் (சீர்காழி, திருக்கோயிலூர்) 2.

கிடந்த கோலத்தையுடைய ஸ்ரீ ரங்கநாதர், **சந்திரன், சுக்கிரன்** ஆகியோரது பாவத்தைத் தீர்த்திருக்கிறார்; **அக்னி, பிரஹஸ்பதி, இந்திரன், ஜனகர்** முதலானவர் கள் நேரடியாக பூஜித்த அர்ச்சாவதாரமுதல் மூர்த்தி ஸ்ரீரங்கநாதன்.



பகவான் ஸ்ரீஹரியின் நிலைகளை ஐவகைப் படுத்தியுள்ளனர் சான்றோர்.

1. **அர்ச்சாவதாரம்** - ஸ்ரீரங்க, திருப்பதி (திருமலை) விக்ரஹங்கள்

2. **அந்தர்யாமி** - அனைத்து பொருளிலும், ஜீயர்கள் மனத்திலும்

3. **விபவம்** - ஸ்ரீராம, கிருஷ்ண அவதாரங்கள், 4 -**வியூகம்**-பாற்கடல் அனந்த சயன கோலம்; 5 **பரத்துவம்** - வைகுந்தத்திலே பரவாஸுதேவத் திருவடிவம்.

பரவாஸுதேவனின் பிம்பத்தைக்கொண்ட ஸ்ரீரங்கவிமானத்தை, ஸ்ரீரங்கப் பேராலய "சைத்யகூட" காயத்ரீ மண்டபம் தாங்குகிறது. சுமார் முப்பதடி நீளக் கருவரையுள், 21 அடி நீளத்திலே, கரிய திருமேனி கொண்ட **பெரிய பெருமாள்,**

யோக நித்திரை புரிந்தபடி, பூவுலகைக் காத்தருளுகிறார். (நூற்றெட்டு மூலிகைப் பொருட்களோடு, வைரப் பொடியும் கலந்து உருவான மூலவரின் பாதங் களுக்குத்தான் தினசரி அபிஷேகம்; ஆண்டுக்கு ஒருமுறை பூர்ணாபிஷேகம்)

பெரிய பெருமாளின் ஆலய வரலாற்றை ஓரளவு தொகுத்துப் பார்ப்போமா!

வால்மீகி ராமாயணம் உருவாகி நாலாயிரம் ஆண்டுகள் என்பது ஓர் கணிப்பு; சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஸ்ரீரங்க ஆலய அமைப்பு தொடங்கியிருக்கலாம் என்பது ஓர் ஆராய்ச்சி; அதற்கும் பல நூறு ஆயிர வருடங் களுக்கு முன்பே, ஸ்ரீரங்கவிமானம் அயோத்திக்கு வந்து விட்டது.

இரு யுகங்களைக் கடந்து நிற்கும் ஸ்ரீரங்கநாத ஜெகத்ரட்சகனின் ஆலயம்பற்றிய சுமார் 644 கல்வெட்டு, மற்றும் செப்புப் பட்டயங்கள் கிடைத்துள்ளன; கல்வெட்டுகளில் நமக்குக் கிடைத்தவற்றுள் மிகப்பழமையானது முதலாம் **பராந் தகச் சோழனின்** கி.பி. 907-**கல்வெட்டுதான்.**

சோளேந்திரசிம்மன், கங்கைத்தேவர், சிங்கண்ணன், விக்ரம சோழர், திருவிக்கிரம சோழன் (அகளங்கன்), **பள்ளி கொண்ட சோழன், இராஜேந்திர சோழன்** மற்றும் பாண்டிய, பல்லவ, ஹொய்சள, விஜயநகர, நாயக்க அரசர்களின் பல்வேறு கால கட்டத் திருப்பணிகளால் தென்னாட்டுக் கோயில்களிலேயே தன்னிகரற்றதாகிறது ஸ்ரீரங்கமாகிய **திருவரங்கம்.**

முப்பந்தைந்து - அடி உயரமுள்ள கருடாழ்வரின் பேருருவைக் கொண்ட **கருட மண்டபம்;** உயிரோட்டமுள்ள சிற்பங்களைக் கொண்ட **சேஷராயர்மண்டபம்,** அற்புதச் சிலைகள் நிறைந்த **வேணுகாபாலர் சன்னதி, கிளிமண்டபம், ரங்கவிலாச மண்டபம், ஆயிரக்கால் (936) மண்டபம்** முதலானவை, திராவிடச் சிற்பக் கலை யின் சிறப்புக்குச் சிறப்புச் சேர்ப்பவைகளாகும்.

"பெரியகோயி"லின் மொத்தப் பரப்பளவு **156 - 1/2** ஏக்கர்களாகும்; **108** மண்டபங்கள், **51**சுற்றுக்கோயில்கள், **22** கோபுரங்கள், **7**-மைல் நீளத்திற்கும் மேலான **8**-பிராகாரங்களைக் கொண்டது "பூலோக வைகுந்த"மாகப் போற்றப் படுகின்றன. ஸ்ரீரங்க திவ்ய தேசம்.

மூலஸ்தானத்திலிருந்து தொடங்கும் ஏழு பிராகாரங்களையும் வளைத்தப்படி உள்ள, எட்டாவது வெளி பிரகாரத்திற்கு **"அடைய வளைந்தான்"** என்பது பெயர்.

"அடைய வளைந்தா" னின் தென்புறத்தில் 450 - ஆண்டுகளுக்குமுன் விஜயநகர சாம்ராஜ்ய **அச்சுததேவராயர்** தொடங்கி, 55 அடிய உயரமாக "கல்காரம்" வளர்ந்தபின், சாம்ராஜ்யச் சரிவால் நின்று போய் "மொட்டைக் கோபுர'மாகக் கிடந்தது. 1963-ல் "காஞ்சிமுனிவர்" ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதிசுவாமிகள் அதைக்கண்டு, முனிசிபாலிட்டி வரவேற்புக் கூட்டத்திலே **"மொட்டைக் கோபுரம்** முழுகோபுரம்" ஆக வேண்டும் என்று "நினைத்தார்" - சொன்னார். அகோபில மடம் "முக்கூர் முனிவர்" **ஸ்ரீ அழகிய சிங்கர் ஜீயர்சுவாமிகள்,** தனது சதாபிஷேக *விழாவில்* (1975) ராயகோபுரத்தை முடிப்பதாக சங்கல்பம் செய்தார். அதன்படியே

20-5-1979-ல் தொடங்கி, 25-3-1987-ல் ஸ்ரீரங்கபெரிய (ராஜ) கோபுர சம்ரோட்சணத்தை "முடித்தார்". (மொட்டைக் கோபுரத்தை முழுமையாக்கும் ஆரம்ப முயற்சியிலே... அப்போதாய முதல்வர் M.G.R. ரிடமும்; அகோபிலமடம் ஜீயரிடமும் தூதுசென்று வென்றவர், அமரர் (திருச்சி) ஸ்ரீ.அ.வெ.ர.கிருஷ்ணசாமி ரெட்டியார் ஆகும்.)

13-நிலைகளைக் கொண்டு ஆசியாவிலேயே மிக உயர்ந்த 236-அடி உயர, 150 அடி அகல ராஜகோபுரத்தின் மொத்தச் செலவு ரூபாய் ஒரு கோடியே 60 லட்ச ரூபாய்கள்; 13 -நிலைகளின் உபயதாரர்கள் வருமாறு.... முதல்நிலை- அகோபில மடம், **2.ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகள், 3.காஞ்சி காமகோடி பீடம், 4.ஆந்திர அரசு, 5 கர்நாடக அரசு, 6.இளையராஜா (இசை), 7.திருச்சி ஸ்ரீரங்க மக்கள்,** 8.ஜனாதிபதி **'R.V'** -(உதவி) **9.அகோபிலத் திருமடச் சீடர், 10 காமகோடிச்சீடர், 11.**மஹா லட்சுமி ட்ரஸ்ட், **12.**அகோபில ஜீயர், **13.**தமிழக அரசு. கோபுரகலசங்கள் பதிமூன்றும், குடந்தை **S.R.G.** ரங்கநாதன் செட்டியார் தம்பதிகள், கோபுர ஆக்கம்: ஸ்தபதி திருவாளர் **M.S.** சிவப்பிரகாசம்.

அடையவவளைஞ்சானைத் தவிர்த்த ஏழு பிரகாரங்களையும், ஏழு லோகங்களோடு ஒப்பிடுவர் வைணவச் சான்றோர்.

1.மாட மாளிகை வீடுகள் பகுதி - பூலோகம், 2. திருவிக்ரமன் திருவீதி - புவர்லோகம்

3. கிளிச்சோழன், அகளங்கன் சுற்று- ஸ்வர்க்கலோகம்; 4. திருமங்கை மன்னன் வீதி - மஹர் லோகம்;
5. குலசேகரன் திருவீதி - ஜநர்லோகம்; 6.ராஜமகேந்திரன் பிராகாரம் - தபோலோகம்;
7. தர்மவர்மாசுற்று (மூலத்தானத்தை ஒட்டியது) - சத்தியலோகம்.

மூலஸ்தான ரங்கவிமான விதானம் முழுவதும் தங்கத்தகட்டால் மூடப் பெற்றதாகும் (ரூ.2 1/2 கோடி மதிப்பு) நான்கு கலசங்களும் சதுர்வேதங்களாகும்; ஸ்ரீ ரங்க விமானத்திலே (தங்க கோபுரத்திலே) விநாயகர், துர்காதேவி, அனந்தர், அச்சுத, வேணுகோபாலர்களோடு "பரவாஸுதேவ"ரும் இருக்கிறார். இப்போது இடுப்பளவு உள்ள பரவாஸுதேவர் திருவுருவம், வளர்ந்து கொண்டே இருப்பதாக ஐதிகம்; அவரது பாதம் தெரியப்படும் காலத்திலே யுகப் பிரளயமாம்.

(மூலவருக்குக் கீழே உள்ள ஸ்ரீரங்கநாதர் (அழகிய மணவாளர்) ஸ்ரீதேவி, பூதேவி உற்சவ மூர்த்திகளோடு, "யாகபேரர்" எனப்படும் இன்னொரு (ஸ்ரீரங்கர்) உற்சவ மூர்த்தியும் உண்டு; அவர் "ஒரிஜினல்" ஸ்ரீரங்கர் துருக்கர் படையெடுப்பால் 50-ஆண்டுகள் அக்ஞாத வாசம் (காணமல்) போயிருந்தபோது "கோயி'லில்' உற்சவ மூர்த்தியாக விளங்கியவர்.

"நித்திய உத்ஸவ க்ஷேத்திர" மான ஸ்ரீரங்கத்திலே ஆண்டொன்றுக்கு 322-திருவிழாக்கள் நடைபெறுகின்றன!



சித்திரை (April-May) விருப்பணன் திருநாள் (தேர்)

வைகாசி (May-June) வஸந்தோத்ஸவம்

ஆனி (June-July) திருமஞ்சனத் திருவிழா

ஆடி (July-August) பதினெட்டாம் பெருக்கு விழா



ஆவணி	(August-Septem) ஸ்ரீ ஜெயந்தி. பவித்ரோத்ஸவம்
புரட்டாசி	(Septem-Oct) ரங்கநாயகியின் நவராத்திரி விழா
ஐப்பசி	(Oct-Novem) ஊஞ்சல், டோலோத்ஸவம்
கார்த்திகை	(Novem-Decem.) பர்வோத்ஸவம் "படியேற்றம்"
மார்கழி	(Decem-Janu.) வைகுண்ட ஏகாதசி அத்யயனம்.
தை	(Jan-Febru) பொங்கல் நாள், பூபதித் திருநாள்
மாசி	(Febru-March) தெப்போத்ஸவம் (கருடவாகனம்)
பங்குனி	(March-April) பிரம்மோத்ஸவம் (தேர்)

ஒரு நாள் உற்சவம் போல, இங்கு மறுநாள் கிடையாது! நாயக்க மன்னர் **விஜயரங்கருக்கே** மறுக்கப்பட்டது! பணம் கட்டி யாரும், எந்த ஒரு திடீர் திருவிழாக்களையும் ஸ்ரீரங்கக் கோயிலிலே நடத்தி விட முடியாது! **"நல்ல", நாளுக்காவே விழாக்களே தவிர, "உள்ள" ஆளுக்காக அல்ல**, என்ற சம்ரதாயம் கண்டிப்புடன் இங்கே செயல்படுத்தப்படுகிறது; அருள்மிகு, பற்பல புகழ்மிகு திருக்கோயில்களிலும் இதைக் கடைப்பிடித்தால்தான் இழந்துபோன ஸ்தலப் புனிதங்களை ஓரளவேனும் மீட்க முடியும்! (ரூ.750 கட்டி ஸ்ரீரங்க ஆலய "மூர்த்தி"களின் ஒரு நாளைய நைவைத்திய தளிகைச் செலவில் பங்கு பெறலாம்.)

ஸ்தல விருக்ஷம் இங்கே புன்னை மரம்; தீர்த்தங்கள் ஒன்பது....... **சந்திர புஷ்கரணி, சூரிய புஷ்கரணி, வில்வ தீர்த்தம், ஜம்புதீர்த்தம், அச்வ தீர்த்தம், புன்னாகதீர்த்தம், வகுள தீர்த்தம்** ஆகியவை.

ஸ்ரீரங்கப் பேராலயத்தில் விண்ணவர்க்கு மட்டுமல்லாமல், மண்ணகப் புனிதர்களுக்குமாக சுமார் ஐம்பது சன்னதிகள் உள்ளன........

ஸ்ரீரங்கநாதர், ஸ்ரீ ரங்கநாயகி, ஆதிகேசவன், கோதண்டராமர், பட்டாபி ராமன், போஜராமன், மேலப் பட்டாபிராமன், அழகிய சிங்கர், மோட்டு அழகிய சிங்கர், கிருஷ்ணன் (உள், வெளி), பாதாள கிருஷ்ணன், வேணுகோபாலன், பார்த்த சாரதி, ஸ்ரீநிவாசப் பெருமாள், லட்சுமி நாராயணர், வரத நாராயணர், வாசுதேவர், தசமூர்த்தி, பரமபதநாதன் ஹயக்கிரீவர், உலகளந்த பெருமாள், தசாவதார சன்னதி, சக்கரத் தாழ்வார், கருடாழ்வார், அமுத கருடன், ஹநுமன், தன்வந்திரி, துர்க்கை, சரஸ்வதி, ஆண்டாள், உள் ஆண்டாள், சேரர்குலவல்லி, துலுக்க நாச்சியார், முதலாழ்வார், திருப்பாணாழ்வார், திருமிழிசையாழ்வார், கூரத்தாழ்வார், தொண்ட ரடிப் பொடியாழ்வார், நாதமுனிகள், திருக்கச்சிநம்பி, உடையவர் (ராமாநுஜர்), சேனை முதலியார், தேசிகர், பிள்ளைலோகாச்சார்யர், பெரியவாச்சான் பிள்ளை..... சன்னதிகளுடன்.... "பெரிய கோயி"லின் உட்கோயில்களாக......... அன்பில் மாரியம்மன், பிரம்மபுரீஸ்வரர், சௌந்தரராஜப் பெருமாள், உறையூர் கமலவல்லி, திருவெள்ளறை புண்டரி காட்சப்பெருமாள், வடஜம்புநாதர், ஆலயங்கள் இருக்கின்றன. (1983-வரை சமயபுரம் ஸ்ரீமாரியம்மன் ஆலயமும் ஸ்ரீரங்க நிர்வாக உட்கோயிலாகவே இருந்தது).

ஸ்ரீரங்கத்திற்கு பன்னிரு ஆழ்வார்களுமே வந்து, வாழ்ந்திருக்கிறார்கள்; மதுரகவியாழ்வாரைத்தவிர, ஏனைய 11 ஆழ்வார்களும் 245 பாசுரர்களால் பெரிய பெருமாளை **"மங்களாசாஸனம்"** செய்திருக்கிறார்கள். ஸ்ரீரங்கத்திலிருந்த படியே திருத்தொண்டு செய்த ஆசார்யப் பெருமக்களின் வரிசை.... வருமாறு..... ஸ்ரீமந் நாதமுனிகள், உய்யக்கொண்டார், நம்மாழ்வார், மணக்கால்நம்பி, ஆளவந்தார், திருவரங்கப் பெருமாளரையர், பெரிய நம்பிகள், எம்பெருமானார் (ராமாநுஜர்), முதலியாண்டான், கந்தாடையாண்டான், கூரத்தாழ்வான், திருக்குருகைப்பிரான், எம்பார், திருவரங்கத்தமுதனார், பட்டர் நஞ்சீயர், நம்பிள்ளை, சிறியாயி-பெரியாயி, பின் பழகிய பெருமாள் ஜீயர், பெரிய வாச்சான் பிள்ளை, அழகிய மணவாள பெருமாள் ஜீயர், வடக்கு திருவீதிப்பிள்ளை, பிள்ளைலோகாச்சார்யர், ஸ்ரீமந் நிகமாந்த மகாதேசிகன், நைனாசார்யர், கூரகுலோத்தம தாசர், திருவாய் மொழிப் பிள்ளை, "பெரிய ஜீயர்" எனப்படும் ஸ்ரீ மணவாள மாமுனிகள்.

"சொர்க்க வாசலைக்" கொண்ட இந்தப் பூலோக வைகுந்த ஆலயத்து ரங்கநாதப் பெருமாளை, ஆகம முறைப்படி வழிபடும் ஆன்ம ஞானியரை, சூரிய மண்டல ஒளிச்சுழல் வழியாக, நேராகவே பகவான் வைகுந்தம் கொண்டு சேர்க் கிறார் என்பது ஐதிகம்.

இதயபூர்வமாக வழிபடுகின்ற குடும்பஸ்தர்களுக்கு சகல சௌபாக்கியங் களும் நிறைவதற்காக.... **ஸ்ரீதேவி, பூதேவி, நீளா தேவி, சோழவல்லி, சேரகுலவல்லி, மாலையைச் சூடிக்கொடுத்த சுடர்க்கொடியான, திருப்பாவை ஆண்டாள், துலுக்க நாச்சியார்** ஆகிய ஏழு செல்வ நாச்சியார்களுடன் விளங்குகிறார். "போகமண்டப"த் தலைவரான ஸ்ரீரங்கநாதர். "ஒரு கடவுளுக்கு ஏழு மனைவியரா?" ஸ்ரீ கிருஷ்ணனுக்கு கோபியர் எத்தனை நூறு? மும்மூர்த்திகளோடு முருகனுக்கும் இரு மனைவியர்! இவையெல்லாம் தத்துவரீதியாக விடை காண வேண்டிய சத்தியப் பிரச்சனைகள்!

உருவில் வளர்ந்தபின் பெற்ற தாயிடம் கூட ஓரளவு ஒளிவு மறைவு நமக்குத் தேவைப்படுவதே!, ஆனால் மனைவியிடம்? கணவனிடம் மனைவி எதையாவது மறைக்க முடியுமா? மறைத்தால் அவள் மனைவியாக இருக்க முடியுமா? அது போல, "நாயகன், நாயகி" முறை பக்திக்குத்தான் கடவுளிடம், முதலிடம். பரமாத்மாவுடன் ஜீவாத்மாக்கள் சங்கமமாகும். பரிபூரண சரணாகதித் தத்துவம் தான் இப்படிப் பாமரர்க்கும் புரியும் வகையிலே "கணவன் மனைவி"யாக நிகழ்த்தப்படுகிறது. நமது வேத, இதிகாச, புராணங்களிலுள்ள ஒவ்வொரு முரண் பாட்டுச் செயல்களுக்கும், சம்பவங் களுக்கும் வெவ்வேறு நியாயமான தத்துவ ரீதியிலான விளக்கங்கள் உள்ளன; இது சத்தியம்.

பிரமாண்ட புராணம், மச்சபுராணம், பத்மபுராணம் முதலானவற்றுள் ஸ்ரீரங்க திவ்ய தேசத்தின் மகத்துவம் கூறப்பட்டுள்ளது.

சங்க நூல்களான அகநாநூறு, தொல்காப்பியம், பரிபாடல், கலித்தொகை முதலான சங்க இலக்கியங்களில் ஸ்ரீரங்கம் சிறப்பாகப்பேசப்படுகிறது.

சங்கமருவியகாலத்துச் சிலப்பதிகாரத்திலே, திருவரங்கப் பெருமை, விரி வாகவே பேசப்படுகிறது. ஸ்ரீவால்மீகி முனிவரின் இராமாயணம், கம்பராமாயணம், ஸ்ரீபரமேஸ்வரசம்ஹிதை, கோயிலொழுகு, குருபரம்பராபிரபாவம், ஆராயிரப்படி,

திர்யசூரிசரிதம், பிரபன்னாமிர்தம், ஆசார்ய சுக்திமுக்தாவளி, லட்சுமி காவியம், திருமலை ஒழுகு, அண்ணன் திருமாளி ஒழுகு, பழநடை விளக்கம், உபதேச ரத்ன மாலை, பெரிய திருமுடியடைவு; ஸ்ரீரங்கத்தலபுராணம் முதலானவற்றுள் ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தின் மஹாத்மியங்களை நிறைவாகக் காணலாம்.

ஆதிசங்கரரின் ஸ்ரீரங்கநாதாஷ்டகம், ராமானுஜரின் ஸ்ரீரங்கத்யம், பராச ரபட்டரின் ஸ்ரீரங்க ராஜஸ்தவம், ஆளவந்தாரின் சதுச்லோகி, கூரத்தாழ்வானின் ஸ்ரீஸ்தவம், பிள்ளைப்பெருமாளய்யங்காரின் திருவரங்கத்து அந்தாதி, மஹாதேசி கனின் ஸ்ரீ பாதுகாஸகஸ்ரம், முதலானவற்றோடு ஸ்ரீரங்கநாதனின் தாஸர்களான.... மகாகவிகாளிதாஸ், கிருஷ்ணசைதன்யர், துளசிதாஸர், புரந்தரதாஸர், ஸ்ரீபாத தாஸர், மந்திராலய ராகவேந்திரர், கவிகாளமேகம், பாரதப் பெருதேவனார், தியாகய்யர், முத்துசாமி தீட்சிதர், சியாமாசாஸ்திரி, அருணாசலக் கவிராயர், தண்ட பாணி சுவாமிகள்... இப்படியாக எண்ணமுடியாதபடி திருவரங்கனின் அருளாளர் தொகை, விண்மீன் கூட்டமாக விரிகிறது...!

ஸ்ரீரங்க, க்ஷேத்திரத்தின் நூற்றாண்டுக் கணக்குகளாக... கி.பி. 1-முதல். ஏழாம் நூற்றாண்டு முடிய சோழ, பாண்டிய, பல்லவ அரசர்களின் திருப்பணிக ளோடும், திவ்யப் பிரபந்தப் புகழோடும் ஸ்ரீரங்கம் திகழ்ந்தது என்று மட்டுமே குறிப்பிட முடிகிறது.

எட்டாம் நூற்றாண்டு

731-ல் ஆண்டாளின் திருப்பாவை; சூடிக்கொடுத்த அந்தச் சுடர்கொடி, அரங்கனின் திருவடிகளில் ஐக்கியமானது.

790-ல் திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் ஆகியோரின் "திருவாய் மொழி"யை அத்யயனஉத்ஸவத்தில் "சிரஞ்சீவி"யாகக்குகிறார். திவ்யப் பிரபந்தத் தைத் "தமிழ்வேதம்" என ஏற்றுக் கொண்ட பெருமாள் வைபவத்தால், சமஸ்கிருத மொழிப் பிரியர் (வெறியர்)கள், பிரபந்தப்பாசுரங்களைக் "கொல்லும் பாட்டு" என்று சொல்லிப் பிரச்சாரம் செய்கிறார்கள்! நாளடைவில் திவ்யப் பிரபந்த நாலாயிரம் பாடலுடம் படிப்படியாக வழக்கொழிந்து மறைந்து வந்தன...!.

ஒன்பதாம் நூற்றாண்டு

823-ல் காட்டுமன்னார் கோயிலில் பிறந்த ஸ்ரீநாதமுனிகளின் தியான பலத்தால், மறைந்த "தமிழ்வேதம்" புத்துயிர் பெறுகிறது. 885-ல் கம்பராமா யணத்தை கோயிலுள் அரங்கேற்ற வைத்த நாதமுனிகள், தாம் வகித்த ஆலயத் தலைமையை உய்யக்கொண்டா ரிடம் ஒப்படைத்து விட்டுத் திருநாடு புறப்பட்டார்.

890-ல் கலிங்க நாட்டு முரட்டுப்படைகளால் ஸ்ரீரங்க ஆலயம் சேதமானது; பக வானே அருளிய பாஞ்சராத்ரபூஜா முறை, சுயலாபநோக்குடன் சில விஷமி களால் "வைகாநசம்" ஆக்கப்பட்டது.

பத்தாம் நூற்றாண்டு

929-ல் அவதரித்த மணக்கால்நம்பி, ஆலயத்தை நிர்வகித்து, நாதமுனி களின் பேரனாகிய ஆளவந்தார் வசம் ஒப்படைக்கிறார். ஹொய்சள அரசர்களால், ஆலயம் பொருள் வளம் பெறுகிறது. "தனக்குப்பிறகு யார் ?" எனத் திகைத்த

ஆளவந்தாருக்கு, ஸ்ரீபெரும்பூதூரரைக் "கோடி" காட்டுகிறார். பெரிய பெருமாளான ஸ்ரீரங்கநாதன்.

பதினொன்றாம் நூற்றாண்டு

1017ல் பெருமாளின் பேரருள் "உடையவ"ரான **ஸ்ரீராமாநூஜர் பிறந்தார்.** 1025-ல் ஈழக்கைதிகளால் கொள்ளிடநதியைச் செப்பனிட்டுச் சீர்படுத்துகிறான் முதலாம் ராஜேந்திரன். ஆளவந்தார் விருப்பப்படி காஞ்சியிலிருந்து ராமாநுஜரை பெரியநம்பி ஸ்ரீ ரங்கத்திற்கு அழைத்து வருகிறார்; ராமாநுஜர் வருமுன்பே ஆளவந்தார் திருநாடு புறப்பட்டுவிடுகிறார். அவரது விருப்பப்படி ஸ்ரீராமநுஜர், "தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்தினார்" பாஞ்சராத்ர பூஜையை மீண்டும் ஏற்படுத்தி,, நாலாயிர திவ்யப் பிரபந்தத் தமிழை முழங்க வைத்தார். "ஐந்து கொத்து" என்றிருந்த ஆலய நிர்வாகஸ்தர்களை, "பத்துக்கொத்து" ஆகச் செய்து, ஊழல்களை அறவே ஒழித்தார். ராமாநுஜரின் நேர்மையினால் பாதிக்கப்பட்ட, காசாசை பிடித்த சில போலி வைணவ வெறியர்கள், அவருக்கு விஷமிடவும் துணிந்தனர்; இறையருள், ராமாநுஜரைக் காத்தது. தங்கை மகனான **முதலி** யாண்டான் வம்சத்திடம் ஆலயத்தை ஒப்படைத்து விட்டு, திவ்பதேசயாத்திரை புறப்பட்டுப் போய், வயோதிகத்திலே ஸ்ரீரங்கம் திரும்பினார் ஸ்ரீராமாநூஜர்.

பன்னிரெண்டாம் நூற்றாண்டு



1137-ல் வைணவ சமயத்தின் சேவைக்கென 75- "தலைவர்" களை நியமித்த **ஸ்ரீராமாநுஜர், 120-வது வயதில் திருநாடு சேர்ந்தார்: அவரது திருமேனி அப்படியே மூலவராக்கப்பட்டு, இன்றும் பூஜிக்கப்படுகிறது, ஆலயத் தலைமையை கந்தாடை ராமாநுஜம்** ஏற்கிறார். 1178-ல் ஸ்ரீரங்கம், திரு வானைக்கா எல்லைத் தகராறு ஏற்பட்டு, அரங் கனுக்கு "ஜம்பு தீர்த்தம்" "இல்லை" என்று ஆகிறது. 1198-ல் அரங்கநாதனின் அத்யந்த பக்தரான "துவைத" சம்பிரதாய, மத்வாச் சார்யர் பிறந்தார். (1275 வரை வாழ்ந்தார்)

பதின்மூன்றாம் நூற்றாண்டு

1223- முதல் 1225 வரை கலிங்கப்படை, **ஸ்ரீரங்கக்கோயிலை முற்றுகையிட்டது,** 300 நாட்கள் **பூஜையற்றிருந்த பெரிய பெருமாள், ஹொய்சல** மன்னர்களால் "விடுதலை" பெறுகிறார். 1234- முதல் 1262-முடிய ஹொய்சளராஜா **சோமேஸ்வரன்** ஆலயத்திலே பல திருப்பணிகளைச் செய்கிறார். 1251-ல் **சடையவர்ம சுந்தரபாண்டியன்,** ஸ்ரீரங்க ஆலயத்தையே பொன் மயமாக்குகிறான்; ரங்க விமானம் முதன் முதலாக பொற்கவசம் பெறுகிறது. 1263-முதல் 1297-வரை ஹோய்சள ராமனாதர், பல திருப்பணிகளோடு ஸ்ரீ கோபாலகிருஷ்ணர் சன்னதியையும் கட்டி முடிக்கிறார்.

பதிநான்காம் நூற்றாண்டு

1311-ல் பாண்டியச் சகோதரர்களின் பதவிப்போட்டியால், தமிழகத்துள் புகுந்த **மாலிக்காபூர்**, மதுரை, ஸ்ரீரங்க ஆலயங்களிலிருந்து 96000, மணங்கு தங்க, வைர, வெள்ளி நகைகளோடு, பற்பல உற்சவ மூர்த்திகளையும் டெல்லிக்குக் கொண்டு போனான். பின் தொடர்ந்த வைணவ "**அரையர்**"கள் ஆடிப்பாடி "**அழகியமணவாள**"ரை மீட்டுவந்த பிறகு, டெல்லிச் "சுல்தான்" மகளின் பெருமாள்பக்தி; அரங்கனைத் தேடி ஸ்ரீரங்கம் வந்து, ஆவியைத்துறந்த சுல்தானின் மகள், பெரிய கோயிலிலே "**துலுக்க நாச்சியார்**" ஆகிறாள்.

1323-ல் மீண்டும் கொள்ளையிட வந்த சுல்தான்படைகளால், ஸ்ரீரங்க ஆலயக் கருவூலம் காலியாகிறது; தொன்மையான கோபுர, மண்டபங்கள் தூள் தூள்! மூலஸ்தானத்தையும் தகர்க்க நினைத்த படைத்தலைவனை. தியாகமகளான ஒரு **தேவதாஸி** சாகஸத்தால் வென்று, "பெரிய பெருமாளை"க் காப்பாற்றுகிறாள்; உற்சவரான "அழகிய மணவாளரை" துக்ளக் கும்பலிடமிருந்து மீட்கும் திருப்பணியில் உயிரையே தியாகம் செய்கிறார் **பிள்ளைலோகாசார்யர்**; திருப்பதிப் பகுதியில் பாதுகாக்கப்பட்டு வந்த ஸ்ரீரங்க உத்ஸவர், 50 ஆண்டுகளுக்குப் பிறகு ஆஸ்தானம் (ஸ்ரீரங்கம்) சேருகிறார்.

1325-ல் சோழ, பாண்டியரெல்லாம் சொரணையற்றுப் போன நிலையிலே, ஹொய்சள மன்னனான **மூன்றாம்வல்லாளன்,** இடைவிடாமல் துருக்கரை எதிர்த்துப் போராடியபடி இருக்கிறான்.

1336-விஜய நகர சாம்ராஜ்ய உதயம். கொள்ளையர் நிலை, கல கலத்தது! விஜயநகரப் பிரதிநிதியான கம்பணரின் மனைவி, **கங்காதேவி** எழுதிய "**மதுரை விஜயம்**" என்கிற நூல், பேராசைத் துருக்கர் கொடுமைகளை விவரிப்பதாகும்.

1342-ல் எண்பது வயதான மாவீர மூன்றாம் வல்லாளனை, துரோகி, **கியாஸ் உத்தீன்** நயவஞ்சகமானகச் சிறைப்படித்து, உயிரோடு தோலை உரித்து ராஜ வீதியின் முச்சந்தியே அந்த மாவீரனின் உடலைத் தொங்கவிடுகிறான்; வல்லாளன் தெய்வமாகிறார்.

1371-ல் ஸ்ரீரங்க ஆலயம், விஜய நகரப் பிரதிநிதிகளால், மாற்றாறிடமிருந்து முற்றிலுமாக மீட்கப்படுகிறது.

பதினைந்தாம் நூற்றாண்டு

1415-1429- காலங்களில் ஸ்ரீரங்கத்திலே, நின்று போன பல திருவிழாக்கள் தொடங்குகின்றன; ஸ்ரீரங்கம், திருவானைக்கா எல்லைச்சுவர் கட்டப்படுகிறது.

1432-ல் விஜயநகரப் படைத்தலைவர் **கோனேரி நாயக்கரின்** பேராசையால், ஆலயநிர்வாகம் சீரழிகிறது! நிலப்பட்டாமாற்றங்கள், கருவூலக் கொள்ளைகள்;

பூஜைகளின் சிதைவு ஆகியவற்றால் மனம்நொந்த **ஜீயர், ஏகாங்கியர் பலர், கோபுரமேலிருந்து குதித்து மாய்ந்தனர். திருச்சி நரசநாய்க்கர்** விரைந்து வந்து, கோனேரிநாயக்கனின் அராஜகத்தை வீழ்த்தி, ஆலயநிர்வாகத்தை "கந்தாடை பரம்பரை"யினரிடம் ஒப்படைக்கிறார்.

1416-ல் **மல்லிகார்ஜுனராயாரால்** ஸ்ரீரங்க கோபுர ஜீர்ணோத்தாரண சம்ரோட்சணம்; (கும்பாபிஷேகம்) நடைபெறுகிறது.

பதினாறாம் நூற்றாண்டு

மாமன்னர் **கிருஷ்ணதேவராயரின்** (1509-1529) காணிக்கைகளால், 1526-ல் ஸ்ரீரங்கக் கோயிலின் "குலசேகரன்படி" கொடிமரம் முதலானவற்றிற்கு தங்கத்தகடு போடப்படுகிறது.

ஆலய நிர்வாகம்.... **கூரநாராயணஜீயர், ஸ்ரீரங்க நாராயணஜீயர்** என சிரத்தா பக்தியுள்ள சேவையாளர்களின் கண்காணிப்புடன் தொடருகிறது.

விஸ்வநாத நாயக்கர் (1529-1564) ஸ்ரீரங்க க்ஷேத்திரத்திற்கு மூன்று லட்சம் பொன்களைச் செலவு செய்து-சாலைகள், விளைநிலங்கள், புதிய குடியிருப்புகளை ஏற்படுத்துகிறார். அந்த நூற்றாண்டின் முடிவிலே, கடவுளுக்கு **"வடமொழியா, தென்மொழியா"** என்று தொடங்கிய சர்ச்சை "புகைந்து" ஒரே வைணவமானது, வட **கலை-தென்கலை** என "இருக்ட்சி"யாகப் பிளக்கிறது.

பதினேழாம் நூற்றாண்டு

1600-ல் தஞ்சை மன்னர் **அச்சுதப்ப நாயக்கர்** முடி துறந்து, ஸ்ரீ ரங்க ஆலய விசுவாசியாகிறார்; ரங்கவிமானத்திற்குத் தங்க மூலாம் தருகிறார். 1602-ல் மேற்படி மன்னரால் **"ஸ்தலத்தார்"** என நான்கு நிர்வாக பரம்பரை நியமிக்கப்பட்டதும், "வடகலை தென்கலை" ப்பிரச்னை பூகம்பமாக வெடிக்கிறது!

கிருஷ்ணதேவராயர்காலத்து சஸ்கிருத வித்வான்களுக்கு தமிழ், புரியாத மொழியாகையால்... **"பெருமாள்சன்னதியில் தமிழால்ஆன நாலாயிர திவ்யப்பிர பந்தம் பாடுதல் அவசியமா?"** என்றனர்! இறைவழிபாட்டில் "தனித்தன்மை" பெறவிரும்பிய தமிழக "மைனாரட்டி" வைணவர் சிலரும் "பாகவத ஏக வணக்கத்தை" வெறுத் தனர்! அதன் விளைவாக **"முனித்ரயம்"** ஏற்பட்டு, வடகலை காஞ்சியிலும், தென் கலை ஸ்ரீரங்கத்திலும் "மெஜாரிட்டி" பெறுகிறது! வைணவ ஆலய விழாக்களிலே ஏகப்பட்ட குழப்பம்! (நாமச் சண்டை வழக்கொன்று, 200 ஆண்டுகளாகி, பல தீர்ப்புகளை ஏப்பமிட்டபடியாக இன்னும் தொடர்கிறது) ஸ்ரீரங்க, வரதர்களின் திருவருளால்... தென்கலை வடகலை இணைப்பின் விடிவெள்ளி போல ராஜகோபுரம் (1987) எழுந்துவிட்டது! இனியேனும் ஏகவைணவ ஒருமைப்பாடு மலர்வதாகுக.

புகழ்மிகு மன்னராகிய **திருமலைநாயக்கர்** (1623-1659) ஸ்ரீ ரங்கநாதனின் ஆலயத்திற்குப் பல திருப்பணிகள் செய்கிறார். 1665-ல் **சொக்கநாதநாயக்கர்**, அரங்கனுக்கு முத்தங்கி (இன்றைய மதிப்பு ரூ. 15 லட்சம்) சமர்ப்பிக்கிறார். **ராணிமங்கம்மாள்** (1689-1706) அழகிய மணவாளப்பெருமாளுக்கு (ஸ்ரீரங்க உத்ஸவ மூர்த்திக்கு) ரத்னஅங்கி (ரூ.7 லட்சம் மதிப்பு) செய்து தந்து சிறப்புப் பெறுகிறார்.

பதினெட்டாம் நூற்றாண்டு

அரசியலைவிட, ஆலய மோகம் கொண்ட **விஜயரங்க சொக்கநாத நாயக்கர்** (1706-1732) ஆலயத்திற்குப் பல மான்யங்களை வழங்கினார். 1736-ல்.... ஸ்ரீரங்க ஆலயத்தின் இன்றைய பொலிவுக்குக் காரண கர்த்தாக்களாகவும், அள்ளி வழங்குவதில் "**சங்கநிதி, பதுமதி**" களாகவும் விளங்கிய நாயக்க மன்னர்களின் ஆட்சி, **ராணி மீனாட்சி** (1732-1736) யோடு முடிவடைகிறது.

1745-ல் பிரஞ்சுக்கார "**டூப்ளே**" சென்னையைக் கைப்பற்றினார்; ஸ்ரீரங்க ஆலயத்தைப் படைகள் ஒய்வெடுக்கும் ராணுவப் பாசறையாக்கினார்.

1751-ல் ஆங்கிலேய தளபதி "**ராபட் கிளைவ்**" ஸ்ரீரங்க ஆலயத்துள் குடியிருந்த பிரஞ்சுப் படைகளைப் போரிட்டு வெளியேற்றி விட்டு, ஆலயத்தைத் தனதாக்கிக் கொண்டார்!

ஆங்கிலேயரிடம் நவாபுகள் செய்து கொண்ட ஒப்பந்தப்படி, ஸ்ரீரங்க ஆலயம் துருக்கர்களிடம் சிறைப்பட்டது. 1758 -முதல் 1781-வரை நவாபுகளின் படைவீடாக விளங்கிய ஆலய வளாகத்திலே, "**அசைவ நெடி**"யின் நாற்றம், பெரியகோயிலையே பூலோக நரகமாக்கியிருக்கிறது!

1781-ல் மராட்டியப் படையுடன் வந்த "**மைசூர்புலி**"யான "**ஐதர்அலி**" ஸ்ரீரங்க ஆலயத்தைக் கைப்பற்ற முடியாமல் திரும்புகிறார்.

1790-ல் வந்த ஐதரலியின் மகன் திப்புசுல்தானும் வெள்ளைக் காரச் சிப்பாய்களால் அங்கிருந்து விரட்டப்படுகிறார்.

நூற்றாண்டின் முடிவிலே, நவாபிடமிருந்த ஆலய நிர்வாக உரிமையை வெள்ளையர் பிடுங்கிக் கொள்ளுகிறார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு

"**ஸ்தலத்தார்**" களிடையே இருந்த பூசலைக் காரணமாகக் கொண்டு வெள்ளையர் அரசு, 1801-ல் ஆலயம் முழுவதையும், திருச்சி கலெக்டர் "**வேல்ஸ்**" என்பவரது கையிலே ஒப்படைக்கிறது; நல்லவரான அந்த வெள்ளைக்காரக் கலெக்டர், சிதறிக் கிடந்த ஸ்ரீரங்க வரலாறுகளைப் பாடுபட்டுச் சேகரித்து வைக்கிறார்.

"ஸ்தலத்தாரின்" உட்பூசல் கோர்ட் வரை சென்று 12-11-1842-ல் ஸ்ரீரங்கம் கோயில் **ஸ்கீம்** "ஜட்ஜ்மெண்ட்"டில் முடிகிறது. அதன்படி...... **வேதவியாசபட்டர், வாதூல தேசிக ரங்காச்சார்யர், அண்ணங்காச்சார், பராசரபட்டர், உத்தம நம்பி, உரையூர் வியாசராணி, மற்றும் கிருஷ்ணாராவ், "பிச்சாண்டார் கோயில்" சந்திர சேகரம்பிள்ளை** ஆகியோர் (கலெக்டர் மேற்பார்வையோடு) ஸ்ரீரங்க ஆலய பரம்பரை தர்மகர்த்தாக்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

1845-ல் "மதசுதந்திரத்திலே தலையிடமாட்டோம்" என்ற பிரிட்டீஷ் அரசி, **விக்டோரியா மகாராணி** யின் பிரகடனத்தால், ஸ்ரீரங்க ஆலய நிர்வாகம், ஸ்தலத்தாரின் முழு உரிமையாகிறது.

1871-ல் ஸ்ரீரங்க நகரம் விரிவடைந்து "முனிசிபாலிடி"யாகிறது.

1875-ல் அரங்கநாதனை சேவித்த பிரிட்டீஷ் இளவரசர், பொற்குவளை ஒன்றை ஸ்ரீரங்கருக்குக் காணிக்கையாகச் செலுத்துகிறார்.

இருபதாம் நூற்றாண்டு

முதலாம் உலகப்போர் (1914-1918), இரண்டாவது உலகப்போர் (**1930-1945**) பாரத விடுதலை (1947)-க்குப்பிறகு, அறநிலையப் பாதுகாப்பு இலாகா ஏற்பட்டு, ஸ்ரீரங்கம் உட்பட பிரபல ஆலயங்களில் "ஆஃபீஸ்" வைத்து நடத்திக் கொண்டு வரவு செலவு பார்த்து வருகிறது.

1959-ல் ஸ்ரீ ரங்க ஆலயத்தில் ஜீர்ணோத்தாரணமஹா கும்பாபிஷேகம்.

1968-ல் "ஐ-நா"வின் யுனெஸ்கோ உதவியால் புராதனச் சிற்பங்களுக்குப் பாதுகாப்பு ஏற்படுகிறது. **"ஜினைன் அவ்பாயர்", "எலிஸபெத் வோல்ஹ்"** (USA) பெண்மணியர், ஸ்ரீ ரங்க ஆலயஆராயச்சி நூல் **("திருவரங்கம் கோயில்")** சிறப்பாக எழுதியுள்ளனர்!! ஆனால்.. சமயத்துக்கும், கோயிலுக்கும் உரியவர்களாகிய நாமோ ? வெட்கக்கேடு!! ம்... விஷயத்தைப் படிப்போம்!

ஸ்ரீரங்க தேவஸ்தான திருப்பணிக்குழு துணைத்தலைவர் **திரு.கு. ஸ்ரீனிவாசன்** அவர்கள் ஷ நூலின் அணிந்துரையிலே... (9.12.1972) "ஐ.நா. கல்வி விஞ்ஞான பண்பாட்டு நிலையம், கலை வரலாற்றுத் துறையைச் சார்ந்த, **மிஸ். ஜூனையின்** அபோயர், 1966-ம் ஆண்டிலே இக்கோயிலுக்கு விஜயம் செய்து, விபரங்களை அறிந்து, இந்நூலை எழுதி..., ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளில் அச்சிட்டு அனுப்பியுள்ளார்கள்.....!

இதேபோல இக்கோயில் சம்பந்தப்பட்ட அரிய விஷயங்கள், அந்நாளைய திருவிழா விபரங்களை நன்கு ஆராய்ந்து தமிழில் புத்தகரூபமாக, பொது ஜனங்கள் கவனத்திற்கு கொண்டுவரும் வகையில் ஏற்பாடுசெய்வது (செய்தால்) நன்கு பயன் படத்தக்கதாகும்....." என்று குறிப்பிடுகிறார்கள்.

அந்த வகையான பயன்படும் காரியங்களை நாம், நமது பேராலயங்களிலே இதுவரையிலே ஏதேனும் நிறைவேற்றியுள்ளோமா? ஆலயத்தின் "E.O." அலுவலக "A.C."க்கு நிதி ஒதுக்கும்போது, கோயிலின் தலவரலாற்று நூலுக்கும் சிறிது "சாங்ஷன்" செய்யக்கூடாதா? ஆலய வரலாறுகளையும், அகத்தியத் தமிழர்தம் குலப் பெருமைகளையும் எழுதும் புலவர்களின் "பூவா"வுக்காவது இங்கு நிரந்தர வழியுண்டா? ஸ்ரீரங்கா! நீயே சொல்!

1970-ல் ஸ்ரீரங்க ஆலயத்தின் கருவறைப் பகுதியிலே..! தீவிபத்து ஏற்படுகிறது; மூலவருக்கு எந்த ஒரு பாதிப்பும் ஏற்படவில்லை.

1981-ல் தீவிபத்தால் ஏற்பட்ட ஆலயப் பகுதிகள் முழுவதும் சீர்செய்யப் பெற்று, ஜீர்ணோத்தாரண மஹா "சம்ரோட்சணம்" (கும்பாபிஷேகம்).

1986-1987 (**1396-ம் பசலி**) ஓராண்டு ஸ்ரீ ரங்க ஆலய வருமானம், 67 லட்சத்து 71 ஆயிரத்து 329, ரூபாய்கள். 274, 64 1/2; நஞ்சை,நிலம்; 1053 ஏக்கர் புஞ்சை நிலங்கள்; மனைகள் 130, கட்டிடங்கள் 54, ஆகிய சொத்துக்களோடு உபகோயில்கள் உள்ளிட்டு 222. பணியாளர்களுமாக இயங்கிவரும் ஸ்ரீரங்கப் "பெரியகோயில்" நிர்வாகம், இன்னும் ஏராளமான சீர்திருத்தங்களைக் காண வேண்டியிருக்கிறது! எப்படியெல்லாமோ செப்பனிடப்பட வேண்டியுள்ளது!! கடந்த பத்து ஆண்டுகளிலே... பெரிய கோயிலின் வரவும் மும்மடங்கு... செலவும் நாலு மடங்கு ஆகியிருக்கலாம்...! வரவு செலவு விபரங்களைப்பெறப்பலமுறை முயன் றேன்... ஆனால் என்னைப்போன்ற "சாதாரணனை" யார் மதிப்பார்?

திருமேனி தீண்டும் வேதவித்துக்களே! அகத்துறை நிர்வாக ஸ்தலத் தார்களே! புறத்துறை நிர்வாக அலுவலர்களே! ஆலய மூலவர்கள் வெறும் காட்சிச் சிலைகள் அல்ல! ஆலயம் ஒரு பல்பொருள் வியாபார அங்காடி அல்ல!

சமுதாயத்தைச் சீர்திருத்தும் தார்மீகப்பெரும் பொறுப்பு, பாரதத்தைப் பொறுத்தவரை ஆலயத்தார்களுக்கே உண்டு! வாழி நலம் சூழ.



கோயில் - சிதம்பரம்

"கோயில்" என்றாலே திருச்சிற்றபலம்பலமான சிதம்பரத்து ஸ்ரீநடராஜர் ஆலயம் தான்; சிதம்பராலய தில்லைப் பதியானது யுகயுகாந்திரங்களைக்கடந்த மகத்துவ முள்ள தாகும். பஞ்சபூதத் தலங்களுள், ஆகாயத்தலமான சிதம்பரத்தின் புராணவரலாற்றுச் சுருக்கமாவது...

அறத்தால் உயர்ந்து மாபெரும் தவத்தால் சிறந்த **மத்தியந்தினமகரிஷி** தனது மகனாகிய **மாத்தியந்தினரை,** ஞானம் பெறுவற்காக காசியிலிருந்து தில்லை வனத்திற்கு அனுப்புகிறார்.

தில்லைவன ஆதிலிங்கத்தை **(திருமூலநாதர்)** சிரத்தா பக்தியோடு பூஜித்துவந்த மாத்தியந்தினர், வண்டினம் முகராத மலர்களைச் சேகரிப்பதற்காக இறைவனை வேண்டி புலியினுடையநகமுள்ள, கை, கால் களைப் பெற்று **வியாக்கிரபாதர்** ஆகிறார். ஆதி முதலிலே கூரைக் கோயில் அமைத்து சிதம்பர ஆதிலிங்கத்தை நிழலில் அமர்த்தியவர் வியாக்கிரபாதர். தில்லைவனம் **"பெரும் பற்றப்புலியூர்"** ஆகிறது. இந்த நிலையிலே அளவைமீறிய தபோலத்தால், ஆணவ கர்வங்களுக்கு ஆளான தாருகாவனத்து மகரிஷிகளையும், அவர்தம் பத்தினியரையும் திருத்தி ஆட்கொள்ள வேண்டி, **பிட்சாடனர்** வடிவிலே ஹரனும், **மோஹினி**யாக ஹரியும் வந்து நாடக மாடுகின்றனர்.

விஷ்ணு மோஹினியின் கவர்ச்சியில் மயங்கிய மகரிஷிகள், தபோலத்தை இழக்கின்றனர், பிட்சாடனர் திருக்கோலச் சிவபெருமானின் கட்டான உடலமைப் புக் கவர்ச்சியிலே மனதைப்பறிகொடுத்த ரிஷிபத்தினியர், கற்புநெறியை மீறிய பாவத்திற்கு ஆளாகின்றனர். ஹரிஹரர் நாடகத்தை அறிந்து வெகுண்ட மகரிஷிகள், அதர்வண வேத **ஆபிசார வேள்விசெய்து,** மாயப்புலியை ஹரன்மீது ஏவுகிறார்கள்; புலியைத் தோலாக்கி உடுத்துக் கொள்கிறார் ஹரனாகிய சிவன். ரிஷிகளின் அதர்ம ஹோமம் மேலும் தொடர்கிறது. சீறிவந்த பாம்புகள் சிவபெரு மானுக்கு ஆபரணமாகின்றன: பாய்ந்துவந்த மத யானை, ஈசனின் ஆடையாகிறது! அபஸ்மாரபூதம் முயலகனாகிறது. மதியிழந்த ரிஷிகளால் ஏவிவிடப்பட்ட செந்தீ ஜ்வாலையானது, ஆண்டவனின் இடக்கரத்தில் அடைக்கலமாகிறது; இறுதி யாகவந்த அதர்வண ஏவல் மந்திரங்களைத் திருவடிச் சிலம்பாக்கிக் கொள்கிறார் சிவபெருமான்: சிலம் பணிந்த கால்கள் சிலிர்க்கின்றன பொங்கழல் உருவன், சங்கார மூர்த்தியாகி; சர்வ லோக அண்டசராசரங்களும் நடுநடுங்க ரௌத்ர தாண்டவம் புரிகிறார்.

சிவசக்திப் பிரளயதாண்டவத்தால் சுயபுத்திவரப் பெற்ற தாருகாவன மகரிஷிகள் **"ஹர ஹர சங்கர ஜய ஜய ஸ்ரீதர"** எனச் சரணடைகிறார்கள். கர்வ மடைந்திருந்த ரிஷிபத்தினியர், பாவமன்னிப்புக் கேட்டுக் கண்ணீர் சிந்துகின்றனர்

ஆவேசம் அன்பாகி, ருத்ரமூர்த்தியின், கோபாவேச ரௌத்ரதாண்டவம், கோபாவேச அன்புச் சிவத்தின் ஆனந்த நடனமாகிறது.


அந்தப் பேரானந்தத் தாண்டவத்தால் பிரம்மானந்த நிலைகண்ட ஸ்ரீமந் நாராயணன், தனது வைகுந்த 'மஞ்ச'மாகிய ஆதிசேஷனிடம் நடந்த விபரங்களைக் கூறுகிறார், தனக்கும் அப்பேரின்பத்தை அருளப் பிராத்தித்த ஆதி சேஷனைக் கயிலைக்கு அனுப்புகிறார் ஸ்ரீஹரி.

திருக்கைலாயம் வந்த ஆதிசேஷன், மெய்யுருகப் பிரார்த்தித்தபடி ஆனந்தத் தாண்டவத்தைக்காணும்பேரருளைத் தனக்கும் தந்து திருவருள் புரியும்படியாக ஈசனிடம் வேண்டுகிறான் "தில்லை வனத்திலே புலிக்கால் முனிவனும் இதே குறிக்கோளில் எமைப் பூஜித்து வருகிறான் நீயும் போ, தைப்பூச நன்னாளிலே பலன் பெறுவீர்", என ஆதிசேஷனை அனுப்பி வைக்கிறார் கைலைவாசன்.

அத்திரி முனிவரின் கமண்டலு வழியாக பூமிக்கு வந்த **ஆதிசேஷன், பதஞ்சலி முனிவராகித்** தில்லைவனத்திலே வியாக்ரபாதருடன் ஈசனது திருநடனத்தைக் காணக் காத்திருக்கிறார்.

தைத்திங்கள் குருவாரம், ஆதிலிங்கச் ஜோதிச் சுடரிலே எழுந்தருளிய ஹரஹரசங்கரனை, அவுணரை அழித்து முடித்து ரௌத்ராவேசம் குறையாமல் ஆவேச நிலையிலிருந்த எல்லைக்காளியான **ரௌத்ரி**, எதிர்க்கிறாள். இருவரது போட்டி. ஈஸ்வரனின் ஏழு தாண்டவங்களும் பூமிக்குக் கிடைக்க வேண்டுமென்ற நியதிக்கேற்ப, **காளிகா, கௌரி, சந்தியா, சங்கார, திரபுரா,** தாண்டவங்களை முடித்து **ஊர்த்துவதாண்ட** வத்தால் காளியின் கோபாவேசத்தைச் செயலற்றதாக்கி, பெண்மையின் உண்மைச் சிறப்பினை உணர்த்தியபின், எல்லைக்காளியை **'தில்லைக்காளி'** என அழைத்து "இனிநீயே இச்சிதம்பரத்தின் முதல் உரிமைக்காரி" எனத் திருவருள் புரிந்து, **படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் அருளல்** ஆகிய பஞ்சகிருத்திய ஞானானந்தத் தாண்டவத்தை நிகழ்த்துகிறார் ஸ்ரீ நடராஜர்.

'கூத்தபிரானே! யாம் பெற்ற இன்பம் பூமியிலே வாழ்கின்ற மக்கள் எல்லோர்க்கும் கிடைக்க வேண்டும்', என பதஞ்சலி, புலிக்கால், முனிவர்கள் வேண்ட, "அப்படியே ஆகுக", என்றபடி, தனது கைலாய முக்தருள், மூவாயிர ஜீவன் முக்தர்களை நால்வேத வித்தகர்களாக்கி, "தில்லைமுவாயிர அந்தணர்கள்"



தீட்சிதர்கள் என்றாக்கி, அவர்களைத் தில்லையிலே இருத்திவிட்டு, அந்தர் தியானமாகிறது, அன்புச் சிவம். உருவாக வந்து தாண்டவம் புரிந்து, உருவருவான இலிங்கமாகி, அருவமாகி (வெளி) விட்ட ஈஸ்வரனுக்கு **சிதம்பர ரகசியம்** எனப்படும் அருவ நிலை பூஜை தில்லையிலே ஆரம்பமாகிறது. தீட்சிதர் பெருமக்களான தில்லைமூவாயிரவரும் பதஞ்சலி, புலிக்கால் முனிவர்களும் அருவநிலையிலே நடராஜாவை ஆராதித்து வரும் நாளிலே...வானவெளியில் தான் செய்யப் போகின்ற அபூர்வமான அந்தர்வேதி யாகத்திற்குத் தில்லை மூவாயிர வரையும் அழைக்கிறார் பிரம்மதேவன். ரகஸ்ய நடராஜ பூஜையை விடுத்து வருவதற்கில்லை என்ற உண்மையான சிரத்தா பக்தியுள்ள தீட்சிதர்களுக்கு, அரு உருவான ஸ்படிகலிங் கத்தை வழங்கிய சிதம்ப ரேஸ்வரர், "**அந்தர்வேதி**" யாகப்பூர்த்தியிலே "சிரத்தா பக்தியால் எமது சிந்தை குளிரச் சிறந்த பலனைப் பெறுவீர்" என அனுப்பி வைக்கிறார்.

பிரம்மதேவன் செய்த அந்தர்வேதி யாகப் பூர்ணா ஹுதியிலே, சிதம்பராலய உருவ வழிபாட்டுக்கான **இரத்தினசபாபதியை** அடையப்பெற்ற தில்லை மூவாயிர வரும் தெய்வாம்ச முழுமைத்வத்தைப் பெறுகின்றனர்.

அருவம் (மந்திராட்சர சிதம்பர ரகஸ்யம்) உருஅருவம் (ஆறு கால அபிஷேக ஸ்படிகலிங்கம்) உருவம் (ரத்ன சபாபதியாகிய ஸ்ரீநடராஜர்)

உலகிலுள்ள எல்லா மதஸ்தர்களும் வழிபாட்டுக்கு உருவம் - விக்ரஹம். உருவருவம் - இலிங்கம்; . அருவம் - சூன்யவெளி ஆகிய மூன்றினுள் ஒன்றைத்தான் கடைப் பிடிக்கின்றனர். மூன்று வித வழிபாடுகளையும் ஒருங்கே கொண்ட ஒரே ஆலயம் சிதம்பரமாகும். எனவே சிதம்பரப் பேரலயமானது, சகல மதஸ்தர்களும் வணங்கத்தகுந்த -வணங்க வேண்டிய ஒரு சர்வமதசமரசப் புனிதாலய மாகிறது !

இறைவனை ஆராதிப்பதற்கு "இவ்வளவுதான் கூலி" என்று ஊதியம் பெறக் கூடாதென்பது வேதப்பொதுவிதி; "காசேதான் கடவுளா" என்றாகிவிட்ட இந்தக் கலியிலும் வேதவிதியை மீறாமல், சீலம் சிறிதும் மாறாமல், சிரத்தா பக்தியோடு, வைதிக நெறியோடு, ஆத்மார்த்த வழிபாடு நடைபெறும் ஒரே கோயில் சிதம்பரம் தான். சிதம்பராலய காவல் தெய்வமாகிய **சுவர்ண காலபைரவர்** "தில்லை மூவாயிரவர்" களான தீட்சிதர்களின் குடும்பத் தேவைகளைப் பூர்த்திசெய்ய ,செப்புத்தகடுகளைத் தங்கமாக்கித் தந்து, அந்த நாளிலே திருவருள் செய்தாராம்

இந்தநாளிலே.. பல நாடுகளிலும் இருந்து வருகின்ற மான்யங்களும், பிரபுகளின் அறக்கட்டளை வருவாயும், மடாலாய மற்றும் நகரத்தார் முதலான பற்பல சமூகத்தவர்களின் கட்டளைகளும் ஆலய அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. "சபாநாயகரே சகலமும்" என நம்பிவாழும் தீட்சிதர் குடும்பங் களையும் அவர்களது அனைத்துத் தேவைகளையும் ஸ்ரீரத்னசபாபதி பூர்த்தி செய்து கொடுத்து, இன்றளவும் சீராக வாழவைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பொதுவாகவே ஆலயச் சேவையாளர்களுக்கு போதுமென்ற மனமும், நாம்வெறும் பணி புரியவில்லை, திருப்பணியை ஏற்றிருக்கிறோம் என்ற இனிய உணர்வும்-நினைவும் பூரணமாக இருக்க வேண்டும்.

சமீப காலமாக ஆலயவளாகத்திலே "ஸ்ட்ரைக் மறியல்" **(19.1.95-பழனி கோயிலில் ஊழியர் ஸ்ட்ரைக்)** இடம் பெறுவது, முடிந்து போன கெட்ட

கனவுகளாகட்டும். உலகிலுள்ள சகல சிவ சக்திகளும் அர்த்த ஜாம பூஜைக்குப் பிறகு சிதம்பராலயத்தில் வந்து ஒடுங்குவதாக ஐதிகம். எனவேதான் அனைத்துச் சிவாலயங்களிலும் அர்த்த ஜாம பூஜை முடிந்த பிறகு இங்கு தொடங்குகிறது.

பத்தாயிர வருடங்களுக்கு முற்பட்ட காலத்திலே கட்டப்பட்ட **சிவாலயம்** ஒன்று 1937-ம்ஆண்டிலே **அமெரிக்காவில்** கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் விபரத்தை 23-9-1937 "நியூஸ் ரெவ்யூ" எனும் லண்டனில் வெளியான பத்திரிக்கையில் விரிவாகக் காணலாம்.

ஆறாயிர வருடங்களுக்கு முற்பட்ட சிந்துவெளி அகழ்வாராய்ச்சியிலே, சைவச்சின்னங்களான இலிங்கம், தட்சிணாமூர்த்தி, நடராஜர், நந்தி முதலான உருவங்கள் கிடைத்துள்ளதால் சைவாலய தலைமைச் செயலகமான தில்லையின் தொன்மையானது, நவீன கால ஆய்வுப்படியும் பல்லாயிர ஆண்டுகளுக்கும் முற்பட்டது என்பது உறுதியாகிறது,

கௌட (பல்லவ) தேச இளவரசனின் தீராத நோயை, சிதம்பராலயத்துச் சிவகங்கைத்தீர்த்தம் தீர்த்து வைத்ததால். **ஹிரண்யவர்மன்** எனும் சிறப்புப்பெயர் பெற்று மன்னாகி, சிதம்பரக் கோயிலை முழு உருவகப்படுத்தி ஸ்ரீநடராஜருக்கு சிற்றம்பலம் அமைத்து, திருவிழாக்களையும் தோற்றுவித்திருக்கிறான் என்பது ஆதி நாளைய வரலாறு.

ஆதிசேஷனின் அம்சமான பதஞ்சலி முனிவர், "வியாகர்ண ஸுத்ரம்" பாடம் நடத்தியதும், சீடர்களின் அவசர புத்தியால், **கௌடபாதர்** ஒருவரைத் தவிர மற்றவர்கள் சாம்பலானதும், சிதம்பர வரலாற்று இதிகாசக் குறிப்புகள்

ஈழத்தரசனின் ஊமை மகளைப்பேச வைத்ததும், "பாவை (திருப்பாவை) பாடியவாயால் கோவை (திருக்கோவையார்) பாடுக" எனப் பரமனே ஆணையிட்டு மணிவாசகரின் இலக்கியத்திற்குச் கைச்சாத்திட்டதும், சேக்கிழாரைப் **பெரியபுராணம்** பாட வைத்ததும், நாகபாசப் படலத்தால் தில்லைப்பிள்ளை உயிர் பெற்றழுந்த ஹரிஹர பேதமற்ற கம்பராமாயண மகத்துவமும் தில்லைக் கோயிலின் ஏராள அற்புதங்களில் ஒன்றிரண்டாகும்.

(கம்பராமாயணம் தில்லைக்கோயிலுக்குச் சென்று படாதபாடுபட்டதை "வினோதரசமஞ்சரி"யில் உள்ளபடி சிறுபகுதியைப் -படித்து- ரசிப்போமா)

"கவிச்சக்கரவர்த்தி கம்பர், தாம் பாடின ஆறு காண்டங்களுடனே ஒட்டக்கூத்தர் பாடின உத்தர காண்டமும் சேர்த்துப் பன்னீராயிரம் கவிகளையும் எழுதுவித்துச் சோழன் முதலானவர்களுக்கு இராமாயணம் பாடி முடித்த செய்தியை அறிவித்து, இது விஷ்ணு பரமாகையால் இதை அவ்விஷ்ணுவின் திவ்ய தேசங்கள் பலவற்றிலும் முக்கியமாக திருவரங்கம் பெரிய கோயிலில் அரங்கேற்றல் செய்யவேண்டும் என்று அவர்கள் அனுமதி பெற்று, ஸ்ரீகோசத்தை (புஸ்தகத்தை) எடுப்பித்துக்கொண்டு ஸ்ரீரங்கத்திற்குப் போய், அக்காலத்திலே அந்த ஸ்தலத் திலிருந்த ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குச் செய்தி தெரிவிக்க, அவர்கள் மேற்படி காவியத்தில் 'நரஸ்துதி' பண்ணப்பட்டிருக்கிறது என்பதனாலும், மற்றும் சில அபிப்பிராய பேதத்தினாலும் அசூயை கொண்டு, அக்கருத்தை வெளிப்படுத்தாமல், "சமஸ்கிருத பாஷையா யிருந்தால் ஒன்றும் யோசனை பண்ண வேண்டியதிலலை, இது தமிழாதலால் எப்படி இருக்குமோ என்று எங்களுக்கு அனுமானமாய் இருக்கிறது, நீரோ பிரபல வித்வான், உமது பாண்டித்தியத்தைக் குறித்தும் யோக்கியதையைக் குறித்தும் சொல்லுகிறதற்கு நாங்கள் அருகர்கள் அல்லேம். தமிழிலே முழுவதுமாகஈடுபாடுகொண்டு வித்துவான்களாக இருக்கிறவர்கள் தில்லை மூவாயிரவர் என்னும் தீட்சிதர்களும், மற்றும் சிற்சில பெரியவர்களுமாதலால், அவர்கள் குற்றம் சொல்லாதபடி கொஞ்சம் பிரயாசப் பட்டாவது அங்கேபோய் இராமாயணத்தை அவர்களுக்குக் காட்டி அவர்களுடைய கையொப்பம் வாங்கிவந்தால் உமது காவியத்திற்கும் உமக்கும் அதிக கௌரவமாயிருக்கும்" என்றார்கள்.

அவர்கள் சொற்படியே கம்பர் சிதம்பரத்திற்குப் போய்த்தில்லை மூவாயிரவர்களில் சிலரைக் கண்டு இந்தச் செய்தியை அறிவிக்க, அவர்கள் "நாங்கள் மூவாயிரம் பெயரும் கூடினால் அல்லாமல், ஏகதேசத்தில் இதற்கு உத்தரம் சொல்லுகிறதெப்படி? நீர் இன்னொரிடத்தில் போம்" என்று சிலரைக் குறித்து அவர்களிடத்தில் அனுப்ப, அங்கே போன பொழுது அவர்களும் "மூவாயிரம் பெயர்களும் ஒன்றாகச் சேர்ந்து ஆக வேண்டிய காரியத்திற்கு நாங்கள் என்ன செய்யலாம்?" என்று அனுப்பினார்கள். அவர்களும் மற்றுமுள்ள யாவரும் இப்படியே பலரிடத்திலும் போகச் சொல்ல, கம்பரும் அங்கங்கே பாவோடுகாலாய் நாள்தோறும் நடந்து எவர்களுடனே சொன்னாலும் மூவாயிரம் பெயரும் ஏக காலத்திலே கூடினால்தான் உமது எண்ணம் முடியும் அல்லா விட்டால் ஒரு யுகம் சென்றாலும் நீரெடுத்த காரியம் சித்தியாக மாட்டாது,, என்று சொல்லக் கேட்டு, இஃதென்ன ஊர்க்கூடிச் செக்குத் தள்ள வேண்டியதாய் இருக்கிறதே என்று வெகு நாளாக வியாசங்கப்பட்டு, ஒருநாள் ராத்திரி போஜனம் செய்து சயனித்துக் கொண்டிருக்கும்பொழுது தில்லைத் திருச்சித்திரக்கூடத்தில் "பச்சைமாமலை" போல் எழுந்தருளி, அரிதுயில்புரிகின்ற ஸ்ரீகோவிந்தராஜப்பெருமானைத் தியானித்து "ஓ ஜனார்த்தனா! பக்தபராதீனா ஆபத்பாந்தவா! இந்தக் காவியம் லோகப் பிரசித்தமாக வேண்டுமென்று உனக்கே திருவுளம் இல்லையோ, நீ சூத்திரதாரி. நான் சூத்திரப் பிரதிமை; ஆதலால் நீ அசைத்த படியல்லது நானாக இயங்க மாடுவனோ, உன் சங்கற்பம் அப்படி இருந்தால் எளியேன் என்ன செய்வேன்?" என்று அதிக விசனத்துடனை வருந்த, சொப்பனத்தில் திருச்சித்திரக்கூட தீனதயாளன் எழுந்தருளி, "ஏன்சிறுவர்களைப்போல் துக்கிக்கிறாய்? நீ இராமாயணம் அரங்கேற்ற வேண்டித் தில்லை மூவாயிரவரைச் சபை கூட்டுவிப்பதற்காக வெகு பிரயாசப் பட்டாய், இனி உனக்கு ஒரு வருத்தமும் இல்லை இது வரையில் நீ பசியேப்பக்காரனாய் இருந்தாய் அவர்கள் புளியேப்பக்காரராய் இருந்தார்கள், ஆகையால் உனக்குண்டான ஆவசிகம் அவரக்கில்லாமல் போயிற்று நாளை உதயத்திலே, அத்தில்லை மூவாயிரவரில் ஒருவருடைய பிள்ளை, பாம்பு தீண்டி இறந்து போகும், அதைத் தகனசமுஸ்காரம் செய்வதற்காக அவர்கள் மூவாயிரம் வீட்டுக்காரரும் அந்தப் பிள்ளை இறந்த வீட்டினிடத்தில் வந்து கூடுவார்கள்; அத்தருணத்தில் போய் நீ பாடின இராமாயணத்தில் நாகபாச படலத்தை எடுத்து இன்ன இன்ன பாடலை வாசித்தால், விஷத்தால் இறந்த பிள்ளை பிழைக்கும்; அதைக் கண்ட மாத்திரத்தில் அவர்கள் தடையின்றிக் கையொப்பம் கொடுப்பார்கள் என்று அருளிச் செய்தார். ஸ்ரீகோவிந்தராஜப்பெருமாள்.

அப்படியே நடந்தது; கம்பர், பகவானை மனத்தில் ஸ்மரித்துத் தாம் பாடிய ராமாயண புஸ்தகத்தை அவிழ்த்து, நாகபாசபடலத்தை எடுத்து லக்ஷ்மணன் முதலானவர்கள் இந்திரஜித்து பிரயோகித்த நாகபாசத்தால் கட்டுண்டு மூர்ச்சையாய்க் கிடக்கையில், சகல புவன கர்த்தவாகிய ஸ்ரீமந்நாராயணன் பூர்வம் சங்கற்பித்த பிரகாரம் கருடன் வந்ததனால், அந்த ஆபத்து நிவாரணமான சந்தர்ப்பத்திற்கான சில பாடல்களை எடுத்து அவற்றுள்

"ஆழியான் பள்ளி யணையே! அவன் கடைந்த வாழி வரையின் மணித்தாம்பே! - ஊழியான்
பூணே! புரமெரித்த பொற்சிலையில் பூட்டுகின்ற நாணே! அகல நட" எனவும்

"மங்கை யொருபாகன் மணிமார்பி லாரமே! பொங்கு கடல்கடந்த பொற்கமிறே! - திங்களையும்
சீறியதன் மேலூரும் தெய்வத் திருநாணே! ஏறிய பாம்பே! இறங்கு" எனவும்

"பாரைச் சுமந்த படவரவே பங்கயக்கண் வீரன் கிடந்துறங்கு மெல்லணையே! ஈரமதிச்
செஞ்சடையான் பூணும் திருவா பரணமே நஞ்சுடையாய் தூர நட!"

எனவும் நூதனமாக மூன்று வெண்பாக்கள் பாடி., **அனந்தன் வாசுகி, சங்கரன், குளிகன், பதுமன், மரகாபதுமன், தக்ஷகன், கார்க்கோடன்,** என்னும் அஷ்ட மகாநாகம் முதலான சகல சர்ப்பங்களுக்கும் அதிபதியாகிய **ஆதிசேஷனைப்** பிரார்த்தித்தவுடனே, அங்கொரு புற்றிலிருந்து ஒரு சர்ப்பம் வெளிப்பட்டு வந்து, யாவரும் பார்த்துக் கொண்டிருக்கும் போது, அக்குழந்தையைக் கிட்டி முன்பு கடித்த வாயில் மறுபடி கடித்து, தலைக்கேறின விஷத்தை மீட்டுக் கொண்டு திரும்பச் சிறிது தூரம் போய் இறந்தது. பின்பு பிரக்கினை தப்பிக்கிடந்த குழந்தைக்கு உயிர் வந்தது; நித்திரை செய்து எழுந்ததுபோலக் கால், கைகளை அசைத்து., உசுவாச

நிசுவாசத்துடனே கண் விழித்தெழுந்தது. இதைக் கண்டவர்களெல்லாம் கம்பரை, விஷகண்டனாகிய சாக்ஷாது ஸ்ரீபரமசிவனே இப்படி மானிட உரு எடுத்து வந்தா னென்று அதிசயித்து புகழ்ந்து ஸ்துதி செய்தார்கள். எக்காலத்திலும் எப்படிப் பட்டவர்களையும் லட்சியம் பண்ணாத தில்லை மூவாயிரவர்கள், கம்பரை உள்ள படியே 'மகாத்மா' என்று மதித்துப் பயந்து, நாங்கள் இவரது மகிமை தெரியாமல் கால தாமதம் பண்ணி, இவர் விஷயத்தில் அபசாரப் பட்டோம் என்று அனுதபித்து அவரை மிகவும் உபசரித்தார்கள். - நன்றி "விநோதரசமஞ்சரி"

ஹரி ஹர சங்கமகேந்திரம், திருச்சித்ரகூட தில்லைச் சிதம்பரம்!

வியாசமகரிஷியின் பதினெட்டுப் புராணங்களிலே **ஸ்கந்தபுராணம், சிவமஹாபுராணங்க**ளோடு, உமாபதி சிவாச்சார்யரின் **கோயிற்புராணம்**, திருமலை நாதரின் சிதம்பரபுராணம், சிவானந்தரின் புலியூர்புராணம், சபாபதி நாவலரின் **சிதம்பரசபாநாத புராணம்**, யாழ்ப்பாண ஆறுமுக நாவலரின் **புராணசூசனம்,** நெல்லிப்பளை சிவானந்த ஐயரின் **புலியூர்ப்புராணம்,** மற்றும் **சபாநடேசபுராணம், மானவபுராணம், திருச்சித்திரக்கூடமகாத்மியம்** ஆகிய வற்றோடு; சாபாநாயகரின் (ஸ்ரீநடாரஜரின்) அத்யந்த உண்மையான பக்தர்களாக விளங்கும் பல தீட்சிதப் பெருமக்கள் இயற்றிய பக்தி இலக்கியங்களும் பலப்பலவாகும்.

தமிழ்வேதமெனப் போற்றப்படும் திருமூலரின் **திருமந்திரம்,** அப்பர் (நாவுக்கரசர்), சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர்களின் **தேவார திருவாசங்களும்,** ஐயடிகள் காடவர் கோனின் **க்ஷேத்திரவெண்பா**, திருமாளிகைத் தேவர், கருவூர்த் தேவர், பூந்துருத்திகாடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டிஅடிகள், திருவாலி அமுதனார், புருடோத்தமநம்பி, சேதிராயர், சேந்தனார் ஆகிய ஒன்பதின்மரின் **திரு விசைப்பா, திருப்பல்லாண்டு** களும், சேரமான் பெருமாளின் **பொன்வண்ணத் தந்தாதி,** நம்பி யாண்டார் நம்பிகளின் **கோயிற் திருப்பண்ணியர் விருத்தம்,** இரட்டையரின் **தில்லைக்கலம்பகம்,** கபில தேவரின் இரட்டை **மணிமாலை,** குமரகுருபரரின் **சிதம்பரமும்மணிக் கோவை,** பட்டினத்தாரின் **கோயில் நான் மணிமாலை,** அப்பையதீட்சிதரின் **ஹரி ஹர அபேதஸ் துதி,** குரு நமசிவாயரின் **சிதம்பர வெண்பா,** பாம்பன் சுவாமிகளின் **தஹராலய ரகஸ்யம்,** அண்ணாமலை ரெட்டியாரின் **நடராஜச் சிந்து**, சிதம்பரநாத முனிவரின் **நடராஜ சதகம்,** மாயூரம் கிருஷ்ணய்யரின் **நடராஜர் திருப்புகழ்**, சிவஞான தேசிகரின் **நடராஜர் திருவருட்பா,** பல கோயில்களின் தலபுராணங்களைப் பாடி வைத்த மகாவித்தவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் **தில்லையமக அந்தாதி** முதலானவற்றோடு, முத்துத் தாண்டவர், கோபால கிருஷ்ணபாரதி, மாரி முத்துப்புலவர், சிதம்பர அம்பிசாஸ்திரி, சிவசங்கர தீட்சிதர் முதலான அருளாளர் களின் சிதம்பராலயம் பற்றிய ஏராள கீர்த்தனை நூல்களும் அவற்றோடு

தில்லை கற்பக விநாயகர் அந்தாதி, பாண்டிய நாயகம் பிள்ளைத்தமிழ், புலியூர்வெண்பா, தில்லை நவமணிமாலை, தில்லை மும்மணிக் கோவை, தில்லைத் திருவாயிரம், பரமரகசியமாலை ஆகியவற்றோடு, மணவாள முனுசாமியின் நடராஜப்பத்து முதலான பலநூறு பிரபந்த இலக்கியங்கள்!



சிதம்பரநகரிலே ஐந்தாவது பிராகாரமாக விளங்கிய ரதவீதிகளிலும், வெளிவீதிகளின் எட்டுத்திக்குகளிலும் ஏராளமான இலிங்கங்கள் இருந்திருக்கின்றன; அந்த நாளிலே அஷ்டதிக்குப் பாலர்களாலும், மாதவ மகரிஷி களாலும் ஸ்தாபிக்கப்பட்ட அவற்றுள், இன்றும் ஒரு சில இலிங்கங் களை ஆங்காங்கே நகர்ப்பகுதியிலே காணலாம். தில்லை க்ஷேத்திர எல்லையிலே.... அஷ்டலிங்க ஆலயம், அனந்தேஸ்வரர்.... இளமையாக்கினார்..... பிரம்மபுரீஸ்வரர்.... மத்யந்தனேஸ்வரர்..... சுடலைய மர்ந்தார்..... பிரம்மராயர்.... கமலீஸ்வரன்..... ஸ்ரீராமர்.... ஆலயங்களோடு, தில்லைக் காளி, தெட்சிணகாளி, மாகாளி..., மகமாரியம்மன், அங்காளம்மன், விளங்கியம்ன், காமாட்சியம்மன், காயத்ரீ யம்மன், எல்லையம்மன், செல்லியம்மன், வெள்ளந்தாங்கியம்மன், ஸப்தமாதாக்கள், குறுமுனி அகத்தியர் வியாக்ரபாதர், வீரபத்ரசுவாமி, மறைஞானசம்பந்தர், மாணிக்கவாசகர், மெய்கண்ட தேவர், உமாபதிசிவம், சேக்கிழார், நந்தனார், ஆகியோர்க்கும் ஆலயங்கள் உண்டு. (வசிஷ்டர்மற்றும் இந்திராதி தேவர்களால் தில்லையின் எட்டுத்திசையிலும் ஸ்தா பிக்கப்பட்ட தனித்தனி லிங்க ஆலயங்கள் காலத்தால் மறைந்துவிட்டன).

நான்கு ரத வீதிகளோடு, ஏழு பிராகாரங்களைக் கொண்ட சிதம்பரப் பேராலயம், சுமார் 44 ஏகரா விஸ்தீரணம் உடையது.(51- ஏக்கர் என்றும் கூறுவர்)

135-அடி உயரமுள்ள ஏழு நிலைகளைக் கொண்ட நான்குபிரதான ராஜகோபுரங்களையும் இணைக்கும் பிரமாண்டமான திருமதிலின் நீளம் 6400, அடிகள்; உயரம் 36 அடிகளாகும்.

"(அன்னம் பாலிக்கும் தில்லை" என்பதை அறிவிக்கும் **தெற்கு கோபுரம்,** திருமுறைகளைப் பாதுகாத்த குகையிடத்தைக் கொண்ட **மேற்கு ராஜ கோபுரம்,** பரதநடனத்தின் நூற்றெட்டுச் கரணச் சிற்பங் களைக் கொண்ட **கிழக்கு,** மற்றும் **வடக்கு கோபுரங்கள்)** கோயிலின் பிரதான தீர்த்தமாகிய (160 அடி நீளம் 100 அடி அகலம்) **சிவகங்கை திருக்குளத்தோடு, திருப்பாற்கடல், பிரம்ம.... வியாக்ரபாத... ஆனந்த... நாகசேரி... குய்ய... புலிமேடு.... சிவப்பரியை பரமானந்தகூபம்** (மூலவர் அபிஷேகதீர்த்தம்) ஆகிய 10 தீர்த்தங்கள். (12 என்பதும் ஓர் சம்பிரதாயம்) ஸ்தல விருட்சம் **தில்லைமரம்,** இப்போது இல்லை; சிலாரூப ஆராதனை செய்யப்படுகிறது.

"பூலோக கைலாய"மாகிய ஸ்ரீநடராஜப் பெருமானின் சிதம்பரப்பேராலயத் துள் திருமூலநாதர் (ஆதிலிங்கம்) உமயபார்வதி, ஸ்ரீகோவிந்தராஜப்பெருமாள், திருத்தல நாயகியான, ஸ்ரீசிவகாமசுந்தரி, பாண்டியநாயகம் (முருகன்), தனிக்கோயில்களும், சன்னிதி களாக கற்பக (துல) விநாயகர், முக்குறுணி (8-அடி) விநாயகர், வல்லபை கணபதி, திருமூலவிநாயகர், மோகனகணபதி, மாம்பழ விநாயகர், பொல்லாப்பிள்ளையார் திருமுறை காட்டியகணபதியரோடு, ஸ்ரீலட்சுமி, துர்கை, அகிலாண்டேஸ்வரி, மீனாட்சிசுந்தரேஸ்வரர், சரபேஸ்வரர், சோமசுந்தரர், சண்டேஸ்வரர், சோமாஸ்கந்தர், பிட்சாடனர் ஊர்த்துவதாண்டவர், பல்லீஸ்வரர், மல்லிகேஸ்வரர், தட்சிணாமூர்த்தி, காலசம்ஹாரமூர்த்தி, லிங்கோத்பவர்,, நவலிங்கம், ஆகாசலிங்கம், அருணாசலேசர், ஜடாமுனி, பிரம்மசண்டேஸ்வரர், சன்னதிகளும், பாலசுப்ரமண்யன், குமரன், தண்டாயுதபாணி, ஐயப்பன், பைரவர், சந்திர-சூர்-யர்களுடன் நவக்கிரஹங்கள், எமன், சித்திரகுப்தன், ஜைமினி, புருஷாமிருகங்கள், அர்த்தஜாம அழகரோடு, அறுபத்து மூவர், தேவார மூவர், திருவாசக மணிவாசகருக்கும் இங்கே தனிச் சன்னிதிகள் உண்டு. சிதம்பரத்திலே "இரண்டாவது பரமேஸ்வரன்" எனப் போற்றப்படுபவர் ஸ்ரீநந்தி தேவராகும். தனிச் சன்னதி இல்லாவிட்டாலும் இருபெரும் சுதைவடிவ விஸ்வரூபியாக விளங்குகிறார்.


தேவதச்சனாகிய "மய" னால் உருவான பிரணவ பீடத்தில் **சித்சபையின்** ஐந்து படிகளும் **பஞ்சாட்சரமாகும்;** ஒன்பது கலசங்களும் **நவசக்தி;** பிரம்ம பீடத்து பத்துத் தங்கத் தூண்களும், **நான்கு வேத, ஆறு சாஸ்திரங்கள்;** சித்சபையின்

பதினெட்டு வெள்ளித் தூண்களும் பதிணென் புராணங்கள்; விதானத்துத் தூண்கள் 28-ம் ஆகமங்கள்; கை மரங்கள் 64-ம், ஆயகலை அறுபத்து நான்குமாகும்; "சிவாயநம" அட்சரங்களைக் கொண்ட 21,600, பொன் ஓடுகளும் மானுடத்தின் நித்திய சுவாச எண்ணிக்கையாகும்; ஆணிகள் 72,000...,மும் மனிதர்களின் ஆதார நாடிகளின் அம்ச இலக்கணமாகும்.

ஓர் முக்கிய குறிப்பு:- சிவபெருமானே ஸ்தாபித்தது இந்தச் சிதம்பராலயம்; சிவாம்சமாக நம்மிடையே நூறாண்டுகள் வாழ்ந்திருந்த ஸ்ரீகாஞ்சிப்பெரியவர், **1980** கால கட்டத்திலே மகாராஷ்டிர மாநில, சதாரா எனும் ஊரிலே தங்கியிருந்தார். சாமண்ணா எனும் வடஇந்திய கோடீஸ்வரர், பலலட்ச ரூபாய்களை "காஞ்சிமுனிவரு"க்குக் காணிக்கையாகத் தந்தார்; "மடத்தையே துறந்து வந்திருக்கும் எனக்குப் பணம் எதற்கு ?" என்ற பெரியவரிடம், மேலும் பணத்தைக் குவித்தார் கோடீஸ்வரர்.

அந்தப் பணத்தினால் ஓர் சிதம்பரப் பேராலயம் வடநாட்டுச் சதாராவிலே உருவானது. ஆகம முறைகளும், கோயில் அமைப்புக்களும் இம்மியும் மாறாத முறையிலே, வடபாரதத்திலே நடராஜருக்கு ஓர் ஆலயத்தை ஏற்படுத்தினார் ஸ்ரீகாஞ்சிமுனிவர். ஆரம்பத்திலே நமது தீட்சிதர்கள் பூஜித்த அந்த நடராஜரை, இப்போது சிரத்தா பக்தியுள்ள வடநாட்டு பண்டாக்களே ஆராதிக்கின்றனர். தமிழ் நாட்டுச் சிதம்பர ஆலயத்தில் உள்ளதுபோலவே 108 - கரண சிற்பங்களை சாஸ்திரப் பூர்வமாக அமைப்பதற்கு, ஸ்ரீபரமாச்சார்யரின் கட்டளைப்படி... டாக்டர் பத்மாசுப்ரமணியம் உடனிருந்து உதவியிருக்கிறார்.

சிதம்பரம் கோயிலுள் இருக்கும் ஐந்து சபைகளிலே **"ஆனந்தகோச"** மயமான **சித்சபையில்** நடராஜர்; **"விஞ்ஞானமயகோச"** மான கனகசபை பெருமானுக்கு திருமஞ்சன ஆறுகால பூஜாபீடம்; **"மனோமய கோச"**மான தேர்வடிவ **நிருத்தசபை**, ஊர்த்துவ தாண்டவமேடை; **"பிராணவமயகோச" தேவசபையானது** உற்சவமூர்த்தி களின் இருப்பிடம்; தீட்சிதர் பொதுச்சபைக்கூடுமிடம் **"அன்ன மயகோச"** (350 அடிநீள - 190 அடி அகல) ஆயிரக்கால் மண்டபமே **ராஜசபை;** இங்குதான் ஆனி, மார்கழி மாதங்களிலே சபாநாயகருக்கு பிரம்மோத்ஸவ, மஹாபிஷேகம் நடைபெறும்.



ஸ்ரீ நடராஜருக்காக ஸ்ரீ ஸ்படிக லிங்கஸ்வாமிக்கு அபிஷேகம் செய்து, நைவேத்தியம் செய்து, ஸ்ரீநடராஜர், ஸ்ரீசிவகாமசுந்தரிக்கு, தீபாராதனை செய்வது வரை "ஒரு காலம்" என்பதாகும்.

காலசந்தி - காலை ஏழரை மணிக்கு ஸ்நபனா, ஷவன, அதாவது கும்பம் வைத்து, பூஜை செய்து, ஹோமம் செய்து, பஞ்சகவ்யம் முதலியவைகளால் அபிஷேகம் செய்து, நைவேத்தியம் செய்து சரியாக 9 மணிக்கு தீபாரதனை நடைபெறும்..

இரண்டாங் காலம் -10 மணிக்கு ஸ்ரீ ஸ்படிகலிங்கத்துக்கு அபிஷேகம் செய்து, இதே காலத்தில் ஸ்ரீ இரத்தினசபாபதிக்கும், பால் தேன் சந்தனம் மட்டும் அபிஷேகம் செய்து, கற்பூர தீபாரதனை செய்வர், இங்குள்ள மாணிக்கநடராஜா, முன்புறம் பார்க்கும் சமயத்தில் கறுப்பாயும், பின்புறம் கற்பூர தீபாரதனை செய்யும் பொழுது ஜோதியாயும் தெரியும். இது முக்கியமான தரிசனம். வேறு எந்த பூஜை நேரத்திலும் காண முடியாதது. நைவேத்தியம் செய்து, 11 மணிக்கு தீபாராதனையோடு இரண்டாங்காலம் பூர்த்தியாகும்.

உச்சிக்காலம் - இரண்டாங்கால தீபாராதனை முடிந்தவுடன் அபிஷேகம் செய்து, நைவேத் தியமும் செய்து 12 மணிக்கு தீபாராதனை; உடனே கோயிலின் கதவு மூடப்பட்டு, மாலை ஐந்து மணிக்கு மீண்டும் கதவுகள் திறக்கப்படும்.

சாயரக்ஷை - மாலையில் ஆலயக் கதவு திறந்ததும், அபிஷேகம் செய்து, ஆறு மணிக்கு ஷோடசோபசார தீபாராதனை வழிபாடு நடைபெறும்.

இரண்டாம் (மறு) காலம் - இரவு 7மணிக்கு அபிஷேகம் செய்து - இந்தக் காலத்தில்தான் அருவமான ஸ்ரீ இரகசியத்திற்கு பூஜை நடைபெறும். கதவுகள் சாத்தப்பட்டு பூஜை செய்கிறவரும், செய்து வைக்கிறவரும் ஆக இருவர் மட்டுமிருந்து பூஜை செய்து, நைவேத்திபம் செய்து 8 மணிக்கு தீபாராதனை.

அர்த்த ஜாமம் - இரவு ஒன்பது மணிக்கு அபிஷேகம் செய்து, நைவேத்தியம் செய்து,10 மணிக்கு தீபாராதனை செய்து, ஸ்ரீ நடராஜரின் பாதுகையை, வெள்ளி, தங்கப் பல்லக்கில் எழுந்தருளப் பண்ணி, பள்ளியறையில் கொண்டு போய் வைத்து, அங்கு மீண்டும் நைவேத்தியம் தீபாராதனை செய்து பிறகு, ஸ்ரீ பிரம்ம சண்டேஸ் வரருக்கும், ஸ்ரீபைரவ சுவாமிக்கும், ஸ்ரீ அர்த்தஜாம அழகருக்கும், நைவேத்தியம் செய்து, தீபாராதனை செய்வது வரை, **அர்த்தஜாம** பூஜையாகும். வெள்ளிக் கிழமைகளில் ஸ்ரீ பாதுகையை ரூக், யஜுர், சாம வேத பாராயணங்களுடனும், தேவார கோஷ்டியுடனும் பிராகார வலம் வந்து, ஒவ்வொரு இடத்திலும் மண்டகப்படி நடத்தி வருவது. ஆடி வெள்ளிக்கிழமைகளில் மேற்படி பூஜைகள் மிகவிசேஷமாக இருக்கும்.

"மூலஸ்தானம்" என்கிற ஆதி **ஸ்ரீ மூலநாதர் உமயபார்வதி** ஆகிய இருவர் சன்னதியிலும், **ஸ்ரீசிவகாமசுந்தரி** அம்பாள் சன்னதியிலும், தினமும் காலையில்

இரண்டு காலங்களும், மாலையில் இரண்டு காலங்களும், "ஸ்ரீபாண்டியநாயகம்" என்கிற **ஸ்ரீசுப்பிரமணியர்** கோயிலில், காலை ஒரு காலமும் மாலையில் ஒரு காலமும், மற்றும் **ஸ்ரீமுக்குருணி விநாயகர்**முதல் மற்றுமுள்ள சகல பரிவார தேவதைகளுக்கும் காலையில் ஒரு காலமும், மாலையில் ஒரு காலமும் சிதம்பரப் பேராலயத்திலே பூஜை நடக்கிறது.

இந்தக் கோயிலை, தீக்ஷிதர்களே பூஜை செய்து கொண்டும், கோயில் சம்பந்தப்பட்ட சகல நிர்வாகத்தையும் அவர்களே ஏற்று நடத்தியும் வருகிறார்கள். இவர்களுக்கு **"பொதுதீக்ஷிதர்கள்"** என்று பெயர். இந்தக் கோயிலில் நடக்கும் பூஜை முதலிய சகல காரியங்களையும் மிகவும் கவனமாகக் குறித்த காலத்திலே இன்றளவும் சிரத்தையோடு நடத்தி வருகிறார்கள்.

இந்தக் கோயிலுக்குச் சொந்தமாக நிலம் வைத்துக் கொள்ளவில்லை; ஆறு கால பூஜைகளுக்கும், விசேஷ பூஜைகளுக்கும் திருவிழாக்கள் முதலிய எல்லாக் காரியங்களுக்கும் பல அறகட்டளைகள், பலராலும் ஏற்படுத்தப்பட்டு, அதற்காக நிலமாகவோ சொத்து மூலமாகவோ ஏற்பாடுசெய்து, அவர்கள் குடும்பத்திலேயே வைத்துக் கொண்டு, அந்தக் கட்டளைகளை, அவரவர் குடும்பத்தவர்களே தீக்ஷிதர்கள் மூலம் கோயிலில் செலுத்தி, பூஜை மற்றும் விழாக்களைக் குறை வின்றி இன்றுவரை நடத்தி வருகிறார்கள்.


நமக்கு ஒருவருஷம் என்பது தேவர்களுக்கு ஒரு நாள். ஒரு வருஷத்திற்கு ஸ்ரீநடராஜருக்கு ஆறு நாள் விஷேச அபிஷேகம்.

1. **சித்திரை மாதம்**, திருவோண நட்சத்திரத்தில், கனகசபையிலே மாலை வேளையிலே அபிஷேகம்.

2 **ஆனி மாதத்தில்** உத்திர நட்சத்திரத்தில் "ராஜசபை" என்கிற ஆயிரங்கால் மண்டபத்தில் உதயத்திற்கு முன் அதிகாலை 4 மணிக்கு அபிஷேகம் நடைபெறும்.

3. **ஆவணி மாதத்தில்** பூர்வபக்ஷ சதுர்த்தசியில், கனகசபையில் சாங்கால வேளையிலே அபிஷேகம் செய்யப்படும்.

4. **புரட்டாசி மாதம்**, பூர்வபக்ஷ சதுர்த்தசியில் கனகசபையில் நடராஜப் பெருமானுக்கு மாலை வேளையிலே அபிஷேகம்



5. மார்கழி மாதம் திருவாதிரை நக்ஷத்திரத்தில், ராஜசபை என்கிற ஆயிரங்கால் மண்டபத்தில் உதயத்திற்கு முன் அதிகாலை 4 மணிக்கு அபிஷேகம்.

6. மாசி மாதம் பூர்வபக்ஷ சதுர்த்தசியில் கனகசபையில் மாலையில் அபிஷேகம்.

சிதம்பரம் ஸ்ரீ நடராஜமூர்த்திக்கு வருஷத்திற்கு இரண்டு பிரமோற்சவம் நடக்கிறது.

1. முதலாவது, ஆனிமாதம் உத்திர நக்ஷத்திரத்திற்கு பத்து நாள் முன்பு, கொடியேறி, முதல் நாள் முதல், ஏழாம் திருவிழாவரையில், உத்ஸவமூர்த்திகளான ,ஸ்ரீசோமாஸ் கந்தர், ஸ்ரீசிவானந்தநாயகி, ஸ்ரீவிநாயகர், ஸ்ரீசுப்பிரமணியர், ,ஸ்ரீசண் டேஸ்வரர், முதலிய பஞ்சமூர்த்தி களும், ஒவ்வொருநாளும், வெவ்வேறு விதமான வெள்ளி, தங்க வாகனங்களிலே திருவீதியுலா வருவார்கள். எட்டாம் நாள் திருவிழாவிலே பஞ்சமூர்த்திகள் இல்லாமல், பிட்சாடனர் திருக்கோலத் திலே சுவாமி மட்டுமே தங்கரத பவனி.

ஒன்பதாம் நாள் தேர்த்திருவிழாவிற்கு, மூலவரான ஸ்ரீநடராஜர்,ஸ்ரீசிவகாமி, ஸ்ரீவிநாயகர், ஸ்ரீசுப்பிரமணியர், ஸ்ரீசண்டேஸ்வரர் முதலிய பஞ்சமூர்த்திகளும் ஐந்து திருத்தேர்களிலே வீதி வலம் வந்து, ஸ்ரீநடராஜர், ஸ்ரீசிவகாமி அம்மனை ஆயிரங் கால் மண்டபத்தில் எழுந்தருளப் பண்ணி, ஏககால லக்ஷார்ச்சனை முடித்து, நைவேத் தியம் ஆனதும் மந்த்ராக்ஷதை, தீபாராதனை செய்து, மறுபடி திருவா பரணம் சாத்தி, அர்ச்சனை பூஜை முதலியவைகள் செய்து பகல் ஒரு மணிக்கு ஸ்ரீ நடராஜ மூர்த்தியையும் ஸ்ரீசிவகாமசுந்தரி அம்பாளையும் ஆனந்த நடனம் செய்து கொண்டு, ஸ்ரீஞானாகாச ஸ்ரீசித்ஸபா ப்ரவேசம்செய்து, தீபாராதனை நடைபெறும்.

2. இரண்டாவது, மார்கழி மாதம் திருவாதிரை நக்ஷத்திரத்திற்குப் பத்து நாட்கள் முன் கொடியேறி, ஆனி மாதத்திய பிரம்மோற்சவம் போலவே சகல விழாவும் நடக்கும். இதில் விசேஷம் எதுவென்றால் சாயரக்ஷை தீபாராதனையின் போது, திருவாசகத்தை அருளிய ஸ்ரீமாணிக்கவாசகரை நடராஜப் பெருமானின் சன்னிதானத்திற்கு எழுந்தருளப் பண்ணி, 20 திருவெம்பாவைப் பாட்டுகள் பாடி, 21 -விஷேச நைவேத் தியமும் 21 - தீபாராதனைகளும் முடிந்து மஹா தீபாரா தனையும் நடைபெறும்.

- நன்றி - "இதயக்கோயில்".

அன்புச் சிவத்துக்கான **மாகேஸ்வர மூர்த்தங்கள் இருபத்தைந்து** என்பது ஆகம இலக்கணம்; அவை அனைத்தின் அம்சங்களையும் கொண்ட ஸ்ரீநடராஜப் பெருமானுக்குப் "பத்துக்கரங்கள்" என காமிகாகமமும் "எட்டு" என்று திருமூலரின் திருமந்திரமும் கூறும்; சதுர்யுக பிரம்மாக்களின் முப்பத்திரெண்டு தலைகளையே மாலையாகக் கொண்ட அம்பலத்தரசன், நான்கு கரங்களோடு தான் இப்போது காட்சி தருகிறார்; கலை, சமயம், மெய்ஞானம், விஞ்ஞானங்களின் ஏகநாயகனாக, தநுகரண, புவன போகமனைத்தையும் மாந்தருக்குத் தந்தருளும், நாதவடிவாகிய ஸ்ரீ நடராஜப் பெருமானின் விளக்கமாவது... வலதுகர டமருகத்தின் நாதமே, உலகப் படைப்பு **(சிருஷ்டி)**. அபயம்தருகிற வலது கீழ்க்கரம் காத்தலைக்குறிப்பது - **(ஸ்திதி),** தீயேந்திய இடக்கரம் அழித்தலை உணர்த்துவது **(சம்ஹாரம்)** திருவடியைக் காட்டும் இடது கீழ்க்கரம் முக்திக்கான கலங்கரை விளக்கமாம்; ஊன்றிய திருவடியானது...

மறைத்தலும், ஆணவத்தை மிதித்தலுமாம் **(திரோபவம்)** தூக்கிய திருவடிவான குஞ்சிதபாதம் - நிறையருள் வழங்குவதாம் **(அனுக்கிரகம்).**

சந்தனமரத்தால் உருவான தில்லையம்பலத்தின் மூலஸ்தானத்திலே... ஸ்ரீநடராஜரோடு சிவகாமியம்மை, ஸ்படிக லிங்கம், ரத்தினசபாபதி, ஹஸ்திராஜர், ரத்னபாதுகை, சுவர்ண காலபைரவர், முகலிங்கம், நித்யஉத்ஸவர், "சிதம்பர ரகஸ்ய" தரிசனமும் முடிந்ததும், இடதுபுறம் திரும்புகிறோம் அங்கே...



பச்சைமாமலை போன்ற திருமேனியராய், பாதத்தருகில் ஸ்ரீதேவி, பூதேவியரோடு, நாபிக்கமல பிரம்மனோடு, திருச்சித்ரக்கூட ஸ்தலபுராண ரீதியாக ஏழுதலை ஆதிசேஷ "மஞ்ச"த்திலே நாலு திருக்கரங்களோடு யோக நித்திரை புரிந்தருளும் **ஸ்ரீ கோவிந்தராஜப் பெருமாளை** தரிசிக்கிறோம். கி.பி. 8-ம் நூற்றாண்டிலே இரண்டாம் நந்திவர்மன் **(717-782)** கோவிந்தராஜர் சன்னதியைச் சீர்செய்து குடமுழுக்குச் செய்ததும்; 12 -ம் நூற்றாண்டிலே **இரண்டாம் குலோத்துங்க சோழச் சக்கரவர்த்தி,** (1133-1150) ஆழிமாயனை அலையடியில் சேர்த்ததும்; **ஸ்ரீ ராமானுஜர்** (1017 -1137) தனது 115 -வது வயதிலே கீழத்திருப்பதியில் அந்தப் பெருமாளை ஸ்தாபித்ததும், (திருப்பதி "உற்சவர்" தில்லையைச் சேர்ந்தவர் என்பதற்கு இன்றும் சுவாமி புறப்பாட்டிலே திவ்யப் பிரபந்த அங்கு தமிழ்ப் பாசுரம் பாடப்படுகிறது) 17 -ம் நூற்றாண்டிலே.... நாயக்க மன்னர்களான **ஸ்ரீ ரங்கராயர் - செஞ்சிகிருஷ்ணப் பர்கள்,** பெருமாளை மீண்டும் திருச்சித்ர கூட தெய்வமாக்கியதும்; சைவ, வைஷ்ணவ பூசனையாளர்களுக்குள் பூசல் வெடித்ததும்; 150 - ஆண்டுகளுக்கு முன்னே தீட்சித மற்றும் பட்டாச் சார்யர்கள் ஆறுவருட காலம் "கோர்ட்" படிகளில் ஆலைந்து திரிந்து நல்லதொரு தீர்ப்புக் கிடைத்தும்; மூர்க்கத்தனம் தொடர்ந்ததும்; 1927-ல் **ஸ்ரீராஜாசர் அண்ணாமலைச்செட்டியாரால்** ஓர் உறுதியான தீர்வு கண்டதும்; 1937- முதல் "ஹைக்கோர்ட்ஸ்கீமின்" படி, அறநிலைய பாதுகாப்புத் துறையின் கண்காணிப்பிலே "வைகானச" பூஜா முறையோடு, ஆண்டுஒன்றுக்கு (1987) லட்ச ரூ. வருமானமும், குத்தகையே வராத 28 - ஏக்கர் நிலங்களுமாக திருச்சித்ரகூடப் பெருமாள் சன்னதி, சிதம்பரப் பேராலயத்துள் விளங்கி வருகிறது.

காலக்கணக்கிலே... சிதம்பராலயம்

கி.பி. முதலாம் நூற்றாண்டு கடைச் சங்ககாலம்; 2, 3, 4 நூற்றாண்டுகள் வரை ஆன்மிக உணர்வற்ற அன்றைய கர்னாடக **"களப்பிரர்"** என்னும் முரட்டு குணத்தவர் தமிழகத்தை ஆண்டனர். அதை, **"இருண்ட காலம்"** எனறு பள்ளிக் கூடங்களுக்கான புள்ளி விபரங்களை ஒரே வரியில் எழுதிமுடித்த "புண்ணிய வான்"கள் தமிழகத் தொன்மை வரலாற்றிற்குச் சமாதியே கட்டிவிட்டனர்!

800- வருடங்களுக்கு முன்பு "கத்திமுனை"யிலே பிறைக்குச் "சலாம்" போட்டோம்! 400 ஆண்டுகளுக்கு முன்பு, துப்பாக்கி "சனி"யனால் "கிராஸ‍ி"க்கு "சல்யூட்"அடித்தோம்! 200 வருடங்களாகப் பலநூறு உயிர்களைப் பலி தந்து,

வீராதிவீர நேதாஜி சுபாஷ் சந்திரபோஸினாலும், விவேகமிகு அஹிம்சாமூர்த்தி மகாத்மாகாந்தி யாலும் 1947-ல் சுதந்திரம் பெற்றோம்; ஆனாலும் நமது கடந்த காலவரலாற்றுக் "கணக்கு"களை "ஆடிட்" செய்து, "ஐந்தொகை" போட்டவர்கள் ஆங்கிலேய வெளிநாட்டினர்; அல்லது அவர்களுக்குக் கூழைக் கும்பிடுபோட்டபடி பாழும் வயிற்றைக் கழுவிக் கொண்ட அப்பாவி நம்மவர்கள்!

18-ம் நூற்றாண்டிலே... **R.G. பந்தர்க்கர்** என்பவர் எழுதிய **இந்திய வரலாற்று நூலிலே...** நாம் வாழும் **தமிழகம் இடம் பெறவில்லை!** அதை ஏனென்று கேட்க இங்கோர் நாதியுமில்லை! தேசத்தின் திருக்கோயில்களின் வரலாறு கூறும் முப்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழக ஆலயக் கல்வெட்டுகளை ஆராய்ந்து பதிப்பிக்க இந்த நாட்டிலே நாதியே இல்லை! அறநிலையப் பாதுகாப்புத் துறையின் "கறவை மாடு"களாகிவிட்ட பிரபல "வசூல்" கோயில்களின் வரலாறு கூறும் சாசனக்கற்களை வெள்ளையடித்தும், உடைத்துப் பிளாட்பார "ஜல்லி" களாக்கியும் விளையாடிவருகி றோம்! மதுரையின் பிரதான தெய்வமாகிய ஸ்ரீ சொக்கநாதப் பெருமானால் உருவானதும், ஸ்ரீ மீனாட்சி அம்மனின் தாயார் காஞ்சனமாலைக்கு முக்தி கொடுத்ததும், "சப்த" (ஏழு) சாகரங்களும் தீர்த்தமாகப் பொங்கியெழுந்தது மான மதுரை **ஏழுகடல் தீர்த்தகுளம்** இன்று ஐந்து மாடி நவீன **"ஷாப்பிங் செண்ட"**ராகி, பெட்டிகோட், ஜட்டிகளை, பிளாஸ்டிக் குடங்களை விற்றுக் கொண்டிருக்கிறது!!

ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களும், வீட்டுமனைகளும், அறக் கட்டளை நிதிகளும் வேலியே பயிரை மேயும் பழமொழிக்கு பெரும்பாலும் இலக்காகியுள்ளன! இந்நிலைகள்மாற பக்தி ஒழுக்கத்தோடு, பாவ, புண்ணியங் களை எண்ணும் இதயமுள்ளோரின் பராமரிப்பு கோயில்களிலேயே பரவலாகட்டும்!

சுமார் 271- கல்வெட்டுகளும், ஏராளமான (திருவாரூர்) செப்பேடுகளையும் கொண்ட சிதம்பராலய வரலாற்றினை 6-ம் நூற்றாண்டிலிருந்து ஓரிரு வரிகளில் காண்போமா.

பொன்னிநதி (காவிரி) பாயும் சோழவள நாட்டிலே, மூவாயிரம் சிவாலயங்கள்; என்பது ஓர் தோராயக் கணக்கு. அவற்றுள் மூத்தது நடராஜாவின் "கோயில்தான்" தான். ஐந்தாம் நூற்றாண்டு வரை சிதம்பர வரலாறும் **"இருண்டு"** தான் கிடக்கிறது. பல்லவராஜா **இரண்யவர்மன்** (கி.பி 550 - 575) தில்லைவனத்தை ஊராக்கி, சிதம்பரம் கோயிலை முழு உருவகப்படுத்தியவர்.

கோச் செங்கட் சோழன்: (600 - 640) தில்லைக்கோயிலை விரிவுப்படுத்தி, கோயிலைப் பராமரிக்கும் தீட்சிதரர்களுக்கு இல்லங்களை அமைத்தவர்.

இரண்டாம் நந்திவர்மன்: (717 - 782) கூடமாகக்கிடந்த ஸ்ரீ கோவிந்த ராஜரின் பீடத்தை மாற்றியமைத்துச் சிறு கோயிலாக்கியவர்.

முதலாம் ஆதித்ய சோழன்: (871 - 907) சிற்றம்பலத்துக்குப்பொன் வேய்ந்தவர்; இவரது காலத்தில் தான், ஆதிசங்கரர் இங்குவந்து, ஆலயத்துள் **"அன்னாகர்ஷண"** (சோற்றுப் பஞ்சமே இல்லாமல் செய்யும்) மந்த்ரத்துடன் கூடிய யந்திரங்களை ஸ்தாபித்தது.

முதற் பராந்தகச் சோழன்: (907 - 953) பொன்னம்பலத் திருப்பணியை நூதன முறையில் மேற்கொண்டவர். ஆனைமங்கலச் செப்பேடுகளால் பெரிதும் புகழப் பெற்றவர்.

கண்டராதித்யச் சோழன்: (909 956) கவிஞராக விளங்கிய மாமன்னர்; இவரது மனைவி **செம்பியன் மாதேவியும்** பெரிய சிவபக்தை. ஏராளமான தில்லைத் திருப்பணிகளைப் புரிந்தவர்.

ராஜ ராஜ சோழன்: (985 - 1013) "சிதம்பரரகசிய"மாகச் செல்லறித்துக் கிடந்த தேவார திருவாசகங்களை மீட்டு, திருமுறைகளை வகுத்தவர். தஞ்சைப் பெரிய கோயிலின் சிருஷ்டி கர்த்தா; ஆடற்கலையை, அழகான தமிழ் இசையை உலகறிய அரங்கேற்றியவர். சமுதாயத் தேவை அனைத்திற்கும் தஞ்சைப் பிரகதீஸ்வர் ஆலய நடைமுறை இயக்கத்தால் தீர்வுகண்ட, விந்தையான வேந்தர், ஸ்ரீராஜராஜ சோழனின் தஞ்சைக் கோயில் சாசனத்தைத் தமிழகக்கோயில் அனைத்திலும் செயல்படுத்தினால்..... **"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"** என்பதை இன்றைய நாத்திகரும் நன்கு உணர்வர்!

கங்கை கொண்ட சோழன் (1012-1044) தில்லைக் கோயிலுக்கு ஏராள நிலதானமும், அன்னதான நிபந்தங்களையும் ஏற்படுத்தி, அம்பலவாணனின் பேரால யத்திலே அன்னக்கொடியை நிரந்தரமாகப் பறக்கச் செய்தவர்.

முதற் குலோத்துங்கச்சோழன் (1070-1120) திருச் சிற்றம்பலக் கூரையான போன்னோடுகளைப் புதுப்பித்தவர், அம்பலவாணரின் திருவீதியுலாவிற்கு வழிவகுத்தவர். இதேகாலத்தில் (1114) சோழமாதேவிகளான **குந்தவை, மதுராந்தகி நாச்சியார்களின்** தில்லைத் திருப்பணிகளைச் சொல்லியே தீரவேண்டும்.

விக்ரமசோழன் (1118-1136) சிதம்பரக் கோயிலை விரிவுபடுத்தி, நடன இலக்கண விளக்கமான நூற்றெட்டு கரண அற்புதச் சிற்பங்களோடு, கிழக்கு கோபுரத்தைக் கட்டியவர் (கிழக்கு கோபுரத்தை குலோத்துங்கன் II கட்டியதாகவும் ஓர் குறிப்பு உண்டு! "எது உண்மை ?" யார் சொல்வர் ?).

இரண்டாம் குலோத்துங்கன் (1135-1150) தில்லையில் முடிசூடிக்கொண்டு பேரம்பலத்திற்குப் பொன் வேய்ந்து, சிவகாமசுந்தரி கோயிலையும் கட்டியவர் ஒட்டக்கூத்தரின் "உலா" பெற்றவர். **பெரிய புராணம்** உருவாகக் காரணகர்த்தா. இந்தச் சோழமன்னர்தான் "ஸ்ரீகோவிந்தராஜப் பெருமாளை அலையாழியில் விடுத்து வைணவச் சீற்றத்திற்கு இலக்கானவர்" என்ற அபகீர்த்திற்கு ஆளானவர்.

நரலோகவீரகாலிங்கராயன் (12-ம் நூற்றாண்டு) பேரம்பலத்தைச் செப்பனிட்டுச் சீராக்கி, செம்புத்தகடு வேய்ந்தவர். திருஞானசம்பந்தர் ஆலயத்துக்குப் பொன் வேய்ந்து, ஒற்றைக்கால் மண்டபம் முதலான பற்பல திருப்பணிகளை சிரத்தையோடு செய்து முடித்தவர்

மூன்றாம் குலோத்துங்கன் (1178-1218) கோயிலின் மூன்றாம் பிராகாரத்தைக் கட்டி, பேரம்பலம், சிவகாமி கோபுரங்களுக்குப் பொன் வேய்ந்தவர்; தில்லையின் தீட்சிதப் பெருமக்கள், ஸ்ரீநடராஜர், கோயிலில் கிடைத்த உபரி வருமானத்தை, நாட்டிலிருந்த எளிய கோயில்களுக்கு வலியச்சென்று உதவிய பொற்காலம்.

மூன்றாம் ராஜராஜன்: (1216-1246) தில்லைக்குப் பல திருப்பணிகள் புரிந்தவர்; காலமெல்லாம் சபாநாயகரின் அடிமையாக வாழ்ந்த சோழ மாமன்னர்.

முதற் கோப்பெருஞ்சிங்கன்: (1229-1278) சிதம்பரப் பேராலயத்தின் தெற்கு கோபுரத்தைக்கட்டி, தேவாரப்பாசுரங்களைச் செப்பேடுகளில் சிரத்தையோடு பதிப்பித்துப் பாதுக்காத்து, நூற்றூக்கால் மண்டபத்தையும், ஊர் எல்லையிலே தில்லைக் காளியின் திருக்கோயிலையும் கட்டிமுடித்தவர்.

விஜயாலயச் சோழன்: (1246-1279) சோழப்பேரரசின் அந்தியகாலம்; ஆட்சி புரிந்த சில ஆண்டுகளுக்குள்ளாகவே சிதம்பராலயத்திருப்பணி பலவற்றைச் சிரத்தையோடு செய்து முடித்தவர்.

மாறவர்ம சுந்தரபாண்டியன் (1216-1251) தில்லைக் கோயிலுக்குள் "பாண்டிய நாயகம்" (முருகன்) கோயிலைச் சிற்ப அற்புதங்களோடு கட்டி முடித்த வர்.

ஜடாவர்ம சுந்தரபாண்டியன்: (1251-1271) ஆலய மேற்கு கோபுரத்தைக் கட்டி, சிற்றம்பலத்திற்குப் பொன் வேய்ந்து, ஏராளமான விளைநிலங்களையும், புதிதாக உருவாக்கப் பட்ட நந்தவனங்களையும் ஆலயத்தின் உடமையாக்கியவர்.

1311-ல் பாண்டியர் சந்ததியின் பங்காளிச் சண்டையால் டில்லித் தளபதி யான மாலிக்காபூர் தமிழகத்துள் புகுந்தான்.

1312-ல் மதுரையிலிருந்து வீரபாண்டியனைத் துரத்தியபடி தில்லைக்கு வந்த மாலிக்காபூர், பொன்னம் பலங்களைத் தகர்த்து, சம்பந்தர் ஆலயத்தைத் தரை மட்டமாக்கி, தங்கத்தகடுகளைப் பல யானைகளில் ஏற்றிப் போனான். அடுத்த இருபத்திரண்டு ஆண்டுகளிலும், தமிழகத்துப் பிரபல கோயில்கள் பலவற்றிலும் கொள்ளையோ கொள்ளை!! அந்தக் கொடுமைகளை விவரிக்க வார்த்தைகள் இல்லவே இல்லை.

1336-ல் முஸ்லிம் ஆட்சியிலிருந்து மதுரையை மீட்ட **இரண்டாம் ஹரிஹரன்** சிதம்பரம் பெரியகோயிலைச் செப்பனிடுகிறார். அடுத்த எண்பது ஆண்டுகளில் ஆலய வருவாய் பல மடங்கு உயர்ந்து கோயிலிலே செல்வம் கொழித்தது. "சிவன் சொத்து குலநாசம்" என்பதை அந்தக் காலத்திலேயே மறந்து செயல்பட்ட போலிச் சிவவேடதாரிகளான சில ஆலய நிர்வாகிகளின் பேராசை மோசடிகள்.

1428-ல் விஜயநகரமன்னர் **மகாதேவராயர்**, சிதம்பராலயத்தைச் செல்லரித்த ஊழல்களை ஒழித்து, நிர்வாகத்தை முற்றிலுமாக மாற்றியமைத்து, ஆலய நடமுறைகளைச் சீராக்கம் செய்கிறார்.

1503-ல் **திம்மராயரின்** வைராபரண காணிக்கைகள்

1509-ல் **இம்மடி நரசநாயக்கன்** (கிருஷ்ண தேவாராயரின் அண்ணன்) சிதம்பரலாயத்துக்கு ஏராளமான நிலதானம் செய்திருக்கிறார்.

கிருஷ்ணதேவராயர்: (1509-1529) கோயிலின் வடக்கு கோபுரத்தைக் கட்டி, (1516) காலத்தால், பலர் செய்த கலவரத்தால் சிதைந்த ஆலயப்பகுதிகளையும் செப்பனிடுகிறார். வைஷ்ணவரான மாமன்னர் கிருஷ்ண தேவராயர், திருப்பதி ஸ்ரீரங்கம் முதலான திவ்யதேசங்களுக்குத் திருப்பணி செய்தது போலவே, சிதம்பரம் திருஆனக்காவல் முதலான சைவக் கோயில்களுக்கும் ஏராளமான திருப்பணி களை இதயபூர்வமாகப் புரிந்திருக்கிறார்.

1529-ல் **அச்சுதேவாரயர்** தில்லைப்பகுதியிலிருந்த 100 கிராமங்களை ஆலய நலனுக்குச் சர்வமான்யமாகத் தந்ததோடு, 1539-ல் ஸ்ரீ கோவிந்தராஜப் பெருமாளுக்கு ஏராளமான பொருட் செலவிலே குடமுழுக்கு நடத்துகிறார்.

1544-ல் அன்றய கிறிஸ்தவரின் தீவிர மதவெறியால் கடற்கரையோர பலப்பல ஹிந்து ஆலயங்கள் மாற்றப்பட்டன, அல்லது மண்ணாக்கப்பட்டன! **ஞானசம்பந்தர்** எலும்பைப் பெண்ணாக்கியதும், (பூம்பாவை) **அப்பர்** சுவாமிகள் உழவாரத் திருப்பணி புரிந்ததும், **வாயிலார்நாயனார்**, **பேயாழ்வார்** முதலான அருளாளர்கள் அவதரித்ததுமான அந்நாளையத் திருமயிலையிலே, போர்த்து சீகியர் கோட்டை கட்டும் போது, 1561-ல் கடலோரம் இருந்த "ஒரிஜினல்" கபாலீசுவரர்

கோயில் காணாமல் செய்யப்பட்டது! 1672-ம் ஆண்டிலே இப்போது நாம் காணும் திருமயிலைக் கோயில் உருவானது).

1556-ல் தஞ்சை அரசர் **அச்சுதப்ப நாயக்கர்**, திருவேட்களம் கிராமத்தை நடராஜருக்கு முழு உடமையாக்குகிறார். (திருவேட்களத்திலே 1929-முதல் அண்ணாமலை பல்கலைக் கழகம் செயல்பட்டுவருகிறது).

1576-ல் கொச்சி ராஜ்ய மன்னர் **ஸ்ரீ இராமவர்மா**, சிதம்பராலத்துக்கு ஐந்து கிராமங்களைத் தந்து, மிகப்பெரும் தளிகைக்கான நிரந்தர தன, தானிய அறக்கட்டளைகளையும் ஏற்படுத்தினார்,

மதுரை **வீரப்ப நாயக்கன்**: (1572-1595) கோயிலைச் சுற்றி இப்போது நாம் காண்கின்ற கோட்டை போன்ற மிகப்பெரும் திருமதிலை உருவாக்கினார்

1578-ல் **வேங்கடராயர்** தில்லையில் அன்னம் பாலிப்புக்கு பல நிபந்தங்களை ஏற்படுத்துகிறார்.

ஸ்ரீரங்கராயர்கள் II,VI (1581-1643) சிவகாம சுந்தரி, புண்டரீக வல்லித் தாயார்களுக்கு பல புதுத்திருப்பணிகளை நிறைவேற்றுகின்றனர்.

1598-ல் **முத்துகிருஷ்ணப்ப நாயக்கர்** ஆகமமுறையைச் சான்றோர்களால் ஆராய்ந்து அறிந்து, கொள்ளிடக்கரையிலே கூத்தபிரானுக்கு மிகப்பெரிய அளவிலே தீர்த்த மண்டபம் அமைத்தார்.

இந்துக்கள், முஸ்லிம்கள், ஏசுமதக்காரர் என்ற பேதா பேதமின்றி, அவரவர்தம் ஆண்டவர்களாக, அவரவர்க்குக் காட்சிதந்து, **திப்புசுல்தானின்** சரப்பளி மாலை, உருது முத்திரை பொறித்த தங்கக் காசுகள், கிழக்கிந்திய (ஆங்கிலேய) கம்பெனியார்தந்த வைர நகைகள் முதலான அனைத்தையும் காணிக்கையாகப் பெற்றவர் திருச்சிற்றம்பலத்துச் சபாநாயகர். சைவ, வைணவ மதங்களைக் கண்களாகக் கருதிக்காத்த பாண்டிய, சோழ, சேர, பல்லவ, விஜயநகர மஹா ராஜாக்களெல்லாம் இல்லாமலாகிவிட்ட 1614-லில், வைணவ நெறியை மீறிய **செஞ்சி கிருஷ்ணப்ப நாயக்கனின்** அராஜக ஆலய நிர்வாகக் குறுக்கீடு. நிகழ்கிறது! அந்தக் கொடுமையை எதிர்த்து பல தீட்சிதர்கள் கோபுர மீதிருந்து கீழே பாய்ந்து உயிர்தியாகம்! நாயக்கனின் பிடிவாதம் துப்பாக்கி குண்டுகளுக்கு ஏராள உயிர்பலிகள்!! சிதம்பரக் கோயில் ரணகளமாகி, மூலவர்கள் மதுரை, குடுமியாமலை, கேரளா, புளியம்பலங்களிலே தஞ்சமடைந்து, சுமார் நாற்பது ஆண்டுகள் தில்லைப்பகுதி பஞ்சப்பிரதேசமாகப் பாழ்பட்டுக் கிடந்திருக்கிறது. காலப்புயல், எழுபது ஆண்டுகளை விழுங்கியதும், சிதம்பரத்தின் நிலை சீர்படுகிறது.

1684-ல் மாரட்டியமன்னர் **சாம்பாஜி** யால், "தேசாந்திரம்" போன நடராஜர், மீண்டும் தில்லைக்குத் திரும்புகிறார். சித்சபைக்கு செப்புத்தகடு போடப்பட்டு, குடமுழுக்கு. 1686-ல். பொன் வேயப்பட்டு மேற்படி மன்னராலேயே மீண்டும் கோயில் கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. சுமார் அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு, மீண்டும் தில்லைக்குத் தொல்லைகள் ஆரம்பமாகின்றன.

1745-ல் பிரஞ்சுக்கார **டூப்ளே,** பல ஆலயங்களை (ஸ்ரீரங்கம்) படைவீடுகளாக்கியதை மேற்கோளாகக் கொண்டு, 1749 கால கட்டத்திலே, மும்மதிய **(ஹைதரலி)** படைகளின் பாசறையாகிறது சிதம்பராலம்! படைவீடாகவும், குதிரைலாயமாகவும் தில்லைக் கோயில் வளாகம் பயன்படுத்தப் பட்டது.

இஸ்லாமிய, ஆங்கிலேய, பிரஞ்ச், நாவாபர்களின் மண்ணாசை வெறிகளால் தமிழகம் நிலைகுலைகிறது! குறிப்பாக இந்த காலகட்டதிலே, தமிழகத்துப் பிரபல ஆலயங்கள் அனைத்துமே பாதிக்கப்பட்டன. அவற்றின் விபரங்களை அறிந்து

கொண்டால் மட்டும் இப்போது நாம் என்ன செய்து விடமுடியும்? எனவே இப்போதுள்ள "அரைகுறை" நிலைகளிலாவது நமது பேராலயங்களைப் பேணிக்காத்து, வருங்கால நமது சந்ததியாரிடம் ஒப்படைக்க வேண்டியது, வாலிபத்தைக் கடந்து விட்ட நம்மவர் அனைவரது முழு முதற் கடமையாகும்.

1753-ல் பிரஞ்சுகாரர்கள், சிதம்பரம் நடராஜர் கோயிலைப் படைகளின் பாசறையாக்கி விட்டனர்! "இரண்டாம்பரமேஸ்வர"னான நந்தியம் பெருமானின் பிரதிபிம்பங்களான மாடுகள், இங்கே "டின்னர்"களாகின்றன!! எலும்பும் ரத்தமுமாக இறைச்சிக் கடையாகிறது தில்லைக்கோயில் வளாகம்!!!

1775-ல் **சாஹுஜதி** எனும் மராத்திய மன்னன், கோயிலுக்குள் வந்து ஒளிந்து கொள்ளவே, பிரஞ்சு மற்றும் நவாபுகளின் கடும் வெடிமருந்துத் தாக்ககுதல் சிதம்பரம் கோயிலைப் பெருமளவிலே பாதிக்கிறது! மாட்டு எலும்பு களோடு, மனித மண்டையோடுகளும் தில்லைக்கோயிலுள் குவி கின்றன.

பீரங்கி முழக்கமும், துப்பாக்கிகளின் "டுமீல்" ஒலிகளுமே; சபாநாயகரின் அன்றைய ஆராதனைத் தாள வாத்ய ஓசைகளாயின.

1773-முதல் 1781 வரை ஸ்ரீநடராஜப்பெருமான், திருவாரூர் தியாசேகர் கோயில் சபாபதி மண்டபத்திலே "விருந்தாளி"யாக வைத்துப்பாதுக்காக்கப் பட்டிருக்கிறார். மூலவரில்லாத சிதம்பராலயத்துள்ளே, காலித்தனத்தின் ஊழிப் பிரளயம்!! சோழக்கலைஞர்களின் பேரழகுச் சிற்ப அற்புதப் படைப்புகளான அபூர்வ மண்டப, விதானங் களெல்லாம், விமானங்களெல்லாம் போர் வெறிபிடித்த புல்லர் களால் தூள்! தூள்!! தூள்!!!

அடுத்த பத்து ஆண்டுகளில் நவாபு, பிரஞ்சுக் காரர்களின் கை ஓய்ந்து, ஆங்கிலேயரின் ஒருங்கிணைந்த கண்காணிப்பால் தமிழ்நாட்டிலே அமைதி நிலவுகிறது. ஆங்கிலேயர்களிடம் துபாஷியாக இருந்த தனவந்தர் காஞ்சி, **பச்சையப்ப முதலியாரும்**, கணவரை இழந்து ஏராள செல்வங்களை அடைந்த அவரது சகோதரி **சுப்பம்மாள்** ஆகிய (1754-1794) மேற்படி இருவரும், ஐம்பது ஆயிரவராகனுக்கு மேலாகச் செலவிட்டு, குறைப்பட்டு நின்ற சிதம்பரத்தின் கிழக்கு கோபுரத்தையும், பீரங்கித் தாக்குதலால் தகர்ந்த ஆலயத்தின் பிற பகுதிகளையும் செப்பனிட்டு, கோயிலுக்கு ஜீர்ணோத்தாரண மஹாகும்பாபிஷேகம் செய்வித்த தோடு, நிரந்தர அறக்கட்டளை ஒன்றையும் ஏற்படுத்தினர். இன்றளவும் கோயிலின் 'காமதேனு'வாக ஸ்ரீபச்சையப்ப முதலியார், சுப்பம்மாக்களின் அறக்கட்டளை கள்தான் இருந்து வருகின்றன. 1797-ல் கோயிலில் ஏற்பட்ட சைவ, வைணவ பூசகர்களின் சர்ச்சையை, கர்னாடக நவாப் வந்து தீர்த்து வைத்த, நமக்குள் ஒற்றுமையேற்ற - அவல நிலைக் கொடுமை களையும் ஒளிப்பதற்கில்லை!. "கற்ற வர்கள், காலத்தால் மூத்தவர்கள்" என்றெல்லாம் தற்பெருமைக் கவிபாடும் நாம், கடந்தகால வரலாற்றிலே, இப்படி நமக்குநாமே எதிரியாக இருந்து, குரங்கிடம் போய் பூனைகள் அப்பம் பகிர்ந்த கதையாக, உடமைகளை- மானத்தை- மரியாதையை அவ்வப்போது அன்னியர்களிடம் அடமானம் வைத்திழந்த சம்பவங் கள் ஏராளம் உண்டு! இனியேனும் அவை நமக்குப் பாடமாக அமைவதாகுக!

1858-ல் உமயபார்வதி திருமூலநாதர் கோயிலுக்கு, **கோயிலூர் ஆதினம்** குடமுழுக்கு செய்விக்கிறது. 1879-ல் சித்சபைப் பொன்னோடுகள் பிரித்து மாற்றப்பட்ட பிறகு, சிற்பபான கும்பாபிஷேகம் ஒன்றும் நடைபெறுகிறது.

15-4-1891-ல் "நகரத்தார்திலக"மான ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரின் தந்தையார், **சா.ராம முத்தையா செட்டியார், திவான்பகதூர் ஸ்ரீராமசாமி செட்டியார்** ஆகியோர் தலைமையில் நகரத்தார் பெருமக்கள் முப்பது லட்சம் ரூபாய் செலவிலே, பெரிய அளவிலான இடிபாடுகளைச் சரி செய்து. சிதம்பரம் கோயிலுக்கு ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் செய்வித்தனர் 1914-ல் கானாடுகாத்தான் **சா.ராம.சிதம்பரம் செட்டியார்** அவர்கள் பலமண்டபங்களைப் புதுப்பிக்கிறார்; **ராஜா சர் முத்தையா செட்டியார், ஸ்வர்ண வெங்கடேச தீட்சிதர்** ஆகிய பெருமக்கள் தலைமையில் கோலாகலமான கும்பாபிஷேகம். **24-5-1934**லில் ராஜசர்அண்ணாமலைச் செட்டியார் அவர்களால் ஸ்ரீகோவிந் தராஜப் பெருமாள் கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

1947-ல் பாண்டியநாயகம் (முருகன்) கோயிலுக்கு சிதம்பரம் நகரிலேயே பிரபல தங்கநகை அணிகலவணிகர் **தருமபூஷணம் ஸ்ரீ செ.ரெத்தினசாமி செட்டியார்** குடமுழுக்கு நடத்தினார்.

11-5-1951-ல் உமையபார்வதி திருமூலநாதர் கோயிலுக்கு "ரைஸ்மில்" **மார்க்கண்டம்பிள்ளையால்** குடமுழுக்கு நடைபெற்றது. 7-7-1955-ல் நிலக்கிழார் ஆடூர் **M.ரத்தினசபாபதிபிள்ளை** "தருமபூஷணம்" அவர்களது மேற்பார்வையில் மூன்றுலட்ச ரூபாய் செலவில் சித்சபை மற்றும் கனகசபைத் திருப்பணிகள் முடிந்து கும்பாபிஷேகம் நடந்தேறியது.

1968-ல் பாண்டிய நாயகம் (முருகன்) கோயிலுக்கு "தருமபூஷணம்" மீண்டும் குடமுழுக்கு செய்வித்தார்.

7-9-1969-ல் ஸ்ரீமகாலட்சுமி, கோவிந்தராஜப் பெருமாள் ஆலயத்திற்கு 'மஹா சம்ரோட்சணம்' (குட முழுக்கு) நடைபெற்றது.

4-2-1972-ல் திருப்பணிச் செல்வர் **K.ரெங்கசாமி பிள்ளை** அவர்களது தலைமையில் **"தருமபூஷணத்தின்" குமாரர்கள் திருவாளர்கள் பாலசுப்பிரமணியம், இராமனாதன், திருநாவுக்கரசர்கள்** தில்லைத்தாயான ஸ்ரீசிவகாமியம்மன் கோயிலுக்கு மஹாகும்பாபிஷேகம் செய்வித்தனர்.

7-2-1979-ல் உமயபார்வதி திருமூலநாதர் கோயி லுக்கு, மதுரைப் பெருவணிகர் **ஸ்ரீகருமுத்து சு.சொக்கலிங்கம் செட்டியாரின்** முழுச் செலவிலே குடமுழுக்கு நடைபெற்றது.

11-2-1987-ல் அமரர்கள் **R.கனகசபை பிள்ளை, G.வாகீசம்பிள்ளை**களின் பொறுப்பிலே சுமார் 70 லட்ச ரூபாய் செலவில் நடைபெற்ற சிதம்பரம் கோயில் மகா கும்பாபிஷேகத்திலே அண்ணாமலை அரசரின் வாரிசுகளான திருவாளர்கள் **M.M.A. இராமசாமி, A.C. முத்தையா** (ஸ்பிக் நிறுவனம்) இருவரது பங்கும் கணிசமானவை.

தில்லை நடராஜருக்கு **1980** கால கட்டத்திலும், 1987-ழிலும் அபயஹஸ்தம், மற்றும் குஞ்சித பாதங்களை வழங்கிய ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம், 1988 மார்ச் மாதம், ரூ. பதிமூன்று லட்சம் பெருமான வைரக் கீரீடத்தையும் சபாநாயகருக்கு சமர்ப்பித்தது.

சமீபகாலமாக குஞ்சிதபாதத்து அபூர்வக் கொலுசுக்கான **"கிசுகிசு"** க்களை பத்திரிக்கையிலே பார்க்க நேர்ந்தது கொடுமையே!! நடமாடும் சிவஸ்வரூபமாகவே

தீட்சிதப்பெருமக்களைக் கருதுவது நமது சமயப் பொது மரபு. "தில்லைப்பெண் எல்லைதாண்டாது" என்பது விதி. அவர்களின் தேவைகள் அங்கேயே பூர்த்தி பெறுகின்றன. நடமாடும் நடராஜாக்களுக்கு அவப்பெயர் ஏற்படாவண்ணம், சிவபரம் பொருளான ஸ்ரீகூத்தபிரான், பேரருள் புரியப் பிரார்த்திக்கிறேன்.

அதேசமயம், சிதம்பரம் கோயில்பற்றி அவ்வப்போது படிக்க நேரிடும். "கிசுகிசு"க்களுக்கு தீட்சிதர் பொதுச்சபை இதுவரை ஏதேனும் தீர்வு கண்டதா ?

"நூறாண்டுகளாக இருக்கும் குடுமிபிடிச் சண்டை கோர்ட்டுக்குப் போய், அன்னியனான ஆங்கிலேயரைத்தீர்ப்புக்கூறவைத்தசண்டை !! நீறுபூத்த நெருப்பாக சமயத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் சண்டை !!!" - விசிட்டர். 15.6.1980.

"சிதம்பரம் கோயிலுக்கு நிறைய கட்டுப்பாடுகள் உண்டு ! ஜனாதிபதியாக இருந்த R. வெங்கட்ராமனையே சட்டையை கழட்டச் செய்த சம்பவம் உண்டு !

சினிமாக்காரர்கள் கோயிலுக்குள் சிகரெட்., பிரியாணிப் பொட்டலங்கள் என்று, கதிகலக்கிவிட்டார்கள் ! இந்தப் படப்பிடிப்பை தில்லைக் கோயிலுக்குள் அனுமதித்தது எப்படி ?" - ஜீனியர் விகடன் 2.2.1994

நானும் (வேம்பத்தூர் கிருஷ்ணன்) கடந்த நாற்பது ஆண்டுகளாக சினிமாக்காரன்தான்! இமயமுதல் குமரிவரை பிரபலபக்தி-புராண-படங்களுக்காக புனிதக் காட்சிகளை- பல பிரபல ஆலயங்களிலே-படமாக்கியுள்ளேன். ஆனால்... **கட்டியணைத்து "இச்"சில் முடிகிற காதல் "டூயட்" டுக்கும், கள்ளச்சாராயக் கும்பலைத்தாக்கும் போலீஸ் "பைஃட்"க்கும்** கோயிலைத் தேர்ந்தெடுப்பதும், சம்பந்தப்பட்டோர் அனுமதிப்பதும் உண்மையான ஹிந்துக்களின் துரதிருஷ்டமே!

சிதம்பரம் கோயில்கூட இந்தக் கொடுமைக்கு விலக்கில்லையா ??

திப்புசுல்தானின் சரப்பள்ளிமாலை, நவாபின் வைரமணி மாலை, ஈஸ்ட் இந்தியா வெள்ளையாரின் காணிக்கை தங்கநகைகளோடு, பலகோடி மதிப்புள்ள நவரத்ன தங்க வைரஆபரணங்கள் தீட்சிதர்களின் பயபக்தியான நிர்வாகத்தால், "கோயி"லிலே இன்றளவும் **"டூப்ளிகேட்" ஆக்கப்படாமல், "ஒரிஜினல்" ஆகவே இருந்து வருகின்றன என நாம் நம்புவோமாக !**

10-ம் நூற்றாண்டுவரை, கோயில் நிர்வாகத்திலே "ராஜ பார்வை" இருந்தது. 12-ம் நூற்றாண்டில் தீட்சிதர் பொதுச்சபை ஏற்பட்டு, 15-ம் நூற்றாண்டிலே பொதுச்சபையிலும் ஊழல் வெடித்து, அப்போதைய விஜயநகர மன்னரால் எச்சரிக்கப்பட்டு 18-ம் நூற்றாண்டிலே, கடுமையான சட்டம் தேவை என்ற நிலையேற்பட்டு 1894-ல் 362-விதி (பிரிவு)களைக் கொண்ட **"சிதம்பரம் சபநாயகர் கோயில் சட்டம்"** பிரகடனம் செய்யப்படுகிறது.


பொன்னாபரணம் பண்ணுவது முதல், பூந்தோட்டப் பணியாளரின் உணவுப் பங்கீடுவரை, கோயில் சட்டத்தில் "ஸரத்"துகள் உண்டு. திருட்டுகளுக்கு இன்றைய துபாய் போன்று கடும் தண்டனை தருகிற கண்டிப்பான ஸரத்துகள் உண்டாம்.

ஆயிர ரூபாயுடன், நூறுபடிபாலை அளந்தாலும் ஆகமவிதிப்படியான, ஆறு கால பூஜையில் தான் அவை கலந்து பயன்படுத்தப்படும்! காகிதப் பண லஞ்சத் தால், சிதம்பர நடராஜாக்களை யாருமிங்கே "காக்கா" பிடித்துவிட முடியாது.

"AC" கொண்ட டபுள் பெட்ரூம், ஷவர் இணைத்த நவீன பாத்ரூம் என்ற "ஹாங்காங்" பாணி ஆலய விளம்பர, சுக, சௌகர்ய, வைபோகத் தங்குமிடங்கள் தில்லைப்பகுதிக்கு தேவையில்லைதான், ஆனால் தொலை தூரத்திலிருந்து வருகிற பக்தர்களுக்குப் பாதுகாப்பான, எளிய குறைந்த வாடகையுடன் கூடிய தங்குமிடங் களை தீட்சிதர் பொதுச்சபை சிதம்பரத்திலே ஏற்படுத்தியே தீரவேண்டும்.

ஆலயப் பாதுகாப்புக்காக, மாஜிராணுவ வீரர்களை நியமிக்க இருப்பது அருமையான, அவசியமான ஒரு ஏற்பாடு. ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு 1008 பவுன் ஸ்வர்ணாபிஷேகம் மறக்கமுடியாத ஒன்று; 25-ஆயிரம், 30-ஆயிரம் ரூ: செலவு செய்து ருத்ராபிஷேக, திருப்பாவாடை உற்சவங்கள், இங்கு சர்வசாதாரணம். அறுபத்துமூன்று நாயன்மார்களின் திருநட்சத்திரத்தன்று சிறப்பு வழிபாடுகள் என் றும் உள்ளது; 1989-முதல் அறுபத்து மூவர் உற்சவமூர்த்திகள் ஆலயத்துள் எழுந்த ருளிய பிறகு தேவசபையிலே அந்தந்த நாயன்மார்களுக்கு அவரவர் திரு நட்சத் திர தினத்தன்று வழிபாட்டுடன், மூர்த்திகளின் புறப்பாடும் நடைபெறுகிறது.

தீட்சிதர் பொதுச்சபையும், சிதம்பர க்ஷேத்திர பொது மக்கள் சபையும் கவனிக்க வேண்டிய ஒன்று! உபமன்யு முனிவர் ஸ்ரீ கிருஷ்ணருக்கு சிவதீட்சை கொடுத்ததும், குருநமசிவாயர் கோயிலும், தில்லைக்காளியின் எல்லையிலே ஆதியிலிருந்தே இருந்ததுமான பத்துத் தீர்த்தங்களிலேயே மிகமிக உயர்ந்த பவித்ர தீர்த்தமான, தில்லைச் சிதம்பரத்தின் **திருப்பாற்கடல் தீர்த்தம்** (குளம்) இன்று தூர்க்கப்பட்டுவிட்டது! மதுரைப் பிரதான தீர்த்தமான "ஏழுகட"லின் கதி, சிதம்பரத் "திருப்பாற்கட"லுக்கும் ஏற்பட்டுவிடும் அபாயம் உள்ளது! இது தவிர்க்கப்பட, தீட்சிதப் பெருமக்களின் "தியாகங்கள்" வேண்டும்!





கோ-இல் மதுரை



"கோ"-கடவுள், "இல்"-வீடு

கடவுளரே பூமிக்கு வந்து "இல்" இல்லறம், குடும்பம் நடத்தியது என்றும், கோ-கடவுள், இல்-வீடு "கடவுளின் வீடு" என்றும் பொருள்படுகின்ற மதுரையம் பதியின் புராண வரலாற்றுச் சுருக்கமாவது...

இந்திரபதவியை அடைவதற்காகக் கடும் தவம் செய்து கொண்டிருந்த போது, **விஸ்வரூபன், விருத்திராசுரர்** ஆகிய அசுரர்களை, **தேவேந்திரன்** கொன்றதால், "பிரம்மஹத்தி" (கொலை செய்த பாவம்) பிடித்தது, **கேதாரம்**, காசி, காஞ்சி முதலான பல க்ஷேத்திரங்களாலும் தீராத தோஷம். கடம்பவன (மதுரை) சொக்கலிங்கப் பெருமானின் திருவருளால் தீர்ந்தது, தேவதச்சர்களின் தலைவனான மஹாசிற்பி **மயனைக்**கொண்டு விமானம் அமைத்து, ஆதிச் சொக்கலிங்கத்தை மதுரையிலே ஸ்தாபித்து இந்திரன் வழிபடுகிறான்.

நாற்புறமும் 8 யானைகள், 32, சிங்கங்கள், 64 சிவகணங்களால் தாங்கப்படும் அதி நூதன அமைப்புள்ள மூலஸ்தானத்தில்தான் மதுரை ஸ்ரீசொக்கநாதர் (லிங்கம்) எழுந்திருளியிருக்கிறார். அதற்குப் பெயர்தான் **"இந்திர விமானம்"**.

அந்த நாளிலே... மணவூரைத் தலைநகராகக் கொண்டு நெறி தவறாமல் ஆண்டு வந்த **குலசேகரப்பாண்டியன், தனஞ்ஜெயன்** எனும் வணிகனால் சொக்கலிங்கத்தின் பெருமையறிந்து, ஆலயத்தைப் பெரிதாகக் கட்டுவித்து வழிபடுகிறான். அவனது சந்ததியிலே வந்த, **மலையத்துவஜபாண்டியன்** மதுரையை ஆள்கிறான்.

மலையத்துவஜ பாண்டியனின் மனைவி சோழன் மகள் **காஞ்சனமாலை.** முற்பிறவியிலே மீனாட்சியம்மனைப் பிரார்த்தித்து, அம்மனையே மகளாக அடைகின்ற வரத்தினைப் பெற்றவள் காஞ்சனமாலை. அரச தம்பதியர் நடத்திய **புத்திர காமேஷ்டியாகத்** தீயிலே மூன்று வயது மகளாக உதித்துவந்த மீனாட்சி, காஞ்சனமாலையின் மகளாகிறாள்.

யாகத்திலே தோன்றிய தெய்விகக் குழந்தைக்கு, இயல்புக்கு மாறாக மூன்று தனங்களிருப்பதை அறிந்த மலையத்துவஜன் வருந்த, "மதுரை மன்னா! இக்குழந்தைக்குத் **'தடாதகை'** எனப் பெயரிட்டு வளர்த்து வா! கணவனைக் கண்டதும் அவளது உடற்கூற்றின் குறைதீரும்" என ஆசரிரீ ஒலிக்கிறது.

ஆயகலைகள் அனைத்திலும் தேர்ந்து, கன்னிப் பருவமடைந்த மகள் தடாதகைக்கு மணிமுடி சூட்டியதும், மன்னன் மலையத்துவஜ பாண்டியன், "சிவலோக பதவி"யை அடைந்துவிடுகிறான்.

"கன்னி நாட்"டின் அரசியாக முடிசூடிய தடாதகைப்பிராட்டி, ஐம்பத்தாறு தேசங்களையும், அஷ்டதிக்கு பாலர்களையும் **"திக்விஜய"**த்தால் எதிர்கொண்டு

ஜெயித்து, கைலையிலே சிவபெருமானை எதிர்கொள்கிறாள், மூன்றாவதாகத் தோன்றியிருந்த இயல்புக்கு முரணான "ஸ்தனம்" மறைந்தது, பிரிந்தவர் கூடினர், பிரேமையில் மூழ்கினர். முத்தமிழ் தழைத்த மதுரை அரண்மனையிலே ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ் வரர் திருக்கல்யாணம் நிகழ்கிறது.

குண்டோதரனைக் காரணமாகக் கொண்டு, சிவ கங்கையை மதுரையிலே வைகை நதியாகப் பெருகவிட்ட மகேஸ்வரன், மாமியார் காஞ்சனமாலையின் மோட்சத்திற்காக ஏழுகடல் தீர்த்தக் குளத்தையும் மதுரைக்கு வழங்குகிறார்.

ஆதி அந்தமில்லாத உமா மகேஸ்வரர்கள், மீனாட்சி, சௌந்தர பாண்டியர்களாக மதுரையை ஆண்டு, குடித்தனம் நடத்தி, முருகனின் அம்சமான உக்கிரபாண்டியனை மகனாகப் பெற்று வளர்த்து, பேரருட் கலைகளையும் அருள் பாலித்து... தக்கவயது வந்ததும் காந்திமதியெனும் கன்னியை மணமுடித்து, மணி முடியைச் சூட்டியதும் வேல், வளை, செண்டுகளை உக்கிரபாண்டியனுக்கு வழங்கி விட்டு, சொக்கலிங்கத்துள் ஐக்கியமாகிறார்கள் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர்கள்.

வேல், வளை, செண்டுகளைப் பெற்ற பாண்டிய பரம்பரை, தமது அரண்மனையை, "அரன்" (கடவுளாகிய சிவம்) வந்து வாழ்ந்த மனை(வீடு) யென்பதை மறவாமல், நெறிமுறையோடு அரசோச்சிய காலங்களிலே... சித்தனாக, புலவனாக, வளையல் செட்டியாக, விறகு வெட்டியாக, மீனவனாய், வேதியனாய், வந்திக் கிழவியிடம் பிட்டுக்கு மண் சுமந்த கூலியாளாய், ஆண்டியாய், அரசனாய்... ஏன், பன்றியாய், நாரையாய் வன்னி மரமாக, நாழிக்கிணறாக... இப்படி அனைத்தும் தானே என்பதை உணர்த்தும் வகையிலே மதுரையில் அவ்வப்போது வந்திருந்து அறுபத்து நான்கு திருவிளையாடல்களை நிகழ்த்துகிறார் சொக்கேசர்.

(64-திருவிளையாடல் (சுதை) சிற்பங்களை ஸ்ரீ சொக்கநாதரர் கோயில் மூலஸ்தான அர்த்த மண்டப வெளிச்சுவற்றிலே காணலாம்)

1938-ம் ஆண்டு ஸ்ரீ K.S. ஸ்ரீகண்டன் M.A. FRES அவர்கள் எழுதி வெளிவந்துள்ள **"மதுரை மீனாக்ஷி கோவில்"** என்ற நூலிலே சில வரிகள்

புராதன மதுரைச் சீமையின் வளங்கூறும் பாடல்.....


"தேன் பெருகும் சோலைத் தென்னன் வளநாடு, கனியுதிரும் சோலைக் கனமதுரை நன்னாடு
வாழை வடக்கீனும் வான் கமுகு மேற்கீனும், கரும்பும் இளநீரும் கண்திறந்து மடைபாயும்
கட்டுக் கலங்காணும் கதிர் உழக்கு நெல் காணும், அரிதாள் அறுத்துவர மறுதாள் பயிராகும்
அரிதாளின் கீழாக ஐங்கலத்தேன் கூடுகட்டும், மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று,
ஆனைகட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரை".



கௌதமபுத்தர் காலத்திலே பாடலிபுரம் எந்த மாதிரியிருந்ததோ, அதே மாதிரியாக, திருவள்ளுவர் காலத்தில் மதுரை எத்தகைய சீரும்சிறப்பும் உடையதாக இருந்ததோ, அதில் ஒரு சிறிதும் தற்போது மாறவில்லை. ஆகாயத்தையளாவிய கோபுரங்களும், தெருக்களின் விசாலமும் நகரத்தின் தோற்றமும், தேவேந்திர லோகம் போன்று பிரகாசிக்கின்றன. சாந்தமும், மனத்தூய்மையும், அன்பும் ஒருங்கே பொருந்திய நம் முன்னோர்களால் கட்டப்பட்ட மதுரைக் கோவில் பிராகாரங்கள், இன்னும் அவற்றை எடுத்துக் காட்டுகின்றன. அகஸ்தியர் இந்நகரைப்பற்றி எவ்வளவு பெருமையாகக் கூறியிருக்கிறாரோ அதில் இப்போது ஒரு சிறிதும் மாறுபடவில்லை.

பாண்டிய தேசத்தை முன்னொரு காலத்தில் ஹிராக்கிள்ஸ் என்பவரின் புதல்வி 'பாண்டேய, என்னும் பெயருடையவள் ஆண்டுவந்தாள்; அப்பிரதேசம் கிராமங்களுள்ளதாக விளங்கியது. அது தென்னிந்தியாவில் தென் சமுத்திரம் வரை பரவியிருந்தது. அதில் ஒவ்வொரு நாளும் வரிசைக்கிரமமாக ஒவ்வொரு கிராமத்தார் அரசிக்குக் கப்பங் கட்டவேண்டும். அதை மீறினால் உடனே மற்றக் கிராமவாசிகளின் உதவியைக் கொண்டு, மீறின கிராமத்தை உடனே அரசி கீழ்ப்படியச் செய்வாள். அவளிடம் 500 யானைப் படைகளும், 4000 குதிரைப்படைகளும், 13000 காலாட்படைகளும் உடைய ஒரு சேனை இருந்தது' என்று சந்திரகுப்த மௌரிய அரசருக்கு அமைச்சராகவிருந்த மெகஸ்தனீஸ் விபரமாகக் கூறியிருக்கிறார்; கிரேக்கர்களும் ரோமர்களும் அக்காலத்தில் தென்னிந்தியாவோடு வியாபாரம் நடத்தி வந்திருக்கிறார்கள். சித்தர்மலையிலும், அழகர் கோவில் மலையிலும் உள்ள குகைகளில் செதுக்கப்பட்ட சிலசாஸனங்கள் இந்நகரின் பெருமையை விளக்கிக் கூறுகின்றன. கிறிஸ்து பிறப்பதற்கு 200, 300 வருஷங்களுக்கு முன்னமேயே மேற் சொல்லிய கல்வெட்டுகள் வெட்டப்பட்டன என்று விளங்குகிறது. தமிழ்ச்சங்க நூல்களிலும் ஏராளமாகக் குறிப்புகள் காணப்படுகின்றன. இன்னும் திருவிளையாடற் (ஆதி)புராணத்தை இயற்றிய பெரும்பற்றப் புலியூர் (வேம்பத்தூர்) நம்பிகள், முன்னொரு காலத்தில் காசியில், பராசரர், விஸ்வாமித்தரர், நாரதர், துர்வாசர், அகஸ்தியர் முதலிய ரிஷிகள் எல்லோரும் ஒன்றாய்க்கூடி மதுரையில் இருக்கும் சோமசுந்தரக் கடவுளுடைய திருவிளையாடல்களைத் தங்களுக்கு விபரமாக வைகைக்கரையிலிருந்து கொண்டு சொல்ல வேண்டுமென்று கெஞ்சிக் கேட்டதாக எழுதியிருக்கிறார். கிருதயுகத்திலே நடந்த சம்பங்களைப் பற்றி விவரிக்கும்பொழுது வியாசர், மதுரையின் சிறப்பையும் விஸ்வகர்மாவால் சிரத்தாபக்தியுடன் ஏற்படுத்தப்பட்ட அஷ்டாங்க விமானமுள்ள மதுரைக் கோவிலைப் பற்றியும் விவரித்தார்கள்.

புராண இதிகாச காலங்களை அடுத்து... வரலாற்றுச் சிறப்புகளாக... இடைக்காடர், மூர்த்திநாயனார், சோழ மன்னர்கள், கேரள அரசர் சேரமான் பெருமாள், குலச் சிறைநாயனார், கபிலர், பரணர், பாணபத்திரர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், காரைக்காலம்மையார், ஆகியோருக்கு கண்கண்ட தெய்வமாக வந்தருளிய சுந்தரேஸ்வர மீனாட்சியரின் இந்த நாள் திருவிளையாடல் சிலவற்றை கவிதையாகப் பார்ப்போமா!



கம்பணருக்குக் காட்சி கொடுத்து; களப்பிரர் வென்ற மதுரையை மீட்டது!
காலத்தால் தீரா (திருமலை) நாயக்கர் நோயை, ஆலவா யப்பனின் விபூதி தீர்த்தது!
கும்பினிக் கலக்டர் "ரோஸ்பீட்ட"ரின், குலதெய்வமாகி உயிரைக் காத்தது!
குமர குருபரரின் தமிழைக் கேட்கவே, குழந்தையாய்த் திருமலை மடியில் பூத்தது!
பக்தியால் கனிந்த (நீலகண்ட) தீட்சிதருக்குப் பாதாதிகேச தரிசனம் தந்தது
பரிசாரகனாம் வேம்பத் தூரானின், சிரத்தையால் சமையல் செய்ய வந்தது

சித்தராய் வந்து பக்கீர் வியக்க, சிலை யானைதின்னக் கரும்பு தந்தது!
சிறுபெண் வடிவில் வயி நாகரத்துச், செட்டியார் பசியைத் தீர்த்து வைத்தது!

'திருவிழா இல்லாத நாளே இல்லாத மதுரை' என்கிறது **அகநானூறு**; "தமிழ் அமுதைப் பருகுவோர் மதுரைப் புனிதர்கள்" கூறுவது கலித்தொகை; 'வானளாவிய மாடமாளிகைத் திருநகர்" - **புறநானூறு**; "இந்திரனின் நகைப் பேழை யாய் ஜொலிக் கிறது முத்தமிழ் மதுரை" - **சிலப்பதிகாரம்**; "மஹாலட்சுமியின் பூரண கடாட்சம் நிறைந்தது நான்மாடக்கூடல்" - **திருமுருகாற்றுப்படை**; "பாண்டி நன்நாடே பழம் பதியாகும்" - **திருவாசகம்**; "குடும்பத்தோடு வழிபட வேண்டிய திருத்தலம்" கூறு வது - **மதுரைக் காஞ்சி**; மற்றும் **கல்லாடம், நெடுநல்வாடை, சிறுபாணாற்றுப்படை, பரிபாடல், கம்பராமாயணம், வில்லி பாரதம்** முதலானவற்றால் போற்றப்படுகின்ற மதுரையின் புராண வரலாற்றினை, முதன் முதலாக கி.பி. 1223லே, **"உத்தர புராண"**த்தைக் கருவாகக் கொண்டு, 1753 செய்யுள்களைக் கொண்ட **திருவால வாயுடையார் திருவிளையாடற்புராணத்தை** எழுதியவர் **வேம்பத்தூரில் பிறந்த பெரும்பற்றப்புலியூர் நம்பிகள்**; பதிப்பித்தவர் "தமிழ் தாத்தா"வாக விளங்கிய **டாக்டர் ஊ.வே. சாமிநாத அய்யர்)** 16ம் நூற்றாண்டிலே "ஹாலாஷ்ய மஹாத்மியத் தைக் கருவாக வைத்து **"திருவிளையாடற்புராணம்"** பாடியவர் **பரஞ்சோதி முனிவராவார்.** (ஷெதிருவிளையாடற் புராணத்தை உரைநடையில் ஆக்கியவர் **யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர்)** மற்றும் இலம்பூர் வீமநாதபண்டிதரின் **1090,** செய்யுள் கொண்ட **"நீபாரண்ய மஹாத்மியம்"** எனப்படும் கடம்பவன புராணம், ஆலய வளர்ச்சியைத் தொகுத்துக் கூறுகின்ற "திருவாலவாயுடையார் கோயில் திருப்பணிமாலை" தொண்டைநாட்டு அனதாரியென்பவரால் கி.பி. 1563ல் எழுதப் பெற்ற சுந்தரபாண்டியம், மதுரை இராமசாமிப் பிள்ளையின் அஷ்டமி பிரதக்ஷிண மஹாத்மியம், மேலும் புண்ணியர் பலரது கூடற்புராணம், மருதவனப் புராணம் ஆகி யவை மதுரையின் ஸ்தல புராண ஆதார நூல்களாகும்.

மதுரை ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர்களுக்கான வாடத "பாமாலை"த் தொகுப்புகளாக.....

அகஸ்திய முனிவரின் சிவசக்திஸ்துதியான **யோக மீனாட்சி ஸ்தோத்திரம்**, ஆதிசங்கரரின் - **மீனாட்சி பஞ்சரத்தினம்**, சைவ, சமய நால்வரான அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர்களின் **தேவார திருவாசகப்** பாசுரங்களும், அருணகிரி நாதரின் **திருப்புகழ்**; பரஞ்சோதி முனிவரின் **திருவிளையாடற் போற்றிக் கலிவெண் பா**, அந்தகக் கவிராயரின் - **மதுரை பதிற்றுப் பத்தந்தாதி**, வீரபத்ர கம்பரின் - **திருவிளையாடற் பயகரமாலை**, வெள்ளியம்பல முனிவரின் **பாமாலை**, புராணத் திரு மலையின் - **மதுரைச் சொக்கநாதருலா**, பொற்றாமரையிலே சிவ லிங்கம் கண்ட, தருமை யாதீனத்துக் குரு-ஞானசம்பந்தரின் **சொக்கநாத வெண்பா**, குலசேகரப் பாண்டியனின் - **மதுராபுரி அம்பிகை மாலை**, பலபட்டடைச் சொக்கநாதப்புலவரின் **மீனாட்சி மும்மணிக் கோவை**, குணிசம்புபட்டரின் - **மீனாட்சி கருணாவர்ணம்,**

மதுரைச் சொக்கநாதரின் **தமிழ் விடுதூது**, திருமலை நாயக்க மன்னரின் பிரதான அமைச்சரான, நீலகண்ட தீட்சிதரின் - **ஆனந்த ஸாகரஸ்தவம்**, முருகனருள் பெற்ற குமரகுருபரரின் - **மதுரைக் கலம்பகம், மீனாட்சி பிள்ளைத்தமிழ், ...குறம்..., இரட் டைமணி மாலைகள்**; சைவசமய நாயன்மார்களான அறுபத்து மூவர் வரலாறு கூறும் சோழதேச முதல் அமைச்சர் சேக்கிழாரின் - **பெரியபுராணம்**, திருப்போரூர் சிதம்பர சுவாமிகளின் - **மதுரை மீனாட்சி கலி வெண்பா**, வண்ணச் சரபம், தண்ட பாணி சுவாமிகளின் - **மதுரை தெய்வப் பாமாலை**, சிவப்பிரகாசரின் - ஜகப்பிரசித்தி பெற்ற **பிரபுலிங்கலீலை**, அதிவீரராமபாண்டியனின் - **நைடதம்**, நொச்சியூர் பழனியப்ப சேர்வையின் **திருவுசாத்தான நான்மணிமாலை**, திரிகூட ராசப்பக் கவிராயரின் சந்தப் புகழ்மிகு **குற்றாலக்குறவஞ்சி**, இரட்டைப் புலவர்களின் - **மூவர் அம்மானை**, மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் **பக்திப் பாமாலை**, "தமிழ்த் தாத்தா"வாக விளங்கி, ஐம்பெரும் காப்பியம் முதலான பல தமிழ் இலக்கியங் களைச் ஓடித்தேடிச் சேகரித்து தமிழகத்திற்குத் தந்த டாக்டர் உ.வே. சாமிநாதய் யரின் - **கயற்கண்ணிமாலை**, இராமனாதபுர சமஸ்தான வித்வான் வேம்பத்தூர் சிலேடைப்புலி பிச்சுவையரின் - **திருவிளையாடற் தடுத்தாண்மாலை**, எமனேஸ்வரம் ஜவ்வாதுப் (முஸ்லிம் மதத்தவர்) புலவரின் - **ராஜராஜேஸ்வரி பஞ்சரத்தினம்**, நிம்பை (வேம் பத்தூர்) சங்கரநாரணரின் **மதுரைக் கோவை**, வேம்பத்தூர் கோவிந்தய்யரின் **ஸ்ரீமீனாட்சியம்மன்பதிகம்** முதலான பலநூறு பிரபந்த இலக்கியங்களைக் கொண்ட மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வர்களின் பற்பல திருப்பெயர்களிலே ஒரு சில...

"திருக்காமக் கோட்டத்து ஆளுடைய நாச்சியார், மதுராபுரித்தலைவி, பங்கயற்செல்வி, பாண்டிப்பிராட்டி, மரகதவல்லி, மாணிக்கச்செல்வி, கயற்கண்குமரி, குமரித்துறையவள், மாமதுரைக் கோமகள், அபிஷேகவல்லி அங்கயற்கண்ணி...!"

"சொக்கலிங்கம், சோமசுந்தரம், கல்யாணசுந்தரர், கடம்பவனேசர், அடியார்க்கு நல்லான், அட்டாலைச் சேவகன் ஆலவாய்க்கடவுள், அதிரவீசி விளை யாடுவான், அபிஷேகச்சொக்கர், ஆலவாயப்பன், சொக்கநாதர், சண்பகசுந்தரர், மதுரைப் பெருஉடையார், சுந்தரபாண்டிய சோழக்கோனார், மதுரேசர், பேராலவாயர், இறையனார், கற்பூரச் சொக்கர், புழுகுநெய்ச்சொக்கர்... முதலான ஏராளமான திருப் பெயர்களோடு விளங்கும் மீனாட்சி சுந்தரேஸ்வரர்களுக்கு, காலை 5-மணி முதல், நடுப்பகல் 12.30 வரை, மாலை 4 - மணி முதல் இரவு 10-மணி வரை **திரு வனந்தல், விளாபூஜை, காலசந்தி, திரிகால சந்தி, உச்சிக்காலம், சாயரட் சை, அர்த்தஜாமம், பள்ளியறை ஆகிய எட்டுக்கால பூஜைகளிலும் இங்கே அம்பாள்**, முறையே "**மஹாசோடசி, புவனை, மாதங்கி பஞ்சதசாட்சரி, பாலை, சியாமளை, சுகசி யாமளை, சோடசி...**" ஆகிய திருக்கோலங்களிலே ஆராதிக்கப்படும் ஐதிகம், இத் தலத்திற்கே உரிய ஒன்றாகும். ஸ்ரீநீலகண்ட தீட்சிதர் வகுத்து வைத்தப்படி "**காமிக காரண ஆகம**"ப்படியே இன்றும் பூஜைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

மதுரைக் கோயிலின் **திருவிழா பட்டியல்...** (ஒவ்வொரு திருவிழாவும் பத்து நாட்களுக்குக் குறையாதவை.)

சித்திரை: மீனாட்சியம்மனுக்குப், பட்டாபிஷேக,ம் செங்கோல் தருவது. திருக்கல்யாணம், தேரோட்டம், ஆற்றில் (வைகை) அழகர். இறங்குவது. எதிர்சேவை அழகர் பெருமானின் தசாவதாரம் மு,வை.



வைகாசி: புதுமண்டபத்திலே வஸந்தோத்ஸவம், வெள்ளிரதம். ஆடி விதிகளில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் பவனிவரல்

ஆனி: ஆனி உத்திரம், ஊஞ்சல் விழா.

ஆடி: மீனாட்சியம்மன் தனிவிழா-முளைக்கொட்டு.

ஆவணி: பிட்டுத்திருவிழா முதலான பல திருவிளையாடல். (18-நாட்கள்) சோமசுந்தரர் மதுரை அரசராகப் பட்டாபிஷேகம் பெறுவது.

புரட்டாசி: கொலு உத்ஸவம், நவராத்திரித் திருவிழா ஸ்ரீமீனாட்சியம்மனுக்கு வைர முடிசூட்டு விழா.

ஐப்பசி: பவித்ரோத்ஸவம், (ஆலயத்திலே நடத்தப்படும் விழாக்களில் தெரிந்தோ தெரியாமலோ ஏற்படும் குறைகளை நிவர்த்திக்கும் திருவிழா) கந்தர் சஷ்டி விழா (கோலாட்டத் திருவிழா. பிள்ளைத் தமிழ்பாடலுக்கு ஏற்ப மீனாட்சி அம்மனை உருவகப்படுத்தி (அலங்கரித்து) கன்னிப்பெண்கள் ஆடிப்பாடுவது.)

கார்த்திகை: தீபத் திருவிழா (ஆலயம் முழுவதும் லட்ச தீபம்.)

மார்கழி : எண்ணெய்க்காப்பு, ஆருத்ரா, திருவெம்பாவைத் திருவிழா.

தை: கதிரறுப்பு விழா. தெப்பத் திருவிழா.

மாசி: மாசி மக, சர்வ தெய்வ மண்டல மஹா உத்ஸவம் (48 நாட்கள்)

பங்குனி: உத்திரத் திருவிழா. (சுவாமியும் அம்மனும்) திருப்பரங்குன்றம், திருவாப்புடையார் ஆலயங்களுக்குச் சென்று திரும்புவர்.)

மீனாட்சி கோயில் நிர்வாகத்திலே திருப்பரங்குன்றத்துடன் 19-கோயில்கள் இருந்தன. 1983-முதல் திருப்பரங்குன்ற முருகனின் ஆலயம் தனித்த நிர்வாக மானது; மதுரையிலே இப்போதுள்ள பிரதான கோயில்களின் பட்டியல்.

திருவாப்புடையார் கோயில், வடதிருவாலவாய், தென்திருவாலவாய் ஆலயங்கள்; பழைய சொக்கநாதர் கோயில், ஈசனே பூசித்த - நன்மை தருவார் கோயில், யமதர்மன் பூசித்த தென்திருவாலவாயுடையார் கோயில், திருவாதவூர் ஆலயம், முக்தீஸ்வர் கோயில்களோடு... கண்ணகிக்குத் தனிச் சன்னதியுள்ள செல்லத்தம்மன் கோயில், வண்டியூர் மாரியம்மன்,... காஞ்சன மாலை, நக்கீரர்... கோயில்கள், முனீஸ்வர்..., வீரபத்ர, பைரவ..., கருப்பணசாமி..., பேச்சியம்மன்...,




மதுரைவீரன், ஸப்தமாதர் ஆலயங்களோடு, புராதனமான அட்டாங்கவிமான கூடலழகர் திருக்கோயில்..., ஸ்ரீனிவாசப்பெருமாள்..., மதனகோபாலசுவாமி..., பிரசன்ன வெங்கடேசர்..., அநுமார் கோயில்களுடன், ஆயர்குல மக்களின் அபிமான, வடக்கு கிருஷ்ணன் கோயில், மாமன்னர் திருமலைநாயக்கரால் மதுரைக்கு வந்த சௌராஷ்டிர மக்களின் குல தெய்வமான தெற்கு கிருஷ்ணன் கோயில்களோடு, டவுண் ஹால் ரோடிலே பெருமாள் பெயரிலே ஓர் மிகப்பெரும் தெப்பத் திருக்குளமும் உண்டு!

திருக்குளம் இருக்கிறது; ஆனால் அந்தக் குளத்திற்கான பெருமாளின் கோயில் எங்கே? கோயிலுக்கு உரியவரான கரியமாணிக்க மூலவர் எங்கே?

இவை போன்ற எத்தனையோ பலப்பல "எங்கே"க்களுக்கான இடங்கள் ஏராளம் உள்ளன மதுரையில்! காலம் கடந்த இப்போதைய நமது தேடல்களால் இனியந்த தகர்ந்துபோன ஆலயங்களும், தொலைந்துபோன மூலவர்களும் மீளப் போவதில்லை!

"தலையிலே ஆறிருக்க மாமிக் காகத்
தங்குகடல் ஏழ ழைத்த திருக்குற்றாலர்..."

என்று குற்றாலக் குறவஞ்சி கொண்டாடுகின்ற, அந்தச் சுந்தரேஸ்வரனே சிருஷ்டித்த மதுரை ஏழுகடல் (160 அடி நீள 145-அடி அகலம்) தீர்த்தக் குளத்தை இப்போது... நாம் எப்படிப் "போற்றி" வைத்திருக்கிறோம் தெரியுமா? கார்ப்பரேஷன் குப்பைகளாலேயே தீர்த்தக்குளத்தைத் தூர்த்து, நாலு மாடி **"ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்"** ஆக மாற்றியிருக்கிறோம்! இந்தக் கொடுமைகளுக்கு அந்த "எங்கே"க்கள் எவ்வளவோ தேவலை தானே?



1990-மே 21-ம் தேதி பதினைந்து அம்ச கோரிக்கை நிறைவேற, அறநிலைத்துறைக்குச் சொந்தமான அனைத்து ஆலயங்களிலும் ஸ்ட்ரைக்! (பாவம் தமிழ்நாட்டுப் பிரபல ஆலயமூலவர் (கடவுளர்) எல்லோருமே அன்று முழுப்பட்டினி!

பழனியிலே நகரத்தார்களின் காவடிக் குழுவுக்கும், ஊழியர்க்கும் ஏதோ சிறு தகராறு, 19.1.1995 அன்று (தைப்பூசத் திருவிழாக் காலம்) பழனி கீழ்க்கோயில், மலைக்கோயில் முதலான எங்குமே பூஜைகள் இல்லை! கட்டுப்பாடான ஊழியர் களின் ஒட்டுமொத்த ஸ்ட்ரைக்காம்! ஆண்டவனும் பட்டினி! காவடி எடுத்துவந்த அடியார்களும் அம்போ!!

திருக்கோயில் என்ன ஜவுளி மில்லா? இரும்பு பவுண்டரியா? பேப்பர் மில்லா? இந்தக் கொடுமைகளுக்கு யார், எப்படித் தீர்வு காண்பது? இதோ ஒரு தீர்வு! தமிழகத்திலுள்ள 33,700-திருக்கோயில்களில் பணிபுரியும் 49,713-பேர்

பயனடைவர். (2-68-கோடி புதிய சலுகை) என்று அறநிலையத்துறை அமைச்சர் அம்மமுத்துப்பிள்ளை தெரிவித்தார். - 12.11.1995- தினமணி.

(திரைப்பட உலகிலே நாற்பது ஆண்டு காலமாக துணை டைரக்டராக, பாடலாசிரியராக... வசன கர்த்தாவாகப் பணிபுரிபவன் அடியேன் (வேம்பத்தூர் கிருஷ்ணன்) இமய முதல், குமரிவரை பற்பல முக்கிய-பெரிய-கோயில்களைக் கண்டு, நின்று நிதானமாக நாட்கணக்கிலே வாரக்கணக்கிலே தரிசித்தவன்; பெரும்பாலான ஆலயங்களிலே வேத ஆகம மந்திரங்களைவிட., சனாதன சம்பிரதாயங்களைவிட வியாபாரத் தந்திரங்களே - விளம்பர ஆடம்பரங்களே-பிரதானமாக இருந்த - இருக்கும் - கசப்பான உண்மைகளை.. **"க்ஷேத்ராடானச் சித்ரவதை"**யாகப் பத்திரிகைகளிலே பலமுறை எழுதி... அழுதிருக்கிறேன்! ஹூம். ஹூம்...! அனைத்துமே செவிடன் காதில் ஊதப்பட்ட சங்கொலி தான். **25** ஆண்டு காலமாக அடியேன் வெளியிட்டுவரும் "சுடர்மணிமாலை" பக்திநூல் ஒவ்வொன்றிலும் "சங்கை" ஊதிக்கொண்டுதான் இருக்கிறேன்)

மதுரை மீனாட்சியம்மன் கோயிலொன்றும் அத்தனை மோசமில்லை! இருப்பினும்... ஆலயமெங்கிலும் ஆங்காங்கே... வியாபாரநெடி வீசுவதை... சம்பந்தப்பட்டோர் கவனித்தே தீரவேண்டும்! தமிழகத்துப் பிரபல கோயில்களுக்கு வரவேண்டிய பலகோடி ரூபாய் பாக்கிகளிலே... சில கோடிகளை "சாம்பிள்"... பாருங்கள்!

5.8.1984-ல் அறநிலைத் துறையின் அறிக்கைப்படி... முப்பத்திநாலாயிரம் ஹிந்துக்கோயில்களுக்கு வரவேண்டிய மொத்த நிலக்குத்தகை பாக்கி 31 கோடி, 5 லட்சம்! வீடு மனைகளின் வாடகை பாக்கி 3 கோடியே 25 லட்சம்!

"2,40,000 ஹெக்டேர்- கோயில் நிலங்களை சுயநல சக்திகள் கையகப்படுத்தியுள்ளன; ஒரே ஒரு நபர் கையிலே மட்டும் சிவன் கோயிலுக்குச் சொந்தமான 100, ஹெக்டேர் நிலம் உள்ளது..." (அமைச்சர்உரை: தினமணி 16.4.1989)

இப்படியாக நமது ஆலயங்களுக்கு நாமே முதல் எதிரிகளாக மாறும் கொடியநிலை தீர, காணாமல் போன கரிய மாணிக்கப் பெருமாளை மானஸீகமாகப் பிரார்த்தித்தபடி மதுரையின் ஆதிவரலாற்றுச் சுருக்கத்தை சரித்திர, பூர்வமாக அறி வோமா!

குமரிமுனைக்கும் அப்பால் அமைந்திருந்த பாண்டிய நாட்டின் தொன்மை, ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்டதென்பர் மொழியறிஞர் பாவணர்; முப்பதாயிர வருடங்களுக்கும் முந்தியது என்கிறது ஓர் ஆராய்ச்சி.

"இறையனார் களவியலுரை" தருகிற ஆதாரப்படி சுமார் பத்தாயிர வருடங்களுக்கு முன், குமரிமுனையைப் பாண்டியமன்னன், ஆண்டான். அகத் தியரைத் தலைவராகக் கொண்ட முதல் தமிழ் சங்கத்தை ஆதிமதுரையிலே தொடங்கினான்;89- பாண்டியர்கள் நிர்வகித்த முதற் தமிழ்ச்சங்கத்திலே 4449- புலவர்கள் இருந்து மொழி வளர்த்தனர். 4440- ஆண்டுகளுக்குப் பிறகு காலப்புயலால், கடலின் "பசி"யால் அந்தத் தென்மதுரை காணாமல் போனது.

அடுத்து **வெண்டேர்செழியன்** எனும் பாண்டியன் கபாடபுரத்தை உருவாக்கி, **தொல்காப்பியரைத்** தலைவராகக் கொண்ட இரண்டாம் தமிழ் சங்கத்தை ஏற்படுத்தினான்; 59 பாண்டிய அரசர்கள் அதைப் பாதுகாத்தனர்; 3700-புலவர்கள்

பங்குபெற்ற இடைச்சங்க கபாடபுரம், 3000 ஆண்டுகளுக்கு பிறகு கடற்பெருக்கால் மூழ்கிச் சிதைந்தது! முதல் சங்கத்திலே உருவான தமிழ் இலக்கண முதல் நூலான **அகத்தியம்** அழிந்து விட்டது. கபாடபுரத்து இரண்டாம் சங்கத்தில் உருவான இலக்கண நூல்களிலே **தொல்காப்பியம்** ஒன்று தான் மிஞ்சியது!

"இருமுறை கடல் பொங்கியதா?" ஆம்! ஒரு காலத்திலே இமயமலை கடலாகவும், குமரிக்கடல் நிலமாகவும் இருந்திருக்கின்றன என்பதற்குத் தொல்காப்பியம், புறநானூறு முதலான இலக்கியங்களின் ஆதாரமுண்டு. 6400 வருடங்களுக்கு முற்பட்ட வியாச பாரதமும் (மகாபாரத அர்ஜுனன் மதுரைக்கு வந்து பாண்டிய இளவரசி அல்லிராணியை மணந்தான்.)

ஆறாயிர ஆண்டுகளுக்கு முற்பட்ட கிரேக்க, சீன, எகிப்திய நாடுகளின் ஆதி இலக்கியங்களும் சிங்கள (இலங்கை) வரலாறுகளான "இராஜாவளி" "மஹா வம்சம்" ஆகிய நூல்களும், 2500 ஆண்டுகளுக்கு முந்தைய சமண பௌத்த, சந்திரகுப்த, சாணக்கிய, அசோக மன்னர்களின் சாசனங்களும், சின்னமனூர், வேள்விக்குடி, திருவாலங்காடு முதலான மூதூர்களின் செப்பேடுகளும், சாயர்புரம் கற்காலக் கருவிகளும், ஆதிச்சநல்லூர் முதுமக்கள் தாழிகளும், அரிக்கமேட்டு அகழ்வாராய்ச்சிக் குறிப்புகளும், ஆனைமலை, ஐயர்மலைக் கல்வெட்டுகளும் "ஆலவாயப்ப"னின் கோயிலைச் சுற்றியுள்ள 44 கல்வெட்டுகளும் மதுரைப் பேரால யத்தின், பாண்டியப் பேரரசின் தொன்மைக்குச் சான்று கூறுபவையாகும்.

கி.பி. 7-ம் நூற்றாண்டுதான் மதுரைக்கு **திருஞானசம்பந்தர்** வந்தது; **கூன்பாண்டியனின்** பொற்கால ஆட்சி. கி.பி 800-ம் ஆண்டு வெளிநாட்டுப் புகழ்மிகு யாத்திரீகர்களான **பெரிபுளுசும், தாலமியும்**, 13-ம் நூற்றாண்டிலே தமிழகத்திற்கு வந்த **மார்க்கபோலோவும்.** பாண்டிய மன்னர்களின் தொன்மை, பைந்தமிழின் பெருமைகளை மிக விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

திருஞானசம்பந்த மூர்த்தியை மதுரைக்கு வரவழைத்த **மங்கையர்கரசியின்** மாறாத சிவபக்தியும், அமைச்சர் **குலச்சிறையாரின்** ராஜவிசுவாசமும் இதே மதுரையில்தான்! மந்திரமாகிய திருநீற்றின் பெருமையால், வெப்ப நோய் தீரப்பெற்ற கூன்பாண்டியன் மீண்டும் வான்புகழ் சிவபக்தனானதும்...

அரிமர்த்தனபாண்டியரிடம் அமைச்சனாக இருந்த தென்னவன் பிரம்மராயன்..., உலகப்புகழ் பெற்ற திருவாசக **மாணிக்கவாசகர்** ஆனதும், மதுரையின் மீனாட்சி சொக்கநாதக் கடவுளரின் மகத்துவத்தால் தான்!

மதுரைச்சீமையின் மகத்துவமும், மாபெரும் மீனாட்சியம்மன் கோயிலின் பெருமையும் பலப்பலவாகும்.

தாண்டவராயப் பண்டாரம் தொகுத்துப் பாடிய **"திருவாலவாயுடையார் திருப்பணிமாலை"** மற்றும் **"மதுரைக் கோவிலொழுகு, மதுரைத் திருப்பணிமாலை, சீதளப்புத்தகம், மதுரைஸ்தானீகர் வரலாறு**, "நெல்ஸன் துரை"யின் **மதுரை நாடு** (ஆங்கில வெளியீடு), நான்காவது தமிழ்ச்சங்கம் வெளியிட்ட **மதுரைத் தலவரலாறு,** G.P.L. ஷெனாய் I.A.S. அவர்களின் **" கோயில் நகரம்"**, மீனாட்சி திருக்கோயில் வெளியீடான கி.பழனியப்பனின் **கோயில் மாநகர்** ஆகிய ஒரு சில நூல்கள்தான்,

மதுரை மற்றும் ஆலவாய்க் கோயிலின் பூர்வ வரலாறுகளை ஓரளவு வரிசைப்படுத்த இன்று நமக்கு உதவுகின்றன.

மூன்றாவதாக உருவாக்கப்பட்ட (இன்றைய) மதுரையிலே **முடத்திருமாறன்** எனும் பாண்டிய மன்னன் **நக்கீரர்** முதலான 49-புலவர் பெருமக்களோடு, மூன்றாம் தமிழ்ச்சங்கத்தைத் தொடங்கினான்; அகப்பொருளுக்கு இலக்கணம் வகுத்தளித்த **சிவபெருமானும்**, அகத்தியருக்கு உபதேசித்த **முருகவேளும்**, அண்டசராசர "நிதிமந்திரி"யாகிய **குபேரனும்** இச்சங்கத்து அங்கத்தினர்களாம்!

மூன்றாம் தமிழ் சங்கத்துப்புலவர்கள் 48-பேர்களும் கலைவாணியான ஸ்ரீமகா சரஸ்வதியின் அம்சம் என்பதற்காக ஓர் வரலாறே உள்ளது. 49-வது புலவர்ராக சாட்சாத் ஸ்ரீசிவபெருமானே எழுந்தருளியிருக்கிறார். தெய்வாம்சம் நிறைந்த அந்தத் தமிழ்ச் சங்கப் புலவர்களுக்கு மதுரை சுவாமி கோயிலிலே அர்த்த மண்டப அருகே தனிச் சன்னதியே இருக்கிறது.

பலநூறு புலவர்களைக் கொண்டு முத்தமிழ் வளர்த்த பாண்டியர்களுள், **வடிவலம்ப நின்ற பாண்டியன், பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி, பொற் கைப் பாண்டியன், பூதப்பாண்டியன், வரகுண பாண்டியன்**, ஆரியப்படை கடந்த **நெடுஞ்செழியன், உக்கிரப்பெருவழுதி** முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

1850-ஆண்டுகள் இருந்த கடைச்சங்கம், **கி.பி இரண்டாம் நூற்றாண்டிலே** "தேய்பிறை"யானது! மூன்று தமிழ்ச்சங்களின் மொத்த ஆண்டுகள் 9990-ஆகும்.

கி.பி மூன்றாம் நூற்றாண்டிலே (250-500) பாலிமொழியர்களான முரட்டுக் **களப்பிரர்**களின் வெறித்தாக்குதலால் மதுரை மூதூர், வெறியாரிடம் சிறைப்பட்டது! ஐந்தாம் நூற்றாண்டுவரை "இருண்ட காலம்"; மூன்றாம் தமிழ்ச்சங்கத்திலே உரு வான பல தமிழிலக்கியங்கள் பிற மொழி வெறியர்களால் அப்போது அழிக்கப் பட்டன.

6-ஆம் நூற்றாண்டிலே காஞ்சியப்பல்லவர் உதவியோடு **கடுங்கோன்** எனும் பாண்டியன். களப்பிரரை வென்று, கி.பி.590-ல் மதுரையை மீண்டும் கைப்பற்றினான்;640-ல் "அரிகேசரி"யெனும் **கூன்பாண்டியன்** பட்டத்திற்கு வந்து **மணிமுடிச் சோழனை** வென்று, அவனது மகளாகிய **மங்கையர்க்கரசி**யை மணந்து கொண்டான். ஸ்ரீமீனாட்சி அம்மனுக்கு, தனிச் சன்னதி, இந்த காலகட்டத்திலே தான் ஏற்பட்டது. சமணமதத்தைத் தழுவி ஞான சம்பந்தரால் மீண்டும் சைவ னானவன் இந்தக் கூன் பாண்டியனே. பாண்டியன் நெடுஞ்செழியன், கோவலனைக் "கள்வன்" என அவசரப்பட்டு ஆராயாமல் தீர்ப்பளித்து "கண்ணகி" எனும் கற்புத்தீயால் சூழப்பட்டு உயிர்த்துறந்தவன். நெடுஞ்செழியனின் காலச்சுவடுகள் காப்பாற்றப்படவில்லை.

கூன் பாண்டியனைத் தொடர்ந்து மதுரையை ஆண்ட மன்னர் வரிசை... கோச்சடையரணதீரன் (670); **நெடுஞ்செழியன் பராந்தகன்** (765); **குணமகாராஜன்** (792); **சீமாற சீவல்லபன்** (833); **இராஜசிம்மன்** (900); (வெள்ளூர் போரிலே சோழனிடம் தோற்றவன்) ஷெயார் மகன் **வீரபாண்டியன்** (946) இழந்த நாட்டை

மீட்டு 966-ல் ஏற்பட்ட சோழப் படையெடுப்பால் மாண்டு விடுகிறான். அதுமுதல் பாண்டிய மன்னர்கள், சோழர்களுக்கு உட்பட்ட சிற்றரசாகிறார்கள்.

1070-ல் மதுரையை ஆண்ட அப்போதைய சோழ மன்னன், வாரிசில்லாமல் மாண்டுவிட, சிறிதுகாலம் பாண்டியரின் ஏகபோக சுயாட்சி, 1081-ல் **முதலாம் குலோத்துங்க சோழன்** பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரையை மீண்டும் கைப்பற்றினான்; சோழனுக்குக் கப்பம் கட்டியபடி அப்போதைய பாண்டியர்களான **சடையவர்வ குலசேகரனும், பராக்கிரம பாண்டியனும்** நாட்டை இருபகுதியாகப் பிரித்துக்கொண்டு (கி.பி1162) ஆண்டு வந்தாலும், ஏக போக உரிமைக்காக இரு பாண்டியர்களும் சமயத்தை எதிர்பார்த்து நடத்திய மறைமுக மோதல்கள் மதுரைச் சீமையிலே தொடர்ந்து வந்தன.

மோதலின் உச்ச கட்டமாக பராக்கிரம பாண்டியன், இலங்கை மன்னனிடம் உதவி கேட்டனுப்புகிறான்; இலங்கையான் வருவதற்குள், குலசேகரன் பராக்கிர மனைக் கொன்று விடுகிறான்! இலங்கைப்படை வந்து, குலசேகரப் பாண்டியனைத் தோற் கடித்து, பராக்கிரம பாண்டியரின் மகனான **வீரபாண்டியனுக்கு** முடி சூட்டிவிட்டுத் தன்னாடு திரும்புகிறது.

கி.பி.1167-ல் சோழப்படைகளின் உதவியோடு, வீரபாண்டியனை வீழ்த்தி விட்டு, குலசேகரப் பாண்டியன் மதுரைநாட்டின் மன்னாதி மன்னனாகிறான்.

"தலைவலி" தருகின்ற ஷெ வரலாற்றுக் குறிப்புகளை ஏன் தொடர்ந் தேனென்றால், கி.பி1167-ல் முதல்தான் மதுரைக் கோயிலின் திருப்பணிக் குறிப்புகள் (இப்போது) உள்ளன!

1168-முதல் 1175-வரை சொக்கநாதரின் ஆலய அர்த்த மண்டபம், மகாமண்டபம், பரிவார தேவ தேவியர் சன்னதிகளோடு, கோட்டை, அகழி, அகழிக்கு வெளியே நகரின் நாற்புறமும் திருமால், ஐயனார், ஸப்த மாதர், விநாயகர், ஆலயங்களைக் கட்டி முடித்திருக்கிறான் மாறவர்மன் குலசேகர பாண்டியன்.

அவனது வழிவந்த **மாறவர்ம சுந்தரபாண்டியன்** 1216-1268-காலங்களிலே கிழக்கு ராஜகோபுரம், இம்மையில் நன்மை தருவார் கோயில், கபாலித் திருமதில் முதலானவற்றை அமைத்துள்ளான். **1253-1268-ல் விக்ரமபாண்டியன்** சித்தர் கோயில், சொக்கர் அட்டாலை மண்டபங்களை உருவாக்கினான்.

1268-லே பட்டத்திற்கு வந்த **மாறவர்ம குலசேகரன்** 1310 கால கட்டத்திலே பொன்னும்மணியுமாக அரண்மனைக் கருவூலத்தை நிரப்பி வைத்து இருந்தான்; மீனாட்சியம்மன் ஆலயத்தை புதுப்புதுத் திருப்பணிகளால் சிறப்பித்தான். அவனது இருமனைவியரின் புதல்வர்களான் **சுந்தரபாண்டியன், வீரபாண்டியன்** இருவரிடை யே "அரியணை"ப் போட்டி ஏற்படுகிறது! பரம்பரைச் சம்பிரதாயப்படி வீரபாண்டி யனுக்கு முடிசூட்டிய தந்தையை கொலையே செய்து விடுகிறான் இன்னொரு மகனாகிய சுந்தரபாண்டியன்! இந்தக் காலகட்டத்திலேதான் டெல்லி சுல்தான் **அலாவுதீன் கில்ஜியின்** படைத்தளபதி **"மாலிக்காபூர்"** தென்னாட்டுக்குள் பெரும் படையோடு நுழைந்து கொண்டிருந்தான்.

பங்காளியை வீழ்த்துவதற்காக, தென்னாட்டிலே பகற்கொள்ளையிட வந்த மாலிக்காபூரின் காலடியிலே போய் விழுகிறான், பாண்டியப் "பதரா"ன சுந்தர பாண்டியன் !

சுந்தர..., வீரபாண்டியர்களின் சிந்தனையற்ற மடத்தனத்தால் பாண்டிய நாட்டின் விதியை... மதுரைக் கோயிலின் கதியை.. பங்காளிக் காய்ச்சலால் பதவி வெறியால் அண்ணன் தம்பியரின் அறியாமையால் மதுரைச் சீமை மட்டுமா பாதிக்கப்பட்டது ? தமிழகத்தின் பெரும் பகுதியின் புகழ்மிகு ஆலயங்கள், அதன் சொத்துக்கள், உத்ஸவ மூர்த்திகள், அதிசயமான கலையெழில் கொஞ்சிய கட்டிடச் சிற்ப அற்புதங்கள் அனைத்தும் ஐயகோ! தூள்! தூள்!! தூள்!!! இந்நாளைய அந்நாளைய நூல் களிலிருந்து சில வரிகளைச் "சாம்பிள்" பார்ப்போமா!

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தார் வெளியிட்டுள்ள 350-வது வெளி யீட்டிலிருந்து...

"வீரபாண்டியனைத் துரத்திக் கொண்டு மாலிக்காபூர் சிதம்பரம் வந்தான்; பொன்னம்பலத்தை அடியோடு பெயர்த்துக் கொண்டு (சிதம்பரம்) கோயிலுக்குத் தீ வைத்தான்.

அரங்கநாதர் (ஸ்ரீரங்கம்) - பெரிய கோயிலை இடித்துப் பாழாக்கினான்! உடமை களைச் சூறையாடினான்!! அடுத்து மதுரையின் மேல் பாய்ந்தான்! மீனாட்சியம்மன் கோயிலுக்குத் தீயிட்டான்! பாண்டிய நாடே. பற்றியெறிந்தது!! கோயில் பகுதிகள் இடிந்து விழுந்தன; மக்கள் படுகொலைக்குள்ளாயினர்...!"

"மூவேந்தர்குல தேவமார் சமூக வரலாறு" எனும் நூலிருந்து... (ஆசிரியர் P. முத்துத்தேவர்)

"....... மாலிக்காபூர் பாண்டிய நாட்டிலிருந்து 612-யானைகள், 20,000 குதிரைகள், 96,000 மணங்கு தங்கம், ஆயிரக் கணக்கான பெட்டி முத்து, ரத்தினங்களோடு (1311) டெல்லி புறப்பட்டான்..."

மலை மலையாக டெல்லியிலே வந்து குவிந்த தமிழக ஆலயக்கலைச் செல்வங்களைக் கண்ட டெல்லி சுல்தான்களின் பனிரெண்டு ஆண்டு கால, அலை அலையான படையெடுப்புகள்! அதன் விளைவாக 1323-ல் மதுரை நாடு, சுல்தான்களின் முழு உடமையானது. 48-ஆண்டுகள் 8-சுல்தான்கள் ஆண்டனர்! அவர்களில் ஒருவர் **கியாஸ்உதீன்** ! அவரது சகலையான (இருவரும் அக்காள், தங்கையரை மணந்தவர்கள்) "**இபின்பதூதா**" என்பவர் எழுதிய ஒரு நூலிருந்து.

"... உருவ வழிபாடு செய்த ஒரு பக்தனின் குடும்பமே படுகொலை செய்யப்பட்டது! எதிர்த்துப் போராடிய 80 வயது **வீர வல்லாளனை** உயிரோடு தோலை உரித்தனர்! கியாய்உதீன் மனிதவடிவப் பேய் என்றுதான் கூறவேண்டும்!"

இரண்டாம் கம்பணரின் மனைவியான **கங்காதேவி** (மாலிக்காபூரால் ஏற்பட்ட ஆலயச் சிதைவு - அழிவுகளை - நேரில் பார்த்தவள்) "மதுரை விஜயம்" என்கிற புத்தகத்திலே வெறியர்களின் தாக்குலால் மதுரையின் சீரழிவு பற்றி எழுதி உள்ள ஏராளக் குறிப்புகளிலே ஓரிருவரிகள்...

"...கோயில்களின் ஆராதனைகள் புறக்கணிக்கப்பட்டன! தென்னந் தோப்புகள் அழிக்கப்பட்டு, மனிதர்களின் மண்டை ஓடுகளுடன் கூடிய கழுமரங்களின் அணிவகுப்பாகக் காட்சி தருகிறது... மதுரைப் புறநகர்"

"மதுரை ஸ்தானீகர் வரலாறு" எனும் தொகுப்பிலிருந்து சில வரிகள்...

"...பராக்கிராம பாண்டியராஜா பயந்து போய் காளையார் கோயில் போனார்; ஸ்தானீகர்கள், மூலவருக்கு கிளிக்கூண்டு பண்ணுவித்து, அர்த்த மண்டபத்திலே, வேறொரு லிங்கத்தை பிரதிஷ்டை பண்ணுவித்து, விமானத்தில் மீனாட்சியை அஷ்டபந்தனம் பண்ணுவித்து, உற்சவமூர்த்தி இளைய நயினாரையும் பின்னுமுள்ள பரிவாரவிக்ரஹங்களையும் பூபதனம் பண்ணுவித்துப் போட்டு, சொர்ண நாயகரையும் (ஏனைய) சொர்ண மூர்த்திகளையும் எடுத்துக் கொண்டு நாஞ்சில் நாட்டு கிலுகிலுப் பைக்காடு போய்ச் சேர்ந்தனர்!..."

"மதுரைத் தலவரலாறு" எனும் புத்தகத்திலிருந்து..., (Administration and Social life under Vijayanagar Madras University Publication - Page 301:) **சிலவரிகள்...**

"...வருஷம் 48க்கு துலுக்காணியமாக இருந்தது; மதுரைக்கு வாய்த்த பெருமானும் நாஞ்சில் போக, பஞ்சாட்சரத் திருமதிலும், பதினான்கு கோபுரங்களும், தெருவீதிகளும் இடிபட்டன! அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஆறுகால் பீடம் வரைக்கும் தப்பி யிருந்தது..."

ஆக...கி.பி. 1371-ல் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வர் ஆலய மூலஸ்தான. அர்த்தமண்டப, ஆறுகால் பீடங்களைத் தவிர, ஏனைய ஆலயப் பகுதிகள் அனைத் தும் மாலிக்காபூராலும், தொடர்ந்து வந்த அவனது "நிழல்" களாலும் சூறையாடப் பட்டு, அழிக்கப்பட்டு விட்டன!

பிரமாண்டமான மதுரைக் கோயிலின் அகழி, அரண்மனை, திருச்சுற்று மண்டபங்கள்...முதலான அனைத்தும் தூள்தூள் ஆகிவிட... குட்டிச் சுவர்களின் மத்தியிலே...

"ஆலய மூலவர்கள் "அனாதை" களாகப்பட்ட சுமார் நாற்பத்தியெட்டு ஆண்டு காலமாக, முறை போட்டுக் காவலிருந்து - உயிர்த்தியாகம் பல புரிந்து - மதுரைக் கோயிலின் மூலஸ்தான "இந்திர விமான"த்தைக் காத்ததற்காகவும், 17-ஆம் நூற்றாண்டிலே மீண்டும் "சுல்தான்" களால் ஏற்பட்ட அபாயத்திலிருந்து மதுரைக் கோயில் உத்ஸவ மூர்த்திகளையும், நவரத்தின ஆபரணங்களையும் மீட்டு, மானாமதுரையில் இரண்டு ஆண்டுகள் வைத்திருந்து காப்பாற்றி, மீண்டும் மதுரையில் சேர்த்ததற்காகவும், நாலாவது தமிழ்ச் சங்கத்தை (1901-ஸ்ரீ **பாண்டித்துரைத் தேவர்)** மதுரையில் ஏற்படுத்தியதற்காகவும் வீராதி வீரர்களான முக்குலத்தோரை, - **பசும்பொன் ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவரின்** மூதாதையரை

ஒவ்வொரு தமிழனும் இதயத்தால் வணங்கியே தீர வேண்டும் என்றபடி மீண்டும் மதுரையின் வரலாற்றுக் குறிப்புகளுக்குத் திரும்புகிறேன்.

14-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலே அன்றைய "ஆண்டவர்"களால் பாண்டியர்தம் அரண்மனைகளும், பங்கயற் செல்வியாம் ஸ்ரீ மீனாட்சியம்மனின் ஆலயத்தின் கலைநயமுள்ள சில பகுதிகளும் கடத்தப்பட்டு, **"உருமாற்றம்" இடமாற்றம் செய்யப்பட்டன.**

மதுரை மதனகோபால சுவாமி கோயில் தூண்கள், அமெரிக்க நாட்டிலே காட்சி மண்டபமானது. 1912-ல் **"சிப்சன்"** என்ற அமெரிக்க நாட்டுப்பிரபு ஒருவர் மதுரை வந்தார் - ஆலயச் சிற்பங்களிலே மனதைப் பறிகொடுத்தார். அப்போது மதன கோபால சுவாமி ஆலயம் (தெற்கு, மேல மாசி வீதிகளின் முனையில் இருந்த கோயில்) இடிந்து கிடந்தது. அனைத்துத் தூண்களையும் விலை கொடுத்து வாங்கி அமெரிக்கா கொண்டு சென்றார். 1920-ல் ஓர் கலைவிழா நடத்தி புகழ் பெற்றார். இன்றும் அமெரிக்க நாட்டு அருங்காட்சி மாளிகையின் இந்தியப் பகுதியிலே, மதுரை மதனகோபால் சுவாமி கோயில் மண்டபம் உள்ளது.

1336-ல் விஜயநகர சாம்ராஜ்யம் உதயமானது!

சுல்தான்களின் பேராசைச் சூறாவளியால் சின்னா பின்னப்பட்டுச் சிதைந்த மதுரையை, விஜயநகரப் பேரரசின் வாரிசான **இரண்டாம் கம்பணர்** 1371-ல் பெரும் படையோடு வந்து மீட்டு... 48-ஆண்டுகளாக மூடிக்கிடந்த மதுரை ஆலய கர்ப்பக்கிரஹத்தைத் திறந்தபோது, நாற்பத்தெட்டு ஆண்டுகளுக்கு முன், அர்ச்சித்த பூஜாமலர்கள் வாடாமலும், ஏற்றியதீபம் எரிந்த நிலையில் அப்படியே... சுடர்விட்டு மின்னிய அற்புதத்தையும் கண்ட இரண்டாம் கம்பணர்,மீனாட்சி சுந்தரேஸ்வரின் ஆத்மார்த்த பக்தராகிறார்; நாஞ்சில் நாட்டிலே இருந்த மதுரைக் கோயிலின் உத்ஸவ மூர்த்திகளை மீண்டும் மதுரைக்குக் கொண்டுவந்து ஆலய முழுவதையும் சீர்படுத்திச் செப்பனிட்டு 1372-கால கட்டத்திலே ஆலவாயப்பனின் பேராலயத் துக்கு ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தனமஹாகும்பாபிஷேகத்தையும் நடத்தி வைத் திருக்கிறார்.

இரண்டாம் கம்பணரைத் தொடர்ந்து... அவரது மகன் **எம்பணஉடையார்,** மருமகன் **பொற்காசுடையார்** என்று ஷெ பரம்பரை வழிவழியாக வந்து... **1481** ஆம் ஆண்டு கம்பண உடையாரின் பேரன், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரரின் பேராலயத்திற்கு மிகப் பெரிய அளவிலே குடமுழுக்கு விழா நடத்திவைத்ததை **"சீதள புத்தகம்"** அறிவிக்கிறது.

16-17 ஆம் நூற்றாண்டுகளிலே பல நாயக்கர்கள் விஜயநகர சாம்ராஜ் யத்தின் பிரதிநிதிகளாக இருந்து மதுரையை நிர்வகித்தபோது நடந்த கும்பாபி ஷேகக் குறிப்புகளை, செவிவழிச் செய்தியாகக் கூட இப்போது அறிய முடியாத அவலநிலை! மதுரை மீனாட்சியம்மன் கோயிலின் "குடமுழுக்கு"கள் பற்றி குறிப்பு கள் கிடைத்தவரை...

1628-ம் ஆண்டு திருமலை நாயக்கர் ஓர் கும்பாபிஷேகத்தை நடத்தி யுள்ளார்.

1708-ல் விஜயரங்க சொக்கநாத நாயக்கர் நடத்திய மிகப்பெரும் கும்பாபிஷேகம்.

1877-ல் ஏழு கோயில் நகரத்தார் (செட்டியார் பெருமக்கள்) குடமுழுக்கு நடத்தி வைத்தனர்.

1.7.1923-ல் வடக்கு மொட்டை கோபுர பூர்த்தி; அமராவதி புதூர் வயிநாகரம் செட்டியார் செய்வித்தது.

ஷெ ஆண்டிலேயே (1923) ஆலய முழுவதையும் சீர்செய்து முத்து கரு. வெ. அழகப்ப செட்டியார் (ஆலயரி ஸீவர்) செய்வித்த மஹா கும்பாபிஷேகம்.

2.6.1963-ல் தமிழவேள் பி.டி. ராஜன் அவர்களது தலைமையில் சிரத்தா பக்தியுடன் கூடிய குடமுழுக்கு நடைபெற்றது.

26.6.1974-ல் திருவாளர் லெ. நாராயணன் செட்டியார் தலைமையிலே மிகச் சிறப்பாக நடைபெற்றது மற்றொரு மகா கும்பாபிஷேகம்.

(1989) ஆண்டு செப்டம்பரில் "தமிழவே"ளின் புதல்வர் திரு. P.T.R. பழனி வேல் ராஜன் அவர்களின் தலைமையிலே 18-பிரமுகர்களுடன் கூடிய கும்பாபி ஷேகக் கமிட்டி ஒன்று அமைந்தது.

"இரண்டு ஆண்டுகளுக்குள் ஆலயச் சிதைவுகளைச் சீர் செய்து, முழு அளவிலே கும்பாபிஷேகம் நடக்க இருக்கிறது" என்ற சுபச் செய்தி வந்து பல ஆண்டுகள் ஓடிவிட்டன! சுண்ணம் வைத்து வண்ணம் பூசிய மதுரை மேலக் கோபுர, தெற்கு கோபுரச் சிற்பங்கள்கூட... மெருகு கலையத் தொடங்கிவிட்டன! ஆனால் கும்பாபிஷேகம் எப்போது என்பது யாருக்குமே புரியாமலிருந்து, ஏதேதோ நிர்வாக மாற்றங்கள் நடந்து... நான்கு ஆண்டுகளாக நடந்துவந்த கும்பாபிஷேக வேலை கள் திடீரென படுஸ்பீடில் ஓடத்தொடங்கி... சுமார் இரண்டுகோடி ரூபாய் செலவோடு 7.7.1995 அன்று மதுரைப் பேராலயம் கும்பாபிஷேகம் கண்டது.(அவசரக் கும்பாபிஷேகம் என்பது, ஸ்ரீ கல்யாண சுந்தரர் சன்னிதி முதலான பல இடங்களிலே நூலாம்படைகூட அடிக்கப்படாத நிலைகளைக் கண்டு உணரலாம். நிதிப்பற்றாக் குறையோ, அல்லது நிதிப்பற்றாமையோ? மீனாட்சியம்மனே அறிவாள்!) ம்!! விட்ட இடத்திலிருந்து வரலாற்றைத் தொடர்கிறேன்.

கி.பி. 1529-வரை விஜயநகரப் பேரரசின் பிரதிநிதிகளாக மதுரையை நிர்வகித்த நாயக்கர்கள், விஜயநகரப் பேரரசின் சிதைவுக்குப்பிறகு (கி.பி. 1565) சுயாட்சி மன்னர்களாகிறார்கள்.

ராணி மங்கம்மா, ராணி மீனாட்சி...ஆகிய இரு பெண்ணரசியர் உட்பட 16 நாயக்கர் பரம்பரை கி.பி. 1736-வரை மதுரையை ஆண்டிருக்கிறது; அதிலே 8-வது மன்னராகப் பட்டத்துக்குவந்த (1623-1659) திருமலை நாயக்கர், மீனாட்சி யம்மனின் மதுரைக் கோயிலுக்கு ஏராளமான நிலபுலங்களையும் (கிராமங்களையும்) எழிலான கோபுரங்களையும், சீரான திருவிழாக்களையும் விமானத்திலும், கொடி மரங்களிலும் தங்கத்தட்டுத் திருப்பணிகளையும், அளவிட ற்கரிய ஆபூர்வ ஆபர ணங்கள், வாகனங்கள், வஸந்தவிழா (புது) மண்டபங்களை அமைத்ததோடு, பிரம் மாண்டமான மஹால் (அரண்மனை) ராஜ கோபுர அற்புதங்களுமாக மதுரையைப் பேரழகு மாநகராக உருமாற்றி வைத்த திருமலை நாயக்கர், மதுரைக் கோயில்

திருப்பணிக்கு மட்டும் அந்த நாளிலே மூன்று லட்சம் பொற்காசுகள் தந்ததாக மதுரை ஜில்லா "கெஜட்"டியின் விபரம் தெரிவிக்கிறது.

மதுரை ஆலயத்துள் அந்த நாளிலே நிலவிய நிர்வாக ஊழல் அனைத்தையும் ஒழித்தவர், புதியதொரு நிர்வாகம் படைத்தவர், புதுப்புது விழாக்களை எடுத்தவர். மதுரை மட்டுமல்லாமல் திருப்பரங்குன்றம், அழகர்கோவில், ஸ்ரீவில்லிபுத்தூர், ஸ்ரீரங்கம், திருவானைக்காவல் முதலான வைணவ,சைவ பற்பல கோயில்களுக்கு ஏராளமான திருப்பணிகளைச் செய்த மாமன்னர் திருமலை நாயக்கரின் காலத்திற்குப் பிறகும் ஆறுநாயக்கர்கள் (**ராணிமங்கம்மா, ராணி மீனாட்சி** உட்பட) மதுரையை ஆண்டனர். 1736-ம் வருடத்துடன் நாயக்கர் ஆட்சி மதுரையிலே முடிவடைந்தது! "கால மேடை" யிலே தொடர்ந்து... 1740-**பங்காரு நாயக்கன்**; 1744-**முராரிராவ்**; 1755**மூகமதலி**; 1759- **யூசுப்கான்**; 1763- **ஆங்கிலே யர்**; 1780 - **மைசூர் ஹைதரலி**; 1781-கும்பினித்துரை **ஜார்ஜ் ப்ராக்டர்**; என்று மதுரைச் சீமை பலரால் "பந்தாடப்"பட்டு, கி.பி. 1790-முதல் ஆங்கிலேயரின் முழு உடமையாகிறது.

1841-லே கீழ ஆவணி மூலவீதி, கீழமாரட் வீதிகளிலே இருந்த கோட்டை மற்றும் அகழிகளைச் சமன் செய்து நகரை விரிவுப்படுத்தினார் **பிளாக்பான்** எனும் வெள்ளைக்கார கலெக்டர். உதவியவர் **திரு. பெருமாள் மேஸ்திரி**! கீழாவணி மூல வீதியிலுள்ள "விட்டவாசல்" ஒன்றுதான் மதுரையிலே கோட்டை இருந்ததற்கான இன்றைய ஒரே அடையாளம். 1851-ம் வருடத்திலே மதுரையின் பரப்பளவு ஒரு சதுரமைல்; ஜனத்தொகை **41**ஆயிரம்; 1975-ல் நாலு லட்சமாகி, இன்று பதினைந்து லட்சத்தையும் தாண்டிப் பெருகித் ததும்பி நிறைந்து வருகிறது! மதுரையைச் சுற்றியிருந்த விளைநிலங்களெல்லாம் வீடுகளைக மாறி, இன்றைய மதுரையின் பரப்பளவு.. பனிரெண்டு மைல்களையும் கடந்து விரிந்து பரந்து கொண்டே போகிறது!! 1866-ல் முனிசிபாலிடி ஆனது மதுரை நகரம், 1971 லே "கார்ப்பரேஷ" னாகி மாநகராட்சியாக உயர்ந்திருக்கிறது! 1877-ல் நடந்த கோயில் கும்பாபிஷேகத்தின் போது, மதுரை ஜில்லா கலெக்டர் **கரோல்துரை**, கமிஷனர் **மணிஐயர்** ஆகிய இருவரும், மீனாட்சியம்மனின் ஆலயத் திருமதிலுக்கு வெளியேயிருந்த "சேரி" யை அகற்றிச் சுற்றிலும் நந்தவனம் ஏற்படுத்தியிருக் கிறார்கள்.

1901-லே பிறந்த நான்காவது தமிழ்ச்சங்கக் "**குழவி**" 1920-லே அரிய பல தமிழிலக்கியச் சுவடிகளைத் தீயிலே பறிகொடுத்துவிட்டு, நலிந்து, மெலிந்து மூன்று உலகத் தமிழ் மகாநாட்டு (1968-1981-1995) "தாம் தூம்" களுக்குப் பிறகும், தொண்ணூற்று ஐந்து வயதுக் "**கிழவி**"யாக (தமிழ்ச்சங்கம்) உயிரோடு -ஆரோக் கியத்துக்கு-போராடிக்கொண்டிருக்கிறது!! "உலக மொழிகளிலே தனித்தன்மை கொண்ட ஒரே திருமொழி தமிழ்" என்று கூறிய "**கால்டுவெல்**"; திருக்குறள், திரு வாசகங்களை உலகறியச் செய்த "**போப்பையர்**"; "தேம்பாவணி" எனும் தமிழி லக்கிய நூலை இந்த நான்காம் தமிழ்ச் சங்கத்திலே அரங்கேற்றிப் புகழ்கண்ட "**வீரமாமுனிவர்**"... போன்ற மேல்நாட்டவரின் தமிழ்த் தொண்டுகளோடு...

1921-லே பாமரர்களுக்காக மகாத்மா காந்தி "கோவணாண்டி" ஆனது, 8.7.1939-ல் "**தியாகச் செம்மல் மதுரை வைத்தியநாதய்யர்**, பசும்பொன் **முத்துராம**

லிங்கத் தேவர் முதலானோர் முன்னின்று நடத்திய ஸரிஜன ஆலயப் பிரேவேசம்"; தியாகமணி ஸ்ரீ **N.M.R. சுப்பராமனின்** தேசீயத் திருப்பணிகள் முதலானவற் றோடு... முத்தமிழின் விதைப் பண்ணையாக இன்றும் மதுரை விளங்கிவருகிறது.

சித்திரைத் திருவிழாவிலே பத்து லட்சத்திற்கும் மேலான மக்களை உபரி யாகத் தாங்குவது மதுரை மாநகரம்! அந்தத் திருத்தலத்தின் கர்த்தர்களான மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தை முறைப்படி நாம் வலம் வருவோமா!

மதுரை ஜங்ஷனின் இறங்கி டவுன் ஹால் ரோடு வழியாக கோயிலை நோக்கி நடக்கிறோம்; தெப்பக்குளம்!

(மினி "டு-இன்-ஒன்" கடைகளின் அணிவகுப்புதான் இருக்கும் சிரமப்பட்டு எட்டி-தாவி-பார்த்தால்தான் உள்ளே தெப்பக்குளம் இருக்கும் பரிதாபம் தெரியும்)

மேலக் கோபுர தரிசனம்; மேல வெளி, மேல மாசி, மேல ஆவணி மூல வீதிகளைக் கடந்து, மேலச் சித்திரை வீதிக்கு வந்து கோயிலைச் சுற்றியுள்ள, திருமதில் (1639-அடி நீள, சுமார்-50 அடி உயரம்) ஓரமாகவே நடந்து, வடக்குச் சித்திரை வீதியில் உள்ள மொட்டைக் கோபுர முனீஸ்வரனைக் கும்பிட்டபடி, கீழச் சித்திரை வீதி (சுவாமி சன்னிதி) ராஜ கோபுரத்தையும் தாண்டி, இப்போதைய சம்பிரதாயப்படி, ஸ்ரீ மீனாட்சியம்மன் சன்னதிக்குச் செல்லும் நுழைவாயிலைக் கொண்ட **அஷ்டசக்தி மண்டபத்தை** அடைகிறோம்.

கௌமாரி,ரௌத்திரி, வைணவி, மகாலட்சுமி, யக்ஞரூபிணி, சாமளை, மகேஸ்வரி, மனோன்மணி ஆகிய எட்டு சக்திகளின் சுதைவடிவ ஆழகான சிலாரூபங்களையும், திருவிளையாடல் ஓவியச் சிற்பங்களையும் கண்டு பரவசமடை கிறோம்; இம்மண்டபத்தைக் கட்டியவர்கள் திருமலை நாயக்க மன்னனின் மனைவியரான **உருத்திரா, தோளியம்மை** ஆகிய இருவராகும்.

உள்வாசலின் முகப்பிலுள்ள ஸ்ரீவல்லபை கணபதி, சண்முகர்களை வணங்கியபடி, 160-அடி நீள, 110-அடி அகலமுள்ள மிகப்பெரிய **மீனாட்சிநாயக் கன் மண்டபத்**துள் நடக்கிறோம்; வலதுபுறம் புஷ்பக் கடைகள்; இடதுபுறம் பெண் கள் குழந்தைகளுக்கான "கோயில்வளையல் கடை"கள்.

மண்டப விதானத்திலுள்ள சதுர வடிவிலே அதிநூதனமான முறையிலே அமைந்துள்ள பன்னிரு ராசிகளைப் பார்த்தபடி, சிவகங்கை ராஜாவின் உபயமான ஆயிரத்தெட்டு தீபத் திருவாசியைக் கடந்து, நடந்து **கரந்தை முதலியார் மண்டபத்திலே** உள்ள பிட்சாடனர், தாருகாவனரிஷி மற்றும் பத்தினியர் சிற்பங்களின் தத்ரூப உயிர்க்கலைநயத்தைக் கண்டு வியந்தபடி, பொற்றாமரைத் **திருக்குளத்தை** அடைகிறோம்.

165-அடி நீள, 120-அடி அகலமுள்ள இந்தப் பொற்றாமரைத் திருக்குளத்திலேதான், இந்திரன் சாப விமோசனம் பெற்றது: சங்கப்பலகையை வரவழைத்து திருக்குறளை ஔவையார்,அரங்கேற்றியதும் இங்குதான்.

இத்திருக்குளத்திலே மீன், தவளை முதலான நீர்வாழ் உயிரினங்கள் இல்லாமல் இருப்பது ஓர் அதிசயம்! ஆனால் தண்ணீரும் அப்படியே; இப்போது வெளியிலிருந்து மோட்டார் "பம்ப்" மூலம் பொற்றாமரைக் குளத்திலே நீர் விடப் படுகிறது. பொன் முலாம் பூசிய ஓர் தங்கத் தாமரை வடிவம், தற்போது குளத்திலே

"மிதக்க" விடப்படுகிறது. குளத்தைச் சுற்றிலுமுள்ள வடபுற நடைபாதை மண்டபச் சுவர்களிலே 1894-ல் எழுதப்பட்டு ஒளிவீசித் திகழ்ந்த **மதுரைச் க்ஷேத்திரத்தின் அறுபத்திநாலு திருவிளையாடல் காட்சி பழங்கால ஓவியங்கள், மீண்டும் உருவாகியே தீரவேண்டும்.**

(மதுரை ஸ்ரீமீனாட்சியம்மன் கோயில் இழந்துபோன, பழமையான திருவிளையாடல், ஓவியங்கள் கேரளஓவியர், திரு.டி.வினோத் என்பவரால் மீண்டும் உருவாக்கப் படுகின்றன. நல்ல (பத்திரிகை) செய்தி 16.2.1996)

பொற்றாமரைக் குளத்தைச் சுற்றிய தென்புறத்து நடைபாதையிலே, காசி மடம் திருப்பனந்தாள் ஆதீன கேந்திரங்கள், திருக்குறள் முழுவதையும் வெள்ளைக் கல்லிலே வடித்துப் பதித்துள்ளது; ஓரிரு குறளைப் படித்தபடி நடந்து, விபூதி விநாய கரை வலம் வந்து, 1623-ல் **அபிஷேகப் பண்டாரம்** என்பவரால் கட்டப் பெற்ற சிற்ப அற்புத **கிளிக்கூட்டு (சங்கிலி) மண்டபத்திலே** உள்ள ஸ்ரீ செவ்வந்தீஸ்வரர், ஸ்தல த்துக்குறிய சித்திவிநாயகர், கூடற்குமரர், காசிவிஸ்வநாதரோடு, விசாலாட்சியரைத் தொழுதபடி மேற்படிமண்டப இருபத்தியெட்டுத் தூண்களிலுமுள்ள - யாளிகள், பஞ்சபாண்டவர் சிற்பங்களைப் பார்த்தபடி, மீனாட்சியம்மன் சன்னிதிக்குள் நுழயு முன், வலதுபுறம் பார்க்கிறோம்; ஆலய மேல் தளத்திற்குச் செல்லும் படிக்கட்டுகள்! அம்மனை தரிசிக்குமுன், ஸ்தூல மூர்த்திகளான கோபுரங்களைத் தெரிந்து கொள் ளலாமே! விசேட அனுமதி பெற்று மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தின் மேல் தளத்திலே போய் நிற்கிறோம்.

ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர்களுக்கான இரு தங்க விமானங்களோடு மொத்தம் பதினான்கு கோபுரங்கள். "மாலிக்காபூர்" நுழைவதற்கு முன் இந்தப் பேராலயத்திலே இருபத்தி எட்டுக் கோபுரங்கள் இருந்தனவாம்.

கிழக்கு ராஜ கோபுரம்:

கி.பி. 1216-1238 காலத்திலே மாறவர்ம சுந்தர பாண்டியன் கட்டியது. 153-அடி உயரமுடன், 1011 சிற்பங்களோடு ஒன்பது நிலைகலைக் கொண்டது.

தெற்கு ராஜ கோபுரம்:

1559-ல் சிராமலை செவ்வந்தி செட்டியார் கட்டியது. 161-அடி உயர, 1511 சிற்ப, ஒன்பது நிலைகளைக்கொண்ட அற்புதமான வேலைப்பாட்டுடன் கூடியது.

மேற்கு ராஜ கோபுரம்:

1315-காலகட்டத்தில் சடையவர்ம பராக்ராம பாண்டியன் கட்டியது. 154-அடி உயர, 1124-சிற்பங்களோடு, ஒன்பது நிலைகளைக் கொண்டது.

வடக்கு ராஜ கோபுரம்:

1516ல் கிருஷ்ண வீரப்பநாயக்கர் கட்டிப் பூர்த்திபெறாமல், "மொட்டைக் கோபுர"மாக இருந்த இதை, 1878-ல் வயிரநாயகம் செட்டியார் வகையறா, 152 அடி உயர ஒன்பது நிலை கோபுரமாகப் பூர்த்தி செய்தனர்.

முக்குறுணிப் பிள்ளையார் கோபுரம் (69 அடி உயரம்) 1559-ல் சிராமலை செவ்வந்தி செட்டியாரின் திருப்பணி.

மேல ஆடிவீதி கோபுரம் (72 அ.உ.) 1374-ல் மல்லப்பன் என்பவர் கட்டியது.

வடக்கு ஆடிவீதி கோபுரம் (71 அ.உ.) செவ்வந்தி வேலப்ப செட்டியார்.

கிழக்கு ஆடிவீதி கோபுரம் (66 அ.உ.) வசுவப்பன் என்பவரது உபயம்.

தெற்கு ஆடிவீதி கோபுரம் (64 அ.உ.) வீரதும்மாசி என்பவர் கட்டியது.

சுவாமி சன்னிதி முதல் பிராகார கோபுரம் (39 அ.உ.) 1168-ல் மாறவர்மன் குலசேகரபாண்டியன் கட்டியது.

அம்மன் சன்னதி முதல் பிராகார கோபுரம் (117 அ.உ.) 1570-ல் காளத்தி நாத முதலியார் கட்டியது.

வேம்பத்தூரார் கோபுரம் (40 அ.உ.) 1227-ல் ஆனந்தத் தாண்டவநம்பி கட்டியது.

சிரத்தாபக்தியோடு பலநூறு புண்ணியர் செய்த திருப்பணிகளால் இன்று முழுமை பெற்றுத் திகழுகிறது. மதுரை மீனாட்சியின் பேராலயம். அவர்களுள் அன்னாளய சில திருப்பணியாளர்களின் பெயர்களை எண்ணிப் பார்ப்போமா!

மாவலிவாணாதிராயர், மல்லாரிராயர், கோனேரின்மைகொண்டான், பெருமாள், திருவம்பலச் செட்டி, செட்டியப்ப நாயக்கர், செல்லப் பெண்மாணிக்கம், தீத்தியப்பச்செட்டி, திம்முராவுத்தர், கல்லூர்ச் செவ்வந்தி, பட்டுத் திருமலை, குப்பாண்டி, திம்மப்ப நாயக்கர், கல்லூர் சின்ன செவ்வந்தி, வசுவப்ப நாயக்கன், கோனேரி நாரணன், விருப்பணன், குஞ்சமழகி நாயக்கர், துபாசி வெங்கடேஸ்வர முதலியார், கரந்தை முதலியார், அக்ஷயராயன், சின்னப்பநாயக்கர், பேச்சியக்காள், பிட்டுச் சொக்குப் பண்டாரம், சமூகம் மீனாட்சி நாயக்கர், தும்மச்சி நாயக்கர், ஆறுமுக முதலியார், அருணாசல முதலியார், திருநோக்கு அழகியார், அப்பன்பிள்ளை, மருதப்ப சேர்வைக்காரர், சின்னியான், சிறாமலைச் செவ்வந்தி, பாண்டிச் செட்டியார்,கம்பலராயர், கம்பலரசி, சங்கர நாகராஜன், இராமப்ப நாயக்கன், அனந்தாழ்வான் ஐயன், வீரராகவன் நாரணப்பன், கந்தபொடிபெத்து செட்டியார், ("ஆண்ட விநாயர்" என்ற பெயரோடு ஆதியில் இருந்த முக்குருணியரிசிப் பிள்ளையாரை, ஷெ செட்டியார் தனிசன்னதி ஏற்படுத்தி ஆலயத்துள் பிரதிஷ்டை செய்ததாக "திருப்பணிமாலை" கூறும். ஆனால் வண்டியூர் தெப்பக்குளம் வெட்டும் போது திருமலைநாயக்கருக்குக் கிடைத்ததாக இப்போதைய வழக்கு. எது உண்மை யார் அறிவார் ?) நாகு செட்டியார் பெத்தப்ப செட்டியார், பாப்பு செட்டியார், பாப்பெல்லப்ப செட்டியார். இப்படி இன்னும் பல புண்ணியப் புனிதர்கள் !

ஆனைமலை, பசுமலை, அழகர்மலை, பரங்குன்றம் முதலான எட்டு மலைகளின் நடுவே, மலர்ந்த தாமரை போல் அமைந்த பேராலயம் முழுவதையும் (847-அடி நீளமும், 792-அடி அகலமும் உள்ள நாற்கோண வடிவம்) மனதிற்குள் பதித்துக் கொண்டபடி கீழே வந்து, வேம்பத்தூரார் கோபுர வழியாக அம்மன் சன்னதி இரண்டாம் பிரகாரம் சென்று, துவஜஸ்தம்பத்தை (கொடிமரத்தை) வணங்கியதும் இடமிருந்து வலதுபுறமாக ஆலயத்துள் நடக்கிறோம்.

இருமனைவியரோடு திருமலை மன்னரின் மணிமேடை, கூடற்குமரர், சன்னிதி, கொலுமண்டபங்களைக் கடந்து, குமரகுருபரரின் "மீனாட்சிப்பிள்ளைத் தமிழ்" அரங்கேறிய ஆறுகால் பீடத்தின் வழியே அர்த்தமண்டபம் வந்து மூலஸ்தானத்தை நெருங்குகிறோம். சண்டிகேஸ்வரி சன்னிதியையும்,

பள்ளியறையையும் தாண்டி, அறுபத்திநாலு சக்தி பீடங்களிலே முதல் பீடமாகிய "மந்திரிணிபீட" மகாசக்தியாம் ஸ்ரீ மீனாட்சி அம்மனின் முன்னால் வந்து பரவசத்தோடு நிற்கிறோம்.

ஆயகலைகளின் முழு வடிவாகிய கிளியைக் கையிலே ஏந்தியபடி, அன்னை ஸ்ரீ மீனாட்சியின் நின்ற திருக்கோலம். தாய்மையின் பூர்ணத்துவம் ததும்பும் திரு முகமண்டலம். கற்பூர தீபாராதனையால் மேலும் ஒளி பெறுகிறது! உற்று உற்றுப் பார்க்கிறோம். ஒரு சில விநாடிகள் இந்த உலகையே மறக்கிறோம்; இகபரசுக சகல சௌபாக்கியங்களையும் பெற்று விட்ட பேரானந்தப் பரவசம் பெறுகிறோம். அர்ச்சகப் பெருமக்கள் தந்த மங்கலக் குங்கும, மலர்களைப்பெற்று, பள்ளியறையையும் கண்டு தரிசித்தபடி, 1963-ல் அமைக்கப்பட்ட புதிய உள்வாசலின் வழியாக, அம்மன் கோயிலை விட்டு, சுவாமி கோயிலின் இரண்டாம் பிராகாரத்துள் நுழைகிறோம்.

நாற்பத்தெட்டு சங்கத்தார் (புலவர்கள்) சன்னிதியைத் தரிசித்தபடி இரண்டாம் பிரகாரத்திலே 1448-ல் சின்னப்பநாயக்கர் கட்டிய "மண்டப நாயகம்" என்கிற நூற்றுக்கால் மண்டபத்திலே உள்ள நடராஜர் எதிரிலுள்ள ஞானசம்பந்தர் சன்னதிகளின் வழியாக, உயிரோட்டமுள்ள மாபெரும் சிற்பங்கள் நிறைந்த உலகப்புகழ் பெற்ற கம்பத்தடி மண்டபத்தின், துவஜஸ்தம்பத்தை நமஸ்கரித்தும், மிகப்பெரிய அளவிலான அற்புதமான சிற்பத்தூண்களைக் கொண்ட அந்தக் கம்பத்தடி மண்டபத்தைச் சுற்றுமுற்றும் வியந்து பார்க்கிறோம்.

1564-ல் கொடிமர மண்டபமாக கிருஷ்ண வீரப்ப நாயக்கர் கட்டிய இதை, 1877-ல் ஏழு கோயில் நகரத்தார்கள், 16 தூண்களுடன் கூடிய பேரழகுக் கலைமாமணி மண்டபமாக மாற்றி அமைத்தனர்.

தங்கையான தடாதகைப் பிராட்டியைத் திருமாலழகர் சொக்கநாதருக்குத் தாரைவார்த்துத் தருகின்ற பேரழகுச் சிற்பம், அக்னி வீரபத்திரர், அகோர வீரபத்திரர், ஊர்த்துவ தாண்டவர், ருத்ரதாண்டவ பத்திரகாளி, சிவபெருமானின் இருபத்தைந்து திருக்கோலம், மஹாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களையெல்லாம் கற்றூண்களிலே உயிர்க்காவியமாக வடித்துள்ளனர் பாண்டிநாட்டு அமர சிற்பியர்!

இதே இரண்டாம் பிராகாரத்திலே உள்ள முக்குறுணியரிசிப்பிள்ளையார், அநுக்ஞை விநாயகர், சதாசிவன், பழனி தண்டாயுதபாணி, காயத்ரீ, பராசக்தி, சூரியன் முதலான நவக்கிரஹ தேவர்களோடு, ஹநுமார் (தூணில்), கழுகு மலைக் கந்தர்களைக் கையெடுத்துக் கும்பிட்டபடி, ஒற்றைக் கல்லிலேயே உருவான மண்டபத்துள்ளே இருக்கிற நந்தியையும், நுழைவாயிலில் பன்னிரெண்டு அடி உயர "ஆட்கொண்டார், உய்யக்கொண்டார்" எனப்பெயர் கொண்ட பிரமாண்டமான துவாரபாலர்களையும் தரிசித்தபடி, சொக்கநாதப்பெருமானின் ஆலயவளாக முதற் பிராகாரத்துள் நுழைகிறோம்.


முதற் பிராகாரத்திலே, சண்டிகேஸ்வரர் அறுபத்து மூவர், சரஸ்வதி, லெட்சுமி, அக்ஷரலிங்கம், பிட்சாடனர்,மீனாட்சி சுந்தரேஸ்வரர் உற்சவ மூர்த்திகள்

(இளைய நாயனார்) சன்னதிகளோடு, திருஆலவாய் க்ஷேத்திர விருட்க்ஷமான ஆதி கடம்பரமும், சாட்சியாகவந்த நாழிக் கிணறு, வன்னி மரங்களையும் தொழுதபடி, பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற்புராணம் அரங்கேற்றப்பட்ட, ஆறுகால் பீடத்தின் வழியாக மகாமண்டபத்தை அடைகிறோம்.

மகாமண்டப வெளிச்சுவரிலே உள்ள அறுபத்திநாலு திருவிளையாடற் கதையின் சுதைச் சிற்பங்களை ரசித்தபடி, அர்த்த மண்டபத்துள்ளே பிரவேசிக் கிறோம்.

இராஜசேகரபாண்டியன் வேண்டிக் கொண்டதற்காக, கால்மாறி ஆடிய, பத்துத் திருக்கரங்களுடன் கூடிய பரமானந்தத் தாண்டவ, வெள்ளியம் பல நடராஜரின் திவ்ய தரிசனம் கிடைக்கிறது. இடதுபுறம் இருக்கின்ற நாயன்மார் அறுபத்துமூவரது உற்சவ மூர்த்திகளைத் தொழுது பணிந்து, பிறகு சொக்கரிநாதன் மூலஸ்தானத்து முன்னே வந்து நிற்கிறோம்.

நாற்பத்தொண்ணாயிரம் சிவனடியார்கள், பக்தியிலே திளைத்த பராபரனாம், ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானின் சர்வாலங்கார திவ்ய தரிசனம். 8-யானைகள், 32-சிங்கங்கள், 64-பூதகணங்களைக் காவலாகக் கொண்ட இந்திர விமானத்தை (மூலஸ்தானத்தை) வலம் வருகிறோம்.



நூறுவயது வரை வாழ்ந்தவரும், நாயக்கமன்னர்களின் காலத்திலே... நாலு தலைமுறையினருக்கு அமைச்சராக இருந்தவருமான அரியநாத முதலியார், 1559-ல் கட்டிய 250-அடி நீள, 240-அடி அகல - ஆயிரக் (985)கால் மண்டபம். "சித்திரசபை" எனப்படும் இம்மண்டபத்திலே சரஸ்வதி, நிருத்த கணபதி நடராஜர் திருமால், மன்மதன், முதலான 28-அற்புத அபூர்வச் சிற்பங்கள் உள்ளன. அந்நாளைய நமது முன்னோர்களின் கட்டிடக் கலைத்திறனை விளக்குவது இந்த ஆயிரக்கால் மண்டபமாகும். உள்ளேசென்று நாம் நின்றபடி எந்தப்பக்கம் நின்று பார்த்தாலும், எந்தக் கோணத்தில் நின்று பார்த்தாலும் - வரிசை வரிசையாகத் தெரியும் தூண்களை நிறுத்தயுள்ள அந்நாளைய நமது முன்னோர்களின் "இஞ்சினியரிங்" மதிநுட்பம் மிகமிக அற்புதமாகும்.

1966-முதல், அருங்காட்சியகமாக ஆக்கப்பட்டுள்ள ஆயிரக்கால் மண்டபத்திலிருந்து வெளியே வந்து, நேராக நடந்து 1963-ல் கட்டப்பெற்ற

மங்கையர்க்கரசியார் மண்டப இலிங்கத்தை வணங்கியபடி, சேர்வைக்காரர் மண்டபம், முத்துராமய்யர் மண்டபங்களின் அருகேஉள்ள அந்தநாளைய திருக்கல் யாண மண்டபத்துள் நுழைகிறோம்.

1706-ல் விஜயரங்க சொக்கநாதரால் கட்டப்பெற்று, பிற்காலத்திலே, நகரத்தார் பெருமக்களால் விரிவுப்படுத்தப்பட்ட இந்தத் திருக்கல்யாண மண்டபத்தின் விதானம், செப்புத்தகட்டால் ஆனது, இதிலுள்ள "க-கோள பூ-கோள" ஓவியங்கள், விஞ்ஞானம் கலந்த நமது மூதாதையரின் அன்றைய மெய்ஞ்ஞான ஆற்றலுக்குச் சான்றாகும். சிரத்தா பக்தியுடன் கூடிய மெஞ்ஞானத்திலிருந்துதான் இன்றைய நவீன விஞ்ஞானம் பிறந்திருக்க வேண்டும் என்கின்ற பேருண்மையை "'க-கோள பூ-கோள' ஓவியங்களால் புரிந்து கொள்ள முடிகிறது. பதினான்கு கோபுரங்கள், அறுபது மண்டபங்கள், சுமார் எண்பது சன்னிதிகள் முப்பத்து மூவாயிரத்துக்கும் அதிகமான சிற்பங்களோடு விளங்கும் இந்த மதுரைப் பேராலயத்தை, நமக்கு வழங்கிய பெருமக்களை மனதால் தொழுதபடி கீழ ஆடி வீதியில் இறங்குகிறோம்.

ஆலய வளாகத்துள் அமைந்துள்ள ஆடி வீதிகளைச் சுற்றியுள்ள மண்டபங்கள் ராணி மங்கம்மா (1689-1706) அவர்களால் கட்டப்பட்டவை, இப்போது யானை, ஒட்டகங்களைக் கட்டும் கொட்டடி, ஆலய ஊழியர் சங்கம், போலீஸ் அவுட்போஸ்ட், வாசகசாலை, தேவாரசபை, ஆலய நிர்வாக அலுவலகம், பசுமடம், திருப்புகழ், திருக்குறள் சபைகளாக மாறியிருக்கின்றன.

வடக்காடி வீதியிலே உள்ள ஆலமரச்சித்தர், "ஸப்தஸ்வர" இசைத் தூண் கள், அரசமரத்துப் பிள்ளையார், பதினாறு கால் மண்டபங்களைக் கடந்து, கீழ ராஜ கோபுரம் வழியாக வெளியேவந்து, எதிரே உள்ள புதுமண்டபத்துள் நுழைகிறோம்.

333-அடி நீளம், 105-அடி அகலம் உள்ள, இந்தப் புதுமண்டபத்திலே 25-அடி உயரமுள்ள 124-தூண்கள் உள்ளன. 1635-ல் திருமலை நாயக்கமன்னர் கட்டிய இதனுள், மதுரையை ஆண்ட நாயக்கர்களின் முழு உருவச் சிலைகளோடு, பத்ரகாளி நடராஜர், குதிரை வீரர்கள், கைலையைத் தூக்கும் ராவணன், மூன்று தனத் தடாதகை முதலான 15-அடி உயர 11-சிற்பங்களைத் தத்ரூபமாக உருவாக்கிய சிற்பி சுமந்திரமூர்த்தியை "தேவதச்சன்" என்றே கூறலாம். ஆனால் என்ன பயன்! சிற்பக்களஞ்சியமாகச் சிருஷ்டிக்கப்பெற்ற இந்த வஸந்த (புது) மண்டபம், இப்போது சென்னைநகரின் அந்தநாள் சைனாபசார் பிளாட்பாரக் கடைச் சந்தைக்கூடமாக அல்லவா மாறிக்கிடக்கிறது.

பிறமதத்துப் பேராசை வெறியர்களால்... இதிகாச மதுரை சிதைந்ததற்குப் பிறகு... 14ம் நூற்றாண்டிலே, மூடப்பட்டுக்கிடந்த நாற்பத்தி எட்டு ஆண்டுகளிலும் ஆலயச் சாவியை வைத்திருந்த குலசேகரப்பட்டர், பூஜைக்கு உரியவராகிறார்; உதவிக்கு சதாசிவபட்டர் நியமிக்கப்படுகிறார்; இருவரிடையே "முதல் உரிமை யாருக்கு" எனும் போட்டா போட்டி ஏற்படுகிறது!

மன்னர் விஸ்வநாத நாயக்கர் (1529-1564) கோயில் நிர்வாகத்தை அபிஷேகப்பண்டாரம் என்பவரிடம் ஒப்படைக்கிறார். குலசேகர, சதாசிவப் பட்டர்கள் இரண்டுபட்டதால் பண்டாரத்தின் கொண்டாட்டம். ஆகம பூர்வ பூஜைகளும், ஆராதனைகளும், கோயில் நிர்வாகமும் அலங்கோலமாகின்றன!

1634-ல் திருமலை நாயக்க மன்னர், பேரரசின் தலைநகரை திருச்சியிலிருந்து மதுரைக்கு மாற்றி வந்ததும், போர்க்கால அடிப்படையிலே ஆலயப் பட்டர்களின் உரிமைகள் எச்சரிக்கையோடு, பகிர்ந்தளிக்கப்படுகின்றன! அரசு அதிகாரியோடு கூட்டணி அமைத்துக்கொண்டு... ஆலய செல்வத்தைத் தொடர்ந்து "ஸ்வாஹா" செய்து வந்த அபிஷேகப் பண்டாரம் "டிஸ்மிஸ்" செய்யப்படுகிறார் பேராலய நிர்வாகம் சீரடைகிறது.

1706-1732-ல் விஜயரங்கச்சொக்கநாதர் மதுரையை ஆண்டபோது, அவரது மிதமிஞ்சிய தெய்வ பக்தியால் கோயிலிலே செல்வத்தைக் கொட்டுகிறார். அளந்து போடாததால் ஆலய நிர்வாகம், மீண்டும் ஊழலாகிறது. நிர்வாகக்கொடுமையால், கீழைக் கோபுரத்திலிருந்து விழுந்து ஊழியர் ஒருவர் உயிர்த்தியாகம். மன்னர் தலையீட்டால் அமைதி மீண்டது. 1732-ம் வருட முதல், ராணிமங்கம்மாவின் சிரத்தையான ஆட்சி, சந்தாசாயபுவின் சூழ்ச்சியால் 1736-ல் மங்கம்மாவின் முடிவு. சந்தா சாய புவை மராட்டிய ராஜா, முராரிராவ் ஜெயித்து 1740-ல் மதுரையை ஆளுகிறார்.

1742-ல் மராட்டியரை வீழ்த்திவிட்டு மீண்டும் சுல்தான்கள் மதுரையை ஆளுகின்றனர். அப்போதைய சுல்தான் யூசுப்கான், மதுரைக்கோயில் சொத்துக்களின் வருவாய் அனைத்தையும் கையகப்படுத்திக் கொண்டு, கோயிலின் நடைமுறைச்செலவுகளுக்கு சில நூறு வெள்ளிக் காசுகளை வழங்குகிறார். ஆற்காட்டு நவாபுகள் ஆடம்பரப்பிரியர்கள், டாம்பீகமான சுகபோக வாழ்வுக்காக கும்பினியாரிடம் பெற்றிருந்த ஏராளமான கடனுக்காக 1801-ல் மதுரையை ஆற்காடு நவாபு, வெள்ளைக் கம்பெனிக்கு விற்றே விடுகிறார்.

1804-முதல் வெள்ளையரின் நேரடி நிர்வாகத்திலே மீனாட்சியம்மன் கோயில், திருப்பரங்குன்றம், கள்ளழகர், பழமுதிர்ச்சோலை, கூடலழகர், தென்கரை, திருவேடகம், குருவித்துறை ஆகிய ஏழு கோயில் நிர்வாகத்தையும் ஒன்றாக்கி ஆண்டு வருவாய் 50,292-சக்கர-பணத்தை-"ஸ்வாஹா" செய்து கொண்டு, 12-ஆயிரம் சக்கரங்களை மட்டுமே ஆலய நிர்வாகத்துக்கு ஒதுக்குகிறார் வெள்ளைக் கலெக்டர், "ஊர்டிஸ்" என்பவர்.

"ஹிந்து ஆலயத்துக்கு கிறிஸ்தவர் நிர்வாகமா? எனச்சீறியெழுந்த பாதிரியார்களின் ஆவேச ஊர்வலப்போராட்டத்தால், "ஊர்டிஸ்" ஓரங்கட்டப்படுகிறார். இராமனாதபுரம் முத்துசெல்லத்தேவரிடம் வருகிறது. மீனாட்சியம்மன் கோயில் நிர்வாகம்"

1843-49 காலங்களிலே ஆலயச் செல்வங்களை நிர்வகித்த தனசிங், துகாரம், துவாஜி ஆகியோர் செய்த ஊழல்களால் 1850-ல் தொன்மையான மதுரை திருஞான சம்பந்தர் மடத்து ஆதீனத் தலைவரான ஸ்ரீ ஆறுமுகத்தேசிகரிடம் ஆலய நிர்வாகத்தை ஒப்படைக்கிறது ஆங்கில அரசு.

1863-ல் ஏற்பட்ட ஆலய நிர்வாகச் சட்டத்தால் புதிய ஐவர் குழுவிடம் ஆலய நிர்வாகம் மாறுகிறது. 1922-வரை பற்பல ஐவர் குழுக்கள். 1925-லே வந்த குழுவால் ஏகப்பட்ட சீரழிவு! கோர்ட் ஆணைப்படி முத்து கரு.வெ.அழகப்பச் செட்டியார் ஆலய "ரீஸிவரா"கிறார்.

29-3-1937-ல் சில திருத்தங்களுடன் ஹிந்து அறநிலைய ஆலயச்சட்டம் அமலாகிறது. அரசுத்துறை ஐவர் குழுவிடம் ஆலய நிர்வாகம் ஒப்படைக்கப்படுகிறது. அதிலும் ஊழல், பற்பல திருத்தங்களுடன் கூடிய ஹிந்து அற நிலையப் பாதுகாப்புச் சட்டம் 1951-ல் நடைமுறைக்கு வந்து, இன்றுவரை மதுரைக் கோயிலை நிர்வகித்து வருகிறது.

1975-ஆம் ஆண்டின் மதிப்பீட்டின்படி 12-கோடி ரூபாய் மதிப்புள்ள மதுரைக் கோயிலிலே, நளச் சக்கரவர்த்தி, சேரர், சோழர், பாண்டிய, பல்லவ ராஜாக்கள், ரோமானியர், விஜயநகர, நாயக்க மன்னர்கள், நேபாள, காசி, மைசூர், திரு விதாங்கூர், புதுக்கோட்டை அரசர்கள், கலெக்டர் ரோஸ்பீட்டர், திவான் பூர்ணையா, மஹாராஷ்டிரர், சௌராஷ்டிரர், நகரத்தார் மற்றும் பல இனத்தவர், வழங்கியுள்ள காணிக்கை நகைகளின் மதிப்புச் சுமார் பத்துக்கோடி ரூபாய்கள்; இதுவும் 1975 மதிப்பீடுதான். இன்றைய நிலையில் தங்கத்தின் மதிப்பு பத்து மடங்கு உயர்வு எனக் கொள்ளலாமா?

ஆலயத்துக்குச் சொந்தமான நஞ்சை நிலம் 748-ஏக்கர், புஞ்சை, 435-ஏக்கர், 68 சென்ட், காலிமனைகள் 64, கட்டிடங்கள் 583. இன்றைய நிலையில் நில, வீடுகளின் மதிப்பு பத்துப் பதினைந்து இருபது மடங்கு உயர்ந்து விட்டதெனக் கொள்ளலாமா?

இவை மட்டுமா? திருமலை மன்னரின் 12-ஆயிரம் பொன் அறக்கட்டளை நிதி, இலங்கை, நேபாள, மலேஷிய பக்தர்களின் நிரந்தர தர்மக் "கட்டளை"கள், தமிழகத்து ஆதீன,மடாலய அறக்கொடைகள்! வள்ளல் பச்சைப்ப முதலியாரின் (1764) நிரந்தர வைப்பு நிதியான ஒரு லட்ச வராகனின் வட்டி, அவற்றோடு உண்டியல், விஷேட ஆராதனை வசூல், அர்ச்சனை, தரிசன, கல்யாண டிக்கெட் வசூல்கள், தங்கத்தேர், வைரகீரிட உபயதாரர்களின் டிக்கெட் வருவாய் இப்படியாக மதுரைக் கோயிலின் ஓராண்டு மொத்த வருவாய் 15 லட்ச ரூபாயாக இருந்தது: இதுவும் 1975-கணக்குத்தான்.

ஆதாரபூர்வமான குறிப்புக் கிடைத்தபடி 1988-1989 (பசலி-13980) ஆண்டு, மதுரைக் கோயிலின் மொத்த வருமானம் ரூபாய்: 92,69,000 (தொண்ணூற்று

இரண்டு லட்சத்து அறுபத்து ஒன்பதினாயிரம் ரூபாய்கள்) ஆறு ஆண்டுகளுக்கு முந்தைய கணக்கிது.

1987-ம் ஆண்டு வெளியான, நேர்மையைச் "சோ"வெனப் பொழியும் மாத இரு இதழிலே 1,03,74,158 ரூபாய்கள், மதுரைக்கோயிலின் வருடவருமானம் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அந்த ஆண்டுக் கணக்குப்படி, கோயிலின் அன்றாட மற்றும் விழாக்காலச் செலவுகள், ஊழியர் சம்பளம் முதலான செலவுகள் வருடம் ஒன்றுக்கு 27 லட்சம் ரூபாய்கள் மட்டுமே!

மதுரைக்கோயிலின் சம்பள ஊழியர் எண்ணிக்கை: 248; ஆராதனை செய்கின்ற "ஸ்தானீகர்கள்" (பட்டர்கள்) 62; அறநிலைய பாதுகாப்பு கண்காணிப்பாளர் 10; அதோடு ஓதுவார்கள், சீர்பாதம், மடப்பள்ளி, விளக்கு, மேளம் இப்படியாக சுமார் நானூறு குடும்பங்கள் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலய நிழலிலே ஆனந்தமாக வாழ்கிறார்கள்.

"ம்! கணக்கு வழக்கு என்று ஆரம்பித்தால் தொடர் கதையாகி விடும்! தங்க, வெள்ளி (தகடு) வாகனங்கள்... தங்கக் குடங்கள், வெள்ளி அண்டாக்கள், வருடாவருடம் மீதியாகின்ற 50.,.60 லட்ச ரூபாய்கள்... காணிக்கையாக உண்டியலில் ஓராண்டிலே வருகின்ற சுமார் 5 கிலோ தங்கம், 10 கிலோ வெள்ளிகள் ஆறு ஏழு சார்பு ஆலயங்களுக்கான மான்யங்கள், ஆலய நிதியால் இயங்கும் பள்ளி, கல்லூரி, அன்பு, கருணை இல்லச் செலவுகள், வரவுகள் இப்படி எத்தனையோ பிரச்சினைகளை ஆராய்ந்து அறிய என்னால் முடியவில்லை!!

174-அடி நீள, 17-அடி அகல அடித்தளத்தோடு, ஒரே கல்லால் ஆன அறுபதடி உயர பிரமாண்டமான நான்கு நிலைகளையும், வாயிற்படியின் அகலம் இருபத்திரெண்டு அடிநீளத்தையும், கொண்ட பிரம்மாண்டமான மதுரை இராய கோபுரம்; 1654-ல் திருமலை நாயக்க மன்னரால் தொடங்கப்பட்டு பாதிக்கும் பாதி அளவிலே கீழாவணி மூலவீதியிலே மூளியாகக் கிடக்கிறது! அதன்மேல் செடி கொடிகள் படர்ந்து, இப்போது மரங்களாகவும் மாறிவிட்டன! சில ஆண்டுகளிலே புராதனமாகிய, பிரமாண்டமான ராயகோபுரம், இடிபட்டுக் கற்குவியல் ஆகிவிடும் அபாயம் உள்ளது! ஆலய நிர்வாகம் கவனிக்குமா?

ஆயிர அடி நீளமும், தொள்ளாயிரத்து ஐம்பது அடி அகலமும் (15-ஏக்கர் விஸ்தீரணம்) கொண்டது வண்டியூர் தெப்பக்குளம் நடுவிலே பகஞ்சோலையுடன் கூடிய மைய மண்டபம்; (போய்வர படகு உண்டு) ஆண்டுதோறும் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர்களுக்கு தை மாதத்திலே கோலாகலமாக நடைபெறுகின்ற தெப்போத் ஸவம் இங்குதான்; திருமலை நாயக்கரின் திருப்பணிகளின் சிகரம் இந்தத் தெப்பக்குளம்.

தீந்தமிழின் விதைப்பண்ணையாக, தெய்வங்களே வந்து வாழ்ந்த திருத்தல மாக, காலங்காலமாக விளங்குகின்ற ஆலயவாய் மதுரையின் வரலாற்றினை ஆதி முதல் இன்றுவரை உள்ள அனைத்துப் புராண, சரித்திர, வரலாற்றுக் குறிப்பு களுடன் கூடிய "மதுரைத் திருத்தல வரலாறு" மதுரைப் பேராலயத்திலே - எல்லா நாட்களிலும் இருந்தே தீரவேண்டும்!

Vembattur Krishnan
Madras - 600 094.

ஸ்ரீராம சிவமயம்

Date.............
Camp ....

பேரன்புடையீர்!

பதின்மூன்று ஆலயமணிகளிலே, நான் கேட்ட "ஓசை"களை, அடியேனது வரிவடிவிலே படித்தீர்கள். சுடர்மணிமாலை வெள்ளிவிழா வெளியீடாக, **1994**.ல் வரவேண்டிய இந்நூல், "பணப்பற்றா"க் குறைவால் **1996**.ல் வருகிறது.

திரைப்படங்களின் துணை டைரக்டராக நாற்பது ஆண்டு காலம் ஓடிஓடி, பெரும்பாலான பக்திப்படங்களை இமயமுதல் குமரிவரை ஆங்காங்கே சென்று எடுத்த அனுபவத்தால், ஆலய வரலாறுகளை எழுதும் குறையாத ஆர்வத்தை, திறனை, நான்பெறுகின்ற "பென்ஷன்" என்றே கருதுகிறேன். நூற்றுக்கும் மேற்பட்ட பேராலயங்களைக் கண்டது, பிரமித்துப் போய் நின்றது, வரலாறுகளை அறிந்து இதயத்திலே பதித்துக் கொண்டது, முதலான கிடைத்தற்கரிய அனுபவங்கள், எனது வாழ்வுக்கான "பிக்ஸட் டெபாசிட்" ஆகும்.

சினிமாக்காரனுக்கு அறுபதுவயதே நிறைவாழ்வுதான். ஆனால், காஞ்சி மாமுனிவர் ஸ்ரீமஹாபெரியவர், திருமுருக கிருபானந்தவாரியார் முதலான மகான்களின் அன்பையும், ஆசிகளையும் பல ஆண்டுகள் தொடர்ந்து பெற்ற ஆன்மபலத்தால், இன்றும் நான் முழு மன ஆரோக்கியம் உள்ளவனாக இருக்கிறேன்.

"பொம்மை" மாத இதழிலே **(1991-1993)** வெளிவந்து புகழ்பெற்ற தொடரான "பட உலக அடிமை" எனது நாற்பதாண்டு திரையுலக அனுபவங்களை வரலாற்று ஆதாரங்களுடன் விளக்குவதாகும். அதைப் பூர்த்தி செய்து, நூல்வடிவிலே உடனடியாக வெளியிட இருக்கிறேன்.

ஆலயங்களைத் தொழுவதோடு, அவற்றைப் பேணிக் காப்பதும் நமது தலையாய கடமை என்பதை உணர்த்துவதற்காகவே இந்த "ஆலயமணிகள்". இந்நூலிலே பிழையிருந்தால் பொருத்தருள்க! குறையிருந்தால் கூறிஉதவுக!!

வாழி நலம் சூழ

அன்பன்,

ஜூலை-1996

வேம்பத்தூர் கிருஷ்ணன்

(வேம்பத்தூர் கிருஷ்ணன்)


மின்னல் வீரன்
இரட்டைமனிதன்
மங்களவாத்தியம்
தேவர் பிலிம்ஸ்
நல்லநேரம்
தேவர் பிலிம்ஸ்
விவசாயி
நடேஷ் ஆர்ட் பிக்சர்ஸ்
M.நடேசன்
P.S.V. பிக்சர்ஸ்
இருதுருவம்
S.ராமனுஜன்
P.S.வீரப்பா
T.S.சேதுராமன்
தேவிதரிசனம்
K.சங்கர்
ராஜா வீட்டு பிள்ளை
பட உலக
அடிமை
வேம்பத்தூர் கிருஷ்ணன்
தண்டாயுதபாணி பிலிம்ஸ்
தேவரின்
வெள்ளிக்கிழமை விரதம்
திருமாங்கல்யம்
தேவரின்
நேர்வழி
வருவான் வடிவேலன்
தேவரின்
துணைவன்
M.G.பாலு
K.சங்கர்
M.A.திருமுகம்

பட உலக அடிமையாக



“மீனாட்சி திருவிளையாட” லில் கலைஞர் பெருமக்களுடன் வேம்பத்தூர் கிருஷ்ணன்

வேம்பத்தூர்கிருஷ்ணன் பணி புரிந்த திரைப்பட, மற்றும் 'TV' வரிசை

கம்பெனி	திரைப்படம்	ஆண்டு	பிரதான நடிக, நடிகையர்	டைரக்டர்
சுகுமார் புரடக்ஷன்	விளையாட்டுப்பொம்மை	1954	T.R.மகாலிங்கம், S. வரலட்சுமி	T.R. ரகுநாத்
ஜம்பனா நந்தி	குடும்பம்	1954	ஸ்ரீராம். ஜி.வரலட்சுமி	ஜம்பனா
ஜுபிலி பிலிம்ஸ்	மர்ம வீரன்	1955	ஸ்ரீராம். வைஜயந்திமாலா, V. நாகையா	T.R.ரகுநாத்
கல்பனா கலாமந்திர்	ரம்பையின் காதல்	1956	தங்கவேலு, பானுமதி, பாலையா	R.R.சந்திரன்
டி.எஸ்.பாலையாவின்	அலாவுதீன் அற்புததீபம்	1956	நாகேஸ்வராவ், அஞ்சலிதேவி	T.R.ரகுநாத்
விஜய் ஹிந்த் புரடக்ஷன்	அதிரூப அமராவதி	1956	M.G.R., மாதுரிதேவி, பானுமதி	K.S.கோபால கிருஷ்ண ஐயர்
ஜம்பனா நந்தி புரடக்ஷன்	சௌபாக்கியவதி	1957	ஜெமினிகணேசன், சாவித்ரி	ஜம்பனா
ஓரியண்டல் புரடக்ஷன்	பொன் விளையும் பூமி	1958	ஜெமினிகணேசன், பத்மினி	சத்யபால்
T.N.R. புரடக்ஷன்	மின்னல் வீரன்	1959	ரஞ்சன், சந்தியா, காக்கா ராதாகிருஷ்ணன்	ஜம்பனா
சாய்பாபா பிலிம்ஸ்	பாரசீகப் பைங்கிளி	1959	T.R.மகாலிங்கம், B.S.சரோஜா	T.C.தங்கராஜ்
நித்யகல்யாணி பிலிம்	மக்கள் விரும்பிய மன்னன்	1959	P.S.வீரப்பா, G.வரலட்சுமி	ஜம்பனா
கோல்டுவின் பிக்சர்	கொட்டுமேளம்	1960	G.முத்துக்கிருஷ்ணன், விஜயகுமாரி	ராமமூர்த்தி
V.S.P. புரடக்ஷன்	இருமனம் கலந்தால் திருமணம்	1960	பிரேம் நஸீர், ராகினி	ஜம்பனா, G.விஸ்வநாத்
G.R.புரடக்ஷன்	பட்டினத்தார்	1960	T.M.சௌந்தர்ராஜன்	A.L.நராயணன்
A.V.R.பிக்சர்	தேனாற்றங்கரை	1960	M.G.R.	வித்வான் வே.லட்சுமணன்
தமிழக அரசுக்காக	''பரிசுப்பத்திரம்	1960	குண்டு கருப்பையா,	V.பாலகிருஷ்ணன்
நிருத்யோதயா ஆர்ட்	தாகூரின் ''சியாமா'' நாடகம்	1960	Dr.பத்மா சுப்பிரமணியம்	V. பாலகிருஷ்ணன்
த. அரசுக்கு, நிருத்யோதயா	தமிழகம் தழைக்கிறது	1961	அசோகன்	K. சுப்பிரமண்யம் B.A.B.L.,
அறநிலையத்துறைக்காக	ஆலயங்களும் திருவிழாவும்	1961	வண்ணப்படம் (விளக்க உரை)	K. சுப்பிரமண்யம், B.A.B.L.,
கண்மணி கலைக்கூடம்	சங்கமித்திரை	1961	இசை நாட்டிய நாடகம்	''கண்ணின் மணிகள்'' ஜானகிராம்
MES-க்கு நிருத்யோதயா	மங்காத ஒளி	1961	T.K. பாலசந்திரன், சந்திரபாபு	S.V. ரமணன்
SDS புரோடக்ஷன்ஸ்	சிங்கநாதம் கேட்குது	1962	சிவாஜிகணேசன், ஜெமிகணேசன்	S.D. சுந்தரம்
நித்யகல்யாணி பிலிம்ஸ்	குபேரத்தீவு	1963	ஆனந்தன், தேவிகா, 'காமிடி' ராமராவ்	G.விஸ்வநாத், R.பக்தா
உமாசங்கர் பிலிம்ஸ்	கெம்பையகௌடா	1963	M.N.பாபு	R.பார்த்தசாரதிநாயுடு

நடேஷ் ஆர்ட் பிக்சர்ஸ்	என் கடமை	1964	M.G.R., சரோஜாதேவி, M.R. ராதா	M.நடேசன்
வேணுமூவிஸ்	மீனாட்சி கல்யாணம்	1964	பத்மினி, K.B.சுந்தராம்பாள்	கொத்தமங்கலம் சுப்பு
திருமுருகன் பிக்சர்ஸ்	தாயின் பெருமை	1965	கண்ணாம்பா, ராஜசுலோசனா	'கேமரா' ராமசாமி
P.S.V.பிக்சர்ஸ்	யார் நீ?	1966	ஜெய்சங்கர், ஜெயலலிதா, மனோரமா	சத்யம்
தண்டாயுதபாணி பிலிம்ஸ்	கெட்டிக்காரன்	1966	ஜெய்சங்கர், நாகேஷ்	M.G.பாலு
மோகன் புரடக்ஷன்	ராஜா வீட்டுப்பிள்ளை	1966	ஜெய்சங்கர், ஜெயலலிதா, ஸ்ரீகாந்த்	தாதாமிராஸி
G.N.பிலிம்ஸ்	நகரத்தில் புலிகள்	1967	அசோகன், ராஜஸ்ரீ	G.விஸ்வநாத்
தேவர் பிலிம்ஸ்	விவசாயி	1967	M.G.R., K.R.விஜயா, அசோகன்	M.A.திருமுகம்
தனலட்சுமி பிலிம்ஸ்	''பர்த்தாவு''	1967	ஜெமினிகணேசன், சௌகார் ஜானகி	'கலைப் பூங்கா' ராவணன்
தேவர் பிலிம்ஸ்	காதல் வாகனம்	1968	M.G.R., ஜெயலலிதா	M.A.திருமுகம்
தேவர் பிலிம்ஸ்	தேர் திருவிழா	1968	M.G.R., ஜெயலலிதா	M.A.திருமுகம்
தண்டாயுதபாணி பிலிம்ஸ்	நேர்வழி	1968	ஜெய்சங்கர், வாணிஸ்ரீ, R.S.மனோகர்	M.G.பாலு
தேவரின் ''	அக்கா தங்கை	1969	சௌகார் ஜானகி, மேஜர் சுந்தர்ராஜன்	M.A.திருமுகம்
தேவரின் ''	துணைவன்	1969	A.V.M.ராஜன், சௌகார்ஜானகி, ஸ்ரீதேவி	M.A.திருமுகம்
மரியம் பிலிம்ஸ்	இதயக்கோயில்	1969	ஹாஜா ஷெரீப், அஜீஸ்	M.K.ராமு
அம்பாள் பிலிம்ஸ்	குருவே தெய்வம்	1969	T.S.பாலையா, A.V.M.ராஜன்	S.V.சுப்பையா
சூர்யா பிலிம்ஸ்	பக்த கௌரி	1969	ஆனந்தன், சந்திரகாந்தா	M.M.A. சுப்பையா தேவர்
பாலமுருகன் மூவிஸ்	பணத்துக்காக	1970	ஆனந்தன், S.V.ராமதாஸ்	வேம்பத்தூர் கிருஷ்ணன்
P.S.V.பிக்சர்ஸ்	இருதுருவம்	1971	சிவாஜிகணேசன், பத்மினி	S.ராமநாதன்
தண்டாயுதபாணிபிலிம்	தெய்வம்	1972	சிவகுமார், முத்துராமன், K.R.விஜயா	M.A.திருமுகம்
ஆனந்தன் நாடகமன்றம்	முக்கோணம்	1972	விஜயபுரி வீரன் ஆனந்தன்	வேம்பத்தூர் கிருஷ்ணன்
தேவர் பிலிம்ஸ்	நல்ல நேரம்	1972	M.G.R., K.R.விஜயா, மேஜர் சுந்தர்ராஜன்	M.A.திருமுகம்
அநுபம்மூவிஸ்	இரும்புக்கரம் CID 999	1973	ஜெய்சங்கர், தேங்காய் சீனிவாசன்	பகவான், துரை
விஜயா சுரேஷ் கம்பைன்ஸ்	திருமாங்கல்யம்	1974	முத்துராமன், ஜெயலலிதா, பண்டரிபாய்	A.வின்சென்ட்
சேனாபதி பிக்சர்	கோமாளிகள்	1974	K.A.தங்கவேலு, M.சரோஜா	''ஜகேர்''சத்யமூர்த்தி
தண்டாயுதபாணி பிலிம்	வெள்ளிக்கிழமை விரதம்	1974	சிவகுமார், ஜெயசித்ரா, சசிகுமார்	R.தியாகராஜன்
பாக்யம் புரடக்ஷன்	வெள்ளித்திரை	1975	ராஜேஷ், சொப்னா	டைட்டில் ஜெயராமன்
திருத்தணி பிக்சர்	பணக்காரப் பெண்	1976	ஜெய்சங்கர், ஜெயசித்ரா, தங்கவேலு	P.ராஜேந்திரன்

அரசுச்சார்பு	20-அம்சம்தந்த புதிய சமுதாயம்	1977	(அவசர நிலை விளக்கம்)	S.V.ரமணன்
முரளிகிருஷ்ணா புரடக்ஷன்	மனோரஞ்சிதம்	1977	விஜயகுமார், Y.விஜயா, M.N.ராஜம்	கோவி மணிசேகரன்
நேஷனல் தியேட்டர்	பரசுராமர் (பாடல் மட்டும்)	1977	R.S.மனோகர்	நாடகக் காவலர்
திருத்தணி பிக்சர்	மக்கள் குரல்	1978	ஜெய்சங்கர், பிரமீளா	U.ராஜேந்திரன்
சுப்பு புரடக்ஷன்	வருவான் வடிவேலன்	1978	ஜெய்கணேஷ், லதா, நாகேஷ்	K.சங்கர்
பெர்னாண்டஸ் புரடக்ஷன்	நீலக்கடல் ஓரத்திலே	1978	காமினி பொன்சேகா, ஸ்ரீபிரியா	K.சங்கர்
P.V.T.புரடக்ஷன்	சுப்ரபாதம்	1978	எம்.என்.நம்பியார், விஜயகுமாரி	K.சங்கர்
சரிகமபதநி பிலிம்ஸ்	மங்களவாத்தியம்	1979	கமலஹாசன், ஸ்ரீபிரியா, காந்திமதி	K.சங்கர்
யூனியன் பிலிம்	ஸ்ரீ இராமானுஜர்	1979	முரளி மோகன்	K.சங்கர்
நஹார் புரடக்ஷன்	மன்மதரதங்கள்	1980	அருண்குமார், கீதா	K.சங்கர்
சிவகாமி கிரியேஷன்	கோயில் மணிகள்	1980	M.N.நம்பியார், ஸ்ரீபிரியா	K.சிவபிரசாத்
மலர் கம்பைன்ஸ்	தேவி தரிசனம்	1981	சரத்பாபு, லதா, கவுண்டமணி	K.சங்கர்
சோலார் கம்பைன்	தெய்வத் திருமணம் (திருப்பதி)	1981	முரளிமோகன், ஸ்ரீபிரியா	K.சங்கர்
மருதுபாண்டியன் பிக்சர்	இரட்டை மனிதன்	1982	S.S.ராஜேந்திரன், V.K.ராமசாமி, லதா	K.சங்கர்
சிவசங்கர் கிரியேஷன்	தாய்மூகாம்பிகை	1982	சிவகுமார், பூர்ணிமாஜெயராம், கார்த்திக்	K.சங்கர்
பைரவி பிலிம்ஸ்	மிருதங்க சக்ரவர்த்தி	1983	சிவாஜிகணேசன், K.R.விஜயா, செந்தில்	K.சங்கர்
ரேவதி கம்பைன்ஸ்	யாமிருக்கபயமேன்	1983	விஜயகுமார், சரிதா, ராஜேஷ்	K.சங்கர்
K.R.G.புரடக்ஷன்	ஸ்ரீராஜ ராஜேஸ்வரி	1983	K.R.விஜயா	K.சங்கர்
நேஷனல் தியேட்டர்	மாவீரன் கம்சன் (பாடல்)	1984	R.S.மனோகர்	'நாடக காவலர்'
ஜெயா சக்ரவர்த்தியின்	பரத தரங்கிணி (இசை நாடகம்)	1984	ஹேமமாலினி	பாலமுரளிகிருஷ்ணா
விசா கம் ஆர்ட்ஸ்	நவக்கிரக நாயகி	1985	'சோ', பாண்டியன், நளினி, விஜயா	K.சங்கர்
பைரவி பிலிம்ஸ்	ராஜரிஷி	1985	சிவாஜிகணேசன், லட்சுமி, பிரபு	K.சங்கர்
சசிவர்ணம்பிலிம்	ஆயிரம் கண்ணுடையாள்	1986	ராஜீவ், பத்மினி, ஜீவிதா	K.சங்கர்
சிவசங்கர் கிரியேஷன்	நம்பினார் கெடுவதில்லை	1986	பிரபு, சுதாசந்திரன்	K.சங்கர்
அம்மு கிரியேஷன்	முப்பெரும் தேவியர்	1987	K.R.விஜயா, சுஜாதா, லட்சுமி	K.சங்கர்
ஓம்முருகா ஆர்ட்	வேலுண்டு வினையில்லை	1987	விஜயகாந்த், அம்பிகா, M.N.நம்பியார்	K.சங்கர்
வள்ளலார் பிலிம்ஸ்	அருட்பெரும்ஜோதி	1987	சந்திப்குமார்	K.சங்கர்
பாக்யராஜ் பிக்சர்	புதுமைப்படைப்பு	1988	K.பாக்கியராஜ்	K.சங்கர்
லட்சுமிகணபதி கம்பைன்ஸ்	மீனாட்சி திருவிளையாடல்	1989	விஜயகாந்த், ராதா, டெல்லிகணேஷ்	K.சங்கர்

ஜெய்ஸ்ரீ பிக்சர்ஸ்	காவிரியின்கதை TV-13 வாரத் தொடர்	1990	Y.G.மகேந்திரன், பீலிசிவம், ராஜேஷ்	S.V.ரமணன்
வேளாங்கண்ணி ஸ்கூல்	விருகாசுரன்	1990	இசை நாடகம், பள்ளிமாணவியர்	திருமதி பணிக்கர்
வித்யா தர்சனா (டெல்லி)	வால்மீகி ராமாயணம்	1990	(சமஸ்கிருதம்) அரவிந்தன், லதா	K.S.ஸ்ரீனிவாசன்
தருமபுர ஆதீனம்	சீகாழித்திருவிழா	1991	தலபுராண விளக்கப்படம்	S.V.ரமணன்
சண்முக பிரேமா பிக்சர்	வரம் தரும் வடிவேலன்	1992	ராஜேஷ், K.R.விஜயா, ராதாரவி	சண்முகசித்தன்
கல்யாணி சினி ஆர்ட்ஸ்	ஞானக்கனிகள்	1993	T.V.தொடருக்கு எழுதப்பட்டது	T.S.சேதுராமன்
அடியேன் (வேம்பத்தூர் கிருஷ்ணன்)		1994	மணிவிழா இனிய நினைவு ''ஆலயமணிகள்'' நூல் வெளியீடு	
தமிழிசைச் செல்வர், ராஜா தேசிங்கு முதலான தொலைக்காட்சி		1995	தொடர்கள் தூர்தர்ஷனில் '(MADRAS DD) ஒப்புதலைப் பெற்றது.	
பங்கஜம் விஷன்	அறுபத்து மூவருலா	1996	13 வாரம் டிவி தொடர்	கலைவாணன்
ஜெயஸ்ரீ பிக்சர்ஸ்	ரமண மகரிஷி	1997	பல நடிகர்கள்	டாக்டர் S.V.ரமணன்
ஜெயஸ்ரீ பிக்சர்	ஷிர்டி சாயிபாபா	1998	கதையோடு அடியேன் நடிப்பும்	டாக்டர் S.V.ரமணன்

சுமார் எண்பதிற்கும் மேற்பட்ட திரைப்பட வரிசையில் ஆரம்பம் முதல் 8ம் படம் வரை பயிற்சி பெற்றேன். ஒன்பது முதல் ஏனைய திரைப்படங்கள் அனைத்திலும் அதிகாரபூர்வ துணை டைரக்டர்; சில படங்களோடு டிவி தொடர்களில் கதை வசனகர்த்தா, பல படங்களின் பாடலாசிரியர்.

காலம் கனியட்டும்! கவலைகள் தணியட்டும்!!

பேரன்புடையீர்! கடந்த ஓராண்டுக்கு மேலாகவே தமிழ்ப்பட உலகம், சீர்குலைந்து, சிதைந்து செப்பனிட நாதியற்றுக் கிடக்கின்றது!

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு – நம்முள்
ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு''

மகாகவி சுப்ரமண்ய பாரதியின் எச்சரிக்கையை ... தமிழ்பட உலக இளைய தலைமுறை ஏற்கின்ற காலம் கனியட்டும், பழம் பெரும் சினிமாக்காரர்களின் கவலைகள் தணியட்டும்.

சென்னை

15.8.1998

வாழி நலம் சூழ

வேம்பத்தூர் கிருஷ்ணன்

SUDARMANI PATHIPPAGAM, 9, Bajanai Koil Street, Choolaimedu, **Chennai** 600 094.

பாரத தேசக் கவிஞனாக

“கர்ஜனை” நூல் வெளியீட்டில், அறிஞர் பெருமக்களுடன்

வேம்பத்தூர் கிருஷ்ணன்





வேம்பத்தூர் கிருஷ்ணன்

பெற்றோர் } ஆ. மு. முத்தையாபிள்ளை
மீனாட்சி அம்மாள்

சங்கப்புலவர்களும் "சிலேடைப் புலி"களும் தோன்றிய வேம்பத்தூரிலே பிறந்தேன். (23-9-1934) அந்த மண்ணின் மகத்துவத்தால் நானும் எழுதத் துணிந்தேன்.

1952-ல் சென்னைக்கு வந்து 1954- முதல், திரைப்பட இணை டைரக்டர், பாடலாசிரியர், வசனகர்த்தா; 80-க்கும் மேலான திரைப்படங்கள், 20க்கும் மேலான அரசு செய்திக் கதை விளக்கத்திரைப்படங்கள்.

1956 முதல் எனது எழுத்துக்கள் திரையிலே ஒலிக்கவும், ஆனந்த விகடன், கல்கி, தினமணி, தினமலர் முதலான இதழ்களிலே ஜொலிக்கவும் தொடங்கின. 'பொம்மை' மாத இதழிலே அடியேனது 'பட உலக அடிமை' தொடர் (1991-93) புகழ் பெற்றதாகும். புத்தகமாகத் தயாராகிறது.

1961—தாகூரின் 'சியாமா' (தமிழ்); 1962-ல் ஆலயங்களும் திருவிழாவும்; வண்ணப்பட வசனம்: 1970 — விலங்கொடித்த வீரர்கள்; திருப்பதி தெய்வம்; சுடர்மணிமாலை (ஆரம்பம்) தொடர்ந்து பற்பல "மணிமாலை"கள். ஹிந்துமித்ரன் துணை ஆசிரியர் (7 ஆண்டு) "சனாதன தர்மபீடம்" ஆசிரியர்; பரததரங்கிணி, விருகாசுரன்...முதலான பல இசை நாடகங்கள், பக்தி பாடல் 'கேஸட்''டுகள்.

1987—'கர்ஜனை' கவிதைத் தொகுப்பு நூல் 1990—'காவிரியின் கதை' T. V. தொடர்; 1992—கோயில் நாடு, தொடர்ந்து வாழ்வில் கோயில், அருள்தரும் ஆலயம் முதலான பல நூல்கள். இந்த ஆண்டு புதிய T.V. தொடர்களாக... அறுபத்துமூவருலா, மாதர் குல மாணிக்கங்கள், தமிழிசைச் செல்வர், மாவீரன் ராஜாதேசிங்கு... "ராஜாத்தி", இப்படியாக அடியேனது தெய்வீக, தேசிய இலக்கியப்பணியும், திரைப்படப்பணியும் தொடர்கிறது.

26-9-1995 நடைபெற்ற அடியேனது மணிவிழா (60—வயது பூர்த்தி) யின் நினைவாக, இளையதலைமுறைக்கு ஒரு கோயில்வழிகாட்டியைத் தரவிரும்பினேன்; அதன் விளைவே இந்த "ஆலய மணிகள்"

சென்னை.

1-2-1996

வாழி நலம் சூழ

வேம்பத்தூர் கிருஷ்ணன்